ஸ்ரீராஜகோபாலவிஜயம்

Sudha. Muthiah

S. காமேசுவர அய்யர் B. A.
இயற்றியது.

ஜனமித்திரன் பிரஸ்,
புதுக்கோட்டை.
1939.

Materials/Composition

ஹிஸ் ஹைனெஸ் ஸ்ரீ பிரஹதம்பதாஸ்
ராஜா ராஜகோபாலத் தொண்டமான் பஹதூர்
மகாராஜா அவர்கள் சமக்ஷம்
புதுக்கோட்டை மன்னர்.

பதிப்புரை.

இந்நூல் புதுக்கோட்டை சமஸ்தான சரித்திரத்தின் ஓர் முக்கியமான பகுதியாகும். 1913-ம் வருஷம் முதல் 1928-ம் வருஷம் மூடிய சுமார் பதினைந்து ஆண்டுகளில் சமஸ்தானத்தில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளும், வாச்சு பாத்திய போராட்டமும் அதில் ஏற்பட்ட வெற்றியால் ஸ்ரீ ராஜகோபாலத் தொண்டமானவர்கள் சமஸ்தான அரியணையை அலங்கரிக்கும் பாக்கியம் பெற்றதும், சமஸ்தானத்தில் ஜனநாயக உணர்ச்சியின் உதயமும், அபிவிர்த்தியும், இதுவரையில் சமஸ்தானத்தில் நடந்திருக்கும் ஏழு மகாநாடுகளின் வரலாறுகளும், சென்னையில் 1927-ம் வருஷக் கடைசியில் நடந்த அகில இந்திய சுதேச சமஸ்தானப் பிரஜைகளின் மகாநாட்டின் வரலாறும் ஆதார பூர்வமாக விளக்கி யெழுதப்பெற்றுள்ளன. சமஸ்தானத்தின் சமீப கால சரித்திரத்தை செவ்விதின் அறிய மிகவும் உபயோகமாயிருப்பதுடன், சமஸ்தானத்தில் இனிச் செய்யவேண்டிய காரியங்களை அறிந்து செயல் நிகழ்த்த ஆர்வமுடையவர்களுக்கும், ராஜீய சீர்திருத்தங்கள் சம்பந்தமாய் உழைக்க விரும்பும் தேசாபிமானிகளுக்கும் இந்நூல் சிறந்த வழி காட்டியாயிருக்கும். இந்நூல் ஜனமித்திரனில் வெளியான கட்டுரைகளைத் தொகுத்து புத்தக ரூபமாய், சில நண்பர்களின் வேண்டுகோளுக்கிணங்கி வெளியிடப்படுகின்றது. ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் அவர்கள் இந்த வரலாற்றில் கண்ட கடிதங்கள் முதலிய பல ஆதாரங்களை உதவியதற்கும், இந்நூல் இயற்றிய நமது சகோதரர் ஸ்ரீ S. காமேசுவரய்யருக்குத் தேவையான பொழுது தமது யோசனைகளைக் கூறியும், விஷயங்களைத் தெரிவித்தும் உதவி புரிந்ததற்கும் நாம் நன்றி பாராட்டுகிறோம். இந்நூலுக்கு முகவுரை எழுதி உதவிய வழக்கறிஞர் ஸ்ரீமான் K. நாகராஜய்யரவர்களுக்கும் நாம் பெரிதும் நன்றி பாராட்டுகிறோம். இவ்வெளியீட்டில் காணப்படும் குறைபாடுகளை — அச்சுப் பிழைகள், வழுக்கள் முதலியவைகளை மன்னிக்குமாறு வேண்டுகிறோம்.

P. S. சுப்பிரமணிய அய்யர்,

6—9—'39. பதிப்பாளர்.

முகவுரை.

தற்கால மனிதர்களைப்பற்றியும் சம்பவங்களைப்பற்றியும் சர்ச்சை செய்து, புஸ்தகங்கள் பிரசுரம் செய்வது இந்நாளின் ஓர் முக்கிய லக்ஷணம். இரண்டு மாத தவணைக்கு சுற்றுப் பிரயாணம் செய்கிறவர்களும் சரி, ஒரே இடத்தில் ஸ்திரமாக வசிப்பவர்களும் சரி, தங்கள் கவனத்தில் பதிந்த விஷயங்களைப்பற்றி தங்கள் அபிப்ராயங்களுடன் புஸ்தகங்கள் பிரசுரம் செய்கிறார்கள். இது போற்றத்தக்கது. ஒரு க்ஷணமாத்திரத்தில் எடுக்கப்பட்ட படத்திலும்கூட சில அருமையான விஷயங்கள் காணப்படுகின்றன. அதைப்போலவே, முக்கியமான சம்பவங்கள் நடைபெறுகிற உடன்காலங்களிலோ, அவைகள் அருகாமையிலோ, செய்யப்பட்ட சர்ச்சைகளில், பின்னல் வெகு காலம் சென்று எழுதப்படும் வியாஸங்களில் காணப்படாத சில பாவங்கள் காணப்படும். ஆனல், ஆர அமர யோசித்து செய்யப்படும் நாள்பட்ட சர்ச்சைகளில் உண்மையின் தோற்றம் தெளிவாகத் துலங்கும். ஸ்ரீ ராஜகோபால விஜயத்தில் இந்த இரண்டு முறைகளும் அனுஸரிக்கப்பட்டு வந்திருக்கின்றன. இந்த ஒரு காரணத்தினலேயே இந்த புஸ்தகம் நமது கவனத்திற்கு அருகமானது.

ஸ்ரீ ராஜகோபால விஜயத்தில் 1915 முதல் 1930 வரை நடந்த முக்கியமான சம்பவங்களைப்பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அளவிற்கு இதை இச்சமஸ்தானத்தின் சரித்திரம் என்று ஒருவாறு சொல்லலாம். இந்த காலத்திற்கு சில தனிப்பட்ட லக்ஷணங்களுண்டு. ராஜீய காரியங்களில் ஜனங்களுக்கு அதிகமான உணர்ச்சி, அவைகளைப்பற்றி மகாநாடுகள் கூட்டி சர்ச்சை, பத்திரிகைகள் ஏற்படுத்தி அவை மூலம் பிரசாரம், பொது மக்களின் சுகதுக்கங்களைப்பற்றி பயமற்ற பேச்சு, உத்தியோகவர்க்கத்தினர் தங்கள் ஸ்வபாவ தாக்ஷிண்யத்தால் மட்டுமல்லாமல் தங்கள் கடமையாகக் கருதி பொது ஜனங்களுக்கு ஆக்ஷேபணை சமாதானம் சொல்லுவது, பட்டம் விஷயமாக பரபரப்பு, அதன் திருப்திகரமான முடிவு, அரசியல் மாறுதல்,—இவைகளெல்லாம் இப்புஸ்தகத்தில் கண்டிருக்கிற பதினைந்து வருஷ காலத்தின் பலாபலன்கள்.

இந்த காலத்தின் துவக்கத்தில் இப்பொழுது சென்னை ஹை கோர்ட் நீதிபதியாக விருக்கும் ஸர் ஸிட்னி பர்ன் அவர்கள் சமஸ்தானத்தின் க்ஷேமத்தில் வெகு அக்கரையுடன் அரசியல்

தலைமை வகித்தார். அவருக்குப் பின் நாட்டிலே நன்மையை கண்ணுங் கருத்துமாக நாடிவந்த ரீஜெண்டவர்கள் ஆட்சி. அதற்குப் பின் நமது மன்னர் மைனராயிருப்பதை முன்னிட்டு அரசியல் திட்டம் மாற்றப்பட்டது. இந்தக் காலத்தில் பொது மக்களின் சார்பாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர், காலஞ்சென்ற ஸ்ரீமான் ஜீ. சுந்தரேச சாஸ்திரிகள் முதலானவருடைய மேலான ஆதரவின் பேரில் மகாநாடுகள் கூட்டப்பட்டு தீவிரமான பிரசாரங்கள் நடைபெற்றன. அவரவர்கள் ஸ்தானங்களிலிருந்துகொண்டு அவரவர்கள் தங்களாலியன்றவரை பாடுபட்டு வந்திருக்கிறார்கள். அவர்களில் சிலர் தெய்வாதீனத்தால் நம்முடனிருக்கிறார்கள். சிலர் காலஞ்சென்றுவிட்டனர். ஆயினும், அவர்கள் வாஸனை புஷ்பம் பறிக்கப்பட்ட பின்னும் தோட்டத்தில் தங்கி நிற்கும் மணம்போல் வீசிக்கொண்டிருக்கிறது.

இந்த விஷயங்களெல்லாம் ஸ்ரீ ராஜகோபால விஜயத்தில் தலைக்கப்பட்டிருக்கின்றன. இந்த விஜயமும் 'ஜனமித்திரன்' மூலம் பதிப்பிக்கப்பட்டது மிகவும் பொருத்தமானது. இந்த பத்திரிகையும், இதை ஆதியில் ஸ்தாபித்த ஸ்ரீமான் விசுவநாதய்யரவர்களும், அதன் பிரகிருத பத்திராதிபரான அவர் சகோதரர் ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் அவர்களும் இந்த விஜயத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டிருக்கிற சம்பவங்களில் பொது மக்கள் சார்பாக தளராத ஊக்கத்துடனும் தைரியத்துடனும் கலந்துகொண்டவர்கள். இதில் கண்டிருக்கிற பதினைந்து வருஷத்திய வாழ்க்கையான நாடகமேடையில் நடித்த நாடக பாத்திரமென்ற முறையில் "ஜனமித்திரன்" முயற்சியால் பிரசுரிக்கப்பட்ட இந்த விஜயத்தை நாம் ஆதரவுடன் வரவேற்கவேண்டியது அவசியம்.

நமது மன்னர் பெயரை வைத்து எழுதப்பட்ட "ஸ்ரீ ராஜ கோபால விஜயம்" இம்மாதிரி வரவேற்கப்படுமென்பதில் எனக்கு யாதொரு சந்தேகமுமில்லை. ஸ்ரீ ராஜகோபால விஜயமும் நாளுக்கு நாள் செழித்தோங்கி வளர்ந்து இன்பமூட்டவேண்டு மென்பது இச்சமஸ்தான மக்கள் எல்லாருடைய பிரார்த்தனை யென்பதும் நிச்சயம்.

புதுக்கோட்டை,
5-9-39.

K. நாகராஜன்.

சி.ப. திருவ்யா அவர்கள்
"வளர்ந்த மலர்கள்"
அன்புப் பரிசு.

ஸ்ரீராஜகோபால விஜயம்

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	மார்த்தாண்ட பைரவ மன்னரின் திருமணம்.	1
2.	மாதொடு மன்னன் வாக்கண்ட மாநகர்.	9
3.	ஜனநாயக உணர்ச்சியின் உதயம். பிரதிநிதி சபையும் மகாநாடுகளும்.	17
4.	முதலாவது மகாநாடு.	21
5.	இரண்டாவது மகாநாடு.	25
6.	இரண்டாவது மகாநாட்டின் எதிரொலி.	44
7.	இருள் படர்ந்த ராஜீய வானம்.	55
8.	மூன்றுவது மகாநாடு.	61
9.	மனு தயாரிப்பும் மற்ற முயற்சிகளும்.	65
10.	ராஜீய மாறுதல்களும், ரீஜென்ஸி ஸ்தாபனமும்.	70
11.	நாலாவது மகாநாடு.	77
12.	புதிய ஆசியின் நல்ல ஆரம்பமும் ஐந்தாவது மகாநாடும்.	103
13.	சட்ட சபை ஸ்தாபனமும் 'ஜனமித்திரன்' உதயமும்.	112
14.	நிகழ்ச்சிக் குறிப்புகளும் நகரசபையின் தெங்குக் குத்தகைத் தகராறும்.	123
15.	நியாய இலாகா சீர்திருத்தமும், நகர சபைத் தேர்தலும்.	131
16.	நகர சபைத் தேர்தல் வழக்கும், 'ஜனமித்திரன்' கௌரவ ஆசிரியர் மீது நீதிமன்ற நடவடிக்கையும்.	141
17.	ஆறுவது மகாநாடு.	150
18.	சில்லரைக் குறிப்புகளும், வார்சு பாத்திய விஷயங்களும்.	179
19.	அடக்குமுறையின் ஆரம்பமும், 'ஜனமித்திரன்' ராஜத்துவேஷ வழக்கும்.	191
20.	மகாத்மாவின் புதுக்கோட்டை விஜயமும், மற்ற விஷயங்களும்.	202

21. அகில இந்திய சுதேச சமஸ்தானப் பிரஜை களின் மகாநாடும், சமஸ்தான வார்ஸ் பிரச்னை யும். 213
22. அடக்குமுறையின் ஆவேசம். 227
23. ஜனமித்திரன் ஆசிரியர் விடுதலைத் தீர்மானமும், விடுதலையும். 243
24. மார்த்தாண்ட பைரவ மன்னரின் மரணமும், மற்ற விவரங்களும். 258
25. வார்சு பாத்திய நிர்ணயம். 275
26. ஸ்ரீ ராஜகோபாலத் தொண்டமான் அரியணை யேறியதும், நிர்வாக மாறுதல்களும். 291
27. ஜனமித்திரனின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும், ஆசிரியருக்குப் பாராட்டும். 301
28. ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயாவர்களுக்கு வரவேற்பும், பாராட்டும். 318
29. ஏழாவது மகாநாடு. 327
30. முடிவுரை. 358

ஸ்ரீ ராஜகோபால விஜயம்.

மார்த்தாண்ட பைரவ மன்னரின் திருமணம்.

1-வது அத்தியாயம்.

அரசர்க்குரிய அருங்குணங்களாகிய அஞ்சாமை யீகையறி வூக்கம்,—இவைகள் ஒருங்கே அமையப்பெற்று, புதுக்கோட்டை மன்னராய்ச் சிறந்து விளங்கிய மார்த்தாண்ட பைரவ தொண்டை மான் மகாராஜா அவர்களின் பெருமை 1913-ம் வருஷத்தில் உயர் நிலையை யடைந்தது. அந்த வருஷம் ஜனவரி மாதம் முதல் தேதியில் அவருக்கு மாசூஷ்மை தங்கிய ராஜச் சக்ரவர்த்தியவர் களால் "G. C. I. E." பட்டம் அளிக்கப்பட்டது. பிப்ரவரி மீ 22, 23, 24-ம் தேதிகளில் அவர் அரியணை யேறினதிலிருந்து இருபத் தைந்தாண்டுகள் பூர்த்தியானதைக் கொண்டாடுவதற்காக ஏற்பாடு கள் செய்யப்பெற்று, அதற்கு முன் சமஸ்தானத்தில் கண்டிராத உற்சாகத்துடன் வெகு விமரிசையாகக் கொண்டாட்டங்கள் நடை பெற்றன. அக் கொண்டாட்டத்தின் ஞாபகார்த்தமாக அரசர் பெருமானும் பல நன்கொடைகளையும் உரிமைகளையும் அளித்துப் பிரஜைகளின் பிரியத்தையும் ராஜவிசுவாஸத்தையும் பன்மடங்கு அதிகமாகச் சம்பாதித்துக்கொண்டார்.

இக் கொண்டாட்டங்கள் பூர்த்தியான சில நாட்களுக்கெல்லாம் அவர் வழக்கம்போல் ஐரோபாவுக்குத் திரும்பிச் சென்று, வேனிற் காலத்தை அங்கு கழித்தனர். மாரி காலம் வரவே, அவர் நவம்பர் மாதத்தில் சமஸ்தானத்திற்குத் திரும்பிவந்தனர். நவம்பர் மீ

25-ந் தேதி சென்னையில் மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதி அவர்களை ராஜதோரணையில் பேட்டி கண்டுகொண்டார். பின்னர் சமஸ்தானத்திற்குத் திரும்பிவந்து, 1914-ம் வரு பிப்ரவரி மாதம் வரையில் தங்கி, ராஜ்ஜிய காரியங்களைக் கவனித்து வந்தார். 1914-ம் வரு ஜனவரி மாதம் முதல் அவருடைய அல்லவன்ஸ் வருஷம் ஒன்றுக்கு ரூ 1,24,000யிலிருந்து ரூ 1,74,000க்கு உயர்த்தப்பட்டது. தேக ஆரோக்கிய நிமித்தம் அவர் பிப்ரவரி மீ 23உ ஐரோபாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

1914–ம் வருஷம் ஆகஸ்ட் மீ "மகா யுத்தம்" தொடங்கியது. அப்பொழுது நமது அரசரும், அவரது சகோதரர் ராஜகுமார் V. R. தொரைராஜா அவர்களும் பிரான்ஸு தேசத்திலிருந்தார்கள்; யுத்தத்திற்காக பிரான்ஸு தேசத்தில் சேனை திரட்டப்பட்டு வந்தது. மகாராஜா அவர்களும், அவர் சகோதரரும் உடனே இங்கிலாந்துக்குப் புறப்பட்டு, இரவில் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அன்று இரவே இங்கிலீஷ்காரர்கள் ஜர்மனியோடு யுத்தம் செய்யப் போவதாக அறிவித்தார்கள். மறுநாள் மகாராஜா அவர்கள் மாகூஷிமை தங்கிய ராஜச் சக்கரவர்த்தியவர்களுக்கு யுத்த சம்பந்தமாய்த் தன் உடல் பொருள் ஆவி யெல்லாம் அர்ப்பணம் செய்வதாகத் தெரிவித்தனர். மன்னர் சில காலமாக தேக சௌக்கிய மில்லாதிருந்தபடியால் அவரது சேவையை உபயோகித்துக்கொள்ள இயலவில்லை யென்று கூறிவிட்டபடியால், தமது ராஜ்ஜியத்திலிருந்து யுத்த சம்பந்தமாய் எவ்விதங்களில் உதவி புரியலாமென ஆராய்ந்தறிவதன் பொருட்டு அக்டோபர் மாத நடுவில் புதுக்கோட்டைக்குத் திரும்பி வந்தார். நவம்பர் மீ 23-ம் தேதி புதுக்கோட்டை நகர மண்டபத்தில் யுத்தத்தைப்பற்றித் தமது பிரஜைகளுக்கு ஓர் பிரசங்கம் செய்தார். பிரசங்கம் ஜனங்களுக்குத் தகுந்தபடி உணர்ச்சியை எழுப்பி, யுத்தத்திற்கு உதவிபுரிய ஊக்கம் அளித்தது. சமஸ்தான ஐவேஜியிலிருந்து சென்னை யுத்த நிதிக்கு இரண்டு லக்ஷ ரூபாயும், பிரின்ஸ் ஆப் வேல்ஸ் ரிலீப் நிதிக்கு ரூ 15,000மும், இம்பீரியல் இந்தியன் ரிலீப் நிதிக்கு ரூ 15,000மும், சென்னை வைத்தியக் கப்பலுக்கு மாதம் ரூ 500 மாகத் தொகைகள் வழங்கப்பட்டன. சமஸ்தானப் பிரஜைகள் இம்பீரியல் ரிலீப் பண்டுக்கு ரூ 64,000மும், சென்னை வைத்திய கப்பலுக்கும், சென்னை யுத்த நிதியைச் சேர்ந்த பெண்பாலர் டெப்போவிற்கும் சில்லரைத் தொகைகளும் சந்தாக்களாகக் கொடுத்தார்கள்.

மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் 1915-ம் வரு பிப்ரவரி மீ வரையில் இங்கு தங்கியிருந்தார்கள். ஐரோபாவில் யுத்தம்

நடந்து கொண்டிருந்தபடியால், பிப்ரவரி மீ 25-ந் தேதி ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

ஆகஸ்ட் மீ 10உ ஈ-ஸ்ரீ மகாராஜா அவர்கள் மெல்போர்னில் அவ்வூர் பாரிஸ்டர் ஒருவரின் புதல்வியாகிய E. M. பிங்க் என்னும் மங்கையை மணம் புரிந்து கொண்டார்.

அன்று தினம் ராக்ஷஸ ஹ்ரு ஆடிமீ 27-ம்உ அமாவாஸ்யை—திருகோகர்ணம் ஆடிப்பூர உத்ஸவத்தின் 7-ம் திருநாள்—மஞ்ஞவர்த்தி மண்டகப்படி. இவான் ராஜகுமாரர் V. R. துரைராஜா அவர்கள் அரண்மனையில் சாய்மான நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு உற்சவத்திற்குப் போடவேண்டிய வண்டி, குதிரை,—இவைகளைப்பற்றியும், தாம் அணிவதற்கான துஸ்து வகையாவைப்பற்றியும் வருதி கொடுத்துக் கொண்டிருக்கிறார். இரவு மணி சுமார் 7-30 இருக்கும். ஒரு டலாயத்து அவர் முன் வந்து நின்று, "யஜமான், தந்திக்காரன் வந்திருக்கிறான்" என்று கூறினான். அதற்கு அவர், "ஏன், தந்தியை வாங்கிக்கொண்டு வருவதற்கென்ன?" என்றார். அதற்குச் சேவகன், "யஜமான், அதைத் தந்திக்காரன் நேரில் கொடுக்கவேணுமென்கிறான்." என்றான். "என்ன விசேஷமோ தெரியவில்லை. சரி கொண்டுவரச் சொல்" என்று ஆக்ஞாபித்தார். உடனே, மறைவில் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த தந்திக்காரன், துரைராஜா அவர்களின் நாற்காலிக்கு முன்னால் நின்றுகொண்டு சலாம் செய்துவிட்டுத் தந்தியை வெகு மரியாதையோடு கொடுத்துவிட்டு, சற்று அப்புறமாய் நின்றான். உடனே தந்தியைப் பிரித்துப் பார்த்தார்—சற்று மௌனமாயிருந்தார்—பின்பு அடியில் வருமாறு வாசித்தார்:—

"ஆகஸ்ட் மீ 10உ ஆகிய இன்றுதினம் மெல்போர்ன் பாரிஸ்டர் உல்ப் பிங்க் அவர்களின் புதல்வி மிஸ் இ. எம். பிங்கை மணம் செய்துகொண்டேன்.

புதுக்கோட்டை
தொண்டைமான்.

அன்பு."

சற்று யோசனையில் ஆழ்ந்தவராயிருந்தார். பின்பு "டலாயத்" என்று கூப்பிட்டார். ஒருவன் முன் வந்து நின்றான். "மகாராஜா அவர்களுக்கு இன்று கல்யாணமாகிவிட்டது. தந்தியில் இந்த சந்தோஷ ஸமாசாரம் வந்திருக்கிறது. பொக்கிஷக்காரரிடம் சொல்லி தந்திக்காரனுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கச் சொல்" என்று உத்தரவு செய்தார். உடனே தந்திக்காரன் முகமலர்ச்சியுடன் சலாம் செய்துவிட்டு, உத்தரவு பெற்றுக்கொண்டு டலாயத்துடன் கீழே

இறங்கிச் சென்றான். ராஜகுமார் V. R. துரைராஜா அவர்கள் ஏகாந்தமாயிருந்தார்.

இதற்குள் மகாராஜா அவர்களுக்குக் கல்யாணம் ஆகிவிட்ட தென்ற சங்கதி அரண்மனையில் சேவகர்களுக்கெல்லாம் தெரிந்து விட்டது. எல்லோரும் சந்தோஷம் விசாரிக்க துரை ராஜாவைச் சூழ்ந்து கொண்டார்கள். உடனே அவர் ஆட்களை அனுப்பிவிட்டு, தந்தியை அப்பொழுது ஸ்டேட் சூபரின்டெண்டாயிருந்த மிஸ்டர் J. T. குவின் துரையவர்களுக்குப் பார்வைக்கு அனுப்பிவிட்டு, மண்டகப்படிக்குப் புறப்படத் தயார் செய்துகொண்டார். திருகோ கர்ணத்திற்கு வரும்பொழுது மணி 9-30 இருக்கும். அம்மன் புறப் பட்டது. அப்பொழுது மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமக்ஷத் திற்கு அன்று தினம் கல்யாணம் ஆன செய்தி எங்கும் பரவிற்று. அங்கு உத்ஸவத்துக்காக உத்யோகஸ்தர்களெல்லாம் வந்திருந் தார்கள். அவர்களுள் பெரிய அந்தஸ்துள்ளவர்களெல்லாம் ஒருவசொருவராக ன-திவான் அவர்களிடம் சந்தோஷம் விசாரித் துக்கொண்டிருந்தார்கள். எல்லாரும் கல்யாணத்தைப் பற்றியே பேசிய வண்ணமாயிருந்தார்கள். மறு நாள் காலையில் ன-திவா னவர்களைப் பேட்டி கண்டு விசாரிப்பதற்குப் பற்பல பிரமுகர் களும் வந்தார்கள். அவர்களுடன் கலந்து பேசிக்கொண்டு, அன்று தினம் மாலையில் டவுன் ஹாலில் புதுக்கோட்டை நகர வாஸிகளின் சபை கூட்டப்பட்டது. மாலை 6½ மணி இருக்கும்— கூட்டத்திற்கு 700 அல்லது 800 ஜனங்கள் வந்திருந்தார்கள். வக்கீல்கள், மிராசுதார்கள், வர்த்தகர்கள் முதலிய நான்கு வகுப் பைச் சேர்ந்த ஜனங்களிலும் முகாமையாயுள்ளவர்கள் அநேகர் வந்திருந்தனர். ன-திவானவர்கள் அக்கிராசனம் வகித்தார். அவர் ஒரு பிரசங்கம் புரிந்தார். அதனில், ஹிந்துக்களுடைய சாஸ்திரக் கொள்கையின்படி பிரும்மசாரிகள் 20 அல்லது 22 வயதில் விவாஹம் செய்து கொள்வது வழக்கமென்றும், அவ்விதம் காலா காலத்தில் கல்யாணம் செய்து கொள்வதற்கு உதவி செய்வது புண்யமென்று எண்ணி தனவான்கள் ஏழைகளுக்குத் தங்க ளால் இயன்ற திரவிய சகாயம் செய்வதுண்டென்றும் பிரஸ்தா பித்தார். மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா அவர்கள் கல்யாணம் செய்து கொள்ளும்பொழுது அவருக்கு வயது நாற்பதென்றும், ஜனங் களுக்கெல்லாம் மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு அதற்கு முன்னியே விவாஹம் நடக்கவில்லையென்ற மனக்குறை வெகு காளாய் ஏற்பட்டிருந்ததென்றும் எடுத்துக் கூறினர். மகாராஜா அவர்களுக்கு விவாஹம் நடந்துவிட்டதென்ற சமாசாரத்தைக் கேள்வியுற்றுப் பிரஜைகளெல்லோருக்கும் சந்தோஷம் ஏற்பட்டி ருக்கிறதென்றும், மகா-ன-ன-ஸ்ரீ ஹுஜூர் சமக்ஷத்திற்குப்

பணிவுடன் சோபனோபசாரம் கூறி, மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ராணியார் ஸகிதம் வருவதை எதிர்கொண்டழைக்கப் பிரஜைகள் மிகவும் ஆவலுள்ளவர்களா யிருக்கின்றார்களென்றும் தந்தி மூலம் தெரிவிப்பதற்காகவே அந்த சபை கூடினதென்றும் சொல்லி அக்கிராசனாதிபதியவர்கள் பிரசங்கத்தை முடித்தார். உடனே வெகு நேரம் பலத்த கரகோஷம் செய்யப்பட்டது.

பின்பு மாஜி எடிபுகேஷன் டிரக்ட்டரானவரும், ரா-திவான் அவர்களால் "பெரிய வாத்தியார்" என்று அழைக்கப்பட்டு வந்தவருமான ஸ்ரீமான் S. நாராயணஸ்வாமி அய்யர் அவர்கள், மேற்படி கல்யாணத்தைப்பற்றி மிகவும் கொண்டாடிப் பேசி, ஆறடி உயரமும், தகுந்த ஆகிருதியும், பலமும் உள்ள நமது மகாராஜா அவர்கள், அவருக்கேற்ற சௌந்தரியமில்லாத ஓர் மாதை மணஞ் செய்துகொண்டிருக்க மாட்டாரென்றும், நாட்டு மாஞ்செடிக்கு ஒட்டுக் கட்டினால், அவ்வாறு ஒட்டுக்கட்டப்பட்ட மரத்தினின்று உண்டாகும் ஒட்டு மாங்கனி எவ்வளவு உருசி யாயிருக்குமோ அதேமாதிரி பலன் இந்த விவாஹத்தினால் ஏற்படுமென்றும் ஹாஸ்ய ரஸத்துடன் எடுத்துக் கூறிவிட்டு, மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு அனுப்புவதற்காக எழுதப் பட்டிருந்த அடியிற்கண்ட கருத்தமைந்த தந்தியை அங்கீகாரம் செய்ய வேண்டுமென்று பிரேரேபித்தார். அது பின் வருமாறு:

"புதுக்கோட்டை நகரத்தார் மகா-ரா-ரா-ஸ்ரீ ஹாஜர் சமஸ்தானத்துக்கு விவாஹம் நடக்க வேண்டுமென்று வெகு நாளாக ஆவல் கொண்டிருந்ததில், அவர்களுடைய மனோரதம் நிறைவேறியதைக் குறித்து அன்பும் விசுவாஸமும் நிறைந்த அவர்களுடைய உபசாரத்தை வணக்கத்துடன் ஸமர்ப்பித்து, மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ராணியார் ஸகிதம் விஜயம் செய்வதை எதிர்கொண்டழைக்கக் காத்திருக்கின்றனர்."

இந்தப் பிரேரணையை ஸ்ரீமான்களான A. மகாலிங்கய்யர் அவர்களும், P. V. வாசுதேவ ராவ் அவர்களும், G. சுந்தரேச சாஸ்திரியார் அவர்களும் ஆமோதித்தார்கள். பிரேரணை எல்லோராலும் ஒருமிப்பாய் அங்கீகரிக்கப்பட்டது.

பிறகு ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரியார் அவர்கள் பின்வரும் அபிப்பிராயத்தை ஆலோசனைக்குக் கொண்டுவந்தார். அதாவது, (1) இந்த விவாஹ மகோத்ஸவத்தை முன்னிட்டு 16-ம்வ திங்கட் கிழமை தினம் சமஸ்தானம் முழுமையும் விடுமுறை நாளென்று பிரஸித்தம் செய்ய வேண்டுமென்றும், (2) மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களும், ராணியாரவர்களும் நீடூழி காலம் சௌக்கிய

மாகவும், சுகமமாகவும் வாழவேண்டுமென்றும், விசேஷமாய் ஜனங்கள் அந்தத் தினத்தில் பிரார்த்தனைகள் செய்வதற்காகச் சமஸ்தானத்திலுள்ள சகல ஹிந்து ஆலயங்களிலும், பள்ளிவாசல்களிலும், கிறிஸ்தவ ஆலயங்களிலும் விசேஷ அபிஷேகங்களும், தெய்வ ஆராதனையும் நடத்த ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் ஈ-தர்பாரவர்களைக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்பதுதான்.

இந்த அபிப்பிராயத்தை ஸ்ரீமான்களான சபாபதி பிள்ளை யவர்களும், J. கம்பர் மாணிக்கம் அவர்களும், R. ஸ்ரீநிவாஸ ராவ் அவர்களும் ஆமோதித்தார்கள். இதை ஒருமிப்பாய் எல்லோரும் அங்கீகரித்தார்கள்.

ஈ-திவான் அவர்கள் ஸ்டேட் சூபரின்டெண்ட் துரையவர் களுடன் ஆலோசனை செய்துகொண்டு, ஜனங்கள் கேட்டுக் கொண்டபடியே திங்கட்கிழமை விடுமுறை நாளாகுமென்று அறிவித்தார்.

மீண்டும் 1915-ம் வரு ஆகஸ்ட் மீ 13உ வெள்ளிக்கிழமை மாலை 6-மணிக்கு டவுன் ஹாலில் ஓர் மகாஜன சபைக் கூட்டம் நடந்தது.

அதற்கு Mr. and Mrs. க்வின், Messrs. V. R. துரை ராஜா B. A., G. கணபதி சாஸ்திரியார் B. A. B. L., A. பத்ம நாப சாஸ்திரியார் B. A., M. L., M. K. வெங்கடாசாரியார் B. A., G. சுந்தரேச சாஸ்திரியார் B. A., B. L., K. ஸ்வாமி நாதய்யர் M. A., B. L., P. V. ரெகுநாதய்யர் B. A., B. L., V. ராமச்சந்திரய்யர் B. A., B. L, S. ரத்னஸ்வாமி அய்யர் B. A., A. மகாலிங்கய்யர் B. A., A. பஞ்சநதய்யர், T. N. முத்தய்யா செட்டியார், U. C. உடையப்ப செட்டியார் முதலிய வர்களும், டவுனிலும், தாலூகாக்களிலுமுள்ள முகாமையான இன்னும் அநேகர்களும் விஜயம் செய்திருந்தனர்.

மகா-ஈ-ஸ்ரீ திவானவர்கள் அக்கிராசனம் வகித்துத் தமிழில் பிரசங்கம் புரிந்தார். பூண்டி வாண்டையார் அவர்களும், பாப்பாகாடு ஜெமீந்தார் அவர்களும், கடையப்பட்டி சேர்வைகாரர் அவர்களும் அந்தக் கூட்டத்தின் நடவடிக்கைகளில் தாங்களும் ஏகோபிப்பதைத் தெரிவித்து தந்தி அனுப்பியிருப்பதாக அக்கிரா சனர் சபையோருக்கு அறிவித்துவிட்டு, அடியிற் கண்டவாறு பிரசங்கம் செய்தார்:—

"நமது மகாராஜா அவர்கள் விவாஹம் செய்து கொண்டார் களென்ற சந்தோஷ ஸமாசாரத்தைக் கேள்வியுற்றேன். இந்தச் சபையில் கூடியிருக்கும் சகல ஜனங்களுடைய அபிப்பிராயத்துக்

கும் இசைந்து மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமஸ்தத்திற்கு சோபனோபசாரம் அனுப்புவதற்காகக் கூடியிருக்கும் இச்சபையில் அக்கிராசனம் வகிக்க நான் மிகவும் சந்தோஷிக்கிறேன். புதுக் கோட்டை நகர வாஸிகளான நாம் இந்த சந்தோஷமான ஸமாசாரத்தைக் கேட்டவுடன், நம்முடைய அரசருக்குச் சோபனோபசாரம் சமர்ப்பிக்கச் சென்ற புதன்கிழமை தினம் இதே இடத்தில் கூடினோம். அப்பொழுது இந்த நகர வாஸிகளில் சிலர் இதே காரியத்தை முன்னிட்டு இந்தச் சமஸ்தானத்தில் இதர பாகங்களிலுள்ள பிரஜைகளடங்கிய சபை யொன்று இன்றயத் தினம் கூடவேண்டுமென்று விருப்பங் கொண்டிருந்தனர். நாம் இன்றைக்கு இங்கே கூடியிருப்பதற்குக் காரணம் அதுவே. மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் விவாஹம் செய்து கொள்ள வேண்டுமென்றும், நம்மெல்லோருக்கும் ராணியார் ஒருவர் வாய்க்கவேண்டுமென்றும் ஆவல் கொண்டவர்களாய் நாம் கடவுளைப் பிரார்த்தித்துக் கொண்டிருந்தோமென்பதும் நம்மெல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயம். நம்முடைய மனோரதமானது பூர்த்திக்கு வந்து விட்டதென்று சந்தோஷமாய் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். (குதூஹலமான கரகோஷம் முழங்குகிறது). மற்றொரு விருப்பமும் நமக்கு உண்டு. அதென்னவெனில், மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் தமது ராஜபத்னியாருடன் சீக்கிரம் ராஜ்ஜியத்திற்குத் திரும்பி விஜயம் செய்து, நம்முடன் தங்கியிருந்து அரசாட்சி செய்து வரவேண்டுமென்பதுதான். (கரகோஷம்). நமக்கு ஏற்பட்டிருக்கும் அளவற்ற சந்தோஷத்தைத் தெரிவிக்கத் தகுந்த வார்த்தைகள் இனி தோன்றவில்லை. மிஸ்டர் S. ரத்னஸ்வாமி அய்யர் அவர்கள் இச்சபையில் பிரேரேபிக்க உத்தேசித்திருக்கும் விஷயத்தை எடுத்துச் சொல்லும்படி நான் அவரை இப்பொழுது கேட்டுக்கொள்ளுகிறேன்."

ஸ்ரீமான் S. ரத்னஸ்வாமி அய்யர் அவர்கள் பின்வரும் தந்தி சமாசாரத்தை அங்கீகரிக்கலாமென்ற அபிப்பிராயத்தைச் சபையின் ஆலோசனைக்குக் கொண்டுவந்தார்.

"மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் சமஸ்தத்தின் பிரஜைகள் சபை கூடி, மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுடைய விவாஹ மஹோத்ஸவத்தைக் குறித்து அன்பும் பக்தி விசுவாஸமும் நிறைந்தவர்களாய் மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் சமஸ்தத்திற்குச் சோபனோபசாரம் ஸமர்ப்பித்து, நீடூழி காலம் வாழ்ந்து மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் இல்லற வாழ்க்கையின் இன்பத்தை அனுபவிக்க ஆசீர்வதிக்கவேணுமாய்க் கடவுளைப் பிரார்த்திக்கின்றனர். மேலும், மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ராணியார் ஸஹிதம் விஜயம்

செய்து வருவதை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர்."

அத்துடன் பிரஜைகள் தங்களுடைய பக்தி விசுவாஸத்திற்கு அறிகுறியாக, தங்கள் சந்தோஷத்தை வெளியிட்டுச் சொல்லி, மங்கல வாழ்த்தும் கூறவேண்டுமென்று சொல்லி, அக்கிராஸனாதிபதியவர்கள் கூறிய வண்ணம் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் தமது ராஜ பத்னியாருடன் க்ஷேமமாய்ச் சீக்கிரம் இங்கு வந்து சேரவேண்டுமென்றும் எல்லோரும் கடவுளைப் பிரார்த்திக்க வேண்டுமென்றும் கூறினர். (கரகோஷம்). ராமச்சந்திரபுரம் ஸ்ரீமான் T. N. முத்தய்யா செட்டியார் அவர்கள் அதை ஆமோதித்து, மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு விவாஹம் நடந்ததைக் குறித்துச் சகலருக்கும் சந்தோஷமென்று கூறினார்.

கோனூர் ஸ்ரீமான் உடையப்ப செட்டியார் அவர்களும் அதை அனுசரித்துப் பேசிவிட்டு, சமயோசிதமாய் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுடைய வெளிநாட்டுப் பிரயாணங்களைக் குறித்துப் பிரஸ்தாபித்து, மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் சமக்ஷத்திற்கு அறிவிற் சிறந்த ராஜபத்னியார் வாய்த்திருப்பதினால் பிரஜைகளுக்கு எப்பொழுதும் அதிக சந்தோஷத்திற்கு இடமாயிற்றென்றும், ராஜ்ஜியம் மேன்மேல் அபிவிர்த்திக்கு வருவதற்கு ஹேதுவாகிவிட்டதென்றும் கூறினார்.

பிறகு ஸ்ரீமான் பஞ்சகதய்யர் அவர்கள் பேச எழுந்தார். சலவைக்கல் போன்ற அவர் மேனியும், அறையில் கட்டியிருந்த தவள நிறமான மல் வேஷ்டியும், மேலே போட்டுக்கொண்டிருந்த கருத்த அல்பாகா அங்கியும், தலையில் தரித்திருந்த தும்பைப் பூவைப் போன்ற மஸ்லின் தலைப்பாகையும், ஆஜானுபாகுவான உருவமும், சுருக்கங்கள் நிறைந்த நெற்றியும், அவருடைய கம்பீரமான தோற்றமும் அங்கு கூடியிருந்த அனேகர்களின் கண்களையும் கவர்ந்தன. அவர் பேசத் தொடங்கி, அதுவரையில் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் விவாஹம் செய்துகொள்ளாதிருந்ததற்குக் காரணம், பிரஜைகள் அன்னாரை விவாஹம் செய்துகொள்ளவேண்டுமென்று வற்புறுத்தாததுதானென்றும், அவ்வாறு தாங்கள் வற்புறுத்தாத குற்றத்தை க்ஷமித்துக் கொள்ள வேண்டுமென்று மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, ஹுஜூர் சமக்ஷம் ராஜபத்னியாருடன் சீக்கிரம் சமஸ்தானத்திற்கு விஜயம் செய்யவேண்டுமென்று பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும் கூறினார். அங்குள்ளவர்கள் சிலர் சிறிக்கப் புகுந்தனர். அய்யரவர்களுக்குச் சற்றுக் கோபம் வந்துவிட்டது. நெற்றி

யிலுள்ள சுருக்கங்கள் பிரகாசிக்க, அவர் சற்று உரத்த தொனியுடன், "அதென்ன சிரிக்கிறீர்களே, நம் மீது பிசகிருந்தால் பிசகை ஒப்புக்கொள்ள வேண்டியதுதானே." என்று சற்று ஆவேசத்துடன் கூற, எல்லோரும் அது சரிதானென்று சொல்லி, அய்யரை சமாதானப் படுத்திவிட்டுக் குதூஹல மான கரகோஷம் செய்தார்கள்.

இந்தப் பிரேரணை ஜனங்களின் ஸம்மதத்திற்கு விடப்பட்டு வெகு உத்ஸாகத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அக்கிராஸனாதிபதியவர்கள் அந்த ஸபையின் நடவடிக்கைகளை முடிவுக்குக் கொண்டுவரும்பொழுது, ஜனங்கள் கேட்டுக்கொண்ட படி திங்கட்கிழமை தினம் சமஸ்தானம் முழுமையும் ரஜா நாளாகு மென்றும், அன்று தினம் சமஸ்தானத்திலுள்ள சகல ஆலயங் களிலும், பள்ளிவாசல்களிலும், கிறிஸ்தவ ஆலயங்களிலும், அதற்கேற்றபடி அபிஷேகம், அர்ச்சனை, ஆராதனை முதலியவை கள் நடத்தி, மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களும், ராணியார் அவர்களும் நீடூழி காலம் க்ஷேமமாய் வாழவேண்டுமென்று விசேஷ பிரார்த்தனைகள் நடத்தும்படி திவான் பேஷ்காருக்கு ரா-ர்பாரவர்கள் உத்தரவு அனுப்பியிருப்பதாகவும் தெரிவித்தார்.

ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரியார் அவர்கள் வழக்கப் பிரகாரம் அக்கிராஸனாதிபதியவர்களுக்கு வந்தனம் அளித்தார். பிறகு மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்காக மும்முறை மிகுந்த உத்ஸாகத்துடனும் முழக்கத்துடனும் கரகோஷம் செய்யப் பட்டது. அன்று கூட்டம் அத்துடன் கலைந்தது.

மாதொடு மன்னன் வரக்கண்ட மாநகர்.

புத்திரப் பேறு.

2-வது அத்தியாயம்.

1915-ம் வரு அக்டோபர் மீ 12-உ வரையில் சமஸ்தான சூபரின்டெண்டாக விருந்த Mr. குவின் துரையவர்கள் தேக அசௌக்யத்தினால் ரஜாவெடுத்துக்கொண்டு சீமைக்குப் புறப்

பட்டார். அன்னாருடைய ஸ்தானத்தில் Mr. சிட்னீ பர்ன் I. C. S. ஸ்டேட் சூபரின்டெண்டாக நியமிக்கப்பட்டார். அப் பொழுது சமஸ்தானத்தின் கையிருப்பு ரூ 28, 40,000. யுத்தம் நடந்துகொண்டிருந்ததெனினும், அதனால் நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்திற்கும், ஆலங்குடி தாலூகாவில் நிலக்கடலை பயிராகும் கிராமங்களிலும் தவிர மற்றவர்கள் கிரமத்திற்கு உள்ளாகவில்லை. கடலை வியாபாரமாகாததினால், கடலை பயிர் செய்யும் குடிகளுக்குக் கஷ்டமாயிருந்தபோதிலும், அவர்கள் ஏற்றுமதியாகாத கடலையை எண்ணெயாக ஆட்டி எண்ணெயாகவும், மாட்டுக்குத் தீவனமாகவும், வயல்களுக்கு உரமாகவும் உபயோகிக்கக்கூடுமாவென்று பார்க்கத் தலைப்பட்டார்கள்.

மாரி காலம் வந்தது. மகாராஜா அவர்கள் சமஸ்தானத்திற்குத் திரும்பிவருவதை ஜனங்கள் ஆவலாய் எதிர்பார்த்துக்கொண்டிருந் தார்கள். நவம்பர் மீ 22உ மாலை 5-30 மணிக்கு மகா-ரா-ரா-ஸ்ரீ மகா ராஜா அவர்கள் ராணியாருடன் புதுக்கோட்டைக்கு மோட்டாரில் விஜயம் செய்தார். வரவேற்புக் கமிட்டியார் ராஜ தம்பதிகளை திருகோகர்ணம் ரஸ்தாவில் கருப்பர் மலைக்கருகில் எதிர் கொண்டழைத்தார்கள். கோவில் மரியாதைகளும், பூர்ண கும்ப மும் வழங்கப்பெற்றன. முனிஸிபல் சபையின் அக்கிராஸனர் ஓர் உபசாரப் பத்திரத்தைப் படித்துக் கொடுத்தார். ராஜபக்தியோடு கூடிய விமர்சையான வரவேற்பு ஏற்பாடுகள் மகா-ரா-ரா-ஸ்ரீ மகா ராஜா அவர்களுக்கு உருக்கத்தை உண்டுபண்ணியது. அவர் முனிஸிபல் சபைக்கு வந்தனம் செலுத்திப் பின்வருமாறு கூறினர்:

"உங்கள் உபசாரப் பத்திரத்தில் நீங்கள் ஒரே வேண்டு கோள்தான் சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, தலைநகரத்தில் சாக்கடைப் போக்குக்கு ஏற்பாடு செய்ய வேண்டியதின் அவசி யத்தைப் பற்றி. நீங்கள் அது சம்பந்தமாய் என்ன திட்டம் ஏற் பாடு செய்ய உத்தேசித்திருக்கிறீர்களென்று எனக்குத் தெரி யாது. ஆனால், அந்த விஷயம் என்னிடம் முடிவுக்கு வரும் பொழுது அதைப்பற்றி என்னால் கூடியமட்டில் சிரத்தையுடன் கவனிக்கிறேன். அதைப்பற்றி இப்பொழுது நான் அதற்கு மேல் சொல்வதற்கில்லை. (கரகோஷம்)

கனவான்களே, நீங்கள் எங்களிடம் வைத்திருக்கும் அன் பையும், ராஜவிசுவாஸ உணர்ச்சியையும் நாங்கள் பாராட்டுவ தோடு உங்களுடைய நேர்த்தியான உபசாரப் பத்திரத்திற்கும், அதை வைத்துக் கொடுத்திருக்கும் அழகான சிப்பத்திற்கும் வந்தனம் செய்கிறோம்."

உடனே மோட்டாரில் ராஜ தம்பதிகள் அரண்மனைக்குப் புறப்பட்டார்கள். அங்கு பெருங் கூட்டமாகக் கூடியிருந்த

ஜனங்கள் காது செவிடுபடும்படி பலமாகக் கரகோஷம் செய்தார்கள்.

நகரமெங்கும் தோரணங்களோடும், பாவட்டாக்களோடும், கல்வரவுக் கமான்களோடும் பொலிந்தது. அரசர் பெருமானின் வருகை கிராமாந்தரங்களெங்கும் பரவியிருந்தது. கிராமங்களிலிருந்தெல்லாம் ஜனங்கள் திரள் திரளாக திருநாள் கோலத்தில், வண்ண ஆடைகளோடும், பிரகாசமான ஆபரணங்களோடும் ஆரவாரத்துடன் புதுக்கோட்டை நகரத்தில் வந்து கூடினர்கள்.

அன்று இரவு சிறப்பான ஊர்வலம் ஒன்று நடந்தது. குதிரைகள் பூட்டிய வண்டியில் ராஜ தம்பதிகள் பவனி வந்தார்கள். போகும் வழியெங்கும் கண்ணைக் கவரும்படி விஷேதமாக அலங்காரம் செய்யப்பட்டிருந்தது. வீடுகள் தோறும் முன்றிலெல்லாம் அலங்காரம் செய்யப்பட்டுத் தீபங்கள் போடப்பட்டிருந்தன. கூட்டங் கூட்டமாக நிறைந்திருந்த ஜனங்களின் உத்ஸாகத்திற்கோர் எல்லையில்லை. கரகோஷம் செய்வதும், ஆசி கூறுவதும், மலர் தூவுவதுமாக விருந்தனர். தாம்பூல சந்தனுதிகளும், புஷ்ப வருஷங்களும் அபரிமிதமாய் வழங்கப்பெற்றன. பவனி செல்லும் வழிகளில் ராஜ தம்பதிகளுக்கு ஹாரத்திகள் எடுக்கப்பட்டன.

நவம்பர் மீ 24உ காலையில் ராஜ தம்பதிகள் நகர மண்டபத்தில் வரவேற்கப் பெற்றனர். வரவேற்புக் கமிட்டியார் அடியிற் கண்ட உபசாரப் பத்திரத்தைச் சமர்ப்பித்தார்கள்:—

மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமக்ஷத்துக்கு.

"தங்களுடைய ராஜ விசுவாஸம் வாய்ந்த பிரஜைகளாகிய நாங்கள், தாங்கள் தங்கள் ராஜ பத்னியாகிய மகாராணியாரை இங்கு ஸ்வக் கிருஹத்திற்கு அழைத்துக்கொண்டு வரும் மங்கள கரமான பிரஸக்தியில் எங்களுடைய மனப்பூர்வமான சந்தோஷத்தையும் ஆசிகளையும் தெரிவிக்க அனுமதி யளிப்பீராக!

"சமக்ஷத்தின் ஆக்ஷி நிகரற்றதாயும், பெருமை வாய்ந்ததாகவு மிருந்திருக்கிறது; கலமும், நீதியும் நிறைந்ததினால் பெருமையுற்றது. இந்திய சமஸ்தானுதிபதிகளுக்குள் தாங்கள் ஒருவரே இவ்வளவு நீண்ட காலம் சுகம், சந்துஷ்டி,—இவற்றைக் கொடுப்பதற்கேற்ற வாழ்க்கைத் துணையின்றி தனிமையாக ராஜ்ய பாரத்தை நடத்திவந்திருக்கிறீர்கள். நாங்களும், வெகு நாளாகத் தங்களுடைய ராஜ தர்மத்தைத் தாங்கள் குறைவின்றியும், செவ்வையாகவும் நடத்துவதற்கு உற்ற துணையாக தங்களுடன் அரியணையில் ஓர் மஹாராணியார் வீற்றிருக்கும் காலை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம். ஆதலால், எல்லா அபீஷ்டத்தை

யும் பூர்த்தி செய்ய வல்லவரான கடவுளே, எங்களுக்கு ஒரு ராணியாரைத் தந்தருள வேண்டுமென்று நாங்கள் பிரார்த்திக் கொண்டிருந்தோம். கடவுள் எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளி, எங்கள் மனோபீஷ்டத்தைப் பூர்த்தி செய்துவிட்டார்.

"மகாராஜா அவர்களின் திருமணச் செய்தி அறிவிக்கப்பட்டவுடன் அந்த சந்தோஷகரமான சமாசாரம் சமஸ்தானமெங்கும், சகல வகுப்பைச் சேர்ந்தவும், சகல ஜாதி மதங்களைச் சேர்ந்தவுமான சகல பிரஜைகளாலும் யதார்த்தமான பேருவகையோடு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

"பின்னர், சமகூம் ராணியார் ஸகிதம் சீக்கிரம் இங்கு விஜயம் செய்வீர்களென்று தெரிந்ததும் நாங்கள் பேரானந்தம் கொண்டோம். நேரில் தங்களுக்கு நல்லவரவு கூறும் உரிமை வாய்த்திருப்பதினால், மகாராணியென்ற முறையில் மட்டுமல்லாமல், எங்கள் தேவைகளைக் கேட்டருளி வரங்கள் பலவும் தந்து கருணை பாலித்து எங்களை ஆதரிப்பதற்காக அருள் சுரந்து வந்த அன்புடை அன்னையாக மனப் பூர்வமான நல்வரவு கூற விரைகின்றோம். எங்களுடைய பக்தி விசுவாஸம் நிறைந்த பணிவிடைகளை ராணியாரவர்களுக்குச் செலுத்தி, அன்னாரிடம் எங்களுக்குள்ள அசஞ்சலமான ராஜ விசுவாஸத்தைப் பற்றியும் உறுதி கூற அனுமதி வேண்டுகிறோம்.

"இந்தப் பிரஸக்தியில், இந்தச் சம்பவத்தைச் சமஸ்தானத்திலுள்ள பெண்பால் பிரஜைகள் விசேஷமான சந்தோஷத்துடனும், பெருமையுடனும் பாராட்டுகிறார்களென்று விஞ்ஞாபனம் செய்து கொள்ளாவிடின் நாங்கள் எங்கள் கடமையில் வழுவினவர்களாவோம். ஹஸ்ஸர் சமகூத்தின் ஆகூியானது யாரும் விரும்பத் தக்கபடி கருணையோடும், நெறி முறையோடும் கூடினதாயிருந்த போதிலும், பிரஜைகளில் பெண்பாலாயுள்ளவர்கள் தங்களுக்குள்ள தேவைகளையும் விருப்பங்களையும் நோடித் தெரிவித்துக் கொள்ள முடியாத குறையொன்று இருந்தது. அவர்களுக்கு இப்பொழுது தங்கள் இனத்தைச் சேர்ந்த மகாராணி யொருவர் ஏற்பட்டு விட்டபடியால் அவர்களுக்கும் சந்தோஷம் ஏற்பட்டு விட்டது; அவரிடம் அன்பும் ஆதரவும் பெறலாமென்று மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள்.

"இத் திருமணத்தில் யதார்த்தமான கீழ் நாடு—மேல் நாடு சம்பந்தமிருக்கிறது; இது புதுக்கோட்டை சமஸ்தானத்தில் இன்னும் அதிக சோபையும் கூமமும் வாய்ந்த சகாப்தம் ஏற்படுவதற்கு ஹேதுவாகும். மேலும் தொண்டைமான் வம்சத்தின் சாசுவதமான பெருமைக்கும் இடமாகும்.

"இந்தத் திருமணத்தைக் கடவுள் சிறந்த நன்மைகளை அருளி ஆசீர்வதிப்பாராக! அவர் உங்களுடைய இருதயங்களைச் சந்தோஷிப்பாராக! தாங்கள் தம்பதி ஸகிதம் கீர்த்தியோடும், ஸுகத்தோடும் நெடு நாள் ஆயுஷு புரிவீர்களாக!"

மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் அதற்குப் பின்வருமாறு பதிலளித்தார்கள்:

"நான் கல்யாணம் செய்துகொண்டு திரும்புகையில் எனக்கு நீங்கள் மனமுவந்து அளித்த உற்சாகமான வரவேற்புக்கு நான் உங்களை வந்தனம் செய்கிறேன். என் மனையாளுக்கும் நீங்கள் அளித்திருக்கும் ராஜோபசாரமானது, சமஸ்தான விஷயத்திலும், என் சம்பந்தமான காரியங்களிலும் நான் செய்யும் முடிவை எவ்வளவு ராஜ விசுவாஸத்துடனும், கல்மஷமற்ற நம்பிக்கையோடும் ஒப்புக்கொள்ள நீங்கள் தயாராயிருக்கிறீர்களென்பதைக் காட்ட, புதிதாக ருஜு ஏதேனும் வேண்டியது அவசியமாயிருந்தால், அதற்குற்ற ருஜுவாகும். எனக்கும், என் மனைவிக்கும் நீங்கள் அளித்திருக்கும் குதூஹலமான வரவேற்பானது, நான் என் பிரஜைகளிடம் வைத்திருக்கும் நம்பிக்கை ஸ்திரமான ஆதாரத்தின் பேரில் நாட்டப்பட்டிருக்கிறதென்பதையும், குறுகிய நோக்க முடையவர்களுக்குப் பிடித்தமில்லாமலிருக்கக்கூடிய காரியங்களில் கூட எனது பிரஜைகளின் எல்லா வகுப்பார்களுடையவும் தயக்கமற்ற நம்பிக்கையையும், விசுவாஸத்தையும் நன்றுகப் பெற்றிருக்கிறேனென்றும் காட்டுகிறது.

"பல வருஷங்களாக என் விவாஹ சம்பந்தமான பிரச்னை தீவ்ரமாய் என்னுடைய கவனத்திலிருந்து வந்தது. எனக்கு ஏற்பட்டிருந்த பயிர்ச்சி பழக்கத்தாலும், இந்த தேசத்திலும் இதர நாடுகளிலும் நான் செய்திருக்கும் பிரயாணங்களினாலும், நான் மனைவியாகக் கொள்பவள் இல்லற வாழ்க்கைக்கு ஏற்றவளாயும், அரசாட்சிப் பொறுப்பில் எனக்கு உதவியாயிருக்கக்கூடிய தீக்ஷண்யமுள்ளவுமாயிருப்பதற்கு இன்ன மாதிரியானவளாயிருக்கவேண்டுமென்று நிதானித்திருந்தேன். எங்கும் பார்த்ததின் பேரிலும், மிகுந்த யோசனையின் பேரிலும், நமது தேசத்து ஜனங்களின் பிரகிருத நிலைமையில் என்னுடைய லக்ஷியத்திற்கேற்ற லக்ஷணங்கள் கிட்டத்தட்டவாவது பொருந்திய மனைவியைக் கண்டுபிடிப்பது துர்லபமென்று தோற்றியது. ஆதலால், வெளித் தோற்றத்தில் தேசிய உணர்ச்சிக்குப் புறம்பாகக் காணக்கூடிய தோற்றத்தைப் பெரிதாகப் பாராட்டாமலிருந்தால் தான் நான் எதிர்பார்த்த மாதிரியான மனைவியை அடையலாமென்று தோன்றியது. "வெளித் தோற்ற அளவில் நினைக்கக்

கூடிய உணர்ச்சி" என்று கூறுகிறேன். ஏனெனில், எத்தனையோ பேர்கள் தாங்கள் ஸ்வீகரித்துக்கொண்ட நாட்டையே தங்கள் நாடாக முற்றும் கருதியவர்களில் அநேகர்களை உதாரணமாகக் கூறலாமென்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். கடைசியாக, கடவுள் என் கருத்துக்கிசைந்த மனையாளை அருளி யிருக்கிறார். கடவுளின் கிருபையால் சமஸ்தானமானது முன்னிருந்ததை விட எங்களிருவருடைய ஆசையில் அதிக க்ஷேமமாயும், சந்தோஷ மாயு மிருக்குமென்று நம்புகிறேன்.

"என் மனைவிக்கு நீங்கள் அளித்த ராஜ விசுவாஸத்தோடு கூடிய நல்வரவுக்காக அவர் சார்பாக நான் உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். பாக்கி விஷயங்களைப்பற்றி என் மனைவியே பேசிக்கொள்ளும்படி, வெறும் வார்த்தைகளிலன்னியில் கார்யங் களால் பேசிக்கொள்ளட்டுமென்று விட்டுவிடுகிறேன்.

"இன்னு மொரு முறை, தங்களுடைய அன்போடு கூடிய நல்வரவிற்கும், எனக்கும் என் மனைவிக்கும் நீங்கள் தெரிவித் திருக்கும் ராஜவிசுவாஸத்திற்கும், ஆசிகளுக்கும் உங்களை வந்த னம் செய்கிறேன்."

புதுக்கோட்டை நகரத்திலுள்ள சீமாட்டிகளெல்லாம் டவுன் ஸர்க்கார் பெண்பிள்ளைகள் பாடசாலையில் ராணி ஸாஹிபா அவர் களுக்குப் பின்வரும் உபசாரப் பத்திரத்தைப் படித்துக் கொடுத்தார் கள்:

"சமஸ்தானத்து ஸ்த்ரீ பிரஜைகளாகிய நாங்கள் தங்களை எங்கள் மகாராணியாரென்று அழைக்கும் உரிமையை அளித்துள்ள இச்சந்தோஷமான திருமணத்திற்கு எங்களுடைய மனப்பூர்வ மான வாழ்த்துக்களைக் கூற அனுமதி கோருகிறோம்.

"எங்கள் நாடாகிய இச்சமஸ்தானம் சரித்திரத்தில் பெயர் பெற்றது. எங்கள் க்ஷேமத்திலேயே எப்பொழுதும் கண்ணுங் கருத்துமா யிருப்பவர் எங்களரசர். எங்களெல்லோரையும் காப் பாற்றி வருகிறார் எங்களரசர். இருந்தாலும் சரியான காரியங்களைச் செய்வதில் ஆதரவளிக்கவும், எங்கள் தேவைகளைப் பூர்த்தி செய் விக்கவும், எங்களை முன்னேற்றமடையச் செய்து சந்தோஷிக்கும் படி செய்யவும் எங்களுக்கு ஒரு மகாராணியார் இருந்தால் சால வும் நன்றாக விருக்குமென்று எங்களுக்குத் தோன்றிக் கொண்டி ருந்தது.

"இல்லம் இனிது; அதைச் சந்தோஷமுள்ளதாகச் செய்பவர் கள் மெல்லியர்களாகிய நாம். தாங்கள் தங்களுடைய அரண்மனைக் குச் சந்துஷ்டி கொடுப்பீர்கள்; நாங்கள் எங்கள் சிற்றில்களுக்குச் சந்துஷ்டி கொடுப்போம். இதா இடங்களிலுள்ள எங்கள் சகோ

தரிகளுக்கிருப்பது போலவே எங்களுக்கும் வாழ்க்கையின் சிரேஷ்டமான வேலையைச் செய்வதில் இடையூறுகள் இருக்கின்றன. உதாரணமாக, பெண் பிள்ளைகளின் வித்தியாபிவிர்த்தி, அவர்களுக்கு விளக்கம் தரக்கூடிய மேம்பாடுகளுக்கு வழி செய்வது முதலியவைகளில் எவ்வளவோ காரியம் செய்யவேண்டியதாயிருக்கிறது. மெல்லியவர்களுக்குச் செய்யவேண்டிய காரியங்கள் ஆடவர்களைச் சார்ந்ததெனினும், மெல்லியரையும் சார்ந்ததேயாகும். தங்களைப்போன்ற பெருந்தகைப் பெண்மணி எங்களை ஆளுவதினால் அநேக வீடுகளில் ஒளியும் இன்பமும் உண்டாவதற்கு எவ்வளவோ காரியம் செய்யலாம். எங்களுக்காகவும் எங்களோடும் அனுதாபப்படுவதற்குத் தாங்கள் இப்பொழுது எற்பட்டது எங்கள் பெரும் பாக்கியமாகும். தாங்கள் எங்களுடைய மகாராணியென்பது மட்டுமல்ல; ஸ்திரீ சமூகத்திற்கே அரசியாகவும், ஒளியாகவும், வழிகாட்டியாகவுமிருந்து, தங்கள் உதாரணத்தினாலும் சேர்க்கையாலும், ஆதரவினாலும், ராஜசம்மானங்களினாலும் எங்களுக்கு ஞாலேதய பாக்கியம் ஏற்பட்டு, நாங்களும் சந்தோஷமடைந்து, மற்றவர்களையும் சந்தோஷமுள்ளவர்களாகச் செய்ய வாய்க்குமென்பதைக் குறித்து மகிழ்ச்சி கொள்ளுகிறோம்.

"ஸ்வபாவத்தில் நாங்கள் கூச்சமுள்ளவர்களான ஏகாந்தப் பிரியர்களானாலும், தங்கள் வரவினால் எங்களுக்கு உண்டாயிருக்கும் சந்தோஷத்தை நோடித் தங்களிடம் தெரிவிக்கத் துணிந்தோம்.

"மகாராணியவர்களே!, எங்களுடைய பக்தி பூர்வமான ராஜவிசுவாஸம் வாய்ந்த வழிபாடுகளை ஏற்றருள்வீராக! பெண் பிள்ளையன்றி பிறர் உணர்தற்கரிய காதலுடன், எங்கள் பிரீதிக்குப் பாத்திரர்களான அந்தரங்க உற்றூர் உறவினர்களிடம் நாங்கள் பாராட்டும் காதலுடன் தங்களை நேசிக்கிறோம்.

"நாங்கள் தங்கள் சகோதரிகள்; தங்களுடைய சகோதர வாத்ஸல்யத்தை நாடுகிறோம். தாங்கள் எங்கள் மகாராணி; தாங்கள் எங்களுக்கு ஓர் அன்னையாயிருந்து வருவீராக!

"அரண்மனை ஆசீர்வதிக்கப்பட்டதாகுக! தங்கள் இல்லறம் அன்பும் சந்தோஷமும் நிறைந்ததாயும், இனிய எண்ணங்களும், மனமையும், தீர்க்காயுளும் பெற்று விளங்குமாக!"

ராணி ஸாகிபா அவர்கள் பின்வருமாறு பதிலளித்தனர்.

"இன்று பிற்பகலில் நீங்கள் இத்தப் பிரிய வார்த்தைகள் கூறி என்னை வரவேற்றதைத் தகுந்தபடி பாராட்டி எனது மனமார்ந்த வந்தனங்களைத் தெரிவிக்கத் தகுந்த வார்த்தைகள்

தோன்றவில்லை. நீங்கள் எனக்கு அளித்திருக்கும் அழகிய சிப்பத்துக்காகவும் உங்களுக்கு வந்தனம் செய்கிறேன். அந்த சிப்பத்தை நாம் முதல் முதல் சந்தித்த சுதினத்தின் இனிய ஞாபகச் சின்னமாக எப்பொழுதும் வைத்திருப்பேன்.

"என் கணவர் உங்கள் படிப்பிலும், சேமத்திலும் தீவிரமான சிரத்தை வகித்து வருகிறார் என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியுமாதலால், அதைப்பற்றி நான் அதிகம் பேசத் தேவையில்லை. ஆனால், அவைகளை விருத்தி செய்வதற்கு என் சக்தியிலுள்ள எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன் என்பதைப் பற்றி நீங்கள் உறுதி கொள்ளலாம்.

"நான் எப்பொழுதும் உங்களைப் பார்ப்பதற்குப் பிரியமுள்ளவளாயிருப்பேனாதலால் உங்களுக்கிருக்கும் குறைகளை என்னிடம் தெரிவிக்க நீங்கள் எப்பொழுதும் தயங்கவேண்டாம். நான் அனுதாபத்துடன் அவைகளைக் கவனிப்பேன் என்பதையும், நீங்கள் திண்ணமாக வைத்துக்கொள்ளலாம்.

"நான் இப்பொழுது சொல்லப்போகும் விஷயம் உங்களுக்கு ஆச்சரியமாகத் தோன்றலாம். ஆனால் அது உண்மையான சங்கதி. நான் இங்கு வந்து 15 நாட்களே ஆகிறதென்ற போதிலும், என் பர்த்தாவின் சகலப் பிரஜைகளும் அன்போடளித்த நல்வரவினாலும், அவர்கள் காண்பித்த நல்லுணர்ச்சியினாலும், இது எனக்கு வேற்றிடமாகவே தோற்றவில்லை; இங்கேயே பிறந்து வளர்ந்து வந்தது போலவே இருக்கிறது.

"நீங்கள் என்னிடம் பக்ஷம் காட்டியதற்கெல்லாம் மறுபடி வந்தனம் செய்கிறேன். நாம் இப்பொழுது கூடியிருப்பது இனி நாம் சந்தோஷமாய் இவ்வாறு பற்பல முறை கூடுவதற்கு அங்குரார்ப்பணமாகுமென்றும் நம்பிக்கை கொள்வோமாக!"

சமஸ்தானத்துப் பிரஜைகளில் எல்லா வகுப்பார்களும் சேர்ந்து மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கும், அவரது அருமை யான ராணி ஸாஹேப் அவர்களுக்கும் மஹோத்ஸாக நல்வரவு நடவடிக்கைகளும், காட்சிகளும் இத்துடன் முற்றுப்பெற்றன.

புத்திரப் பேறு

மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களும், ராணி ஸாஹேப் அவர்களும் இத்தேசத்தில் 1916-ம் வரு ஏப்ரல் மாதம் வரையில் தங்கியிருந்துவிட்டு, அந்த மாதம் 16-ம் உ ஆஸ்திரேலியாவுக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

சுமார் மூன்று மாதம் சென்ற பின்னர் ஜூலை மீ 22உ யாகிய சுபதினத்தில் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்குப் புத்திரோத்சவமுண்டானது ராஜ தம்பதிகளுக்கும், சமஸ்தானத்தி லுள்ள எண்ணிலாப் பிரஜைகளுக்கும் பேரானந்தத்தை விளைவித் தது. இக்குழந்தைக்கு ஸிட்னி என்னும் பட்டணத்தில் பிறந்த காரணத்தை முன்னிட்டு ஸிட்னி மார்த்தாண்டன் என்று நாமகர ணம் செய்யப்பட்டது. குழந்தையின் சௌகரியத்தை உத்தே சித்து ராஜ தம்பதிகள் ஆஸ்திரேலியாவிலேயே தங்க வேண்டி நேரிட்டது. குழந்தையும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்துகொண்டு வந்தது.

ஜனநாயக உணர்ச்சியின் உதயம்.

பிரதிநிதி சபையும், மகாநாடுகளும்.

3-வது அத்தியாயம்.

ஜனப்பிரதிநிதி சபையானது 1902-ம் வருஷத்தில் ஸ்தா பிக்கப்பட்டது. ராஜீய விஷயத்தில் முக்கியமான காரியங்களில் பொது ஜன அபிப்பிராயத்தை ரா-தர்பாரவர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்கு ஏதுவாயிருக்கவேண்டுமென்ற நோக்கத்துடன் அச்சபை ஏற்படுத்தப்பட்டது. சபை ஸ்தாபிதம் செய்யப்பட்ட பொழுது அதில் 30 மெம்பர்களிருக்க வேண்டுமென்றும், அவர்களுள் 9 பேர்கள் மட்டில் ஜனங்களால் தெரிந்தெடுக்கப் பட்டவர்களா யிருக்கவேண்டியதென்றும் நிட்டம் செய்யப்பட்டி ருந்தது. இப்பால் அவர்களுள் 25 பேர்கள் ஜனங்களால் தெரிந் தெடுக்கப்பட்டவர்களா யிருக்கவேண்டுமென்றும், மற்றவர்கள் ரா-தர்பாரவர்களால் குறிப்பிட்டு நியமனம் செய்யப்பட்டவர்களா யிருக்கவேண்டுமென்றும் ஏற்பாடு செய்யப்பட்டது. ஜனங்கள் தெரிந்தெடுக்கும் முறை என்னவென்றால், இலாகாத் தலைவர் களால் குறிப்பிடப்படும் பிரமுகர்கள் சேர்ந்து தங்களுக்குள்

பிரதிநிதிகளைத் தெரிந்தெடுப்பதுதான். மற்ற ஐந்து ஸ்தானங்களுக்கு ஈ-தர்பாரவர்களால் குறிப்பிட்டு நியமனம் செய்யப்படும். எந்த விஷயத்தைப்பற்றியும் மெம்பர்கள் தங்களுக்கு வேண்டிய தகவல்களைக் கேட்கலாமென்றும், ஈ-தர்பாரவர்கள் மேற்படி கேள்விகளுக்கு உத்தரம் சொல்வது அவர்கள் இஷ்டத்தைப் பொறுத்த விஷயமென்றும் ஏற்பட்டிருந்தது. 1919-ம் வருஷம் வரையில் வருஷத்திற்கு ஒரு முறைதான் சபை கூடுகிற வழக்கம். தெரிந்தெடுக்கப்படும் அங்கத்தினர்களின் சங்கியையை அதிகப்படுத்தியதென்ன, இன்னும் சிற்சில விஷயங்களில் சிறிதளவு உரிமைகள் வழங்கப்பட்டதென்ன, இவற்றைத் தவிர வேறு எவ்விதமான சீர்திருத்தமும் செய்யப்படாமல் ஒரே ஸ்திதியில் இச்சபை இருந்து வந்தது. ஈ-தர்பாரவர்கள் தங்களிடம் வைத்துக்கொண்டிருந்த அதிகாரத்தை எள்ளளவும் நழுவவிடவில்லை. ஜனங்களும், அவர்களின் பிரதிநிதிகளும் சில சீர்திருத்தங்களைச் செய்யவேண்டுமென்று இடைவிடாது கேட்டுக்கொண்டிருந்தும், அவர்களின் மனோரதம் கைகூடுமென்பதற்கான சின்னங்கள் சிறிதளவேனும் காணப்படவில்லை. ஆதலால், பிரதிநிதி சபை ஜனங்களின் விருப்பத்திற்கிணங்கின விதமாய் நடத்தப்படவில்லையென்றும், ஜனங்கள் வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிற சீர்திருத்தங்களெல்லாம் அவசியமானவைதானென்றும் ஈ-தர்பாரவர்களுக்குப் படும்படி எடுத்துக்காட்டுவதற்கு அவர்களெல்லோரும் ஒழுங்காய் ஒன்று சேர்ந்து, வேண்டிய வழிகளைத் தேடவேண்டுமென்றும் அங்கத்தினர்கள் தெரிந்துகொண்டார்கள். 1920-ம் வருஷம் முதல் மூன்று வருஷ காலத்திற்கு மெம்பர்களாயிருப்பதற்கான அங்கத்தினர்கள், 1919-ம் வருஷம் அக்டோபர் மாதத்தில் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். அவர்களில் பழைய அங்கத்தினர்கள் சிலர் மறுபடியும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். உற்சாகமுள்ள புது மெம்பர்கள் சிலரும் தெரிந்தெடுக்கப்பட்டார்கள். 1920-ம் வருஷம் ஜனவரி மீ 30உ மெம்பர்களில் பலர் டவுன் ஹாலில் கூடினார்கள். Mr. G. சுந்தரேச சாஸ்திரிகள் தலைமை வகித்தார். அடியிற்கண்ட தீர்மானங்கள் செய்யப்பட்டன:— (1) பிரதிநிதி சபையின் உபயோகத்தையும், முக்கியத்தையும் விருத்தி செய்யும்பொருட்டு ஏழு பேர்களடங்கிய நிரந்தரக் கமிட்டியொன்று ஸ்தாபிக்க வேண்டும்; அவர்களுள் நான்கு பேர்கள் புதுக்கோட்டை டவுனில் வசிப்பவர்களாயும், மற்ற மூன்று பேர்கள் தாலூகாவுக்கு ஒருவராகவும் இருக்க வேண்டும். (2) ஒரு தலைவரும், காரியதரிசியும் பொக்கிஷக்காரருமாக ஒருவரும் நியமிக்கப்பட வேண்டும்.

இத்தீர்மானங்களை யனுஸரித்து Mr. G. சுந்தரேச சாஸ்திரியர் அக்கிராஸனராகவும், Mr. S. வீரவனுதய்யர்—காரியதரிசியும்

பொக்கிஷக்காரருமாக நியமிக்கப்பட்டார்கள். அடியிற்கண்ட மெம்பர்கள் கமிட்டியார்களாக நியமிக்கப்பட்டார்கள்:—(1) மிஸ்டர் G. சுந்தரேச சாஸ்திரியஸ்—தலைவர். (2) மிஸ்டர் S. விசுவனுதய்யர்—காரியதரிசி. (3) மிஸ்டர் J. K. மாணிக்கம் பிள்ளை. (4) மிஸ்டர் உடையப்ப செட்டியார். (5) மிஸ்டர் R. அருணாசல அம்பலகாரர். (6) மிஸ்டர் K. சத்தியமூர்த்தி அய்யர். (7) மிஸ்டர் A. வேணுகோபால் நாயிடு காரு.

மகா யுத்தமானது நேசக் கக்ஷியாரின் புகழுக்கும், உலகத்தின் அமைதிக்கும் ஹேதுவாக முடிவுக்கு வந்தது. மாண்டேக்-செம்ஸ்போர்டு சீர்திருத்தங்கள் அடங்கிய அரசியல் சட்டமானது அங்கீகரிக்கப்பட்டது. எங்கே பார்த்தாலும் ஜனங்களின் சுதந்தரங்கள் வரவர பிராபவத்துக்கு வரத் தொடங்கின. அவற்றைக் கவர்ன்மெண்டாரவர்கள் ஒப்புக் கொண்டு விட்டார்கள். பிரிடிஷ் இந்தியாவில் ஏற்பட்ட மாறுதல்கள் சுதேச சமஸ்தானங்களிலும் எதிரொலி எழுப்ப, அங்குள்ளவர்களும் அதை யனுஸரித்துத் தீவிரமாய் வேலை செய்யத் தொடங்கினார்கள்.

1920-ம் வருஷம் பிப்ரவரி மாதம் பிரதிநிதி சபையின் 18-வது கூட்டம் நடைபெற்றது. அதில் ஆலோசனைக்குக் கொண்டுவரும் விஷயங்களுள் Mr. S. விசுவனுதயர், பிரதிநிதி சபையின் உபயோகத்தையும் பிராதான்னியத்தையும் அதிகப்படுத்தும் பொருட்டு சபையை வருஷத்திற்கு இரு முறை கூட்ட வேண்டுமென்றும், சமஸ்தான வரவு செலவு கணக்கைப்பற்றிச் சர்ச்சை செய்யும் உரிமை அதற்கு அளிக்கப்பட வேண்டுமென்றும், மெம்பர்கள் தீர்மானங்கள் கொண்டுவர அனுமதி தந்து, அந்தத் தீர்மானங்கள் சபையின் அங்கத்தினர்களின் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டால், அதை அமுலுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும், ஆனால் ஈ-தர்பாரவர்களுக்கு அப்படிப்பட்ட தீர்மானங்களை நிறைவேற்றாமலிருப்பதற்கு அதிகாரம் வைத்துக் கொள்ளலாமென்றும் எடுத்துக் கூறியிருந்தார்.

அந்த விஷயத்தைப்பற்றிச் சர்ச்சை நடந்ததும், ஈ-திவானவர்கள் பிரதிநிதி சபைக்கு அதிக அதிகாரம் கொடுக்கவேண்டுமென்ற கேட்டால் லெஜிஸ்லேடிவ் அட்வைஸரி கௌன்ஸில் இருக்க வேண்டிய அவசியமுண்டாவென்ற கேள்வியைக் கவனிக்க வேண்டுமென்றும், பிரதிநிதி சபையை வருஷத்திற்கு இரு முறை கூட்டுவதில் ஆட்சேபணையில்லையென்றும், வரவு செலவு கணக்கைச் சர்ச்சை செய்யும் உரிமையைச் சபைக்குக் கொடுக்கும் விஷயத்தைப் பற்றி ஹுஸூர் சமக்ஷத்தின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளாமல் ஒன்றும் செய்ய முடியாதென்றும், அதைக்

குறித்து ஹுஸூர் சமஸ்தானத்திற்குத் தெரிவிப்பதாயும், கோரிக்கை அனுதாபத்துடன் கவனிக்கப்படுமென்றும் கூறினார்.

பிரதிநிதி சபைக் கூட்டத்தைக் கலைப்பதற்கு முன் ராஜாவானவர்கள் செய்த பிரசங்கத்தில் பின்வருமாறு பேசினார்:—

"கனவான்களே! பொது ஜன வேலையில் உங்களெல்லோருக்கும் உற்சாகமிருப்பதாக Mr. S. விசுவனுதய்யர் தெரிவிக்கிறார். நீங்கள் தர்பாரவர்களுக்கும் சரி, ஜனங்களுக்கும் சரி, உபயோகமாயிருக்கவேண்டுமென்று எத்தனையோ வருஷங்களாக வற்புறுத்திக்கொண்டு வந்திருக்கிறோமென்பது உங்களுக்குத் தெரியும். உங்களுடைய உற்சாகம் எங்களுடைய வற்புறுத்தலின் பேரில் தான் ஏற்பட்டதென்று இல்லாவிட்டாலும், நமது சமஸ்தானத்தின் அபிவிர்த்தியில் நீங்கள் அக்கரை யெடுத்துக் கொண்டது பற்றி நான் சந்தோஷிக்கிறேன். நாங்களும் சரி, நீங்களும் சரி, நமது நாட்டின் க்ஷேமத்திற்கு உழைப்பதில் அமர்ந்திருக்கிறோம். சில வேளைகளில் சிற்சில விஷயங்களைப்பற்றி நீங்கள் நினைக்கிறபடியே நாங்களும் நினைக்காவிட்டாலும், அப்படியிருப்பது உங்கள் அபிலாஷைகளில் எங்களுடைய அனுதாபக் குறைவினாலில்லை, உங்கள் யோசனைகளை உடனைக்குடன் ஏற்றுக் கிரியாம்சைக்குக் கொண்டுவருவதற்கு அனுபவத்தில் சிரமங்களிருப்பதினாலேதானென்று நான் உங்களுக்கு உறுதியாய்க் கூறலாம்."

சபை கலைந்ததும், பிரதிநிதி சபை மெம்பர்களெல்லோரும் ராஜ-தர்பார் ஹாலில் கூடிப் பல தீர்மானங்களை நிறைவேற்றினார்கள். அவற்றுள், சேர்ந்திருந்த சம்பந்தமான யோசனைகள் யாவற்றிலும் பொதுவானவும், பிரதேச விஸ்தரணங்களுக்குச் சம்பந்தப்பட்டவுமான முக்கிய பிரச்னைகளைக் கவனிப்பதில் ஜனங்களையும் கலந்து கொள்ளவேண்டியது அவசியமென்பதை யுத்தேசித்து ஜனங்களோடு நேராடிச் சந்திப்பதற்காக மெம்பர்கள் தலைநகருக்கு வெளியே சமஸ்தானத்தில் ஏதாவதோரிடத்தில் மகாநாடு கூட்டவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. மெம்பர்கள் ஆலங்குடிக்கு வரவேண்டுமென்று அழைக்கப்பட்டார்கள்; ஆனால் Mr. R. அருணாசலம் அம்பலகாரர் பூவாசகுடிக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டபடியால், அதற்கிணங்க மகாநாட்டைப் பூவாசகுடியில் கூடத்த ஒப்புக்கொள்ளப்பட்டது.

முதலாவது மகாநாடு.

4-வது அத்தியாயம்.

ஆலங்குடி தாலூகா, வலநாடு மாகாணம் பூவரசகுடியில் 27—4—1920ல் கூடிய முதலாவது மகாநாடு.

மகாசபைக்கு வரும் மகாஜனங்களை அழைத்து உபசரிப்பதற்காக வலநாட்டு மாகாணத்திலுள்ள முகாமையானவர்கள் சிலர், Mr. R. அருணாசல அம்பலகாரர் அவர்களைத் தலைமையாக வைத்துக்கொண்டு உபசரணைக் கமிட்டி ஒன்று ஏற்படுத்திக் கொண்டார்கள். மேடி கமிட்டியார்களும் பூவரசகுடியிலுள்ள இதர குடிகளும் 27—4—20ல் பகல் சுமார் 12½ மணிக்கு பூவரசகுடிக்கு அருகாமையிலிருந்தும், புதுக்கோட்டை நகரிலிருந்தும், மற்ற ஊர்களிலிருந்தும் மகாநாட்டிற்கு வரும் மகாஜனங்களைத் தங்கச் செய்து, அங்கு சபையின் தலைவராகிய மகா-ள-ள-ஸ்ரீ G. சுந்தரேச சாஸ்திரியாரவர்கள் விஜயம் செய்ததும், அவரையும் மற்றவர்களையும் உபசரித்து, வாத்திய கோஷத்துடன் மகாநாடு கூடுமிடத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இந்த மகாநாடு கூடும் விஷயமாய் பூவரசகுடிக் குடிகள் எடுத்துக்கொண்ட சிரத்தையையும் உற்சாகத்தையும் எடுத்துச் சொல்ல சாத்தியமில்லை. சாலையெல்லாம் தண்ணீர் தெளிக்கப்பட்டும், அன்றைய உபயோகத்திற்காகத் தண்ணீர்ப் பந்தல் ஒன்று வைக்கப்பட்டும், மகாநாடு கூடுமிடமும் மற்ற விடங்களும் அழகாய்த் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டும் பார்ப்பவர் கண்களைக் கவரும்படி இருந்தது. இதெல்லாவற்றையும் காட்டிலும் முக்கியமானது, மகாநாட்டிற்காகப் புதுக்கோட்டை தலைநகரிலிருந்தும், மற்றுமுள்ள ஊர்களிலிருந்தும் பிரமுகர்களான மகாஜனங்கள் விஜயம் செய்ததவுடன் பூவரசகுடி ஜனங்கள் தங்கள் முகத் தோற்றத்தால் காண்பித்த உற்சாகமும் சந்தோஷமுமே.

பகல் 1-மணிக்குச் சரியாக மகாநாட்டின் நடவடிக்கைகள் ஆரம்பமாயின. சுமார் 300 ஜனங்களுக்குக் குறையாமல் மூன்று தாலூகாக்களிலிருந்தும் ஆஜராகியிருந்தனர். பிரதிநிதி சபை அங்கத்தினர்களில் 16 அங்கத்தினர்கள் வந்திருந்தார்கள். சபை கூடினதும் மகா-ள-ள-ஸ்ரீ G. சுந்தரேச சாஸ்திரியாரவர்கள் மிஸ்டர் G. சுந்தரேசய்யரால் தலைமை வகிக்கும்படி பிரேரேபிக்கப்பட்டு, அதைச் சபையோர்கள் காரகோஷத்துடன் ஆமோ

திக்க, தலைவரும் அக்கிராஸனத்திலமர்ந்தார். அதன் பின்னர் மகா-ரா-ரா-ஸ்ரீ R. அருணாசல அம்பலகாரர் அவர்களால் வந்தனோபசார அழைப்புப் பத்திரிகை படிக்கப்பட்டது. அந்தப் பத்திரிகையின் நோக்கத்தையைப் புகழாதவரில்லை. பிரஜைகளுக்குள் ஒற்றுமை ஏற்பட்டுப் பொது ஜன நன்மைக்கான விஷயங்களில் ஊக்கமும் சிரத்தையும் வகிக்கவும், ராஜ்ய விவகாரங்களில் அக்கரை யெடுத்துக் கொள்ளவும் நாட்டில் அப்பொழுதிருந்த தைக் காட்டிலும் கல்வி பதின்மடங்கு அபிவிர்த்தியாக வேண்டியது அவசியமென்றும், கட்டாயப் படிப்பு ஏற்படுத்தியோ, அல்லது உபகாரச் சம்பளங்கள் கொடுத்தோ அதைச் சாதிக்க வேண்டுமென்றும், சர்க்காரார் கிராம சுகாதாரத்தைக் கவனித்துக் கிராமத்தாரின் தேக சௌக்கியத்தை விருத்தி செய்வதில் பணம் செலவு செய்வதற்கு எள்ளளவும் பின்வாங்கலாகாதென்றும், கிராமங்களில் கிராம காரியங்களைக் கவனிப்பதற்கும், சில்லரை சிவில் கிரிமினல் கேஸ்களைக் கோர்ட்டுகளுக்குப் போகாமல் தீர்த்து வைப்பதற்காகவும் பஞ்சாயத்துக்கள் நியமிக்க வேண்டிய தவசியமென்றும், குடியை நிறுத்துவது, சமஸ்தான வரவு செலவு கணக்கைத் தயாரிக்கையில் அது சம்பந்தமாய் ஆலோசனைகள் கூறுவதற்குப் பிரதிநிதி சபை மெம்பர்களுக்கு உரிமை கொடுப்பது முதலிய விஷயங்களின் அவசியத்தைப்பற்றியும் விமரிசையாக எடுத்துரைத்தார்.

அதன் பின் அக்கிராஸனாதிபதியாகிய மகா-ரா-ரா-ஸ்ரீ G. சுந்தரேச சாஸ்திரியாரவர்களால் படிக்கப்பட்ட உபந்நியாஸம் சபையோரனைவருடைய மனதையும் கவர்ந்தது. மனிதன் தான் மானிடனாய்ப் பிறந்தமையினாலேயே சுயேச்சையென்னும் பாக்கியத்தைப் பெறுகிறானென்றும், அதை அனுஸரித்து எல்லா தேசத்தார்களும் தங்கள் தங்களுடைய காரியங்களைத் தாங்களே நிர்வகித்துப் பார்த்துக்கொள்வதில் யாதொரு தடையு மிருக்கக் கூடாதென்று சொல்வதைப் பரிகாசம் செய்பவர்களே ஜனங்களின் கொடிய விரோதிகளென்றும் வெகு விமரிசையாக எடுத்துரைத்தார். மேலும், இச்சமஸ்தானத்தில் ஜனங்களுக்கு அப்பொழுதிருந்த குறைகளையும், அவைகளை எவ்வாறு நிவர்த்திப்பதென்பதையும் எடுத்துக் காட்டினர். முதன் முதலில் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் திரும்பிவந்து சமஸ்தானத்திலேயே நிருதியாய்த் தங்கி அரசு புரிவதால் உண்டாகக்கூடிய நன்மைகள் கணக்கிடக்கூடாதனவென்றும், ராஜாங்கத்தில் அப்பொழுதிருந்த ரா-தர்பார் ஆட்சியில் உத்தியோகஸ்தர்களுக்காக ஏராளமான செலவு நடக்கிறதென்றும், அதைக் குறைக்க வழி தேடவேண்டிய தவசியமென்றும், கட்டாயப் படிப்பை ஏற்படுத்துவதாலும் எளிய பெற்றோர்களுக்குத் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு

அனுப்புவதற்காகப் பொருளுதவி புரிந்து, கல்வியை அபிவிர்த்தி செய்யவேண்டுமென்றும், சமஸ்தானத்திய வரும்படியைச் செலவு செய்வதிலும், சட்ட திட்டங்கள் ஏற்படுத்துவதிலும் ஜனங்களின் பிரதிநிதிகளுடைய அபிப்பிராயத்தை ரா-தர்பாரவர்கள் கேட்டு, அதை அனுசரிக்க வேண்டுமென்றும், இன்னும் சில முக்கியமான விஷயங்களைப்பற்றியும் விஸ்தாரமாக உபந்நியஸித்தார்.

பிறகு பற்பல விஷயங்களைப்பற்றித் தீர்மானங்கள் செய்யப்பட்டன. அவற்றுள் முக்கியமான வைகளாவன:—

(1) "மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களிடம் ஜனங்களுக்குள்ள ராஜபக்தியை வெளிப்படுத்துவதுடன், மகாராஜா அவர்கள் நீண்ட ஆயுளுடன் சுகஜீவியாய் வாழவேண்டுமென்றும், மகாராஜா அவர்கள் சீக்கிரம் சமஸ்தானத்திற்குத் திரும்பி வந்து நிரந்தரமாய் இங்கேயே வசிக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு கடவுளைப் பிரார்த்திக்கிறது." இது மிஸ்டர் S. ரத்னஸாமி அய்யரால் கொண்டுவரப்பட்டு, மிஸ்டர் U. C. உடையப்ப செட்டியாரால் ஆமோதிக்கப்பட்டு, மிஸ்டர் பஞ்சாநதய்யரால் ஆதரிக்கப்பட்டு கரகோஷத்துடன் நிறைவேற்றப்பட்டது.

(2) "ராஜ்ய காரியங்கள் ஒழுங்காக நடக்கவேண்டியதற்கு எவரிடமிருந்து வரி வசூலிக்கப்படுகிறதோ அவர்களுக்கு அதைச் செலவிடுவதில் அபிப்பிராயம் தெரிவிக்கும் உரிமை இருக்க வேண்டியது அவசியமானதென்றும், அதற்காக வரவு செலவு கணக்குகள் தயாரிப்பதற்கு முன் அவைகளைப் பிரதிநிதி சபையில் யோசித்துப் பிறகு முடிவுக்கு வரவேணுமென்று இம்மகாநாடு ரா-தர்பாரவர்களுக்கு எடுத்துக்காட்டத் தீர்மானிக்கிறது." இது மிஸ்டர் S. சுப்பிரமணிய அய்யரால் கொண்டுவரப்பட்டு, மிஸ்டர் முத்தய்யா செட்டியாரால் ஆமோதிக்கப்பட்டு, மிஸ்டர் S. விசுவனுதய்யரால் ஆதரிக்கப்பட்டது.

(3) "சமஸ்தானத்திய அட்மினிஸ்ட்ரேஷன் அதிகச் செலவுடன் நடத்தப்பட்டு வருகிறதில் சமஸ்தான வரும்படிக்குத் தகுந்தபடிக்கும், ஜனங்கள் நன்மையை உத்தேசித்தும் பிரகிருதம் இருந்துவரும் தர்பாரின் அமைப்பை மாற்றி இராஜ்ய காரியங்களை இரண்டு கௌன்ஸிலர்கள் உதவியுடன் ஒரு திவானிடம் ஒப்புவிக்கலாமென்றும், இரண்டு கௌன்ஸிலர்களில் ஒருவர் சர்க்கார் உத்தியோகஸ்தரல்லாதவராயிருக்கலாமென்றும் இம்மகாநாடு மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்குத் தெரியப்படுத்தத் தீர்மானிக்கிறது."

இது மிஸ்டர் K. S. ராமச்சந்திரய்யரால் கொண்டுவரப்பட்டு, மிஸ்டர் S. விசுவனுதய்யரால் ஆமோதிக்கப்பட்டது.

மிஸ்டர் M. நாராயணஸ்வாமி அய்யர், ஷி வாசகத்தில், "ஒருவர் சர்க்கார் உத்தியோகஸ்தரல்லாதவராய் இருக்கலாமென்றும்" என்பதற்குப் பதிலாக, "ஒருவர் சர்க்கார் உத்தியோகஸ்தரல்லாதவராய் இருக்கவேண்டுமென்றும்" என்று திருத்தவேண்டுமென்று மாறுதல் கொண்டுவந்தார். இம்மாறுதலை மிஸ்டர் K. S. ராமச்சந்திரய்யர் ஒத்துக்கொண்டு, ஷி மாறுதலுடன் இந்தத் தீர்மானம் நிறைவேறியது.

தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு அக்கிராஸனாதிபதியின் முடிவுரை ஆனபின், மெஸ்ஸர்ஸ் K. S. ராமச்சந்திரய்யரும், S. சத்னஸ்வாமி அய்யரும், மிஸ்டர் அருணாசல அம்பலகாரருக்கும், அவருடன் சிரத்தையோடு ஒத்துழைத்து மகாநாட்டைச் சிறப்பாய் நடப்பிவித்த கனவான்களுக்கும் வந்தனமளித்தார்கள். அதன் பின் மிஸ்டர் P. V. ரெகுநாதய்யர் அவர்கள் கனம் பொருந்தின அக்கிராஸனாதிபதியவர்கள் வெகு சாமர்த்தியமாய் மகாநாட்டின் காரியங்களை மேல்பார்த்து நடப்பிவித்ததற்காக மன உருக்கத்துடன் வெகு அழகாக வந்தனம் அளித்தார். அதன் பின் சபையின் காரியதரிசியாகிய மிஸ்டர் S. விசுவநாதய்யர், உபசரணைக் கமிட்டியார்களுக்கும், மற்றும் தன் வேண்டுகோளுக்கிணங்கி மூன்று தாலூகாக்களிலிருந்தும் சிரமத்தைக் கவனியாமல் வந்திருந்து மகாநாட்டைச் சிறப்பிவித்த எல்லா கனவான்களுக்கும் வந்தனமளித்தார். மிஸ்டர் ஸ்ரீநிவாஸராகவாசாரியார் சபையின் காரியதரிசியாகிய மிஸ்டர் S. விசுவநாதய்யருக்கு, மகாநாட்டு விஷயமாய் அவர் எடுத்துக்கொண்ட சிரத்தைக்காக வந்தனமளித்தார். இம்மகாநாட்டைக் கூட்டுவித்த பிரதிநிதி சபை மெம்பர்கள் எல்லோருக்கும் Mr. P. கிருஷ்ணமூர்த்தி அய்யர் வந்தனமளித்தார். அடுத்த மகாநாடு புதுக்கோட்டை டவுனில் நடத்தப்படவேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டது. இத்துடன் மகாநாடு முடிவடைந்தது.

மேலே கொடுத்த விருத்தாந்தத்திலிருந்து ஜனங்களின் எண்ணத்திலிருந்துவந்த முக்கியமான விஷயங்கள், மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமஸ்தானத்தில் நிரந்தரமாய்த் தங்கியிருக்கவேண்டுமென்பதும், ஜனங்களுக்கு நிர்வாகத்தில் அதிக உரிமைகள் வழங்கவேண்டுமென்பதும், அப்பொழுதிருந்த தர்பாரமைப்பை மாற்றி, நிர்வாகக் கௌன்ஸிலில் ஒன்று ஏற்படுத்தி, அதில் உத்தியோகப்பற்றில்லாத மெம்பர் ஒருவரையும் சேர்த்துக்கொள்ளவேண்டுமென்பதுதான் என்று தெரியவரும்.

மகாநாடு நடந்தபொழுது ஸ்டேட் சூபரின்டென்டென்டாகவிருந்த Mr. சிட்னீ பான் துரையவர்கள், மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஓர் ஹிந்து மனைவியைக் கலியாணம் செய்து

கொள்ள வேண்டுமென்று தீர்மானம் ஒன்று அந்த மகாநாட்டில் கொண்டுவரப்பட்டதாவென்று விசாரித்துக்கொண்டிருந்ததிலிருந்து அவ்விதமான தீர்மானம் கொண்டுவரப்போவதாகப் பிரஸ்தாபம் இருந்துவந்ததென்றும், ஆனால் ஆபத்துக்கிடமான அந்தக் காரியத்தை யார் செய்கிறது (Who is to bell the cat?) என்ற காரணத்தினாலேயே கொண்டுவரப்படவில்லையென்றும் அறியக்கூடுகிறது. எனினும், மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் குமாரரான சிட்னி மார்த்தாண்டாவுக்கு அரசுரிமை உண்டாவென்பதைப்பற்றிப் பிரஜைகளில் அநேகர் சிந்திக்கத் தலைப்பட்டனர். ராஜவிசுவாஸத் தீர்மானத்தில் மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமக்ஷம், ராணி ஸாஹேறப் யுவ ராஜா ஸகிதம் சமஸ்தானத்திற்குத் திரும்பி வந்து நிரந்தரமாய்த் தங்கியிருக்க வேண்டுமென்ற கோரிக்கை சேர்க்கப்படாதது குறிப்பிடத்தக்கது.

மகாநாட்டின் தீர்மானங்கள் ள-தர்பாரவர்களுக்கும், மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமக்ஷத்துக்கும் அனுப்பப்பட்டன. 1920-ம் வரு ஆகஸ்ட் மீ 28உ மகாநாட்டின் நிரந்தர கமிட்டி காரியதரிசியாகிய Mr. S. விசுவனாதய்யர், பிரதிநிதிகள் கோஷ்டியொன்றுடன் புதுக்கோட்டையில் பொலிடிகல் ஏஜெண்ட் Mr. E. W. Legh துரையவர்களைப் பேட்டி கண்டு, மகாநாட்டின் தீர்மானங்களை அவரிடம் சமர்ப்பித்தார்.

1920-ம் வரு பிப்ரவரி மீ நடந்த பிரதிநிதி சபைக் கூட்டத்தில் சமஸ்தான வரவு செலவு கணக்கைச் சர்ச்சை செய்ய உரிமையளிக்க வேண்டுமென்ற யோசனை சம்பந்தமாய் சில விதிகளுக்குட்பட்டு அதைச் சட்ட ஆலோசனை சபையில் கவனிப்பதற்கு வைக்கலாமென்றும், மெம்பர்கள் அதில் சட்ட மசோதாக்களைக் கொண்டு வரலாமென்றும் மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஆக்ஞாபிக்க, அதை யனுஸரித்து 1920-ம் வரு அக்டோபர் மாதக் கடைசியில் ள-தர்பாரவர்கள் ஓர் விளம்பரம் பிரஸித்தம் செய்தார்கள்.

5-வது அத்தியாயம்

இரண்டாவது மகாநாடு

புதுக்கோட்டை மகாஜனங்களின் இரண்டாவது மகாநாடு 1920ம் வரு நவம்பர் மீ 12உ புதுக்கோட்டை டவுன்ஹாலில் கூடிற்று. அதன் விவரம் பின்வருமாறு:—

இரண்டாவது மகாநாடு ஒவ்வொரு விதத்திலும் அதிக விமரிசையா யிருக்குமென்றே எதிர்பார்க்கப்பட்டது. ஸ்ரீமான் சுந்தரேச சாஸ்திரியார் அவர்களைத் தலைவராகக்கொண்ட ஒரு பல மான உபசரணைக் கமிட்டி ஏற்படுத்தப்பட்டது. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் பிறந்து பிரக்கியாதி பெற்றவர்களுள் ஒருவரான ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்கள் அந்த மகாநாட்டில் அக்கிராசனம் வகிக்க அன்புகூர்ந்து அங்கீகரித்தார். மகாநாடு நவம்பர் மீ 12உ வெள்ளிக்கிழமை டவுன்ஹாலில் கூடுமென்று பிரசுரம் செய்யப்பட்டது. வர்த்தகர்களும் தொழிலாளிகளும் குடியானவர்களும் குடித்தனக்காரர்களும் மற்றும் சகலரும் மகா நாட்டில் சேருவதற்கு ஆவலுற்றார்கள். டெலிகேட்டுகளாய்ச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று மகாநாடு கூடும் தேதிக்கு முன்னமேயே விண்ணப்பங்கள் வந்தன. வெளியூர் டெலிகேட்டு களிடமிருந்து மகாநாட்டில் யோசிப்பதற்காக பற்பல மதோதா தீர்மானங்களும் வந்தன.

அக்கிராஸனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் அவர்களை வரவேற்பு கமிட்டி மெம்பர் களில் ஒருவரான மகா-ரா-ஸ்ரீ A. குப்புசாமி அய்யங்கார் அவர் கள் திருச்சி ஜங்ஷனில் எதிர்கொண்டழைத்தார். அவ்விருவர் களும் உபசரணைக் கமிட்டித் தலைவரவரின் மோட்டார் வண்டியில் நவம்பர் மாதம் 11உ வியாழக்கிழமை மாலை 4-மணிக்கு புதுக் கோட்டைக்கு வந்து சேர்ந்தார்கள். வரும் வழியில் திருகோகர் ணத்து மகாஜனங்கள் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்களை பூர்ண கும்பம் கொண்டு அழைத்து அவருக்கு ஆசி கூறி மாலை சூட்டினர். மகாநாட்டின் விசேஷ காரியதரிசிகளிலொருவராகிய மகா-ரா-ஸ்ரீ P. V. இரகுநாதய்யரவர்கள் அக்கிராஸனாதிபதி அவர் கள் தங்கியிருப்பதற்கு தன்னுடைய இல்லங்களில் ஒன்றை உவந்தளித்தார். அக்கிராஸனாதிபதி அங்கு வந்தவுடன் மகா-ரா-ஸ்ரீ G. சுந்தரேச சாஸ்திரியர் மகா-ரா-ஸ்ரீ P. V. இரகுநாதய்யர் முதலானவர்கள் அவரை அழைத்து ஹாரம் போட்டார்கள்.

டெலிகேட்டுகள் அனுப்பியிருந்த தீர்மானங்களின் சங்கியை அதிகமாயிருந்தபடியால் விஷயாலோசனை கமிட்டி கூட்டத்தை அன்று சாயங்காலமேயே வைத்துக்கொள்ள ஏற்பாடு செய்யப்பட் டது. அக்கிராஸனாதிபதியவர்களும் உபசரணை கமிட்டித் தலைவ ரும் உபசரணை கமிட்டி மெம்பர்களும், வர்த்தகர்கள், தொழி லாளிகள், மிராசுதார்கள், குடியானவர்கள் முதலியவர்களடங்கிய டெலிகேட்டுகளும் சூழ மகா-ரா-ஸ்ரீ இரகுநாதய்யரவர்கள் ஜாகாவி லிருந்து டவுன்ஹாலுக்கு பவனி வந்தார்கள். இராத்திரி வெகு நாழிகை வரையில் விஷயாலோசனை கமிட்டி கலையவில்லை. சுமார்

25 தீர்மானங்களைப்பற்றி யோசனை செய்யப்பட்டது. மற்ற மசோதா தீர்மானங்கள் மறுநாள் காலையில் யோசனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

நவம்பர் மீ 12ஆ வெள்ளிக்கிழமை பகல் 12 மணிக்கு டவுன் ஹாலில் மகாநாடு கூடிற்று. அக்கிராஸனாதிபதியவர்கள் வந்தவுடன் உபசரணை கமிட்டித் தலைவரும் மற்ற மெம்பர்களும் அவரை உபசரித்தனர். மகா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் சகோதரர்களில் ஒருவராகிய மகா-ரா-ஸ்ரீ சங்கரநாராயண துரை ராஜா அவர்களும் வந்திருந்தனர். மற்றும் வந்திருந்த கனவான் களிற் சிலர் மகா-ரா-ஸ்ரீ K. ஸ்வாமிநாதய்யரவர்கள், தெக்களூர் மகா-ரா-ஸ்ரீ கரிமுத்து தியாகராஜ செட்டியாரவர்கள், மஹிபாலன் பட்டி மகா-ரா-ஸ்ரீ கதிரேசன் செட்டியாரவர்கள்.

அக்கிராஸனாதிபதியவர்களும், உபசரணை கமிட்டித் தலை வரவர்களும் மகா-ரா-ஸ்ரீ சங்கரநாராயண துரைராஜா அவர்களும் பீடத்தின் மேல் போட்டிருந்த ஆசனங்களில் அமர்ந்தார்கள். உப சரணை கமிட்டித் தலைவர் டெலிகேட்டுகளுக்கு நல்வரவு கூறி சொற்றிறம் வாய்ந்த மனவலிவு கொடுக்கத்தக்கதாயிருந்த தன் னுடைய பிரசங்கத்தை ஆங்கிலத்திலும் தமிழிலும் படித்தனர். அதன்பின் மகா-ரா-ஸ்ரீ சங்கரநாராயண துரைராஜா அவர்கள் வெகு நேர்த்தியாயும் சொற்றிறத்தோடும் ஸ்ரீமான் ஸத்திய மூர்த்தியவர்களை அக்கிராஸனாதிபத்தியத்தை வகிக்கும்படி பிரே ரேபித்தார். அதை மகா-ரா-ஸ்ரீ P. V. இரகுநாதய்யரவர்கள் ஆமோதிக்க மகா-ரா-ஸ்ரீ டாக்டர் A. வேணுகோபால நாயுடு அவர் களும் மற்றும் அனேகர்களும் ஆதரித்தார்கள்.

அதன் பின் ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி அய்யரவர்கள் கர கோஷம் முழங்க அக்கிராஸனத்தில் அமர்ந்தார். அவர் தன் னுடைய இனிய பிரஸங்கத்தை ஆங்கிலத்தில் படித்தார். அதை யெல்லோரும் வெகு கவனமாய்க் கேட்டார்கள். அந்தப் பிரசங் கத்தின் தமிழ் வாசகத்தை மகா-ரா-ஸ்ரீ P. V. இரகுநாதய்யரவர் கள் படித்தார்.

பிறகு கான்பரன்சு சிற்றுண்டி சாப்பிடுவதற்காக அரை மணி நேரத்திற்கு கலைந்து $4\frac{1}{2}$ மணிக்கு மறுபடி கூடிற்று. சுமார் 45 தீர்மானங்கள் வரையில் கான்பரன்சில் ஆலோசிக்கப்பட வேண்டியிருந்தன. மகாநாட்டின் நடவடிக்கையை நடத்துவதில் அக்கிராஸனாதிபதியவர்களின் சாமர்த்தியம் தெள்ளன விளங் கிற்று. மெம்பர்களும் பற்பல விஷயங்களைப்பற்றி சர்ச்சை செய்த மாதிரியிலிருந்து மெம்பர்களுக்கு இருந்த தீவிர சிரத்தை யும் நுண்ணறிவும் விளங்கின. இராத்திரி 10-மணி ஆகியும் 20

தீர்மானங்கள் வரையில் பாக்கி நின்று போய்விட்டன. டெலி கேட்டுகள் எல்லோரும் ஏகோபித்து ஒப்புக்கொண்டதின் பேரில் அந்த 20 தீர்மானங்களும் அக்கிராஸனாதிபதியவர்களாலேயே பிரேரிக்கப்பட்டு மகாநாட்டில் அங்கீகரிக்கப்பட்டன. தீர்மானங்களைப்பற்றி சர்ச்சை செய்த டெலிகேட்டுகளெல்லாம் முக்கியமாய் கிராமாந்தரங்களிலிருந்து வந்தவர்கள்தான். அவர்கள் முக்கியமாய் வர்த்தகர்களின் வகுப்பையும் குடியானவர்களின் வகுப்பையும் சேர்ந்தவர்கள். குளத்தூர் தாலூகாவிலிருந்து அனேக வர்த்தகர்கள் டெலிகேட்டுகளாக வந்திருந்தார்கள். அவர்களெல்லோரும் மகாநாட்டின் காரியங்கள் சகலத்திலும் நுட்பமான விஷயத்தில்கூட மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டார்கள். தீர்மானங்களெல்லாம் செய்து முடிந்த பின் அக்கிராஸனாதிபதியவர்கள் இதுவரையில் நடந்திருக்கும் வேலையையும் இனி நடக்க வேண்டிய வேலையையும் பற்றி உற்சாகப்படுத்துகிற விதத்தில் தமிழில் ஓர் பிரஸங்கம் செய்தார். இரவில் 11 மணி ஆகியும் மகாநாட்டிற்கு வந்திருந்தவர்களெல்லோரும் அலுக்காது பிரஸங்கத்தைக் கவனமாய் கேட்டுக்கொண்டிருந்தார்கள். எவருக்கும் அங்கிருந்து கிளம்பிப்போக விருப்பமிருப்பதாகவே காணப்படவில்லை. நேரமானதே தெரியவில்லை.

மகா-ள-ஸ்ரீ S. சுப்பிரமணிய அய்யர் அக்ராஸனாதிபதி அவர்களுக்கு வந்தனமளித்தார்.

மகா-ள-ஸ்ரீ P. கிருஷ்ணமூர்த்தி அய்யர் அதை ஆமோதித்தார். மகா-ள-ஸ்ரீ உடையப்ப செட்டியார் அதை ஆதரித்துப் பேசினார். அந்தப்படியே எல்லோரும் கரகோஷம் செய்து சபையின் வந்தனத்தை வெளிக்காட்டினார்கள். மகாநாட்டைச் சிறப்புறச் செய்த டெலிகேட்டுகள், வாலண்டியர்கள், விஸிடர்கள், இன்னும் மற்றப்படி ஒத்துழைத்தவர்கள் முதலிய எல்லோருக்கும் மகா-ள-ஸ்ரீ P. V. ரெகுநாதய்யரவர்களும் மகா-ள-ஸ்ரீ S. விசுவநாதய்யரவர்களும் வந்தனமளித்தார்கள்.

பிராம்மண வகுப்பைச் சேர்ந்த டெலிகேட்டுகளுக்கும் வாலண்டியர்களுக்கும் சாப்பாடு போட உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டு அந்தப்படி சம்பிரமமாய் நடத்தின மகா-ள-ஸ்ரீ K. ராம கிருஷ்ணய்யரவர்களைப் பற்றியும், பிராமணர்களல்லாத இதர வகுப்புகளைச் சேர்ந்த டெலிகேட்டுகளின் சாப்பாட்டுக்கு வேண்டிய ஏற்பாடுகளை முகாமையாயிருந்து செவ்வனே செய்தியற்றிய மகா-ள-ஸ்ரீ N. சுப்பிரமணிய சாஸ்திரிகளைப்பற்றியும் தகுந்தபடி பாராட்டிப் பேசப்பட்டது.

அடுத்த மகாநாடு சேனாரில் கூடவேண்டுமென்று மகா-ள-ஸ்ரீ உ. சி. உடையப்ப செட்டியாரும், மகா-ள-ஸ்ரீ ராமமூர்த்தி அய்யர

வர்களும் கேட்டுக்கொள்ள அந்தப்படியே வந்தனத்துடன் ஒப்புக்கொள்ளப்பட்டது.

மகாநாடு இராத்திரி 11-30 மணிக்குக் கலைந்தது.

வரவேற்பு கமிட்டி தலைவர் மகா-ரா-ஸ்ரீ G. சுந்தரேச சாஸ்திரியார் B. A., B. L., அவர்கள் தமது அழைப்புப் பத்திரிகையில் சொல்லிய அடியிற் கூறிய விஷயம் கவனிக்கத்தக்கது:—

"நமது சமஸ்தானம் சம்பந்தமான விஷயங்களைப்பற்றிப் பேசப்புகுமிடத்து மகா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஸ்திரமாய் சமஸ்தானத்தில் வஸிக்கவேண்டுமென்று ஜனங்களுக்கிருக்கும் ஆஸ்தைதான் பிரதானமான விஷயம். அயல் நாட்டுப் பிரயாணத்தால் ஏற்படும் நன்மைகள் பலவாயினும் மகாராஜா அவர்கள் சமஸ்தானத்தில் மதிக்கத்தகுந்த கால அளவுக்காவது தங்கியிருக்க கூடவில்லையென்றால், அவ்வாறு தங்கக்கூடாமலிருப்பது, எக்காரணத்தைப்பற்றி யிருந்தாலும் சரி, அப்படிப்பட்ட நன்மைகள் ஜனங்களுக்குப் பயன்பட இடமில்லை. மகா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் பிரஜைகளில் எவனும், அவன் எவ்வளவு தாழ்ந்தவனாலும்சரி, மகாராஜா அவர்கள் இந்த சமஸ்தானத்தில் ஸ்திரமாய் வஸிக்கவேண்டுமென்பதில் மனப்பூர்ணமாய் ஆஸ்தைப் படாதவனில்லை. பூவரசகுடி மகாநாட்டில் ஒரு மெம்பர் அரசர்களுக்கு உரிய குணங்களில் "காகூஸிக்கு எளியனாயிருத்தல்" ஒன்றென்றும், பொது ஜனங்களில் பெரியவர்களாயிருப்பவர்கள் அந்த பாகத்தை மகா-ரா-ஸ்ரீ மன்னர் சமக்ஷத்தின் திரு உள்ளத்தில் பதியும்படி செய்யவேண்டியது அவர்களின் கடமையாகுமென்றும் எடுத்துக்கூறினர்.

புகழ்பெற்ற நமது அக்கிராசனாதிபதியவர்கள் எடுத்துக்காட்டும் க்ரமத்தில் ஜனங்களின் ஒருமிப்பான இந்த மனோபீஷ்டத்தை பூர்த்தி செய்யவேண்டியது இம்மகாநாட்டின் பொறுப்பாகும்.

இதையொட்டிப் பேசவேண்டிய மற்றொரு விஷயமென்னவெனில், ராஜ்ஜிய பரிபாலனத்துக்காக இப்பொழுது ஏற்படுத்தப்பட்டிருக்கும் தர்பார் பணச்செலவு பிடிக்கிறதாயிருக்கிறதுதான். மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் விலக்கொணாத காரணங்களின் நிமித்தம் சமஸ்தானத்துக்கப்பாலில் மட்டுமின்றி ஆசியாக் கண்டத்திற்கப்பால், ஐரோப்பாவிலும், ஆஸ்திரேலியாவிலும் வசிக்கும்படி நேரிட்டதனால் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்குப் பிரதியாக ராஜ்ஜிய பரிபாலனம் செய்வதன் பொருட்டே இப்பொழுதிருக்கும் தர்பார் ஏற்பாடு உண்டாக்கப்பட்டது. மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் இனிமேல் ஸமஸ்தானத்துக்கு அப்பால்

வசிப்பதற்கு அவசியமில்லையென்று ஏற்பட்டுப்போய்விட்டால் இப்போதிருக்கும் தர்பார் பின்னும் இருப்பதற்குக் காரணமில்லை."

அக்கிராசனாதிபதி ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி ஐயர் பி. ஏ. பி. எல்., அவர்களின் உபந்நியாசம்.

எனது சகோதரப் பிரதிநிதிகளே! சீமாட்டிகளே! கனவான்களே!

இம் மகாசபையில் தலைமை வகிக்கும் மஹத்தான கௌரவத்தை எனக் களித்தவர்களுக்கு நான் மனப்பூர்வமாய் நன்றி பாராட்டுகிறேன். பொதுஜன சேவையில் ஈடுபட்டவர்கள் எதிர் பார்க்கக்கூடிய ஒப்புயர்வற்ற பிரதிப் பிரயோஜனம் அன்னருடைய மனஸ் ஸந்துஷ்டிதானுயினும், தமது சகாக்களின் ப்ரியத்தையும் ஆதரவையும் பெற்றிருப்பது மிகப் பெரிய வெகுமதியென்றே சொல்லவேண்டும். அதுவும் அத்தகைய சகாக்கள் ஒருவனுடைய அத்யந்த நண்பர்களாயும், அதே சமஸ்தானத்தின் பிரஜைகளாயும் இருந்துவிட்டால், அவனுக்கு அவர்கள் செய்யக்கூடிய கௌரவத்தின் தன்மை ஆயிரம் மடங்கு அதிகமாய் விடுகிறது. ஆகையால், என் விஷயத்தில் நீங்கள் கொண்டிருக்கும் நல்லபிப்பிராயத்தின் பிரத்தியட்ச அறிகுறியாகவே இப்பெருங் கௌரவத்தை நான் மதிக்கிறேன். இவ்வளவு தூரம் என்னிடத்தில் அன்பு காட்டி யழைத்தபின், உங்களால் அளிக்கப்பட்ட கௌரவத்தை ஏற்றுக்கொள்ள மறுப்பது தர்மமாயிராதென்று கருதியே இம்மகாநாட்டில் தலைமை வகிக்கத் துணிந்தேன். என்னைவிட புத்திசாலிகளும், என்னைவிட அனுபோகஸ்தர்களும், அக்கிராஸனப் பதவியை அழகாய் வகிக்கக்கூடியவர்களும் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். ஆயினும் ஒருவிதத்தில் எனக்கு ஆறுதல் ஏற்படுகிறது; அதாவது எத்தகைய பொறுப்பையும் ஏற்று நடக்க ஒரு புதுக்கோட்டை பிரஜைக்கு சக்தியுண்டு என்ற நம்பிக்கையுடன் என்னைத் தேர்ந்தெடுத்ததே எனக்குத் திருப்தி யளிக்கின்றது. இச்சிறு சமஸ்தானத்தின் பெருமையை என்போன்ற மட்டமான பெயர்வழிகள் கூட பிரகாசிக்கச் செய்ய வல்லவர்களென்று நீங்கள் கருதும் பட்சத்தில், இம்மகாநாட்டில் தலைமை வகிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொள்ள நான் சற்றும் தயங்கவேண்டியதில்லை....தாயும் தாய் நாடும் மோட்ச லோகத்தைவிடப் பெரிதாகக் கருதப்பட வேண்டியவை. திருமயத்தில்தான் முதன் முதலாய் நான் சூரிய ஒளி கண்டேன். ஆகையால் நான் எந்த ஊரில் இருந்தாலும் சரி, எங்கு திரிந்தாலும் சரி, இச்சமஸ்தானத்தின் ஞாபகந்தான் எனக் கெப்போதுமிருப்பது வழக்கம். தூர விடங்களில் சென்று உயிர் வாழும்படியான விதி எனக்கேற்பட்டுவிட்டது, பொதுக்

கூட்டங்களில் பேசி பொது ஜனங்களின் உக்கிரமான சோதனைக்கும் அனுவசியமான விளம்பரத்துக்கும் ஆளாகும்படியாய் விட்டது. விளம்பரமானவர்களின் வாழ்க்கை எப்போதும் இனிமையாயிராதென்பது உங்களுக்கு தெரிந்திருக்கும். ஆனல், ஸ்காட்லாந்திலும், இங்கிலாந்திலும், அயர்லாந்திலும், நமது காங்கிரஸ் மகா சபையிலும், பதினாயிரக் கணக்கான ஜனங்களின் முன்னிலையில் நான் பேசியிருக்கிறேனாயினும், இந்தியா மந்திரியைக்கூட நான் கண்டு பேசியிருக்கிறேனாயினும், இன்றைய கூட்டத்தில் பேசும் பாக்கியத்தையே நான் உண்மையில் பிரமாதமாகக் கருதுகிறேன். எனது புதுக்கோட்டை நண்பர்களுக்கு எப்போதும் என்னிடத்தில் ப்ரீதியுண்டென்பதை நான் நன்றாய் அறிவேன். இங்கிலாந்திலிருந்து நான் திரும்பியபின் என்னை நீங்கள் வரவேற்ற வைபவத்தை நான் ஒருக்காலும் மறக்கமாட்டேன். அவ்வாறெல்லாம் நீங்கள் காண்பித்த அன்புக்கு, இவ்வக்கிராசனப் பதவியிலிருந்து நான் செய்யக்கூடிய பிரதியுபகாரம் பிரமாதமானதல்லவாயினும், அதைக் கருணையுடன் நீங்கள் ஏற்றுக்கொள்ளும்படி நான் வணக்கமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன்.

எனது பெற்றோர்களைப் பற்றிச் சில வார்த்தைகள் சொல்வது இச்சந்தர்ப்பத்தில் பொருத்தமற்றதாயிருக்கலாம். ஆனல் எனது நண்பர்களுக்குச் சொல்லாமல் எதையும் நான் மறைத்து வைக்க இஷ்டப்படவில்லை. எனது தகப்பனார் இச்சமஸ்தானத்தில் வக்கீல் தொழில் செய்து வந்தார். அக்காலத்தில் ஆங்கிலந் தெரியாத வக்கீல்மார்களில் அவரும் ஒருவர். ஆனல் சம்பாத்தியத்தில் மற்றவர்களுக்கு அவர் பிந்தியவரல்லர். சம்ஸ்கிருதத்தில் அவருக்கு விசேஷ பாண்டித்யமுண்டு. மற்றவர்களுக்கும் அதைச் சொல்லிக் கொடுப்பதுண்டு. எனது ஒன்பதாம் ஆண்டிலேயே அவர் பரகதியடைந்தாராயினும், அவருடைய ராமாயண பாரதப் பிரசங்கங்கள் எனக்கு இன்றைக்கும் ஞாபகமிருக்கின்றன. திரளான ஜனங்கள் அவ்வுபந்யாசங்களைக் கேட்டுச் செல்வது வழக்கம். பேச்சு வன்மை யென்பது எனக்கு எள்ளளவேனும் இருக்குமானல் அவரே அதற்குக் காரணம் என்பது எனக்குச் சம்மையாகத் தெரியும். புதுக்கோட்டையிலேதான் எனது தகப்பனார் விழுந்து போனர். எனது தாயாருக்கு அச்சமயம் வயது 32; குடும்பமோ பெரிது; சொத்தோ மிக சொற்பம். உறவினர்களின் ஒத்தாசையைப் பற்றிக் கேட்க வேண்டியதில்லை. இத்தனைக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு எனது தாயார் தனது புத்திரர்களுக்கு சாத்தியமான கல்வியைப் போதிக்கவும் ஏற்பாடு செய்தார். எனது அம்மையின் தியாகத்தை நினைக்கும்போதெல்லாம் என் மனம் பதைக்கிறது. எனது தாயில்லாவிடில் நான் ஒருக்காலும் முன்

னுக்கு வந்திருக்க முடியாது. தற்போதுள்ள எனது சொற்ப அந்தஸ்துக்குக்கூட எனது தாயே காரணமென்று நான் ஸத்திய மாய்ச் சொல்வேன். ஆகையால் நண்பர்களே! நான் இங்கு வரும் போதெல்லாம் என்மனம் எப்படித் துடிக்குமென்று நான் சொல் லத் தேவையில்லை.

இம்மகாநாடு இனிது நிறைவேற வேண்டுமே யென்று உங் களைப் போல் எனக்கும் கவலையுண்டு. ஆனல் உங்களுடைய மனப் பூர்வமான ஒத்துழைப்பைப் பெற்று இம் மகாநாட்டைத் திருப்திகரமாய் நடத்திவைக்க முடியுமென்றே நம்புகிறேன். நிரந்தரமான நன்மைகள் இம் மகாநாட்டின் மூலமாய் ஏற்படுவது சாத்தியமாகும்படி நீங்கள் எனது குறைகளைப் பாராட்டாமல், மனப்பூர்வமாய்க் கலந்துழைக்குமாறு மிகுதியும் வேண்டிக் கொள்ளுகிறேன்.

இம்மாதிரியான கான்பரன்ஸ்களைக் கூட்டுவதினல் பிர யோஜனமென்னவென்று சிலர் கேட்கலாம். இத்தனை பேர்கள் இங்கு கூடியிருப்பதிலிருந்தே இம்மகாநாட்டினல் பிரயோஜன முண்டென்பதை நீங்கள் நன்கறிந்திருக்கிறீர்களென்பது தெரி கிறது. இன்று உங்களைப்பற்றி அலட்சியமாய்ச் சிலர் நினைத்த போதிலும், இன்றைக்குச் சில பேர்கள் உங்களைக் கேலி செய்யக் கூடுமாயினும், நீங்கள் கொஞ்சங்கூட அதைரியப்படாதீர்கள். இதைவிடக் கஷ்டமான காலங்களையும் நீங்கள் இனி மேற் கொள்ள வேண்டியிருக்கும். திருஷ்டாந்தமாய் காங்கிரஸ் மகா சபையின் சரித்திரத்தைப் பாருங்கள். அதைக்கூட ஆரம்பத்தில் பலர் கேலி செய்யத்தான் செய்தார்கள். உத்தியோகஸ்தர்களின் வெறுப்புக்குப் பலர் பாத்திரராஞர்கள். உள்ளுக்குள்ளேயே பல சச்சரவுகள் ஏற்பட்டன. இத்தனையும் தாண்டிக்கொண்டு இப் பாரத நாட்டின் ஒப்புயர்வற்ற ஜனப்பிரதிநிதி சபையாக அது இப் போது ஆகிவிட்டது. அம்ருதசரஸில் சென்ற வருஷம் காங்கிர ஸாகிய அப்பெரிய கூட்டம் கூடுவதற்கு முன்னதாக அரசியல் மசோதாவைச் சட்டமாக்கிவிட வேண்டுமென்று பார்லிமெண்ட் காமன்ஸ் சபையின் தலைவராகிய மிஸ்டர் போனர்லாவே எச்சரிக் கை செய்தாரென்றல், அம்மகா சபையின் கியாதியை நான் அதிக மாய் வருணிக்க வேண்டியதில்லை. ஒத்துழையாமையைப்பற்றி ராஜப்பிரதிநிதி முதலான சில்லரைத் தேவதைகள் கேலியாய்ப் பேசுகின்றனவாயினும், 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை உண்மை யில் வெருண்டு போய்விட்டது. காங்கிரஸ் மகாசபையிலும் தங்கள் தேசத்தாரிடத்திலும், காங்கிரஸ் தலைவர்கள் நம்பிக்கை வைத்ததனலேயே இவ்வளவு தூரம் அம்மகாசபைக்குச் செல் வாக்கேற்படலாயிற்று. ஆகையால் இந்த அம்சத்தை நீங்கள்

கட்டாயம் கவனிக்கவேண்டும். ஒரு காரியத்தில் நாம் மனப் பூர்வமாய் முனைந்துவிட்டால் ஈச்வரன் வந்தால்கூட நம்மைத் தடுக்க முடியாது.

இப்படிப்பட்ட மகாநாடு திறமையாயும் கட்டுப்பாடாயும் நடந்தால் பற்பல ஜாதிகளும் வகுப்புக்களும் ஒன்றுகூடி ஒரு பொது விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கவோ, ஒருவரையொருவர் பரஸ்பரம் தெரிந்துகொள்ளவோ, ஐக்கிய பாவத்துடன் காரியங் கள் செய்யவோ, அது நிச்சயம் அனுகூலமாயிருக்கும். நமக்குள் அகஸ்மாத்தாய் ஏற்பட்டிருக்கக்கூடிய வித்தியாசங்களைச் சிறிது காலத்திற்காவது மறந்து நாம் சேர்ந்து யோசிக்கவேண்டிய ஒரு பொதுவான விஷயமும் இருக்கிறதென்ற உணர்ச்சியை உண்டு பண்ண இதுபோன்ற மகாநாடுகள் நிச்சயம் சாதகமாயிருக்கும். நீங்கள் ஊமைகளல்ல; கேவலம் ஆடுமாடுகளல்ல; நமது ராஜீய அந்தஸ்து நமது கையிலேதானிருக்கிறது என்ற உணர்ச்சியை ஒவ்வொருவருக்கும் உண்டுபண்ணக்கூடிய சக்தி இம்மகாநாட்டுக் குண்டு. இது மட்டுமா? ஜனங்கள் சுபிட்சமாயும் குறையின்றி யும் வாழவில்லையென்று கவர்ன்மெண்டுக்கு அறிவுறுத்தவும் சரி, சோம்பேறித்தனமாய் உட்கார்ந்துகொண்டு கவர்ன்மெண்டார் கவலையின்றி ஆளமுடியாதெனச் சுட்டிக்காட்டவும் சரி, ஜனங் களின் இச்சைப்படி ராஜரீக அந்தஸ்து கொடுத்துத்தான் ஆக வேண்டுமென்று எச்சரிக்கை செய்யவும் சரி, இத்தகைய மகா நாடுகளே தகுந்த கருவிகளாகும்.

* * *

"பொதுவாய் இது வரையில் பேசி வந்து விட்டேன். குறிப்பாய் இச்சமஸ்தானத்தைப் பாதிக்கும் சில முக்கியமான பிரச்னைகளைப்பற்றி அடுத்தாற்போல் பேச விரும்புகிறேன். சுய ராஜ்யம் ஒன்றுதான் எல்லா ராஜீயக் கஷ்டங்களுக்கும் ஒப்பற்ற மருந்து. ஒரே நாளில் சுயராஜ்யம் கிடைத்து விடாது. கேட்ட மாத்திரத்தில் அது கிடைக்கும் வஸ்து அல்ல. சுயராஜ்யத்துக் கான பாதையில் ஜனங்களை நடக்கும்படி பயிற்சி செய்வித்து வழியேயுள்ள முட்டுக் கட்டைகளை விலக்கி சுகவாழ்வுக்கான சந்தர்ப்பங்களை அவர்களுக்குத் தேடிக் கொடுக்க வேண்டும். எந்த கவர்ன்மெண்டின் நோக்கமும் இது தான். இந்த லக்ஷி யத்தை முன்னிட்டே எங்கும் ராஜாங்கம் நடந்து வருகிறது. ஆளப்படும் ஜாதியாரின் க்ஷேமமே ராஜாங்கத்தின் பிரதான நோக்கமாயிருக்க வேண்டும்.

"உங்களுடைய முதலாவது குறை என்னவென்றால், உங்க ளுடைய ராஜா சமஸ்தானத்தைவிட்டு வெகு காலம் வெளியே போய்த் தாமதிக்கிறார். எப்பொழுதாவது ஒரு தடவை இங்கு

வந்து விட்டுப் போகிறார். 1918—19-ம் வருஷத்து நிர்வாக அறிக்கையிற்கூட இது விஷயமாய் சில குறிப்புகள் காணப்படுகின்றன. சமஸ்தானத்துக்குத் திரும்ப வேண்டுமென்று ராஜா எவ்வளவோ இஷ்டப்பட்டும் அடுத்த மாரி காலம் வரையில் அவர் தமது பிரயாணத்தை நிறுத்தி வைக்கும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டதென்று அந்த யாதாஸ்தில் சொல்லப்பட்டிருக்கிறது. சென்ற வருஷத்து அறிக்கையைப் பார்த்தால், செப்டம்பர் 1919-ல் ராஜா இந்தியாவுக்குத் திரும்பி வந்ததாகவும் இரண்டொரு வாரங்களுக்கெல்லாம் அவர் சீமைக்குப் போய் விட்டதாகவும் தெரிகிறது. அவர் சீக்கிரத்தில் இங்கு வந்து சேருவார் என்பதற்கு அறிகுறிகளே காணும். இம்மாதிரி எப்பொழுது பார்த்தாலும் சமஸ்தானத்தை விட்டு வெளியே போய் விடுகிறாரே யென்று உங்களுக்கிருக்கும் மிகுந்த துக்கத்தை நான் அறிவேன். அதை நீங்கள் வெளியிட்டுச் சொல்லாதிருக்கலாம். ஆனால் அது விஷயத்தில் உங்களுக்கு வருத்தமுண்டென்பது நிச்சயம். நிதானமாய் இந்த விஷயத்தைக் குறித்து வார்த்தைகளை அளர்ந்து பேசுவது எனக்கு கஷ்டமாகத்தானிருக்கிறது. ஆனால் நிலைமை எவ்வளவு கவலைக்கிடமாய் இருந்தபோதிலும் ஒரு விஷயம் ஆறுதலைத் தருகிறது. அதாவது உங்கள் ராஜா தமது உதவி அன்னியில, தமது நேரான ஆளுகையில்லாமலே, இங்கு நிர்வாகம் திறமையாய் நடக்கக்கூடும் என்பதை அவருக்கு நினைப்பூட்டுகிறேன்—தாமில்லாமல் நிர்வாகம் நடக்கும் என்று ஜனங்கள் நினைக்கும்படியாய் அவர் தம்மை வைத்துக்கொண்டுவிட்டார். இத்தகைய உணர்ச்சி ஜனங்களுக்கு ஏற்படுவது ராஜாவுக்கு அனுகூலமாயிராது. இந்தியா முழுதும் தேடிப் பார்த்தாலும், உலகமெல்லாம் அலைந்து திரிந்தாலும் புதுக்கோட்டை ராஜாவைப்போல் தமது பொறுப்பை உணராதவரும் தமது கடமையைச் செய்யாதவரும், தமது பிரஜைகளை அவமதிப்பவரும் வேறொருவர் இல்லையென்றே சொல்லலாம். மாட்சிமை தங்கிய ராஜ சக்கிரவர்த்திகூட தமது புத்தியினாலும் சரீரத்தினாலும் ஏகாதிபத்யத்தின் நன்மைக்காக மிகுதியும் உழைத்துவருகிறார். ரயில்வேக்காரர்கள் வேலை நிறுத்தம் போட்ட பிறகு நான் இங்கிலாந்தில் சென்ற வருஷம் இருந்தேன். அச்சமயம் சக்ரவர்த்தி ராஜா எடுத்துக்கொண்டு ஸ்காட்லாண்டில் வஸித்துக் கொண்டிருந்தார். வேலை நிறுத்தம் ஏற்பட்டதாக சமாசாரம் கேள்விப்பட்டதும் அவர் லண்டனுக்குத் திரும்பிவந்து விசேஷக் கவலை பாராட்டினார். அவர் மோட்டார் மார்க்கமாகவே அவ்வளவு தூரம் பிரயாணம் செய்தார். அவருக்குக்கூட ரயில் வண்டி கிடைக்கவில்லை. ஸ்தலத்திலிருந்துகொண்டு வேலை நிறுத்தத்தை எப்படியாவது தீர்க்க வழி தேட முடியாதாவென்

பதே சக்கரவர்த்தியின் எண்ணம். அவரே அப்படிச் செய்தபோது நமது ராஜா ஏன் கவலையுடன் இச்சமஸ்தானத்தைப் பரிபாலிக்கக்கூடாது? உங்கள் பேரிலும் பிழையிருக்கிறது. வெகுகாலம் ஊரைவிட்டு வெளிதேசங்களுக்குப் போய்விடுவதை நீங்கள் கண்டிப்பதில்லை. உங்கள் பால் ராஜா காட்டிவரும் அசிரத்தையை இக்கூட்டத்திலாவது நீங்கள் அழுத்தமாய்க் கண்டித்து உங்களுடைய வருத்தத்தைத் தெரிவிக்கவேண்டும். இங்கேயே யிருந்து கொண்டு திறமையாய் பரிபாலனம் செய்யும்படியும் ராஜாவுக்கு நீங்கள் வற்புறுத்தவேண்டும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இவ்வாறு ராஜா உங்களிடம் அசிரத்தையாயிருந்து வருவதைப்பற்றி வாய்திறக்காமல் இருப்பது அழகாயில்லை. உங்கள் ராஜாதான் ஊரில் இருப்பதில்லையென்றால் ராஜாவின் பிள்ளையாவது இங்கு இருக்கக்கூடாதா? ஆனால் அந்த பிள்ளைதான் பட்டத்துக்கு வரப்போகிறதா என்ற விஷயம் நிச்சயமாய்த் தெரியவில்லை. இனி வரப்போகிற ராஜாகூட அன்னியரின் ஆதிக்கத்திற்காளாகி ஹிந்து சமஸ்தானத்தின் தேவைக்குப் பிரயோஜனமற்றவராயிருப்பதில் உங்களுக்கிஷ்டமிராது. இவருக்குப் பின் யார் பட்டத்துக்கு வரப்போகிறார் என்ற விஷயத்தைப் பைசல் செய்வது கஷ்டமாயிருக்கும். அச்சிக்கலான பிரச்னையை இன்னும் சிக்கலாகச் செய்ய எனக்கு இஷ்டமில்லை. நமது ராஜாவின் பிள்ளைக்குப் பட்டங்கிடையாதென்ற விஷயம் தீர்ந்து போய்விட்டதென்றே சொல்லலாம். உங்களுடைய அபிப்பிராயத்தை எப்படியாவது வற்புறுத்தி பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் அதை அனுசரித்து பட்ட விஷயத்தை நிர்த்தாரணம் செய்யும்படியாய் நீங்கள் கிளர்ச்சி செய்யவேண்டும். கீழ்த்தர சுதேச சமஸ்தானங்களில் பட்டம் யாருக்குப் போவது என்ற விஷயத்தை தீர்க்க வேண்டியது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் கடமை. பிரிட்ஷ் கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளும் வரையில் யார் பட்டத்துக்கு வந்த போதிலும் அது செல்லுபடியாகாது. சிற்சில நிபந்தனைகளின் பேரில் புதுக்கோட்டை ராஜா தமது பட்டத்தை வேறொருவருக்கு மாற்றி வைக்கலாமென்று லார்டு கானிங் சன்னது கொடுத்துவிட்டுப் போயிருக்கிறார். ஹிந்து தர்மப்படியும், உங்கள் ஜாதி வழக்கப்படியும் உங்கள் ராஜா தமக்குப் பின் ஒருவரைப் பட்டத்துக்கு தெரிந்தெடுக்க வேண்டுமென்று ஒரு கண்டிப்பான நிபந்தனை யிருக்கிறது. அந்நிபந்தனைப்படி புதுக்கோட்டை ராஜா நடந்து கொள்ளுவாரென்றே நம்புகிறேன். அப்படியே நடக்கவேண்டுமென்றும் பிரார்த்திக்கிறேன்.

ராஜா ஊரில் இல்லாத சமயத்தில் ஸிவில் உத்தியோகஸ்தர் ஒருவரும், சிவாலும், ஒரு உத்தியோகக் கவுன்சிலரும் சேர்ந்து

நிர்வாகத்தை நடத்த வேண்டுமென்று விதியிருக்கிறது. அந்த ஸிவில் ஸர்விஸ் உத்தியோகஸ்தருக்கு சூபரின்டென்டெண்டு என்று பெயர். நான் ஏற்கெனவே சொல்லியது போல் ஒரு ஸிவிலியன் இந்திய ஸமஸ்தானத்தின் தலைமையாய் இருப்பது மூறைத் தப்பான காரியம். இவான் சாதாரணமாய் ராஜாவின் சொந்த சகோதரர். வெகு காலமாய் அவர் அப்பதவியை வகித்து வருகிறார். சீப் ஜட்ஜ் தமது உத்தியோக தோரணையில் கவுன்ஸிலராய் இருக்கிறார். நீதி செலுத்தும் உத்தியோகஸ்தர் நிர்வாக உத்தியோகஸ்தராக இருப்பது விரும்பத்தக்கதல்ல என்பது உங்களுக்குத் தெரியும். மெஜாரிட்டி ஓட்டு பலத்தைக் கொண்டு நிர்வாக சபையில் காரியம் நடக்கிறதாவென்று எனக்குத் தெரியாது. எப்படியிருந்தபோதிலும் செட்டாகவாவது திறமையாகவாவது நிர்வாகம் நடக்க இம்முறை அனுகூலமாயிராது. திவானைப் போன்ற ஒரு தக்க அனுபோகஸ்தரைக் கொண்டு ராஜா ஸொந்தப் பொறுப்பில் நிர்வாகத்தை நடத்துவதுதான் ஒழுங்கான முறையாகும்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் தற்போதைய ஆலோசனை முறையானது, ஒரு ஹிந்து ஸ்தானத்தின் ஒழுங்கான கடமைகளை அனுசரித்ததாகவாவது, நவீன நாகரிகத்தை அனுஷ்டித்திருக்கும் வேறெந்த சமஸ்தானத்தைப் போலாவது இருக்கவில்லை. சங்கீதம், நாடகம், சிற்பசாஸ்திரம் சித்திரம், முதலிய துறைகளில் அபிவிருத்தி ஏற்படுவதற்கான வழிகளில் நிர்வாகம் நடத்துவதாகவும் நினைக்க இடமில்லை. பண்டைக்கால ஹிந்து ராஜாக்களின் சபைகளில் பெரிய வித்வான்களும் சங்கீத நிபுணர்களும் வேறு பலரும் குழுமியிருப்பது வழக்கம். புதுக்கோட்டையிலும் ஒரு காலத்தில் இம்மாதிரி இருந்ததுண்டு; ஆனால் இக்காலத்தில் இல்லை. இச்சமஸ்தானத்தின் நாயகரைக்கூட இங்கு காண்பதற்கில்லை, அவர் வந்து போவதே வெகு அரிதாயிருக்கிறது. இம்மாதிரியான நிலைமையைக் கண்டு நாம் சந்தோஷப்படுதவற்கில்லை. பழய காலத்து மேன்மையும் கீர்த்தியும் பெருமையும் திரும்ப இச்சமஸ்தானத்தில் ஏற்படப்போகிற நாளை நான் ஆவலாய் எதிர்பார்க்கிறேன். நவீன நாகரிகத்திற்கு அடிப்படையான அம்சங்களையும் இங்கு புகவிட்டுப் பார்க்க வேண்டும். உங்களுக்கு உறுதியான தீர்மானம் இருந்தாலன்றி, இவ்வெண்ணம் ஒருக்காலும் பலிக்காது.

ஃ ஃ ஃ

நண்பர்களே! உங்களுக்கும் கடைசியாய் ஒரு வார்த்தை சொல்ல வேண்டியிருக்கிறது. உங்களுக்கு வாஸ்தவத்தில் ஏதேனும் உத்தமமான அபிலாஷைகள் இருந்தால் அதைக் கார்யத்தில்

நிரூபித்துக் காட்டுங்கள். இன்னதுதான் நீங்கள் செய்யவேண்டு மென்று நான் சில யோசனைகள் சொல்லியிருக்கிறேன். வேறு பல யோசனைகள் உங்களுக்குப் புதிதாய்த் தோன்றக்கூடும். இந்த நிலைமையில் தைரியமாய் நீங்கள் வெளிக்கிளம்பி சுயராஜ்யம் என்ற மந்திரத்தை பகிரங்கமாய் உச்சரித்து, பிரதிதினமும் அதே கவலையாயிருந்து தியாக புத்தியுடன் மனித சுயேச்சைக்காகவும் உங்களுடைய அபிவிருத்திக்காகவும் இச்சமஸ்தானம் சேஷமமடையும் பொருட்டும் நீங்கள் சலிக்காமல் உழைக்க வேண்டுமென்பதே எனது மனப்பூர்வமான கோரிக்கை. சுயராஜ்யம் கிடைக்கும் வரையில் நீங்கள் விடாமல் வேலை செய்யவேண்டு மென்பதே எப்போதும் எனது பிரார்த்தனை.

சுபம்.

தீர்மானங்கள்

மகாநாட்டில், ராஜவிசுவாசம், மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் நேர் ஆட்சி, ராஜ்ஜிய நிர்வாக சீர்திருத்தம், பிரதிநிதி சபை சீர்திருத்தம், ஸ்தல சுய ஆட்சி—டவுன் முனிஸிபாலிடி, கிராம பஞ்சாயத்துகள், நியாய நிர்வாக விஷயம், மாஜிஸ்திரேட்டுகள் நியமனம் வகையரா, கட்குடியல், சம்பள எல்கை, உள்ளூராருக்கே உத்தியோகங்கள் கொடுப்பது, வியவஸாய அபிவிர்த்தி, கைத்தொழில் அபிவிர்த்தி, ஸ்டேட் பாங்க், தமிழை சமஸ்தான பாஷையாகச் செய்வது, செலவைக் குறைக்க கூட்டுக் கமிட்டி ஏற்படுத்துவது, உபரி வருமான வினியோகம், தமிழ்ப் பத்திரிகை நடத்த ஏற்பாடு செய்வது முதலான பல முக்கியமான விஷயங்களைப் பற்றி தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் முக்கியமானவைகள் பின் வருபவைகளாகும்:—

ராஜ விசுவாசம்.

மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் ஸமக்ஷத்திற்கும், சிம்மாஸனத்திற்கும் இந்த மகாநாடு தன்னுடைய ஆழ்ந்த விசுவாஸத்தையும் பக்தியையும் வெளிப்படுத்துகிறது.

இந்தத் தீர்மானம் அக்கிராஸனபதி அவர்களால் அக்கிராஸனத்திலிருந்து பிரேரேபிக்கப்பட்டது. எல்லோராலும் கரகோஷத்துடன் அங்கீகரிக்கப்பட்டது.

மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் நேர் ஆட்சி.

மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் பிரஜைகளின் மத்தியில் ஸ்திரமாய் இருந்து, ராஜ்ய பரிபாலனம் செய்து வரவேண்டு மென்று வெகு நாட்களாய் பிரஜைகள் கொண்டிருக்கும் ஆவலை இந்த மகாநாடு இதன் மூலமாய் வெளிக்காட்டி மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் ஸமக்ஷத்தின் வசீகரமான தன்மையையும்

வெளி நாடுகளில் பிரயாணம் செய்ததில் அடைந்திருக்கும் விசாலமான ஒப்பற்ற அனுபவத்தின் பிரயோஜனத்தையும் உபயோகப்படுத்த வேணுமாய் வணக்கமாய்ப் பிரார்த்திக்கிறது.

பிரேரேபித்தவர்–மேலச்சிவல்பட்டி சாமிஞதன் செட்டியார்.
ஆமோதித்தவர்—டாக்டர் A. வேணுகோபால நாயுடு.
ஆதரித்தவர்—டவுன் V. S. கிருஷ்ணஸாமி அய்யங்கார்.
டவுன் P. V. சுப்புஸாமி அய்யர்
கீரனூர் காதர் இப்ராஹிம் ராவுத்தர்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

டெபுடேஷன்.

இந்த மகாநாடு ஒரு கமிட்டி ஏற்படுத்தி மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஸமக்ஷம் அடுத்த வருஷம் ஜனவரி மாதத்தில் இவ்விடம் விஜயமாகையில் அடியில் கண்டவர்களடங்கிய ஒரு கமிட்டி போய் ஷெ இரண்டாம் தீர்மானத்தின் ஸாராம்சத்தை மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஸமக்ஷத்தில் நேராடி வற்புறுத்திச் சொல்ல வேணுமாய் இந்த மகாநாடு தீர்மானிக்கிறது.

கமிட்டி அங்கத்தினர்.

1. G. சுந்தரேச சாஸ்திரிகள்
2. P. V. ரெகுநாதய்யர்
3. S. விசுவனுதய்யர்
4. S. சுப்பிரமணிய அய்யர்
5. டாக்டர் A. வேணுகோபால நாயுடு
6. கீரனூர் உ. சி. உடையப்ப செட்டியார்
7. ஷெ காதர் இப்ரஹீம் ராவுத்தர்
8. பூவரசகுடி அருணாசல அம்பலகாரர்
9. டவுன் S. ரெத்தினஸாமி அய்யர்
10. மேலச்சிவல்பட்டி அண்ணுமலை செட்டியார்
11. டவுன் G. சுந்தரேசய்யர்

ஏது காரணத்தினாலாவது மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஸமக்ஷம் இங்கு விஜயமாகாமலிருக்க நேரிட்டால், அப்பொழுது இந்தத் தீர்மானத்தினால் ஏற்படும் கமிட்டியார் யுக்தானுஸாரம் மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஸமக்ஷித்துக்கு ஒரு விண்ணப்பம் அனுப்பும்படி இந்த மகாநாடு அதிகாரம் கொடுக்கிறது.

பிரேரேபித்தவர்—டவுன் R. வெங்கோபராவ்
ஆமோதித்தவர்—ஷெ S. R. ஸ்வாமினுதய்யர்
எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

ராஜ்ய நிர்வாக சீர்திருத்தம்.

ஸ்டேட் சூபரிண்டெண்டெண்டு என்ற உத்தியோகத்தை எடுத்துவிடவேண்டியது அவசியமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. இச்சமஸ்தானத்தின் பிரஜைகள் ராஜ்ய நிர்வாகத்தில் முன்னேற்றத்துடன் ஒத்து உழைக்கவேண்டிய நோக்கத்தைக்கொண்டு ராஜ்ய நிர்வாகத்தை வகிக்க, அடியில் கண்டவாறு மெம்பர்களடங்கிய ஒரு கவுன்ஸில் ஏற்படுத்தவேணுமாய் இம்மகாநாடு மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களை வணக்கத்துடன் பிரார்த்தித்துக் கேட்டுக்கொள்ளுகிறது.

ஷை கவுன்ஸில் (1) ஸ்ரீ திவான் அவர்களும் (2) இன்னும் இரண்டு கவுன்சிலர்களும் அடங்கியதாக இருக்கவேண்டும். அப்படிப்பட்ட கவுன்சிலர்களில் ஒருவராவது பிரதிநிதி சபை மெம்பர்கள் செய்யும் சிபார்சின் பேரில் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களால் நியமனம் செய்யலான ஸர்க்கார் உத்தியோகஸ்தர் அல்லாதவராய் இருக்கவேண்டும். மேல்கண்டவாறு ஏற்படும் மெம்பர்கள் எல்லாரும், 5 வருஷத்திற்கு மேற்பட்டு அவ்வாறு மெம்பர்களாக இருக்கக்கூடாது.

பிரேரேபித்தவர்—ஆலங்குடி K. S. ராமச்சந்திரய்யர்.
ஆமோதித்தவர்–மேலச்சிவல்பட்டி அண்ணுமலை செட்டியார்.
ஆதரித்தவர்—வன்னியன் விடுதி கருப்பையா சேர்வை.

கோனூர் அப்துர்ரஹீம் லெவை,
டவுன் சுப்பராயப்பத்தர்,
ஷை R. ஸ்ரீனிவாஸாசாரியார்.

எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

கட்குடியல்.

கள் வகையாரா குடி விஷயமாய் அதை அடியோடு நிவர்த்தி செய்யவேண்டிய முயற்சிகள் வெகு சீக்கிரத்தில் எடுத்துக் கொள்ள வேணுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

பிரேரேபித்தவர் R. ராமகிருஷ்ணய்யர், ஆமோதித்தவர்—ராசியமங்கலம் ஆரோக்கிய உடையார், ஆதரித்தவர்—டவுன் R. வெங்கோபராவ். எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

சம்பள எல்லை.

இச்சமஸ்தானம் சிறியதாயிருப்பதையும், அதன் வரும்படிகள் சொற்பமாயிருப்பதையும் உத்தேசித்து இந்த சமஸ்தானத்தில் உத்தியோகஸ்தரில் ஒருவரும் மாதம் 1-க்கு ரூ 1000-க்கு

மேற்பட்ட சம்பளமுள்ளவர்களாக இருக்கக்கூடாதென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

பிரேரேபித்தவர் T. R. ராஜகோபாலய்யர், ஆமோதித்தவர்—கோனூர் V. குப்புஸாமி அய்யர். எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

ஊராருக்கே உத்தியோகங்கள்.

மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஸமஸ்தத்தில் ஸர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நியமிப்பதில் எல்லா உத்தியோகத்தையும், இந்த சமஸ்தானத்தில் பிறந்து, வளர்ந்த இச்சமஸ்தானத்திய பிரஜைகளுக்கே கொடுக்கவேண்டுமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

அக்கிராசனதிபதியால் பிரேரேபிக்கப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

ஃ ஃ ஃ

தமிழ் வாராந்திரப் பத்திரிகை.

இந்த சமஸ்தானத்தில் ஒரு வாராந்திரப் பத்திரிகை நடத்துவது அவசியமென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது. அதைப் பற்றிய விஷயங்களை சர்ச்சை செய்து ஏற்பாடு செய்ய பின் கண்டவர்களடங்கிய ஒரு கமிட்டியை இம்மகாநாடு நியமிக்கிறது.

1. G. சுந்தரேச சாஸ்திரி, 2. டாக்டர் A. வேணுகோபால் நாயுடு, 3. உ. சி. உடையப்ப செட்டியார் (கோனூர்), 4. வெத்திவேல் சேர்வை (வெண்ணைவல்குடி), 5. வைரவனம்பலம் (பாலையூர்), 6 வ. ப. ள. சாமிநாதன் செட்டியார் (மேலச்சிவல்பட்டி), 7. சொக்கலிங்கம் செட்டியார் (களமாவயல்), 8. பழனி சேர்வை, 9. காதர் இபுராஹீம் ராவுத்தர். S. விசுவநாதய்யரும், G. சுந்தரேசய்யரும் கமிட்டியைக் கூட்டவும், வேறு காரியம் நிர்வகித்து நடத்தவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

அக்கிராசனதிபதியால் பிரேரேபிக்கப்பட்டு எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டது.

நவம்பர் மீ 14உ நடந்த நடவடிக்கைகளின் விருத்தாந்தம்.

மகாநாடு முடிந்தபின் உள்ளூர் பேட்டையார்கள் காட்டிய உற்சாகத்தைப்பற்றி இங்கு எடுத்தெழுதாவிட்டால் இம் மகாநாட்டின் வரலாறு பூர்ணமானதாக மாட்டாது. மகாநாடு வெகு விமரிசையாய் நடைபெற்றதும், அக்கிராஸனதிபதியவர்களின் பிரஸங்கமும், வரவேற்பு கமிட்டி அக்கிராஸனதிபதியின் பிரஸங்கமும், ஜனங்களுக்கு உண்டான உற்சாகமும், மகாநாட்டுக்கு வராம

லிருந்த பேட்டையார்களுக்கும் உற்சாகத்தை உண்டாக்கிற்று. ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கு ஓர் வந்தனோபசாரப் பத்திரிகை கொடுக்க வேண்டுமென்று அடுத்த தினத்திலேயே அவர்கள் பரபரப்பாய் ஏற்பாடு செய்து புதுப்பட்டியில் தன் பங்குக்களைப் பார்க்கப்போயிருந்த ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களுக்கு தங்கள் அபிப்பிராயத்தை 13ம் தேதி மாலையில் தந்தி மூலமாய்த் தெரிவித்தார்கள். அவர்களின் கோரிக்கையென்னவெனில், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி புதுக்கோட்டைக்கு வந்து மகாநாட்டில் நடந்த காரியங்கள் யாவற்றிலும் தங்களுக்குள்ள பூர்ணமான சம்மதத்தைத் தெரிந்துகொண்டு, தங்களால் கொடுக்கப்படும் வந்தனோபசாரப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி 14ந் தேதி மாலை திரும்பினர். கான்பரன்ஸ் ஏற்பாட்டில் முகாமையாயிருந்தவர்களின் சம்மதியின் பேரில் பேட்டையார்களிடமிருந்து வந்தனோபசாரப் பத்திரிகையைப் பெற்றுக்கொள்ள உடன்பட்டார். அன்றிரவு சிலர் தீங்கலாக சகல பேட்டையார்களும் ஸ்ரீமான் ஜி. சுந்தரேச சாஸ்திரியார் அவர்களின் கிருஹத்தில் கூடினர்கள். டவுன் பேட்டையார்களுக்காக மகா-ரா-ரா-ஸ்ரீ சங்கிலியாபிள்ளை யவர்கள் தமிழில் அடியிற்கண்ட வந்தனோபசாரப் பத்திரிகையை வாசித்தார்:—

ஸ்ரீமான் எஸ். ஸத்தியமூர்த்தி அய்யரவர்களுக்கு

புதுக்கோட்டை பேட்டையார் மிகுந்த சந்தோஷத்துடன் வந்தனம் செய்து கொடுத்துக்கொண்ட நல்வரவு அறிவிப்பு:—

இங்ஙாட்டில் பிறந்து வளர்ந்த தாங்கள் இந்திய ஜனங்களுக்கு க்ஷேமம் பிறப்பிவிப்பதையே தொழிலாகக் கைக்கொண்டு ஸ்வயநயம் என்பதை கனவிலும் பாராட்டாது, சீமை முதலிய மேனாட்டுக்கும் போய் செய்த பிரஸங்கங்களாலும் நடத்திய காரியங்களாலும் ஜகமெங்கும் கியாதி பெற்றிருப்பதை இச்சமஸ்தானத்தியோர் யாவரும், நாங்களும் சதா மனதில் நினைந்து, அவ்வளவு கியாதியும் நாங்களே பெற்றது போல் நினைத்து ஆனந்தித்து வருகிறோம்.

இந்தியா முழுதும் மட்டிலல்லாமல் உலகமெங்கும் பிரசித்தி பெற்ற தாங்கள் இவ்வூரில் தாங்கள் வளர்ந்த காரணத்தை இட்டு இச்சமஸ்தான ஜனங்களுக்கு சிறந்த நன்மையை உண்டாக்க போவா கொண்டு எவ்வளவோ சிரமத்தையும் காலஹரணத்தையும் பாராமல் இச்சமஸ்தானத்து மகாஜனங்கள் மனம் உவந்து நடத்திய மகாஸபைக்கு அக்கிராஸனம் வகிக்க சம்மதித்ததைப் பற்றி நாங்களும் ஏனையோரும் உங்களுக்கு அளவின்றி ஈடுபட்டி

ருக்கிறோம். மேலே சொன்ன மகா சபை நடக்கும் காலத்தில் இங்கு வெளியிட வொண்ணுத சில காரணங்களால் நாங்கள் வர முடியாமல் போனதைப் பற்றி விசனிக்கிறோம்.

ஆகிலும் மை மகா சபை நடந்த விமர்சையையும், தாங்கள் எடுத்துக்கொண்ட பிரயாசையையும், அதில் நடந்த சங்கதிகளையும் கேட்க எங்கள் மனதுக்கு மிகவும் திருப்தியாக இருப்பதுடன் நாங்களும் ஆதி முதல் கூட இருந்து நடத்தியதுபோலவே நாங்களும் நினைத்திருப்பதுடன் தாங்களும் அவ்வாறே பாவித்து இந்நல்வரவு பத்திரிகையை அன்புடன் அங்கீகரிக்க வேணுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

(ஒப்பம்) பேட்டை பெரியதனம் நா. அரியமுத்து செட்டி, சங்கிலியா பிள்ளை, செ. அ. செ. பிச்சை ராவுத்தர், ப. அ. முகம்மது இபுராகிம் ராவுத்தர், வ. ச. வ. ரெங்கஸாமி செட்டியார், பு. ம. சின்னய்யா ராவுத்தர், கி. ஞ. ரெங்கஸாமி பிள்ளை, வ. ச. வ. ராமஸாமி செட்டி, மு. உசேன் இப்ராஹிம் ராவுத்தர், க. ராமஸாமி பிள்ளை, ஆஜி. கல. கா. சய்யது முகம்மது ராவுத்தர்.

அதன் பின் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி மகாநாடு கூடுவதற்கு ஏற்பாடு செய்தவர்கள் தங்களுடைய சுயநலத்தை உத்தேசித்து அவ்விதமான கூட்டம் கூடவில்லையென்றும், ஸமஸ்தானத்துப் பிரஜைகளின் பொதுநன்மையைக் கருதியே அந்தக் காரியத்தில் பிரவர்த்தித்திருக்கிறார்களென்றும் தெளிவாயும், மனதில் பதியும் படியும் வெகு அற்புதமாய் எடுத்துக்கூறிவிட்டு, மகாநாட்டில் செய்யப்பட்ட தீர்மானங்களையும் அவற்றின் அவசியத்தையும் யுக்தத்தையும் சுருக்கமாயும் தெளிவாயும் எடுத்துச் சொன்னார். ஜனங்களுக்கு ஜவாப்தாரியாய் இருக்கக்கூடிய அரசாக்ஷி, ஸ்வராஜ்யம் இவைகளின் தாத்பரியம் இன்னதென்றும், ஜனங்கள் எவ்விதமான அரசாக்ஷி இருந்தால்தானென்னவென்று இதுவரை இருந்ததுபோல் அசட்டையாயிருக்க வொண்ணுதென்றும், ராஜ்ஜிய நிர்வாக விஷயத்தில் ஜனங்களுக்கு யதார்த்தத்தில் ஒரு பிடி இருக்கவேண்டுமென்றும் பேட்டையார்களுக்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி வற்புறுத்திக் கூறினார். மேலும் விசுவாமித்திர மஹரிஷி, தான் செய்யவேண்டிய யாகத்திற்கு உதவி கொடுக்கும்படி தசரத மஹாராஜாவை வேண்டிக்கொண்டதுபோல் உபசரணை கமிட்டித் தலைவராகிய மகா-ன-ன-ஸ்ரீ G. சுந்தரேச சாஸ்திரியாரவர்கள் ஜனங்களுக்கு ஜவாப்தாரியான அரசாக்ஷி ஏற்படுவதற்கு ஹேதுவாக செய்ய வேண்டிய தூய வேள்விக்கு தங்களுடைய உதவி கொடுக்கும்படி பேட்டையார்களை நாடிச் செல்லுங்கால் அதை மறுப்பது பாங்கல்லவென்றும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி புகன்றார்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி பேசி முடித்தவுடன் ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரியாரவர்களும் வெகு விமரிசையாயும் சொல் வன்மையோடும் பிரசங்கம் செய்தார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி யவர்கள் கூறிய உபமானத்தையே எடுத்துக்கொண்டு, விசுவா மித்திரர் பெயரை கேட்கையில் அவர் ஹரிச்சந்திர ராஜாவிடம் கடுமையாயிருந்ததை ஞாபகப்படுத்துகிறதெனினும், விசுவாமித்தி ரர் இராமனையும் இலக்ஷ்மணனையும் தசரத மஹாராஜாவின் அரண் மனையிலிருந்து யாகத்தில் உதவியா யிருப்பதற்காகக் கூட்டிக் கொண்டு போனபொழுது அவர்கள் நித்திரையில் ஆழ்ந்திருந்த வளவில் தினகரன் உதித்ததைக் காட்டி, அவர்கள் காலைக்கடன் களை முடிக்க வேண்டுமென்று நினைப்பூட்டினதையும் ஞாபகப் படுத்துகிறதென்றும், அதேமாதிரி புதுக்கோட்டை சமஸ்தானத் துப் பிரஜைகள் ஸ்வராஜ்ஜிய சாம்ராஜ்ஜியமாகிய சூரியனைத் தரி சித்து வழிபடுமாறு தான் தன்னால் இயன்றவளவு உதவி புரிய பிரியப்படுவதாய் ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரியர் தெரிவித் தார். மகா-ரா-ரா-ஸ்ரீ மன்னர் சமக்ஷம் அப்பொழுது அங்கு விஜ யம் செய்திருந்து ஜனங்களின் உத்ஸாகத்தையும் அவர்களுடைய அபிப்பிராயங்களையும் அறிந்திருந்தால் மன்னர் சமக்ஷம் ஜனங் களுக்கு ஜவாப்தாரியான அரசாங்கத்திற்கு உடனே ஏற்பாடு செய்யாம லிருக்க மாட்டாரென்பது திண்ணமென்று கூறி மிஸ்டர் சுந்த ரேச சாஸ்திரியர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தை முடித் தார்.

மகா-ரா-ரா-ஸ்ரீ P. V. இரகுநாதய்யர் அவர்கள் பேட்டையார் களும் ஒற்றுமை பாராட்டியதைப்பற்றி அவர்களுக்கு வந்தனம் கூறினர்.

அதன் பின் மகா-ரா-ரா-ஸ்ரீ சங்கிலியாபிள்ளையவர்கள் தாங் கள் மகாநாட்டிற்கு வராதபடி சில வஞ்சக நரிகளின் போதனை யால் மகாநாட்டிற்கு வராமல் இருந்துவிடும்படி நேரிட்டதைப் பற்றி வருத்தமும் ஹாஸ்யமும் பொருந்திய மொழிகளால் எடுத் துக் கூறி அக்கிராசனாதிபதியவர்களுக்கும், உபசரணை கமிட்டித் தலைவர்களுக்கும், மகாநாட்டின் காரியதரிசிகளுக்கும் வந்தனம் கூறினர். மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு மூன்று கர கோஷ வந்தனங்கள் சபையோர் அனைவரும் நின்று அளிக்க, அன்று கூடிய கூட்டம் சந்தோஷகரமாய் முடிவுக்கு வந்தது. பிறகு அக்கிராசனாதிபதி யவர்களும், உபசரணைக் கமிட்டி தலைவ ரவர்களும், மகாநாட்டை கூட்டியவர்களும், மகாநாட்டைச் சேர்ந்த மற்ற மெம்பர்களும் பேட்டையார்கள் ஏற்பாடு செய்திருந்த விருந்துக்குச் சென்று உண்டு களித்தனர். மறுநாள் காலையில் டவுன் ஹாலில் வெளிப்புறத்தில், அக்கிராசனாதிபதி, உபசரணைக்

கமிட்டித் தலைவர், பேட்டையார்கள் முதலியவர்கள் எல்லோரையும் இருக்கச்செய்து புகைப்படமொன்று எடுக்கப்பட்டது. நவம்பர் மீ 15ல் மத்தியானம் ஸ்ரீமான் சுந்தரேச சாஸ்திரியாரவர்கள் வீட்டில் விருந்துண்ட பின் சென்னைக்குச் செல்ல திருச்சி மார்க்கம் ஸ்ரீமான் சத்யமூர்த்தி அவர்கள் புறப்பட்டார். சாஸ்திரியாரவர்களும் திருச்சி வரைக்கும் ஸ்ரீமான் சத்யமூர்த்தியுடன் கூடச் சென்றார். அவர்கள் புதுக்கோட்டை கடைவீதி வழியாக மோட்டாரில் சென்றபோது அவர்களை அநேக இடங்களில் மரியாதை பெற்றுக்கொள்வதற்காக தங்கும்படி பேட்டையார் கேட்டுக் கொண்டார்கள். ஸ்ரீ சாந்தநாதேசுவர ஸ்வாமி ஸன்னதியில் பேட்டையார்களின் கூட்டமொன்று கூட, அப்பொழுது ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் உபதேசம் செய்ததென்ன வெனில், மகாநாட்டில் ஏற்பட்ட உத்ஸாகத்தை சிதைவின்றி அவர்கள் பாதுகாக்க வேண்டுமென்பதும், அவர்கள் இன்னும் செய்யவேண்டிய காரியங்களில் ஊக்கத்துடன் கண்ணுங்கருத்துமாயிருக்க வேண்டுமென்பதுமே. பின்னர் அவர்கள் மாலை சூட்டப்பட்டவர்களாய் பேட்டையார்கள் பரிசளித்த புஷ்பம், பலம், தாம்பூலம் முதலியவற்றைப் பெற்றுக்கொண்டு காகோஷம் முழங்க புதுக்கோட்டையை விட்டுப் புறப்பட்டார்கள்.

6-வது அத்தியாயம்.

இரண்டாவது மகாநாட்டின் எதிரொலி.

இரண்டாவது மகாநாடு வெகு விமர்சையாகவும் ஒழுங்காகவும் நடைபெற்று முடிந்தது. ஆனால் அது அரசாங்கத்தாருக்கு உகந்ததாக வில்லை. அச்சமயத்தில் சிட்னி மார்த்தாண்டாவுக்கு அசௌரிமையை அளிக்கலாமென்றும், சமஸ்தான ஜனங்களுக்கு அது விஷயத்தில் ஆக்ஷேபணை இராதென்றும் கவர்ண்மெண்டாருக்கு எடுத்துக் கூறி, அந்தப்படி வாக்குரிமையைப்பற்றி உத்தரவு பெறுவதற்காக அரசாங்கத்தார் வலுவாக முயற்சி செய்துகொண்டிருந்தார்கள். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரின் பிரசங்கம் அவர்களுக்குப் பூசை வேளையில் கரடியை விட்டோட்டினற்போலிருந்தது. ஈ-தர்பாரவர்கள் செய்துகொண்டிருந்த பிரயத்தனத்தில் காரிய ஸித்தி பெறுவதற்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி

அய்யரின் பிரசங்கம் பலத்த முட்டுக்கட்டையாகிவிட்டது. அரசாங்கத்தாருக்கு வந்துவிட்டது கோபம். ஸ்ரீமான் சுந்தரேச சாஸ்திரியாரவர்களின் வரவேற்புப் பிரசங்கத்தையும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்களின் அக்கிராசனப் பிரசங்கத்தையும் புறட்டிப் புறட்டிப் பார்த்தார்கள். ஆக்ஷேபகரமென்று தோற்றிய வாசகங்களைப் பொறுக்கிப் பொறுக்கி யெடுத்தார்கள். அவைகளை யெல்லாம் சேகரித்து வைத்துக்கொண்டிருந்தார்கள்.

1921-ம் வரு ஜனவரி மீ 1-ந் தேதி மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சீமையிலிருந்து பம்பாய்க்கு வந்து கப்பலிலிறங்கினார். சமஸ்தானப் பிரஜைகளெல்லோரும் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமஸ்தானத்திற்கு வருவாரென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். பம்பாயிலிருந்து அரசர் சென்னைக்கு வந்தார். அங்குள்ள சட்ட நிபுணர்களையும், சென்னை கவர்ன்மெண்டாரையும் கலந்து பேசிக்கொண்டிருந்தார். இந்த அவசரமானவும் அத்யாவசியமுமான காரியங்களை முன்னிட்டு அவர் ஜனவரி மீ 25-ம்வ வரையில் சென்னையில் தங்க நேரிட்டது. மிஸ்டர் பர்ன் துரையவர்களும், திவான் மகா-ரா-ரா-ஸ்ரீ விஜயரகுநாத துரைராஜா அவர்களும் சென்னைக்குச் சென்று, மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுடன் தங்கியிருந்து வேண்டிய உதவி புரிந்துவிட்டுத் தாங்கள் செய்யவேண்டிய காரியங்கள் விஷயத்திலும் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் ஆக்ஞைகளைப் பெற்றுக்கொண்டார்கள்.

பிறகு மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதியவர்களைப் பேட்டி காணவேண்டியும், பிப்ரவரி மீ 7-ந்தேதி காளுட்டுக் கோமான் டெல்ஹிக்கு விஜயம் செய்வதை முன்னிட்டும் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் டெல்ஹிக்குப் புறப்பட்டார். அங்கே ஆக வேண்டிய காரியங்களை முடித்துக்கொண்டு பம்பாய்க்குத் திரும்பி, அங்கிருந்தே பிப்ரவரி மீ 19உ அவர் ஐரோபாவுக்குப் புறப்பட்டுச் சென்றனர்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்கள் தன் பிரசங்கத்தில் கூறியிருந்த சிற்சில விஷயங்களுக்காகச் சமஸ்தானத்திற்குள் பிரவேசிக்கக்கூடாதென்று உத்தரவு செய்து ராஜ சாஸனப் பிரகடனம் ஒன்று 1921-ம் வரு பிப்ரவரி மீ 2-ந்தேதி பிறப்பிக்கப்பட்டது. உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் சுந்தரேச சாஸ்திரியார் அவர்கள் தமது பிரசங்கத்தில் கூறியிருந்த, ஆக்ஷேபகரமென்று கருதப்பட்ட சில வாசகங்களுக்காக மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டுமென்றும், மேலும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்கள் அவருடைய பிரசங்கத்தில் கூறிய விஷயங்களில் தமக்குச் சம்பந்தமாவது அபிப்பிராய ஒற்றுமையாவது இடையாதென்றும் தெரிவித்துக்கொள்ள வேண்டுமென்

றும், இல்லாவிடின் விபரீதமான பலன்கள் ஏற்படுமென்றும் அறிவிக்கப்பட்டார். ஸ்ரீமான் சாஸ்திரியளவர்கள் குனிந்துகொடுக்க நேரிட்டது.

பொது ஜனங்கள் சமஸ்தானத்தில் பற்பல விடங்களில் கூட்டம் கூடி, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யருக்கு விரோதமாகப் பிறப்பிவிக்கப்பட்ட தேசப் பிரஷ்ட உத்தரவை ரத்து செய்யவேண்டுமென்று மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு மனுச் செய்துகொண்டார்கள். புதுக்கோட்டை டவுன் ஹாலில் பொது ஜனங்கள் 14—2—21ல் ஸ்ரீமான் P. V. ரெகுநாதய்ய ரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் கூட்டம் கூடி, மேடி தேசப் பிரஷ்ட உத்தரவை மாற்றவேண்டுமென்று மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு ஒரு மனுச் செய்துகொண்டார்கள்.

ரா-தர்பாரவர்கள் 1921-ம் வரு மார்ச் மீ 21-உ ஜனப்பிரதிநிதிகளுக்குச் செய்த பிரசங்கத்தில், மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் இந்த தேசத்திற்கு எதற்காக வந்தனரென்றும், அவர் இங்கிருந்தபோழுது என்ன காரியத்தில் ஆழ்ந்திருந்தாரென்றும் விவரித்துக்கூற முடியாதென்றும், விஷயம் ரஹஸ்யமானபடியால் பிரதிநிதிகள் காரியமின்னதா யிருக்கலாமென்பதைத் தாங்களே யோசித்துத் தெளிந்துகொள்ள வேண்டுமென்றும் கூறினார்கள். மேலும், முந்தின வருஷத்தில் நடந்த ராஜீயக் கிளர்ச்சியின் ஆவேசத்தையும், தன்மையையும்பற்றிக் கண்டித்துப் பேசிவிட்டு, தேசப்பிரஷ்ட உத்தரவை மாற்றவேண்டுமென்று பற்பல கூட்டங்கள் கூடினதில், அவற்றில் யாதொன்றிலாவது ஜனங்கள் அது விஷயத்தில் ஏன் கவலை கொண்டிருக்கிறார்களென்பதற்குக் காரிய காரணங்கள் தெரியப்படுத்தப்படவில்லையென்றும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் கூறிய விஷயங்கள் சரிதானென்பதற்கும் காரணம் கூறப்படவில்லையென்றும் எடுத்துச் சொல்லப்பட்டது. ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரின் அபிப்பிராயத்தைச் சமஸ்தானப் பிரஜைகளில் மிகச் சிறுபான்மையோரைத் தவிர மற்றவர்கள் சரியென்று ஒப்புக்கொள்ள மாட்டார்களென்றும், அந்த நிலைமையில் தேசப் பிரஷ்ட உத்தரவை மாற்றும்படி கேட்பது சமஸ்தான கௌரவத்திற்கு மாறுனதென்றும், அப்படி யிருக்கையில் அத்தகைய கூட்டங்களில் சம்பந்தப்பட்டவர்கள் எப்படி மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களை மேடி உத்தரவை மாற்றும்படி கேட்கலாமென்றும் வாதித்தார்கள்.

இது சம்பந்தமாய் சுதேசமித்திரன் பத்திரிகையில் 1921-ம் வரு ஏப்ரல் மீ 21-ம் உ "மிஸ்டர் பர்ன் என்ன செய்வார்?" என்ற தலைப்புடன் எழுதப்பட்ட தலையங்கத்தையும், அதில் குறிப்பிட்ட ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரின் கடிதத்தையும் இங்கு தருகிறோம்:—

"மிஸ்டர் ஸிட்னி பர்ன் என்பவர் புதுக்கோட்டை ஸமஸ்தானத்தில் "ஸ்டேட் ஸுபரின்டெண்டெண்டு" என்ற உத்தியோகத்தை வகிப்பவர். நிர்வாகத் தலைமை உத்தியோகஸ்தர் அவரே. அவர் அதிகாரி வருக்கம் என்று சொல்லப்படும் ஸிவில் ஸெர்விஸ் வருக்கத்தைச் சேர்ந்தவர். புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு அவருடைய ஊழியத்தை சென்னை மாகாண கவர்மெண்டார் இரவல் கொடுத்திருக்கிறார்கள். இவருடைய ஆதீனத்தில்தான் மிஸ்டர் ஸத்தியமூர்த்தி புதுக்கோட்டை சமஸ்தானத்துக்குள் நுழையக்கூடாதென்ற உத்தரவு பிறப்பிவிக்கப்பட்டது. இதற்குக் காரணம் புதிதாக எடுத்துச் சொல்லவேண்டியதில்லை.

சென்ற நவம்பர் மாதத்தில் புதுக்கோட்டையில் நடந்த மகாநாட்டில் மிஸ்டர் சத்தியமூர்த்தி அக்கிராசனம் வகித்துப் பேசிய பொழுது தெரிவித்த அபிப்பிராயங்களின் பொருட்டு அந்த சமஸ்தானத்திற்குள் அவர் காலடி வைக்கக்கூடாதென்று உத்தரவு செய்யப்பட்டது நமது நேயர்களுக்குத் தெரியும். பிறகு புதுக்கோட்டை சமஸ்தான ஜனங்கள் ஆங்காங்கு கூடி, உத்தரவை ரத்து செய்யும்படி புதுக்கோட்டை ராஜாங்கத்தாரைக் கேட்டுக்கொண்டதும் நமது நேயர்களுக்குத் தெரியும். சென்ற மார்ச் மாதத்தில் புதுக்கோட்டை ஜனப்பிரதிநிதி சபை என்பது கூடிய பொழுது அதன் முன் பேசின மிஸ்டர் ஸிட்னி பர்ன், மிஸ்டர் சத்தியமூர்த்தியின் அபிப்பிராயங்களைப் புதுக்கோட்டை ஜனங்கள் அங்கீகரிப்பதாகத் தமக்குத் தெரியவில்லையாகையால், அவர் மேல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யும்படி கேட்பது சரியில்லையென்று அருத்தமாகும்படி பேசினர். புதுக்கோட்டை சமஸ்தான ஜனங்கள் தமது அபிப்பிராயங்களை அங்கீகரிக்கிறார்கள் என்பது பிரத்தியட்சமென்று வெகு தெளிவாக வாதித்து மிஸ்டர் சத்தியமூர்த்தி நமக்கொரு கடிதம் எழுதியிருக்கிறார். அதை வேறிடத்தில் பிரசுரம் செய்திருக்கிறோம். பல வகை ஜனங்களும் நவம்பர் மாத மகாநாட்டிற்கு வந்திருந்ததுடன், எந்தச் சபையை புதுக்கோட்டை ராஜாங்கத்தார் ஜனப்பிரதிநிதி சபை என்று கொண்டாடுகிறார்களோ அந்தச் சபையின் மெம்பர்களில் பெரும்பாலோர் மகாநாட்டில் விஜயம் செய்திருந்தார்கள். ஜனப்பிரதிநிதி சபையில் மிஸ்டர் சத்தியமூர்த்தி பேசி, அவருடைய அபிப்பிராயங்களை அச்சபை தீர்மானங்களாக நிறைவேற்றி இருந்தால், அச்சபை ஜனப்பிரதிநிதி சபையில்லையென்று மிஸ்டர் பர்ன் சொல்லுவாரோ? அச்சபை மெம்பர்களில் பெரும்பாலோர் வேறு இடத்தில் உட்கார்ந்துகொண்டு தீர்மானங்கள் செய்யும்பொழுது மாத்திரம் அவர்கள் ஜனப்பிரதிநிதிகளல்லவோ? அவர்கள் ஜனப்பிரதிநிதிகளாயின் அவர்களுடைய அபிப்பிராயங்களை தேச ஜனங்கள் எல்லோருமே அங்கீகரிக்கிறார்கள் என்றே

கொள்ளவேண்டும். அன்று நடந்ததென்னவென்றால், தமது பிரசங்கத்தில் மிஸ்டர் சத்தியமூர்த்தி சில அபிப்பிராயங்களைத் தெரியப்படுத்தினர். அந்த அபிப்பிராயங்களில் ஒன்று தவிர மற்றவைகளை சபையார் தீர்மானங்களில் புகவிட்டு அத்தீர்மானங்களை அங்கீகரித்துவிட்டனர். அந்த சபையோ ஜனப் பிரதிநிதிகள் என்று ராஜாங்கத்தார் சொல்லுகிறவர்களையும், வேறு பலரையும் கொண்ட சபை. ஆகையால் தீர்மானங்களாக அங்கீகரிக்கப்பட்ட அபிப்பிராயங்களைப் பற்றினவரையில், புதுக்கோட்டை ஜனங்கள் எல்லோரும் மிஸ்டர் சத்தியமூர்த்தியை ஆதரிக்கிறவர்கள் என்று ஏற்படுகிறது. தீர்மானத்தில் புகவிடப்படாத ஒரு அபிப்பிராயத்தைச் சிறிது கவனிப்போம். கிறிஸ்து மதத்தில் பிறந்து, அம்மதத்தில் வளர்ந்து, அதையே அனுஷ்டித்து வரும் ஒரு வெள்ளைக்கார ஸ்திரீயை புதுக்கோட்டை ராஜா மணம் செய்து கொண்டிருப்பதால், அந்த ஸ்திரீயிடம் அவருக்குப் பிறந்த பையன் பட்டத்திற்கு வரத் தகுதியற்றவர் என்பது மிஸ்டர் ஸத்தியமூர்த்தியின் அபிப்பிராயம். இது புதுக்கோட்டை ஜனங்களின் அபிப்பிராய மல்லவென்று மிஸ்டர் ஸிட்னி பர்ன் நினைத்தால், சமஸ்தானத்திலுள்ள சகல ஜனங்களுடைய அபிப்பிராயத்தையும் சீட்டு மூலமாக அவர் தெரிந்து கொள்ளட்டுமென்று மிஸ்டர் சத்தியமூர்த்தி சொல்லுகிறார். இந்த வழியைத்தான் நாமும் ஏற்கெனவே குறிப்பிட்டோம். ஒரு ஹிந்து சமஸ்தானத்தை ஹிந்து அல்லாத ஒருவர் ஆள அந்த ஸமஸ்தான ஜனங்கள் சம்மதப்படுவார்களா அல்லவா வென்று சந்தேகமேற்படவே கூடாது. புதுக்கோட்டை ராஜா பிருகதம்பாளின் தாஸனென்று பெயர். ஹிந்து அல்லாத ஒருவர் பிருகதம்ப தாஸனாக எப்படி யிருக்க முடியும்? அப்படி ஒருவர் இருக்க ஜனங்கள் சம்மதப்பட மாட்டார்கள் என்பது வெளிப்படையாகத் தெரியும் உண்மை. இதில் மிஸ்டர் பர்னுக்கு சம்சயமிருந்தால், மிஸ்டர் சத்தியமூர்த்தி சொல்லுகிறபடி அவர் சீட்டுப் போட்டுப் பார்க்கட்டும். ஆனால், ஜனங்களுடைய அந்தரங்க அபிப்பிராயம் அவருக்குத் தெரிந்திருக்குமாதலால், மிஸ்டர் சத்தியமூர்த்தி சொல்லுகிறபடி செய்ய அவர் முன் வரமாட்டார். ஆகையால் ஜனங்கள்தான் வலுவிலே தங்களுடைய அபிப்பிராயத்தை மிஸ்டர் பர்னுக்குத் தெரியப் படுத்த வேண்டும். இளவரசைப்பற்றின அபிப்பிராய மூள்பட மிஸ்டர் சத்தியமூர்த்தி தெரிவித்த அபிப்பிராயங்கள் தங்களுடைய அபிப்பிராயங்களே என்று தேச ஜனங்கள் அவருக்கு வற்புறுத்திக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அப்படி அவர்கள் செய்யாதிருந்துவிட்டால், பயந்துகொண்டு சும்மா விருந்துவிட்டவர்களாகிவிடுவார்கள். ஆனால், அவர்கள் சுபாவத்தில் பயங்

கொள்ளிகளல்ல; ஆகையால் மிஸ்டர் பர்னுடைய சந்தேகத்தை நிவர்த்திசெய்து, மிஸ்டர் சத்தியமூர்த்தி மேல் பிறப்பிக்கப்பட்டிருக்கிற உத்தரவு ரத்து செய்யப்படும்படி முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறோம்."

புதுக்கோட்டை

மிஸ்டர் எஸ். சத்தியமூர்த்தி பின் வருமாறு எழுதுகிறார்:—

மிஸ்டர் ஸிட்னி பர்ன் என்பவர் ஆகாயத்திலிருந்து குதித்த அதிகாரி வர்க்கத்தில் ஒருவர். ராஜ்யத்திலிராத ஒரு ராஜாவும், கவலையற்ற சென்னை மாகாண கவர்ன்மெண்டாரும் சேர்ந்து அவரைப் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் புகுத்திவிடவே, மாதம் 3000 ரூபாய் பெற்றுக்கொண்டு அவர் புதுக்கோட்டை ஜனங்களை ரட்சிக்கும் தெய்வமாக வழங்கி வருகிறார். அச்சமஸ்தான ஜனங்களுக்குத் தாமே உற்ற தோழன் என்று அவர் கருதுகிறார் என்பதில் சந்தேகமில்லை. உத்தரகுரு என்ற போகபூமி போல் தம்முடைய ஆதீனத்தில் விளங்கும் புதுக்கோட்டை எல்லைகளுக்குள் ஸ்வராஜ்யம் ஜனநாயகம் ஜன சுதந்தரம் என்ற விஷயங்களைப் பற்றி மூச்சுப்பேச்சு இருக்கக் கூடாதென்பது அவரது கருத்து; அவருடைய அபிப்பிராயத்துக்கு மாறாக ஏதேனும் நடக்கிறதாயிருந்தால், அதற்குக் காரணத்தை அவர் தெரிந்து கொள்ளாமலிருக்க மாட்டார். ஆகையால்தான் ஜனங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்ல சென்ற நவம்பர் மாதத்தில் ஒரு மகாநாடு கூடியதைப்பற்றி அவருக்குக் கோபம் பிறந்து விட்டது. சென்ற மார்ச்சு மாதம் 28-ந் தேதியன்று அவர் ஜனப் பிரதிநிதி சபைமுன் பேசியபொழுது, சென்ற வருஷத்தில் ஜனங்கள் ராஜீய விஷயங்களில் உழைத்ததுபோல் அதற்கு முன் எப்பொழுதும் உழைத்ததில்லை என்று ஒப்புக்கொள்ளுகிறார்; ஆனால் ஜனங்களுடைய தோரணை அவருக்குப் பிடிக்கவில்லையாம். மிஸ்டர் பர்ன் ஸர்வக்ஞராகையால் மகாநாட்டை எப்படி ஜனங்கள் நடத்த வேண்டுமென்று உபதேசம் செய்யத் தடையில்லை; ஆனால் அவரிடத்தில் தெரிந்து கொள்ள ஜனங்கள் போவார்களா என்பதுதான் சந்தேகம்.

ராஜாங்க விஷயங்களைப் பற்றிப் பகிரங்கமாக ஜனங்கள் பேசலாமென்று மிஸ்டர் பர்ன் பெரியமனதுடன் திருவாய் மலர்ந்திருக்கிறார். ஆனால் அதே நிமிஷத்தில் அவருக்குக் கோபமூண்டு விட்டது. "ராஜாங்கம் நடப்பதே சாத்தியப்படாமல் செய்யும்படி தப்புந்தவறுஞ் சொல்லி இளர்ச்சி செய்வதை நான் சகிக்க முடியாது" என்று ஸர் மைக்கேல் ஓட்வியரின் பாட்டைப்

பாடியிருக்கிறார். அதிகாரி வருக்கத்தில் கூட வாயில் வந்ததை யெல்லாம் சொல்லிவிடக்கூடாது. ராஜாங்கம் நடப்பதே சாத்தி யப்படாமற் செய்யுட்படி என்னுடைய பிரசங்கத்திலாவது, மகா நாட்டின் தீர்மானங்களிலாவது என்ன இருந்ததென்று மிஸ்டர் பர்ன் காட்ட முடியுமா? ஜனங்கள் செய்யும் கண்டனமானது கிரம மாக இருக்க வேண்டுமென்றும், காலுக்கான பாஷை நடையில் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும், அதுவும் பொறுப்புள்ளவர் களால் தெரிவிக்கப்பட வேண்டுமென்றும் மிஸ்டர் பர்ன் சொல்லு கிறார்.

மகா நாட்டின் நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் மிஸ்டர் பர்ன் படித்துப் பார்த்து, உபசரணை சபை மெம்பர்கள் யார், மகா நாட்டில் கூடினவர்கள் யார் என்று தெரிந்து கொள்வா ரானால், அவர்கள் தெரியப்படுத்தின கண்டனங்கள் கிரம மானவை என்றும், காலுக்கான நடையில் பொறுப்புள்ளவர்க ளாலேயே தெரிவிக்கப்பட்டன என்றும் தெரிந்துகொள்ளலாம். விகாரமாகத் திட்டுவது ஒருவருக்கும் பிரயோஜனந் தராது என்று மிஸ்டர் பர்ன் சொல்வதை நானும் ஒப்புக்கொள்ளு கிறேன். அதுவே சத்தியம், சத்தியம்.

நான் புதுக்கோட்டைக்குள் போகக்கூடாது என்ற உத்தரவு விஷயமாக அடுத்தாற்போல் மிஸ்டர் பர்ன் வெகு விஸ்தாரமாகச் சொல்லுகிறார். பரஸ்பர தூஷணையால் பிரயோஜனமில்லை என் பதை உத்தேசித்து அதைப்பற்றி அதிகமெழுத நான் இஷ்டப் படவில்லை. ஆனால், அவர் சொல்லும் ஒரு விஷயம் ருஜுவாகி விட்டால், என் மேல் பிறப்பிக்கப்பட்டிருக்கிற உத்தரவை மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை ஒரு ஆதாரத்தை இழந்துவிடுமாகை யால், அதைப்பற்றி சிறிது எழுதுகிறேன். "இந்தக் கூட்டங் களில் தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயங்கள் சமஸ்தான ஜனங் களின் வெகு சிலருடைய அபிப்பிராயங்களே என்றும், அவை ராஜ்யத்தின் நன்மைக்குப் பாதகமானவை என்றும் ராஜா நினைக்கிறார். அப்படியிருக்கையில், அந்த அபிப்பிராயங்கள் சரியானவை என்று நீங்கள் சொல்லத் தயாராக இருந்தாலல்லது, அந்த உத்தரவை ரத்து செய்ய வேண்டுமென்று ராஜாவை எப்படிக் கேட்க முடியும்?" என்று மிஸ்டர் பர்ன் சொல்லி யிருக்கிறார். ராஜா ஏன் அப்படி நினைக்கிறார் என்று தெரிந்து கொள்ள நான் இஷ்டப்படவில்லை. ஜனங்களுடைய மத்தியிலிராத வருக்கு ஜனங்களுடைய அபிப்பிராயங்கள் தெரிந்திருக்கமாட்டா. ஆனால் நான் தெரிவித்த அபிப்பிராயங்கள் ராஜ்யத்தில் வெகு சிலாலேயே ஆமோதிக்கப்படுகின்றனவா, அவை ராஜ்யத்தின் நன்மைக்குப் பாதகமிழைக்கக் கூடியவையா என்று பார்க்க வேண்டும்.

மகாநாட்டில் 218 பெயர்கள் ஆஜராயிருந்தார்கள். அவர்களில் ஒருவர் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவர். 89 பிராசுதார்கள், 65 வியாபாரிகள், 47 வக்கீல்கள், 10 கருமான்கள் மகாநாட்டில் ஆஜராயிருந்ததுடன் வேறு தொழில்களைச் சேர்ந்த 6 பெயர்களும் வந்திருந்தார்கள். ராஜாங்கத்தாரால் அமைக்கப்பட்டுள்ள ஜனப்பிரதிநிதி சபை மெம்பர்களில் அநேகமாக எல்லோரும் மகாநாட்டில் பிரசன்னமாயிருந்ததுடன் தீர்மானங்களின் மேல் பேசினார்கள். என்னுடைய பிரசங்கத்தில் தெரியப்படுத்தப்பட்ட அபிப்பிராயங்களில் ஒன்றைத் தவிர மற்றவைகளைத் தீர்மானங்களாகச் செய்து மகாநாடு ராஜாங்கத்திற்கும் ராஜாவுக்கும் அனுப்பிற்று. என்னுடைய அபிப்பிராயங்களை வெகு சிலரே ஆமோதிக்கிறார்கள் என்று இந்த நிலைமையில் மிஸ்டர் பர்ன் சொல்வது ஆதாரமற்ற பேச்சு. ஆனல் கண்ணை மூடிக்கொண்டு விட்டவர்களுக்கு எதிரில் இருப்பது எப்படித் தெரியும்? ஜனங்கள் என்று சொல்லுகையில், நான் உத்தேசிக்கிறவர்கள் வேறு, அவர் உத்தேசிக்கிறவர்கள் வேறு என்று தெரிகிறது. உத்தியோகங்களுக்காகவும், வேறு தயவுகளுக்காகவும் கட்டிக் காத்துக்கொண்டு இச்சகம் பேசும் பேதைகளை அவர் உத்தேசிக்கிறார் போலும். ஆனல் நெற்றி வியர்வை நிலத்தில் விழ உழைக்கிறவர்களை நான் உத்தேசித்திருக்கிறேன்.

மகாநாட்டில் கேட்ட ராஜாங்க மாறுதல்களில் சிலவற்றை ஜனப்பிரதிநிதி சபையும் கேட்டிருக்கிறது, ஆயினும், என்னுடைய அபிப்பிராயங்கள் ராஜாங்கத்திற்குப் பாதக மிழைக்கக் கூடியவை என்று மிஸ்டர் பர்ன் சொல்லுகிறார். பட்சபாதமற்று ஆராய்ந்து பார்த்தால் அது பிசகென்பது விளங்கும்.

மகாநாடுகளின் நன்மையைப் பற்றி என்னுடைய பிரசங்கத்தின் முதற் பாகத்தில் சொல்லியிருக்கிறேன். மகாநாடுகள் ராஜாங்கத்திற்குப் பாதக மிழைக்கிறவைகளா? மிஸ்டர் பர்ன்கூட அப்படிச் சொல்ல மாட்டார் பிறகு ஸ்வராஜ்யமே மகாநாட்டின் லட்சியமென்று சொல்லியிருக்கிறேன். ராஜ சக்கரவர்த்தியே இந்தியாவைப்பற்றி இந்த லட்சிய முடையவர் என்று காளுட்டுக் கோமகன் சொல்லிவிட்ட பிறகு, அந்த லட்சியம் புதுக்கோட்டை ராஜாங்கத்திற்குப் பாதகமிழைக்கக் கூடியதென்று மிஸ்டர் பர்ன் சொல்வது சாத்தியமில்லை. பிறகு என்னுடைய பிரசங்கத்தில், ஸ்வராஜ்யமடைய வழி என்னவென்று ஆராய்ந்து பார்த்து, பலாத்காரமும் ஒத்துழையாமையும் கூடாதென்று சித்தாந்தம் செய்துவிட்டுப் பின் வருமாறு சொல்லியிருக்கிறேன்:— "ப்ரிட்டிஷ் இந்தியாவில் நாம் என்ன செய்யவேண்டியிருந்தபோதிலும், புதுக்கோட்டையில் ராஜாவும் ஜனங்களும், ஜாதியிலும் பாஷையிலும் மதத்திலும் லட்சியங்களிலும் ஒற்றுமைப்

பட்டவர்களாகையால், கடைசியில் அனுஷ்டிக்கத்தக்க முறை களை இப்பொழுது அனுஷ்டிக்க அவசரமில்லை என்று கருது கிறேன்." சட்டத்தை அனுசரித்த வழிகளிலேயே புதுக் கோட்டை ஜனங்கள் கிளர்ச்சி செய்யவேண்டுமென்றும் சொல்லி யிருக்கிறேன். இது ராஜாங்கத்திற்குப் பாதகமிழைக்கக்கூடியதா? அடுத்தாற்போல், சுதேச சமஸ்தானங்களின் அந்தஸ்தைப் பற்றிப் பேசி இருக்கிறேன். அப்படிப் பேசுகையில், ஸர் வில்லி யம் லீ வார்னர், ஸர் ஓமூர்க்ரே, மிஸ்டர் ராம்ஸே மாக்டொனல்டு முதலிய பிரஸித்த ஆசிரியர்களின் அபிப்பிராயங்களையே எடுத் துச் சொல்லி, சுதேச சமஸ்தானங்கள் தனியாக இருக்கும்படி அவைகளைப் பாதுகாக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். அது புதுக்கோட்டை ராஜாங்கத்திற்குப் பாதகமிழைக்கக் கூடியதா?

பிறகு கிளர்ச்சி செய்ய சில முறைகளைக் குறிப்பிட்டிருக்கி றேன். மகாநாடுகள், சிறு நூல்கள், பிரசங்கங்கள், புத்தகாலயங் கள், பத்திரிகைகள் முதலியன. இவை ராஜாங்கத்திற்குப் பாதக மிழைக்கக் கூடியவைகளா? சுதேச சமஸ்தானங்களை ப்ரிட்டிஷ் மாகாணங்களின் அந்தஸ்துக்குக் கொண்டு வந்துவிடக் கூடா தென்று சொல்லியிருக்கிறேன். இது புதுக்கோட்டை ராஜாங் கத்துக்குப் பாதக மிழைக்கக்கூடியதா?

பிறகு ஜனங்களுடைய குறைகளை எடுத்துச் சொல்லுகை யில், ராஜா ராஜ்யத்திலிராமலே இருப்பதை முதலில் குறிப்பிட்டி ருக்கிறேன். ராஜா புதுக்கோட்டையில் இராமலே இருக்கும் விஷயமாக ஜனங்களுக்குப் பெரிய வருத்தமிருப்பது மிஸ்டர் பர்னுக்குத் தெரிந்திருக்கும். தெரிந்திருந்தாலும், தெரியாதிருந் தாலும், ராஜா ராஜ்யத்திலிருக்க வேண்டுமென்று சொல்வது ராஜாங்கத்திற்குப் பாதக மிழைக்கக் கூடியதா? இதைப்பற்றியும், இதர விஷயங்களாகிய ஸ்டேட் கவுன்ஸிலின் அமைப்பு, நீதி பரிபாலனம், ராஜ்ய வரவு செலவு, முனிஸிபாலிடிகள், கீழ்த்தர உத்யோகங்களின் சம்பளம், கல்வி, சுகாதாரம், வைத்தியம், தொழி லபிவிருத்தி, ஜனப்பிரதிநிதி சபையின் அமைப்பு, அதன் அதி காரம் ஆகிய விஷயங்களைப்பற்றியும் மகாநாடு தீர்மானம் செய்தி ருக்கையில், அவை ராஜாங்கத்திற்குப் பாதக மிழைக்கக் கூடிய வை என்று எப்படிச் சொல்வது?

எனது பிரசங்கத்தில் நான் குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப் பற்றி தீர்மானம் செய்யப்படவில்லை என்று நான் மேலே சொன் னேன்.

"உங்களுடைய ராஜாவின் குமாரர் பட்டத்துக்குரிய இள வரசராக இருக்கும் பட்சத்தில் அவர்கள் ராஜ்யத்திலிராமலிருப்பது

உங்களுக்கு அதிக வருத்தத்தைத் தரும்; ஆனால் நல்ல வேளை யாக ராஜாவின் குமாரர் இளவரசாக முடியாது. இந்த ஹிந்து ராஜ்யத்தின் இளவரசு பாத்தியம் ஹிந்து சட்டத்தை அனுச ரித்தும், நமது ஜாதி ஐதீகங்களை அனுசரித்தும் முடிவு செய்யப் படுமென்று நம்புகிறேன்" என்று நான் எனது பிரசங்கத்தில் சொல்லியிருக்கிறேன். புதுக்கோட்டை சமஸ்தான ஜனங்களில் ஒரு சிலர் தவிர மற்றவர்கள் எல்லோரும் இந்த அபிப்பிராய முடையவர்கள் என்று நான் நினைக்கக் காரணமிருக்கிறது. மிஸ் டர் பர்ன் அப்படி நினைக்கவில்லையானால், போலீஸாரைக் கொண்டு பயமுறுத்தாமல் ஜனங்களில் ஒவ்வொருவருடைய அபிப்பிராய மும் என்னவென்று சீட்டு எடுத்துத் தெரிந்துகொள்ளட்டும். மிஸ்டர் பர்ன் அன்னியராக இராதிருக்கும் பட்சத்தில் இந்த விஷயத்தைப்பற்றி நான் அதிகமெழுத வேண்டியிராது. நான் சொல்லுவதை ஒவ்வொரு ஹிந்துவும் ஒப்புக்கொள்ளுவர். மிஸ் டர் பர்னைவிடப் பெரிய ஆங்கிலேயர் அநேகர் இதே அபிப்பிராய முடையவர்கள் என்பது எனக்குத் தெரியும். ராஜ சக்கரவர்த்தி யாகிய ஜார்ஜ் மன்னரும், அவரது மனைவியும், இந்திய ராஜாக்கள் ஜாதிவிட்டு ஜாதியில் விவாகம் செய்துகொள்ளுவதை அங்கீகரிக்க வில்லை என்று நான் கேள்விப்படுகிறேன். சுதேச மன்னர்கள் எனது அபிப்பிராயத்தையே கொண்டவர்கள் என்றும் தெரிகிறது. இப்படியெல்லா மிருக்கையில், எனது அபிப்பிராயத்தைப் புதுக் கோட்டை ஜனங்கள் அங்கீகரிக்கவில்லை என்று மிஸ்டர் பர்ன் சொல்வது ஆச்சரியமாக விருக்கிறது. ஹிந்துவாகிவிட முடியாத ஒருவர் பட்டத்துக்கு வருவதற்குப் புதுக்கோட்டை ஜனங்கள் சம்மதப்படும்படி அவர்கள் அவ்வளவு விஜாதியினராகி விட்டனர் என்று ருஜுக் காட்டவேண்டியது மிஸ்டர் பர்னுடைய பொறுப் பே. என் மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவைப்பற்றித் தாம் முடிவாகப் பேசிவிட்டதாக மிஸ்டர் பர்ன் நினைத்துக்கொண்டி ருக்கலாம். ஆனால் அது முடிவான வார்த்தையல்லவென்று நான் சொல்லுகிறேன். புதுக்கோட்டை ஜனங்களை அவர் மலைக்கு அழைத்துவிட்டார். அதற்கிணங்கி ஜனங்களும் முன்வந்து என் மீது பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்யும்படி ராஜாவைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அவர்களுடைய அபிப்பிராயத்தை யே நான் தெரிவித்தேன் என்பதை முன்னிட்டே அந்த உத்தர வை ரத்து செய்யும்படி அவர்கள் கேட்டுக்கொள்ள வேண்டும். நிர்ப்பந்தங்களினாலும், தட்டிக்கொடுப்பதாலும் நமக்கு இடையூறு களை மிஸ்டர் பர்ன் உண்டுபண்ணலாம். ஆனால் சீறி எழுந்த கடலைத் தனது துடைப்பத்தினால் தடுத்துவிட முயன்ற அம்மை யார் எவ்வளவு பலனடைந்தாரோ அவ்வளவு பலனைத்தான் மிஸ் டர் பர்ன் அடைவாரென்று நான் ஜோஸ்யம் சொல்லுகிறேன்."

இச் சமயத்தில் டவுன் ஹாலில் ஸ்ரீமான் சுப்பிரமண்ய சிவா அவர்கள் "ஹிந்து தர்மம்" என்ற விஷயத்தைக் குறித்து ஓர் பிரசங்கம் புரிந்தார். அப்பொழுது ஸ்ரீமான் K. லக்ஷ்மண சர்மா அவர்கள் தலைமை வகித்தார். ஸ்ரீமான் சிவா அவர்கள், மகாராஜா அவர்கள் ஹிந்து தர்மத்தை மீறி ஹிந்துவல்லாத ஓர் ஆஸ்திரேலிய மாதை மணம் புரிந்தது சரியல்லவென்றும், புதுக்கோட்டை ஜனங்கள் மகாராஜா அவர்கள் தமது திருமணத்திற்குப் பிறகு தமது மனைவியுடன் வந்தபொழுது வரவேற்பளித்தது சரியல்ல வென்றும் கூறினர். அந்தக் கூட்டத்தில் தலைமை வகித்த குற்றத்திற்காக ஸ்ரீமான் K. L. சர்மா அவர்கள் தமது உத்தியோகத்தையும், வக்கீல் தொழிலையும் தியாகம் செய்ய நேரிட்டது.

டவுன் ஹாலில் ஜனங்கள் கூடி மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி சம்பந்தமாய் செய்யப் பட்டிருந்த தேசப் பிரஷ்ட உத்தரவை மாற்றவேண்டுமென்று கொடுத்த மனுவிற்கு, அக்கோரிக்கைப்படி அப்பொழுது செய்ய இயலாதென்று மகாராஜா அவர்கள் உத்தரவு செய்துவிட்டதாக ரா-தர்பாரவர்களின் 2-6-1921 தேதியுள்ள 1921-ம் வருஷத்திய D. Dis 809/C நெ. உத்தரவு அக்கிராஸனர் மூலமாக மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டி காரியதரிசிக்குக் கிடைத்தது. அதைக் கீழே தருகிறோம்:—

True Copy of the Endorsement.

Proceedings of the Pudukkottai Darbar

D R. C./Dis No. 809/C of 1921 dated $\frac{2}{13}$-6-1921.

Read the following papers:—

Petition dated 14-2-21 from the President of the public meeting held in the Town Hall on 14-2-21 addressed to His Highness.

Also His Highness's commands dated 25—4—21.

ORDER

His Highness has perused the Resolutions and regrets that the minds of any members of the Public should have been so much perturbed. It appears to be a common feature of all the meetings that no discussion of the speech of Mr. Satyamoorthi was allowed; and while His Highness is glad that the matters so rashly dealt with by Mr. Satyamoorthi were not discussed by the Public, he is obliged to observe that in the

absence of some justification of Mr. Satyamoothi's views, it is not possible to urge that the order of externment was wrong. His Highness feels sure that the views expressed by Mr. Satyamoorthi are not entertained by more than a very small minority of the people; and that being so, the mischief likely to be caused by his promulgation of such opinions as if they were the considered views of the people at large made it necessary to ensure that no repetition of them should occur.

For these reasons, His Highness regrets that he cannot at present cancel the order of externment.

(Sd) A. R. Venkatraman
12—6—21.
for Darbar.

7-வது அத்தியாயம்.

இருள் படர்ந்த ராஜீய வானம்.

பிரதிநிதி சபை அங்கத்தினர்களும், மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டி மெம்பர்களும் புதுக்கோட்டை டவுன் ஹாலில் 7—8—1921ல் கூடி, (1) சமஸ்தான நிர்வாகத்தை திவானைத் தலைவராகக் கொண்ட ஒரு நிர்வாக சபையிடம் ஒப்படைக்க வேண்டுமென்றும், அச்சபைக்கு திவானைத் தவிர இரண்டு கௌன்ஸிலர்களிருக்க வேண்டுமென்றும், அவர்களுள் ஒருவர் பிரதிநிதி சபை மெம்பரான உத்தியோகஸ்தரல்லாத மெம்பர்களில் அச்சபையோரால் சிபார்சு செய்யப்படும் ஒருவரா யிருக்கவேண்டுமென்றும், (2) அந்த கௌன்ஸிலின் உத்தியோக கால வரை ஐந்து வருஷத்திற்கு மேற்படக்கூடாதென்றும், கௌன்ஸிலின் பிரஸிடெண்டாகிய திவானுக்குச் சம்பளம் மாதம் ஒன்றுக்கு ரூ 1000-க்கு அதிகப்படக் கூடாதென்றும், (3) பிரதிநிதி சபையின் அதிகாரம், அந்தஸ்து, அங்கத்தினர்களின் சங்கியை முதலியவற்றை விஸ்தாரப்படுத்த வேண்டுமென்றும், (4) சமஸ்தான

ராஜீய மாறுதல்கள் சம்பந்தமாய் ஜனங்களைக் கலந்துகொண்டு ஏற்பாடு செய்யவேண்டுமென்றும், (5) சமஸ்தான கையிருப்பு கிட்டத்தட்ட 40 லக்ஷ ரூபாய் இருப்பதை ஜன சவுகரியத்திற்கான வருவாயை அபிவிர்த்தி செய்யக்கூடிய வழிகளில் செலவு செய்ய வேண்டுமேயல்லாமல் பிறவகைகளில் உபயோகிக்கக் கூடாதென்றும், (6) ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் சம்பந்தமாய் பிறப்பிவித்திருக்கும் தேசப் பிரஷ்ட உத்தரவை மாற்ற வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். மேலும் இத்தீர்மானங்களை ராஜீய ஏஜெண்டவர்களுக்கும், இந்தியா கவர்ண்மெண்டாருக்கும், இந்தியா மந்திரியவர்களுக்கும் அனுப்பவேண்டியதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

அவ்வண்ணமே இத்தீர்மானங்கள் 1921-ம் வரு ஆகஸ்ட் மீ 17-உ இந்தியா மந்திரியவர்களுக்கும், மேன்மை தங்கிய ராஜப் பிரதிநிதியவர்களுக்கும், மேன்மை தங்கிய சென்னை கவர்னரவர்களுக்கும் அனுப்பப்பட்டன. தீர்மானங்களின் பிரதி ஒன்று சமஸ்தான பொலிடிகல் ஏஜெண்ட் Mr. U. ராம ராவ் அவர்களிடமும் கொடுக்கப்பட்டது. அடியிற்கண்ட தந்தி சமாசாரமும் ராஜப்பிரதிநிதியவர்களுக்கு 17-8-21ல் அனுப்பப்பட்டது:

"His Excellency Viceroy, Simla.

Pudukotah citizens respectfully urge claim to representative responsible Government. People kept completely dark. People most anxious State surplus being their money should be spent only for public utility. Rumours about mode of disposing surplus most disquieting. Deputation ready to wait on Excellency. Pray appointment time and place. Viswanathier, Secretary, Representatives' Association."

மேன்மை தங்கிய சென்னை கவர்னரவர்கள் 1921-ம் வரு செப்டம்பர் மீ 6-ந் தேதியுள்ள கடிதத்தின் மூலம் ஜனங்களின் தூதுகோஷ்டியைச் சந்திக்க இயலாதென்று ஜனங்களின் தூது கோஷ்டி காரியதரிசியாகிய ஸ்ரீமான் S. விசுவனாதய்யருக்குத் தெரிவித்துவிட்டார்.

1921-ம் வரு செப்டம்பர் மீ 9-ந் தேதி கூடிய சட்ட சபைக் கூட்டத்தில் ரா-தர்பாரவர்கள் பின்வருமாறு கூறினர்:—

"மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் இன்னும் இங்கிலாந்தில் தாமிருக்கிறார். அவர் எப்பொழுது சமஸ்தானத்திற்குத் திரும்பி வருவாரென்று சொல்ல முடியாத ஸ்திதியிலிருக்கின்றோமென்று கூற வியசனிக்கிறோம். மகா-ரா-ள-ஸ்ரீ மகாராஜா அவர்களுடைய

வும், சமஸ்தானத்தினுடையவும் எதிர்காலத்தைப்பற்றி நீங்கள் கொண்டிருக்கும் கவலையை நீங்கள் பல வழிகளில் காட்டியிருக்கிறீர்கள். உங்களுள் சிலர் இச்சபையில் அதைப்பற்றி கேள்விகளும் கேட்டிருக்கிறீர்கள். உங்களுக்கு யாதொரு தகவலும் கொடுக்கக்கூடாத நிலையிலிருப்பதைப்பற்றி வியஸனிக்கிறோம். எப்பொழுது சொல்லக்கூடுமென்றும் தெரிவிக்க முடியாது. ஹுஸூர் சமக்ஷம் ஏன் இங்கு வரவில்லையென்று தெரிந்துகொள்ள ஒருமிப்பாய் நீங்கள் கொண்டிருக்கும் ஆவல், மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமஸ்தானத்திற்குத் திரும்பி வந்து நிரந்தரமாய் வஸிப்பதற்குப் பிரதிகூலமாயுள்ள இடையூறுகளை விலக்குவதற்கு உதவி செய்ய உங்களுக்குள்ள விருப்பம், இச்சபையின் அங்கத்தினர்களேயன்றி சமஸ்தானப் பிரஜைகளெல்லோருக்கும் ஹுஸூர் சமக்ஷம் சமஸ்தானத்திலிருக்கவேண்டுமென்று கொண்டுள்ள அவா,—இவைகளெல்லாவற்றையும் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு நாங்கள் தெரிவித்திருக்கிறோம். முடிவு என்ன ஆகிறதென்பதை மிகுந்த பொறுமையுடன் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும்படி உங்களை வேண்டுகிறோம். இயல்பாய் உங்களுக்கு மனச் சஞ்சலமிருக்குமென்று எங்களுக்குத் தெரியும். என்ன ஆகப்போகிறதோவென்ற அக்ஞானத்திலும் குழப்பத்திலும் உங்களை வைத்திருப்பது யுக்தமில்லையென்றும், அப்படி வைத்திருப்பதினால் பலவிதமான வதந்திகளுக்கு இடமேற்படுகிறதென்றும் எங்களுக்குத் தெரியும். உங்கள் கவலையை எவ்வளவு சீக்கிரம் நிவர்த்தி செய்யலாமோ அவ்வளவு சீக்கிரத்தில் நிவர்த்தி செய்ய எங்களுக்கு மிகவும் சந்தோஷமாயிருக்கும்.

* * *

ஹுஸூர் சமக்ஷத்தையும், சமஸ்தானத்தையும் பிடித்த ஸங்கடங்களெல்லாம் சீக்கிரம் விலகி, நாம் இப்பொழுதிருக்கும் சந்தேக நிலைமை நீங்கி, மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுடையவும், சமஸ்தானத்தினுடையவும் க்ஷேமத்தைப்பற்றி ஜனங்கள் கொண்டுள்ள யதார்த்த விருப்பம் சீக்கிரம் கைகூடுமென்ற நம்பிக்கையை வெளியிட்டுக் கூறி இப்பிரஸங்கத்தை முடிப்போமாக!"

1921-ம் ஸ்ரீ மகாத்மா காந்தியவர்கள் தமிழ் நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்கையில் இச்சமஸ்தானத்தின் தலைநகராகிய புதுக்கோட்டை மகாஜனங்கள் ஓர் உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுக்க ஏற்பாடு செய்தார்கள். ஆனால், ரா-தர்பாரவர்கள் மகாத்மா அவர்கள் சமஸ்தானத்திற்குள் வரக்கூடாதென்று தடை உத்தரவு பிறப்பித்து, அந்த உத்தரவை மகாத்மா அவர்களுக்கு சமஸ்தான போலீஸ் சூபரின்டென்டென்டு மூலம் அனுப்பவே, மகாத்மா அவர்கள் தமது பிரயாண மார்க்கத்தை மாற்றிக்கொள்ள நேரிட்டது. ஆனால் புதுக்கோட்டை நகர சபையில் ஜனங்களின்

பிரதிநிதிகளான மெம்பர்கள் காரைக்குடிக்குச் சென்று 22-9-21ல் அங்கு மகாத்மா அவர்களுக்கு வேறொரு உபசாரப் பத்திரிகையைப் படித்துக் கொடுத்தார்கள். அது பின்வருமாறு:—

மகாத்மா காந்தியவர்களுக்கு

புதுக்கோட்டை நகரவாசிகளுக்காக

அடியில் கையொப்பமிட்டவர்கள் காரைக்குடியில் கொடுத்த

நல்வரவுப் பத்திரிகை.

மகிமை பொருந்திய மகாத்மா அவர்களே,

செல்வத்திலும், ஆண்மையிலும், தூய்மையிலும், உண்மையான நாகரீகத்திலும் மேல் நாடுகள் இப்போதும் அடையாத மேன்மையை அடைந்திருந்த நமது பாரத மாதா, சொல்லுதற்கரிய பல காரணங்களால் தற்போது மிகவும் க்ஷீண தசையை அடைந்திருப்பது நம்மெல்லோருக்கும் தெரிந்ததே. அப்படிப்பட்ட நிலைமையில் நமது பிராண பதமான இந்திய மாதா முன்னிலும் அதிகமான மேன்பாடு அடையவேண்டியதென ஈசன் கருணை புரிந்து தங்களைப்போன்ற உத்தம புருஷனை இந்திய தேசத்தில் அவதரிக்கச் செய்து, நமது தேசத்தையும், தேசத்தினரையும் கைதூக்கிவிடக் கட்டளையிட்டிருக்கிறார் என்று எல்லா ஜனங்களும் நிச்சயமாய் நம்புகிறார்கள்.

தாங்கள் எங்கள் நாடாகிய புதுவை வழியாக செட்டி நாட்டிற்குப் போக ஏற்பாடு செய்திருப்பதாக நாங்கள் கேள்வியுற்று அளவில்லாக் களிகூர்ந்தோம். தாங்கள் உட்கொள்ளும் காற்றை நாங்களும் உட்கொள்ளவும், தாங்கள் எங்கள் நாட்டில் காலடி வைக்கவும், பின்னும் தங்களைக் கண்ணாரதரிசனம் செய்து உய்யவும் நாங்கள் பாக்கியம் செய்தவர்களாகளோம் என்று நினைத்து நினைத்து மகிழ்வுற்றோம். ஆனால் எங்கள் ஊழ்வினை மலையிலும் பருத்ததாய் எங்களைத் தாக்கி, எங்கள் கருத்தை வீணாக்கிவிட்டது. அப்படிப்பட்ட துர்ப்பாக்கியர்களாகிய எங்கள் மீது கருணை கூர்ந்து, நாங்கள் இங்கு வந்து கூறும் நல்வரவை ஏற்றுக்கொள்ளும்படி வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு

புதுக்கோட்டை உத்தியோகஸ்தர்களல்லாத

முனிஸிபல் சங்கத்தின் மெம்பர்களாகிய

(ஒப்பம்.) ஜி. சுந்தரேச சாஸ்திரி.

" எஸ். விசுவநாதய்யர்.

" ஜி. சுந்தரேசய்யர்.

22—9—21. " கே. பாலசாமி செட்டியார்.

இவ்வாறு செய்ததற்காக ஈ-தர்பாரவர்கள் அந்த மெம்பர்களை முனிஸிபல் சபையிலிருந்தும், பிரதிநிதி சபையிலிருந்தும் விலக்கி, வேறு ஸ்தானங்களுக்கு அவர்கள் மறுபடி தெரிந்தெடுக்கப்படுவதற்கு அர்ஹதையற்றவர்களாவார்களென்றும் உத்தரவு செய்தார்கள்.

இதையொட்டி ஈ-தர்பாரவர்கள் ஸ்ரீமான் S. விசுவனுதய்யரவர்களுக்கு விடுத்த உத்தரவையும், அவர் அதற்குக் கூறிய சமாதானத்தையும் இங்கு தருகின்றோம். அவைகளிலிருந்து காரிய காரணங்கள் செவ்வனே துலங்கும்:—

"The Darbar have learnt that you participated in the presentation to Mr. Gandhi at Karaikkudy on the 22nd instant of an address purporting to be on behalf of the citizens of Pudukkottai, and that you signed the same address in your quality of a non-official member of the Municipal Council.

Mr. Gandhi is an avowed enemy of the British Government under whose suzerainty and protection the State exists. For this reason he was prevented from passing through the State. Your conduct in signing an address to Mr. Gandhi after you knew that the resolution of the Municipal Council passed at its meeting on the 18th instant had been cancelled by the State Council, appears to the Darbar to be objectionable.

You are therefore requested within a week from this date to show cause, if any in writing, why you should not be removed from membership in the Municipal Council and the Representative Assembly and declared ineligible for re-election."

(sd.) R. Krishnamachari.
27-9-21.
For Darbar.

இதற்கு Mr. S. விசுவனுதய்யர் பின் வருமாறு எழுதினர்:—

"With reference to your Proceedings dated 26-9-21 asking me to show cause why I should not be removed from the Municipal Council and the Representative Assembly, I tender the following statement:—

I do not know whether the British Government consider Mahatma Gandhi as their avowed enemy. The

opinion of the Pudukotah Darbar that Mahatma Gandhi is the avowed enemy of the British Government was not mentioned in their Proceedings cancelling the resolution of the Municipal Council regarding the presentation of an address of welcome to the Mahatma.

Municipalities in British India freely give addresses to the Mahatma and the British Government have not till now raised any objections to the same. Many great writers both in Europe and America have declared that Mahatma Gandhi is one of the world's greatest men and I am one among millions of people both in and out of Government service who humbly admire the Mahatma for those precious qualities of head and heart which even his worst enemies cannot deny him. My friends and myself gave an address to him on the express and written desire of some of the citizens of this place and we gave it to him not because he was considered by any of us as an "avowed enemy of the British Government" but only because we felt as we feel even now that he is one of the greatest men of the world.

We signed our names in the address describing ourselves as non-official Councillors just to indicate our status and to describe ourselves. It was not on behalf of the Municipal Council that the address was presented to the Mahatma, nor did we present the address in our capacity as Municipal Councillors. Further, the address of welcome which was proposed to be given by the Municipal Council and the presentation of which was forbidden by the State Council was a different thing altogether, in a different language, by a different body and proposed to be given at a different place.

I can only say that I participated in the giving of the address in my own individual capacity and on behalf of the citizens of this place who authorised us to present the address to Mahatmaji. I believe I have no reason to think that in doing so, I have done an unworthy act.

As for my membership in the Municipal Council and the Representative Assembly, I consider that my connection with the two bodies has already ceased.*

(Sd.) S. Viswanatha Aiyar,
28—9—21.

இரண்டாவது மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமான் S. சத்திய மூர்த்தி அய்யரவர்கள் சமஸ்தானத்திற்குள் பிரவேசிக்கக்கூடா தென்று பிறப்பிக்கப்பட்ட தேசப்பிரஷ்ட உத்தரவு, 5வி மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டி அக்கிராஸனர் ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரிகள் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டது,—இவை போன்ற காரியங்கள் ஜனங்களின் உற்சாகத்தைத் தளரச் செய்து விட்டன. ஆயினும், ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரிகள், ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் முதலியவர் கள் தளரா முயற்சி யெடுத்துக்கொண்டு, அடிக்கடி பற்பல ஊர் களுக்கும் முக்கியமாய் கீரனூருக்கும் சென்று, ஆங்காங்குள்ள பிரமுகர்களுக்கு விஷயங்களின் தன்மையை எடுத்துக் கூறி, எந்தக் காரியத்திலும் இடையூறுகளும், தவறுதல்களும் உண்டா வது ஸம்பாவிதமான தாதானென்றும், அதனால் அதைரியப்படா மலும், மனம் சலிக்காமலும், உற்சாகத்துடன் தங்களுடைய காரியங்களில் ஈடுபட்டுக் காரிய ஸித்திக்கு ஏற்றபடி உழைப்பது தான் புத்திசாலிகளின் காரியமென்றும் அறிவு புகட்டி ஜனங் களுக்கு உற்சாகத்தை ஊட்டி, மகாநாடுகள் மீண்டும் தழைத் தோங்க ஏற்பாடுகள் செய்து வந்தார்கள். அவர்களுடைய விடா முயற்சியின் பயனாக கீரனூர் மகாஜனங்கள் அடுத்த மகாநாட்டைச் சீக்கிரம் நடத்த ஏற்பாடு செய்வதாக ஒப்புக்கோண்டார்கள்.

8-வது அத்தியாயம்.

மூன்றுவது மகாநாடு.

சமஸ்தானப் பிரஜைகளின் மூன்றுவது மகாநாடு கீரனூரில் 1921-ம் வரு அக்டோபர் மீ 20, 21-ம் தேதிகளில் நடைபெற் றது. அந்த மகாநாட்டில் நடந்த நடவடிக்கைகள் அடியில் வரு மாறு:—

---

*Mr. S. Viswanatha Aiyar had already sent in his resignations before the Darbar called for his explanation.

ஓர் முகமதிய கனவான் தன்னுடைய சொந்த நிலத்தை மகாநாடு கூடுவதற்காக கொட்டகை யமைக்க விட்டுக்கொடுத்தார். ஆயிரம் ஜனங்கள் வரை தங்கியிருப்பதற்குப் போதுமான காவணம் வெகு சீக்கிரம் போடப்பட்டது. முக்கியமாய் முகமதிய வாலிபர்களைக்கொண்ட தொண்டர் படையொன்று திரட்டிப் பயிற்றிவைக்கப்பட்டது.

மூந்தின மகாநாட்டைப் போல கீரனூர் மகாநாடும் விமர்சையாய் நடைபெறுமாவென்ற சந்தேகம் ஒழிந்து, சமஸ்தானத்தின் நாற்புறத்திலிருந்தும், நெடுந்தூரத்திலிருந்துகூட திரள்திரளாக ஜனங்கள் வந்து டெலிகேட்டுகளாகச் சேர்ந்தார்கள்.

சபைத் தலைவர் 1921-ம் வரு அக்டோபர் மீ 20-ம் உ மாலை 7-மணிக்குப் புதுக்கோட்டையிலிருந்து கீரனூர் வந்து சேர்ந்தார். அவரை ஜனங்கள் உற்சாகத்துடன் வரவேற்று, ஊர்வலம்செய்து, மகாநாட்டுப் பந்தலுக்கு அழைத்துச் சென்றார்கள். நேரமாகி விட்டபடியால் நடவடிக்கைகள் உடனே ஆரம்பமாகின. வரவேற்புக் கமிட்டித் தலைவராகிய மகா-ள-ள-ஸ்ரீ உடையப்ப செட்டியாரவர்கள் தமிழ்ச் சுவையோடு கூடிய தமது உபசரணைப் பத்திரத்தைப் படித்தார். காரிய நிகழ்ச்சிக் கிரமத்தில் டெலிகேட்டுகளின் அனுமதியின் பேரில் மாறுதல் செய்யப்பட்டு அக்கிராஸனரின் பிரசங்கத்தை மறு நாள் பிற்பகலில் படிப்பதாக முடிவு செய்யப்பட்டது. இரவு போஜனம் ஆன பிறகு மகாநாடு மறுபடி 9-மணிக்குக் கூடி விஷயாலோசனைக் கமிட்டி யொன்றை நியமனம் செய்தது. முந்தின மகாநாட்டிற்கிப்பால் நடந்த முக்கியமான சம்பவங்களை முன்னிட்டும், அப்பொழுதிருந்த ராஜீய நிலைமையை உத்தேசித்தும் கமிட்டியின் காரியங்களுக்கு அதிக நேரம் பிடிக்குமென்றும், பலமான சர்ச்சைகளிருக்குமென்றும் எதிர்பார்த்தபடி காரியக் கமிட்டிக் கூட்டம் இருந்தது. இரவு 1-மணி ஆகியும் எட்டுத் தீர்மானங்கள்தான் சர்ச்சை செய்து முடிவு செய்யப்பட்டன. இந்தத் தீர்மானங்கள்தான் முக்கியமானவை. ஆதலால் கமிட்டி நல்ல வேலை செய்த திருப்தியோடு கலைந்தது. மறுநாட் காலையில் 8-மணிக்கு மறுபடி விஷயாலோசனைக் கமிட்டி கூடி, 11-மணிவரை உட்கார்ந்திருந்து வேலைகளை முடித்தது. அன்றினம் வெள்ளிக்கிழமையானபடியால் முகமதியர்கள் தொழுவதற்குச் சென்றுவிட்டார்கள். பிற்பகல் 2-மணிக்கு மகாநாடு கூடிற்று. ஜனப் இப்ராஹிம் லெவையவர்கள் மகா-ள-ஸ்ரீ C. H. ஸ்வாமிநாத சாஸ்திரியவர்களை அக்கிராசனராகப் பிரேரேபிக்க, அப்பிரேரணை சபையோரால் ஆமோதிக்கப்பட்டுப் பலத்த கரகோஷங்கள் ஒலிக்க, அவர் அக்கிராசனத்தில் அமர்ந்தனர். ஜனப் காஜா மொய்தீன் என்ற உள்ளூர் முகமதிய கவியொருவர், மகா-ள-ள-ஸ்ரீ

மகாராஜா அவர்களுக்கும், அக்கிராசனர் அவர்களுக்கும் வாழ்த்துப் பாட்டுகள் பாடினர். பிறகு பிரார்த்தனையும், தேசிய கீதங்களும் நடந்தன.

மகாநாட்டின் காரியங்கள் இனிது நடைபெற வேணுமாய்த் தங்களுடைய நல்லெண்ணத்தைத் தெரிவித்து ரங்கூனிலிருந்து டாக்டர் A. வேணுகோபால் நாயுடு அவர்களிடமிருந்தும், பர்மாவிலுள்ள நாட்டுக்கோட்டை நகரத்தார்களின் சார்பாக ஸ்ரீமான் அண்ணாமலை செட்டியார் அவர்களிடமிருந்தும், முந்தின மகாநாட்டின் அக்கிராசனரான ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தியவர்களிடமிருந்தும், சுதேசமித்திரன் பத்திராதிபர் ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களிடமிருந்தும் வந்த தந்திகளும், கடிதங்களும் படிக்கப்பட்டன. பின்னர் அக்கிராசனர் தமது பிரசங்கத்தைப் படிக்கத் தொடங்கினர். அடிக்கடி காரகோஷங்கள் முழங்கின. பிறகு சுமார் 25 தீர்மானங்களில் முக்கியமானவைகளை மட்டும் மகாநாட்டில் சர்ச்சை செய்து நிறைவேற்றிவிட்டு, முன் மகாநாட்டில் செய்யப்பட்டிருந்த தீர்மானங்களெல்லாம் அக்கிராசனரால் பிரேரேபிக்கப்பட்டு ஒருமிப்பாய் நிறைவேற்றப்பட்டன.

ஸ்ரீமான் C. H. ஸ்வாமிநாத சாஸ்திரியவர்கள் தமது பிரசங்கத்தைத் தொடங்குகையில் அடியில் வருமாறு கூறினர்:—

"ஜனங்களின் பிரதிநிதிகள் கூடியிருக்கும் இக்கூட்டம் சமஸ்தான சரித்திரத்தில் மூன்றுவது கூட்டமாகும். ராஜீய வானம் இருண்டிருக்கிறது. மேகங்கள் புதிது புதிதாகத் திரண்டுகொண்டிருக்கின்றன. அடுத்தடுத்து மின்னலும் இடியும் மாறி மாறி வந்துகொண்டிருக்கின்றன. என்ன ஆகுமோ தெரியவில்லை. பொழுது விடிந்தால், அடக்குமுறைக்கான இந்தப் பாணம் பிரயோகமாகிவிட்டது, இந்தப் பாணம் தயாரிப்பிலிருக்கிறதென்று கேள்விப்படுகிறோம். சரித்திரத்தைக் கவனிப்பாரில்லை; நல்ல புத்தியைக் கேட்பாரில்லை. அதிகார வர்க்கத்தின் அணுக்கத்தைப் பெற்ற அனுமதேயர்களும் கோட் சொல்லிகளும் தங்களைப் பெரிய மனிதர்களாக நினைத்துக்கொண்டு, "நான் இப்படிச் செய்துவிட்டேன், அப்படிச் செய்துவிட்டேன்" என்று வீண் பிரதாபம் பேசிக்கொண்டு ஆடம்பரமாய்த் திரிகிறார்கள். இதற்குள், ராஜீய மாறுதல்கள் ஏற்படப்போவதாய் எங்கும் முழக்கமாயிருக்கிறது. அது பலருக்கு விமோசனம் ஏற்பட்டதென்ற நம்பிக்கைக்கும், சிலருக்கு ஏக்கத்திற்கும் ஹேதுவாயிருக்கிறது. அதைப்பற்றி நமது அதிகாரிகள் கலக்கமாயிருக்கிறார்களென்று தெரியவந்தபோதிலும், விஷயம் எப்படியிருக்கிறதென்று யாருக்கும் தெரி

யாதபடி மூடுமந்திரமா யிருந்துவருகிறது. என்ன ஏற்பாடுகள் செய்யப்போகிறார்களென்று விவரம் தெரிவிக்கும்படி நாம் ஒல மிட்டும் சென்னை கவர்ன்மெண்டாரும், இந்தியா கவர்ன்மெண்டார வர்களும் மௌனம் சாதித்து வருகிறார்கள்; சூழ்ந்திருக்கும் இருளை அகற்றுமலிருந்து வருகிறார்கள். நம்மையெல்லாம் குழந் தைகளாகப் பாவித்து, நம்முடைய க்ஷேம லாப சம்பந்தமான ஏற்பாடுகளை நம்முடன் கலக்காமல் ரஹஸ்யமாகச் செய்துகொண் டிருக்கிறார்கள். நீங்கள் இத்தருணத்தில் என்னை மகாநாட்டின் தலைவராயிருந்து காரியம் நடத்தச் சொல்லுகிறீர்கள். நான் ஒரு மாலுமி போலிருக்கிறேன். கப்பலைக் கற்பாரைகளிலும் திட்டுத் திடல்களிலும் மோதாமல் ஸாவதானமாய் நடத்தவேண்டும். நீங்கள் எதிர்பார்க்கிற திட்டத்திற்கு நான் இல்லாவிட்டால் அந்தக் குற்றம் உங்களதுதான்."

இவ்வாறு ஆரம்பம் செய்து அக்கிராசனரவர்கள், ஜனங் களின் குறைகளுக்கெல்லாம் மூலகாரணம் மகா-ரா-ரா-ஸ்ரீ மகா ராஜா அவர்கள் சமஸ்தானத்தில் தங்கியிருந்து ராஜ்ஜியபாரம் நடத்தாததுதானென்றும், சமஸ்தானப் பிரஜைகள் மகாராஜா அவர்களிடமும், பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரிடமும் ஆழ்ந்த விசுவாஸம் படைத்தவர்களென்றும் கூறிவிட்டு, முந்தின மகா நாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவரைப் பயமுறுத்தியதையும், அக்கிராசனர் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யருக்கு விரோத மாய் தேசப்பிரஷ்ட உத்தரவு பிறப்பித்ததையும் கண்டித்தும், ஜனங்களின் ராஜீய உணர்ச்சியைப்பற்றி ஸ்டேட் சூபரின்டென் டென்ட் துரையவர்கள் பேசின தோரணையைக் கண்டனம் செய் தும், மகாத்மா காந்தியவர்கள் சமஸ்தானத்திற்குள் பிரவேசிக்கக் கூடாதென்று தடுத்தது சரியல்லவென்றும் கூறிவிட்டு, ராஜீய மாறுதல்கள் சம்பந்தமாய் இருந்துவரும் வதந்திகளைப்பற்றித் தமது அபிப்பிராயங்களை விரித்துரைத்து, தர்பார் ஏற்பாட்டை மாற்றிவிட்டு மகா-ரா-ரா மகாராஜா அவர்கள் சமஸ்தானத்தில் தங்கியிருந்து ஹிந்து தர்மத்தையும், அனுஷ்டானத்தையும் தழுவி ஆக்ஷி புரிவதே சிறந்ததென்றும், அன்னியர்கள் ஆக்ஷி புரிவது ஜனங்களுக்குச் சற்றும் பிடிக்கவில்லையென்றும் கூறி, முனிஸி பாலிடி, நியாய இலாகா முதலியவைகளிலுள்ள குறைபாடுகளையும் எடுத்துக் காட்டி, பெரிய உத்தியோகங்களுக்கு காலவரைக் கிரமம் ஏற்படுத்த வேண்டியதின் அவசியத்தையும் எடுத்துக் காட்டினர். அப்பொழுதிருந்த தர்பார் ஆக்ஷியில் ஜனங்களுக்கு நம்பிக்கை இல்லை என்று செய்யப்பட்ட தீர்மானம் மகாநாட்டின் முக்கிய மான தீர்மானங்களில் ஒன்றாகும்.

தீர்மானங்களெல்லாம் இரவு 7-மணிக்குச் செய்யப்பட்டு முடிந்தன. அக்கிராசனர் தமது முடிவுரைப் பிரசங்கத்தைச்

செய்து, மகாநாட்டைச் சிறப்பாய் நடத்தியதற்காகவும், அவர்களெல்லோரும் காட்டிய உற்சாகத்திற்காகவும் மகாநாட்டில் கூடியிருந்த ஜனங்களையும், வாலண்டியர்களையும், அவர்களின் கப்தானையும் பாராட்டி வந்தனம் செய்தார்; பிறகு உபசரணைக் கமிட்டித் தலைவருக்கும், கமிட்டி மெம்பர்களுக்கும், அவர்கள் செய்திருந்த விமர்சையான ஏற்பாடுகளுக்காக வந்தனம் செய்யப்பட்டது. பின்னர் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கும், மகாத்மா காந்தியவர்களுக்கும் வாழ்த்துப் பாக்கள் பாடப்பெற்றன. மகாநாடு செவ்வனே நடந்ததற்கு விசேஷ உதவியாயிருந்தது கீரனூர் முகமதியர்கள் என்பது குறிப்பிடத்தக்க விஷயம். அடுத்த மகாநாடு ஆலங்குடியில் கூடவேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்பட்டது. மகாநாடு இரவு 7-30 மணிக்கு முடிவுக்கு வந்தது. தலைவர் மோட்டாரில் கடைவீதி வழியாக அழைத்துச் சென்று வழியனுப்பப்பட்டார்.

இம்மகாநாடு முடிந்த சில தினங்களுக்குப் பிறகு, ஆங்கிலத்தில் ஹாஸ்ய ரஸத்துடன் எழுதப்பட்ட மகாநாட்டின் வரலாறு ஒன்று மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் பிறந்த தினக் கொண்டாட்டத்தின் பொழுது அச்சிட்டு எல்லோருக்கும் வழங்கப்பட்டது பலருக்கு ஞாபகமிருக்கும். அதில் மகாநாட்டில் கலந்து கொண்டவர்களை சுகபுரிச் சண்டை (battle of Sukpur) விஷயமாக மகாநாடு நடந்ததாயும், அதில் பால கங்காதரர், பாலாஜி விஸ்வநாத், டாக்டர் சுப்ரூ, மெஸபடோமியக் கியாதி வாய்ந்த கர்னல் பிச்சிலு (Col. Pitchulu of Mespot fame)—இவர்களுடைய பேச்சுகள் குறிப்பிடப்பட்டிருந்தன. உத்தியோகத்தில் ஸ்தான உயர்வு பெறுவதற்காக அதிகார வர்க்கத்தினர்களின் பிரீதியைச் சம்பாதிக்க திருஷ்டியுள்ள ஒரு உத்தியோகஸ்தர் இதைச் சிரமப்பட்டு எழுதி அச்சிட்டு, எல்லோருக்கும் வழங்கியதாக அப்பொழுது பிரஸ்தாபிக்கப்பட்டது.

9-வது அத்தியாயம்.

மனு தயாரிப்பும் மற்ற முயற்சிகளும்.

ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர் 1922-ம் வரு பிப்ரவரி மீ 12-ம் உ ஸ்ரீமான் S. விசுவனாதய்யருக்கு எழுதிய ஓர் கடிதத்

தை இங்கு தருகின்றோம். அதிலிருந்து ராஜீய நிலைமையைப் பற்றிய பிரச்னை என்ன ஸ்திதியிலிருந்ததென்று விளங்கும்.

"You ask in despair whether there is any hope of Responsible Government being introduced into the State. I am afraid I can give you no immediate hope in that direction and may I add, without meaning any offence, that the people of Pudukotah deserve no better. But still, I am doing my best. It is now definitely settled that the Raja's son is not to be the heir and that the Raja is not to return to the State. The latest idea is to make him a titular absentee Raja for the term of his natural life, to have a Council of Regency in Pudukotah and to defer the decision of the question of succession. What that form of interim Government is to be does not seem to be definitely settled yet. If the people of Pudukotah will wake themselves from their sleep and demand atleast the Montagu—Chelmsford Reforms in the State and agitate the matter, there is some hope for you. I hope you will do your best in the matter."

அதன் சாராம்சம் என்னவென்றால்:—

"சமஸ்தானத்தில் பொறுப்பாஷி ஏற்படுவதற்கு இடமுண்டாவென்று மனவாட்டத்துடன் என்னை வினவுகிறாய். அந்த மாதிரி ஏற்பாடு உடனே ஏற்படுமென்று நம்பிக்கை கொள்ள முடியாதென்று நினைக்கிறேன். ஆனாலும் நான் ஒன்று சொல்வேன்; அதென்னவென்றால், புதுக்கோட்டை ஜனங்கள் அதற்குப் பாத்திரமானவர்களில்லை யென்பதுதான். இருந்தாலும் நான் என்னால் இயன்றதைச் செய்துகொண்டிருக்கிறேன். ராஜா அவர்களின் குமாரருக்குப் பட்டமில்லையென்று ஸ்பஷ்டமாக முடிவு செய்யப்பட்டுவிட்டது; ராஜாவும் சமஸ்தானத்திற்குத் திரும்பி வரப்போகிறதில்லை. கடைசியாக என்ன யோசனை யென்றால், மகாராஜா அவர்களை ஆயுள் பரியந்தம் பெயரளவில் ராஜாவாக வைத்து விட்டுப் புதுக்கோட்டையில் ராஜாவுக்குப் பதிலாக நிர்வாகம் நடத்த ஓர் ரீஜென்ஸி சபையை ஏற்படுத்தி, வார்ஸ் பாத்யதைப் பிரச்னையைப் பிற்பாடு கவனித்துக்கொள்ளலாமென்று தள்ளி விடலாமென்பதுதான். மத்தியில் ஏற்படும் நிர்வாகம் என்ன மாதிரி இருக்க வேண்டியதென்பது இன்னும் ஒரு வகையாக நிஷ்கரிஷை செய்யப்பட்டதாகத் தெரியவில்லை. புதுக்கோட்டை ஜனங்கள் தங்கள் உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டு, சமஸ்

தானத்திற்கு மாண்டேகு—செம்ஸ்போர்டு சீர்திருத்தத்தை யனுஸரித்தாவது சீர்திருத்தங்கள் வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு கிளர்ச்சி செய்தால் ஏதாவது கொஞ்சம் நம்பிக்கை கொள்ளலாம். உன்னுலியன்றதை நீ செய்யாமலிருக்க மாட்டா யென்ற நம்பிக்கை எனக்கு உண்டு."

1922-ம் வரு மார்ச் மீ 4-ம்வ கூடிய பிரதிநிதி சபையில் ஈ-தர்பாரவர்கள் செய்த பிரசங்கத்தின் அடியிற்கண்ட பாகம், சமஸ்தான சம்பந்தமான பிரச்னை எந்த நிலைமையிலிருந்தென்பதையும், அது சம்பந்தமாய் என்ன பிரயத்தனங்கள் செய்யப்பட்டன வென்பதையும் தெரிக்குகிறது:—

"கடைசியாய் ஐரோபாவிலிருந்த வந்த சமாசாரத்தினுல் நமது மஹாராஜா ஸமக்ஷம் பிரான்ஸ் தேசத்தின் தக்ஷிண பாகத்திலிருந்ததாகத் தெரியவருகிறது. நீங்களெல்லாரும் காண ஆவல் கொண்டிருக்கும் மன்னர் பெருமானும், இராணி ஸாஹேப் அவர்களும் குமாரருடன் சௌக்கியமாயிருக்கிறார்களென்று தெரிவிக்கக் கூடியவர்களாயிருக்கிறோமென்று சந்தோஷிக்கிறோம்.

"இப் பிரஸ்தாபிகளில் அரசியலில் நடந்திருக்கும் முக்கியமான அம்சங்களைப்பற்றிச் சுருக்கமாய்க் கூறுவது வழக்கம். அவ்வாறு செய்யப் புகுமுன், இப்போது உங்களெல்லோருடைய மனதிலும் முதலெண்ணமாயிருப்பதும், வெகுவாய் உங்கள் சிந்தையை விட்டகலாததுமான ஓர் விஷயத்தைப்பற்றிச் சற்று பிரஸ்தாபிக்க வேண்டும். ஒரு வருஷத்துக்கு முன் நாம் இங்கு சந்தித்தபொழுது மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் சமக்ஷம் ஒரு முக்கியமான காரியத்தை முன்னிட்டுச் சென்னையிலிருந்து டில்லிக்கும், அங்கிருந்து ஐரோபாவுக்கும், சமஸ்தானத்திற்குக்கூட விஜயம் செய்ய இயலாதபடி அவ்வளவு அவசரமாய்ச் செல்ல நேரிட்டதென்று நாங்கள் கூறியது உங்கள் ஞாபகத்திலிருக்கும். அந்த முக்கியமான காரியத்தின் தன்மையைப்பற்றி உங்களுக்கு நாங்கள் தெரிவிக்கக்கூடிய ஸ்திதியில் இல்லையென்று வியசனித்தோம். சென்ற வருஷம் செப்டம்பர் மாதத்திலும் நாங்கள் மறுபடியும் அவ்வண்ணமே வியசனித்து பொறுமையுடனிருக்கும்படி உங்களைக் கேட்டுக்கொண்டோம். இப்போது உங்களைச் சந்திக்கும் போதுகூட உங்களுக்குத் தெரிவிக்கக்கூடிய சமாசாரமேதும் இல்லாமலிருக்குமென்று சென்ற வருஷம் மார்ச் மாதத்திலாவது, செப்டம்பர் மாதத்திலாவது நாங்கள் எள்ளளவும் நினைக்கவில்லை. ஆயினும் நாம் இன்னும் அதே ஸ்திதியில்தான் இருக்கிறோம்; உங்களுக்கு அந்த விஷயத்தைப்பற்றி ஏதேனும் தெரிவிக்க அசக்தர்களாயிருக்கிறோம்; ஏனெனில் மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் ஸமக்ஷத்தின் உத்தேசம் எவ்விதம் முடிவுபெறுமென்பதைப்

பற்றியும், இனி அரசியல் முறை எவ்விதம் ஏற்படுமென்பதைப் பற்றியும் நடந்துகொண்டிருக்கும் வியவகாரங்கள் என்ன ஸ்திதியி லிருக்கின்றனவென்று எங்களுக்குத் தெரியவில்லை. மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் சமக்ஷம் சமஸ்தானத்திற்குத் திரும்பி வரவேண்டு மென்று ஜனங்களுக்குள்ள பேராவலையும், பிரஸக்தி வாய்த்தால் மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் சமக்ஷம் இவ்விடம் விஜயம் செய்து, தன் பிரஜைகளை நேரில் ஆண்டு ஆதரிப்பதற்கு இடையூறுகத் தோன்றுபவைகளை வேரோடு களைவதற்கான உதவி புரிய தங்க ளுக்கு ஆற்றலுண்டென்ற உறுதியான நம்பிக்கையையும் பல மாய் எடுத்துக்காட்டி யெழுதிய விண்ணப்பமொன்று வெகு பேர் களால் கையொப்ப மிடப்பெற்று பொலிடிகல் ஏஜெண்ட் துரைய வர்களுக்குச் சென்ற வருஷம் டிஸம்பர் மாதத்தில் அனுப்பலாயிற் றென்பது உங்களெல்லோருக்கும் தெரிந்திருக்கலாமென்று நினைக்கிறோம். தங்கி மூலமாயும், மற்றப்படியும் மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் ஸமக்ஷத்திற்கும், மதராஸ் கவர்ன்மெண்டுக்கும், மேன் மை தங்கிய ராஜப்பிரதிநிதியவர்கள் சன்னிதானத்துக்கும், இந்து தேச கார்ய நிர்வாக மந்திரியவர்களுக்கும், நமது அரசர் சமஸ் தானத்திற்குத் திரும்பி வந்துவிடவேண்டுமென்று சகல வகுப்பு ஜனங்களுக்குமுள்ள பேராவலை எடுத்துக்காட்டி அனுப்பப்பட்ட விக்ஞாபனங்களைப்பற்றியும் இங்கு பிரஸ்தாபிக்க வேண்டியதில்லை. இவ்விஷயத்தில் உங்களுக்குள்ள அபிலாஷைகளிலெல்லாம் பூர்ண மான ஆதரவு எங்களுக்கும் உண்டென்று நீங்கள் நிச்சயமாய் வைத்துக்கொள்ளுங்கள். உங்களுக்கு வெகு கவலை கொடுக்கிற ஐயப்பாடு எங்களுக்கும் எவ்வளவோ வருத்தத்தை விளைவிக் கிறது. அது ஓர் இடைவிடா இடுக்கணையும், தாங்கொணாத் துய ராயுமிருக்கிறது. மனக் கவலை கொண்ட உங்களுக்கு நாங்கள் கொடுக்கக்கூடிய ஆறுதல் இதுதான். அதென்னவெனில், நாங் கள் நினைக்கிறபடியே, இவ்வளவு கால தாமதமாவதெல்லாம் ஹுஜூர் ஸமக்ஷத்தினிடம் ஜனங்களுக்குள்ள மெய்யன்பினின்று உதித்த அவர்களின் விருப்பமானது எற்றபடி மேலதிகாரிகளி னால் கவனிக்கப்படுவதினால் இருக்கலாமென்று வைத்துக்கொள்ள லாமென்பதுதான். அந்தப்படியிருந்து, உங்களுடைய மனோரத மும் கைகூடுமாயின், வெகு நாளாய் நாமெல்லாம் பட்ட கவலையும் விசாரமும் ஒரு பொருட்டாகத் தோன்றுததுந் தவிர அக்கவலை களைப் பொறுத்தற் காதாரமான உங்களுடைய முயற்சியையும் நீங்கள் ஒரு பொருட்டாக எண்ணீர்கள்."

அந்தப் பிரசங்கத்தின் இறுதியில் ரா-தர்பாரவர்கள் கூறிய அடியிற்கண்ட விஷயமும் கவனிக்கற்பாலது:—

"உங்களுடைய கஷ்ட நிஷ்டூரங்கள் அவ்வளவு அதிகமாயில்லையென்று நாங்கள் சொல்ல வரவில்லை; இந்தியாவின் இதர பாகங்களிலுள்ள கஷ்டங்களோடு ஒப்பிடுமளவில் இங்குள்ளவை சகிக்கக்கூடியவையென்று மட்டில் உறுதியாய்ச் சொல்லுகிறோம். இதைப்பற்றி நீங்களே யோசித்துப் பார்த்துக் கொள்ளுவீர்களானால், நீங்கள் ஒரே தீர்வுக்குத்தான் வர நேரும்; அதாவது, உங்களுடைய பெருங் குறைகளெல்லாம் மகா-ரா-ரா-ஸ்ரீ ஹுஜூர் ஸமக்ஷம் இன்னும் இல்லாததுபற்றியே யென்பதுதான். அக்குறை நீங்க இடமுண்டானால் மற்றக் குறைகளும் தாமே ஒழிந்துவிடும் அங்ஙனமே ஆகுவதாக!"

சமஸ்தானத்துப் பிரஜைகளின் நிலைமையைப்பற்றி மேன்மை தங்கிய ராஜப்பிரதிநிதியவர்களின் பொலிடிகல் செக்ரிடயவர்களிடம் எடுத்துச்சொல்லும்படி ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் சென்னை ஹைகோர்ட்டின் மாஜி நீதிபதியும், இந்தியா சட்டசபை அங்கத்தினரில் ஒருவருமான ஸ்ரீமான் T. V. சேஷகிரி அய்யரவர்களைக் கேட்டுக் கொண்டிருந்தார். அவரும் தம்மாலியன்றதைச் செய்வதாக ஒப்புக்கொண்டிருந்தார். ஆனால் அவர் ஸ்ரீமான் S. விசுவநாதய்யரவர்களுக்குப் பின்வருமாறு எழுதிவிட்டார்:—

Legislative Assembly. Simla.

4—4—22.

Dear Mr. Viswanatha Aiyar,

It looks as if I can do nothing to help you. As soon as I came from Bombay, I heard that Sir John Wood had left to be in attendance on the Prince till his departure. I wrote to him when he came back. On the day my letter reached him, he handed over charge to Mr. Thompson, as he had taken leave for 8 months. I do not know Mr. Thompson. I am sorry, therefore, I am not able to do anything. There is a destiny which shapes Pudukotah's ends. You probably, have all to go through suffering, as we are all doing. We must be doing the right thing trusting in God-

Yours sincerely,

(sd) T. V. Seshagiri.

10-வது அத்தியாயம்.

ராஜீய மாறுதல்களும் ரீஜென்ஸி ஸ்தாபனமும்.

பராசக்தியாகிய ஸ்ரீ பிருகதம்பிகையின் திருவருளால் தனித் தமிழ் ராஜ்ஜியமாகிய புதுக்கோட்டை விளங்கவும், தொண்டைமான் மரபு விளங்கவும், தமது அடியார்களின் பாபங்களையெல்லாம் தஸ்கரித்து அவர்களின் "உள்ளங் கவரும் கள்வன்" ஆகிய சிவபெருமானின் தொண்டர்களாகிய கள்ளர்களின் குலதிலகராக 1922-ம் ஹ ஜூன் மீ 23உக்குச் சரியான துந்துபி ஹ ஆனி மீ 9உ சுக்ரவாரமும் ரோஹிணி நக்ஷத்திரமும் கூடிய சுபதினத்தில் மேலரண்மனை துரை மகா-ரா-ரா-ஸ்ரீ ராமச்சந்திர தொண்டைமான் ஸாஹேப் அவர்களின் திருக்குமாரராக ரா-ராஜ கோபாலத் தொண்டைமானவர்கள் திருவவதரித்தார்.

1922-ம் ஹ செப்டம்பர் மீ 9-ம் உ பிரதிநிதி சபை கூடியது. ஸ்டேட் கௌன்ஸில் மெம்பர்களும், பிரதிநிதி சபை அங்கத்தினர்கள் 15 பேர்களும், சமஸ்தான உத்யோகஸ்தர்கள் முக்கியமானவர்கள் பலரும் கூடியிருந்தார்கள். அப்பொழுது, ஸ்டேட் சூபரின்டென்டென்ட் Mr. சிட்னீ பர்ன் துரையவர்கள் தாம் தர்பார் கூடும் சபா மண்டபத்திற்கு வருவதற்கு ஒரு மணி நேரத்திற்கு முன், அதாவது பிற்பகல் 1-15 மணிக்கு பொலிடிகல் ஏஜென்ட் துரையவர்களிடமிருந்து கடிதம் வந்துவிட்டதாயும், ஆதலால் தாம் எழுதித் தயாராக வைத்துக் கொண்டிருந்த பிரஸங்கம் சில பாகங்களில் மாற்றப்பட வேண்டுமென்றும், அவர்கள் தான் கூறியதிலிருந்து ஊகித்துக்கொள்ளக்கூடிய விஷயங்களைத் தவிர வேறொன்றும் சொல்வதற்கில்லையென்றும், விவரம் கூடிய சீக்கிரத்தில் பிரஸித்தஞ் செய்யப்படுமென்றும் கூறினார்.

இச்சமயத்தில் Mr. பர்ன் துரையவர்களின் நிர்வாகத்தின் குண தோஷங்களைப்பற்றி "ஹிந்து" பத்திரிகையில் ஸ்ரீமான் S. விசுவநாதய்யரவர்களாலும், ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரியரவர்களாலும் எழுதப்பட்ட மதிப்புரைகள் வந்தன. அப்பொழுது தஞ்சையிலிருந்த ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்கள் M. A., B. L. ஸ்ரீமான் S. விசுவநாதய்யருக்கு 6—10—1922-ல் எழுதிய அடியிற்கண்ட கடிதம் இங்கு கவனிக்கத்தக்கது:—

"I perused with great interest your letter which appeared in the "Hindu" of yesterday on the work of Mr. Burn in Pudukotah. It is a correct estimate of the man and his work in the State. Allow me to congratulate you on the same. Mr. Sundaresa Sastri's contribution on the same topic is also very interesting and his views of the man are quite proper. Please convey my congratulations to him.

I trust that the next conference in the State will be a success. Whatever the new constitution of the State is to be, you must agitate for frequent changes in the personnel of the higher offices in the State.

To my mind the fixity of tenure of the persons holding the highest offices in the State is the cause of all the troubles of the subjects of the State.

Let interested sycophants get up a party for Mr. Burn. I hope sensible persons will join you in your work for the moral, material and political advancement of the people of the State."

இதன் தாத்பரியமாவது:—

"Mr. பர்ன் துரை புதுக்கோட்டையில் செய்த வேலையைப் பற்றி நேற்று தினம் "ஹிந்து" பத்திரிகையில் நீங்கள் எழுதியிருந்த கடிதத்தைப் படித்தேன். அது மிகவும் ரஸமாயிருந்தது. அது அவரையும், அவர் சமஸ்தானத்தில் செய்த வேலையையும் பற்றிய சரியான மதிப்புரை. அக்கடிதம் நன்றாக எழுதப்பட்டிருப்பதைப்பற்றி உங்களுக்கு என் பாராட்டைத் தெரிவிக்கிறேன். Mr. சுந்தரேச சாஸ்திரியரும் அதே விஷயத்தைப்பற்றி எழுதியுள்ள சங்கதிகளும் மிகவும் ருசிகரமாயிருந்தன. Mr. பர்ன் துரையைப்பற்றி அவர் கூறியுள்ள அபிப்பிராயங்களும் சரியானவைகளே. அவருக்கும் என் பாராட்டைத் தெரிவிக்கவும்.

சமஸ்தானத்தின் அடுத்த மகாநாடு வெற்றிகரமாய் நடக்குமென்று நினைக்கிறேன். சமஸ்தானத்தின் புதிய ராஜீய அமைப்பு எப்படியிருந்தபோதிலும், சமஸ்தான உயர்தர உத்தியோகங்களிலிருப்பவர்கள் அடிக்கடி மாற்றப்படவேண்டுமென்று கிளர்ச்சி செய்ய வேண்டும்.

என் அபிப்பிராயத்தில் சமஸ்தானப் பிரஜைகளின் சகல கஷ்டங்களுக்கும் காரணம், சமஸ்தானத்தில் உயர்தர உத்தியோ

கங்களிலிருக்கும் நபர்கள் சனமன்னியில் அவ்வுத்தியோகங்களில் இருப்பதுதான்.

அக்கரையுள்ள தப்பு ஸ்தோத்திரக்காரர்கள் Mr. பர்ன் துரைக்கு பிரிவு உபசாரம் கூற ஏற்பாடு செய்யட்டும். கல்வு ணர்ச்சியுள்ளவர்கள், சமஸ்தான ஜனங்களின் ஒழுக்கம், சுகாதாரம், ராஜீய முன்னேற்றம் இவற்றின் அபிவிர்த்திக்காக நீங்கள் செய்து வரும் வேலையில் உங்களுடன் உழைப்பார்களென்று நம்பு கிறேன்."

ராஜீய மாறுதல்களை அறிவிப்பதற்காக தர்பார் ஹாலில் 1922-ம் வரு அக்டோபர் மீ 23-ம்உ ஓர் தர்பார் நடந்தது.

அப்பொழுது அடியிற்கண்ட ராஜ சாஸனப் பிரகடனம் ர-திவான் அவர்களால் படிக்கப்பட்டது:—

புதுக்கோட்டை ஸமஸ்தானத்திற்கு ராஜராகிய ஹிஸ் ஹைனெஸ் பிரஹதம்ப தாஸ் ராஜா ஸர் மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் பஹதர், ஜி. ஸி. ஐ. ஈ. அவர்களால் பிறப்பி விக்கப்பட்ட 'ப்ராக்ளமேஷன்' என்னப்படும் ராஜ சாஸனப் பிரகடனம்.

1922-ம் வரு அக்டோபர் மீ 23-ம் தேதி பிறப்பிவிக்கப் பட்டது.

"புதுக்கோட்டை ஸமஸ்தானத்தைச் சேர்ந்த பிரபுக்களுக் கும், உத்தியோகஸ்தர்களுக்கும், இதர பிரஜைகளுக்கும்.

ராஜ காரியத்தைச் சேர்ந்ததும், ஸ்வகீயமானதும், கவனிக் கில்லையென்று தள்ள முடியாததுமான காரணங்களை முன் னிட்டு, நாம் இனி இந்தியாவை விட்டு வெளியே நிரந்தரமாக வாஸம் செய்ய வேண்டியதுதானென்ற தீர்மானத்திக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்று உங்களுக்கு மிக்க வியஸனத்துடன் தெரிவிக்கிறோம்.

நம்முடைய பிரஜைகளின் க்ஷேமத்தைக் கவனிக்கையில், இனி இச்சமஸ்தானம், ராஜப்பிரதிநிதியால் பரிபாலனம் செய் யப்பட வேண்டியதுதான் உசிதமானது. நம்முடைய ஸகோ தரரும், பிரகிருதம் திவானுமான மகா-ள-ள-ஸ்ரீ விஜயரெகுநாத துரை ராஜா அவர்கள் ராஜப் பிரதிநிதியாவார். அவர் இப் பொழுது முதல், நாம் இதுவரை செலுத்திவந்த அதிகாரங் களைச் செலுத்தி வருவார். மகா-ள-ள-ஸ்ரீ மதராஸ் கவர்ன் மெண்டாரால் அனுப்பப்பட்ட ஒரு உத்தியோகஸ்தர் தற்காலம் திவானுயிருப்பார். ஆனல், அதிக காலம் செல்வதற்குள் நம்

முடைய பிரஜைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு அதிகமான வர்களை திவானுடன் சேர்த்து ஒரு சபையாக ஏற்படுத்த சாத்தியப்படுமென்று நம்புகிறோம்.

புதுக்கோட்டை ஜனங்கள் ஸமஸ்தான ராஜ வம்சாத்தாரிடத்திலும் பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரிடத்திலும் விசேஷ ராஜ பக்தி வாய்ந்தவர்களென்பது உலகப் பிரசித்தமானது. ஆனதால், ரீஜண்ட் அவர்களின் ஆக்ஞைகளை நம்முடைய பிரஜைகள் யாவரும் மறுத்துரையாமலும் விசுவாஸத்துடனும் நிறைவேற்றுவார்களென்று எதிர்பார்க்கிறோம்."

ராஜ முத்திரை.

பின்பு பொலிடிகல் ஏஜெண்ட் துரையவர்களாகிய Mr. மக்குவீன் அடியில் வருமாறு பேசினார்:—

"ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களே, சீமாட்டிகளே, கனவான்களே,

ஐயா, இந்த சுபப் பிரயுக்தத்தில் தங்களுக்கு சென்னை கவர்னராகிய மேன்மை தங்கிய வில்லிங்டன் பிரபுவிடமிருந்து வந்த செய்தியைத் தெரிவிக்கும் சந்தோஷமான கடமை எனக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. மேன்மை தங்கிய கவர்னர் அவர்கள் புதிய அரசியல் ஏற்பாட்டில் தங்களுக்கு ஏற்படும் பளுவான பொறுப்புகளைத் தாங்கள் ஏற்றுக்கொள்ளும்போது தமது ஆசீர்வாதங்களையும், தாங்கள் ராஜ்யபாரம் செய்வதில் சமஸ்தானப் பிரஜைகளெல்லோரும் விசுவாஸத்துடன் தங்களை ஆதரிப்பார்களென்ற தமது நம்பிக்கையையும், ராஜ்ஜியபாரமானது ஜனங்களின் க்ஷேமம் ஒன்றையே கருத்தாகக்கொண்டு நடத்தப்படுமென்ற தமது உறுதியான எண்ணத்தையும் தெரிவிக்கும்படி விரும்புகிறார்கள்.

மகாராஜா அவர்களுக்கும், புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கும் வெகு நாளாகவும், வெகு விசுவாஸத்துடனும் உழைத்திருக்கும் தங்களுக்கு என்னுடைய ஸொந்த ஸந்தோஷத்தையும் தெரிவித்துக்கொள்ள இந்த ஸந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளுகிறேன். ஜனங்களும், நீங்கள் இதற்குமுன் செய்துள்ள அனுதாபத்துடன் கூடின ஆக்ஷிக்கு உங்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறார்கள்; அவர்கள் இனியும் உங்களுடைய ஆக்ஷியில் நம்பிக்கையும் ஒத்துழைப்பும் காட்டுவார்களென்று நம்புகிறேன். தங்களுக்கு சௌக்கியமும், நீண்ட ஆயுளும், தங்கள் ஆக்ஷியில் புதுக்கோட்டைக்கு க்ஷேமமும் ஏற்பட வேணுமாய்க் கடவுளைப் பிரார்த்திக்கிறேன்."

அதன்பின் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் தாம் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்குப் பெரிதும் நன்றி

பாராட்டக் கடமைப்பட்டிருப்பதை எடுத்துக் கூறிவிட்டு, சென்னை கவர்ன்மெண்டாருக்கும், மேன்மை தங்கிய வில்லிங்டன் பிரபுவுக்கும், பொலிடிகல் ஏஜெண்ட் Mr. மக்குவீன் துரையவர்களுக்கும் தமது வந்தனத்தைத் தெரிவித்த பின்னர் பிரஜைகளைப் பார்த்துப் பின்வருமாறு கூறினர்:—

"பிரஜைகளே,

இந்த ஸமஸ்தானத்தில் பிறந்து வளர்ந்து இருபத்திநாலு வருஷம் வேலை பார்த்த என்னை உங்களுக்கு நன்றாய்த் தெரியும். உங்களிடத்தில் பக்ஷமும் அன்பும் என்னைக் காட்டிலும் யாருக்கும் இராது என்று நான் சொல்லுவேன். இதனால் நான் ஏதோ கௌரவம் பாராட்டுகிறதாக எண்ணக்கூடாது. நீங்கள் சிரமத்துடன் உழைத்துக்கொடுக்கும் பணத்தை வாங்கிக்கொண்டு உங்களிடம் பக்ஷமில்லாத மனிதன் அசத்திய புருஷனுவான். நீங்கள் இதுவரையில் அன்புடனும் விசுவாஸத்துடனும் உதவி புரிந்ததற்கு நான் உங்களுக்கு மிக்க வந்தனமளிக்கிறேன். நான் இதுவரையில் தனிமையாக வேலை பார்த்து வரவில்லை. எங்கள் வேலையால் உங்களுக்கு லாபமோ நஷ்டமோ, நன்மையோ தீமையோ, சந்தோஷமோ துக்கமோ, அதனால் எங்களுக்கு திதாப்போ வசவோ, இவைகளில் எனக்கு ஒரு பாகமுண்டு. இதுவரையில் நான் வேலை முறையில் ஏதோ தப்பிதங்கள் செய்திருப்பேன். அவைகள் மனப்பூர்வமான தப்பிதங்கள் இல்லையென்றும், தெரியாத்தனத்தால் ஏற்பட்ட பிழைகள் என்றும் நான் நிச்சயமாய்ச் சொல்லுவேன். இப்பொழுது ஈசுவரச் செயலால் ராஜ பார முழுவதும் என்பேரில் சுமர்ந்தது. இந்த அரசாக்ஷியை சரிவர நடத்திவர உங்கள் ஒத்தாசை அவசியம். இதுவரையில் என்னை நடத்திவந்த பிரகாரம் இனிமேலும் விசுவாஸத்துடனும் அன்புடனும் உதவி செய்துவர வேணுமென்று உங்களை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஈசுவர சம்மதமாயும் உங்கள் நன்மையையே கோரி என்னால் இயன்ற மட்டும் உங்களுக்கு சந்தோஷகரமாயும், British Government ஆருக்கு திருப்திகரமாயும், என் மனச்சாக்ஷிக்கு விரோதமன்னியிலும் இந்த ராஜ்ய பரிபாலனத்தை நடத்தி வருவேன். இவ்விதம் ஈசுவரன் கிருபை செய்யவேண்டும். நமது மகாராஜாவானவர் நம்மை விட்டுப் பிரிந்திருக்கக் காலம் வந்தது. இது ஆறாத் துக்கம். இப்படி நடக்க நாம் ஒரு தப்பிதமும் செய்யவில்லை. மேலும் இவ்விதம் நடக்கக்கூடாதென்று நாம் எடுத்துக் கொண்ட பிரயத்தனமெல்லாம் பலன்படவில்லை. இது தெய்வச் செயல். அதற்கு நாம் என்ன செய்யலாம். இந்தக் குறைவை ஒரு கையால் நமக்குச் செய்த ஈசுவரன், மற்றொரு கையால்

உங்களுக்குச் சௌக்கியத்தையும், சந்தோஷத்தையும், மேன் மேலும் செல்வத்தையும் கொடுக்க வேண்டுமாய் நான் வணக்கத் துடன் பிரார்த்திக்கிறேன்."

பின்பு ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் Mr. பர்ன் துரையவர் களைப் பற்றிப் புகழ்ந்து பேசிவிட்டு, தமது உத்தியோகஸ்தர்க ளனைவரையும் பாராட்டிப் பேசி, அவர்கள் தனக்கும் புதிய திவான் Mr. குன்னுனி மேனனுக்கும் உதவி யளித்து வருவார்களென்ற நம்பிக்கையையும் தெரிவித்து விட்டு, Mr. மக்குவீன் துரையவர் களுக்கு மறு முறை வந்தனம் செய்தார்.

மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் மாகஸ்திமை தங்கிய ராஜச் சக்ரவர்த்தியவர்களுக்கு மும்முறை கரகோஷம் செய்யும்படி கேட்டுக்கொள்ள, அந்தப்படி கரகோஷம் செய்யப்பட் டது.

பின்பு Mr. பர்ன் துரையவர்கள் ரீஜெண்ட் ஸாஹேப் அவர் களுக்கு மும்முறை கரகோஷம் செய்யும்படி வேண்ட, அந்தப் படியே எல்லோரும் மனப்பூர்வமாய் கரகோஷம் செய்தார்கள். இத்துடன் தர்பார் கலைந்தது.

ஸ்ரீமான் S. விசுவனுதய்யரின் யோசனையின் பேரில் மகா நாட்டின் சார்பாக நிரந்தர கமிட்டியார் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களுக்கு ஓர் உபசாரப் பத்திரம் கொடுப்பதாக 9–11–1922ல் தீர்மானம் செய்தார்கள். அவ்வண்ணமே ஓர் உபசாரப் பத்திரம் தயாரிக்கப்பட்டு, அது மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட ஸாஹேப் அவர்களுக்கு 13–11–1922ல் படித்துக் கொடுக்கப்பட்டது. அது பின்வருமாறு:—

Congratulatory Address to

M. R. Ry. Vijaya Raghunatha Durai Rajah Avl., B. A., Regent Saheb of the Pudukotah State

by the Standing Committee of the People's Conference, Pudukotah State.

MAY IT PLEASE YOUR HONOUR,

We, the Members of the Deputation appointed by the Standing Committee of the People's Conference, take this opportunity of congratulating you, Sir, on the happy and auspicious event of your installation as the Regent, and expressing our grateful appreciation of the kind, graceful and noble sentiments expressed by you on the 23rd October last. On our part, we beg leave to

assure you, that the people of Pudukotah will always faithfully and loyally co-operate with you in all that is conducive to the prosperity and well-being of His Highness' subjects.

We also take this opportunity of conveying through you, Sir, our sincere and heartfelt prayers for His Highness' long life and prosperity. While expressing our deep regret at the unfortunate inability of His Highness the Maharajah to return to the State, we feel it our first and foremost duty to pay to His Highness our respectful homage and express our sincere gratitude for the announcement made in the Proclamation that ere long one or more of His Highness' subjects will form a Council along with the Dewan in the general administration. Nothing can give greater pleasure to the people than this wise and just recognition of the salutary principle of associating the people's representatives in the administration, thus paving the way for Responsible Government.

As representatives of the people, we feel it our duty to respectfully bring to your kind attention that the removal of the ban of externment on our renowned countryman Mr Satyamurti Aiyar, B. A., B. L., the throwing open to election two seats of the Executive Council of the Dewan proposed to be formed, the reconstitution of the Representative Assembly on a wider basis with powers and privileges enhanced and enabled to deal effectively with Legislation, Taxation and Finance, the reform of the Chief Court, the complete separation of the Judicial from the Executive, the election of a non-official Chairman to the Town Municipality, the recalling of the rule imposing a disability on candidates for the Municipal election, the exclusive appointment of the native-born subjects of His Highness to all posts in the State,-these are some of the most pressing questions awaiting an early and sympathetic solution at your hands.

In conclusion, we pray that Almighty God will be pleased to shower His choicest blessings on you and

grant you long life and prosperity that you may be enabled to carry on the administration to the greatest good, contenment and happiness of His Highness' subjects.

மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜென்ட் ஸாஹேப் அவர்கள் அதை அன்புடன் ஏற்றுக்கொண்டு, அவ்வுபசாரப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட பற்பல விஷயங்களையும் அனுதாபத்துடன் கவனிப்பதாக வாக்களித்தனர். முன் சம்பவங்கள் யாவற்றையும் மறந்துவிட்டு ராஜ்ஜியபாரத்தை நிர்மலமாக ஆரம்பம் செய்வதாக, "I shall begin with a clean slate" என்று கூறினர்.

11-வது அத்தியாயம்.

நாலாவது மகாநாடு.

1922-ம் ஹு நவம்பர் மீ 17-ம் உ புதுக்கோட்டை சமஸ்தானத்துப் பிரஜைகளின் 4-வது மகாநாடு ஆலங்குடியில் நடைபெற்றது.

சுதேசமித்திரன் பத்திராதிபரான ஸ்ரீமான் எ. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்கள் மகாநாட்டில் அக்கிராஸனம் வகிக்க ஒப்புக்கொண்டிருந்தார். ஆனல் அவர் குமாரனுக்குத் திடீரென்று கடுமையான நோய் ஏற்பட்டதினல், அவர் மகாநாட்டில் தலைமை வகிக்க இயலாமற் போய்விட்டது. ஆதலால் உள்ளூரிலிருந்து ஒருவரைத் தலைவராகத் தெரிந்தெடுக்க நேரிட்டது. அதன் பேரில் ஸ்ரீமான் S. விசுவனுதய்யரவர்கள் அக்கிராஸனுதிபதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார். உபசரணைக் கமிட்டித் தலைவர் ஜனப் சா. க. காதர் இபுறுகிம் ராவுத்தர் அவர்களின் வரவேற்புப் பிரஸங்கம் படிக்கப்பட்டது. பின்பு ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்களும், ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்களும் அனுப்பிய செய்திகள் படிக்கப்பட்டன. அவைகள் பின் வருமாறு:—

புதுக்கோட்டை 4-வது மகாநாட்டுக்கு ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தியின் செய்தி.

அன்பார்ந்த சகோதரர்களே!

புதுக்கோட்டை தர்பாரின் தேசப்பிரஷ்ட உத்திரவு இன்னும் அமுலில் இருப்பதால், உங்களனைவரையும் கண்டு களிக்க

வும், என்னுலான ஊழியத்தை அச்சமஸ்தானத்துக்குச் செய்ய வும் நான் பாக்யம் பெறவில்லே. அதைக்குறித்து நான் மிகுதியும் வருந்துகிறேன். மேற்படி பிரஷ்ட உத்திரவைப் பிறப்பிக்கும்படி நேர்ந்த சந்தர்ப்பங்கள் மாறுபட்டிருப்பதால் அவ்வுத்திரவும் தானு கவே ரத்து செய்யப்பட்டுப் போகவேண்டும். அங்ஙனம் ரத்து செய்யப்பட்டு, எனது ஜீவாதார உரிமைக்கேற்பட்ட இடையூறு நீங்கி, எனது ஜன்ம பூமிக்கு வரக்கூடிய நாளே நான் எதிர்பார்த் தக் கொண்டிருக்கிறேன்.

ஆனல் இதெல்லாம் சொந்த விஷயம். முந்திய மகாராட் டிற்குப் பிறகு அடிப்படையான ராஜாங்க மாறுதல்கள் ஏற்பட்டி ருக்கின்றன. ஆயினும் அம்மாறுதல்களேக் குறித்து சமஸ்தான ஜனங்கள் கலந்து கொள்ளப்படவில்லே யென்பது பலருக்கும் வருத்தமுண்டுபண்ணும். புதிய அரசியல் சட்டத்தைப்பற்றி இங்கெதுவும் நான் விவாதிக்கப் போவதில்லே. ஆனல் ஏற்கெனவே யிருந்த சிவிலியன் சூப்ரென்டெண்டண்டு போய், சமஸ்தானத்தை ஆளுவோர் ஊரிலில்லாக் குறையும் நீங்கியதைப்பற்றி உங்களே அவசியம் பாராட்டவேண்டும். ரீஜண்டு வைத்துத்தான் ஆக வேண்டு மென்றால் தற்போதைய நியமனம் சிரேஷ்டமான தென்றுதான் சொல்லவேண்டும். ரீஜண்டு சாஹிப் இச்சமஸ் தான வாசி. உங்கள் ராஜீய அபிலாஷைகளில் நிச்சயம் அபிமானம் கொண்டவராகவே யிருக்கவேண்டும். அவருடைய முதலாவது பிரசங்கம் நம்பிக்கை தரக்கூடியதாகவே யிருக்கிறது. திருஷ் டாந்தமாக அடியிற்கண்ட பாகங்களேக் குறிப்பிடலாம்:—

"இதுவரையில் நான் வேலேசெய்த முறையில் ஏதோ தப்பி தங்கள் செய்திருப்பேன். அவைகள் மனப்பூர்வமான தப்பித மில்லேயென்றும், தெரியாத்தனத்தால் ஏற்பட்ட பிழைகளென் றும் நிச்சயமாய்ச் சொல்வேன்.....ஈசுவர சம்மத மாயும், உங்கள் நன்மையையே கோரி என்னுல இயன்றமட்டும் உங்களுக்கு சந்தோஷகரமாயும்.....என் மனச்சாட்சிக்கு விரோதமன்னியில் இந்த ராஜ்ய பரிபாலனத்தை நடத்தி வரு வேன்."

இத்தகைய தாராள புத்தியுடன் கூடிய உறுதி மொழிப்படி, ரீஜண்டு சாகிப் நடந்து கொள்வாராயின், முந்திய ராஜாங்க முறை யில் ஏற்பட்ட அடக்கு முறை முதலானவை நிச்சயம் ஒழிந்து போகக்கூடும்; ஜனங்களுக்கு ராஜ்ய நிர்வாகத்தில் அதிக அதிகா சம் கட்டாயம் கொடுக்கப்படும்; முற்போக்கான திருத்தங்கள் செய்யப்படும்; அப்படிச் செய்தால் உங்களுடைய நன்றிக்கு அவர் என்றைக்கும் பாத்திரமாயிருப்பார்.

உங்களுடைய கடமை ஒன்றுதான். கொஞ்சங்கூட சந்தேகத்துக் கிடமில்லாமல் உங்களுடைய கோரிக்கைகளைத் தயார் செய்வதில், எல்லா அடக்கு முறைகளும் ஒழிந்துபோக வேண்டுமென்றும், நிர்வாகத்தில் தாராளமாக ஜனங்களை சம்பந்தப்படுத்தக் கூடிய சீர்திருத்தங்களே தேவையென்றும் கண்டிப்பாகத் தெரிவித்துவிடவேண்டும். சட்டதிட்டத்துக் கடங்கிய எல்லா வழிகளிலும் கிளர்ச்சி செய்து அக்கோரிக்கைகள் நிறைவேறும்படியும் செய்ய வேண்டும். உங்கள் லட்சியம் நியாயமான லட்சியம். உங்களுக்குள் ஒற்றுமை மட்டும் இருக்கும்பட்சத்தில் அந்த லட்சியம் நிச்சயம் கை கூடி விடும். கை கூடும்படி கடவுள் அநுக்கிரகிப்பாராக.

சென்னை
15—11—22 } (ஒப்பம்) எஸ். ஸத்தியமூர்த்தி.

ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்கார் அவர்களின் செய்தி.

சகோதரர்களே!

என்னுடைய குமாரனுக்கு திடீரென்று கடுமையான தேக உபாதை ஏற்பட்டுவிட்டதால் நான் ஒப்புக்கொண்ட கடமையைப் பூர்த்தி செய்யவும், உங்களுடைய மகாநாட்டில் தலைமை வகிக்கவும் அசக்தனாகிவிட்டேன். நீங்கள் எனக்கு மகத்தான கௌரவத்தை அளித்திருந்தீர்கள்; உங்களுடைய சமஸ்தான நிர்மாண முறையில் விசேஷ மாறுதல் ஏற்பட்டும், உங்களுடைய எதிர்கால வாழ்வை முக்கியமாக பாதிக்கக்கூடிய விஷயங்களில் உங்களுக்குத் தெரியாமலும் உங்களைக் கலந்துகொள்ளாமலும் உங்களுடைய தர்பாரும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாரும் ஏகோபித்துத் தீர்மானம் செய்யவுமிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் உங்களுடைய நடவடிக்கைகளில் கலந்துகொள்ள நான் மிகுந்த ஆவலுடையவனாக விருந்தேன். ஆயினும் நான் வரமுடியாமற்போன காரணங்களிலிருந்து நீங்கள் என்னை மன்னிப்பீர்களென்றும், என்னால் உங்களுக்கு அசவுகரியம் ஏற்பட்டிருந்தும் மகாநாட்டை நடத்தி, திருப்திகரமாக அதன் நடவடிக்கைகளை முடித்து வைப்பீர்களென்றும் நான் நம்புகிறேன்.

சமஸ்தானத்திலில்லாத அரசரின் பெயரால் ஒரு சூப்பரின்டெண்டும் ஒரு சபையும் நிர்வாகத்தை இது வரையில் நடத்தி வந்ததைவிட அரசர் ஒரு பிரதிநிதியை நியமனம் செய்திருப்பதும், அவருக்குதவியாக ஒரு நிர்வாக சபை ஏற்படுவதாக விருப்பதும் முற்போக்கான முறையென்று பலருக்குத் தோன்றலாம்.

ராஜாவானவர் சமஸ்தானத்திற்கு வெளியாகவே இருந்து வந்தால் ஏற்பட்டுவந்த அசௌகரியமானது ராஜாவிற்குரிய சர்வாதிகாரங்களுடன் கூடிய பிரதிநிதி நியமிக்கப்பட்டிருப்பதால் குறையக் கூடும்.

ஆனால் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கும், உங்களுடைய அரசருடைய பிரதிநிதிக்கும், இனி ஏற்படவிருக்கும் நிர்வாக சபைக்கும் எவ்விதம் அதிகாரம் பிரிவினைசெய்து கொடுக்கப்படப் போகிறதென்று தெரிகிறவரையிலும், இந்தப் புதிய ஏற்பாட்டின் பலனாக வரிகொடுப்போர் மீது பணப்பொறுப்பு எவ்வளவு வரையில் சுமருமென்று தெரியும் வரையிலும், நிர்வாக முறையிலேயும் புதிய ஏற்பாடு திருப்திகரமானதாக விருக்குமென்று நீங்கள் தீர்மானித்துக்கொண்டு விடலாகாது. ராஜாவின் சகோதரரும், நீண்ட காலமாக அவருடைய திவானுகவிருந்து வந்தவருமான ரீஜெண்ட் அவர்கள் தம்முடைய பதவியை ஏற்றுக்கொண்ட காலத்தில் ஜனங்கள்பால் மிகுந்த உணர்ச்சியுடனும் அனுதாபத்துடனும் பேசியிருப்பதையும், கடவுளுக்குப் பயந்து நியாயமான வழியில் நிர்வாகத்தை நடத்திவர ஒப்புக்கொண்டிருப்பதையும் நானறிவேன். அவருடைய அறிக்கையை நீங்கள் மனப்பூர்வமாகப் பாராட்டியிருப்பீர்கள்; ஆனால் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை அனுசரித்து சமஸ்தானத்தை நிர்வகித்துவர உத்தேசித்திருப்பதாகக் குறிப்பாகவோ, சூசகமாகவோ, ராஜாவின் விளம்பரத்திலாவது, பிரதிநிதியின் பிரசங்கத்திலாவது சொல்லப்பட்டிருப்பதாக நீங்கள் கண்டிருக்கமாட்டீர்கள். எனக்கு அதுவே பிரதான விஷயம். வெறும் வேஷமாக இல்லாமல் ஜனங்களை உண்மையில் நிர்வாகத்தில் சம்பந்தப்படுத்திக் கொள்ளும் நோக்கமுடைய நிர்மாண முறையை தர்பார் உங்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்காதவரையில் சமஸ்தானத்திலில்லாத ராஜாவிற்கு பர்த்தியாக நிர்வாகத்தை நடத்துவதற்காகச் செய்யப்படும் ஏற்பாடுகளும், சிருஷ்டிக்கப்படும் நிர்வாக இயந்திரங்களும் முடிவில் முறிந்து போய்விடுமென்றே நான் சொல்வேன். உங்களுடைய அரசர் சாசுவதமாகவே தம்முடைய அதிகாரங்களை ஒரு பிரதிநிதியிடம் ஒப்புவித்த சமயத்தில், நேர்முகமாகவும், வேறு வழியிலும் தாம் 36 வருஷ காலமாக ஆண்டுவந்தும், பக்கத்திலுள்ள பிரிட்டிஷ் பிரதேசங்களிலுள்ள பிரஜைகளைவிடக் கல்வியிலும், ராஜீய ஞானத்திலும் விசேஷ முற்போக்கடைந்துமுள்ள தமது பிரஜைகளுடைய பாத்தியதைகளையும், சுதந்தரங்களையும் அவர் கவனிக்காமற்போனது மிகவும் வருந்தத்தக்கதாகும். வெகு காலமாக ஊரில்லாத அரசருக்கு பதிலாய் அவருடைய பிரதிநிதிகளாக வேறு சிலரால் ஆளப்பட்டுவந்த பிரஜைகள் முடிவிலும் ஒரு பிரதிநிதியின் நிர்வாகத்திற்குள்ளேயே விடப்படுவதும், அவரு

டைய ஆக்ஞைகளுக்குக் கீழ்ப்பட்டும், அவருடைய உத்திரவுகளை பக்தி பூர்வமாக நிறைவேற்றி வைத்தும் வரவேண்டுமென்று அரசர் ஆக்ஞாபித்திருப்பதும் கஷ்டமான நிலைமைதான். அரசரிடத்திலும், அரச குடும்பத்தாரிடத்திலும், உங்களுக்கிருந்து வரும் விசுவாசத்தையும் பக்தியையும் இவ்விதச் செய்கையானது பாராட்டியதாகாது. சுதாவாகவும், ராஜீய விஷயங்களிலும் நாம் விரும்புவதுபோல் உங்களுடைய அரசர் சுதந்தரமுடையவராக இருந்திருப்பாராகில் புதிய ஏற்பாடுகளைச் செய்கையில் தம்முடைய பிரஜைகளை மறந்திருப்பாரென்று நான் நம்பமுடியாது. அவருடைய ஆட்சியின் ஸில்வர் ஜூப்ளி 1913-ம் வருஷத்தில் நடந்தபோது ஜனங்கள் அடையும் நிர்வாகத்திறமைக்குத் தகுந்தவாறு சமஸ்தானத்தின் நிர்வாகத்தில் அவர்களுக்குப் படிப்படியாக ஆதிக்கம் உயர்ந்துகொண்டு வரவேண்டுமென்று அரசர் சொன்னார். அதே சமயத்தில்தான் ஜனப்பிரதிநிதி சபை திருப்திகரமாக வேலைசெய்து வருவதையும் அவர் குறிப்பிட்டார். இவ்விதம் சொல்லப்பட்டதற்குப் பத்து வருஷங்களுக்குப்பின் சமஸ்தானப் பிரஜைகள் படிப்படியாக சமஸ்தானத்தின் நிர்வாகத்தில் பங்குபெற முடியாமல் முன்னிலும் திறமைக் குறைவடைந்து விட்டார்களென்று சொல்லமுடியாது. உலகெங்கும் வீசும் சுதந்தரக் காற்றானது தமது பிரஜைகளுடைய மனதையும் அலைத்திருக்க வேண்டுமென்னும் விஷயம் வெகுவாக யாத்திரை செய்திருக்கும் அரசருக்காவது, அந்த வேகத்தை அடக்குமுறைகளினாலும், பிற்போக்கான காரியங்களாலும் தடுத்துவிட முற்பட்டிருக்கும் தர்பாருக்காவது தெரியாமலிருக்க நியாயமில்லை. நாம் பிறந்த சமஸ்தானத்தின் பிரஜைகள் ராஜீயத்துறையில் விழிப்படையும்படி செய்வதற்குக் காரணமாக விருந்த என்னுடைய சகோதரரும், ராஜீய சகாவுமான ஸ்ரீமான் எஸ். சத்திய மூர்த்தி அய்யர் மீது பிறப்பிவிக்கப்பட்டிருந்த தேசப்பிரஷ்ட உத்தரவானது அக்கிரமமாக இன்னமும் அனுஷ்டானத்திலிருந்து வருகிறது. மகாத்மா காந்திக்கு ஒரு உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்ததற்காக புதுக்கோட்டை முனிசிபாலிட்டியிலிருந்த ஜனப்பிரதிநிதிகளை விலக்கியதானது முற்றிலும் பிற்போக்கான முறையாகும். நிர்வாகத்தின் பெருமையைக் காப்பாற்ற விரும்பும் எவரும் அவ்வித உத்திரவு செய்ததற்குப் பெருமைப்படுவதற்கில்லை. நல்ல சுப சூசகங்களுடன் அரசருடைய பிரதிநிதியால் புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் புதிய ஆட்சி முறையை நீங்கள் பாராட்டிய போதிலும், இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மாறுபாடான நிலைமையிலும் பிரிட்டிஷ் அதிகார வர்க்கத்தினரைப் போல் ஜனங்களுடைய ஜீவாதாரமான உரிமைகளில் குறுக்கிடாமலும், அடக்குமுறைகளை ஆரம்பிக்காமலுமிருக்கும்படி உங்களா

லியன்ற எல்லா வழிகளிலும் தர்பாரை வற்புறுத்தி வருவீர்க ளென்று நான் நிச்சயமாய் நம்புகிறேன். எனது நண்பர் ஸ்ரீமான் ஸத்தியமூர்த்தி அய்யர் மீது 1921-ம் வரு ஜனவரி அல்லது பிப்ரவரி மாதத்தில் தடை உத்தரவை பிறப்பிவிக்க ஆதாரமற்ற எவ்வித சம்சயங்களிருந்த போதிலும் புதிதாக மாறுதல்கள் ஏற்பட்டுவிட்டதால் இனி அந்த உத்தரவு அவசியமில்லை யென் பதை அரசப் பிரதிநிதியும், திவானும் ஒப்புக்கொள்ளுவார்க ளென்றும், அந்த உத்தரவை தர்பார் கூடிய சீக்கிரத்தில் ரத்து செய்து சமஸ்தானத்திலும் வெளியிடங்களிலுமுள்ளவர்களுக்குத் திருப்தியை உண்டு பண்ணுவார்களென்றும் நான் நம்புகிறேன். சென்ற திங்கட்கிழமை யன்று அரசப் பிரதிநிதியைப் பேட்டி காணச் சென்ற உங்களுடைய மகாநாட்டு நிரந்தரக் கமிட்டி அங்கத்தினர்கள் இவ்விஷயத்தையும் மற்ற விஷயங்களையும் அவ ரிடம் வற்புறுத்தியதாக அறிகிறேன். இவ்விஷயத்தில் பொது ஜனங்களுக்கு இருந்துவரும் உணர்ச்சியை அவர் அறியும் பொருட்டுத் தகுதியான தீர்மானமொன்றையும் மகாநாட்டில் நிறைவேற்றி வைப்பீர்களென்று நம்புகிறேன்.

உங்களுடைய மகாநாட்டில் தலைமை வகிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்திருந்தால், அரசப் பிரதிநிதியையும், திவானை யும் பேட்டி கண்டு அவர்களுக்கு அந்த உத்தியோகங்கள் கிடைத்த தில் உங்களுக்குள்ள சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொள்ளவும், உங்களுடைய குறைகளை அவர்களிடம் முறையிட்டுக்கொள்ளவும் தகுந்த பிரதிநிதிகளைத் தெரிந்தெடுத்தனுப்ப வேண்டுமென்று வற்புறுத்துவதாக விருந்தேன். நீங்களே அவ்விதம் செய்து விட்டதாகத் தெரிகிறது. சமஸ்தானத்தின் நிர்வாகத்தில் உங்க ளுக்குக் கிரமமான பாகமில்லாத குறையை எல்லாவற்றிலும் முதன்மையாக நீங்கள் வற்புறுத்தவேண்டும். சமஸ்தானத்தை வாஸ்தவத்தில் ஆளுவோருடைய அதிகாரங்களில் இனி எந்தவித முரண்பாடும் ஏற்படுவதற்கில்லை. புதுக்கோட்டை ஜனப்பிரதி நிதி சபை சென்ற 20 வருஷ காலமாக விருந்து வருகிறது. அதனுடைய வேலையை ஒருவர் பின்னொருவராகப் பல திவான் களும், சூப்பரிண்டென்டென்டுகளும் சிலாகித்துப் பேசியிருக்கி ரூர்கள். இந்த சீர்திருத்தம் திருப்திகரமான பலன் தந்திருக்கிற தென்று அரசரே அடிக்கடி பெருமையாகச் சொல்லியிருக்கிறார். ஆயினும் 20 வருஷங்களுக்குப் பிறகும் ஆரம்பத்திலிருந்தது போலவே ஜனப்பிரதிநிதி சபை ஆலோசனை சொல்லும் சபை யாகவே இருந்துவருகிறது. இஷ்டமிருந்தால்தான் அதனுடைய ஆலோசனையும் கேட்கப்படுகிறது. எக்காரியத்தையும் அங்குசார் பணம் செய்து நிறைவேற்றி வைப்பதற்காவது, நிர்வாக முறை களிலுள்ள தோஷங்களை அகற்றுவதற்காவது அதற்கதிகார

மில்லை. இப்பால் சிருஷ்டிக்கப்பட்டிருக்கும் சட்ட ஆலோசனை சபையும் ஜனங்களுக்கு அதிக செல்வாக்கைக் கொடுத்துவிட வில்லை. சுய ஆட்சியை நடத்த உங்களுக்கு யோக்கியதையுண்டா வென்பதை இன்னமும் பரிட்சித்துப் பார்க்கவேண்டுமென்று சொல்ல முடியுமா? அல்லது உங்களை ஆளுவோரும், நிர்வாகிகளும் காலத்தின் போக்கை அறியாமல் புதுக்கோட்டை வாசிகள் மட்டில் உலகெங்கும் வீசும் சுதந்தரக்காற்றி லகப்படாமல் எதேச்சாதி பத்தியத்திற்கே உட்பட்டிருக்க விரும்புகிறார்களென்றுவது சொல்ல முடியுமா? அரசரிடத்திலும், சிம்மாஸனத்திடத்திலும் நீங்கள் என்றும் பக்தியுடையவர்களாயினும் சுதந்தர தாகம் உங்களை அலைப்பது சுபாவமேயாகும். கல்வி ஞானத்திலும், விசால திருஷ்டியிலும், அக்கம் பக்கங்களிலுள்ள பிரிட்டிஷ் ஜில்லாக்களிலுள்ள பிரஜைகளைவிட முற்போக்கடைந்திருக்கும் புதுக்கோட்டை மகாஜனங்களுக்கு பிரிட்டிஷ் ஆளுகைக்குட்பட்ட பிரதேசங்களிலும், பல இந்திய சமஸ்தானங்களிலும் கொடுக்கப் பட்டிருக்கும் பிரதிநிதித்துவ ஆட்சி முறையையும், ராஜீய அதி காரத்தையும் எந்தக் காரணத்தைக் கொண்டு கொடுக்காமல் மறுக்கமுடியும்? மைசூர் சமஸ்தானத்தில் சுய ஆட்சியை ஏற்படுத்த திட்டம் போடப்பட்டு வருகிறது; திருவாங்கூரில் அத்தகைய முறை ஏற்பட்டுவிட்டது. ஆயினும் அவைகளிலும் திருப்தி யடையாமல் உண்மையான அதிகாரமேற்பட வேண்டுமென்று அந்த சமஸ்தான வாசிகள் கிளர்ச்சி செய்துவருகிறார்கள். ஆனால் அவ்விரு சமஸ்தானங்களிலும் ஏற்பட்டுள்ள புதிய ஸ்தாபனங் களும் புதுக்கோட்டையிலிருந்து வரும் காலங்கடந்த ஸ்தாப னத்தைவிட முற்போக்கானவைகளாக இருக்கின்றன. இந்த விஷயத்தைத் தகுந்த பிரதிநிதிகள் மூலமாக மீண்டும் அரசரு டைய பிரதிநிதியிடத்திலும் திவானிடத்திலும் வற்புறுத்தி, உங்களுடைய நியாயமான உரிமையைப் பெறுவீர்களென்றே நான் நம்புகின்றேன்.

சமஸ்தானப் பிரஜைகளடங்கிய நிர்வாக சபையை ஏற்படுத் தப் போவதாகச் சொல்லியிருப்பதைக் கண்டு நீங்கள் ஏமாந்து போய்விடாமலிருக்கும்படி இந்த சந்தர்ப்பத்தில் உங்களுக்கு எச் சரிக்கை செய்யவேண்டிய அவசியமாக விருக்கிறது. அதன் மூல மாக ஏற்படும் புதிய உத்தியோகங்களாவது, அல்லது அதனால் கிடைக்கக்கூடிய சம்பளங்களாவது ஜன நாயக ஆட்சியாகாதென் றும், நல்லாட்சிக்குத் தகுந்த பாதுகாப்பாகவுள்ள நிர்வாக அதி காரத்தையாவது உங்களுக்கு அளித்துவிடாதென்பதையும் நீங்கள் மறந்து மோசம் போய்விடலாகாது. இந்திய சஸ்தானங்களில் நிர் வாக சபைகள் அமைக்கப்பட்டு வந்திருக்கும் தன்மையை நான் வெகு சிரத்தையுடன் ஆராய்ச்சி செய்திருக்கிறேன். அந்த

முறையை அனுஷ்டித்த எந்த சமஸ்தானத்திலும் அது திருப்திகரமான பலனைக் கொடுத்து விடவில்லை யென்றே நான் நிச்சயமாக உங்களுக்கு சொல்வேன். மைசூர் சமஸ்தானத்தை மீண்டும் மகாராஜாவிடம் ஒப்புவித்த பிறகு அங்கு நடந்த சில விஷயங்களை உங்களுக்கு ஞாபகப்படுத்துகின்றேன். 1881-ம் வருஷத்தில் மைசூர் சமஸ்தானத்தை மகாராஜாவிடம் ஒப்புவித்துவிட பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் தீர்மானித்த போது அந்த சமஸ்தானத்திலுள்ள பிரஜைகள் கல்லாகூழிக்குட்படும்படி செய்வதற்குச் சில பாதுகாப்புகளை ஏற்படுத்த முயற்சி செய்யப்பட்டது. அதற்கு முன்னிருந்த ஒரு அரசர் நிர்வாகத்தை ஒழுங்காக நடத்தாததனாலேயே லார்டு பெண்டிங்கின் காலத்தில் அந்த சமஸ்தானத்தின் நிர்வாகத்தை பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொண்டார்கள். மகாராஜாவுக்கு வாஸ்தவத்தில் விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டிருந்தும் அதை அவர் துர்விநியோகம் செய்து விடாமல் பாதுகாப்பதற்காக ஜனங்களுக்கு ஆதிக்கத்தைக் கொடுக்காமல் நிர்வாக ஞானம் முதிர்ந்த ஒரு நிர்வாக சபையை ஏற்படுத்த திட்டம் செய்யப்பட்டது. ஆனால் அந்த சபையானது சுதாவாக மகாராஜாவுக்குள்ள அதிகாரத்தையும், அவரால் சிருஷ்டிக்கப்பட்ட திவானின் அதிகாரத்தையும் மீறி ஒன்றும் செய்ய முடியாமற் போய்விட்டதால் அந்த ஏற்பாடு பிரயோஜனப்படவில்லை. தற்போதைய மகாராஜா இளவரசராக விருந்த காலத்தில் பிரதிநிதியால் சமஸ்தானம் ஆளப்பட்டு வந்தபோது நிர்வாக சபைக்கு உயிர் கொடுக்க முயற்சி செய்யப்பட்டது. அந்த ஏற்பாடு பிரயோஜனப்படவில்லை. நிர்வாக சபையானது இலாகாத் தலைவர்கள் அடங்கிய சபையாகி விட்டது. உள்நாட்டு நிர்வாகத்தில் பூர்ண அதிகாரமுள்ள மகாராஜாவிடம் அதிகாரம் பெற்ற திவானே நிர்வாகத்தைத் தமதிஷ்டம்போல் நடத்திவர இடமுண்டாகி விட்டது. திவான் ரங்காச்சார்லு மைசூர் ஜனப்பிரதிநிதி சபையை சிருஷ்டி செய்து, கல்லாட்சிக்குப் பாதுகாப்புகள் ஏற்படுத்தினார். ஆனால் அவருக்குப் பிறகு வந்த திவான்களுக்கு மேல்கண்ட சபையின் மூலமாக ஜனங்களுக்கு அதிகாரம் பெருக இஷ்டப்படவில்லை. ஆகவே ஜனப்பிரதிநிதி சபையானது ஆரம்ப ஸ்திதிக்கே வந்து விட்டது. திருவாங்கூரிலும், புதுக்கோட்டையிலும், மைசூரைப் பின்பற்றியே ஜனப்பிரதிநிதி சபைகள் ஏற்படுத்தப்பட்டன. பொதுஜன அபிப்பிராயத்திற்கு செல்வாக்கு ஏற்படும் விஷயத்தில் மைசூர் சபை எவ்விதம் உபயோகமற்றதாகி விட்டதோ, அவ்விதமே இவ்விரு சபைகளும் உபயோகமற்றவைகளாகி விட்டன. ஆகவே உங்களுடைய கோரிக்கையை ஈடேற்றாமல் ஒத்திவைப்பதற்காகச் சொல்லப்படும் இதுபோன்ற சால்ஜாப்புகளால் நீங்கள் மயங்கிப்போய் விடாமலிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகி

றேன். ஜனப்பிரதிநிதிகளுக்கு செல்வாக்கு ஏற்பட்டால்தான் கல்லாட்சிக்குப் பாதுகாப்பு ஏற்படும்.

புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு இருப்புப்பாதை போடுவதற்காகவும், மற்றும் சமஸ்தான அபிவிருத்திக்கான வேலைகளைச் செய்வதற்காகவும், சமஸ்தானத்தின் தேவைக்கு அதிகமாக ஜனங்களால் கொடுக்கப்பட்ட செஸ்களிலிருந்தும், வரித்தொகைகளிலிருந்தும் பல திவான்களால் வெகு கஷ்டப்பட்டு சேமித்து வைக்கப்பட்டிருக்கும் நிதியை எவ்விதத்திலும் வேறு வழிகளில் இறைத்துவிடாமல் தடுக்க இந்த மகாநாடு தைரியமாகத் தீர்மானம் செய்யவேண்டும். சமஸ்தானத்தின் நிர்வாகத்திற்கு அவசியமாக வேண்டியதைவிட ஒரு பைசாக்கூட அதிகமாக ஜனங்களிடமிருந்து வசூலிக்கப்படமாட்டாதென்று "ஸில்வர் ஜூப்ளி" காலத்தில் உங்களுடைய அரசர் அறிவித்தார். அவருடைய ஆக்ஞையை நிறைவேற்றி வைப்பதாயின் அதிகப்படியாக விருக்கும் தொகையை ஜனங்களுடைய க்ஷேமத்தைப் பெருக்குவதிலாவது, அல்லது அவர்களுடைய வரிச்சுமையை குறைப்பதிலாவது உபயோகப்படுத்த வேண்டும். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் மாறுதலின் ஓர் அம்சமாக க்ஷேமநிதியிலிருந்து பெரும்பாகத்தை அரண்மனைக் கணக்கில் கொடுத்துவிட உத்தேசிக்கப்பட்டிருப்பதாக உலவி வரும் வதந்திகள் வாஸ்தவமாயின் நீங்கள் அதை பலமாகக் கண்டனம் செய்து, வரி கொடுப்போர்களுக்கு நியாயம் பெற நீங்கள் தீவிரமாகக் கிளர்ச்சி செய்து வர வேண்டும். புதுக்கோட்டை சமஸ்தான மொன்றில் தான் மொத்த வருமானத்தில் பத்திலொரு பாகம் அரண்மனை உத்தியோகஸ்தர்களுக்காகச் செலவிடப்பட்டு வருகிறது. ஏற்கெனவேயே பெருவாரியாகத் தொகை கொடுத்து வருகையில் அதை இன்னமும் உயர்த்த நியாயமே கிடையாது.

உங்களுடைய கூட்டத்தில் நான் தலைமை வகிக்க முடியாமற் போனதற்கு மன்னிக்கும்படி மீண்டு மொருமுறை வேண்டிக் கொள்ளுவதுடன், மகாநாடு திருப்திகரமாக நடைபெற வேண்டுமென்றும், புதுக்கோட்டை வாசிகள் சுபிக்ஷமும், அதிகாரமும் பெற வேண்டுமென்றும், எல்லாம் வல்ல இறைவனை வழுத்துகின்றேன்.

சென்னை
15—11—22

தங்கள் ஊழியன்,

ஏ. ரெங்கஸ்வாமி அய்யங்கார்.

பிறகு ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் அடியிற்கண்ட தமது அக்ராஸனப் பிரஸங்கத்தைப் படித்தனர்:—

சகோதரப் பிரதிநிதிகளே, கனவான்களே!

1. "சுதேசமித்திரன்" பத்திரிகையின் சாமர்த்திய முள்ள பத்திராதிபராகிய ஸ்ரீமான் A. அரங்கசாமி அய்யங்கா ரவர்கள் இச்சமயம் இங்கு அக்கிராசனம் வகிக்கவேண்டும். ஆனால் எதிர்பாராதபடி அவர் புத்திரனுக்கு ஏற்பட்ட கடுமை யான காயலாவால் அவர் இங்கு வரத் தடைப்பட்டிருக்கிறார். ஸ்ரீமான் அய்யங்காரின் கவலை நீங்கி வெகு சீக்கிரம் அவர் குமார னுக்கு சௌக்கியத்தைக் கொடுக்கும்படி நாம் கடவுளை மனப் பூர்வமாய் பிரார்த்திக்கிறோம். நாம் எதிர்பார்த்தபடி ஸ்ரீமான் அய்யங்காரவர்கள் இங்கு விஜயம் செய்து அக்கிராசனம் வகிக்கக் கூடாததைப்பற்றி நாமெல்லோரும் அதிகமாக துக்கப்படுகி றோம். இருந்தபோதிலும் உபசரணைக்கமிட்டியார் மகாநாட்டை 16, 17ந்தேதிகளில் நடத்தவேண்டி சகல ஏற்பாடுகளையும் முன்ன தாகவே செய்து விட்டபடியால், அவர்கள் உள்ளூரிலிருந்தே ஓர் அக்கிராசனாதிபதியைக் கொண்டு, மகாநாட்டை நடத்தவேண்டிய தாயிருக்கிறது. எது வரினும், அது நமது நன்மைக்காகவே ஈசு வரனால் அமைக்கப்படுகிறது என்ற நம்பிக்கைதான் நமக்கு இந்த விஷயத்தில் ஓர் ஆறுதல்.

2. முதல் முதலில், நீங்கள் உங்களால் கொடுக்கக்கூடிய தான மிக்க உயர்ந்த கௌரவத்தை எனக்களித்ததற்காக நான் உங்களுக்கு என் மனப்பூர்வமான நன்றியறிதலை காண்பிக்க வேண் டியது என் கடமையாகும். கனவான்களே! நீங்கள் என் பேரில் காட்டியிருக்கும் அளவிலாப் பிரியத்திற்கு என் உண்மையான நன்றியறிதலை வெளிப்படுத்த எவ்வளவு வார்த்தைகளாலும் சாத் தியப்படாது. இந்த பொறுப்புள்ளவும், சிரமமானதுமான கட மையை, வெகு யோஜனையின் பேரிலும், தயக்கத்துடனுந்தான் நான் ஒப்புக்கொண்டேன். மெ தயக்கமானது, மகாஜனங்களுக்கு நான் முன்வந்து சேவை செய்வதில் எனக்குள்ள தயக்கத்தால் அல்ல. ஆனால் என்னைக் காட்டிலும், புத்தியிலும், அனுபோகத் திலும் மேலானவர்களே நிச்சயமாக ஒப்புக்கொள்ளவேண்டிய இப்பதவிக்கு நான் யோஜிக்கப்படக்கூட லாயக்கற்றவன் என்ற என் உணர்ச்சிதான் அதற்குக் காரணம். எப்பொழுதும், தாழ்ந்த பதவியிலிருந்தே நான் மகா ஜனங்களுக்கு சேவைசெய்ய எண்ணி இருந்தேன். இப்பொழுது நீங்கள் என்னை மகாநாட்டின் அக் ராசனம் வகிக்க உத்திரவு செய்ததை நினைக்க எனக்கு மிக்க ஆச் சரியமாயிருக்கிறது. இந்த நம்பிக்கையும், பொறுப்பும் வாய்ந்த பதவியை நான் ஒப்புக்கொள்ளுங்கால், கொஞ்சங்கூட குதூஹலத் தடனுவது, இறுமாப்புடனுவது நான் ஒப்புக்கொள்ளவில்லை. என்னைக்காட்டிலும், வயது முதிர்ச்சியிலும், சாமர்த்தியத்தி

லும் மேம்பாடுடையவர்களான நம்முடைய பெரியோர்கள் எல்லோரும், இவ்வக்கிராசனம் வகிக்க ஒப்புக்கொள்ளாதது பரிதபிக்கத்தக்கது. இங்கு, இப்பொழுது, இந்த ஸ்தானத்தில் நான் அமர ஒப்புக்கொண்டது, உங்கள் ஆஞ்ஞையைத் தட்டாமல் எனது கடமையைச்செலுத்தவேண்டும் என்ற நோக்கத்தால்தான். ஆகையால் உங்கள் எல்லோரையும், பொறுமையுடனும், காருண்யத்துடனும், எனது குற்றங்களைப் பாராட்டாமலிருக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

3. கனவான்களே! நாம் சென்ற வருஷம் கூடிய பிறகு, சற்றேறக்குறைய ஒரு வருஷத்திற்கு மேலாகிறது. இந்த ஒரு வருஷ காலத்தில் சில முக்கியமான சம்பவங்கள் நடந்திருக்கின்றன. அவை எல்லாவற்றிலும் முக்யமானவை, சமீபத்தில் சமஸ்தான நிர்வாக அமைப்பில் ஏற்படுத்தப்பட்ட மாறுதல்கள் தான். ராஜ கட்டளையில் பிரசுரிக்கப்பட்டபடி மகாராஜா அவர்கள் சமஸ்தானத்திற்கு திரும்பவும் இனி விஜயஞ் செய்வது அசாத்யமாய்ப் போனது நமக்கெல்லோருக்கும் அடங்காத் துக்கத்தையும், மனக்கிலேசத்தையும் கொடுத்திருக்கிறது. நெடுநாளாக நாம், மகாராஜா அவர்கள் எப்பொழுதாவது ஒரு சமயம் தமது மனதை மாற்றி, இங்கு திரும்புவார் என்று எண்ணிக் கொண்டிருந்தோம். அந்தோ! நமது நம்பிக்கையெல்லாம் வீணாயிற்று. இதுவரையில் நாம், இன்றைக்கு, நாளைக்கென்று நம்பி ஏமாந்தவர்களானோம். ஆனால் இவ்விஷயத்தில், மகாராஜா அவர்கள் இவ்வாறு முடிவு செய்ய நாம் ஒரு குற்றமும் செய்யவில்லையென்ற ஒரே ஆறுதல்தான் நமக்குள்ளது. மகாஜனங்களுக்குள்ள குறைகள் எல்லாவற்றிலும் விசேஷமான குறை இதுவரையில் மகாராஜா அவர்கள் ராஜ்யத்தைவிட்டு வெளியே சஞ்சரித்து வந்திருக்கிறார் என்பதுதான். இப்பொழுது மகாராஜா அவர்கள் இந்தியாவிற்கு சாசுவதமாக திரும்புவதில்லையென்று நிர்மானித்து விட்டபடியால் மகாராஜாவின் சர்வ வல்லமைகளையும், பொறுப்பையும் வகிக்க ஓர் பிரதிநிதியை நியமனம் செய்தது உசிதமேயாகும். இப்பொழுது இராஜப்பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர் நமது சமஸ்தானத்திலேயே பிறந்து வளர்ந்து, கல்வி கற்றவரும், மகாராஜாவிடம் அவருக்குப் பிரீதியாக சுமார் 25 வருஷங்களாக வேலை பார்த்து வந்த கனவானுமிருக்கிறார். சென்ற மகாநாட்டில் அக்கிராசனாதிபதியாகிய ஸ்ரீமான் C. H. ஸ்வாமிநாத சாஸ்திரிகள் தன்னுடைய பிரசங்கத்தில் அநுமானித்தபடியாக, தர்பாரமைப்பு முடிவு செய்யப்பட்டுவிட்டது. அந்த தர்பாரின் அலுவல்களைப் பார்க்க ஓர் திவான் நியமிக்கப்பட்டிருக்கிறார். சமஸ்தான வாசிகளுடைய பாத்யதையைக் கவனிக்காது

பிரிட்டிஷ் அரசாங்கத்திலிருந்து ஓர் உத்தியோகஸ்தரை திவானாக நியமனஞ் செய்திருப்பது நமக்கு ஒரு குறைவுதான். ஆனால் மகாராஜா அவர்கள் ராஜகட்டளையில் கூறியுள்ள வாய்மொழிகளிலிருந்து, இனி அந்த உத்யோகத்துக்கு லாயக்கான சமஸ்தான வாசிகளின் பாத்யதை கவனிக்கப்படும் என்று தோன்றுவதுதான் நமக்கு சற்று ஆறுதல். ஐரோப்பிய சூப்பிரெண்டெண்டு உத்தியோகத்தை எடுத்திருப்பது மிகவும் பாராட்டத்தக்கது. இச்சமயம் இந்த இந்திய சமஸ்தானத்தின் அரசாங்க நிர்வாகத்தில், இந்தியரல்லாத உத்தியோகஸ்தர் ஒருவரும் இல்லையென்று நினைக்க நம்மெல்லோருக்கும் உண்மையான சந்தோஷம் ஏற்பட்டிருக்கிறது. ராஜகட்டளையில் பிரசுரஞ் செய்யப்பட்ட விஷயங்களில், கூடிய சீக்கிரம், சமஸ்தானப் பிரஜைகளில் ஒருவரையாவது அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களையாவது சமஸ்தான நிர்வாகத்தில் திவானுடன் கௌன்சிலர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படும் என்றதுதான் மகாஜனங்களுக்கு மிகவும் திருப்தியைக் கொடுக்கக் கூடியது. இவ்வாறு மகாஜனங்களுக்கு ராஜாங்க நிர்வாகத்தில் ஒத்துழைக்க பாத்யம் உண்டென்பதை அறிந்ததின் பயனாக, மகாராஜா அவர்கள் அளித்திருக்கும் உறுதிக்காக நாம், மன்னர் சமக்ஷத்திற்கு நமது நன்றியறிதலை வெளிப்படுத்துகிறோம். ராஜகட்டளையில் உள்ள வாக்கியத்திலிருந்து கௌன்சிலர் பதவிகளுக்கு அரசாங்க உத்தியோகஸ்தர்களையும் நியமித்துக்கொள்ளலாம் என்று பொருள்படக் கூடியதாயிருந்த போதிலும், இவ்வுத்தியோகங்களுக்கு மகாஜனங்களிலிருந்து உத்தியோகஸ்தர்களல்லாதாரை ஜனப் பிரதிநிதி சபையாரால் தேர்ந்தெடுக்கச்செய்து நியமனஞ் செய்ய வேண்டுமென்று கேட்பது நமது கடமையாகும்.

4. சமஸ்தான நிர்வாக மாறுதல்களைப்பற்றிச் சொல்லுங்கால், அவைகளை யோஜனை செய்து முடிவு செய்ததில், பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரும், நமது சமஸ்தானத்திய அரசாங்கத்தாரும், அதன் நலத்திற்கோ, கெடுதலுக்கோ, நேராக பாத்தியப்பட்டவர்களாகிய நம்மைக் கலந்து கொள்ளாமலும், நாம் அறியாதபடியும், செய்த யோஜனைகள் என் ஞாபகத்திற்கு வருகின்றன. சென்ற இரண்டு வருஷங்களாக இந்த யோஜனைகள் மும்மரமாக நடந்து கொண்டு வந்தன. அவ்வாறு யோஜனைகள் நடப்பதென்று தெரிந்த நாம், அவைகளின் நன்மைக்கும், நீமைக்கும் பாத்தியப்பட்டவர்களானபடியால், தர்பாரையும், பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரையும், இம்முக்கியமான விஷயத்தில் நம்மைக் கலந்து கொண்டு, நமது அபிப்பிராயங்களையும் தெரிந்து கொண்டு, அவர்கள் ஓர் முடிவுக்கு வரவேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். தர்பாரார், அந்த யோஜனைகள் பரம ரகசியமாக

நடந்து வருவதாகவும், அவைகளை நமக்குத் தெரியப்படுத்த அவர் களுக்கு, சென்னை கவர்ன்மெண்டார் உத்திரவு செய்யவில்லை யென்றும் சொல்லிவிட்டார்கள். சென்னை கவர்ன்மெண்டுக்கும், இந்தியா கவர்ன்மெண்டுக்கும், நாம் இவ்விஷயத்தில் செய்து கொண்ட மனுக்களும், விண்ணப்பங்களும், "செவிடன் காதில் சங்கூதினாற்போலாயின". மற்றெல்லோரைக் காட்டிலும் இவ் விஷயத்தில் சம்பந்தப்பட்ட புதுக்கோட்டை மகாஜனங்களுடைய டெபுடேஷன் கமிட்டியாரைப் பார்க்க, சென்னை கவர்னராகிய மேன்மை தங்கிய வில்லிங்டன் பிரபுவுக்குச் சாத்தியமில்லை யென்ற பதிலும் நமக்குக் கிடைத்தது. இவ்விஷயத்தில், பிரிட். டிஷ் ராஜாங்கத்தார் எடுத்துக்கொண்ட நோக்கத்தை நாம் எவ்வ ளவு கண்டித்துப் பேசியபோதிலும் போதாது. நேராக நம்மையே பாதிக்கக்கூடிய முக்யமான இவ்விஷயத்தில் நமது அபிப்பிராயங் களை எடுத்துக்காட்ட உரிமையுள்ளவர்கள் அல்லவர்கள்போல நாம் நடத்தப்பட்டிருக்கிறோம். நம்மைக் கலந்துகொண்டு முடிவு செய்ய வேண்டிய நமக்குள்ள ஸ்வாதந்திரியம், இம்மாதிரி வீணாக்கப் பட்டது மிகவும் விசனகரமானது. அது சம்பந்தமாக சிறிது நாம் பாராட்டக்கூடியது சென்னை கவர்னரால், பொலிடிக்கல் ஏஜண்டு மூலமாக ரீஜண்டு அவர்களுக்கு உரைக்கப்பட்ட பின் வரும் வார்த்தைகள்தான்:— "மேன்மைதங்கிய கவர்னர், இப் பொழுதேற்படுத்தியிருக்கும் புதிய ஏற்பாட்டின்படி, தாங்கள் மிகவும் பொறுப்பு வாய்ந்த இப்பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட தில் அவருடைய நல்லெண்ணங்களை என் மூலமாகத் தெரியப் படுத்தி தங்களுடன், தங்கள் சமஸ்தான நிர்வாகத்தில், சமஸ் தான மகாஜனங்கள் எல்லோரும், விசுவாசத்துடன், ஒத்தாசை செய்வார்கள் என்றும், தாங்கள் சமஸ்தான நிர்வாகம் செய்வதில் சமஸ்தான மகாஜனங்களின் நன்மை ஒன்றையே நோக்கமாகக் கொண்டு, ஆட்சியை நடத்திவருவீர்களென்றும் உண்மையாக நம்புகிறார்கள்."

5. கனவான்களே, சமஸ்தான நிர்வாகத்தில் ஏற்படுத்தப் பட்ட மாறுதல்கள் இப்பொழுதுதான் வெகு சமீபத்தில் ஏற் படுத்தப்பட்டிருக்கிறபடியால் அவைகளை கொஞ்ச காலம் கவனித் துப் பார்த்து அதன் பேரில் நமது அபிப்பிராயங்களை வெளி யிடுவது நமக்கு முறையாகும். புதிதாகச் செய்திருக்கும் ஏற் பாட்டால் பழய ஸ்டேட் கவுன்சில் அமைப்பில் உள்ள சில குறைகள் நிவர்த்திக்கப்பட்டிருக்கிறதென்று நினைக்கிறவர்களில் நான் ஒருவன். மகாராஜா அவர்கள் சமஸ்தானத்தில் இருந்து வராத குறை, அவருக்குப் பதிலாக அவருடைய முழு அதி காரத்துடனும் பூரணப் பொறுப்புடனும் சாமர்த்தியமும், கரு ணையும், நிதானமும் உள்ள ஓர் பிரதிநிதி நியமனம் செய்யப்

பட்டதிலிருந்து ஒருவாறு நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது. ஜனங்களுடன் நெடுநாள் பழகிய ஜனங்களையும் அவர்களுடைய ஆவல்களையும் அறிந்த அவர், அவர்களுடைய தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்யக் கடமைப்பட்டவராவர். இதற்கு முன் சமஸ்தானத்திய நிர்வாகத்தார் அனுஷ்டித்து வந்த ஆவேசமுள்ள அடக்குமுறைகள் இனி ஒரு நாளும் திரும்பாதென்றும், இனிமேல் புதியதோர் ஆட்சி ஜனங்களுக்கு அமைதியையும் நல்ல எண்ணத்தையும் கொடுக்கக்கூடியதாய் ஏற்படும் என்றும் நான் நம்புகிறேன்.

6. சமஸ்தானத்தில் அரசியல் மாறுதல்களைப்பற்றிப் பேசுகையில் மகா ஜனங்களின் மகாநாடுகள் உற்பத்தியான சரித்திரமும் அவைகளின் நோக்கங்களும் ஆவல்களும் எனது ஞாபகத்திற்கு வருகின்றன. மகாநாட்டின் நோக்கம் இன்னதென்று தெளிவாய் விவரிக்கப்படவேண்டியதற்கு சமயம் ஏற்பட்டுவிட்டது. அசேஷ ஜனங்களின் நன்மையையும் மேன்மையையும் மகாநாடு நோக்கமாய்க் கொண்டிருக்கிறது. ஜனங்களின் நன்மையும் மேன்மையும் பொறுப்பில்லாத ஆட்சியில் சாதித்துக் கொள்ள முடியாததால், மகாநாட்டின் நோக்கம் பொறுப்பும் ஜனங்களுக்கு ஜவாப்தாரியாயும் உள்ள ஓர் ஆட்சியை ஏற்படுத்திக்கொள்வதாகும். ஆகையால் மகாராஜா அவர்களுக்குட்பட்டு எல்லாவிதமான சாந்தமானவும் நியாயமாகவும் உள்ள வழிகளில் ஜனங்களுக்குப் பூரண ஜவாப்தாரியும் பொறுப்பும் உள்ள ஆட்சியை ஏற்படுத்த முயல்வதுதான் மகாநாட்டின் கடமையாகும். இதை நீங்கள் ஒப்புக்கொண்டால் மகாநாட்டின் லட்சியத்தை இவ்வாறு நிர்ணயிக்கலாம்.

7. பிரதிநிதி சபையின் அங்கத்தினர்கள் மகா ஜனங்களின் உண்மையான பிரதிநிதிகளாகவும், உண்மையாக மகா ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களாகவும் இருக்கும்படி பிரதிநிதி சபை சீர்திருத்தப்பட்டு ஒழுங்கு செய்யப்படவேண்டும். பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கும் உரிமை மிகவும் விஸ்தரிக்கப்படவேண்டும். சபையின் அங்கத்தினரின் சங்கியை மகாநாடுகளில் கேட்டுக்கொண்டபடி அதிகரிக்கப்படவேண்டும். பிரதிநிதி சபை அங்கத்தினர்கள் பிரேரணைகளை சபையில் கொண்டு வரவும் அவைகளை ஓட்டுக்கு விடவும் பாத்யம் கொடுக்கப்படவேண்டும். சமஸ்தானத்திய வரவு செலவு கணக்கு சம்பந்தமாய் சர்ச்சை செய்வதற்கு சபைக்கு உரிமை கொடுக்கப்படவேண்டும். சமஸ்தானத்தின் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தும் சகல அதிகாரமும் சபைக்குக் கொடுக்கப்படவேண்டும். இப்பொழுதிருக்கும் சட்ட ஆலோசனை சபையை எடுத்துவிடவேண்டும். சமஸ்தான நிர்வா

கத்திற்கு, இரண்டு பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் சபைக்கு அளிக்கப்படவேண்டும். சுருங்கச் சொல்லில் சமஸ்தான நிருவாகத்தார், மேற்கண்டவாறு சீர்திருத்தப்படும் சபைக்கு, ஜவாப்தாரியாகச் செய்யப்படவேண்டும். மே சபையும், மகா ஜனங்களுக்கு ஜவாப்தாரியாக இருக்கவேண்டும். இவைகளையெல்லாம் நாம் அடையுமாறு, மகாநாடு வற்புறுத்தி வேலை செய்யவேண்டும். நம்மவரில், கல்வி கற்றவர், பொது ஜனங்களுக்கு செய்யவேண்டிய கடமை ஒன்றிருக்கிறது. மகாநாடுகள் ஜனங்களின் அறிவைப் பாவச் செய்வதற்கான சாதனங்களாகும். இருந்தாலும், தலைவர்கள் அப்போதைக்கப்போது கிராமாந்தரங்களில், ஆங்காங்கு சென்று, கிராமவாசிகளுக்கு, ஜன நாயக ஆக்ஷியின் ஆவசியகத்தையும், ராஜாங்க முறையின் முதற் பாடங்களையும் நன்றாய்ப் போதிக்கவேண்டும். ஜனங்கள் சமஸ்தானத்தின் பிரஜைகளாக, அவர்களுக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும் பொறுப்புகளையும் செவ்வனே கற்றுக்கொண்டு விழித்துக்கொள்ளக்கூடிய கலாசாலைகளாக நமது மகாநாடுகள் இருக்கும்படியாக நாம் செய்யவேண்டும். கூடிய சீக்கிரத்தில், அசேஷ ஜனங்களுக்குள் மேற்சொன்ன உணர்ச்சியை ஏற்படுத்தும்படியாகத் தீவிரமான பிரசார வேலை செய்வதற்குச் சுய நன்மை பாராட்டாது தியாகஞ் செய்யக்கூடியவும், பொது ஜனங்களின் நன்மைக்காக சேவை செய்வதில் ஓர் குறுகலமும் நமக்கு அத்தியாவசியம். பிறர் நம்மை ஓர் சோம்பேறிக் கூட்டத்தாரென சொல்லாத வண்ணம், மகா ஜனங்களின் முன்னேற்றத்திற்காக அத்யந்த சிரத்தையுடனும், ஊக்கத்துடனும் முன் வந்து வேலை செய்வது நமக்கு அழகாகும். ஜன நாயக ஆட்சியின் உணர்ச்சியை ஜனங்களுக்கு பரவச் செய்வதற்காகவும், ஜனங்கள் அதற்கு வெகு சீக்கிரத்தில் பக்குவமுள்ளவர்களாக இருக்கும்படி செய்வதற்காகவும், காங்கிரஸ் சபைகளைப்போல், மகாநாட்டின் சபைகள், சமஸ்தானத்திலுள்ள எல்லா முக்கியமான கிராமங்களிலும், தாலூக்காகளிலும், ஏற்படுத்தப்பட வேண்டும். சமஸ்தானத்தின் பிரதான நகரத்தில் ஓர் பிரதான மகாஜன சபையும் ஏற்படுத்தவேண்டும். இனிமேல் மகாநாடுகளுக்கு பிரதிநிதிகள் மேற் சொன்ன சபைகளால், முறையாகத் தேர்ந்தெடுக்கப்படவேண்டும். மேற் சொன்ன விஷயங்களைச் சாதித்துக் கொள்ளும்படியாக, இம்மகாநாடு செய்தால், இம்மகாநாடு அதன் காரியங்களை வெகு சிறப்பாக நடத்தியதாய் நாம் சந்தோஷிக்க சரியான முகாந்திரங்கள் உண்டு.

8. எனது உருதியான எண்ணம் என்னவென்றால், கல்வி கற்ற தலைவர்கள் ஜன சமூகத்திற்கு மேற்சொன்ன உணர்ச்சியை ஊட்டாத வரையும், அவர்கள் சமஸ்தான பொது ஜனங்களின்

நன்மை ஒன்றையே முக்யமாகக் கருதி வேலை செய்யாத வரையில், அவர்கள் அரசாங்கத்தாரை ஜனநாயக ஆட்சி வேண்டுமென்று கேட்பது மிகவும் அசாத்தியமான காரியமாகும். ஒரு பக்கம் நாம் அரசாங்கத்தாரை, ஜனநாயக ஆட்சி நமக்கு அளிக்கும்படி வற்புறுத்திக்கேட்பதோடு, மகா ஜனங்களின் அறிவைப் பரவச் செய்வதற்கான முயற்சியை நாம் எடுத்துக்கொண்டு ஜனநாயக ஆட்சி இன்னதென்பதையும், ஜனங்களின் உரிமைகளும் கடமைகளும் யாவதென்று அவர்களுக்கு விளங்கும்படியாய்ப் போதிக்க வேண்டும். கற்றறிந்த சிலர் மட்டும், தங்களுக்கு ஸ்வாதந்திரியமும், உரிமைகளும் வேண்டுமென்று கேட்பதும், அத்துடன் மகாஜனங்களின் அறிவை விஸ்தரிக்கும்படியாய் அவர்கள் முயற்சிக்காமலிருப்பதும் பிரயோஜனமற்றதாகும். ஏனெனில் பிரகிருதம் இருந்துவரும் அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சியைக் காட்டிலும், சுய நன்மையைப் பாராட்டுகிற சில கற்றறிந்தவர்களின் ஆட்சியானது ஒரு நாளும் சிலாக்கியமானதல்ல.

9. கனவான்களே! காங்கிரஸிலிருந்து நாம் கைக்கொள்ளக் கூடியதாகவும், என்னுடைய அபிப்பிராயத்தில், நாம் கைக்கொள்ள வேண்டியதுமான விஷயங்கள் இரண்டிருக்கின்றன. அவைகள் சுதேசியம், குடியேல நிறுத்தல், இவைகளே. இந்திய மாதாவின் மக்களாகிய நாமெல்லோரும், தேச பக்தியை முன்னிட்டும், நமது தேசத்தின் செல்வ நிலையை உத்தேசித்தும், சாத்யமானமட்டும், அந்நிய நாட்டு சாமான்களை விலக்கி, ஸ்வதேச சாமான்களையே உபயோகிக்கவேண்டும். விசேஷமாக நாமெல்லோரும் கதராடையையே தரிக்கவேண்டியதும், கதராடையைத் தவிர வேறு ஆடையை தரிக்காமலிருப்பதும் நமக்கு ஒழுங்காகும். தேச பக்தர்களாகிய, இந்திய மக்கள் எல்லோருக்கும், நன்கு பதியும்படியாக கதராடையின் மகத்துவத்தை வெகு உருக்கத்துடனும், சிரத்தையுடனும், டாக்டர் பி. ஸி. ரே அவர்கள் உபதேசித்து வருகிறார்கள். மிக விலையுயர்ந்ததும் மகா மிருதுவானதுமான சீனா தேசத்துப் பட்டைப் பார்க்கிலும், மகா காடுமூடான கதராடை தனக்கு மேலானது என்று மகாத்மா காந்தி அவர்கள் அருளியிருக்கின்றார். பரிசுத்தம், தன் முயற்சி ஆடம்பரமின்மை இன்னும் ஓர் மனிதனை கம்பீரமுள்ளவனாகவும், உயர்வானவனாகவும் செய்யக்கூடிய குணங்கள் எல்லாவற்றிற்கும் கதராடை அறிகுறியாகும். ஆனால் ஒருவன் அந்நிய நாட்டு உடையைத் தரித்துக்கொண்டால், அது எவ்வளவு மிருதுவாகவும், பளபளப்பாகவும் காணப்பட்ட போதிலும், அவன் அடிமைக்குள்ள உடையைப் போர்த்துக்கொண்டது போலவும், அடிமைத்தனமான நோக்கத்திற்கு உள்ளானவனாகவும் ஆளாகி

முன். கதராடை தரித்துக் கொண்டாலோ, ஒருவன் ஆண்மையையும், அழகையும் கைக்கொண்டவனாகிறான். ஒவ்வொரு வீட்டிலும் கைராட்டினம் சுற்றப்படவேண்டும். சமஸ்தானத்திலுள்ள திருவப்பூர், கரம்பக்குடி, முதலிய இடங்களில் கைத்தரிகள் ஐக்கிய சகாயத்தால் ஏற்படுத்தப்பட்டு, புதுக்கோட்டை ஜனங்களுக்குத் தேவையான எல்லாவித கதராடைகளையும் சமஸ்தானத்திற்குள்ளே நாம் நெசவு செய்யும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். இம் முக்கியமான விஷயங்களை ஏற்படுத்தும்படியாக தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ள இங்குள்ள தனவான்களையும் ஐக்ய சங்கங்களின் அபிவிருத்தியில் சிரத்தையுள்ள கனவான்களையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

10. நில வரும்படிக்கு அடுத்தாற்போல் சமஸ்தானத்தில் ஆப்காரி வருமானந்தான் மிக்க ஜாஸ்தியாயிருக்கிறது. 1308—1316—1324—1331 இந்தப் பசலிகளின் ஆப்காரி வருமானம் முறையே ரூ. 56,369, 1,06,094,—207,930,—2,98,982, மேற்கண்ட சங்கியைகள் சென்ற 23 வருஷங்களில், கள்ளு, சாராயம், விற்பனையால் சர்க்காரின் வருமானம் சற்றேறக்குறைய ஆறு மடங் கதிகமாகி விட்டதென்று காட்டுகின்றன. இப்பேற்பட்ட அபரிமிதமான வருமானத்தின் உயர்வோடு, குடியனும் நிச்சயமாய் அபரிமிதமாய் அபிவிருத்தியாகி யிருக்கவேண்டும். கிரிமினல் குற்றங்கள் பெரும்பான்மையும், குடியற்கேடால் விளைகின்றனபடியாலும், குடியல், குடிப்பவர்களின் அறியாமையால், அவர்களின் தேக சௌக்கியத்தையும், நற்குணத்தையும், பொருளையும் நாசஞ்செய்வதிலிருந்து, மேற்கண்ட சங்கியைகள் நமக்கு பயத்தை ஜனிக்கும்படியாகச் செய்யவில்லையா? 1913வஅல் பிரதிநிதி சபையில் மிஸ்டர் க்வின் பின்வருமாறு பேசினார்:— "நான் இப் பிரசங்கத்தை முடிக்கு முன், நீங்கள் ஒருவரும் பிரேரணை செய்யாதவும், யாதொரு கேள்வி கேட்காததுமான இரண்டு விஷயங்களை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அவ்வாறு அந்த விஷயங்களைப்பற்றி நீங்கள் யோஜனை செய்யாததும், கேள்வி கேட்காததும், நான் உங்களிடமிருந்து எதிர்பார்த்ததற்கு விரோதமாக இருக்கிறதென்று நான் சொல்லவேண்டும். இவைகளில் ஒன்று ஆப்காரி விஷயம். இதைப்பற்றி நீங்கள் ஒருவரும், யாதொரு கேள்வியும் கேட்கவில்லை; யாதொரு யோசனையும் சொல்லவில்லை. இப்பொழுது ஆப்காரி வருமானம் இரண்டு லக்ஷமாக இருக்கிறது. சென்ற ஆறு வருஷங்களுக்குள் இவ்வருமானம் இரட்டிப்பாய்விட்டது இவ்வருஷம், அது 100-க்கு 28 மடங்கு அதிகமாகிவிட்டது. வருமானத்தை மட்டில் கவனித்தால், இது திருப்திகரமானதுதான்; ஆனல் ஜனங்களின் சௌக்கி

யத்தையும், ஆரோக்கியத்தையும் உத்தேசித்தால், இவ்வதிக வருமானம், கொஞ்சங்கூட இருப்திகரமானதல்ல. இவ்வருமானத்தின் அதிகத்தில் ஓர் பாகம், ஆப்காரி இலாகா முன்னேக்காட்டிலும் சாமர்த்தியமாக இப்பொழுது நடத்தப்பட்டு வருவதால் ஏற்பட்டிருக்கிறது. ஆனல் மற்றொரு பாகம், கள், சாராயத்தின் அதிகக் குடியாலேயே ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்களென்று தெரிய நான் விரும்புகிறேன். அடுத்த வருஷம் ஒருக்கால், உங்களில் சிலர், உங்களுக்கு இந்த விஷயத்தைப்பற்றி அபிப்பிராயங்களை எங்களுக்கு எடுத்துச் சொன்னலும் சொல்லக்கூடும்". பிரதிநிதிகளில் சிலர், இதற்குப்பின் விழித்துக்கொண்டு நாளுக்குநாள் அதிகரித்துவரும், குடியல் கேடைத் தடுப்பதற்கான பிரேரணைகளைச் சபையில் கொண்டுவந்தார்கள். ஆனல் இச்சமயம், மிஸ்டர் பர்ன் சமஸ்தான சூப்பிரெண்டாகிவிட்டார். இக்குடியல் விஷயமாய் அவருக்குள்ள அபிப்பிராயங்கள், மிஸ்டர் க்வின் துரைக்குள்ள சரியான அபிப்பிராயங்களுக்கு வேற்றுமைப்பட்டதா யிருந்தன. மிஸ்டர் பர்ன் துரை, பிரதிநிதிகளை அநாவசியமாக இவ்விஷயத்தில் பயப்படவேண்டாமென்றும், ஆப்காரி வருமானம் அதிகரித்தால் அது குடியல் ஜாஸ்தியால்தான் ஏற்படுமென்று நினைக்க அவசியமில்லையென்றும், சாராயத்தின் வரி உயர்த்தப்பட்டதாலும், கள் கட்டுவதற்கு விடப்பட்ட மரங்களின் தீர்வை அதிகப்படுத்தப்பட்டதாலும், இவ்வதிக வருமானம் இருக்கலாமென்றும் பிரதிநிதிகளுக்குத் தைரியம் கூறினர். சமஸ்தானத்தில் சென்ற வருஷத்தில் குடியை ஒழிப்பதின் உத்தேசத்தோடு, ஊக்கத்துடன் சிலர் பிரசாரம் செய்ததை முன்னிட்டு, மிஸ்டர் பர்ன் துரை மிகவும் பிரியடைந்தார். அதன்பின் போலீஸ்காரர்களும், மாஜிஸ்திரேட்டுகளும், மும்முரமாய்ச் செய்துவந்த வேலைகள் நமக்கெல்லோருக்கும் நன்றாய்த் தெரியும். மிஸ்டர் பர்ன் துரை, குடியல் குற்றமில்லையென்றும், இந்தியன் பினல் கோடில் இது குற்றமாகக் கூறப்படவில்லை யென்றும், அது சட்டத்திற்கு விரோதமில்லாத சரியான அலுவல் என்றும், குடிப்பவர்களுக்கும், கள் சாராயம் விற்பனை செய்பவர்களுக்கும், தன் பாதுகாப்பைக் கொடுப்பதாக வீரமொழிகள் பேசி அபயப்பிரதானம் செய்தார். ஆனல் நமக்கு இன்னது சரியென்றும், இன்னது குற்றமென்றும் தெரிந்துகொள்வது இந்தியன் பினல்கோடிலுள்ள பிரிவுகளில் மட்டிலும் அடங்கினதல்ல. குடியல் நல்லொழுக்கத்தின் முதல் நூலுக்கு முற்றும் விரோதமாயிருப்பதோடு அதை ஹிந்து தர்ம சாஸ்திரங்களும், கொரானும் முற்றும் கண்டிக்கின்றன. மேலும் குடிப்பவர்களின் பலத்தைக் குடியல் முற்றும் கெடுப்பதோடு, அவர்களை வியாதிக்கும், அகால மரணத்திற்கும்

ஆளாக்குகிறது. ஒரு தேசத்தின் அரசாங்கத்தாருக்கு, ஜனங்களின் நல்லொழுக்கத்தையும், ஆரோக்கிய சௌக்கியத்தையும் கவனித்துப் பாதுகாப்பது அவர்களின் முதற்கடமையாகும். இவ்வாறு கவனிக்குங்கால் ஆப்காரி வருமானம் ஓர் ராஜாங்கத்தாருக்கு நாணயமான வழியில் சம்பாதிக்கப்பட்ட வருமானமாகாது. ராஜாங்கத்தார் கள், சாராயம் உற்பத்திசெய்து, அதை அறியாத மூடர்களுக்கு விற்று, லாபம் சம்பாதிக்கும் கெட்ட தொழிலை விட்டுவிட்டு, பிரஜைகளை ஒழுக்கத்துடனும், யோக்கியதையுடனும், நோயற்ற ஆரோக்கிய சுக சரீரத்துடனுமிருக்குமாறு கற்பிக்கவேண்டும். ஆனால் இது ஒரு தேசத்தில் ஜனநாயக ஆட்சி ஏற்படாதவரை சாத்தியப்படாதாகையால், நாம் கட்குடியை முற்றும் தடுப்பதற்காக, சாத்வீகமானவும், பலாத்காரமில்லாததுமான வழிகளை கைக்கொண்டு, தீவிரமான பிரசாரவேலை செய்ய வேண்டியது இன்றியமையாதது.

11. சில காலமாக சமஸ்தானத்தின் மீதப்பணமாகிய சுமார் ரூ. 40 லட்சத்தின் முழுமையையுமோ, அல்லது அதன் ஓர் பாதியையோ, மகாராஜா அவர்களுக்கு கொடுத்துவிடப்போவதாக பலமான வதந்தி உலாவிவந்தது. சமஸ்தானத்திய நிர்வாகத்தின் அமைப்பில் மாறுதல்கள் ஏற்படுத்தி, ராஜ கட்டளையையும் பிரசித்தப்படுத்தியாகிவிட்டது. ஆயினும், மேற்சொன்ன விஷயத்தைப்பற்றி யாதொருவிதமான பிரசித்தமும் செய்யப்படவில்லை. ஆனால் மேற்சொன்ன வதந்திகள், சர்க்காரால் மறுக்கப்படாததிலிருந்து நிலைமை பயங்கரமாயிருக்கிறது. மகாராஜா அவர்களே ஒரு சமயம் மகாஜனங்களிடமிருந்து அவசியமாகத் தேவையான வரிகளைக்காட்டிலும் ஒரு பைசா அளவுகூட வசூலிக்கப்படமாட்டாதென்றும், அம்மாதிரி வசூலிக்கப்படக் கூடாதென்பது தன் அரசாட்சியின் நோக்கமென்றும் கூறியிருக்கிறார். அவ்வாறிருக்க இப்பொழுது மகாராஜா அவர்களும், பிரிட்டிஷ் அரசாங்கத்தாரும் சேர்ந்துகொண்டு, தர்பாரார் பன்முறைகளும் மகாஜனங்களுக்குச் சாதகத்தை விளைவிக்கக்கூடிய இருப்புப்பாதை, நீர்பாசனம், முதலிய விஷயங்களிலேயே செலவிடுவதற்காக சேர்த்துவைத்திருப்பதாக உறுதிசொல்லி, வாக்குத்தத்தம் செய்த மகாஜனங்களின் பணத்தையா அவர்களின் சம்மதமில்லாது செலவழிப்பது? இவ்விஷயத்தில் மகாஜனங்களுக்குள்ள பயத்தையும், பெருத்த மனக் கவலையையும், ஓர் அறிக்கையின் மூலமாய் உடனே நிவர்த்திசெய்விப்பது மகாராஜா அவர்களின் கவர்ன்மெண்டிற்கு அழகாகும். ஒரு தேசத்தின் வருமானங்களை மீதம் பிடித்துச் சேர்த்துவைப்பது, பிற்போக்கான நாகரீகமற்ற அரசாட்சிக்கு அறிகுறியாகும். இதைக்காட்டி

லும் மூன்னேற்றமடைந்த மைசூர், கொச்சி ராஜ்யங்களில், வரு மானங்களை மீதம் பிடித்துவைக்காமல், ராஜாங்க நிர்வாகத்தை வரவுக்குமேல் செலவுடன் நடத்திவந்து, வருமானங்களையும், ஜனங்களுக்கு நன்மையைப் பயக்கக்கூடியதான கைத்தொழில் களிலும், மற்றும் முக்கியமான விஷயங்களிலும் செலவிடுகிறார் கள். ராஜகட்டளை பிரசுரம் செய்த தினத்தில் ரீஜண்டு சாகேப் அவர்கள் கூறியபடி மகாராஜா அவர்கள் இந்தியாவைவிட்டு, வெளி நாடுகளிலேயே காலங்கழிக்கத் தீர்மானித்தது பிரஜைகளின் யாதொரு குற்றத்தாலுமல்ல. ஆகையால், தங்களுடையதல்லாத குற்றங்களுக்கு, ஜனங்கள் தங்கள் பணத்தை இழக்கக்கூடா தென்று எதிர்பார்ப்பது முற்றிலும் நியாயமானதே. சென்ற மகா நாடுகளில் நாம் திரும்பத் திரும்பச் சமஸ்தானத்திய அரசாங்க நிர்வாகத்தின் செலவு வெகுவாக மட்டுப்படுத்தப்படவேண்டு மென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம். இவ்விஷயத்தைப்பற்றி யும், அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிடவேண்டியது அவசியம். சமீப காலத்திற்குள், போலீஸ் இலாகாவில் உத்தி யோகஸ்தர்கள் வெகுவாக அதிகரிக்கப்பட்டிருப்பதோடு, சென்ற மூன்று வருஷங்களுக்குள் சட்ட இலாகா, போலீஸ் இலாகா இவைகளின் செலவு, லக்ஷ ரூபாய்க்கு அதிகரித்திருக்கிறது. ஏழை வரி செலுத்துவோர்களின் தொகையை, இவ்விலாக்காச் செலவுக்கு மிதமிஞ்சி அதிகரிக்கப்பட்டிருப்பதோடு, அதற்குத் தகுந்ததென்று சொல்லக்கூடிய யாதொரு பயனும் அவ்வரி செலுத்துவோர்களுக்கு திரும்பக்கூடாத ஸ்திதியில், இவ்விலாக் காக்களின் செலவை மிகவும் ஒடுக்கவேண்டியது அத்தியாவசிய மும் அவசரமுமானது.

12. சமஸ்தானத்தில் கல்வி அபிவிருத்தி விஷயமாக சர்க்காரார், இப்போதைக்காட்டிலும் ஜாஸ்தி கவனம் எடுத்துக் கொள்ளத்தகுந்தது. சமஸ்தானத்திய ஜனத்தொகையை உத் தேசித்து இவ்விலாக்காவில் செலவிடப்பட்டுவருவது மிக்கக் குறைவேயாகும். சமஸ்தானத்தில் பிரதம கல்வி இலவசமாகவும், கட்டாயமாகவும், உடனே ஏற்படுத்தவேண்டியது இன்றியமை யாதது. உயர்தர தொழிற்கல்விச்சாலைகள் ஏற்பாடுகள் செய்யவும் வேண்டும். பிரதான நகரத்தில் மகாஜனங்களின் பிரயோஜனத் திற்காக ஓர் இலவசப் புத்தகசாலையும், முதல் வகுப்பு கலாசாலை ஒன்றும் ஏற்படுத்துவது உசிதம்.

13. சமஸ்தானத்தில் நிலவரியே முக்கியமான வருமானத் திற்கு இடமாயிருக்கிறது. ஜனசமூகங்கள் ஜீவனஞ்செய்துவருவது பெரும்பாலும் விவசாயத்தாலேயே. நீர்ப்பாசனத்தில் செலவிடும் தொகையானது, நிலவரியின் வருமானத்திற்கு ஒப்பிட்டால் சிறி

தளவேயாகும். நிலவரும்படியின் வருமானம் ரூ. 1,027,500 யாயிருக்க பாசன விஷயங்களில் செலவிட்டிருக்கும் தொகை 1,57,014 யிருக்கிறது. ஆனல் மேற்சொன்ன தொகை, சென்ற வருஷத்திலும், அதற்கு முந்திய வருஷத்திலும், இவ்விஷயத்தில் முறையே செலவிட்ட ரூ. 90126; 58389 இவைகளைக் காட்டிலும் மிகவும் அதிகம்தான். நமது சமஸ்தானத்தைப் போல வானம்பார்த்த தேசத்தில் பாசன விஷயங்கள் சர்க்காராருடைய மேலான கவனத்திற்கு அருகமானவை. இச்சமஸ்தானத்தில் அனுஷ்டானத்திலிருக்கும் நிலவரி வசூல் ஏற்பாட்டின்படி மழை பெய்யாத வருஷங்களில் குடிகளுக்குத் தீர்வை வஜா செய்ய இடமில்லாமலிருக்கிறது. இது குடிகளுக்கு மிக்க கடினமானது. விளையாத வருஷங்களில் குடியானவர்களுக்கு வரியை வஜாசெய்து கொடுக்கும்படியான மாறுதல்களை ஏற்படுத்தச் செய்வது நமது முக்யமான கடமையாகும்.

14. சமஸ்தானத்தில் அமுல் நடத்தும் உத்தியோகங்களையும், நியாயாதிபத்திய உத்தியோகங்களையும், வெவ்வேறுகப் பிரிக்கவேண்டியது, நெடுநாட்களாக ஜனங்கள் வேண்டிக்கொண்ட சீர்திருத்தம். இதை மகாநாடு ஒவ்வொரு சமயத்திலும் வற்புறுத்தியும் வந்திருக்கிறது. நிஜாம் ராஜ்ஜியத்தில் இச்சீர்திருத்தம் ஏற்கனவே செய்தாகிவிட்டது. மைசூரில் இதைச் சீக்கிரம் செய்யப்போவதாகத் தெரியவருகிறது. மேற்சொன்ன இரண்டு அலுவல்களையும், தண்டு தண்டாக, சமஸ்தான உத்தியோகங்களில் பிரித்துவிட வேண்டியது அத்தியாவசியமானது. இதை இம்மகாநாட்டிலும் நாம் கேட்டுக்கொள்ள வேண்டியது.

15. நியாய பரிபாலன இலாகாவைப்பற்றி பேசுமிடத்து, அந்த இலாகாவில் சீக்கிரம் சீர்திருத்தங்கள் செய்யவேண்டியது மெத்த அவசியம் என்று சொல்வேன். அப்பீல் வழக்குகளை விசாரிப்பதற்கென்றே பிரத்தியேகமாய் ஓர் நியாயஸ்தலம் வேண்டுமென்பது வெகு நாட்களாக ஏற்பட்ட குறை. அந்தக் குறையையும் நிவர்த்தி செய்யவேண்டியது அவசியம். ஜட்ஜிகள் மூன்றுபேரும் அப்பீல் வேலையும் அசல் வேலையும் பார்த்து வருகின்றார்கள். ஒருவர் செய்த தீர்ப்பிலிருந்து, மற்ற இரண்டு ஜட்ஜிகளும் அப்பீல்கள் விசாரிக்கின்றார்கள். இந்த ஏற்பாட்டில் அப்பீல் கோர்ட்டானது மேல் கோர்ட்டாயிருந்து, அசல் கோர்ட்டில் நடந்திருக்கும் நடவடிக்கைகளைப்பற்றி கண்டிக்க வேண்டியிருக்கும்பொழுது, கண்மோக்தமான உத்திரவுகள் தைரியமாய் பிறப்பிவிக்க இடம்பாடில்லை. 4-வது ஜட்ஜி ஒருவர் நியமனம் செய்யப்பட வேண்டுமென்பதற்காக நாம் அப்பீல் கோர்ட்டு அபேக்ஷிக்கவில்லை. நியாயம் சரிவர நடக்க வேண்டுமென்ற

நோக்கத்துடனேதான் அப்பீல் கோர்ட்டு வேண்டுமென்று கேட்கிறோம். என்னுடைய அபிப்பிராயமென்னவெனில், சீப் ஜட்ஜியை, அப்பீல் வேலையைமட்டும் பார்க்கும்படி செய்துவிட்டு, அசல் வழக்குகளை, மற்ற இரண்டு ஜட்ஜுகளும் தம்முள் பிரித்துப் பார்த்துக்கொள்ளும்படி செய்துவிடலாமென்பதுதான். இவ்வாறு செய்யும் பட்சத்தில் இன்னொரு ஜட்ஜி நியமிக்கவும் வேண்டியதில்லை; பணமும் செலவு செய்யவேண்டியதில்லை. இந்த ஏற்பாட்டினால், கொஞ்சம் அசௌகரியம் ஏற்படலாம். அது என்னவெனில், இப்போதிருப்பது போலில்லாமல், அப்பீல் விசாரணை ஒரே ஜட்ஜியால் நடத்த நேரிடுமென்பதுதான். ஆனு இரண்டாவது அப்பீல்கள், சட்ட சம்பந்தமான வழக்குகளில் மட்டுமென்று வைத்துக்கொள்ளாமல், சாராம்சத்தைக் கவனித்தும், இரண்டாவது அப்பீல் உண்டென்று ஏற்பாடு செய்து விட்டால் மேலே குறித்த அசௌகரியம் நிவர்த்தியாகும்.

ஜட்ஜிகளை ஆயுள் பரியந்தம் ஜட்ஜுகளாகவே வேலை பார்க்கும்படி செய்வதில், வக்கீல்களுக்கும் கட்சிக்காரர்களுக்கும் நிச்சயமாய் அசௌகரியமும், தொந்தரவும் ஏற்படுகிறதென்பதில் சந்தேகமில்லை. ஜட்ஜிகளும் மனிதர்களுக்கு இயற்கையாயுள்ள குறைபாடுகளிலிருந்து விலக்குப் பெற்றவர்களல்லர். அவர்களை ஸ்திரமாய் ஜட்ஜுகளாய் நியமித்துவிட்டால், எவ்வளவு படித்தவர்களாயிருந்தாலும் சரி, எவ்வளவு குணசிரேஷ்டர்களாயிருந்தாலும் சரி, நமது சமஸ்தானத்தைப்போன்ற சிறிய பிரதேசத்தில் அவர்களுக்குத் தங்களையறியாமலே சிற்சில நபர்களிடத்து, சிற்சில விஷயங்களைப்பற்றியும், சாதகமாகவோ, பாதகமாகவோ, ஒரு எண்ணம் மனதில் பதிந்துவிடாமலிருப்பது அரிது. ஆதலால் நியாயம் சில சமயங்களில் தவறிப்போகவே ஏது ஏற்படுகிறது. பிரிட்டிஷ் இந்தியாவில் எந்த முனிசிப்பாவது சப்-ஜட்ஜியாவது மூன்று வருஷத்திற்கு அதிகமிருக்கிறதில்லை. நியாய இலாகா அதிகாரிகளை அடிக்கடி ஊருக்கூர் அவ்வாறு மாற்றிவிடுகிறது நியாயம் தவறாமல் நடக்கவேண்டும் என்ற உத்தேசத்துடன்தான். சாத்தியமானால் ஜட்ஜிகளை இன்னும் உயர்ந்த உத்தியோகங்களுக்கு எடுத்துக்கொள்ளலாம். ஆனால் அவர்களை ஆயுள்பரியந்தம் ஜட்ஜிகளாகவே வைத்துக் கொள்வது கூடவே கூடாது. ஜட்ஜிகளுடைய உத்தியோக காலவரையறை 5 வருஷத்திற்கு அதிகப்படாமல் இருக்கும்படி திட்டஞ் செய்யவேண்டும். சமஸ்தானத்தில் இனிமேல் நியமனஞ் செய்யப்படும் ஜட்ஜுகள் சம்பந்தப்பட்டமட்டிலாவது இந்த ஆலோசனையை கைக்கொண்டு நடந்தால் நலமாயிருக்கும். ஜட்ஜுகளுக்கும், வக்கீல்களுக்கும் ஏற்பட்டிருந்த மனஸ்தாபங்களெல்லாம் விலகி விட்டபடியால், இனி அவர்களுக்குள் பரஸ்

பரம் திருப்திகரமாயும், சமரஸமாயும், கோர்ட்டினுடைய அந்தஸ்திற்கு ஏற்றபடியும், வக்கீல்களின் மரியாதைக்கு ஏற்றதாயும் நடவடிக்கை இருக்குமென்று நான் மனப்பூர்வமாயும், ஆவலுடனும் எதிர்பார்க்கின்றேன்.

16. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் காரைக்குடிச் சென்று மாகாத்மா காந்தி அவர்களுக்கு வந்தனோபசாரப் பத்திரிகை ஒன்று வாசித்ததற்காக, அவர்களை முனிசிபல் சங்கத்தினின்றும் விலக்கி, அவர்கள் எப்பொழுதும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கு அருகர்களல்லவென்று தர்பாரில் செய்த உத்திரவு நீங்கள் எல்லோரும் நன்கறிந்ததே. அந்த உத்திரவினால் பிரதிகூலம் அடைந்தவர்களில் நானும் ஒருவனுதலால் அதைப்பற்றி இங்கு என்னபிப்பிராயத்தைக் கூறுது விடுகிறேனேயன்றி வேறல்ல. ஆனல் முனிசிபல் சங்கத்திலிருந்து விலக்கப்பட்டவர்கள், பிறகு எக்காலத்தும் தேர்ந்தெடுக்க லாயக்கற்றவர்களென விதித்ததானது, கிரியாம்சையில் புதுக்கோட்டை நகரவாசிகளை சிக்ஷித்ததாகும்; ஏனெனில் தங்களுடைய அபிப்பிராயத்தில் நம்பிக்கைக்கு லாயக்கானவர்களென்று, தோன்றுகிற நபர்களைத் தேர்ந்தெடுக்க இடமில்லாமற் போய்விட்டது. புதுக்கோட்டை நகரவாஸிகள் தங்களுக்குள்ள உரிமையை இவ்வண்ணம் இழப்பதற்கு யாதொரு பிசகும் செய்யவில்லையென்று சிறிதும் கூசாமல் சொல்லலாம். இப்பொழுது ஏற்பட்டிருக்கும் பெருந்தொகையானவும், அன்போடு கூடினவுமான புதிய ஆக்ஷியில், அந்த உத்திரவு மாறுதலடைந்து, ஜனங்கள் ஒக்குமத்துடன், உபயோகமான வேலையைச் செய்வதற்கு அவர்களுக்கு சந்தர்ஷ்டி ஏற்படுமென்று நம்புவோம். இப்போதிருக்கும் நிலைமையில் டவுன் முனிசிபாலிடியானது, ஸர்க்கார் உத்தியோகஸ்தர்களைக் கொண்டு நடத்தப்படும் ஸர்க்கார் இலாகாவாய்த்தானிருக்கிறது. நமக்கு எதார்த்தமான சுயஆட்சி இருந்தால் இருக்கவேண்டும்; பேருக்கு மட்டில் இருப்பதைவிட இல்லாமலிருப்பது மெத்தவும் நலமானது. ராஜ்ய நிர்வாகத்திலேயே திவானுடன் சேர்த்து இரண்டொரு பிரஜைகளை கௌன்சிலர்களாக நியமிப்பதாக மாக்ஷிமை தங்கிய மகாராஜா அவர்கள், தமது ராஜகட்டளையில் வாக்களித்திருப்பதால் முனிசிபல் சங்கத்திற்கு உத்தியோகஸ்தரல்லாத தலைவர் ஒருவரே தேர்ந்தெடுக்கும்படியான காலம் வரவில்லையென்று சொல்ல ஒவ்வாது. ஆனல் வரி செலுத்துவோர்கள் தங்களுடைய தேவைகளை எடுத்துக்காட்டவும், தங்களுடைய பிரதிநிதிகள் சரிவர தங்கள் வேலைகளைச் செய்கிறார்களாவென்று கவனிப்பதற்கும் வரிசெலுத்துவோர்களின் சங்கம் ஒன்று ஏற்படுத்திக் கொள்ளுதல் அவசியம்.

17. கிராமசுகாதாரம், நீர்ப்பாசனம் இவைகளைக் கவனிக்கவும் சில்லரையாக சிவில் கிரிமினல் வழக்குகளை தமக்குள்ளேயே விசாரித்து ஏற்பாடு செய்துகொள்வதற்கான அதிகாரத்துடன் கூடிய கிராமப் பஞ்சாயத்துகள் சமஸ்தானமெங்கும் ஏற்படவேண்டும். இப்போது வழக்குகள் போடுவதில் அபரிமிதமான பணச்சிலவு ஏற்படுவதால் சிவில் வழக்குகளை, கோர்ட்டுகளுக்கு வராமலேயே பஞ்சாயத்தார் மூலம் தீர்த்துக் கொள்ள ஜனங்கள் இயன்றமட்டும் முயற்சி எடுத்துக் கொண்டு, உழைக்கவேண்டும்.

18. கனவான்களே! சென்ற வருஷம் ஏற்படுத்திய மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டியானது 13--11--22ல் ஸ்ரீ ரீஜண்டு சாகேப் அவர்களுக்கு மகாநாட்டின் கோரிக்கைகளைக் கண்டெழுதிய வந்தேமாதரம் பத்திரிகை ஒன்று கொடுத்தது. வந்தேமாதரம் பத்திரிகைகளின் பிரதிகள் இப்பொழுது உங்களுக்குக் கிடைக்கும். அந்தக் கமிட்டி செய்த காரியத்தை நீங்கள் அங்கீகரிப்பீர்களென்று நம்புகிறேன். அத்தியாவசியமாய் விலக்கு ஏதேனும் செய்யப்படவேண்டியது நியாயமாயிருந்தால் அப்படிப்பட்ட பிரசுக்களில் தவிர மற்றபடி எப்பொழுதும், சமஸ்தானத்து ஜனங்களுக்கே எந்த உத்தியோகமும் கொடுக்கப்படுமென்ற கிரமம் அநுஷ்டிக்கப்படும் என்றும், இதைப்பற்றி எல்லாரிலாகாத் தலைவர்களுக்கும் உத்திரவு அனுப்பப்பட்டிருக்கிறதென்றும் கூறினார். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரின் பஹிஷ்கார உத்திரவை மாற்றவேண்டுமென்ற கோரிக்கை முதலாகிய யாவற்றையும்பற்றி சாதகமாய் யோஜிப்பதாகவும் கூறியிருக்கிறார். மேலும் இந்த வந்தேமாதரம் பத்திரிகையைக் கொடுப்பதற்கான தினத்தைக் கேட்டறிந்துவர நான் சென்றிருந்தபொழுது, அவர் ஜனங்களுடைய பிரதிநிதிகளிடமிருந்து, ஜனங்களுக்காக எடுத்துச்சொல்லும் சங்கதிகளைப்பற்றி கவனிப்பதற்கு தான் எப்பொழுதும் சித்தமாயிருப்பதாகவும், கூறியிருக்கின்றார். இப்பொழுது காட்டியிருக்கும் அனுகூலத்தை நாம் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டு பயன்படுத்திக்கொள்ளவேண்டும்.

19. மகாராஜா அவர்களின் அரசாங்கியின் கீழ், பொறுப்புள்ள ஆட்சியைப் பெறுவதே நமது லக்ஷியமாதலால் அதை கிரமமான வழியில் சம்பாதிப்பதே நமது கடமையாகும். அதை யடையும் வரையில் நாம் ஓயாமல் முயற்சி செய்யவேண்டும். ஜனங்களையும் பரிபக்குவமடைந்து அதற்கு லாயக்காகும்படி நாம் செய்யவேண்டும், இங்கிருக்கும் காலதேச வர்த்தமானங்களை உத்தேசித்து அதற்கேற்றபடி, ராஜாங்கத்தோடு, பொதுஜன நன்மைக்கான சகல காரியங்களிலும் நாம் ஒத்துழைக்கவேண்டும். நம்மைப்

பற்றி இழித்துரைப்பவர்கள், அவர்களுக்கு இஷ்டமானபடி சொல்லிக்கொள்ளட்டும். நாம் இதுவரையில் ஒத்துழையாமை ஏற்பாட்டை கைக்கொண்டிருக்கவில்லை. இனியும், அதிகாரிகளுடைய காரியங்களைப்பற்றி குறைகூற அவகாசமேற்பட்டால், அவர்களுடைய தயாதாக்ஷண்ணியத்திற்காவது, அல்லது அதிகாரத்திற்காவது பயப்படாமல், நமக்கு சரியென்று தோன்றுவதைத் தைரியமாய் எடுத்துக் கூறத்தான்வேண்டும். ஆனால் நமது நோக்கமானது ஜனங்களுடைய க்ஷேமத்தை உத்தேசித்தும், இராஜாங்கத்தார் தங்களால் நேரிட்ட பிசகை அறிந்துகொள்ள வேண்டுமென்பதுமே நமது நோக்கமாயிருக்கவேண்டும். உண்மையைக் கூறி நமது எதார்த்தமான சொந்த அபிப்பிராயத்தை எடுத்துக்கூறுவதில் கொஞ்சமேனும் கூசலாகாது. அவ்வாறு செய்வதினால் ராஜாங்கத்தின் அல்லது உயர்ந்த பதவியிலுள்ள அதிகாரியின் அப்பிரியம் வருமேயென்று கொஞ்சமேனும் நினைக்கக்கூடாது. நாம் நிஜத்தை எடுத்துச்சொல்லாததினால் அது கெட்டுப் போவதைக்காட்டிலும், நிஜத்தை எடுத்துச்சொல்லி அதனால் நாம் கெட்டாலும் கெடுவோம்.

20, கனவான்களே! நான் அதிகம் பேசி, உங்களை அலுக்க வைத்துவிட்டேன். நாம் இனி செய்யவேண்டிய வேலை மிகவும் ஜாஸ்தியாகவிருக்கிறபடியால், நான் இனி இப்பிரசங்கத்தை இத்துடன் முடிக்க விரும்புகிறேன். உங்கள் பொறுமைக்கும், நீங்கள் என்னிடம் காட்டிய பக்ஷபாதத்திற்கும் நான் உங்களுக்கு நன்றியறிவுள்ளவனாகயிருக்கிறேன். கடவுள் நம்மெல்லோருக்கும் நாம் இனி செய்யவேண்டிய காரியத்தில் உதவிபுரியவேண்டுமென்றும், நம்மெல்லோருக்கும் தைரியத்தையும், புத்தியையும், பரோபகார சிந்தனையையும் கொடுக்கவேண்டுமென்று பிரார்த்திப்பதோடு இப்பிரசங்கத்தை முடிக்கின்றேன். பின்வரும் உயர்ந்த உதாரமான எண்ணங்கள் நம் எல்லோருடைய நோக்கமாக இருக்கட்டும்.

"நான் என்னை நேசிப்பவர்களுக்காக வாழ்கிறேன்!

என்னை உண்மையாய் அறிந்தவர்களுக்காக வாழ்கிறேன்;

நான் கடவுளுக்காக, வாழ்கிறேன்;

உதவவேண்டிய சத்காரியத்திற்காக வாழ்கிறேன்;

தடுக்கவேண்டிய தீமைகளைத் தடுப்பதற்காக வாழ்கிறேன்;

இனிவரும் உலகத்திற்காக வாழ்கிறேன்;

தான் எல்லோருக்கும் உபகாரஞ் செய்வதற்காக
[வாழ்கிறேன்."

எஸ். விசுவநாதய்யர்,

17—11—1922.

மகாநாடு விமர்சையாய் நடந்தது. அக்கிராஸனர் பிரஸங்கத்தில் கூறியிருந்த விஷயங்களைப்பற்றி அவர் கூறிய யோசனைகளை யனுஸரித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மகாநாட்டிற்குப் பிறகு ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் அவர்கள் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்களுக்கு ஓர் கடிதம் எழுதியிருந்தார். அதில் மகாநாட்டிற்கு ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்கள் அக்கிராஸனம் வகிக்கக்கூடாமல் போய்விட்ட நிலைமையில், அப்பாச்சிக்கு பதில் மரப்பாச்சி என்றால் போல தான் அக்கிராஸனம் வகிக்க நேரிட்டதென்று தெரிவித்திருந்தார். அதற்கு ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்கள் தம்முடைய 22-11-1922 தேதியிட்ட கடிதத்தில் பின்வருமாறு எழுதினர்:—

"It is quite like you to talk of your presidency as a mere stop-gap. But from all accounts I have, you have filled the chair very worthily indeed. I do not know very many who are better fitted than you."

மகாநாடு நடந்த சில தினங்களுக்குப் பின் ஸ்ரீமான் S. விசுவநாதய்யரவர்கள் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜென்ட் ஸாஹேப் அவர்களைப் பேட்டி காண நேர்ந்தபொழுது அவர், மகாநாட்டின் அக்கிராஸனப் பிரஸங்கம் மிகவும் அழகாகவும் அடக்கமாகவும், நல்ல வாசகத்தில் எழுதப்பட்டிருந்ததென்றும், அதில் கூறியிருந்த விஷயங்களும், சிற்சிலதகளைப்பற்றித் தமக்கு அபிப்பிராய பேத மிருந்தபோதிலும் ஸாமானவைகளாயிருந்தனவென்றும் பாராட்டிப் பேசினர்.

12-வது அத்தியாயம்

புதிய ஆகூதியின் நல்ல ஆரம்பமும் ஐந்தாவது மகாநாடும்.

புத்துணர்ச்சியோடு கூடிய தமது ஆகூதியை மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜென்ட் ஸாஹிப் அவர்கள் நன்முகத் தொடங்கினர். அவர் சமஸ்தானத்தில் சுற்றுப் பிரயாணம் செய்து ஜனங்களின் குறை முறைகளைக் கேட்கிறதென்று ஏற்பாடு செய்துகொண்டார். சென்ற விடங்களிலெல்லாம் அவருக்கு வந்தனோபசாரப் பத்திரங்கள்; எங்கே போனாலும் உற்சாகமான வரவேற்பும் விழா அமளியுமாக விருந்தது. தன் வாழ்நாளில் தனக்கு கிடைக்கக்கூடிய பெரிய பதவியைப் பெற்றதனால் தான் ஜனங்களுக்கு செய்யக்கூடிய நன்மைகளைச் செய்யவேண்டுமென்ற யதார்த்தமான எண்ணம் அவர் உள்ளத்தில் குடிகொண்டது. மகாநாட்டின் நிரந்தரக் கமிட்டியார் தங்களுடைய வந்தனோபசாரப் பத்திரிகையில் கேட்டுக்கொண்டிருந்த கோரிக்கைகளை ஒவ்வொன்றாகப் பூர்த்தி செய்விக்கத் தொடங்கினர்.

இராஜீய மாறுதல்களினால் சமஸ்தான ஜவேஜி நிலைமை சீர்குலைந்து போயிற்று. பஸலி ஆரம்பத்தில் ரூ 35,88,958 கையிருப்பு இருந்தது; பஸலி வருமானம் ரூ 23,17,155; பஸலியின் செலவு ரூ 41,68,970; வரவு போக அதிகச் செலவு ரூ 18,38,046. எனவே சமஸ்தானக் கையிருப்பு ரூ 17,50,912க்கு சுருங்கிவிட்டது. கவர்ன்மெண்டாரவர்கள் சமஸ்தானக் கையிருப்புத் தொகையில் ரூ 20 லக்ஷம் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு கொடுத்துவிடும்படி உத்தரவு செய்ததிலிருந்துதான் இந்நிலைமை ஏற்பட்டது. மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமஸ்தானத்தின் கையிருப்புத் தொகையை முழுமையையுமோ அல்லது அதின் பெரும் பாகத்தையோ தனக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருந்தார். மிஸ்டர் பான் துரையவர்கள் புதுக்கோட்டை போன்ற காடாரம்பமான சிறிய சமஸ்தானத்தில் வெகு நாளாக சிரமப்பட்டு சேமித்து வைத்திருந்த

க்ஷேமநிதி போய்விட்டால் தூர்பிக்ஷ காலத்தில் ஜனங்கள் மிகவும் கஷ்டப்படுவார்களென்ற எண்ணத்துடன் க்ஷேமநிதியைக் காப் பாற்றி வைத்துக்கொள்ள வேண்டியது குடிகளின் க்ஷேமத்திற் கும் சரி, அரசாங்கத்திற்கும் சரி இன்றியமையாததென்று கருதிப் பாடுபட்டு வந்தார். அவர் இது விஷயமாய் தமக்குள்ள கவலையை வர்த்தத்துடன் ஓர் பெரிய உத்தியோகஸ்தரிடம் கூற, அவரும் ஸ்ரீமான் S. சுவாமிநாதய்யரவர்களிடம் ரஹஸ்யமாக "துரையவர் கள் இவ்வாறு நினைக்கிறார்கள், அதைக் காபந்து செய்துகொள்ள வழிதேடிக்கொள்ளுங்கள். ஆனால் இந்த விஷயம் நான் கூறிய தாக யாருக்கும் தெரியவேண்டாம். நீங்கள் ஜனங்கள் விஷயத் தில் உண்மையாக உழைத்துவருகிறீர்கள் என்கிறதினால் உங்க ளிடம் சொல்லலாமென்று துணிந்து சொன்னேன்" என்றார். உடனே இந்த விஷயத்தை ஸ்ரீமான் அய்யரவர்கள் ஸ்ரீமான் சுந்தரேச சாஸ்திரியள் முதலிய தமது ஆப்த நண்பர்களுக்குத் தெரிவித்து க்ஷேமநிதியை மகாராஜா அவர்களுக்குக் கொடுத்து விடக்கூடாதென்று பிரதிநிதி சபை சங்கம் போராடி வந்ததென்ப தும், அவ்வாறு போராடமலிருந்தால் இன்னும் அதிகமான தொகை மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு கொடுக்கப்பட்டி ருக்குமென்பதும் இங்கு குறிப்பிடத்தக்க சங்கதிகளாகும்.

இவ்வாறு 20 லக்ஷ ரூபாய் போனதுடன் சமஸ்தானத்திற்கு விருத்தியம்சத்திலிருந்து வந்துகொண்டிருந்த வருமானமும் குறைந்து விட்டது. ஆதலால் சமஸ்தானச் செலவை மட்டுப் படுத்த அவசியம் ஏற்பட்டது. அதற்கு ஏற்ற வழிகளை எடுத் துச் சொல்வதற்காக உத்தியோகஸ்தரல்லாத நால்வரும் ஒரு உத்தியோகஸ்தருமடங்கிய சிக்கனக் கமிட்டி ஒன்று நியமனம் செய்யப்பட்டது. கமிட்டியார் தங்களுடைய வேலையை சிக்கிரம் செய்து முடித்தார்கள். வேலைத் திறமைக்குப் பழுதுவராமலும், சிக்கனத்துக்கு ஹேதுவாகவும், அக்கமிட்டியார் சொல்லியிருந்த யோசனைகளை கைக்கொண்டு சமஸ்தான வருஷா வருஷச் செல வில் ரூ 26,000. வரை குறைக்கப்பட்டது.

புதுக்கோட்டைப் பிரஜைகளின் 5-வது மகாநாடு அரிமளத் தில் Dr. A. வேணுகோபால் நாயுடுகாருவின் தலைமையின் கீழ் 28-2-24ல் நடைபெற்றது. ஸ்ரீமான் அ. ச. ராமஞ் செட்டியா ரவர்கள் வரவேற்புக் கமிட்டித் தலைவராகவிருந்தார். அக்கிரா ஸனர் தமது பிரஸங்கத்தில் வரவேற்பு கமிட்டியார் தன்னைத் தலைவராகத் தேர்ந்தெடுத்ததற்கு தமது மனப்பூர்வமான வந்த னத்தைத் தெரிவித்துவிட்டு, மகாத்மா காந்தியவர்கள் சிறைக் கோட்டத்தினின்று வெளிவந்ததை முன்னிட்டு எல்லோரையும் க்ஷணம் எழுந்து கடவுளை தியானிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

அவ்வாறே மகாநாட்டில் கூடியிருந்த எல்லோரும் எழுந்து நின்று நியாயித்தபிறகு ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரின் சேவையைப் பாராட்டிப் பேசி மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹிப் அவர்கள் ஸ்ரீமான் அய்யருக்கு விரோதமாக பிறப்பிவிக்கப்பட்ட பஹிஷ்கார உத்தரவை மாற்றியதற்கு நன்றி பாராட்டிப் பேசின பிறகு 'ஹிந்து' பத்திராதிபர் கஸ்தூரிரெங்கய்யங்காரும். சமஸ்தான வைத்திய இலாகாவில் வேலை பார்த்து வந்த டாக்டர் K. நாராயணய்யரும் காலகதியை அடைந்ததற்கு வருந்தி அனுதாபம் தெரிவித்துவிட்டு, அரிமளம் நகரத்தின் பெருமை, மகாநாட்டின் அவசியம், ஜனநாயக ஆக்ஷியின் அவசியம் இவைகளை எடுத்துக் கூறிவிட்டு ஜனங்களுடன் ஆலோசிக்காமல் சமஸ்தானப் பணம் 20 லக்ஷ ரூபாய் மகாராஜா அவர்களுக்குக் கொடுத்ததைக் கண்டித்தும், சிக்கன கமிட்டியின் வேலை, மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களுக்குக்கொடுத்த வந்தனோபசாரப் பத்திரிகையில் கண்டிருந்த கோரிக்கைகளில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதாய் பாக்கி நின்ற விஷயங்கள், கல்வி இலாகா செய்ய வேண்டிய அபிவிர்த்தி, சட்ட சபை அங்கத்தினர்களிலிருந்து Deputy President-ஐ தேர்ந்தெடுக்கும் உரிமை வழங்கப்பட வேண்டுமென்பது, சீப் கோர்ட்டு சீர்திருத்தம், ராஜ்ய நிர்வாகத்திற்கு கௌன்ஸிலர்கள் நியமிப்பது, பஞ்சாயத்துகள் ஸ்தாபிப்பது, கைத்தொழில் அபிவிர்த்தி, சுகாதாரம், கலால், தமிழ் வித்வான்களுக்கு ஆதரவளிப்பது, சட்ட சபைக்கு தகுந்த நபர்களைத் தேர்ந்தெடுக்கவேண்டியதின் அவசியம், மகாநாட்டின் நிரந்தர வேலை, சுங்க வரி விஷயம், ரீஜென்ஸி செலவை மகாராஜா அவர்களின் அல்லவன்ஸிலிருந்து கொடுக்கவேண்டுமென்பது இவைகளைப்பற்றி தெளிவாகவும் விரிவாகவும் எடுத்துக் கூறினர்.

அக்ராஸனர் பிரசங்கத்தின் அடியிற்கண்ட பகுதிகள் குறிப்பிடத்தக்கவை:—

மகாநாட்டின் அவசியம்.

கலியுகத்தில் கூட்டங்களினால்தான் நினைத்த காரியங்கள் சித்திபெறுமென்பது புராண இதிகாசங்களின் தீர்க்க தரிசனம். அம்மாதிரியே இம்மஹாநாடும் சென்ற 4-வருஷங்களில் அசேஷ ஜனங்களுக்கு விசேஷ ராஜரீக ஞானத்தை பல இடங்களில் கூடியதால் வெளிப்படுத்தி அபிவிர்த்தி செய்திருக்கிறது. நாம் பொறுப்புள்ள ஆட்சியை அடையவேண்டுமானால் முதலில் மஹாஜனங்கள் ராஜ்ய நிர்வாக நீதிகளை அடையும் மார்க்கங்களில், தனிக்கமிட்டி நியமித்து அதன் மூலமாய் பிரசாரம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டும். இதுவரையிலும் கிராமங்களில் நடைபெற்று வரும் முறையிலேயே இம்மஹாநாடும், இங்கரில் நடைபெற

சேர்ந்திருப்பது இம்மஹாநாட்டின் மூலக் கொள்கையையே ஸ்தாபிக்கிறதாகும். கிராமம் வாழ்ந்தால் நகரமும், நகரம் வாழ்ந்தால் நாடும் உயர்ந்து வாழும் என்பது முதுமொழி. அதன்படி கற்றவர்கள் கவனிக்கவேண்டியது முதலில் கிராம மஹாஜனங்களின் அபிவிர்த்தியேயாம். இம்மஹாநாடு அம்மார்க்கத்திற்கு ஒரு சாதனமாயிருக்கிறது.

ஆதலால் நிரந்தரக் கமிட்டியார்களும், மஹாஜனங்களும் பிரதி வருஷம் வெவ்வேறு கிராமங்களில் இம்மஹாநாட்டை நடத்த இடைவிடா ஊக்கம் எடுத்துக்கொண்டு ஜனங்களின் குறைகளை அவ்வப்போது நிவர்த்திக்க வழிதேடுவது மிக அவசியமாகும். "தெய்வம் புருஷ ரூபேண" என்றபடி மஹாஜனங்களின் முயற்சிக்கு தகுந்தபடியே தெய்வமும் பலனைக் கொடுக்கும் என்பதை ஒவ்வொருவரும் மனதில் நிலைநிறுத்திக் கொள்ளவேண்டியது. "தனக்கு மருத்துவன் தான்" என்பதும் தன்னை உயர்த்துவானும் தன்னிலை கலங்கி கீழ்நிலையில் செலுத்துகின்றவனும் தான் என்பது நீதி வாக்யம். மஹாஜனங்கள் விசேஷ அறிவை பெற்றுள்தான் சரியான பிரதிநிதிகளை தேர்ந்தெடுத்து சட்டசபைக்கு அனுப்புதல் கூடும். பிரதிநிதிகளும் தங்கள் ராஜீய அறிவால் ஜனசம்மதமான பொறுப்பாட்சியில் தியாக புத்தியுடனும், சிரத்தையுடனும் உழைக்கக்கூடும். ஆகையால் இம்மஹாநாட்டை சீரும் சிறப்பும் பெற வருஷந்தோறும் தவறாமல் நடத்திவருதல் மஹாஜனங்களின் கடமையாகும். எதேச்சாதிகாரமுள்ள அரசன் அரசு செலுத்து முறை தமிழகத்திலுள்ள நமக்கு புதிதானதே. பண்டை காலத்தில் தமிழரசர்கள், ஜனப்பிரதிநிதிகளின் ஆலோசனைகளை எல்லா ராஜீய நிர்வாகங்களிலும், கலந்துகொண்டே நடத்தி வந்திருக்கிறார்கள் என்பது புறநானூறு, பதிற்றுப்பத்து, மணிமேகலை, முதலிய சங்க இலக்கியங்களை ஆராய்ச்சி செய்பவர்களுக்கு நன்கு விளங்கும். ஓர் காலத்தில் இந்தியா முழுவதுமே இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனும் அவன் மகன் சேரன் செங்குட்டுவனும், அரசாட்சி ஜனநாயக முறையில் செய்திருக்கிறார்கள் என்பது சரித்திராசிரியர்களால் பிரசித்தப்படுத்தப்பட்டுவருகிறது. அவர்கள் வழித் தோன்றிய நாம் ஜனப் பொறுப்பாட்சிக்கு லாயக்கில்லாதவர்களென்றும், அம்முறையை அறியாதவர்கள் என்றும், அத்தகுதியை சம்பாதிக்க பல காலம் பழக்கப்பட வேண்டும் என்றும் கூறும் குறைக்கு ஆளாகியிருக்கின்றோம். வீரத்திலும், ராஜ்ய நிர்வாகத்திலும் திலகம்போல் நமது முன்னோர்கள் சிறப்பு பெற்றிருந்தார்கள் என்பதை நினைத்தாவது நாம் ஸிம்மக் குட்டியே, நரிக்குட்டியன்றென்று நம் பழம் பெயரை ஸ்தாபித்துக்கொள்ள முன் வருவோமாக.

ஜனநாயக ஆக்ஷி.

சபையோர்களே! சென்ற 3-வது 4-வது மஹாநாடுகளில் தலைவர்களாலும் மஹாஜனங்களாலும் நிறைவேற்றப்பட்ட நமது ராஜ்ய க்ஷேமத்திற்கு மிக முக்யமான தீர்மானமொன்று அதிகாரிகளால் அலட்சியம் செய்யப்பட்டு மஹாஜனங்களின் நியாயமான விருப்பத்திற்கு எதிரிடையாகவும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது, இது ஒன்றே ராஜ்ய நிர்வாகத்தில் மஹாஜனங்களுக்கு யாதொரு விதமான நெருங்கிய சம்பந்தமும் ஆலோசனையும் கொடுபடவில்லையென்பதை நிதர்சனப்படுத்துகிறது. இவ்விஷயத்தை அதிகாரிகளைப்போல் மஹாஜனங்கள் அறியாமல் மூடுமந்திரமாக வைக்க எனக்கு உத்தேசமில்லை. நம் சமஸ்தான மஹாஜனங்களால் வருஷா வருஷம் செலுத்தப்படும் தீர்வைப்பண வசூலிலிருந்து, ராஜ்ய நிர்வாக செலவுகள் போக மீதியிருந்த சுமார் 40 லட்சம் ரூபாயை, மஹாஜனங்களின் எதிர்பாராத பஞ்ச நிவர்த்திக்காவது, ரயில், நீர்ப்பாசன முதலிய சாதனங்களுக்காவது உபயோகிப்பது என்று சென்ற வருஷம் வரையில் நிர்வாகம் செலுத்திய அதிகாரிகள் மஹாஜனங்களுக்கு உறுதி கூறி வந்திருக்கிறார்கள்.

20 லக்ஷ ரூபாய்.

ஆனால் மஹா ஜனங்களுடன் ஆலோசியாமலும் வலிதிற் கூறிய மஹாநாட்டாரின் மூன்னறிந்த ஆலோசனைகளைப் புறக்கணித்தும், அதிகாரிகள் கூறிவந்த உறுதிமொழிகளை பங்கப்படுத்தியும் குடிகளின் க்ஷேம நிதியாகிய 40 லட்சத்தில் பெருந்தொகையாகிய 20 லட்சத்தை எதேச்சையாய் அதிகாரிகள் ராஜ்ய நிர்வாக சம்பந்தமல்லாத செலவினத்தில் செலவு செய்திருப்பதை இம்மஹா நாட்டினரின் சார்பாக வெகு வருத்தத்துடன் கண்டிக்காமலிருக்கக்கூடவில்லை.

சட்ட சபை அக்ராசனர்.

நாம் அநேக மஹாநாடுகளில் இதுவரையிலு மிருந்துவந்த ஜனப்பிரதிநிதி சபைக்குப் பதிலாக நிறைந்த பிரதிநிதிகளைக் கொண்டதாயும், பிரதிநிதிகளின் அபிப்பிராயத்திற்கு அரசாட்சி கட்டுப்பட்டதாயு மிருக்கும் வண்ணம் மற்றொரு சட்ட சபையை மாற்றியமைக்கும்படி கேட்டுக்கொண்டிருக்கிறோம். நம் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு மகா-ள-ள-ஸ்ரீ ரீஜண்டு சாகேப் அவர்களும் முன்வந்திருக்கிறார்கள். அதற்காக மகா-ள-ள-ஸ்ரீ ரீஜண்டு சாகேப் அவர்களுக்கு நன்றி செலுத்துவோம். ஆனால் திருத்தியமைக்கப்படும் சட்டசபையைப்பற்றிய விதிகள் இன்னும் வெளிவரவில்லை. கூடிய சீக்கிரம் வெளி வரப்போகின்

றது. ஏற்கனவே வெளிவந்திருக்கும் நகல் விதிகளின் ஒழுங்கு களேயே அநேகமாய் வெளிவரப்போகும் சட்டசபை சம்பந்த மான விதிகளும் அடக்கி இருக்கலாம் என நினைத்து என் அபிப் பிராயத்தை இவ்விடம் கூறுகிறேன். என்னனுபவத்தில் புதுக் கோட்டை அரசியல் முறையில் பிரிடிஷ் இந்தியாவில் அனுஷ் டித்து வருகிற ஒரு அரசியல் முறை அங்கு மாற்றப்படும் தருணத்திலேயே நம் சமஸ்தானத்தால் அப் பழைய முறை புதிய சீர்திருத்தமாக நமக்கு வழங்கப்படுகின்றது. இம்முறையி னலும் அவர்களுக்குள்ள மாற்றப்பட்ட இலாகா பொறுப்புகள் கூட இங்கு வழங்கப்போகும் சீர்திருத்த சட்டசபைக்கு இல்லை யென்றே சொல்லலாம். இதுவரையி லிருந்துவந்த பி. நி. சபையைக்காட்டிலும் மெம்பர்களை வெகு சொல்பமாக 30-ஐ 40-ஆக உயர்த்தியிருக்கும் ஒரு அம்சம் தவிர மற்ற எந்த அம் சத்திலும் (வரி விதித்தல், வரவு செலவு திட்டம் செய்தல், முடிவு செய்தல், சட்ட திட்டங்களை ஏற்படுத்தல்) சீர்திருத்தி யமைத்தி ருப்பதாக காணப்படவில்லை. சட்ட சபை அங்கத்தார்களும் சில விஷயங்களில் சம்பந்தப்படவே கூடாதென்றும், சபையில் நிறை வேறிய தீர்மானங்கள் அரசாங்கியை கட்டுப்படுத்தாதென்றும் அவ்விதியில் கண்டிருக்கின்றன. இது ஒரு பெரிய ஏமாற்றமும் அதிருப்திகரமுமேயாகும். மஹாஜனங்களே! நீங்கள் எண்ணி யிருக்கும், சர்க்காரை சட்ட சபைக்கு கட்டுப்படுத்தும் பொறுப் பாட்சியை சாதித்துக்கொள்ள சட்டதிட்டங்களுக் கடங்கிய சாத் வீகமான எல்லா முறைகளிலும் போராட வேண்டுமென்பதை, வெளிப்படையாகச் சொல்லுகிறேன். மேலும் சமீபத்தில் ஏற் படப் போகும் சட்டசபையில் திவானவர்களே பிரசிடெண்டாக இரண்டொரு வருஷங்கள் நிர்வகித்து வந்த பிறகு அந்த ஸ்தா னத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளில் ஒருவரையே பிரசி டெண்டாக ஏற்படுத்த வேண்டுமென்றும், அதற்கு இப்பொழுது முதற்கொண்டே தயாரிப்பதற்காக தேர்ந்தெடுக்கப்பட்டவரில் ஒருவர் Deputy President ஆக மெம்பர்களைக்கொண்டு தேர்ந் தெடுக்கப்பட வேண்டுமென்றும் மஹா நாட்டில் நீங்கள் ஆலோ சனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கி றேன்.

சீப் கோர்ட்டு சீர்திருத்தம்.

மூன்றிய மகா நாட்டின் தீர்மானங்களை அனுசரித்து அசல் கோர்ட்டோடு சம்பந்தப்படாத பிரத்யேகமான அப்பீல் கோர்ட்டை நியமிப்பதும் இனி நியமிக்கும் ஜட்ஜிகளையாவது ஆயுள்பரியந்தம் நியமிக்காமல் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கென்று நியமித்தலும் இன்றியமையாதது. மிகவும் சிறியதாகிய நமது சமஸ்தானத்தில், ஆயுள்பரியந்தத்திற்கென்று ஜட்ஜுகள் நியமிக்

கப்பட்டால் அவர்கள் கட்சிக்கார ஜனங்களின் பேரில் ஒருவித மான நல்ல அல்லது கெட்ட அபிப்பிராயத்தை வகிக்கும்படி நேரிடலாகும். அதனல் நியாயக் குறைவும் நிச்சயமாய் ஏற்பட்டு விடும். இதைத் தவிர்ப்பதற்காகவேதான் பிரிடிஷ் இந்தியாவிலும் 2, 3, வருஷங்களுக்கு மேல் நியாயாதிபதிகளை ஒரே இடத்தில் வைக்கிறதில்லை. ஆதலால் ஜட்ஜிகள் நியமிப்பதில் ஓர் கால வரையறையை ஏற்படுத்துவது அவசியமேயாகும். அது எவ்வ ளவு காலத்திற்கு என்பதை மஹா காட்டில் தீர்மானிக்கலாம்.

கவுன்ஸிலர்கள்.

மகா-ரா-ரா-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் ரீஜன்ஸி ஏற்படுத்தும் காலத்தில் பிரசுரம் செய்த ராஜ கட்டளைப்படி ராஜ்ய நிர்வாகத் தில் 1 அல்லது 2 கவுன்ஸிலர்கள் மகா-ரா-ரா-ஸ்ரீ நிவானவர்களுக்கு உதவியாக உத்யோகப்பற்றில்லாத ஜனப்பிரதிநிதிகளிலிருந்து சிக்கிரம் நியமிக்கப்படுவார்கள் என்ற அம்சம் ரீஜன்ஸி ஏற்பட்டு $1\frac{1}{2}$ வருஷங்களாகியும் நாளது வரையில் அமுலுக்கு வரக் காணும்; ஆலோசனையிலும் எடுத்துக்கொண்டிருப்பதாக வதந் திகளும் இல்லை. இதுவும் ஓர் முக்கியமான விஷயமாயிருப்ப தால், மஹாஜனங்களின் அபிப்பிராயத்தைத் தீர்மான மூலமாய் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜண்டு சாகேப் அவர்களுக்குத் தெரிவிக்கவேண் டியது.

தமிழ் வித்வான்கள்.

சோசோழ மன்னர்களுக்குப் பின் இத்தென்னாட்டில் தமிழரசராயிருப்பவர்கள் நமது மஹாராஜா அவர்களே. இச்சமஸ்தான த்தில் முற்காலங்களில் பல தமிழ் வித்வான்கள் ஆதரிக்கப்பட்டு வந்திருக்கின்றனர். பிறகு எக்காரணத்தாலோ அவர்களுக்கு அவ்வாதரவு குன்றி சமஸ்கிருத வித்வான்கள் மாத்திரம் சன்மா னிக்கப்பட்டு வந்தனர். இக்குறையை மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜண்டு சாகேப் அவர்கள் நீக்கி, அடுத்த நவராத்ரி கொண்டாட்ட காலத்தி லிருந்து தமிழ் வித்வான்களுக்கும் சன்மானம் செய்து வரும்படி உத்திரவு செய்திருப்பதற்கு நாம் எல்லோரும் நன்றி பாராட்ட கடமைப்பட்டுள்ளோம். நமது ராஜ்ஜியத்தில் தமிழே தாய் பாஷையாகவும் சமஸ்தான பாஷையாகவும் இருந்து வருவதில் தமிழ்ச் சங்க பரீட்சைகளில் தேரிய வித்வான்களுக்கும் இச் சமஸ்தானத்தில் உத்யோகங்கள் கிடைக்கும்படி ஏற்பாடு செய்து உயர்தர படிப்பிற்கு ஓர் தமிழ் கலாசாலையும் வைத்து நடத்தினல் தமிழ் பாஷை இன்னும் சீரும் சிறப்புமடைய வழியுண்டாகும். பலரும் அலட்சியம் செய்து வரும் தமிழ் பாஷையை அபிலாஷை வைத்து படிக்க முன் வருவார்கள் என்பது நிச்சயம்.

சட்டசபை தேர்தல்கள்.

சகோதர பிரதிநிதிகளே! நாம் சேர்ந்திருக்கும் இம்மஹா நாட்டில் மிக முக்யமாய் கவனிக்கவேண்டிய விஷயம் அடுத்த ஜனப்பிரதிநிதி சபையாகிய சட்டசபையைப்பற்றியதாகும். நமது சமஸ்தான வாசிகளின் வாழ்வும் தாழ்வும் வரப்போகும் சபையில் வீற்றிருக்கப்போகும் நமது பிரதிநிதிகளைப் பொருத்தேயிருக்கின்றன. என் எனில், குடிகளின் கஷ்ட நஷ்டங்களை அரசாட்சியார் வெகு சுலபமாகத் தெரிந்துகொண்டு அதை நிவர்த்தி செய்து நமக்கு க்ஷேமத்தை உண்டுபண்ணவே இச்சட்ட சபை மஹாராஜா அவர்களால் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. இச்சபையில் நமக்குள்ள குறைகளை அஞ்சாது எடுத்துக்கூறி நமக்கு நன்மையுண்டு பண்ணத்தக்க தைரியமுள்ள தலைவர்களையே நமது பிரதிநிதிகளாக ஒவ்வொரு எலக்ஷன் பிர்க்காவிலும் நாம் பொருக்கி எடுத்து, அவர்களுக்கே வாக்களிக்கும்படி நமது வோட்டர்களை திட்டம் செய்யவேணுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். எனென்றால் நாம் ஒத்துழைக்கும் பிரஜைகளாக விருத்தலினால் நமது குறைவுகளை அப்பிரதிநிதிகளாலேயே தீர்த்துக்கொள்ள வேண்டியவர்களாக இருக்கின்றோம். அப்படி அவர்கள் நமது குறைகளை சரிவர எடுத்துக்காட்டி க்ஷேமம் உண்டாக்காவிடத்து அவர்களால் நமக்கு எவ்வித நன்மையும் உண்டாகாதென்பதை ஞாபகப்படுத்திக்கொள்ளவேண்டும். நமக்குள்ள குறைகளோ பல. நமது நாடுள்ளாரனைவரும் கிருஷிகள். மழையும், விளைவும் வருஷத்திற்கு வருஷம் குறைவே. மழை பெய்தாலும் பெய்யாவிடினும், விளைந்தாலும் விளைவில்லாவிட்டாலும் நிலவரி தள்ளுபடியின்றி தாராளமாய் வசூலிக்கப்பட்டு வருகிறது. நம் நாட்டை யடுத்தும் நீர்ப்பாசன வசதியுள்ளதுமான தஞ்சை, திருச்சி, முதலிய விடங்களைப் பார்க்கிலும் நமக்கு ஏற்பட்டுள்ள வரிகள் குறைவுள்ளனவல்ல. விளைச்சல் இல்லை யென்றாலும் வரி வஜா செய்வதென்பது நமக்குக் கிடையாது. ரயில் வசதியோ சென்ற பல வருஷங்களாக இதோ வருகிறது அதோ வருகிறது என்ற பேச்சுதான் நாம் கண்ட பலன். முனிசிபாலிட்டியோ "அன்று பார்த்த மேனிக்கு என்றும் குறைவில்லை" என்றபடி நாம் பல தரம் கேட்டுக்கொண்டிருந்தும் உத்யோகப்பற்றுள்ளவரே அக்ராசனாதிபதி. இன்னும் கல்வி, சிவில் கோர்ட்டு, சுகாதாரம், ஆப்காரி முதலான விஷயங்களைக் கவனித்து வேண்டுவன செய்யுமாறு ஆழ்ந்த அனுபவமும் தேச பக்தியும் அபிமானமும் உள்ள கனவான்களையே பார்த்து வரப்போகும் சட்டசபைக்கு நியமித்தனுப்ப வேண்டியது மிக முக்யமானதென்று எண்ண வேண்டும்.

மகாநாட்டின் நிரந்தர வேலை.

இதுவரை மகாநாடுகள் கூடிக் கலையும் காலத்து நிரந்தரக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தி, மகாநாட்டின் தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயமாய் வேலை செய்ய ஏற்படுத்துவது வழக்கம். அந்தக் கமிட்டி மறு மகாநாடு கூடும் வரை சுறுசுறுப்பாக வேலை செய்வதில்லை. வேலையே செய்யாமலுமிருக்கும். இனிமேல் அம்மாதிரி இருக்கக்கூடாது. இனித்தான் ஜனப் பிரதிநிதிகள் ஜனங்களிடை அதிக வேலை செய்ய வேண்டியிருக்கிறது. அதற்காக நிரந்தரமாய் வேலை செய்ய, அகில இந்திய காங்கிரஸ் மகாசபை செய்யும் நடவடிக்கைகளை யொத்து இங்கும் காரியங்களைச் செய்தால்தான் நாம் இனி அனுஷ்டிக்க விருக்கும் முறைகளுக்கு சாதகமாயிருக்கும். இதைப்பற்றி மகாநாட்டில் தீர்மானங் கொண்டுவந்து, நமது லக்ஷியம் கைகூடும் வண்ணம் எல்லோரும் சேர்ந்து உழைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரீஜன்ஸி செலவு.

சமஸ்தானத்தின் நிர்வாக சம்பந்தமான செலவுகள் ஏற்கனவே யிருந்துவந்ததைவிட அதிகமாய் போய்க்கொண்டிருக்கிறது. பல வருஷங்களாக எதிர்பாராத பஞ்சம். நீர்ப்பாசனம், ரயில் வசதிகளுக்கென்று க்ஷேமநிதியாக சேமித்துவைத்துள்ள சமஸ்தானத் தொகையில் 20-லட்சம் சமஸ்தானத்திலிருந்து போய் விட்டபடியால் நிர்வாகச் செலவை குறைக்கவேண்டியதவசியமாயிருக்கிறது. சமஸ்தான அரசியலில் ரீஜன்ஸி ஏற்படுத்தவேண்டியது மகா-ள-ள-ஸ்ரீ மஹாராஜா அவர்கள் மேஜட்டிலேயே காலம் கழிப்பது என்ற தீர்மானத்திலல்லது சமஸ்தான வாசிகளின் பிழைகளால் அல்ல. ஆதலால் ரீஜன்ஸியால் ஏற்படும் செலவை மஹாராஜா அவர்கள் தம் அல்லவன்ஸிலிருந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று மகா-ள-ள-ஸ்ரீ மஹாராஜா அவர்களை நாம் வணக்கத்துடன் கேட்டுக்கொள்வது உசிதமேயாகும். இதை நீங்கள் அங்கீகரித்தால் மஹாநாட்டில் நாம் எல்லோரும் ஏகோபித்து மஹாராஜா அவர்களுக்கு அவ்வாறு விண்ணப்பம் செய்து கொள்ளலாம்.

முடிவுரை.

கனவான்களே! இதுகாறும் நீங்கள் யாவரும் உங்கள் அரும் பெரும் காரியங்களை விட்டும் மஹாநாட்டிற்காக வெகு தூரங்களிலிருந்து வந்து மிகப் பொறுமையுடனிருந்து கேட்டதற்கும், நீங்கள் காட்டிய அன்பிற்கும் நான் மிக்க நன்றியறிதலுள்ளவனாய் இருக்கின்றேன். இவ்வளவு நேரம் நான் பல விஷயங்களையும் எடுத்துக்கூறி அதிக நேரம் உங்களுக்கு சிரமத்

தைக் கொடுத்துவிட்டேன். அதுபற்றி குறைகூற மாட்டீர்கள் என்று நம்புகிறேன். ஆனால் ஒரு விஷயம் மட்டும் எடுத்துச் சொல்லி எனது பேச்சை இத்துடன் நிறுத்திவிடுகிறேன். நமது சமஸ்தானத்தின் சுற்றுப் பக்கங்களில் பிராமணர், பிராமணரல்லாதார் என்ற கட்சிகள் உண்டாகி ஒற்றுமையைக் குறைத்து வருகிற இந்நாளில் நமது சமஸ்தானத்தில் அவ்விதப் பிளவு பாடுகளின்றி பிராமணர், பிராமணரல்லாதார், மஹம்மதியர், கிருஸ்தவராகிய எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்ந்து வருவது நற்காலமென்றே கூறுவேன். நமது தேசாபிமான சிங்கமாகிய பாரதியாரும்,

"ஒன்றுபட்டா லுண்டு வாழ்வே,—நம்மில்
ஒற்றுமை நீங்கினால் அனைவர்க்குந் தாழ்வே,
நன்றிது தேர்ந்திடல் வேண்டும்"

என்று விளக்கிக் காட்டியிருக்கிறார். ஆதலால் நாம் ஒவ்வொரு வரும் ஒற்றுமையுடனும் ஊக்கத்துடனும் நமது லட்சியத்தை நிறைவேற்றி க்ஷேமமாய் வாழ எல்லாம்வல்ல இறைவன் நமக்கு நல்லருள் பாலிப்பாராக.

வந்தேமாதரம்.

15-2-24 அ. வேணுகோபால் நாயுடு.

ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர் அவர்களும் மகாநாட்டில் பிரஸன்னமாயிருந்தார். முக்கியமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மகாநாடு சிறப்பாகவும் உற்சாகத்தோடும் நடைபெற்று இனிது முடிந்தது.

13-வது அத்தியாயம்.

சட்டசபை ஸ்தாபனமும் 'ஜனமித்திரன்' உதயமும்

சட்டசபை அமைப்பதற்காக 1924ம் வரு ஏப்ரல் மாதத்தில் சட்டம் ஏற்படுத்தப்பட்டது. தேர்தல்கள் நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளும் செய்யப்பட்டு தேர்தல்களும் நடந்தன.

சட்ட சபையைத் திறந்துவைப்பதற்காக 1924ம் வரு செப்டம்பர் மீ 29-ம்உ தர்பார் மண்டபத்தில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அத்திறப்புவிழாவின் விவரம் பின்வருமாறு:—

புதுக்கோட்டை சட்ட சபை திறப்பு விழா விவரம்.

புதுக்கோட்டை சட்ட நிர்மாண சபையின் திறப்பு விழா செப்டம்பர்-மீ 29-உ மாலை 3-30 மணிக்கு நடக்குமென்று முன்னமேயே அறிவிக்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னடியே தர்பார் மண்டபத்தில் சகல உத்தியோகஸ்தர்களும், சபை மெம்பர்களும், பத்திரிகைகளின் கிருபர்களும், பொது ஜனங்களும் வந்து கூடியிருந்தனர். மண்டபத்தின் வட கோடியில் அமைக்கப்பட்டுள்ள மர மேடையின் மீது மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களுக்கும், அந்தஸ்தில் சிறந்த விருந்தினர்களுக்கும், திவான், சீப்கோர்ட் ஜட்ஜிகள் முதலானவர்களுக்கும் ஆஸனங்கள் போடப்பட்டிருந்தன. மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் வருவதற்கு சற்று நேரத்திற்கு முன் ரா-ஸ்ரீ திவானவர்கள் அந்த மேடையின் மீத போடப்பட்டிருந்த ஓர் நாற்காலியில் அமர்ந்தனர். முதல்முதல் சபையின் அக்கிராஸனாதிபதி என்னும் ஹோதாவில் தாம் தமது ஆஸனத்திலிருந்து எழுந்து அங்கு கூடியிருந்தவர்கள் முன்பாக ராஜவிசுவாஸப் பிரமாணத்தைச் செய்துவிட்டுத் தமது ஆஸனத்தில் உட்கார்ந்தனர். பிறகு உப அக்கிராஸனாதிபதியவர்களும் உத்தியோகஸ்தர்களாயுள்ள அங்கத்தினர்களும், உத்தியோகஸ்தர்களல்லாத அங்கத்தினரும் ஒவ்வொருவராக அவரிருந்த இடத்திற்குச் சென்று ராஜவிசுவாசப் பிரமாணஞ் செய்து தம்தம் ஸ்தானங்களில் அமர்ந்தனர். சற்று நேரத்திற்கெல்லாம் சென்னை ராஜதானியைச் சேர்ந்த சுதேச சமஸ்தானங்களுக்கு கவர்னர் ஜெனரல் அவர்களின் ஏஜண்டாகிய கனம் C. W. E. காட்டன் துரையவர்களும், உதவி பொலிடிகல் ஏஜண்ட் மக்குவியின் துரையவர்களும் வந்து சேர்ந்தனர். அவர்களை திவானும் சமஸ்தானத்து ராணுவத் தலைவரும் எதிர்கொண்டு அழைத்து அவர்களை அவரவர்களுக்குப் போடப்பட்டிருந்த ஸ்தானங்களில் அமரச்செய்தனர். இதன்பின் சுமார் கால்மணி நேரத்திற்குப்பின் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் ராஜாங்க ஸவாரியாய் வரவும், திவான் அவர்களும் சேனாதிபதியவர்களும் அவரை எதிர்கொண்டழைக்க அவர் தர்பார் மண்டபத்தின் மேடையின்மேல் அமைக்கப்பட்ட சிம்மாஸனத்தின்கண் வந்து நின்றவளவில் சபைக்கு வந்திருந்தவர்களெல்லோரும் எழுந்து நின்று மரியாதை செய்தனர். அப்பொழுது மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் காட்டன் துரையவர்களையும் மற்ற கனவான்களையும் நோக்கி சபையைத்

திறப்பதற்கு முன் தாம் சில வார்த்தைகள் சொல்லவேண்டி இருக்கிறதென்று கூறிப் பிரஸங்கத்தைப் படித்தார்.

புதுக்கோட்டை சட்ட நிர்மாண சபையின் அங்கத்தினர்களே!

"இன்று மகா திருப்தியுடன் ஸ்தாபனம் செய்யப்போகிற புதுக்கோட்டை சட்ட நிர்மாண சபையின் அங்கத்தினர்களான உங்களுக்கு நல்வரவு கூற மிகவும் சந்தோஷத்தையும் பெருமையையும் அடைகிறோம். உங்களில் சிலர் முன் ஸ்தாபிக்கப்பெற்றிருந்த ஜனப்பிரதிநிதி சபையின் மெம்பர்களாக இருந்திருக்கிறீர்கள். அவர்களே அதேமாதிரிக் காரியங்களில் எங்களுடன் கூட உழைக்க மறுபடி கூட்டிக்கொள்வதில் விசேஷ சந்தோஷமடைகிறோம் என்று சொல்லவும் வேண்டுமோ?

"2. இன்று ஏற்படுத்தப்போகிற சட்ட நிர்வாக சபா ஸ்தாபனம் சென்ற இருபத்திரண்டு வருஷங்களாக இச்சமஸ்தானத்தில், பிரஜைகளையும் அரசாட்சி முறையில் சேர்த்துக்கொண்டு வரும் கிரமத்தில் ஒரு ஸ்பஷ்டமான முக்கிய காரியம்.

"3 பதினேழாம் நூற்றாண்டின் கடாசியில் இச்சமஸ்தானத்தைக் கைப்பற்றி ராஜ்ஜியத்தை ஸ்தாபித்தது முதற்கொண்டு காலதுவரை தொண்டமான் வம்சத்தரசர்கள் அவர்கள் ஆளுகைக்குள் வந்த பிரஜைகளை இடைவிடாத முயற்சியுடன் ஸம்ரக்ஷித்து வருகிறார்களென்று தேச சரித்திரத்தின் நிர்மானம். ஆனாலும், அவர்களின் ஆளுகை தொடங்கிய காலம் முதல் 300-வருஷ காலத்துக்கு மேலாக ராஜ்ஜிய நிர்வாகத்தில் ஜனங்களையும் சேர்த்துக்கொள்ளவேணுமென்ற எண்ணம் அவர்கள் கொள்ளவில்லை. பிரகிருதம் நடக்கும் 20-வது நூற்றாண்டு தொடங்கின பின் மஹா-ரா-ரா ஸ்ரீ மஹாராஜா அவர்கள் ஸமக்ஷம் ஸ்வயமே ராஜ்ஜிய பாரம் வகித்துவந்தும், காலஞ்சென்ற திவான்பஹதூர் S. வெங்கட்டராமதாஸ் நாயுடுகாரு ஸமஸ்தானத்தின் திவானாகவும், நாம் கௌன்ஸிலராகவும் இருந்த காலத்தில், ஜனங்களின் பிரதிநிதிகளை அப்போதைக்கப்போது கூட்டி, இராஜாங்கத்தார் பிரஜைகளின் நன்மைக்காக என்னென்ன செய்துகொண்டு வருகிறார்களென்று சொல்லவும் பிரஜைகள், தங்களுக்காக ராஜாங்கத்தாரை என்னென்ன செய்யவேணுமென்று விரும்புகிறார்கள் என்று கேட்டுக்கொள்ளவும் வேண்டுமென்ற எண்ணம் ராஜாங்கத்தாரின் மனதில் முதல்முதலில் உதித்தது. அவ்வெண்ணத்தின் பயனாகத்தான் 30-மெம்பர்கள் அடங்கிய ஜனப்பிரதிநிதி சபை ஏற்படுத்தப்பட்டது. அச்சபை முதல் முதலில் 1902-ம் வருஷத்தில் கூடியது. பன்னிரண்டு வருஷம் சென்ற பின்பு ஸமஸ்தானத்தில்

வழங்க ஏற்படுத்தப்படும் சட்ட நிபந்தனைகளை விதிப்பதற்கு முந்தி, அந்த சட்ட நிபந்தனை சம்பந்தமாக ஜனங்களின் அபிப்பிராயத்தை முன்னதாகத் தெரிந்துகொள்ளவேண்டியதற்காகச் சட்ட ஆலோசனை சங்கம் ஒன்று அமைக்கப்பட்டது. அந்த சட்ட ஆலோசனை சங்கத்தில், கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்பட்ட உத்தியோகஸ்தரானவும் உத்தியோகஸ்தரில்லாதவருமான மெம்பர்களைத்தவிர, ஜனப்பிரதிநிதி சபையாரால் முதலில் சில காலம் இரண்டு மெம்பர்களும் பிற்பாடு நான்கு மெம்பர்களும் பொறுக்கி அனுப்பப்பட்டார்கள்.

"4. முன் சொல்லப்பட்ட ஜனப்பிரதிநிதி சபை சட்ட ஆலோசனை சங்கம் இவ்விரண்டையும் உற்பத்தி செய்து அபிவிருத்திக்கு வரச் செய்ததில் முதலில் சில காலம் கௌன்ஸிலராகவும் பிற்பாடு ஸமஸ்தானத்து திவானாகவும் இருந்த நமக்கும் பங்குண்டு. அவ்விரண்டு சங்கங்கள் செய்து வந்த வேலைகளை மிக ஊக்கத்துடனும் அன்புடனும் கவனித்து வந்தோம். அவைகள் எந்த உத்தேசத்துடன் நியமிக்கபட்டனவோ அந்த நோக்கங்களைப் பூர்த்தி செய்தனவென்று நாம் உறுதியாக சொல்லுவோம். அவ்விரண்டு சபைகளிலும் தத்தகாலம் மெம்பராக இருந்தவர்கள் மிக புத்தி சாதுர்யத்துடனும், தங்களுக்கேற்பட்ட கடமையை நிறைவேற்ற வேண்டுமென்ற விவேகத்துடனும் தங்கள் வேலையைச் செய்துவந்தார்கள். இதற்காக ராஜாங்கத்தாரும் ஜனங்களும் அவர்களுக்கு மிக்க வந்தனமுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

"5. ஆனால் ஸமஸ்தானத்தில் படிப்பு விசேஷமாகப் பரவி ஜனங்களுக்கும் ராஜ்ஜிய தந்திர வியாபாரத்தில் கவனிப்பு அதிகரித்ததனால் மேற்சொல்லிய இரண்டு சபைகளும் புராதனமானதாகவும், காலத்திற்கு ஏற்காமல் புழக்கடையில் போடக்கூடிய பழசாகவும் போய்விட்டது. இவ்விரண்டு சங்கங்களுக்குப் பதிலாக ஒரே சங்கம் ஏற்படுத்தி அதில் பெரும்பான்மையாக ஜனங்களால் வோட்டுக்கொடுத்து தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்களிருக்கவேண்டுமென்றும், அப்படி ஏற்படுத்தப்பட்ட சங்கத்துக்கு அதிக அதிகாரங்கள் கொடுக்கப்படவேணுமென்றும், அங்குமிங்கும் அபிப்பிராயங்கள் வெளியிடப்பட்டன. அப்படி அபிப்பிராயம் ஏற்பட்ட காலம் திட்டமாக எப்பொழுதென்று சொல்ல முடியாத போனாலும், 1920-ம் வருஷ முதலென்று சொல்லலாம். ராஜாங்கத்தாரும் எவ்விதமான மாறுதல்கள் செய்வது மிக்க உசிதமாயிருக்குமென்று ஜனங்களை அபிப்பிராயம் கொடுக்கச் சொன்னதிலும் ஜனங்களால் வோட்டின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட மெம்பர்கள் அதிகமாகவுள்ள ஒரே சங்கம் ஏற்படுத்துவது

தான் தகுதியாக இருக்குமென்று அவர்கள் அபிப்பிராயப்படுவதாகத் தெரியவந்தது. ஜனங்களின் அபிப்பிராயத்துக்கிணங்கி, புதுக்கோட்டை சட்ட நிர்வாக சபை ஸ்தாபனச் சட்டமும், அதின் நோக்கங்களை நிறைவேற்ற விதிகளும் ஏற்படுத்தியிருக்கும். அவைகள் ஸமஸ்தான கெஜெட்டின் மூலமாகப் பிரகடனஞ்செய்யப்பட்டு உங்களுக்குத் தெரியக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவைகள் நிகழ்கால அவசியத்துக்குப் போதுமானவைகள் என்று நம்புகிறோம்.

"6. இப்பொழுது நம் ஸமஸ்தானத்தில் இச்சட்ட நிர்வாக சபை ஏற்படுத்தின விஷயமாகச் செய்திருக்கும் சீர்திருத்தங்கள் மற்ற ஸமஸ்தானங்களில் செய்திருக்கும் ஏற்பாட்டுக்குப் பின் வாங்கவில்லையென்று நமக்கு உறுதிசொல்லப்பட்டிருக்கிறது. ஆகிலும் தகுந்த காலம் ஏற்படும்பொழுது இச்சபையின் அதிகாரத்தை விருத்திசெய்ய நமக்கு அதிக திருப்தி. அப்படி விருத்தி செய்ய உசித காலம் சீக்கிரமே வரும்படி முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டியது நம்மெல்லோரின் கடமையாகும்.

"7. இக்கடமையைச் செலுத்த நாம் எடுத்துக்கொள்ளும் முயற்சிகளில், கல்வியைப் பரவச் செய்வதைவிட வேறு எவ்வித முயற்சியும் நாம் விரும்பும் பயனை விளைவிக்காது. கல்வியினாலும், நல்ல உபதேசித்தினாலுந்தான் அப்பியாஸமில்லாததால் மங்கி மறைந்திருக்கும் புத்தியையும் நல்லொழுக்கத்தையும் விருத்தி செய்யலாம். ஜனங்கள் தங்கள் ஸ்வாதந்திரியம், கடமைகள், இவைகளை அறிந்துகொள்ள வேணுமானால் அவர்களுக்குப் படிப்பும் போதிப்பும் அகத்தியம். படிப்பில்லாமற்போனால் ராஜ்ஜிய பரிபாலன விஷயத்தை அறியவாவது, அதை ஊக்கத்துடன் கவனித்து அதின் குணதோஷ விசாரணை செய்யவாவது முடியாது. ஒருவர்மட்டில் பொதுக்காரியங்களை நடத்த முயலுவதைக்காட்டிலும் அநேகர் கூடிச் சேர்ந்து ஒத்து உழைத்தால் காரியத்தைச் சாதிக்கலாமாதலால், அவ்விதம் ஒத்து உழைக்க சாமர்த்தியம் படிப்பினால் ஏற்படும். மேலும் படிப்பிருந்தால்தானே தங்களால் தேர்ந்தெடுத்து இச்சபைக்கனுப்பப்பட்டவர்கள் சரியானபடி இச்சபையில் உழைத்துவருகிறார்களா என்று கவனிக்கவும், சரியான படி உழைக்கச்செய்யவும், அப்படி உழைப்பவர்களுக்கு வலுக் கொடுக்கவும் முடியும். பிரஜைகளின் படிப்பை விருத்திசெய்வதற்கும் நீங்கள் சொல்லும் யோஜனைகளை நாம் மிக்கக் கருணையுடன் கவனிப்போம்.

"8. உங்களுக்கு ஹிதத்தையும் தேர்ச்சியையும் கொடுக்கக் கூடியதாக வார்த்தைகளை நம்மிடத்திலிருந்து கேட்டுக்கொள்ள

நீங்கள் விரும்புவீர்கள். ஆனால் உங்களுக்கு ஏற்கனவே தெரியாத தான புதிய விஷயங்கள் நாம் சொல்லும்படியாக ஒன்றுமில்லை. உத்தியோகமுள்ளவும் உத்தியோகமில்லாததுமான மெம்பர்கள் யாவரும் ஸமஸ்தானத்தின் குடிகளின் க்ஷேமத்திற்கும் சந்துஷ்டியான வாழ்க்கைக்கும் ராஜாங்கத்தாரைப்போல் கடவுளுக்கு உத்திரவாதியாக இருக்கிறார்களென்ற விஷயத்தை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும். நீங்கள் இச்சபையின் மெம்பர்கள் செய்யும் ஒவ்வொரு காரியமும் குடிகளின் நன்மைக்கு ஏற்றதாக இருக்கவேணும். ஜனங்களின் நன்மைக்கு ஸாதன உபாயங்களை சர்ச்சை செய்யும் விஷயத்தில் உங்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்படக்கூடும். எல்லோருக்கும் ஒரேமாதிரி ஸ்வபாவம், பழக்கம், நோக்கம், இவைகளில்லாததால் உங்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்படுவது ஸகஜந்தான். அப்படி உங்களுக்குள் ஒருவருக்கொருவர் ஒற்றுமையில்லாமல் வேற்றுமை நேருங்காலங்களில் அடக்கம், பொறுமை, பிறர் அபிப்பிராயத்துக்கு இடங்கொடுத்தல், மரியாதை முதலிய குணங்களை கைக்கொள்ள வேணும். இப்படி பேத அபிப்பிராயமும் எப்பொழுதாவது அபூர்வமாகவும் வெகு அல்பமாகவுந்தான் ஏற்படுமென்று நமது நம்பிக்கை. இப்படி அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டாலுங்கூட நீங்கள் எல்லோரும் ஒத்து வேலை செய்து, நாம் இச்சபையை ஏற்படுத்தி, அதனால் பிரஜைகளின் க்ஷேமத்தை விருத்தி செய்யச் செய்திருக்கும் ஏற்பாட்டை ஸபலமாக்குவீர்களென்று உங்கள் இடத்தில் நம்பிக்கை வைத்திருக்கிறோம். மேலும், இச்சபையின் அங்கத்தினர்களாக உங்களுக்கேற்பட்டிருக்கும் கௌரவத்திற்கும் பொறுப்புக்கும் தக்கபடி இச்சபையில் உங்கள் அலுவல்களை நடத்துவீர்களென்றும், நீங்கள் காரிய நிர்வாகம் செய்யும் விதம் மற்ற சங்கங்களுக்கு மாதிரி காட்டக் கூடியதாகவிருக்குமென்றும் நாம் உங்களிடத்தில் நம்பிக்கையாக இருக்கிறோம். எல்லாவற்றைக் காட்டிலும் முக்கியமானது ஒன்றுண்டு. அதாவது ஸர்வக்ஞனான ஈசுவரன் கிருபாநிதி. அவர் பிரஜைகளின் நன்மை இன்னதென்று தெரிந்து ரக்ஷிப்பாரென்பதில் நம்பிக்கை வையுங்கள். ஓர் நிபுணரான கட்டுக்கதை எழுதுபவர் சொல்லியிருக்கிறபடி 'நாம் ஆவலுடன் அபேக்ஷிக்கும் விஷயம் நமக்கு உசிதமான காலத்தில் கிட்டும். நமக்கு சௌக்கியமும், மனதுக்கு திருப்தியும் முடிவில் கிடைக்க நாம் ஈசுவரனுக்குப் பொதுவாக ஸ்வயபலனே உத்தேசிக்காமல் நல்ல காரியங்களைச் செய்ய முயற்சிக்க வேண்டியது என்பதை ஒரு பொழுதும் மறக்கக்கூடாது.'

"9. உங்களுடைய தேசமாதா தன்னுடைய மக்களாகிற உங்களை உங்களிடமிருக்கிற உத்தம குணங்களோடு தனக்காக உழைக்கவேணும் என்று கேட்டுக்கொள்ளுகிறாள். மாதாவை தங்களிட

மிருக்கும் உத்தம குணங்களாலும் வஸ்துக்களாலும் உபசரிக்க வேண்டியது ஸத்புத்திரர்களின் கடமை. உங்களுக்கு இட்டிருக்கும் வேலை சுலுவானதில்லை. ஆனால் உங்கள் நாட்டுக்காக உழைப்பதில் சிரமந்தோணுது. உங்கள் நாட்டுக்காகவும் உங்கள் சகோதரராகிய பிரஜைகளை கைதூக்கி விடுவதற்காகவும் உழைக்கிறேமென்ற ஞாபகம் உங்களுக்குத் தேறுதலைக் கொடுப்பதுடன் உங்கள் சிரமத்தையும் ஆற்றும். நமது சமஸ்தானத்தில் நாட்டின் அபிவிருத்தியை கெடுக்கக்கூடிய ஸ்வஜாதி பக்ஷபாதம், அன்னிய மதத்துவேஷம் முதலிய கெடுதல் குணங்கள் ஜனங்களிடம் இல்லாததோடு எல்லாப் பிரஜைகளும் அரசர் மீதுள்ள ராஜபக்தி என்ற கயிற்றினால் கட்டப்பட்டு, எந்த ஜாதி, எந்த மதமானாலும் ஒரே அரசரின் கீழ் உள்ள பிரஜைகளென்ற விசுவாசம் ஒருவருக்கொருவர் மிகுந்து, ஒரே நோக்கம், ஒரே விருப்பமுள்ளவர்களாக இருப்பதிலிருந்து நமக்கு சந்தோஷமும் தேறுதலும் ஏற்படுகிறது. இத்தன்மையான காரணங்கள் இச்சபை ஏற்பாட்டின் மூலமாக ஜனங்களுக்குக் கொடுத்திருக்கும் அதிகாரங்களைப் பொதுஜன நன்மைக்கு உபயோகப்படுத்த ஸாதனமாக உள்ளது.

"10. இச்சங்கம் சரிவர அதன் அலுவல்களை நிறைவேற்றுமென்பதற்கு மற்றுமுள்ள முற்குறி, சங்கத்தின் அக்கிராசனாதிபதியான ஈ-திவானவர்கள் மிக்கவும் நிறமையும் பிரஜைகளிடத்தில் அன்பும் வாய்ந்தவராகவும், ஜனங்களின் நன்மைக்காக இடைவிடாது உழைப்பவராகவும் இருப்பதுதான். அவர் இச்சங்கத்தின் பரிசீலனைகளை ஒழுங்கான வழியில் நடத்தச் செய்வார் என்று நிச்சயத்துடனிருக்கிறோம்.

"11. ஸர்வாபீஷ்டங்களையும் கொடுக்க வல்லவனான ஸர்வேசுவரன் இச்சபைக்கு எங்கும் புகழத்தக்க வாழ்க்கையை அளிக்க வேணுமாய் நாம் பிரார்த்திக்கிறோம். இச்சொற்களோடு இச்சங்கத்தை வேலை செய்யத் தொடங்கினதாகக் கூறுகிறோம். இது நீடித்த காலம் நன்றாக வாழ்க."

இப்பிரஸங்கம் முடிந்ததும் மகா—ரா—ரா—ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் காட்டன் துரையவர்களை நோக்கி இரண்டொரு வார்த்தைகள் சொல்லிவிட்டு தமது ஆஸனத்தில் வீற்றிருந்தனர். அதன் பின்னர் சபையோர்களெல்லோரும் தம்தம் இருக்கையில் அமர்ந்தார்கள். பிறகு ஹுஸூர் காரியதரிசி மிஸ்டர் R. கிருஷ்ணமாசாரியார் அந்தப் பிரசங்கத்தின் தமிழ் மொழி பெயர்ப்பொன்றைப் படித்தனர். அது முடிந்ததும், சட்ட நிர்மாண சபையின் உப அக்கிராஸனாதிபதி மிஸ்டர் S. நாராயணஸ்வாமி அய்யர் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களுக்கு இங்கி

லீஷ் பாஷையில் ஓர் வந்தனோபசாரப் பத்திரம் படித்தனர், அதில் அவர் ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களின் குண விசேஷங்களை புகழ்ந்து பேசி, சட்ட சபையை அளித்தது ஒரு பெருங் கொடை யென்றும், அச்சபை அதன் காரியங்களைச் செவ்வனே செய்து பின்னும் பற்பல அதிகாரங்களையும், உரிமைகளையும் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களிடம் பெறும் என்ற நம்பிக்கையை யும் தெரிவித்தனர். அப்பத்திரிகையை மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் வந்தனத்துடன் ஏற்றுக்கொண்டனர். அது முடிந்தவுடன் ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் சார்பாக ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரிகள் இங்கிலீஷில் ஓர் வந்தனோபசாரப் பத்திரிகை படித்துக்கொடுத்துவிட்டு, அந்த வந்தனோபசாரப் பத்திரிகை மொழிபெயர்ப்பை பிரதிநிதி சங்கத் தின் காரியதரிசியாகிய ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் படிப்பா ரென்று தெரிவித்தனர். உடனே பின்வரும் மொழிபெயர்ப்பு அவரால் படிக்கப்பட்டது.

அன்பார்ந்த ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களே,

1. ஜனங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டசபை மெம்பர் களின் சார்பாக, தங்களால் இப்பொழுது உபந்யசிக்கப்பட்ட சந்தோஷகரமான பிரசங்கத்திற்கு எனது மனமார்ந்த வந்தனத் தைச் செலுத்துகிறேன். தாங்கள் எப்பொழுதும் சமஸ்தான அபிவிருத்தியில் மும்மரமான முயற்சி செய்துகொண்டு வருவது எங்களெல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்த விஷயமே. தங்களது பொறுமையும் இனிமையும் வாய்ந்த குணமும், தங்கள் சமாதான புத்தியும், தங்கள் அத்யந்தமான காருண்ய மனதும் மகாஜனங் கள் மனதைக் கவர்ந்திருக்கின்றன.

2. உலகம் முழுதும் ஜனங்களின் உரிமைகளைப்பற்றிய இயக்கம் இப்பொழுது தீவிரமாகப் பரவப்பெற்று ஜன சம்ம தத்தை ஆதாரமாகக் கொண்ட ஆட்சியே உத்தமமான ஆட்சி என்று எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. தாங்கள் இப்பொழுது ஸ்தாபித்திருக்கும் சட்ட நிர்மாண சபையை சர்க்கா ராரோடு ஜனங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்ற நோக் கத்துடனேயே ஏற்படுத்தியிருக்கிறீர்கள். சற்று அதிகமான உற் சாகத்தோடு கூடியவர்களை இச்சட்ட சபையின் அமைப்பு திருப்தி செய்யாமலிருக்கக் கூடியதாயினும், நாங்கள் எல்லோரும் தாங்கள் பிரஜைகள்மீது அன்பு பாராட்டி இவ்வாறு சீர்திருத்தம் செய்திருப்பதை மரியாதையுடன் பாராட்டுகிறோம்.

3. இச்சமஸ்தானத்திய ஜனங்களின் ராஜபக்தி நிஸ்ஸந் தேகமானது. புத்தியிலும் சாமர்த்தியத்திலும் அவர்கள் வெளி யூர் ஜனங்களுக்கு சற்றும் இளைத்தவர்களல்ல. நமது சமஸ்தானத்

தைவிட்டு வெளிச்சென்றிருக்கும் பிரஜைகளும் அநேக மார்க்கங்களில் சேர்த்தி பெற்றிருக்கிறார்கள். ஜாதி மத சண்டை சச்சரவுகளும் கட்சிப் பிரதிகட்சிகளின் தொந்திரவுகளும் இங்கில்லை. எல்லோரும் இங்கே சகோதரபாவமாக ஒத்துமையுடன் வாழ்ந்து வருகிறோம். தங்களுடன் ஏகமனதாய் ஜனங்களின் முன்னேற்றத்திற்காக ஒத்துழைக்கும் கருணைவாய்ந்த திவான் நமது சமஸ்தானத்திற்குக் கிடைக்கப்பெற்றதும் ஓர் நலமே. ரா-ஸ்ரீ திவானவர்கள் ஜனங்களின் அபிவிருத்தியை முன்னிட்டு பல யோசனைகளும் தமது கருத்தில் வைத்திருப்பாய் எங்களுக்குத் தெரியவருகிறது.

4. இத்தியாதி காரணங்களால் தங்களால் இப்பொழுது ஸ்தாபிக்கப்பட்ட புதிய சட்டசபை மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் பிரஜைகள் பேரில் தங்களுக்கிருக்கும் கருத்தாலும் அன்பினாலும் கூடிய சீக்கிரத்தில் மகாஜனங்களுக்கும் மகாராஜா அவர்களுக்கும் உயர்ந்த கௌரவத்திற்கு ஆஸ்பதமான பூரண ஜனநாயக ஆட்சியாக அபிவிருத்தியாகுமென்று நாங்கள் ஆவலுடன் நம்புகிறோம். பிரிட்டிஷ் ராஜாங்கத்தாரின் பிரதிநிதியாகிய மிஸ்டர் காட்டன் துரையவர்களும் இச்சமயம் இங்கிருப்பதே பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் இம்மாதிரியான சீர்திருத்தம் பெற்ற சபைகளில் எடுத்துக்கொள்ளும் சிரத்தையைக் காட்டுகிறது.

5. சமஸ்தானத்தின் க்ஷேமத்தில் தங்களுக்கிருக்கும் சிரத்தைக்காகப் பின்னும் ஒரு முறை நான் தங்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துவதுடன் தங்கள் ஆட்சியில் தாங்கள் நடத்திவரும் ராஜ்ய பாரம் மற்ற சுதேச சமஸ்தானங்களுக்கு ஓர் வழிகாட்டியாய் இருக்கும் என்று நான் ஆவலுடன் எதிர்பார்ப்பதோடு அவ்வாறு இருக்கும்படியாய் இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நாங்கள் சம்பந்தப்பட்ட மட்டில் பொது ஜனங்களின் க்ஷேமத்தையும் முன்னேற்றத்தையும் பயக்கக்கூடிய எல்லா விஷயங்களிலும் நாங்கள் அரசாங்கத்தாரோடு ஒத்துழைக்க எங்களால் கூடுமான மட்டும் முயற்சிக்கிறோம்.

இதன்பின் சகோதரி பாலாம்பாள் பெண் பாலர்களின் பொருட்டாக தான் வந்தனம் செய்வதை G. சுந்தரேச சாஸ்திரிகள் முகமாக எடுத்துக் கூறினள். பிறகு ஸ்ரீமான் நாராயணஸ்வாமி அய்யர் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களுக்கு ஆசி கூற மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் மாக்ஷிமை தங்கிய ராஜச் சக்கிரவர்த்திக்கும், மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜாவவர்கள் சமஸ்தித்துக்கும், காட்டன் துரை அவர்களுக்கும் ஆசி கூறினர். சபையின் அடுத்த கூட்டம் நவம்பர் மீ 1உக்கு ஒதுக்கிவைத்திரு

ப்பதாய் ள-ஸ்ரீ திவானவர்கள் கூறினர். இத்துடன் அன்று கூடின கூட்டத்தின் நடவடிக்கைகள் முடிவுக்கு வந்தன. மகா-ள-ள-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் ராஜாங்க ஸவாரியாகவே அரண்மனைக்குத் திரும்பிச் சென்றனர்.

1924ம் வரு அக்டோபர் மீ 17 உ "ஜனமித்திரன்" பத்திரிகை ஸ்ரீமான் S. விசுவநாதய்யரை கௌரவ ஆசிரியராகக் கொண்டு உதயமாயிற்று. அப்பொழுது ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்கள் அதற்கு பின்வரும் ஆசிமொழிகளை அனுப்பினர்:—

"தேச வாழ்க்கையில் அபிவிர்த்தியடைவதற்கு இன்றியமையாத சாதனங்களுள், சமாசாரப் பத்திரிகை ஓர் வலிமையுள்ள அம்சமாகும். லோக க்ஷேமத்திற்கு வேலை செய்ய அது அதிக அவகாசம் கொடுக்கும். ஆனால் அதற்குத் தக்கபடி அதில் பொறுப்பும் அதிகம். சுதேச சமஸ்தானங்களின் முன்னணியில் புதுக்கோட்டையும் தகுந்த ஸ்தானத்தைப் பெற்று விளங்குமாறு "ஜனமித்திரன்" பத்திரிகை தங்கள் ஆதிபத்தியத்தில் செய்யுமென்று நம்புகிறேன்."

இப்பத்திரிகை ஸ்தாபனத்தைப்பற்றி ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரியர் எழுதியுள்ள அடியிற்கண்ட விஷயம் ஈண்டு குறிப்பிடத்தக்கது:—

"எனது அன்பார்ந்த நண்பர் ஸ்ரீமான் விசுவநாதய்யர் இச் சமஸ்தானத்தில் ஓர் பத்திரிகை இயற்ற முன்வந்தார். சகோதர வாஞ்சையே உருவெடுத்து வந்ததெனச் சொல்லும்படி விளங்குபவர்களில் ஒருவரான அவர் இளைய சகோதரர் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யர் அவருக்குப் பக்கத்துணையாக நிற்கின்றனர். அப்பத்திரிகைக்குப் பொருளும் பெயரும் ஒருங்கே வாய்ந்து ஜனமித்திரன் என்ற பெயரும் அமைந்திருக்கிறது. பத்திரிகையில்லா நாடு சூரியனில்லாத பகலையும், சந்திரனில்லாத இரவையும், பக்தியும் இரக்கமுமில்லாத நெஞ்சையும், நன்னடக்கையில்லாத படிப்பையும், கண்ணில்லாத முகத்தையும் ஒக்கும். நமது நாட்டுக்கு ஓர் பத்திரிகை இல்லாதது பெருங்குறைவென்று கருதாதவரிலர். ஆயினும் அவ்வரும்பெரும் காரியத்தைச் செய்ய முன்வரும் பாக்கியம் எனது நண்பருக்கே கிடைத்தது. அவருடைய வாய்மையும் தூய்மையும், ஜனங்கள் பால் அளவில்லா அன்பும், பொதுஜன நன்மையில் தீவரமான அவாவும், குறைவுபடாத பொங்கும் ஊக்கமும், அவரை இவ்வழியில் தூண்டிநிற்கின்றன. அவர் பல வருஷங்களாகப் பழகித் தேர்ந்திருக்கும் தொழிலில் அவருக்கு மேன்மேலும் லாபமும் கீர்த்தியும் ஏற்படு

மென்பதற்கையமில்லை. அவர் முன்னேற்றத்தை மட்டில் கவனித்தால் அவருக்கு இப்பத்திராதிபத்தியம் ஆவசியகமில்லை என்றும் நான் துணிவாய்ச் சொல்லுவேன். இப்பெருங் காரியத்திற்கு அவசியமான பொருளைப் பற்றியும் அவர் சிந்தித்தவரல்லர். அதற்கு வேண்டிய மற்ற பல சகாயங்களில் ஒன்றையும் அவர் தேடினதாக இல்லை. ஈசுவரனுக்கேற்கவும் தன் மனச்சாக்ஷிக்கேற்கவும் மிகவும் மேன்மையான காரியமிது என்ற ஓர் எண்ணத்தையே கடைப்பிடித்துக்கொண்டு இக்காரியத்தில் தலைப்பட்டிருக்கின்றனர். முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்பது சிறந்த முதுமொழியன்றே? அதிலும் அவருக்கு இது விஷயத்தில் ஏற்பட்ட எண்ணம் எப்படிப்பட்டதென்பதை சற்று கவனிப்போம். ஆங்காங்கு அவ்வவருக்குத் தெரிந்திருக்கும் கல்வியும் செய்தியும் அவரவரிடம் அங்கங்கு அடங்கிவிடாமல் நாடு முழுமையும் பரவி அவரவர் மனதிலுள்ள தோற்றங்களையும், எண்ணங்களையும், பரிஷ்கரித்து வெளிப்படுத்தச்செய்து அவைகளை மற்றவர்கள் தெரிந்து உய்யவும், பிறரை உய்யச் செய்யவுமான வழியைத் தேடுவது நிகரற்ற, உண்மையான, கல்விக்கிளர்ச்சியல்லவோ? அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வமென்று ஔவையார் சாதித்திருப்பதன் காரணம் மனிதர்களுடைய உடலை அன்னையும், பிதாவும் உண்டாக்கிக் காப்பதாலன்றே? அழிவுக்கென்றே உண்டான உடலைக் கொடுத்துப் போஷிப்பவர்களுக்கே அத்தகைய மகத்துவம் உண்டாகுமாயின் ஞானக் கண்களைக் கொடுப்போருக்கு என்ன மேன்மையுண்டென்று புகலவும் வேண்டுமோ? பத்திரிகையில்லாத நாட்டில் பத்திரிகையை நாட்டி, நிகழ்காலம், சென்றகாலம் வருங்காலம் என்ற முக்காலத்திய செய்திகளையும், அறிவையும் புகட்டும் காரியம் உத்தமமானதெனச் சொல்லாமலே விளங்கும். இது காறும் பத்திரிகையில்லாதிருந்த இச்சமஸ்தானம் பெரிய ஊமையாக இருந்ததைப் பேசச் செய்ததாகவே ஆகும். இந்நன்மைக்கு கைமாறான உதவி யாதுமில்லை. ஆதலின் இச்சமஸ்தானத்திலுள்ளோர் அனைவருக்கும் மற்றவர்களுக்கும் உண்மையில் ஆத்மமித்திரனான ஸ்ரீமான் விசுவநாதய்யரும் அவர் சகோதரரும் யதார்த்தமான பெயர் படைத்த "ஜனமித்திரன்" என்னும் பத்திரிகையும் சிக்கிரத்தில் எங்கும் பிரக்கியாதி பெற்று நீடித்து ஓங்கி வாழ்ந்து வருகவென எல்லாம் வல்ல இறைவனை அனுதினம் பன்முறை வணங்கிப் போற்றுவோமாக."

14-வது அத்தியாயம்

நிகழ்ச்சிக் குறிப்புகளும் நகரசபையின் தெங்குக் குத்தகைத் தகராரும்.

சட்ட சபையின் முதலாவது கூட்டம் 1924ம் வரு நவம்பர் மீ முதல் வாரத்தில் நடைபெற்றது. இச்சபையில் 262 கேள்விகளும் 64 தீர்மானங்களும் கொண்டுவரப்பட்டன. நிறைவேற்றப்பட்ட முக்ய தீர்மானங்களுள், சமஸ்தானத்திய பள்ளிக்கூடங்களில் நூல் நூற்பதை கட்டாய முறையில் கற்பிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்பதும், சில முக்யமான பள்ளிக்கூடங்களில் சௌவுத் தொழிலையும் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று தீர்மானித்ததும், மகாராஜா அவர்கள் கல்லூரியை முதல்தர வகுப்புக்கு உயர்த்தி B. A. வகுப்புகள் ஏற்படுத்த வேண்டுமென்று தீர்மானித்ததும், பிரத்தியேகமான அப்பீல் கோர்ட்டு ஏற்படுத்தி ரூ 100-க்குக் கீழ்ப்பட்ட கேஸ்கள்தான் ஸ்மால்காஸ்களாக இருக்கவேண்டுமென்றும், அதற்கு மேற்பட்டவைகள் அஸல் கேஸ்களாக நிர்ணயிக்கப்பட்டு அவைகள் விஷயத்தில் அப்பீல் செய்துகொள்ள கட்சிக்காரர்களுக்கு உரிமை வேண்டுமென்றும், நியாயாதிபதிகளை புதிதாக நியமிக்கும்பொழுது 10 வருஷத்திற்கென்று ஒரு காலவரை ஏற்படுத்தி நியமனம் செய்யவேண்டுமென்று தீர்மானித்ததும், சர்க்கார் தரப்பில் வெகு பலமாய் ஆக்ஷேபிக்கப்பட்டும் கள், சாராயம் குடிப்பதை நாட்டில் அடியோடு நிறுத்திவிடவேண்டுமென்று தீர்மானித்ததும், ர்-திவானவர்களுடன் சேர்ந்து சமஸ்தான நிர்வாகத்தை நடத்த சட்ட சபையில் தேர்ந்தெடுக்கப்படுகிற, சட்ட சபைக்கு ஜவாப்தாரியான இரண்டு கௌன்ஸிலர்கள் நியமனம் செய்யப்படவேண்டுமென்று தீர்மானித்ததும் விசேஷமாகக் குறிப்பிடத்தக்கவைகளாகும். ஜனப் பிரதிநிதிகளின் நன்முயற்சியாலும், கட்டுப்பாட்டுக் கூடங்கிய வேலைத் திட்டத்தினாலும் இவ்வாறு செய்வது ஸாத்தியமாயிருந்தது. இத்தீர்மானங்களை பிரிடிஷ் இந்தியாவிலுள்ள பத்திரிகை

கள் மெச்சிப் பாராட்டின. திருவண்ணுமலை மகாநாட்டில் ஸ்ரீமான் S. சத்திய மூர்த்தி அய்யரவர்களும் அவைகளைப்பற்றிப் புகழ்ந்து பேசினர்.

சமஸ்தானத்தின் காலநிலை சுபிக்ஷமாயில்லை. மழை சிறு தளவுமில்லை. சமஸ்தானத்தின் ஏறக்குறைய எல்லா பாகங்களி லும் விளைச்சலில்லாமற்போயிற்று. மனிதர்களுக்கும் ஆடுமாடு களுக்கும் குடிப்பதற்குக்கூட தண்ணீர் அரிதாகிவிட்டது. பல இடங்களில் விஷபேதியும், ஜ்வரமும் இன்னும் பலவிதமான தொத்து நோய்களும் வியாபித்தன.

1924-ம் வரு டிஸம்பர் மாதத்தில் ஸ்ரீ ஜகத்குரு காமகோடி பீட சங்கராசாரிய ஸ்வாமிகள் புதுக்கோட்டை மார்க்கமாகப் பிரயாணம் செய்தார்கள். ஆனால் அரசாங்கத்தார் அவரை உபசரித்து பிரகாஷ முதலியவைகள் நடத்த ஏற்பாடு செய்யாதபடி யால் ஆசாரிய ஸ்வாமிகள் தலைநகரில் தங்காமல் சென்றனர்.

1925-ம் வரு பிப்ரவரி மாதத்தில் சமஸ்தானத்தில் தானதி காரியாயிருந்த பிரும்மஸ்ரீ வேதாந்த ரத்ன விசுவனுத சாஸ்திரி யளவர்கள் சமஸ்தான உத்தியோகத்திலிருந்து விலகிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டது. சமஸ்தானத்திற்கு ஓர் சிறந்த பூஷணமாயிருந்தவரும், குலம், குணம், சீலம், வித்வத் இவை யனைத்தும் ஒருங்கே அமையப்பெற்றவருமான இவ்வுத்தமர் சமஸ்தான சேவையிலிருந்து விலகிக்கொண்டதை சமஸ்தானத் தையும் ஜனங்களையும் பிடித்த தாதிருஷ்டமென்று அறிஞர்கள் பலரும் கருதினர்.

தலைநகரில் ஓர் தினஸதனம் ஏற்படுத்துவது சம்பந்தமாய் யோசனைகள் கேட்டு அரசாங்கத்தார் ஓர் அறிக்கை வெளியிட்டனர்.

நியாய இலாகா சீர்திருத்த சம்பந்தமாய் ஒரு உபரி ஜட்ஜி நியமிப்பதா அல்லது இரண்டு முன்ஸீப்கள் நியமிப்பதாவென்று அரசாங்கத்தார் அறிக்கை மூலம் அபிப்பிராயங்கள் கேட்டிருந்த தில் அதைக் குறித்து அபிப்பிராயங்கள் சொல்லப்பட்டு வந்தன.

1925-ம் வரு மே மாதத்தில் ஸ்ரீ ஜகத்குரு சிரிங்கேரி ஸ்வாமிகள் தமது தென்னாட்டு யாத்திரையில் புதுக்கோட்டை வழியாகச் செல்வதாக உத்தேசித்திருந்தார்கள். ஆனால் புதுக் கோட்டையில் அவர்கள் பாத தூளி படும் பாக்கியம் ஸித்திக்க வில்லை. முன்பு சிருங்கேரி மடாதிபதியாயிருந்த ஸ்ரீ ஸச்சிதா னந்த சிவாபினவ நரஸிம்ம பாரதிகள் சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தபொழுது காட்டிய ராஜாங்க மரியாதைகளை அரசாங்கத்தார் காட்ட மறுத்த காரணத்தால் ஸ்ரீ சிருங்கேரி ஸ்வாமிகளாகிய

ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதி ஸ்வாமிகள் தலைகருக்கு விஜயம் செய்யாமல் வேறு மார்க்கமாக யாத்திரை சென்றார்கள்.

சமஸ்தானத்தில் சில்லரை ஊழியக் கிரமங்களை ஒழுங்கு செய்வது சம்பந்தமான ஏற்பாட்டையும், தஸரா தமிழ்ப் பண்டிதர் பரீக்ஷை ஏற்படுத்துவதைப்பற்றியும் அரசாங்கத்தார் அறிக்கை வெளியிட்டனர்.

1925-ம் ஜூல செப்டம்பர் மீ 5, 6, 7ம் தேதிகளில் முதல் சட்ட சபையின் 3-வது கூட்டம் கூடிற்று. அரசாங்கத்தார் நியாய இலாகா சீர்திருத்த சம்பந்தமாய் தங்கள் முடிவை ஒரு மாத காலத்திற்குள் வெளியிடுவதாகக் கூறினர். கட்டாயக் கல்வி மசோதா அங்கீகரிக்கப்பட்டதும், கோர்ட்டு கட்டண மசோதா நிராகரிக்கப்பட்டதும் விசேஷமாய்க் குறிப்பிடத்தக்கவைகளாகும். கோர்ட்டு கட்டண மசோதா சம்பந்தமாய் ஸ்ரீமான் S. விசுவ நாதய்யர் கோர்ட்டு கட்டணத்தை உயர்த்தக்கூடாதென்று 70 பேட்டையார்களால் கையொப்பமிடப்பட்ட மகஜரை சட்ட சபை அக்கிராசனருக்கு சமர்ப்பித்தார். அவர் இது சம்பந்தமாய் ஆக்ஷேபித்துப் பேசியதின் ஸாராம்சமாவது:— "அரசாங்கத்தாருடைய நோக்கங்கள் பலவிருக்கின்றனவென்று ஸ்ரீமான் V. இராமச்சந்திரய்யர் சொன்னபோதிலும், அவர் ஒரு நோக்கத்தைத் தவிர வேறொன்றையும் சொன்னதாகத் தெரியவில்லை. அரசாங்கத்தாரின் முக்ய நோக்கம் உபரி வருமானம்தான். கோர்ட்டு கட்டணத்தை உயர்த்துவதற்கு எனக்குத் தெரிந்தமட்டில் யாதொரு சரியான முகாந்தரமுமில்லை. இவ்விஷயமாய் வக்கீல்கள் சங்கத்திலிருந்தும் ஒரு விண்ணப்பம் அரசாங்கத்தாருக்குக் கூடிய சீக்கிரம் கிடைக்குமென்று எதிர்பார்க்கிறேன். அவர்களுடைய அபிப்பிராயமும் பேட்டையார்களின் அபிப்பிராயம்போல் தானிருக்கிறது. இந்த மசோதாவினால் சாதகம் ஒரு பங்கிருந்தால், பாதகம் பதின்மடங்கு இருக்கிறதென்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். இந்த சமஸ்தானத்தில் 100-க்கு 90 ரொக்கக் கடன் வியாஜ்ஜியங்கள்; பாக்கி பத்துமே நில சம்பந்தமான வியாஜ்ஜியங்கள் வகையறு.

பஸலி	நில வியாஜ்ஜியங்கள்	ரொக்கக் கடன் வியாஜ்ஜியங்கள்
1333	218	1700
1332	242	1666

சீர்திருத்தம் செய்ய வேண்டுமானால், கோர்ட்டு கட்டணத்தை உயர்த்தினால்தான் செய்யலாமாவென்பதை யோஜிக்க வேண்டும். சமஸ்தானக் குடிகளோ நாளுக்கு நாள் தைன்ய

ஸ்திதிக்கு வந்துகொண்டிருக்கிறார்கள். கட்டாயக் கல்வி விஷயமாய் செலவு ஏற்படாதென்று அக்கிராஸனர் முகவுரையில் கூறியிருக்கிறார்கள். Mr. Austin சமஸ்தான சூபரின்டெண்டாயிருந்தபொழுது, வருஷா வருஷம் சுமார் 3 லக்ஷ ரூபாய் வரை உபரி வருமானம் எதிர்பார்க்கலாமென்று 1919ம் ஹுஜூர் சிர்வாக அறிக்கையில் வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீமான் இராமச்சந்திரய்யர் ராமராஜ்ஜியத்தில்தான் கட்டணமில்லாமல் நியாயம் வழங்கிவந்ததென்று சொன்னார். ஆனால் இப்பொழுதும் நேபால் சமஸ்தானத்தில் யாதொரு கட்டணமுமில்லாமல் நியாயம் வழங்கி வருகிறதென்பதை இச்சபையில் தெரிவிக்க விரும்புகிறேன்."

கடைசியில் இந்த மசோதா சம்பந்தமாய் அக்கிராஸனர் பேசியதின் சாராம்சமாவது:—

"இந்த மசோதாவின் நோக்கங்களைப்பற்றி ஏற்கனவே ஸ்ரீமான் இராமச்சந்திரய்யர் விஸ்தரித்துவிட்டபடியால், நான் சொல்லவேண்டியது அனுவசியம். ஆனால் இன்று நடந்த சர்ச்சையானது எனக்கு வியப்பையும் ஆச்சரியத்தையும் கொடுக்கிறது. ஏனெனில், நான் அனேக தலைவர்களைக் கலக்க நேரிட்ட பொழுது இதற்கு ஒரு ஆக்ஷேபணையும் இராதென்று என்னிடம் சொல்லியிருக்க, அவர்களே இப்பொழுது ஆக்ஷேபிப்பதுதான் எனக்கு வியப்பைத் தருகிறது. நான் எந்த இடத்தில் ஒத்துழைப்பை எதிர்பார்த்தேனோ அந்த இடத்திலிருந்து பலமான ஆக்ஷேபம் வருகிறது. சீர்திருத்தம் பல துறைகளிலும் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்குப் பணம் அவசியம் தேவையாயிருக்கிறது. இப்பொழுதிருக்கும் மீதக் கையிருப்பின் வட்டி நமக்கு வெகு பிரயோசனமாயிருக்கிறது. ஆதலால் அதை எடுத்து செலவழிப்பதென்பது உசிதமில்லை."

பிறகு இந்தப் பிரேரணை வோட்டுக்கு விடப்பட்டதில், 15 வோட்டுகள் சாதகமாகவும் 29 வோட்டுகள் பாதகமாகவும் கிடைத்தபடியால் பிரேரணை தோற்றுப்போய்விட்டது. அப்பொழுதிருந்த கவர்ன்மெண்டாரும் கல்லுணர்ச்சியுடன் ஜனப் பிரதிநிதிகளின் தீர்மானத்திற்கு விரோதமாக அந்த மசோதாவை சட்டமாக்க யத்தனிக்கவில்லை.

சில வருஷங்களாக முனிஸிபல் சங்கத்துக்கு சொந்தமான தென்னை மரங்களை கள்ளுக் குத்தகைக்கு விடவேண்டாமென்றும், தெங்காய்க் குத்தகைக்கே விடவேண்டுமென்றும் முனிஸிபல் சங்கத்தால் தீர்மானிக்கப்பட்ட தீர்மானம் அமுலிலிருந்துவந்தது. 1925-ம் வரு செப்டம்பர் மாதக் கடைசியில், அப்போதிருந்த முனிசிபல் அக்கிராஸனர் அந்த வருஷம் மரங்களைக் கள்ளுக்

குத்தகைக்கு விடுவதால் ரூபாய் ஆயிரம் உபரி வருமானம் வரக் கூடியதாயிருக்கிறதென்றும், அக்காரணம் பற்றி சங்கத்தார் அப் போதிருந்த அனுஷ்டானத்தை மாற்றலாமென்றும் தென்னைமரக் குத்தகைப் பிரச்னையைக் கிளப்பினர். அதன் மேல் தேர்ந் தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களில் பாதிப் பெயர்கள் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தினர்களுடன் சேர்ந்துகொண்டு மரங்களை கள்ளுக் குத்தகைக்கே விடவேண்டுமென்று தீர்மா னித்துவிட்டார்கள். ஆனல் ஸ்ரீமான் J. K. மாணிக்கம் பிள்ளை யவர்கள் மட்டும் சர்க்காரால் நியமனம் செய்யப்பட்ட அங்கத்தின ராயிருந்தபோதிலும் அம்மாறுதலை பலமாக ஆக்ஷேபித்துப் பேசி னர். எனவே தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் நால்வரும் ஸ்ரீமான் J. K. மாணிக்கம் பிள்ளையவர்களும் ஆக ஐவர் மட்டில் இப்பிற் போக்கான தீர்மானத்தை எதிர்த்தார்கள்; மற்ற தேர்ந்தெடுக்கப் பட்ட அங்கத்தினர்கள் நால்வரும் சர்க்காரால் நியமனம் செய்யப் பட்ட உத்தியோகப்பற்றுள்ள மூவரும், ஆக எழுபேர்கள் இவ் விபரீதமான தீர்மானத்தை ஆதரித்தார்கள். ஆதலால் முனிஸி பல் தென்னை மரங்களை தேங்காய் குத்தகைக்கே விடவேண்டு மென்றிருந்த தீர்மானத்திற்குப் புறம்பாக, கள்ளுக் குத்தகைக்கு விடவேண்டியதென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதை யொட்டி ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் அவர்கள் 1925-ம் வரு அக்டோபர் மீ 6-ம்வ வெளிவந்த ஜனமித்திரன் பத்திரிகையில், "முனிஸிபல் சங்கத்தில் என் ஸ்தானத்தை நான் ராஜீனமா செய்ததேன்?" என்று எழுதியுள்ள அடியிற் கண்ட விஷயம் உப யோகமாயிருக்கும்:—

"இன்று தலையங்கத்தில் கூறப்பட்டவாறு சென்ற மூன்று வருஷங்களாக நகர பரிபாலன சபைக்குச் சொந்தமான தென்னை மரங்களை கள்ளுக்குத்தகைக்கு விடாமல் தேங்காய்க் குத்த கைக்கே விட்டு வந்திருக்க சில வாரங்களுக்கு முன் பிரகிருதம் வேலைபார்த்துவரும் அக்ராஸனர் மரங்களை கள்ளிறக்குவதற்கு விட்டால் ஆயிரம் ரூபாய் வரை லாபம் வரக்கூடியதென்று சொல்லி, அவ்வாறு விடலாமென்ற பிரேரணையைச் சங்கத்திற் கொண்டுவந்தார். மூன்று வருஷங்களுக்கு முன் முனிஸிபல் சங்கத்தார் தம்முடைய மரங்களைக் கள்ளிறக்கும் குத்தகைக்கு விடுவது முறையல்லவென்றும் ஸ்தல சுய ஆட்சியென்று சொல் லக்கூடிய இச்சங்கத்தார் கள்ளிறக்கி குடிப்பவர் மதபானம் செய் வதற்கு உடந்தையாயிருக்கக்கூடாதென்ற நோக்கத்துடன் மரங் களைத் தேங்காய்க் குத்தகைக்கே விடவேண்டுமென்று பிரேரணை அப்பொழுதிருந்த முனிஸிபல் சங்கத்தின்முன் கொண்டுவந்தேன். அப்பொழுது தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் சங்கியை நாலாக இருந்தபோதிலும் உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தினர்கள்

உள்பட எல்லோரும் ஏகோபித்து அதை ஆதரிக்கத் தீர்மானம் நிறைவேறியது. கவர்ன்மெண்டாரும் அதை அங்கீகரிக்க நாளது வரை அது அமுலிலிருந்து வருகிறது. இந்த நல்ல தீர்மானத்தை மாற்ற புதிதாக யாதொரு முகாந்திரங்களும் அக்கிராஸனராலும் அவரை உத்சாகத்துடன் ஆதரித்த ஏனைய அங்கத்தினர்களாலும் எடுத்துச் சொல்லப்படவில்லை. இவ்விஷயத்தில் முனிஸிபல் சங்கத்தார் மதுபானத்தை சட்ட பூர்வமாய் விலக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டு சட்ட சபை அங்கத்தினர்களைப் பலமாக ஆதரிக்கவேண்டியது அவர்கள் பொறுப்பும் கடமையாகவுமிருக்க, ஏற்கனவே முனிஸிபல் சங்கத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களும் சரி, உத்தியோகப் பற்றுள்ள அங்கத்தினர்களும் சரி, எல்லோரும் ஏகோபித்து நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை உல்லாசமாக மாற்றிவிட்டது மிகவும் வருந்தத்தக்க காரியம். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களிலேயே நால்வர் இவ்வண்ணம் செய்து சட்ட சபையில் இவ்விஷயத்தில் அரசாங்கத்தாரின் வாதத்தை பலப்படுத்தியது சற்றும் நான் எதிர்பாராத விஷயம். இது சம்பந்தமாய் என் அபிப்பிராயத்தை முனிஸிபல் சபையில் வெளியிட்டபொழுதே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் நான் ராஜீனமா செய்வதாய்த் தெரிவித்தேன். சென்ற வியாழனன்று நடந்த முனிஸிபல் சங்கத்தின் கூட்டத்தில் இந்தத் தீர்மானத்தை கவர்ன்மெண்டாரும் ஒத்துக்கொண்டு அது சபையின் கவனத்திற்கு வந்ததும் ஏற்கனவே நான் எழுதியுள்ள அபிப்பிராயத்தை யனுசரித்துப் பின்வருமாறு பேசினேன்:—

"அக்கிராஸனாதிபதியவர்களே, சகோதர அங்கத்தினர்களே, இவ்வண்ணம் இச்சபையார் பிற்போக்கான தீர்மானத்தை நிறைவேற்றியதற்காக நான் மிகவும் வருந்துகிறேன். சபையார் இவ்வாறு தீர்மானித்ததை அரசாங்கத்தார் அங்கீகரித்ததில் யாதொரு பிசகும் இல்லை. ஆனால் நாம் நமது கடமையைச் சரிவரச் செய்யவில்லையென்பதே எனது துணிபு. மூன்று வருஷங்களுக்கு முன்னால் முனிஸிபல் சபையின் தென்னை மரங்களை கள்ளுக்கு குத்தகைக்கு விடுவதில்லையென்று சபையோர் எல்லோருமாக ஏகோபித்துத் தீர்மானித்தோம். அதிலிருந்து இப்பொழுது இன்னும் முன்னேற்றமான சீர்திருத்தங்களைச் செய்யவேண்டியிருக்க பிற்போக்கான வழியில் அந்தத் தீர்மானத்தை ரத்து செய்தது மிகவும் அனுசிதமான காரியம். அவ்வாறு செய்வதற்கு யாதொரு தகுந்த முகாந்தரமும் இல்லை. இன்று சபையில் நிர்வாக அறிக்கை நகல் யாதாஸ்து சம்பந்தமாக அக்கிராஸனர் வாசித்த சங்கியைகளிலிருந்து இப்பொழுது முனிசிபல் சங்கத்தின் மீதக் கையிருப்பு

லட்சம் ரூபாய்க்கு மேலிருக்கிறதென்று தெரியவருகிறது. இந்த நிலைமையில் கேவலம் அதிக வருமானம் ஒன்றையே பெரிதாகக் கருதி நமது மரங்களைக் கள்ளிறக்க விடுவதென்று தீர்மானிக்க யாதொரு இடமுமில்லை. சட்ட சபையில் ஜனப்பிரதிநிதிகள் பன்முறையும் மதுபானத்தை ஒழிக்க வேண்டுமென்று பிரயத்தனம் செய்து தீர்மானித்திருப்பது உங்களுக்குத் தெரிந்ததே. சட்டசபையில் உள்ள உங்கள் சகோதரர்கள் இம்முக்கியமான விஷயத்தில் உங்கள் ஆதரவை விசேஷமாய் எதிர்பார்த்திருக்க, நீங்கள் அவர்கள் தீர்மானத்திற்குப் புறம்பாக கவர்ன்மெண்டாரின் வாதத்தை ஆதரிப்பதுபோல் இவ்வாறு பிற்போக்கான தீர்மானத்தை நிறைவேற்றுவீர்களென்று நான் கனவிலும் எண்ணவில்லை. இச்சபையின் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்களின் சங்கையை முன்னிருந்ததைப்போல் இரண்டு மடங்கு செய்யப்பட்ட பின் இச்சங்கத்தார் இவ்வாறு தீர்மானித்தது விசேஷமாக வருந்தத்தக்கது. இப்பொழுது இவ்வாறு தீர்மானிக்கப்பட்டதை பலமாக ஆட்சேபித்து அவ்வாட்சேபனைக்கு அறிகுறியாக என் ஸ்தானத்தை ராஜினமா செய்வதே எனது கடமையென்று எனக்குத் தோற்றுகிறபடியால் அவ்வாறு தீர்மானித்துவிட்டேன். நான் ஒருக்கால் மறுபடியும் தேர்தலுக்கு அபேட்சகனாய் நின்றாலும் நிற்கலாம். அல்லது முனிசிபல் சட்டம் சீர்திருத்தம் செய்யப்பட்டபின் மறுபடியும் தேர்தலுக்கு நிற்கலாமென்றிருந்தாலும் இருக்கலாம். இவ்விஷயத்தில் நான் இன்னும் ஒரு முடிவிற்கு வரவில்லை. ஆனால் இப்பொழுதே மறுபடியும் நான் தேர்தலில் அபேட்சகனாய் நின்றால், வரி செலுத்துவோர்களிடம் சென்று இவ்விஷயத்தில் சங்கத்தார் செய்த தீர்மானத்தை எடுத்துச் சொல்லி, நான் அதை ஆட்சேபித்துக் கண்டித்தது சரியென்று அவர்கள் நினைக்கும் பட்சத்தில் என்னை மறுபடியும் தேர்ந்தெடுக்கும்படிக்கும், இல்லாவிடில் என்னை அனுப்ப வேண்டாமென்றும் கேட்டுக்கொள்வேன். உங்களை விட்டுப்பிரிய நான் வருத்தமுள்ளவனாயிருக்கிறேன். கொள்கையை முன்னிட்டு நான் இவ்வாறு செய்யவேண்டியிருக்கிறதே தவிர உங்கள் எவர் பேரிலும் எனக்கு வருத்தமில்லை. நான் உங்களிடம் இத்துடன் விடை பெற்றுக்கொள்ளுகிறேன்."

மேற் சொன்னதை அனுசரித்து நான் எனது ராஜினமாவை அக்கிராசனருக்கு அனுப்பிவிட்டேன். ஜனங்களுக்கு மதுபானத்தின் கேட்டை எடுத்துச் சொல்லவும் பொது ஜனங்கள் இவ்விஷயத்தில் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தை அரசாங்கத்தாருக்கும் முனிஸிபல் சங்கத்தாருக்கும் தெரிவிப்பதற்கும் இது ஒரு ஸந்தர்ப்பமாகையால் மறுபடியும் தேர்தலுக்கு அபேட்சகனாக நிற்கத் தீர்மானித்திருக்கிறேன். முனிசிபல் சங்கத்தார்

பிற்போக்காய் நிறைவேற்றி யிருக்கும் தீர்மானம் ஜனங்களுடைய சம்மதத்தையும் ஈசுவர சம்மதத்தையும் பெற்றதல்லவென்று நிஸ்ஸந்தேகமாகக் காட்டும்படியாக வாக்காளர்களை வேண்டு கிறேன்."

S. விசுவனுதய்யர்.

இந்த விஷயத்தைப் பற்றி "புதுக்கோட்டையின் பிற்போக்கு" என்ற மகுடத்துடன் "சுதேசமித்திரன்" பத்திரிகையில் வந்த அடியிற்கண்ட விஷயம் இங்கு குறிப்பிடத்தக்கது:—

"புதுக்கோட்டை முனிஸிபல் சபை "மெட்ராஸ் மெயில்" பத்திரிகையின் ஆசீர்வாதத்தைப் பூர்ணமாகப பெற்றுவிட்டது. அப்பத்திரிகையின் ஆசீர்வாதம் எந்த சந்தர்ப்பத்தில் கிடைக்கு மென்பது நமது நேயர்களுக்குத் தெரிந்ததுதான். சென்ற 5 வருஷங்களுக்கு முன் அச்சபையானது தனக்குச் சொந்தமான தென்னை மரங்களில் கள்ளிறக்க அனுமதிப்பதில்லையென்று தீர்மானம் செய்தது. அத்தீர்மானத்தை தர்பாரும் ஒப்புக்கொண்டு விட்டார்கள். அப்படிக்கிருந்தும் திடீரென்று சில கௌன்ஸிலர்கள் விழித்துக்கொண்டு முன்போலவே தென்னை மரங்களில் கள்ளிறக்க அனுமதிக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார் களாம். அத்தீர்மானம் நிறைவேறிவிட்டதாம். தர்பாரிலும் அங் கீகாரம் கிடைத்துவிட்டதாம். இவ்விதம் செய்ததற்குச் சொல் லுங் காரணந்தான் விநோதமாக இருக்கிறது. முனிஸிபாலிடியார் மரங்களைக் கொடுக்காததால் தனிப்பட்டவர்கள் தங்களுடைய மரங்களின் குத்தகைத் தொகையை உயர்த்திவிட்டார்களாம். முனிசிபாலிட்டி நஷ்டப்பட்டுக்கொண்டு தனிப்பட்டவர்களுக்கு லாபம் சம்பாதித்துக்கொடுப்பானேனென்று "மெட்ராஸ் மெயில்" பத்திரிகை கேட்கிறது. மரங்களைக் கள்ளுக் குத்தகைக்கு விடா விட்டால் காய்க் குத்தகைக்கேனும் விட்டுத்தானிருக்கவேண்டும். அதனால் முனிசிபாலிட்டிக்குக் கண்டிப்பாக வருமானம் கிடைக் கும். ஒருவேளை அது குறைவாக இருந்தாலும் மதுவிலக்கு முயற்சியில் இந்த அற்ப நஷ்டத்திற்குக்கூட ஆளாகக்கூடாதா? 5 வருஷங்களுக்குமுன் செய்த அத்தீர்மானத்தை ரத்து செய்ய எவ்வித அவசிய மேற்பட்டுவிட்டது? அப்பொழுது தீங்கெனத் தோன்றிய செய்கை இப்பொழுது பூமணங் கமழ்கிறதா? இவ் விதம் செய்ததை வெறுத்து ஸ்ரீமான் விசுவனுதய்யர் தமது அங்கத்தினர் பதவியை ராஜீநாமாச் செய்துவிட்டார். அவர் ராஜீ நாமாச் செய்ததுடன் நின்றுவிடுவதில் பிரயோஜனமில்லை. எனைய அங்கத்தினர்களும் ராஜீநாமாச் செய்யும்படி வாக்காளர்கள் கட்டாயப்படுத்தும்படி தீவிரமாக கிளர்ச்சியை அவர் கடத்திவர வேண்டும்."

15-வது அத்தியாயம்.

நியாய இலாகா சீர்திருத்தமும் நகரசபைத் தேர்தலும்.

மகாநாடுகளிலும், பிரதிநிதி சபையிலும், சட்ட சபையிலும் அடிக்கடி வற்புறுத்தப்பட்டுவந்த ஓர் முக்கியமான விஷயம் நியாய இலாகா சீர்திருத்தப்பட வேண்டுமென்பது. அது ஈ-தர்பாரவர்களின் கவனத்திலிருந்துவந்தது. அதைப்பற்றி ஓர் அறிக்கையை வெளியிட்டு கவர்ன்மெண்டார் அவர்கள் பொதுஜன அபிப்பிராயத்தைக் கேட்டிருந்தார்கள். 1925ம் ஷ செப்டம்பர் மீ கூடிய சட்ட சபையில் அரசாங்கத்தார் நியாய இலாகா சம்பந்தமாய் குறிப்பிட்ட இரண்டு முறைகளில் ஏற்கனவே இருக்கும் நீதிபதிகளோடு சம அந்தஸ்துள்ள உபரி நீதிபதிகள் நியமனம் செய்யவேண்டியதுதான் உசிதமென்றும், மூன்ஸீப்கள் நியமனம் செய்யும் ஏற்பாடு கைக்கொள்ளத்தக்கதில்லை யென்றும் தீர்மானிக்கப்பட்டது. கவர்ன்மெண்டாரும் இவ்விஷயத்தில் தாங்கள் செய்யும் முடிவை ஒரு மாத காலத்திற்குள் அறிவிப்பதாகவும் கூறினார்கள்.

சீர்திருத்த சம்பந்தமாய் பற்பல வதந்திகளும், புதிய நியமனங்களைப்பற்றி பல்விதமான ஊர் பிரஸ்தாபங்களும் மலிந்திருந்தன.

இந்த விஷயத்தைப்பற்றி ஈ- திவானவர்கள் 11-11-1925ல் ஓர் அறிக்கையை வெளியிட்டனர். அதன் சுருக்கம் பின் வருமாறு:—

"சென்ற சில காலமாக சீப் கோர்ட்டின் சீர்திருத்தத்தைப் பற்றி கவர்ன்மெண்டாரவர்கள் ஆலோசனை செய்துவந்தார்கள். அவ்விஷயமாய் ஏற்பட்ட தீர்மானத்தின்படி, சீப் கோர்ட்டுக்கு உபரியாக இரண்டு ஜட்ஜிகளை நியமனம் செய்ய மகா-ஈ-ஸ்ரீ ரீஜெண்டு ஸாஹேப் அவர்கள் களிகூர்ந்து ஆக்ஞாபித்திருக்கிறார்கள். பிரகிருதம் உள்ள ஜட்ஜிகளைப்போலவே புது ஜட்ஜிகளும் அந்தஸ்தும் அதிகாரமும் உள்ளவர்களாவார்கள். ஆனால் அப்பீல் கோர்ட்டை பிரத்தியேகமாகவும், ஸ்வதந்தரமுள்ளதாகவும்

ஏற்படுத்தும்பொருட்டு, சீப் ஜட்ஜியும் கவர்ன்மெண்டார் அவர்களால் மற்ற ஜட்ஜிகளிலிருந்து நியமிக்கப்படும் ஒருவரும் சாதாரணமாய் எல்லா அப்பீல் வேலைகளையும் செய்யும்படி செய்யப்படும். அதுமாதிரியே அலல் லைஷன்ஸ் வேலைகளை மற்ற மூன்று ஜட்ஜிகளையும் செய்யச் சொல்லப்படும். ஜட்ஜிகளுக்குள் வேலைப் பிரிவினை விஷயமான மற்ற விவரங்கள் ஜனங்களுக்குத் தெரியும் பொருட்டு பின்னல் பிரசுரிக்கப்படும். மேல்கண்ட உத்திரவுகள் சாத்தியமானவரை, 1926-ம் வரு ஜனவரி மீ 1-ம்உ அமுலுக்கு வரும்."

1925-ம் வரு நவம்பர்-மீ 17ம்-உ வெளிவந்த "ஜனமித்திரனில்" பின்வரும் குறிப்பு எழுதப்பட்டது:— "நியாய இலாகா சீர்திருத்தம் சம்பந்தமாக அரசாங்கத்தார் வெளியிட்டிருக்கும் அறிக்கையை இவ்விதழில் பிரசுரம் செய்திருக்கிறோம். சீப் கோர்ட்டு நீதிபதிகள் எல்லோரையும் சம அந்தஸ்தை வகிக்கும்படி அரசாங்கத்தார் திட்டம் செய்திருப்பதைப் பாராட்டுகிறோம். கூடிய சீக்கிரம் புதிய நீதிபதிகளை உள்ளூர் நியாயவாதிகளுள் மிக்க அனுபோகமும் தேர்ச்சியும் பெற்றவர்களிலிருந்து மற்றெந்த முகாந்தரத்தையும் கருதாது அரசாங்கத்தார் நியமனம் செய்து மற்றொரு அறிக்கையைக் கூடிய சீக்கிரம் பிரசுரம் செய்வார்களென்று எதிர்பார்க்கிறோம்."

அப்பொழுது புதிய நீதிபதிகள் ஸ்தானங்களுக்கு இன்னார் இன்னாரை நியமிக்கப்போகிறார்களென்று பலமான வதந்திகள் கிளம்பின. "ஜனமித்திரன்" பத்திரிகையின் கௌரவ ஆசிரியரான ஸ்ரீமான் S. விசுவனாதய்யரவர்கள் 1925ம் வரு டிஸம்பர் மீ 8-ம்உ பத்திரிகையில் "ஊர் வதந்தி உண்மையானால்" என்ற தலையங்கம் ஒன்று எழுதினார். அதில் அவர் புதிய நீதிபதிகள் ஸ்தானங்களுக்கு அனுபவம் வாய்ந்தவர்களே நியமிக்கப்பட வேண்டுமென்று வற்புறுத்தி எழுதியிருந்தார். அது ரீஜென்ட் ஸாஹேப் அவர்கள் நோக்கத்திற்கு மாறுபட்டதாயிருந்தது. ஆதலின் அவர் ஸ்ரீமான் விசுவனாதய்யர் மீது கடுஞ்சினங்கொண்டார். தனது கோபத்தைக் காட்டுவதற்கான வழிகளை ஆராய்ந்து தெளிந்து அவற்றின்படி நடத்துவாராயினர். ஸ்ரீமான்களான R. ஸ்ரீநிவாஸாசாரியாரவர்களும் L. K. சுந்தரமய்யரவர்களும் ஸ்ரீமான் S. விசுவனாதய்யருக்குப் போட்டியாக தேர்தலுக்கு அபேக்ஷகர்களாய் நின்றார்கள். 13—12—25 தேர்தல் தினமாக குறிப்பிடப்பட்டது. பிரசாரமும் எதிர்ப் பிரசாரமும் பலமாக நடந்துவந்தன. ஸ்ரீமான் J. K. மாணிக்கம் பிள்ளையவர்கள் ஸ்ரீமான் S. விசுவனாதய்யரிடம் பின் வருமாறு கூறினார்:—

"முனிஸிபல் சபையில் பெரும்பான்மையோர் இவ்விஷயத்தில் இவ்வாறு முடிவு செய்வார்களென்று நான் கனவிலும் எண்ணவில்லை. அவர்கள் இவ்வாறு முடிவு செய்ததும் நானும் தங்களைப் போல் எனது ஸ்தானத்தை ராஜீநாமா செய்துவிடலாமென்று யோசித்தேன். நான் வரி செலுத்துவோர்களால் தேர்ந்தெடுக்கப் படாமல் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்டவனென்ற ஒரே எண்ணத்தை முன்னிட்டு ராஜீனமா செய்யவேண்டாமென்று தீர்மானித்தேன். இருந்தாலும் ஒரு நல்ல கொள்கையை நிலைநிறுத்தும் உத்தேசத்துடன் தாங்கள் அபேட்சகராய் நிற்கும் வரப்போகும் தேர்தலில் உங்களுடன் நல்லறிவு படைத்த எவரும் அபேட்சகர்களாய் நிற்கமாட்டார்களென்றே நம்பியிருந்தேன். இருவர் இந்நிலைமையில் உங்களுடன் போட்டிக்கு நிற்பதாய்த் தெரியவர எனக்கு மிகவும் ஆச்சரியமாயிருக்கிறது."

ஸ்ரீமான் S. விசுவலிங்கையர் அவர்கள் இத்தேர்தலை யொட்டி மூன்றாவது வார்டு ஓட்டர்களுக்கு கொடுத்த அறிவிப்பின் அடியிற் கண்ட பாகம் இங்கு கவனிக்கத் தகுந்தது:—

"கள்ளுக் கடைகளையும் சாராயக் கடைகளையும் முனிஸிபல் எல்கையிலிருந்து எடுத்துவிடுவதன் மூலமாக நகரவாசிகளுக்கு அமைதி ஏற்படவேண்டுமென்று நான் முனிஸிபல் சங்கத்தில் பிரேரணை செய்து சங்கத்தாரால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்னம் கவர்ன்மெண்டாரால் பைசல் செய்யப்பட்டதாய்த் தெரியவில்லை. முனிஸிபாலிடிக்குச் சொந்தமான தென்னை மரங்களை கள்ளுக் குத்தகைக்கு விடக்கூடாதென்றும் தேங்காய்க் குத்தகைக்கே விடவேண்டுமென்றும் சென்ற மூன்று வருஷங்களுக்குமுன் நான் முனிஸிபல் சங்கத்தில் கொண்டுவந்த தீர்மானம் எல்லோராலும் ஆமோதிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டு கவர்ன்மெண்டாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு ஊர்ஜிதத்திலிருந்து வந்தது. அவ்வாறு அமுலில் இருந்துவந்த நல்ல தீர்மானத்தை சமீபத்தில் பெரும்பான்மையோரடங்கிய அங்கத்தினர்கள் பிற்போக்குடன் மாற்றி முனிஸிபல் தென்னை மரங்களை கள்ளுக் குத்தகைக்கே விடுவதென்று தீர்மானித்துவிட்டார்கள்; நான் இவ்விஷயத்தில் எவ்வளவு எடுத்துச்சொல்லியும் செவிகொடாமல் பெரும்பான்மையோர் இவ்வண்ணம் செய்ததை பலமாக நான் ஆட்சேபித்து எனது ஸ்தானத்தை ராஜீனமா செய்தேன். அவ்வாறு ராஜீனமா செய்தபொழுதே நான் தேர்தலில் மீண்டும் அபேக்ஷகனாக நின்று, முனிஸிபல் சங்கத்தில் பெரும்பான்மையோர் செய்தது தவறென்றும், நானும் என்னை ஆதரித்த ஸ்ரீமான்களான G. சுந்தரேச சாஸ்திரிகள், G. சுந்தரேசய்யர், N. K. பாலுசாமி செட்டியார், J. K. மாணிக்கம்

பிள்ளை, இவர்களும் இவ்விஷயத்திற்கொண்ட அபிப்பிராயம் சரி யென்றும் வாக்காளர்கள் அபிப்பிராயப்பட்டால் அதற்கறிகுறி யாக என்னை மறுபடியும் அவர்கள் பிரதிநிதியாய் அனுப்பும்படி யவர்களைக் கேட்டுக்கொள்வேனென்றும் சொன்னேன்.

நீங்கள் சென்ற தேர்தலில் என்னைத் தேர்ந்தெடுத்திருப் பதில் இன்னும் 1½ வருஷத்திற்கு உங்கள் பிரதிநிதியாகவே நான் சபையில் இருக்க எனக்குப் பாத்தியம் உண்டு. இருந் தாலும் மேற்சொன்ன விஷயத்தில் நகாவாசிகளின் பிரதிநிதி களாயிருப்பவர்களில் பெரும்பான்மையோர் பிற்போக்காய்ச் செய் திருக்கும் காரியத்தை உங்களது கவனத்திற்குக் கொண்டுவாவே இம்மாதிரி நான் அவர்கள் செய்ததை ஆட்சேபித்து மீண்டும் அபேட்சகனாய் நிற்கிறேன். நான் செய்த காரியத்தை நீங்கள் ஆமோதிப்பதற்கும், என்னிடம் நீங்கள் கொண்டிருக்கும் நம்பிக் கையை மீண்டும் வெளிக்காட்டவும் இது நல்ல தருணம்.

முனிஸிபல் சபையில் அதன் மரங்களைக் கள்ளுக் குத்த கைக்கு விடுவதில்லையென்று சில வருஷங்களுக்கு முன் தீர்மானிக் கப்பட்டவுடன் இங்கிருப்பவர்களும் பிரிடிஷ் இந்தியாவிலுள்ளவர் களும் சங்கத்தார் காரியத்தை மெச்சினார்கள். சட்ட சபையில் மதுபானம் சட்ட பூர்வமாய் ஒழிக்கப்பட வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டதும் உங்கள் ஞாபகத்திலிருக்கும். இவ்வாறு முன்னேற்றமான தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால் உலகின் கண் நமது சமஸ்தானத்திற்கு எவ்வளவு மதிப்பு ஏற்பட்டிருக்கிற தென்பதும் உங்களுக்குத் தெரியும். கூடிய சீக்கிரம் மதுபானம் நமது சமஸ்தானத்தில் அடியோடு கடவுளருளால் ஒழியும் நன் னாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

நான் முனிஸிபல் சங்கத்தில் இவ்விஷயமாக நடந்துகொண் டதைப்பற்றி, "சுதேசமித்திரன்," "தமிழ்நாடு," "குமரன்" "தேச ஊழியன்" போன்ற பத்திரிகைகள் ஆதரித்து மெச்சிப் பேசியிருப்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். ஸ்ரீமான் S. ஸத்தியமூர்த்தி ஐயரவர்களைப்போன்ற தேச பக்தர்களும் அறி வாளிகளும் "தாங்கள் முனிஸிபல் சங்கத்தில் ஆண்மைத்தனத் துடனும் மனதைரியத்துடனும் நடந்துகொண்ட மாதிரியைப் பாராட்டுகிறேன். மீண்டும் தேர்ந்தெடுப்போர்களால் அநேக மாய் எல்லோராலும் ஏக மனதுடன் தேர்ந்தெடுக்கப்படுவீர்க ளென்று நம்புகிறேன்" என்று எனக்கு எழுதியுமிருக்கிறார்கள். நீங்களும் நான் செய்ததை ஆமோதித்தால் என்னை மறுபடியும் உங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கும்படி உங்களை வேண்டு கிறேன்.

இன்னுமொரு வார்த்தை மட்டும் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். முனிஸிபல் சங்கத்தில் மரங்களைக் கள்ளுக் குத்தகைக்கு விடக்கூடாதென்று நான் ஆட்சேபித்ததை நீங்கள் ஒத்துக்கொண்டால் மட்டும் என்னை மறுபடியும் தேர்ந்தெடுக்கும் படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஒரே விஷயத் தை மட்டில் உங்களுக்கெடுத்துச் சொல்வதென்றிருக்கிறேன். ஆனால் சில விதண்டை வாதிகள் இக்கொள்கையில் எனது அபிப்பி ராயத்தைக் கொண்ட மற்றவர்களும் என்னுடன் அபேட்சகர் களாக ஏன் இருக்கக்கூடாதென்று தர்க்கம் செய்ததை முன் னிட்டு வேறு விஷயங்களையும் எடுத்துச் சொல்லும்படி கேரிட் டது. ஆகையால் முனிஸிபல் சங்கத்தில் பெரும்பான்மையோர் முனிஸிபல் தென்னை மரங்களைக் கள்ளுக் குத்தகைக்கு விடத் தீர்மானித்தது பிசகென்றும், நானும் என்னுடன் சேர்ந்த சிறு பான்மையோரும் அபிப்பிராயப்பட்டது சரியென்றும் நீங்கள் அபிப்பிராயப்பட்டால், மறுபடியும் என்னைத் தங்கள் பிரதிநிதி யாக முனிஸிபல் சங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கும்படி வேண்டுகி றேன்."

அப்பொழுது தேசபக்தர் ஸ்ரீமான் K. L. சர்மா அவர்கள் புதுக்கோட்டை மகாஜனங்களுக்குப் பின்வரும் செய்தியை விடுத்தனர்:—

"புதுக்கோட்டை நகரவாஸிகளுக்கு இப்போது நான் சொல்லவேண்டியதொன்று உண்டு. அதை நான் இப்போது சொல்லாமல் விடுவது என் ஜன்ம பூமிக்குத் துரோகம் செய்வ தாகும். இதில் என் பிறவிக் குணத்தை அனுஸரித்து, எனக் குத் தோன்றுவதையே, திருத்தமாய், நிஷ்பக்ஷபாதமாய் சொல்ல வேண்டியிருக்கிறது.

புதுக்கோட்டையானது முன் நாளில் சுற்றுப்புறத்து ஊர் களில் கெட்ட பெயரைப் பெற்றிருந்தது. நகரவாஸிகளில் அக் காலத்தில் அநேகர் இழிவான வழிகளில் முன்னேற்றம் பெறக் கூசுவதில்லை என்று சொல்வார்கள். அதனால் புதுக்கோட்டை யோன் நான் என்று சொல்லிக்கொள்ளவேண்டி நேரும்போது வெட்கம் உண்டாவதுண்டு. ஆனால் அக்காலம் பழய காலம் என்னலாம்.

இப்போது நகர சபையார் செய்திருக்கும் இழிவான தீர்மான மானது முன் அபகீர்த்தியைப் புதுப்பித்துக்கொண்டதாயிற்று. புதுக்கோட்டை நகரவாஸிகள் நாலு சின்னக்காசு லாபத்துக்காக எவ்வளவு இழிவான வேலையையும் செய்யக் கூசமாட்டார்கள் என்று இனி அயல் ஊர்களில் எல்லாரும் சொல்ல இடமேற்பட்டு

விட்டது. முன் ஊர்ஜிதத்திலிருந்த நல்ல வழக்கத்தையும் மாற்றி, அவ்வாறு செய்வதென்றால், இதற்கு என்ன ஸமாதானம் சொல்லமுடியும்.

இந்த இழிவானது உண்மையில் சபையில் தற்காலம் அங்கத்தினர்களா யிருந்துகொண்டு, இதை ஆதரித்த சபையோர் சிலருக்கு மட்டில் பாத்தியமுள்ளதென்றும், பொது ஜனங்களுக்கு இதில் பங்கு கிடையாதென்றும் உலகமறிய நிரூபிக்க ஒரு சமய மானது எனது அந்தரங்க நண்பரான ஸ்ரீமான் விசுவநாதய்யரால் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த சமயத்திலாவது சபைத் தேர்தல் வாக்காளர்கள், தம் நகரத்துக்கு வந்திருக்கும் அபகீர்த்தி யை மாற்றிக்கொள்ளத் தம்மால் ஆனமட்டில் முயலவேண்டும். இதில் புதுக்கோட்டையோர் எல்லாருமே சேர்ந்து உழைக்க வேண்டும், தேர்தலில் வாக்காளர்களாயிருக்கும் பேர்கள் மட்டு மல்ல. இதில் புதுக்கோட்டை நகரவாஸிகள் தவறுவார்களே யானால், அவர்கள் முற்றிலும் மானமற்றவர்கள் என்று கண்டிப் பாய் முடிவு செய்ததாய்விடும்.

செய்யவேண்டியது ஒன்றே. இழிவான தீர்மானத்தை ஆக்ஷேபித்து ஜனங்களுக்கு இந்த ஸந்தர்ப்பத்தைத் தந்த எனது நண்பர் ஒருவரையே எல்லோரும் ஒரே வாக்காய் தேர்ந்தெடுக்க வேண்டும். வேறு வழி மானக்கேடான வழி."

ஸ்ரீமான் விசுவநாதய்யர் மீது ரீஜண்ட் ஸாஹிப் அவர் களுக்கிருந்த சினத்தைப்பற்றி முன்னமேயே குறிப்பிட்டிருக்கி றோம். அதைக் காட்டுவதற்கு இத்தேர்தலும் அவகாசம் கொடுத் தது. போட்டி பலமாயிருந்தது. ஸ்ரீமான் R. ஸ்ரீனிவாஸா சாரியாரவர்களுக்கு ரீஜண்ட் ஸாஹெப் அவர்கள் ஆசீர்வாதமும் அதிகார வர்க்கத்தாரின் ஆதரவும், ஸ்ரீமான் விசுவனாதய்யரவர் களுக்கு பொதுஜனங்களின் ஆதரவும் இருந்தன. நகரசபைத் தேர்தல் 13—12—25ல் நடைபெற்றது. அதில் ஸ்ரீமான் S. விசுவனாதய்யருக்கு சாதகமாக 72 ஓட்டுகளும், ஸ்ரீமான் ஸ்ரீனி வாஸாசாரியாருக்கு 71 ஓட்டுகளும், ஸ்ரீமான் L. K. சுந்தரமய்ய ருக்கு 20-ஓட்டுகளும் கிடைத்தன. ஸ்ரீமான் S. விசுவனாதய்ய ரவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார். அப்பொழுது ஸ்ரீமான் அய்ய ரவர்களுக்குக் கிடைத்த வெற்றியைப் பாராட்டி ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அவர்கள் 13-12-25ல் பின்வருமாறு எழுதினர்:—
"I never felt any doubt that you would succeed though I had misgivings during the last 10 days. This only shows that you have personally endeared yourself to the people."

தேர்தலைப்பற்றி ஸ்ரீமான் S. விசுவனுதய்யாவர்கள் ஜனமித்திரனில் பின்வருமாறு எழுதினர்:—

"ஏற்கனவே இப்பத்திரிகையில் நான் எழுதியுள்ளபடி 13–12–25 தேர்தல் தினம் நகரவாசிகளுக்குப் பெரும் சோதனை தினமாகவேயிருந்தது. சாதாரணமான நிலைமையில் ஒரு உபரி வாக்கால் எனக்குக் கிடைத்த வெற்றியை வெற்றியென்று கருத இடமில்லை. நான் பன்முறை இதற்கு முன் கூறியுள்ளபடி இந்த வெற்றி நகரவாசிகளையும், எக்கொள்கைக்காக நான் விலகிக் கொண்டு மீண்டும் அபேக்ஷகனுய் முன்வந்தேனே அக்கொள்கையையும் சார்ந்ததாகும். எவ்வளவோ இடையூறுகளாலும், தூண்டுதல்களாலும் பாதிக்கப்பட்ட நகரவாஸிகள் தருமத்தை ஆதாரமாகக்கொண்ட கொள்கையை இம்மட்டில் நிலைநிறுத்தியது போற்றத்தகுந்த காரியமென்றே நினைக்கவேண்டியிருக்கிறது. நான் எந்த வாக்காளர்களிடமும் சென்று "உங்கள் வாக்கை எனக்குக் கொடுங்கள்" என்று சொல்லாமல் எக்கொள்கையை முன்னிட்டு அபேட்சகனுய் நின்றேனே அதைமட்டில் விஸ்தாரமாக வாக்காளர்களிடம் தனித்தனியாகவும், நகரத்தில் நடைபெற்ற நான்கு பொதுக் கூட்டங்களிலும் எடுத்துச்சொல்லி, அந்தக் கொள்கையை சரியென்று வாக்காளர்கள் ஒப்புக்கொண்டால் மட்டும் அவர்கள் வாக்கை எனக்குக் கொடுக்கும்படியாகவும், இல்லையேல் யாதொரு தாட்சணியத்தை முன்னிட்டும் எனக்கு அவர்களுடைய வாக்கை அளிக்கக் கூடாதென்றும் நான் சொல்லி வந்ததை வாக்காளர்களும் பொதுஜனங்களும் நன்கறிவார்கள். அவ்வண்ணம் நியாய வழியில் நான் பிரசாரம் செய்து தேர்தலில் பெற்ற 72-வாக்குகளையும் எனது அருமையான கொள்கைக்காகவே நகர மகாஜனங்கள் அளித்ததாகக் கருதுகிறேன். நகர மகாஜனங்கள் எவ்வளவோ சங்கடங்களுக்கும் சோதனைக்கும் உட்படுத்தப்பட்டும் தருமத்தை நிலைநிறுத்தினர்கள். தருமம் எப்பொழுதும் தோல்வியடையாது. அது தோல்வியடைவதாய் ஒரு சமயம் தோன்றினும் இறுதியில் அதற்கே வெற்றியுண்டாகும். பொதுஜனங்களும் தரும வழியில் செல்லுகிறவரையில் அவர்களை அத்தருமம் தலை காக்கும். தருமமே ஜயம்."

தேர்தலின் முடிவு நகர மகாஜனங்களுக்கு மிகுந்த திருப்தியையும் உற்சாகத்தையும் விளைவித்தது. தங்கள் பேருவகையையும், பிரியத்தையும், மரியாதையையும் மாலைகள் சூட்டியும் இன்னும் பல வழிகளிலும் காண்பிவித்தார்கள். அதே தினத்தில் புதுக்கோட்டை "ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைச் சங்கம்" வழங்கிய அடியிற்கண்ட உபசாரப் பத்திரம் ஜனங்களின் உள்ளக்கிடக்கையைத் தெரிவிக்கும்.

"எமது அன்புமிக்க ஐயா!

இன்று நடந்த நகரசபைத் தேர்தலில் தாங்களே தேர்ந் தெடுக்கப்பட்டதுபற்றி எமதுள்ளத் தொளிரும் உழுவலன்பைத் தங்கள்பால் தாழ்மையுடன் அறிவிக்கக் கடமைப்பட்டுள்ள எங்கள் அற்ப கைங்கரியத்தை ஏற்றுக்கொள்ளுமாறு பிரார்த்திக் கின்றோம்.

சத்தியமே ஆண்டவன் என்றவாறு உண்மை நிலைநிறுத்த லில் வீறுபடைத் தொழுகும் பான்மையில் இடுக்கண் நிகழ்வது இயற்கையே யெனினும், இறுதியில் இறைவன் திருவருளால் மகாஜனங்கள்பாற்றிகழும் சக்தியால் கார்யசித்தி எய்தல் பெறு தலே சத்தியம் நிலைபெறச் செய்வதாகும். இவ்விடைத் தேர்த லில் விடாமுயற்சியுடன் கூடிய போட்டிகள் பல நிகழ்ந்திடினும் ஈசன் கருணையால் மகாஜனங்களிடம் 'சந்தோஷம்' பிறந்து, வளர்ந்து, தவழ்ந்து வருவதைப்பற்றி உங்கள்பால் எங்களது அன்பை ஸமர்ப்பிக்கின்றோம்.

இவ்விடைத் தேர்தல் ஓர் சிறந்த தத்வத்தையும், படிப்பினை யையும் கற்பிக்கும் ஆற்றல் படைத்துள்ளதால், ஓர் ஒப்புயர் வற்ற கொள்கையை நிலைநாட்டியிருக்கின்றது. எனவே, இஃது நமது சமஸ்தான நகர சபையின் சரித்திரத்தில் எக்காலத்திலும் குறிப்பிடத்தக்கதோர் விஷயமாகும்.

நகர சபை அங்கத்தினர் என்ற ஹோதாவில் தங்களால் செய்யப்பட்ட அரிய பெரிய காரியங்களையும், இதர சகல தேச சேவைகளையும் நாங்கள் பாராட்டுகின்றோமெனினும், தற்சமயம் நிகழ்ந்த தேர்தல் சம்பந்தமான காரணத்தை ஆதரிப்பதுடன் ஷை சபையில் உங்கள் கொள்கை வெற்றிபெற்று விளங்குமாறு ஈசனைப் போற்றும்

தங்கள்,
அன்புள்ள
(ஒப்பம்) B. A. கரீம்,
,, B. V. V. ராமன்,
,, நாராயணஸாமி ராஜு,
,, மூ. சு. மாணிக்கம் பிள்ளை,
13—12—25 ,, ந. ம. காதர் அலியர் ராவுத்தர்.

ஸ்ரீமான் விசுவனுதய்யருக்கு ஓர் அந்தரங்க நண்பர், ரீஜென்ட் ஸாஹேப் அவர்கள் அவரிடம் கோபம் கொண்டிருப்பதாகத் தெரிவித்து அதை ஸ்ரீமான் R. A. தெசூழிணமூர்த்தி பிள்ளை

யவர்கள் மூலமாக மாற்றிக்கொள்வது சுலபமாயிருக்கலாமென்றும் எடுத்துக்கூறினர். ஸ்ரீமான் விசுவனுதய்யாவர்கள் அந்த நண்பரிடம் தான் மகா-ன-ன-ஸ்ரீ ரீஜென்ட் ஸாஹேப் அவர்களுக்கு நேராடி கடிதம் எழுதி கோப சமனம் செய்துகொள்வதாகத் தெரிவித்துவிட்டு, உடனே 1925-ம் வரு டிஸம்பர் மீ 15ம்உ கடிதம் எழுதியனுப்பினர். அதில் அவர், தாம் பத்திரிகையில் எழுதியிருந்த விஷயம் பத்திரிகாசிரியர் என்ற முறையில் தமக்குத் தோன்றிய அபிப்பிராயங்களென்றும், எவ்விதத்திலும் சிறிதளவேனும் ரீஜென்ட் ஸாஹேப் அவர்களை நோகச்செய்யும் உத்தேசத்துடன் அது எழுதப்படவில்லையென்றும், அவரது வருத்தத்திற்கு இலக்கானது பற்றி தாம் மிகவும் வருந்துவதாயும் தெரிவித்திருந்தார். இயற்கையாக சமாதானத்தை பெரிதும் நாடுபவரும், மிகவும் பொறுமை வாய்ந்தவருமான அப்பெரியாருக்கு சற்றும் மன மாற்றம் ஏற்படவில்லை. "நாள் செய்வது நல்லவர் செய்யார்" என்று ஒரு பழமொழி உண்டு. ஸ்ரீமான் விசுவனுதய்யர் கடிதம் எழுதின தினம் செவ்வாய்க்கிழமை, அமாவாஸ்யை, கேட்டை நக்ஷத்திரம் கூடிய கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை என்று சொல்லுவார்களே, அதெல்லாம் சேர்ந்த தினம். அதுதான் ஸமாஸம் ஏற்படாததற்குக் காரணம்போலும். அக்கடிதம் பின் வருமாறு:—

Pudukotah
15—12—1925.

Most esteemed and Honoured Sir,

A friend of mine whispered into my ears that my leading article in the last issue of the "Janamitran" has offended you in the extreme and cautioned me against writing on the subject any further. Since nothing was farther from my thought than to offend you or your Government, I thought I owed it to me that I should hasten to disabuse you of any wrong impression that you might have formed of me.

There are no two young brothers of my Profession dearer to me than Messrs Subramania Aiyar and ....Personally I would be one of the earliest to congratulate these two friends if they are appointed to the places which would be theirs if dame rumour proves correct. But as an editor and as a public worker I deem it my duty to voice forth the views of the people at large especially when they are not perverse or irrational.

In giving expression to the same in my paper my sole aim wat to bring this to the notice of your Government and to avert, if possible, a step which is likely to be resented by the people at large.

It is unnecessary for me to tell you that I was the earliest to hail the advent of your Regency though by so doing many people misunderstood me. By your noble deeds and the sympathetic reforms which you were pleased to confer on the people, their misunderstanding was cleared and they began to think that I was right after all. It is needless for me to remind you of the part which I played in moving the Standing Committee of the People's Conference to vote an address of welcome to you and in welcoming the Regency in my Presidential address of the 4-th People's Conference at Alangudy. All these apart, how can I ever think of giving offence to one who has all along been so kind and affectionately helpful to my brothers and uniformly kind and courteous to myself? Surely, if I care to fawn and cajole men in Power I could have and I can do so with advantage to my little self. But I am not equal to it. If at any time I have to use expressions unpalatable to your Government, I may assure you that I would do so only in the best interests of the Government as I conceive them to be.

My excuse for the article is that the people's view should be brought to the notice of your Government and that it should not be concealed by any flattering dissimulation. To quote what I said in my presidential address on 17—11—1922:—

"We must be prepared at all times to boldly crticise the actions of the Government without fear or favour but always with a view to better the interests of the people and to make the Government realise its mistake. We must never shrink from stating the truth and offering our honest and independent criticisms simply because by so doing we may happen to displease the Government or any high-placed individual. We had

rather suffer for speaking the Truth than that the Truth should suffer for want of our speaking."

Let me now conclude with a fervent prayer to the Almighty that you may be speedily restored to health and that you may long long reign over the people with Peace, Plenty, Prosperity and Progress.

I remain
Most esteemed and honoured Sir,
One of your most genuinely loyal
and loving subjects
(sd) S. Viswanatha Aiyar.

16-வது அத்தியாயம்

நகரசபைத் தேர்தல் வழக்கும், 'ஜனமித்திரன்' கௌரவ ஆசிரியர் மீது நீதிமன்ற நடவடிக்கையும்.

1926-ம் ஆண்டு பிறந்தது. நியாய இலாகா சீர்திருத்த சம்பந்தமாய் புதிதாக இரண்டு நீதிபதிகளை நியமனம் செய்யவேண்டி அரசாங்கத்தார் 3-1-1926 தேதியுள்ள விளம்பரத்தின் மூலம் ஸ்டேட் வக்கீல் அண்டு பப்ளிக் பிராஸிகியூடர் M. R. Ry. V. இராமச்சந்திரய்யர் B. A., B. L. அவர்களையும் M. R. Ry. M. பரமசிவம் பிள்ளை B. A., B. L. அவர்களையும் Puisne ஜட்ஜிகளாகவும், M. R. Ry. G. சுந்தரேச சாஸ்திரிகள் B. A., B. L. அவர்களை ஸ்டேட் வக்கீல் அண்டு பப்ளிக் பிராஸிகியூடராகவும் நியமனம் செய்தார்கள். புதிய நீதிபதிகள் 4-1-1926ல் தங்கள் உத்தியோகங்களை ஒப்புக்கொண்டார்கள்.

அடுத்த மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று பல பேட்டையார்கள் கையொப்பமிட்டு பொது ஜனங்களுக்கு ஓர் வேண்டுகோளை விடுத்தனர். அது 1926-ம் வரு ஜனவரி மீ 1-ம்வ வெளிவந்த ஜனமித்திரனில் காணப்படுகிறது. அது பின்வருமாறு:— "சென்ற மகாநாடு அரிமளத்தில் கூட்டப்பட்டு சுமார் இரண்டு வருஷங்களாகின்றன. இன்னும் அடுத்த மகாநாடு கூட்டப்படாதது வியசனிக்கத்தக்கதே. இனியும் அடுத்த மகாநாட்டைக் கூட்டுவதில் தாமதிப்பது சமஸ்தான மக்களுக்கு அழகல்ல. மற்ற ஊரார்கள் இதில் சிரத்தை எடுத்துக்கொள்ளாததால் அடுத்த மகாநாட்டை ஏற்கனவே தீர்மானித்தபடி 1926-ம் வரு ஜனவரி மாதத்திற்குள்ளாவது புதுக்கோட்டை நகரத்திலேயே கூட்டவேண்டிய முயற்சிகளை எல்லோரும் எடுத்துக்கொள்ளவேண்டுமாய் வேண்டுகிறோம். மகாநாடுகளில் ஜனங்கள் தீர்மான ரூபமாய் கேட்டுக்கொண்ட பிரார்த்தனைகளெல்லாம் அரசாங்கத்தாரால் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. பிரதிநிதி சபையை சட்ட நிர்மாண சபையாக சீர்திருத்தம் செய்தும், பிரத்தியேகமான அப்பீல் கோர்ட்டு ஏற்படுத்துவதுபோலுள்ள காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன. சட்ட சபையில் ஜனப் பிரதிநிதிகள் செய்துவரும் வேலையை விமர்சனம் செய்து அவர்களுக்கு ஆதரவு அளிக்கவும், அவர்களுக்கு அச்சபையில் இன்னும் செய்ய வேண்டிய திட்டத்தை நிஷ்கரிஷிக்கவும் அடுத்த மகாநாட்டை அதிசீக்கிரத்தில் தலை நகரிலேயே கூட்டவேண்டியது அவசியமென நினைக்கிறோம். இனிமேலும் மகாஜனங்கள் உறக்கங்கொள்ளாமல் இம்முக்கியமான காரியத்தில் சிரத்தையெடுத்துக்கொள்ளும்படி வேண்டுகிறோம்."

(ஒப்பம்) ஆஜி. கல. க. சையது முகமது ருவுத்தர்
" தெ. முரு. பழனியாண்டி.
" மூ. சுப்பிரமணிய பிள்ளை
" மு. சி. வெங்கடாசலம் பிள்ளை
" நா. பெ. நா. நாராயணசாமி நாயக்கர்
" சொ. சி. மாணிக்கம் பிள்ளை
" பெ. கு. ம. வெ. செ. மலையப்ப பிள்ளை
" பெ. வெ. மு. முமல்வாமி செட்டி

1925ம் வரு டிஸம்பர் மீ 13-ம்வ நடந்த தேர்தலில் ஸ்ரீமான் S. விசுவனாதய்யரவர்களுக்கு அதிக வோட்டுகள் கிடைத்து அவர் தேர்ந்தெடுக்கப்பட்டதைக் குறித்து ஸ்ரீமான் R. ஸ்ரீனிவாஸாசாரியாரவர்கள் ஆக்ஷேபணை மனுக்கள் கொடுத்து அம்மனுக்கள் விசாரிக்கப்பட்டதின்பேரில் ஈ-திவானவர்கள் மறு தேர்தல் நடத்

தும்படி உத்தரவு பிறப்பித்தார். அந்த உத்தரவின் ஸாராம்சம் பின் வருமாறு:—

"மனுதாரின் முக்கிய ஆக்ஷேபணைகள் இரண்டு. முதலாவதாக ஸ்ரீமான் விசுவனுதய்யர் தன் ஸ்தானத்தை ராஜினுமா செய்து விட்ட படியால் அன்னவர் மறு தேர்தலுக்கு நிற்பது முனிஸிபல் கொருலேஷன் 7-வது பிரிவுப்படி தவறுகுமென்பதே. அப்பிரிவில் சொல்லப்படுவது யாதெனில், ஒரு முனிஸிபல் சபை அங்கத்தினர் தன் பூரா காலவரையான பிறகு மறு முறை அங்கத்தினராக வரலாம் என்பதே. ஸ்ரீமான் விசுவனுதய்யர் தான் அங்கத்தினராய் இருக்கக்கூடிய காலம் முடிவதற்குள் ராஜினுமா செய்துவிட்டபடியால் அவர் மறு தேர்தலுக்கு நிற்கக்கூடாதென்பது மனுதாரின் கக்ஷி. இப்படி இந்த 7-வது பிரிவிற்கு அர்த்தமாகாதென்றும், இம்மாதிரி இதற்கு வியாக்கியானம் செய்தால், ஒரு அங்கத்தினர் ஒரு தடவை ராஜினுமா செய்து விட்டால், அவர் ஆயுள்பரியந்தம் மறு முறை அங்கத்தினராக வரக்கூடாதென்ற அஸந்தர்ப்பமான நிலைமை ஏற்படுமென்றும் ஸ்ரீமான் விசுவனுதய்யர் வாதிக்கிறார். அவருடைய வாதம் முற்றும் ஒழுங்காகவும் பொருத்தமானதாகவும் இருப்பதுபற்றி மனுதாரின் இவ்வாக்ஷேபணையை நான் ஏற்றுக்கொள்ளவில்லை.

மற்றொரு ஆக்ஷேபணை என்னவெனில், முனிஸிபல் தேர்தல் விதிகளின் 21-வது பிரிவுப்படி ஸ்ரீமான் விசுவனுதய்யர் தன் வாக்குரிமையைச் செலுத்தினதாகவும், தனக்கே தன் வாக்கைக் கொடுத்ததாகவும் ஒத்துக்கொள்ளுகிறார். இதை சரியான வாக்கன்றென தள்ளிவிட்டால், மனுதாருக்கும் கவுண்டர் மனுதாருக்கும் சமமான வாக்குகள் கிடைத்ததாகவாகிறது. இந்நிலைமையில் மனுதாரின் வாக்குகளின் ஒழுங்கைப்பற்றி விசாரணை செய்து மனுவை பைசல் செய்யவேண்டுமென்று ஸ்ரீமான் விசுவனுதய்யர் வற்புறுத்திக் கேட்கிறார். இவர் இவ்வாறு கேட்பது நியாயமேயாயினும், இம்மாதிரி விசாரணை செய்வதற்கு விதிகள் இடங் கொடுக்கவில்லை. ஆதலின், மறு தேர்தலுக்கு உத்திரவு செய்வது பொருத்தமெனத் தோற்றுவதால், பிரஸ்தாப தேர்தலை ரத்து செய்து மறு தேர்தல் நடத்தும்படி உத்தரவிடுகிறேன்."

ஸ்ரீமான் விசுவனுதய்யர் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களை பேட்டிகாண விரும்புவதாக ஓர் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு ஹுஜூர் செக்ரிடரி M. R. Ry. R. கிருஷ்ண மாச்சாரியாரிடமிருந்து எதற்காக பேட்டிகாண விரும்புகிறார் என்பதைத் தெரிவிக்கும்படி ஸ்ரீமான் அய்யாவர்களுக்கு 30–1–1926ல் கடிதம் கிடைத்தது. அதற்கு ஐயாவர்கள் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் சில காலமாக தேக

அசௌக்கியமாயிருந்து அப்பொழுது குணமடைந்திருப்பதாகத் தெரியவந்ததால், அவர்களை நேரில் காண அவாவுள்ளவராயிருப்பதாகவும், யாது காரணத்தினாலாவது பார்ப்பதற்கு சௌகர்யப்படாவிட்டால் தமக்கு அவர்களைத் தொந்தரவு செய்ய இஷ்டமில்லையென்றும், சீக்கிரம் அவர்கள் பூர்ண ஸௌக்கியமடைய வேண்டுமென்று விரும்புவதோடு தமது கோரிக்கையை நிறுத்திக்கொள்வதாகவும் தெரிவித்தார். பிறகு பேட்டி காணும்படி கடிதம் கிடைத்தது. காலை சுமார் 10-30க்குப் பார்க்கும்படி உத்தரவு கிடைத்திருந்தது. அந்தப்படியே பேட்டிகாண ஸ்ரீமான் அய்யரவர்கள் சென்றிருந்தார். அவருடைய உத்தேசம் என்னவெனில், மகா-ன-ன-ஸ்ரீ ரீஜென்ட் ஸாஹேப் அவர்களை நேரில் சந்தித்துப் பேசினால் ஏதேனும் இருக்கக்கூடிய மனஸ்தாபங்கள் தீர்ந்துபோய், முன்போல் பரஸ்பர நல்லெண்ணத்துடன் இருக்க இடமேற்படுமென்பதுதான். ஆனால் சம்பாஷணை அதற்கு அனுகூலமானதாகவில்லை. உதட்டிலிருந்துவரும் வார்த்தைகளாகவே யிருந்தன. ஸ்ரீமான் அய்யரவர்கள் விடை பெற்றுத் திரும்புவதற்குமுன் ரீஜென்ட் ஸாஹேப் அவர்களைப் பார்த்து, "நான் தங்களுக்கு ஒரு வார்த்தைமட்டும் சொல்ல விரும்புகிறேன். எனக்குத் தங்களிடம் உள்ள அன்பும், மதிப்பும், தங்கள் ஸ்தானத்திற்காகமட்டுமல்ல. தங்களுடைய புத்தி, ஹிருதயம் இவற்றின் குண விசேஷங்களின் பொருட்டேயாகும். தங்கள் பதவி மாறினாலும் எனக்குத் தங்களிடமுள்ள அன்பும் நன் மதிப்பும் வழுவாதிருக்குமென்று உறுதி கூறுவேன்." என்று சொன்னார். இதைக் கேட்டதும் ரீஜென்டவர்கள் சற்று திகைத்து நின்றார். ஸ்ரீமான் அய்யரவர்கள் கூறிய நிலைமை, அதாவது ரீஜென்ட் பதவி தன்னைவிட்டு விலகுமென்பதை அவர் கனவிலும் நினைத்திலை. அப்படியும் ஒரு காலம் வரலாமென்பது அஸம்பாவிதமென்று கருதினார்போலும். இந்த சந்திப்பினால் எவ்விதமான மன மாறுதலும் ஏற்படவில்லையென்பது பின் நிகழ்ச்சிகளிலிருந்து தெரியவரும். இதுவும் ஈசன் செயலேயன்றி வேறில்லை.

18–3–1926-ல் 3-வது வார்டின் மறு தேர்தல் நடந்தது. தேர்தலில் போட்டி வெகு கடுமையாகவிருந்தது. ஸ்ரீமான் S. விசுவனுதய்யருக்கு 102 ஓட்டுக்களும், ஸ்ரீமான் R. ஸ்ரீனிவாஸாசாரியாரவர்களுக்கு 71 ஓட்டுக்களும் கிடைத்தபடியால் ஸ்ரீமான் S. விசுவனுதய்யரவர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீமான் அய்யரவர்கள் விஷயத்தில் பேட்டையார்கள் சிரமமெடுத்துக் கொண்டதும், தேர்தலுக்குப்பின் குதூகலத்துடன் ஸ்ரீமான் அய்யரவர்களை ஊர்வலமாக மாலை சண்டுகளுடன் அழைத்துச் சென்றதும் அவரிடம் பேட்டையார்கள் வைத்திருக்கும் மதிப்பைக் காட்டினதுந்தவிர, மதுவிலக்கு விஷயத்தில் அவர்கள்

கொண்டிருந்த அபிப்பிராயத்தையும் எடுத்துக் காட்டியது. ஸ்ரீமான் விசுவநாதய்யரவர்கள் 22–3–1926ல் தேர்தல் சம்பந்தமாய் பேட்டையார்களுக்கும், மற்றவர்களுக்கும் நன்றி பாராட்டி பின்வருமாறு ஜனமித்திரன் பத்திரிகையில் எழுதினர்:—

"சென்ற 18-3-26ல் நகர பரிபாலன சபைக் காரியாலயத்தில் நடைபெற்ற மூன்றாவது வார்டு தேர்தலில் எனக்குத் தங்கள் வாக்குகளை அளித்த வாக்காளர்களுக்கு என் மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன். அவர்கள் அனைவரும், மற்றுமுள்ள மூன்றாவது வார்டு வாக்காளர்களும், வரி செலுத்துவோர்களும் நகர பரிபாலன சீர்திருத்த சம்பந்தமாக சொல்லிக்கொள்ள விரும்பும் யோசனைகளையும், குறைகளையும் என்னிடம் எப்பொழுதும் தாராளமாய்க் கூறலாமென்றும், என்னாலியன்ற மட்டும் அவர்கள் குறைகளை நிவர்த்தி செய்யப் பாடுபட பிரியமுள்ளவனாயிருக்கிறேனென்றும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இந்நகரம் பேட்டையார்கள் அன்று தேர்தலில் என்பால் எடுத்துக் கொண்ட விசேஷ உற்சாகத்தை என்னால் ஆயுள்பரியந்தம் மறக்க முடியாது. அவர்கள் என்னிடம் காட்டிய மாசற்ற அன்பிற்கும், எனக்குத் தேர்தலில் வெற்றி கிடைத்தபின் அவர்கள் செய்த உயர்ந்ததோர் கௌரவத்திற்கும் எத்தனையோ ஜன்மங்கள் நான் எடுத்து அவர்களுக்கும், மற்றப் பொது ஜனங்களுக்கும் தொண்டு செய்தாலும் தகுந்த கைம்மாறு ஆக மாட்டாது. பேட்டையார்களின் மூன்னேற்றமும் க்ஷேம சௌகரியங்களும் எப்பொழுதும் என் மனத்தை விட்டகல மாட்டா என்பதை மட்டும் அவர்களுக்கு நான் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

எனதன்பார்ந்த முஸ்லீம் சங்கத்தார்களுக்கும், வாக்காளர்களுக்கும் எனது விசேஷ நன்றியை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நான் பொது ஜன வாழ்க்கையில் ஈடுபட்ட காலம் முதல் நாளதுவரை அவர்கள் என்னைக் கை விட்டதில்லை. இத்தேர்தலிலும் அவர்கள் என்னிடம் காட்டிய விசேஷப் பிரியத்திற்காகவும், நம்பிக்கைக்காகவும் எனது மனமார்ந்த வந்தனத்தை அவர்களுக்குச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். இறுதியாக, 18-3-26ல் எனக்குக் கிடைத்ததாகத் தோற்றும் வெற்றி இந்நகரத்தார்களையும், அவர்களது தேசாபிமானத்தையுமே சார்ந்ததாகும். எந்தக் கொள்கையை முன்னிட்டு எனது ஸ்தானத்தை ராஜீனமா செய்து மீண்டும் தேர்தலுக்கு அபேட்சகனாய் நின்றேனோ, அந்தக் கொள்கைக்கே வெற்றியாகும். மகா ஜனங்களுக்கு அன்பர்கள் செய்யும் மிகச் சிறிய தொண்டும் வீண்போகாதென்ற நீதியையும் இந்தத் தேர்தல் உலகத்தாருக்குத் தெளி

வாகப் புகட்டிவிட்டது. என்னிடம் மீண்டும் நம்பிக்கையை வெளிக்காட்டி பொதுஜன சேவை செய்வதில் இன்னும் எனக்கு அதிக ஊக்கத்தை அளித்த வாக்காளர்களுக்கும், பேட்டையார் களுக்கும், முஸ்லீம் சகோதரர்களுக்கும் மற்றுமுள்ள அன்பர் களுக்கும் மற்றுமொரு முறை எனது வந்தனத்தைச் செலுத்தி, எல்லாம் வல்ல இறைவன் அவர்களுக்கு சகல பாக்கியங்களையும் அளிக்கும்படி வழுத்தும்

அன்பன்

புதுக்கோட்டை 22-3-26 } (ஒப்பம்) S. விசுவனுதய்யர்.

1926ம் வரு ஜனவரி மீ 21-ம்வ சீப் கோர்ட்டு செஜிஸ்திரார் M. R. Ry. K. தங்கஸ்வாமி பிள்ளை B. A., B. L. அவர்களிட மிருந்து ஸ்ரீமான் S. விசுவனுதய்யருக்கு, அவர் வக்கீல்கள் சம் பந்தமான விதிகளில் 16-வது விதிக்குப் புறம்பாக "ஜனமித்தி ரன்" என்ற பத்திரிகை ஆசிரியராகத் தொழில் நடத்திவருவதாக சீப் கோர்ட்டாரவர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருப்ப தாயும், அந்த விஷயத்தைப்பற்றி தாம் தெரிவித்துக்கொள்ள விரும்பும் சங்கதிகளை அந்தத் தேதியிலிருந்து ஒரு வாரத்திற்குள் தெரிவித்துக்கொள்ளும்படிக்கும் நோட்டீஸ் கிடைத்தது.

ஸ்ரீமான் அய்யரவர்கள் 27-1-26ல் தாம் அப்பத்திரிகையின் கௌரவ ஆசிரியர்தானென்றும், அது சம்பாத்தியத்தை உத்தே சித்து விருத்தியாக நடத்தப்படவில்லையென்றும், அந்த வேலை யைத் தாம் தொழில் முறையில் வைத்துக்கொள்ளாதபடியால் அதைப்பற்றி கோர்ட்டாரவர்களுக்குத் தெரியப்படுத்தவில்லை யென்றும் அதற்கு பதில் அனுப்பினர்.

அதன் பேரில் ஸ்ரீமான் அய்யரவர்கள் கோர்ட்டாரவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளாமல் "ஜனமித்திரன்" பத்திரி கையின் கௌரவ ஆசிரியாய் இருந்துவந்தது நியாய வாதிகளின் ஒழுங்கைப்பற்றிய விதிகளுக்குப் புறம்பென்ற குற்றம் சாட்டப் பட்டு, 1926ம் வரு பிப்ரவரி மீ 24-ம்வ அப்பீல் கோர்ட்டில் ஐந்து நீதிபதிகளுக்கு முன்னிலையில் ஆஜராகி தன்னுடைய வாதங் களைச் சொல்லிக்கொள்ள வேண்டுமென்று 6-2-1926-ல் ஐந்து நீதிபதிகளால் கையொப்பமிடப்பட்ட ஒரு நோட்டீஸ் ஸ்ரீமான் S. விசுவனுதய்யரவர்களுக்கு அனுப்பப்பட்டது.

உடனே ஸ்ரீமான் விசுவனுதய்யரவர்கள் "ஜனமித்திரன்" பத்திரிகையின் கௌரவ ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொண்டு, பத்திரிகையின் மானேஜரும் ஸ்வாந்தாருமாகிய ஸ்ரீமான் P.S. சுப்பிரமணிய அய்யாவர்களுக்குப் பின்வருமாறு 6-2-1926ல் எழுதினர்:—

அன்பார்ந்த ஐயா,

சில காரணங்களை முன்னிட்டு இதுவரை நான் "ஜனமித்திரன்" கௌரவப் பத்திராதிபராக வகித்து வந்த பதவியிலிருந்து தாத்காலியமாகவோ, நிரந்தரமாகவோ, விலகிக்கொள்ளவேண்டிய நிலைமை ஏற்பட்டுவிட்டது. ஆதலால் இதுமுதல் பத்திரிகையை என்னை ஆசிரியராகக் கொள்ளாமல் வேறு ஏற்பாட்டைக்கொண்டு நடத்தும்படியாகத் தங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆனால் தங்களைக் கேட்டுக்கொள்வது மட்டும் ஒன்று. வேறு எவ்வித ஏற்பாட்டைக்கொண்டு தாங்கள் பத்திரிகையை இனி நடத்தி வந்தாலும், இதுவரை ஜனங்களின் கஷ்டியை "ஜனமித்திரன்" எத்துணை தடஸ்தமாகவும், நிர்ப்பயமாகவும் ஆதரித்துவந்ததோ, அவ்வண்ணமே இனியும் அம்மேலான கொள்கையிலிருந்து மயிரிழையும் புரளாமல் தாங்கள் நடத்திவரவேண்டுமென்பதுதான் எனது கோரிக்கை. பலருக்குக் கட்டுப்பட்டு இச்சமஸ்தானத்தில் நியாயவாதித் தொழிலில் இருந்துகொண்டு பத்திரிகை நடத்தப்படுவதைப் பார்க்கிலும், நான் ஆசிரியர் என்ற முறையிலிருந்து விலகிக்கொள்வதே பத்திரிகையைத் தாங்கள் இன்னும் பூரண சுதந்திரத்துடனும், எவருடைய விருப்பு வெறுப்பையும் சற்றும் கவனியாமலும், தடஸ்தமாகவும், நிர்ப்பயமாகவும் இனி நடத்திவர ஏதுவாயிருக்குமென்று நினைக்கிறேன். "ஜனமித்திரன்" உண்மையில் ஜனமித்திரனாகவே நீடூழிகாலம் பொது ஜனங்களுக்குத் தொண்டு புரியவேண்டுமென்று இறைவனைப் பிரார்த்திப்பதுடன் நான் விடைபெற்றுக்கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள

(ஒப்பம்) S. விசுவநாதய்யர்.

அதே தேதியில், அவர் "ஜனமித்திரன் நேயர்களுக்கு ஓர் விக்ஞாபனம்" என்று அடியிற்கண்ட செய்தியை விடுத்தனர்:—

அன்பர்காள்,

எனது அருமைக் குழந்தையைப் போல் நான் நேசித்து வந்த இப்பத்திரிகையின் கௌரவ ஆசிரியர் பதவியிலிருந்து தற்சமயம் நான் விலகிக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டதைக் குறித்து வருந்துகிறேன். ஆயினும் என் அருமைக் குழந்தையை என்னைக்காட்டிலும் அதனிடம் அன்பு பாராட்டி வளர்க்கக் கூடியவர்களே என்னிடமிருந்து ஸ்வீகாரம் பெற்றிருக்கிறார்களென்பது இச்சமயம் எனக்குப் பெரும் ஆறுதலாயிருக்கிறது. நான் பத்திராதிபர் என்ற பதவியிலிருந்து தாத்காலியமாக விலகிக்கொள்ளவேண்டியிருந்தாலும், எப்பொழுதும் என்னுயிர் உள்ளளவும் ஜனமித்திரனிடம் எனக்குள்ள அன்பு மாறுதென்பது

திண்ணம். நான் ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக்கொள்ள வேண்டிய காலத்திலும், எனக்கு ஜீவாதாரமாயுள்ள நியாய வாதத் தொழில் சாவகாசம் கொடுக்கும்மட்டும் ஜனமித்திரனுக்கு எனது கையொப்பத்துடன் விஷய தானம் செய்துவருவேனென்று சொல்லத் தேவையில்லை. எந்த நிலைமையிலும் ஜனமித்திரனின் மேலான கொள்கையும், நியாய புத்தியும் மாறுதென்றும், என்னை அன்றி அதன் பலமும் மஞ்ஞைதரியமும் அபிவிர்த்தியாகுமென்றும் நிச்சயமாய் நம்புகிறேன். இத்துடன் ஆசிரியர் பதவியை விட்டு விலகிக்கொண்டு கண்ணீருடன் உங்களிடம் விடை பெற்றுக் கொள்ளுகிறேன். ஆயினும் கடவுளருளால் அடிக்கடி பத்திரிகை வாயிலாக உங்களுடன் பேசவும், எனது உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை அப்போதைக்கப்போது வெளியிடவும் கூடுமென்ற ஆறுதலைக் கொண்டிருக்கிறேன்.

தங்கள் அன்பன்,

(ஒப்பம்) S. விசுவனுதய்யர்.

எற்கனவே குறிப்பிட்டபடி 24-2-26-ம் தேதி பகல் 11-15 மணிக்கு ஜனமித்திரன் மாஜி கௌரவ ஆசிரியரின் மீது குற்றம் சாட்டப்பட்டிருந்த வழக்கு ஐந்து ஜட்ஜிகளின் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஏராளமான ஜனங்கள் வழக்கு எவ்விதம் முடியுமோவென்று கவனிக்க கவலையுடன் குழுமியிருந்தார்கள். ஸ்டேட் வக்கீல் M. R. Ry. P. V ரெகுநாதய்யரவர்கள் சர்க்கார் தரப்பில் ஆஜராகிப் பேசினார். ஸ்ரீமான் V. வைத்தியனுதய்யரவர்கள் ஸ்ரீமான் விசுவனுதய்யருக்காக ஆஜராகிப் பேசினார். கோர்ட்டாரவர்கள் அனுமதியைப் பெறுமல் பத்திரிகை நடத்தியது குற்றமென கோர்ட்டாரவர்கள் கருதிய படியால், அவர் குற்றம் செய்ததை ஒப்புக்கொள்ளுகிறாவென்று கேட்க, குற்றத்தை ஒப்புக்கொண்டும், ஆனல் வேண்டுமென ஒரு குற்றத்தையும் இழைக்கவில்லையென்றும், குற்றத்திற்காக வருத்தத்தைத் தெரிவிப்பதாகவும் வக்கீல் சொல்ல, கோர்ட்டாரவர்கள் அனுமதியைப் பெறுமல் பத்திரிகை நடத்திய குற்றத்திற்கு ஸ்ரீமான் விசுவனுதய்யரை எச்சரித்து, சட்ட நடவடிக்கைகளை கோர்ட்டாரவர்கள் நிறுத்திக்கொண்டார்கள்.

1926-ம் வரு மார்ச் மீ 25-ம்வ மாலையில் தர்பார் ஹாலில் உத்தியோகப்பற்றில்லாத சட்ட சபை அங்கத்தினர்கள் தங்களுக்கு ஒரு தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு கூட்டம் கூடினர்கள். ஸ்ரீமான் K. S. ராமச்சந்திரய்யர் அக்கிராசனம் வகித்தார். ஸ்ரீமான்களான K. S. ராமச்சந்திரய்யர், S. சுப்பிரமணிய அய்யர், A. வேணுகோபால நாயுடு, S. விசுவனுதய்யர் முதலியவர்களின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன. வோட்டுக்கு விடப்

பட்டதில் ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் அதிகப்படியான வோட்டு களால் தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஸ்ரீமான் R. A. தெகஷிணாமூர்த்தி பிள்ளையவர்கள் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜென்ட் ஸாஹிப் அவர்களின் கௌரவ எய்ட்-டி-காம்பாக நியமிக்கப்பட்டார்.

1926ம் வரு ஜூன் மீ 16-ம்உ ஸ்ரீமான் S. சுப்பிரமணிய அய்யரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் அடுத்த மகாநாட்டைக் கூட்டுவதற்காக ஓர் கூட்டம் நடைபெற்றது. மகாநாட்டை நடத்த ஓர் கமிட்டியும் நியமனம் செய்யப்பட்டது.

மகாநாடு கூட்டுவது சம்பந்தமாய் 9–9–26 மாலை 6-மணிக்கு ஸ்ரீமான் K. S. ராமச்சந்திரய்யரவர்கள் அக்கிராஸனத்தின் கீழ் ஓர் கூட்டம் கூடிற்று. மகாநாட்டை நவம்பர் மாதத்தில் நடத்துகிறதென்றும், ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் வரவேற்புக்கமிட்டி அக்கிராஸனராயிருப்பாரென்றும், ஸ்ரீமான்களான V. S. கணபதி சாஸ்திரிகளும், A. S. நாகரத்னமய்யரும் கார்யதரிசிகளாயிருப்பார்களென்றும் தீர்மானிக்கப்பட்டது. மகாநாட்டின் நிர்வாகக் கமிட்டியார் அந்த மகாநாட்டிற்கு அக்கிராஸனம் வகிக்க சௌகரியப்படுமாவென்று ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்களுக்கு எழுதிக் கேட்டிருந்தார்கள். இறுதியாக மகாநாடு புதுக்கோட்டையில் டிஸம்பர் மீ 2, 3-ம் தேதிகளில் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் நடைபெறுமென்றும், ஸ்ரீமான் G. சுந்தரேசய்யரவர்கள் வரவேற்பு கமிட்டித் தலைவராயிருப்பாரென்றும் அறிவிக்கப்பட்டது.

1926ம் வரு அக்டோபர் மீ 25-ம் உ முதல் திவான் M. R. Ry. P. K. குன்னுனி மேனன் அவர்கள் ஒரு மாத ரஜாவெடுத்துக் கொண்டார். ஸ்ரீமான் G. கணபதி சாஸ்திரியாரவர்கள் B. A., B. L. பதிலி திவானாகவும் ஸ்ரீமான் A. பத்மநாபசாஸ்திரியாரவர்கள் B. A., M. L. பதிலி பிரதம நீதிபதியாகவும், கௌரவ எயிட்-டி-காம்பு M. R. Ry. R. A. தெகஷிணாமூர்த்தி பிள்ளையவர்கள் கமாண்டென்டாக பதிலியாகவும் நியமிக்கப்பட்டார்கள்.

1926ம் வரு நவம்பர் மீ 12-ம் உ வெளிவந்த ஜனமித்திரன் தலையங்கத்தில் "புதுக்கோட்டை சமஸ்தான 6-வது மகாநாடு" என்ற விஷயத்தைப்பற்றி எழுதப்பட்டிருந்தது. அதில் மகாநாட்டில் கவனிக்க வேண்டிய முக்கிய அம்சம் இன்னதென்று எழுதியிருந்த பாகம் அடியில் வருமாறு:—

"சமஸ்தான நிர்வாகத்தைப்பற்றியும், சமஸ்தான எதிர்கால வாழ்வைப்பற்றியும், சமீபத்தில் ஹிந்து, மதராஸ் மெயில், ஸ்வ

ராஜ்ஜியா முதலிய பல பத்திரிகைகளில் பல கட்டுரைகள் வெளி வந்தன. சமஸ்தான எதிர்கால வாழ்வைப்பற்றி கவனிக்க சமஸ் தான மகாநாட்டிற்குப் பூரண சுதந்தரம் உண்டென்று நாம் சொல்லத் தேவையில்லை. சமஸ்தானத்தின் எதிர்கால நிலை அந்தகாரத்தில் மூடப்பட்டிருக்கிறது. பிரிடிஷ் கவர்ன்மெண்டா ரும், சமஸ்தான அரசாங்கத்தாரும் இவ்விஷயத்தில் மௌனம் சாதிக்கிறார்கள். இது ஒரு சிக்கலான பிரச்னையாயிருந்தாலும், அதை கவனிப்பதால் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர் களுக்காவது, மகாராஜா அவர்களுக்காவது விசுவாசக் குறைவு சிறிதளவும் ஏற்படாது. அன்றியும் சமஸ்தானத்தின் எதிர்கால வாழ்க்கையைப்பற்றி சிந்தித்து அதைக் கவலைக்கிடமன்றியும் சமஸ்தான மக்களின் நன்மைக்கேற்றவாறு மிருக்கச் செய்வது அரசாங்கத்தாருடையவும், மகாநாட்டாருடையவும் இன்றியமை யாத கடமையாகும். கடைசியாக நிர்வாகச் செலவை கூடுமான மட்டும் மட்டுப்படுத்தவும் மகாநாட்டார் முயற்சிக்க வேண்டும்."

17-வது அத்தியாயம்.

ஆறுவது மகாநாடு.

ஆறுவது மகாநாட்டின் தலைவர் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயரவர்களை அழைத்துவர ஸ்ரீமான் S. விசுவனாதய்யர் 2-12-26ம் தேதி காலை திருச்சிக்குச் சென்று, ஸ்ரீமான் ஐயரவர்களை திருச்சி ஜங்ஷனில் கண்டு, பூமாலை சூட்டி வரவேற்று, புதுக் கோட்டைக்கு ஒரு பிரத்தியேகமான மோட்டாரில் அழைத்து வந்தார். ஸ்ரீமான் அய்யர் புதுக்கோட்டைக்கு வந்த வழி நெடுக பூமாலைகளுடனும் பாமாலைகளுடனும் சமஸ்தான ஜனங்களால் வரவேற்கப்பட்டார். கீரனூரில், கீரனூர், குளத்தூர் மகாஜனங் களாலும், திருச்சி சுங்கங் கேட்டில் ஸ்ரீமான் அங்கப்பக் கொடும் பாரின் காரியஸ்தர்களாலும், திருகோகர்ணத்திற்கருகாமை யில் திருவப்பூர் வித்யாபிவிர்த்தி சபையாராலும் ஸ்ரீமான் ஐயர் வரவேற்கப்பட்டு உபசாரப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. அன்று தினம் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் பிறந்த தினமாகை யால், காலையில் குண்டுகள் போடப்பட்டன. ஸ்ரீமான் ஐயர் தலை நகரை அணுகவும் குண்டுகள் போட்டமையால், ஜனங்களெல் லோரும் இவ்வெதிர்பாராத சுப சூசகங்களைப்பற்றி உத்ஸாகத் துடன் பேசத் தலைப்பட்டனர். தலைநகருக்கு வந்தவுடன்

ஸ்ரீமான் ஐயர் ஜனமித்திரன் கார்யாலயத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டு, ஜனமித்திரன் ஆசிரியரால் வரவேற்கப்பட்டு, ஒரு உபசாரப் பத்திரம் அளிக்கப்பட்டது. பின்னர் தலைவர் அவர்களுக்கென பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டிருந்த பங்களாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். பங்களாவில் ஸ்ரீமான் ஐயரை அநேகர் பேட்டி கண்டு ராஜீய விஷயமாகச் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர்.

ஊர்வல வைபவம்

மாலை 5-மணிக்கு ஸ்ரீமான் ஐயர் ஊர்வலமாக நகர மண்டபத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டார். ஊர்வலக் காட்சியின் வைபவம் செப்புந்தரத்தன்று. அரசரைக் கண்டு அகமகிழும் ஆனந்த வெள்ளமும், அத்யந்த பக்தியும், ஆசாரியர்களைக் கண்டு அன்புடன் அடிபணியும் திருகரண சுத்தியும் மகாஜனங்களிடத்தில் காணப்பட்டன. பேட்டை மகாஜனங்கள் ஸ்ரீமான் ஐயரை கௌரவித்ததின் மூலம் தங்களையே கௌரவித்துக்கொண்டார்கள். சரியாய் 6-மணிக்கெல்லாம் ஊர்வலம் மேளதாளத்துடனும், பிரதிநிதிக் குழாங்களுடனும் நகர மண்டபம் வந்து சேர்ந்தது.

பிறகு "மகாநாட்டின் அவசியம்" என்பதைப்பற்றி ஓர் உபந்யாஸம் செய்யவேண்டுமென்று கோரியதை முன்னிட்டு பெருத்த கூட்டத்தினிடையே ஸ்ரீமான் அய்யர் பின்வருமாறு வெகு ருசிகரமான பிரசங்கம் புரிந்தார்:—

"சகோதரர்களே! இன்றைய தினம் நான் இங்கு உங்கள் மத்தியில் வர நேர்ந்ததை முன்னிட்டு நீங்கள் அன்புடன் கௌரவமான மரியாதைகளை என் மீது மனதார சுமத்திவிட்டீர்கள். இன்றைய தினம் ஓர் உத்சவம்போல் நடந்ததற்கு நான் மனமார்ந்த வந்தனம் செலுத்தி அதற்குத் தக்க தேச சேவை செய்யும்படி எனக்கு பகவான் ஆயுளைக் கொடுக்க வேண்டுகிறேன். மகாநாட்டின்கண் அக்கிராஸனம் வகிக்கும் தருவாயில், முன்பாக பிரஸங்கமேதும் பொருத்தமில்லையானாலும், அது நான் அக்கிராஸனம் வகிக்கும் கூட்டத்திற்கு வாருங்கள் என்பது போலாகுமானாலும், ஏற்கனவே அவ்வழக்கம் ஏற்படுத்திவிட்டோமென்று தெரியப்படுத்தப்பட்டதால் சில வார்த்தைகள் சொல்லுகிறேன். ஸ்வராஜ்ஜியமென்பது உங்களுடைய பிறப்புரிமையாகும். அதை அடைந்தாலொழிய நிவாரணம் ஒன்றுமில்லை. இந்த நாட்டைப் போல் மழையில்லாமலும், தொழில் முதலிய வழிகள் இல்லாமலும் பட்டினியாக ஜனங்கள் படும் கஷ்டம் எந்நாட்டிலுமில்லை. கவர்ன்மெண்டானது ஜனங்களுக்கு சுகமான வாழ்க்கை ஏற்பட்டிருந்தால்தான் அதன் கடமையைக் கவனித்ததாகும். உங்களுடைய வரியை நீங்கள் போடவும், சட்டங்களை அமைக்கவும்,

சர்க்கார் சிப்பந்திகள் பொதுஜன சமூக ஊழியர்கள் என்று ஏற்படவேண்டும். சமஸ்தானம் எவருடைய பிதிரார்ஜிதமுமில்லை. அம்மாதிரி நினைத்த நாளெல்லாம் மலையேறிவிட்டது. ராஜ வம்சத்தினரும் அரசரும் கூடிழி வாழ்ந்து பொறுப்பாட்சியை நடத்த வேண்டுமென்றுதான் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டும். நீங்களெல்லாம் தேச விசுவாஸமுள்ளவர்கள். பொதுஜன நன்மையும், தேசபக்தியும், தியாக புத்தியுமுள்ளவர்களாய் தக்க கிளர்ச்சி நடத்தினால், 10-வருஷத்தில் ஸ்வாராஜ்யம் உங்களுக்குக் கிடைக்கும். நீங்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து உழைத்தால் தக்க தலைவர் இல்லாமல் படும் கஷ்டம் குறைந்துவிடும். எவரும் உங்கள் கோரிக்கையில் குறுக்கிட முடியாது. பகவான் உங்களிடை இருப்பார். ராமன் ஆண்டால் என்ன, ராவணன் ஆண்டால் என்ன வென்று தூங்கிவரும் காலம் உதவாது. அதுதான் நாம் இப்போ திருக்கிற நிலைமைக்குக் காரணம். நீங்கள் எல்லாரும் கிளர்ச்சியை மகாநாடு மூலம் நடத்தி ஸ்வராஜ்யம் பெற்று என்னைப் பிறகு அழைத்தால் அதுதான் எனக்குப் பெரிய மரியாதையென்று நினைப்பேன். ஆகவே மகாநாட்டிற்கண் அனைவரும் வந்து, வேண்டிய காரியங்களில் ஈடுபடுங்கள்."

இவ்வாறு கூறி முடித்தவுடன் வந்தனம் அளிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

பிரதிநிதிகள் விஷய ஆலோசனைக் கமிட்டி கூட்டத்திற்குப் போகக் கிளம்பினர்.

மகாநாட்டின் விஷய ஆலோசனைச் சங்கம் இரவு 7-மணி முதல் 8½ மணி வரை நடைபெற்றது. சுமார் 200 பிரதிநிதிகளுக்கு மேல் கூடி வெகு உத்ஸாகத்துடன் சர்ச்சை செய்தனர்.

பின்பு தலைவரவர்கள் தேர்தல்களில் வெற்றி பெற்றதைப் பாராட்டும் நிமித்தம் நியாயவாதி ஸ்ரீமான் R. ராஜகோபாலய்யர் அவர்களின் நண்பர் பலர் ஒன்று கூடி வரவேற்புப் பாராட்டி அறுசுவை உண்டியும் கூடிய ஒரு பலத்த விருந்தை அளித்தனர். விருந்துக்குப் பின்னர் ஸ்ரீமான் அய்யரைப்பற்றியும், சுயராஜ்யக் கட்சியைப்பற்றியும் பலர் பாராட்டிப் பேசினர்.

3-12-26ம் தேதி காலை 7-30 மணிக்கு "விஷயாலோசனைக் கூட்டம்" மீண்டும் டவுன் ஹாலில் கூடி பல முக்கியமான விஷயங்களைப்பற்றி சர்ச்சை செய்து 9-மணிக்குக் கலைந்தது.

பின்னர் தலைவரவர்களை திருகோகர்ணம் மகாஜனங்கள் அழைத்துச் சென்று ஓர் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுத்தனர். திரும்புகாலை தேச ஊழியன் அதிபர் வேண்டுகோளுக்கிணங்கி காரியாலயத்தில் விஜயம் செய்தார். அங்கு ஜனங்கள்

குழுமியிருந்தனர். அதிபால் ஓர் உபசாரப் பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டது.

மகாநாட்டின் நடவடிக்கைகள்

சமஸ்தான மகாநாடு சரியாய் பகல் 12-15க்கு ஆரம்பமாயிற்று. பாலையா கலாசாலை மாணவ மாணவிகள் கடவுள் ஸ்துதி, தேசிய கீதம் முதலியவை பாடினர். சுமார் 600 ஜனங்கள் வரை குழுமியிருந்தனர். அகில மதத்தினரும், ஜாதியரும் விஜயம் செய்திருந்தபடியால் மகாநாடு பூர்ண பிரதிநிதித்துவம் வாய்ந்த மகாநாடென்றே சொல்லவேண்டும். சட்டசபை உப அக்கிராசனர் ஸ்ரீமான் S. நாராயணஸ்வாமி அய்யரவர்கள், மாஜி திவான் பேஷ்கார் மகா-ரா-ரா-ஸ்ரீ B. V. காமேசுவராய்யர் அவர்கள், மாஜி டிப்டி மாஜிஸ்திரேட் மகா-ரா-ரா-ஸ்ரீ P. R. ராமச்சந்திர ராவ் அவர்களும் விஜயஞ் செய்திருந்தனர்.

வரவேற்பு கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் G. சுந்தரேச அய்யரவர்கள் கரகோஷங்களுக்கிடையே தமது வரவேற்புப் பிரசங்கத்தை வாசித்தார். அதில் சில முக்கியமான பாகங்கள் பின்வருவனவாகும்:—

சகோதர ப்ரதிநிதிகளே!

"சென்ற 9—9—26யன்று சட்டசபைக் கூட்டம் கலைந்தபின் பொருக்கியெடுத்த சிலர்கள் நகரசபா மண்டபத்தில் கூடினார்கள். மகாநாடு நடத்தும் விஷயத்தில் ஜனங்களுக்குள்ள அவாவையும் ஆதங்கத்தையும் தெரிவித்தனர். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரைவிட நமக்கு உற்சாகம் உண்டுபண்ணி ராஜீய விஷயங்களில் நல்லறிவைப் புகட்டத் தகுந்தவர் வேறு எவருமிலர் என்று ஏகமனதாய், அவரை அக்கிராசனராக இருக்கக் கேட்டுக்கொள்கிறதென்று ஒப்புக்கொண்டார்கள். உபசரணை கமிட்டித் தலைவர்களுக்கு சுற்றிப்பார்த்ததில் என் பெயரை என் உற்ற நண்பர் ஸ்ரீமான் விசுவநாதய்யர் பிரேரேபித்தனர். ஒருவரும் ஆக்ஷேபிக்கவில்லை. இப்பதவி கிடைத்துவிட்டது. இது காரணம் பற்றி உங்கள் முன் நிற்கின்றேன்.

மகாநாடுகள் கடந்து சில வருஷங்களாயின. உபசரணை கமிட்டித்தலைவர் என்றால் வந்தவர்களுக்கு உபசாரம் செய்து வேண்டிய ஏற்பாடுகள் செய்யவேண்டியதுதான் என்று எண்ணினேன். ஆனால் முன் கடவடிக்கைகளைப் படித்துப் பார்க்கையில் இதுமட்டிலல்லாமல் பல விஷயங்களைப்பற்றி அத்தலைவர்களால் விரித்துரைக்கப்பட்டிருந்தது. மனம் திகைத்தது. அந்தோ! தேசத்தொண்டர்களும் தியாக புத்தியுள்ளவர்களும் அஞ்சா

நெஞ்சம் படைத்தவர்களும் அஞ்சுகிருக்கலாமே! என்னைத் தேர்ந் தெடுத்தனரே! என்று எண்ணி நழுவிவிட யோஜித்தேன். கடமையிலிருந்து வழுவக் கூடாதென்றே சில வார்த்தைகளைக் கூற விரும்புகிறேன்.

நான் சுயமாய் எந்த விஷயத்திலும் பலத்த அபிப்பிராயம் வெளிக்காட்டுவதில்லை என்று நேயர்களறிந்ததே. சரியான ஜன நாயக ஆட்சியில் நடக்கும் ஒவ்வொரு காரியமும் ஜனங்களின் அபிப்பிராயத்தை ஒத்து நடக்கவேண்டுமே ஒழிய ஒரு மனிதன் சொந்த அபிப்பிராயத்தை ஒத்து நடப்பது சரியாகாது. சிற்சில முக்கியமான விஷயங்களைப்பற்றி மட்டில் எடுத்துக் கூறிவிட்டு அவைகளைப்பற்றி ஜனத்தொண்டர்கள் எவ்வித முடிவுக்கு வருகிறார்களோ, அத்தொண்டர்களுக்குத் தொண்டனாய் இருந்து தொண்டு செய்ய இஷ்டமுள்ளவனாகவும் தயாராகவும் இருக்கிறேன் என்பதை மிக்க தாழ்மையுடன் தங்களுக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன்.

நமது ராஜவிசுவாசம்.

(Our loyalty to the throne.)

முதலில் இராஜ விசுவாசத்தை வெளியிடுவது முறையாகும். இது வழக்கத்தை மட்டில் அனுசரித்ததில்லை. உண்மையில் நாம் நம் மன்னரிடம் கொண்டிருக்கும் விசுவாசத்தை வெளியிடுவ தற்கு பல சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. நமது மன்னர் 1894-ஐ நவம்பர் மீ 27உ இராஜ்ய நிர்வாகத்தை ஒப்புக்கொண் டார். அப்பொழுது சென்னை கவர்னர் அடியிற்கண்டவாறு கூறி யுள்ளார்.

"I avail myself of this opportunity of offering your Highness some advice..... You have had the advantage of an English education and I am glad to see that this has engendered a taste for manly sports..... I ask you to always bear in mind that however fascinating field sports and other kindred amusements may be, your duties as a ruler should ever be your prior thought and not be made subservient to them. Good they no doubt are for both mind and body....., but you should in future regard them only as relaxation from the cares of the government when these will allow of your availing yourself of them. Lastly make every effort and use every opportunity to render yourself personally acquainted with the details of administration,

to see things for yourself and not through the eyes of others."

"தங்களுக்கு சில புத்திமதிகள் கூற, நான் இந்த சந்தர்ப்பத்தை உபயோகித்துக் கொள்ளுகிறேன்.....ஆங்கிலக்கல்வி கற்றிருக்கும் அனுகூலத்தை தாங்கள் அடைந்திருக்கிறீர்கள். இதனால் தங்களுக்கு ஆண்மை நிரம்பிய விளையாட்டுகளில் ஒரு வேட்கை உண்டாயிருப்பதைக்காண சந்தோஷிக்கிறேன்..... விளையாட்டுகளும் இதர வேடிக்கைகளும் எவ்வளவு மனோரம்மியத்தைக் கொடுத்தாலும், அரசர் என்ற ஹோதாவில் தங்களுடைய கடமையே தங்கள் ஞாபகத்தில் சதா இருக்கவேண்டுமேயல்லாது அக்கடமைகளை விளையாட்டுகளுக்கு அடுத்தபடியாக கருதக்கூடாதென்று தங்கள் மனதிலிருத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். தேகத்துக்கும் மனத்திற்கும் அவை நன்மை பயக்கக்கூடியதுதான்..... .....ஆனால், அரசாங்கக் காரியங்கள் இடங்கொடுக்கும் போதுமட்டில் அரசாங்க கவலைகளினின்றும் விசிராந்தியை கொடுக்கக்கூடியவையாக அவை கருதப்படவேண்டும். கடைசியாக அரசாங்கத்தின் நுட்பங்களை தனக்குத்தானாகவே அறிந்து கொள்வதற்கு வேண்டிய முயற்சி செய்து, ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பிரயோஜனப்படுத்த வேண்டும். ஒவ்வொரு விஷயத்தைப் பற்றியும் பிறர் மூலமாய் கேட்டறியாமல் தாங்களே நேரடி அறிந்துகொள்ளவேண்டும்."

1894-ஹு முதல் 1897 வருஷம் வரை இராஜ்யகாரியங்களைப் பார்த்து வந்தனர். பிறகு 5–3–1898ல் சீமைக்குப் புறப்பட்டு அங்கு போய் இராணி பேட்டிகண்டனர். அக்காலம் சிறு சமஸ்தான மன்னர்கள் பேட்டி காணுவதென்றால் பிரமாதமான காரியம். நம் அரசருக்குக் கொடுக்கப்பட்ட மரியாதையில் நமக்கு ஏற்பட்ட ஆனந்தத்தைக்காட்ட இங்கர சபா மண்டபம் கட்டப்பட்டது. பிறகு தேக அசௌகரியத்தால் 21–2–03 முதல் பல வருஷங்கள் ஐரோப்பாவிலும், ஆஸ்திரேலியாவிலும் தங்கி சில வருஷங்களில் வருஷத்திற்கு ஒரு முறை சிற்சில நாள் நம் சமஸ்தானத்திலும் தங்கும்படியான பாக்கியம் நமக்கு ஏற்பட்டது. அக்காலங்களில் குடிகள் தங்களுடைய குறைகளை சொல்லிக் கொள்வது வழக்கம். பெரிய உத்யோகஸ்தர்கள் தங்கள் குறைகளைத் தீர்த்துக்கொள்வார்கள். அரசர் எங்கிருந்தபோதிலும் இராஜ்ய நிர்வாகம் ஒருவாறு ஒழுங்காய் நடைபெற்று வந்தது. சிம்மாசனம் ஏறினது முதல் 25 வருஷங்களுக்குக்கெல்லாம் ஜுபிலி நடத்தவேண்டுமென்றும், ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள அன்பை வெளிக்காட்டினால் நம்மைவிட்டு அரசர் போகமாட்டாரென்றும் எண்ணி பிரமுகர்கள் "வெள்ளி ஜுபிலி" கொண்டாட்

டத்தை வராளமான பணம் சேகரம் செய்து குதூகலத்துடனும் சிறப்பாயும் நடத்தினர்கள். ஜூபிலி கொண்டாட்ட காட்சியை கண்ணுற்ற பல பிரதேசத்தார் ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள இராஜ விசுவாசத்தை பலவாறு மெச்சினர்கள். பிறகும் மன்னருக்கு இங்கு நிலைத்துத் தங்கக்கூடவில்லை.

ஒரு நாள் அதிகாலையில் எழுந்ததும் அரசர் ஆஸ்திரேலியா வில் மணம் முடித்துக்கொண்டனர் என்ற செய்தி சமஸ்தானம் எங்கும் பரவிவிட்டது. ஒருவர் மற்றொருவர் முகத்தைப் பார்த் தனர். திகைப்புற்றனர். நெருங்கின சுற்றத்தாரும் கொஞ்சம் களைப்புற்றனர். சில நிமிஷங்கள் ஆனதும் மனம் தேறியது. அரசர் மனம் அவ்வாறுயின் நாம் என்செய்வது, அவர் பிரஜை களாகிய நாம் எல்லாரும் அவர் மனம் கோணுவண்ணம் நடப்பது நம் கடமையாகும் என்று எண்ணி ஜனத்தலைவர்கள் மீட்டிங்கு களுக்கு ஏற்பாடு செய்தனர்.

மன்னர் மனைவியுடன் சமஸ்தானத்தில் நுழையுங்காலத்து நடந்த ஊர்கோலமும், டவுன் ஹாலில் குழுமியிருந்த ஜனத் தொகையும், நடந்த உற்சவங்களும் இன்னம் நம்மனத்தில் பசுமரத் தாணிபோல் பதிந்திருக்கின்றன. நமது சீமாட்டிகள் முற்போக்கு கட்சியைச் சேராவிட்டாலும், மகாராஜா மனைவியை இவர்கள் எதிர்கொண்டழைத்து உபசாரம் செய்தார்கள். அவர்களைப் பார்த்து அரசரின் மனைவியார் அடியில் வருமாறு கூறியுள்ளார்.:-

"Though I have been here hardly a fortnight, by the most kind reception accorded & nice feelings shown to me by all my husband's subjects, I not only feel quite at home here, I feel as if I have been here all my life."

"நான் இங்கு வந்து ஒரு பக்ஷம்கூட ஆகாவிடினும், என் கணவனின் பிரஜைகளால் எனக்கு அளிக்கப்பட்ட அன்பார்ந்த நல்வரவாலும், என்னிடம் காண்பிக்கப்பட்ட மிருதுவான மனோ பாவங்களாலும், நான் மிகுந்த சந்தோஷத்தை அனுபவிப்பதுடன் என் ஆயுள் காலம் முதல் நான் இருந்தவளாகவே பாவிக்கிறேன்."

மன்னர் இங்கு வருவதில்லை என்று நிச்சயம் செய்து கொள் ளப்போவதாய் வதந்தி உலாவ ஆரம்பித்தது. அப்பொழுதும் சமஸ்தானத்தில் சில பிரமுகர்கள் இடையூறுகளை நிவர்த்திக்கத் தங்களால் இயன்றதைச் செய்வதாயும், தங்களையும் நம்பிக்கைக் குப் பாத்திரர்களாய் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் திருமயத்தில் மீட்டிங்கு கூடி, நூற்றுக்கணக்கான கையெழுத்துக் கள் வாங்கி ஒரு மகஜரும் அனுப்பினர்கள்.

பிறகும் மகாநாடுகளிலும், உபசரணைப் பத்திரங்களிலும், "மன்னர் வருகையை எதிர்பார்க்கிறோம்" என்று கூறியுள்ளோம்.

நமது ராஜ விசுவாசத்தைக்காட்ட வேறு உதாரணங்கள் வேண்டுமோ? இந்தமதக் கோட்பாட்டிலேயே அரசரை தெய்வத்திற்கு ஒப்பிட்டார்கள். நம் ஜனங்கள் அரசரிடம் தேவதா விசுவாசம் வைத்திருக்கிறார்கள் என்பதற்கு ஐயமில்லை. குழந்தையை தாயார் அடித்துத் தள்ளினாலும் அழுதுகொண்டே தாய்முகம் நோக்குவதுபோல் அரசர் நம்மிடம் ஒன்றும் சொல்லாவிட்டாலும் நம் பிரஜைகளின் மனம் அரசர் வருகையையே எதிர்பார்க்கிறது. 'ஸ்வராஜ்யா' முதலிய நவீன பத்திரிகைகள் நம்மை சோம்பேறிச் சுகவாசிகள் 'Lotus eaters' என்று கூறுவது நம் மனோபாவத்தை அறியாததால்தான்.

நமது எதிர்காலம்.

(Our future.)

இச்சமஸ்தான வாசி எங்கு போனாலும் "உங்கள் அரசர் ஐரோப்பாவிலேயே இருக்கப் போகிறாரோ? இனி சமஸ்தானத்தில் பிறகு என்ன நடக்கும்?" என்று கேள்விகள் கேட்கிறார்கள். என்னையும் பிரிட்டிஷ் இராஜதானியில் பலர் கேட்டதுண்டு. "ஒன்றும் தெரியவில்லை" என்று பதில் சொல்வது வழக்கம். சென்ற வருஷத்தில் நான் மைசூருக்குப் போனபொழுது அங்கு சட்ட சபை மெம்பர்கள் பலர் இதுபோன்ற பல கேள்விகளை சரமாரியாய் கேட்டார்கள். பதில் சொல்லாமல் சிரித்துக்கொண்டு சும்மா யிருந்தேன். நான் அலட்சியம் செய்வதாக எண்ணி ஒருவர் பதில் சொல்லாமல் சிரிப்பதற்கு காரணம் கேட்டார். அவர்களைப் பார்த்து "நீங்கள் கேட்பது விந்தையிலும் விந்தையாயிருக்கிறதே? நீங்கள் ஒரு பெரிய சமஸ்தானவாசிகள். நான் ஒரு சிறு சமஸ்தானவாசி. சமஸ்தானங்களின் வருங்காலங்களைப் பற்றி நமக்கு என்ன தெரியும்? இதுபோன்ற விஷயங்களில் சமஸ்தான குடிகளுக்கு சுதந்திரம் ஏது? இவர்கள் சொல்வதை யார் கேட்கிறார்கள்? எந்த ஏற்பாடு செய்வதாயிருந்தாலும் சிறு விஷயங்களில் ஜனங்களை யோஜிப்பார்கள். இதுபோன்ற பெரிய விஷயங்கள் வெகு ரகசியமாய் நடக்கும். அரசர்களுக்கும் பிரிட்டிஷ் இராஜாங்கத்தாருக்கும் அல்லவா தெரியும்? எங்களுக்கு ஒன்றும் தெரியவில்லை. கையிருப்பு பணத்தில் 20 லட்ச ரூபாய் அரசருக்குக் கொடுத்ததாக ஒரு ரிபோர்ட்டிலிருந்து தற்செயலாய்த் தெரிந்தது. உள்ளபடி அவருக்கு ஏற்பட்டுள்ள அல்லவன்ஸ் நடக்கும். ராஜீய வியவகாரங்களில் தலையிட்டுக் கொள்ளமாட்டார். அரசரின் ஜனக தமயனர் ரீஜண்டாக நியமிக்கப்பட்டிருக்கிறார். திவான் பிரிட்டிஷ் உத்யோகஸ்தராயிருக்க

வேண்டுமென்ற நிபந்தனையிருப்பதாய் பிரஸ்தாபம். இவ்வளவு மட்டில்தான் தெரியும். மற்றொன்றும் தெரியாது. தெரிந்து கொள்ள வழியுண்டானால் நீங்கள்தான் சொல்லுங்கள்." என்று சொல்லி அவர்களைக் கேட்டேன். அவர்களுக்கு அப்பொழுது தான் சுதேச சமஸ்தான பிரஜைகளின் சக்தியின்மை வெட்ட வெளிச்சமாய் தெரியவந்தது. பேசவில்லை. வேறு விஷயத்தைப் பற்றி பேச ஆரம்பித்து விட்டனர். சென்ற சில காலமாக பற்பலவிதமான வதந்திகள் உலாவுகின்றன. தற்கால ஏற்பாடுகள் எவ்வளவு காலம நிலைத்திருக்குமென்றும், இனி சமஸ்தானத்தின் வருங்காலம் எவ்வாறு இருக்குமென்றும் தெரிந்துகொள்ளக் கூடாமலிருப்பது பரிதபிக்கத்தக்கதே. ஆனால் அதற்கு என்ன நாம் செய்வதென்று புத்திமான்களாகிய தாங்கள் யோசனைசெய்து முடிவிற்கு வருவது உசிதமாகும். நாம் செய்யும் வேண்டுகோள்களுக்கு (representations) பலன் உண்டாகுமானால் இதில் தலையிட்டுக்கொள்ளலாம்.

ஜனங்களின் அக்கரையின்மை.

(The apathy of the people)

நமக்கு லக்ஷியம் (ideal) சமஸ்தானத்துக்குள் ஒரு ஸ்வய ஆட்சி என வைத்துக் கொள்ளவேண்டும். இந்த நோக்கம் (ideal) ஏற்பட ஜனங்கள் அக்கரையுள்ளவர்களாக இருக்கவேண்டும். "இராமனுண்டாலென்ன, இராவணனுண்டாலென்ன? என்று இருக்கலாகாது" என்று அக்கிராசனர் 2-வது மகாநாட்டின் பொழுது செய்த உபன்யாசத்தில் காரணங்கள் காட்டி அடுக்கடுக்காய் கூறிய மொழிகள் என் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. உண்மையை நோக்குமிடத்து சிற்சிலர் சீறுவதைத் தவிர பொதுவாய் ஜனங்களுக்கு அக்கரை ஒன்றும் ஏற்பட்டதாக இல்லை. கிராமங்களில் கட்சிப் பிரதிகட்சிகள் ஏற்பட்டு சீர் குலைந்து இருக்கின்றன. சிறு விஷயங்களில் சண்டை போட்டுக் கொண்டு கோவில்களில் தெய்வங்களை பட்டினி போட்டுவிடுகிறார்கள். மீட்டிங்குகள் என்றால் ஜனங்கள் வருவதில்லை. கூட்டுறவு மகாநாடாயிருந்தாலும் சரி, வாசகப் புத்தகசாலை மகாநாடானாலும் சரி, வரி செலுத்துவோர் மீட்டிங்கானாலும் சரி, வக்கீல்கள் சங்கம் மீட்டிங்கானாலும் சரி கூப்பிட்டாலும் "நடக்கட்டும்" என்று ஆசீர்வாதம் செய்கிறார்களேயொழிய அசைவதில்லை. இதில் உத்யோகஸ்தர்கள் உத்யோகப்பற்றில்லாதவர்கள் எல்லோரும் ஒகமனதாயிருக்கிறார்கள். வராததற்குக் காரணம் "வந்து என்ன செய்துவிடப்போகிறோம்" என்கிறார்கள். பிறர்கள் தியாகம் செய்ய வேண்டும் என்றும், இவர் இது செய்தது பிசகு, அது செய்யா

தது தவறு என்றும் படித்தவர்கள்கூட பேசி வருகிறார்கள். வாக்காளர்கள் தங்கள் சுதந்திரத்தைச் சரிவர செலுத்துகிறதில்லை. வாக்குரிமை என்பது ஒரு (Sacred trust) தவிர்க்கக்கூடாத ஒப்புவித்தல் என்றும், அதை சரிவர உபயோகிக்க வேண்டுமென்றும் ஜனங்கள் அறிந்தார்களில்லை. பொது விஷயங்களில் அக்கரை இல்லாதவர்களுக்கும் அக்கரை எடுத்துக்கொள்ள சக்தியில்லாதவர்களுக்கும் ஓட்டுகள் கிடைக்கின்றன. சேலம் ஸ்ரீமான் ஸி. இராஜகோபாலாச்சாரியார் சேலத்தில் ஓட்டுகள் விலைக்கு வாங்கப்பட்டதாய் எழுதியுள்ளார். அதுபோல் இங்கேயும் வந்துவிடுமோ என்று பயமிருக்கிறது. ஒவ்வொரு வாக்காளரும் தன் சுதந்திரத்தை சரிவர உபயோகிக்கும் சக்தி ஏற்பட்டு சரியான நபர்களைத் தேர்ந்தெடுத்தாலல்லாது ஜனநாயக ஆட்சி வெறுப்பாட்சி ஆகுமே ஒழிய பொறுப்பாட்சி ஆகமாட்டாதென்பதில் ஐயமில்லை. எனது நண்பர் ஸ்ரீமான் விசுவநாதய்யர் அடியிற்கண்டவாறு கூறியுள்ளார். இதைவிட அழகாய் வேறு எவ்வாறு கூறமுடியும்? 'எனது உறுதியான எண்ணம் என்னவென்றால், கல்விகற்ற தலைவர்கள் ஜனசமூகத்திற்கு மேற்சொன்ன உணர்ச்சியை ஊட்டாதவரை, அவர்கள் சமஸ்தான பொதுஜனங்களின் நன்மை ஒன்றையே முக்யமாகக் கருதி வேலை செய்யாதவரையில், அவர்கள் அரசாங்கத்தாரை ஜனநாயக ஆட்சி வேண்டுமென்று கேட்பது மிகவும் அசாத்யமான காரியமாகும்....கற்றறிந்த சிலர் மட்டும், தங்களுக்கு ஸ்வாதந்தரியமும், உரிமைகளும் வேண்டுமென்று கேட்பதும், அத்துடன் மகாஜனங்களின் அறிவை விஸ்தரிக்குட்படியாய் அவர்கள் முயற்சிக்காமலிருப்பதும் பிரயோஜனமற்றதாகும். ஏனெனில் பிரகிருதம் இருந்துவரும் அதிகாரவர்க்கத்தினரின் ஆட்சியைக்காட்டிலும், சுயநன்மையைப் பாராட்டுகிற சில கற்றறிந்தவர்களின் ஆட்சியானது ஒரு நாளும் சிலாக்கியமானதல்ல.'' அடிமை மனப்பான்மையுடையவர்களாய் நாம் எந்த விஷயத்திலும் ஊக்கமில்லாதவர்களாய் இருக்கிறோம் என்பதற்கு ஒரு சிறு உதாரணம் கூறுகிறேன். நாம் கூடியிருக்கும் இந்த நகர சபாமண்டபம் சமஸ்தானத்திலுள்ள பல ஜனங்களால் பொருள் சேகரிக்கப்பட்டு கட்டப்பட்டது. இதன் நிர்வாகத்திற்கு இன்னின்ன சங்கத்தார்தான் அங்கத்தினர் தேர்ந்தெடுக்கட்டுமென்று ஈ-ஈ-ஸ்ரீ நிவானவர்களால் ஒரு விளம்பரம் பிரசுரம் செய்யப்பட்டிருப்பதில் அதன் (significance ஐ) தாத்பர்யத்தை வக்கீல்கள் சங்கத்தார் கூட பூரு தெரிந்துகொள்ளவில்லை. ஜனங்களுக்கு இருக்கும் சுதந்திரங்கள் ஜனங்களுடைய கவனத்தாழ்வாலேயே போய்விடுகிறது.

நமது முதற் கடமை.

(Our first duty.)

"தொட்டனைத்தூறும் மணற்கேணி, மாந்தற்கு
கற்றனைத்தூறும் அறிவு"

என்றதுபோல் கல்வியபிவிருத்தி ஆகஆக ஜனங்களுக்கும் தங்களது உரிமைகளும் கடமைகளும் நன்கு புலப்படும். வாக்காளர்களுக்கு உரிமைகளை தெரியப்படுத்தவும், அவர்களை தங்கள் அதிகாரத்தை சரியான வழியில் செலுத்தும்படி செய்யவும் ஏற்பாடுகள் செய்வது தொண்டர்களின் கடமையாகும். காசி முதலிய க்ஷேத்திரங்களில் காங்கிரஸ்கள் நடந்தபோது பல ஜனங்கள் கூடி தீர்மானங்கள் நிறைவேற்றினார்கள். பலன்கள் பூஜ்யமென்று தலைவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். சென்ற சில வருஷங்களாக தேர்ச்சியுள்ள பிரசாரகர்கள் கிராமங்களில் சென்று பிரசாரங்கள் செய்ததின் பயனாக ஜனங்களுக்கு அறிவு அதிகமாகி தேர்தல்களில் விசேஷ சிரத்தை காட்டி பகுத்தறிவு அதிகம் ஏற்பட்டு வருகிறதென்பது சமீபத்தில் நடந்த தேர்தல்களிலிருந்து உள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெளியாகிறது.

தென்னைமரங்களைக் கள்ளுக்குத்தகைக்கு சில வருஷங்கள் விடலாம் என்று எனது சகோதர கௌன்சிலர்கள் தீர்மானித்தது பிசகென்று அபிப்பிராயப்பட்டு முனிசிபல் சங்கத்தைவிட்டு விலகி மீண்டும் அபேக்ஷகராக நின்று வீடு வீடாய் தெருத்தெருவாய்ச் சென்று விஷயத்தை எடுத்துக்காட்டி 'இளநீர்' தான் வேண்டுமென்ற பெரும்பான்மையோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் எஸ். விசுவநாதய்யர் போன்ற பிரசாரகர்கள் பூரு காலத்தையும் செலவழித்து தேசத்தொண்டு செய்ய முன்வரவேண்டும். இப்படி பிரசாரகர்களை நியமித்து சரியான அபேக்ஷகர்களை முன்வரச் செய்து, அவர்களையே தேர்ந்தெடுக்க வற்புறுத்தி அடுத்த தேர்தல்களில் சரியான நபர்கள் கௌன்சில் மெம்பர்களாக வரவேற்பாடுகள் செய்யவேண்டியது இம்மகாநாட்டின் முதல் கடமையாகுமென்று எண்ணுகிறேன். சென்ற தேர்தல்களுக்கு முன் ஓர் தீர்மானம் ஏற்படுத்தி, அது தீர்மான ரூபமாகவே இருப்பதாய் எனது ஞாபகம். கிரியாம்சையில் இனி ஏற்படுமாறு தாங்கள் செய்ய வணிவுடன் வேண்டுகிறேன்.

பத்திரிகைகளும், அறிவைப் பரவச்செய்யும் சாதனங்களும்.

News-papers and educators.

சென்ற பல வருஷங்களாய் தேசத்தொண்டில் விசேஷ அன்பை வெளிக்காட்டி தருணம் வாய்த்தபொழுதெல்லாம் உபன்

யாசங்கள் புரிந்து பொது விஷயங்களில் விசேஷ சிரத்தையைக் காட்டிவரும் ஸ்ரீமான் S. விசுவநாத அய்யர் நமது மித்திரனுக ஜனமித்திரன் என்னும் பத்திரிகையின் கௌரவ ஆசியராக 17—10—24ல் ஸ்தாபித்தார். அப்பத்திரிகை ஒழுங்காய் நடை பெற்றுவருகிறது என்பது நமது பிரதம நியாயாதிபதி முதலாக நேயர்கள் முதலாண்டு இரண்டாவது ஆண்டு முடிவில் எழுதி உள்ள அபிப்பிராயங்களிலிருந்து தெரியவரும். இப்பத்திரிகை ஸ்தாபிக்கப்பட்டு ஒரு வருஷத்திற்கு மேலான பிறகு வக்கீல்கள் சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்ட விதிகளைப் பரட்டிப் பார்த்ததில் இவர் சீப்கோர்ட் அனுமதி இல்லாமல் பத்திரிகையை ஆரம் பித்தது ரூலுக்கு புறம்பு என்று கண்டு பிடிக்கப்பட்டது. கவர்ன் மெண்டார் கண்டுபிடித்து நடவடிக்கை நடத்தச் செய்தனர் என்றும், சீப்கோர்ட் தானுகவே அமுல் நடத்தியது என்றும் பகிரங்கமாய்த் தெரியவில்லை. சீப்கோர்ட் சீர்திருத்தத்திற்கு பிறகு முதல் முதல் ஸ்ரீமான் சுந்தரேச சாஸ்திரிகள் இறந்ததில் அனுதாபம் காட்ட எல்லா ஜட்ஜுகளும் கூடினர்கள். பிறகு இதற்குத்தான் (Full Bench) கூடியது. ஒரு விதமாய் விசா ரணை முடியவே, ஐயரும் பத்திரிகையை விட்டு விலகி தன் சகோதரரிடம் ஒப்புவித்து விட்டார். பத்திரிகையில் சில விஷயங் கள் அதிகாரிகள் அபிப்பிராயத்திற்கு விரோதமாக எழுதப்பட்டி ருந்ததாகவும், அதனால் சினங்கொண்டு கவர்ன்மெண்டார் இவரைக் கொஞ்சம் சங்கடப்படுத்த இம்மாதிரி செய்துவிட்டார்கள் என்று பலர் இரகசியமாயும் வெளிப்படையாயும் சொல்லிக் கொண்டது உண்மை. சில வக்கீல்கள் பத்திரிகைகளுக்கு நிருபர்களாக இருந்து அதிலிருந்து விசேஷ வருவாய் அடைந்து ஜீவனம் செய்து கொண்டிருப்பது சர்க்காருக்கு வெகு காலமாக தெரிந்திருக்க வேண்டுமாகையாலும், அவர்களை எல்லாம் விட்டுவிட்டு ஐயர்மீது வெகுகாலம் கழித்து நடவடிக்கை நடத்தினதையும் இதற்கு ஒரு ஆதாரமாகவும் கூறுவதுண்டு. மொத்தத்தில் இந்த சிறு விஷயத் தில் விசாரணை வகையறு யேற்பட்டது பல விதத்தில் வருந்தத் தக்க விஷயம் என்று தேசாபிமானிகள் ஒப்புக்கொள்ள வேண்டி யதுதான்.

முடிவு.

கனவான்களே! ஐயரவர்கள் பிரசங்கத்தைக் கேட்க கால தாமதமாகிறது. ஐயரவர்களை சென்ற 30 வருஷ காலமாய் எனக் குத் தெரியும். "சத்தியமூர்த்தி இல்லாவிடில் என்ன சட்டசபை, யாருக்கு வேண்டும்?" என்று பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் கூறுகிறார்கள். சிறு விஷயம் செய்யக்கூட நமக்கு ("டயம்") இல்லை. கார்பொரேஷன் மீட்டிங்கு, சட்டசபை மீட்டிங்கு இந்

தியாவில் பல இடங்களிலும் பிரசங்கங்கள், சர்வகலாசாலை சபை மீட்டிங்கு, சமூத்திரக்கரை மீட்டிங்கு, பத்திரிகைகளுக்கு விஷய தானம் இவைகளுக்கு எல்லாம் ஐயரவர்களுக்கு "டயம்" இருக்கி றது. எந்த விஷயமானாலும் சரி, அதை நன்றாய் தெரிந்து கொண்டு எதிர் திறப்பு பலாபலத்தை யோஜித்து ஐயர் உடனே பதிலளிக்கும் திறமையை நேயர்கள் அறிவார்கள்.

இச்சமஸ்தானத்தில் இவருக்கு இருக்கும் அபிமானம் (patriotism) பழகினவர்களுக்கு நன்றாய்த் தெரியும்.

பம்பாயாயிருந்தாலும் சரி, சிறு கிராமமாயிருந்தாலும் சரி, ஐயர் வந்துவிட்டார் என்றால் சிறுவர் முதல் பெரியார் வரை ஒரு புளகாங்கிதம் உண்டாகிறது. ஐயரவர்களுக்கு Law காலேஜில் உத்தியோகம் கிட்டத்தட்ட கிடைத்துவிட்டது. கிடைத்திருந் தால் வக்கீலாக பொருள் சேர்த்திருப்பார். வாதாடுவார். இப் பொழுது நம் தேசத்திலும் இதர தேசத்திலும் ஏற்பட்டிருக்கும் கீர்த்தியும் புகழும் ஒருக்காலும் ஏற்பட்டிராது. தேசத்திற்கு உண்மையில் ஐயர்போல் பாடுபடுபவர்களின் தொகை சொல்பமே. ஐயரவர்கள் நிடகாத்திரசாய் இருந்து சுயராஜ்யக்கொடியை நாட்டி பொறுப்பாட்சியை ஸ்தாபிக்க கடவுள் அருள்புரிவாராக!"

வரவேற்புப் பிரஸங்கம் படித்து முடிந்தவுடன் ஸ்ரீமான் எஸ். ஸத்யமூர்த்தி அய்யரவர்களைத் தலைமை வகிக்கும்படி ஸ்ரீமான் S. நாராயணஸ்வாமி அய்யரவர்கள் பிரேரேபிக்க, நியாயவாதி களின் சார்பாக ஸ்ரீமான் M. நாராயணஸ்வாமி அய்யரவர்கள் ஆமோதிக்க, சமஸ்தான வர்த்தகர்களின் சார்பாக ஸ்ரீமான் சங்கிலி யா பிள்ளையும், மகமதிய சமூகத்தார்களின் சார்பாக நச்சாந்து பட்டி ஜனப் முகம்மது இபுராகிம் ருவுத்தரும் ஆதரித்துப் பேச, பலத்த கரகோஷங்களுக்கிடையே தலைவர் அக்கிராஸனத்தில் அமர்ந்தார். அக்கிராஸனருக்கு மாலை சூட்டப்பட்டது.

தமிழிலும் ஆங்கிலத்திலும் தயாரிக்கப்பட்டிருந்த அக்கிரா ஸனப் பிரஸங்கத்தின் அச்சிட்ட பிரதிகள் பிரதிநிதிகளுக்கு வினியோகிக்கப்பட்டன. ஸ்ரீமான் அய்யரவர்கள் தமது அரிய பிரஸங்கத்தைத் தமிழில் $\frac{1}{2}$ மணி நேரம் வரை படித்தார். அப்பிரஸங்கம் பின்வருமாறு:—

சகோதரப் பிரதிநிதிகளே, கனவான்களே,

இந்த மகாநாட்டின் தலைமையை நான் இரண்டாவது முறை யாக வகிக்கும்படி என்னை அழைத்து மிகவும் கௌரவப்படுத்திய தற்கு இதை நடத்திவைக்க முற்பட்டவர்களுக்கும், இந்த சமஸ் தான மகாஜனங்களுக்கும் நான் மிகவும் நன்றியறிவுள்ளவனாக

இருக்கிறேன். 1920-ம் வருஷத்தில் மகாநாடு நடந்த பிறகு எத்தனையோ சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

உங்களுடைய தலைவரும், எனது நண்பருமான ஸ்ரீமான் ஜி. சுந்தரேச சாஸ்திரிகளின் அன்புநிறைந்த முகத்தை இந்த கூட்டத்தில் காணக்கூடாமல் அவரை நாம் இழந்துவிட்டதற்கு நான் மிகவும் வருந்துகிறேன்.

சுபாவமாக அவர் பெரிய மனம் வாய்ந்தவர்; உன்னத லட்சியங்களை உடையவர்; சில சமயங்களில் அவர் தயங்கியிருக்கலாம். ஆயினுமென்ன? அது மனிதர் இயற்கை. அவருடைய மரணத்தால் புதுக்கோட்டையின் பொது வாழ்வு பங்கப்பட்டுவிட்டது.

என்னுடைய ஜன்ம பூமியாகிய இந்த சமஸ்தானத்திற்குள் நான் வரக்கூடாமல் இரண்டு வருஷங்களுக்கு அதிகமாகத் தடுக்கப்பட்டிருந்தேன் என்பது உங்களுக்குத் தெரியும். நான் என்ன அபராதம் செய்தேன்?

நான் செய்த அக்கிராஸனப் பிரசங்கத்தில் எல்லோருமறிந்த சில நன்மைகளைச் சொன்னதுதான் என் அபராதம். அந்த அபராதத்திற்காக மற்றவர்கள் மன்னிப்புக் கேட்டுக்கொண்டார்களாயினும், நான் அப்பொழுதும் மன்னிப்புக் கேட்கவில்லை, இப்பொழுதும் கேட்கவில்லை. அப்போது நான் சொன்ன வார்த்தைகளில் ஒன்றைக்கூட வாபிஸ் வாங்கிக் கொள்ளவும் மாட்டேன். ஆண்டவனுடைய சங்கல்பம் மனிதரின் சிற்றறிவிற் கெட்டாததாக இருக்கிறது. என்னுடைய பிரசங்கத்தின் மேலும், இந்த சமஸ்தானத்திலிருந்து என்னை பிரஷ்டம் செய்த உத்தரவின் மேலும் சிக்கலான பிரச்சினைகள் சில கிளம்பியது உங்களுக்குத் தெரியும். அதன் பலனாக மேன்மை தங்கிய ராஜா அவர்கள் 1922-ம் வருஷம் அக்டோபர் மாதம் 23-ந் தேதியன்று ஒரு ஸ்ரீமுகத்தைப் பிறப்பித்தார். "தடுக்க முடியாத ராஜீயக் காரணங்களையும் சொந்தக் காரணங்களையும் முன்னிட்டு இந்தியாவுக்கு வெளியிலேயே எந்நாளும் வஸிக்கவேண்டிய நிர்ப்பந்த மிருப்பதாக நான் தீர்மானித்து விட்டதை உங்களுக்கு மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று சந்தேகமற அந்த ஸ்ரீமுகத்தில் மே. த. ராஜா அவர்கள் சொல்லியிருக்கிறது உங்களுக்கு ஞாபகமிருக்கும்; ஆகையினால் மறுபடியும் இந்த சமஸ்தானத்திற்கு வந்துவிட அவர் உத்தேசிக்கிறார் என்ற வதந்தியை நான் நம்ப முடியவில்லை. ஒருவர் எவ்வளவு உன்னத நிலைமையிலிருப்பினும், அவர் மனம் போன போக்கெல்லாம் ஒரு சமஸ்தானத்தின் கதி இருக்கக்கூடாது. ஆகையால் அசாத்தியமான சம்பவங்களைப் பற்றி யோசனை செய்து கொண்டிராமல், இந்த சமஸ்தானத்தில் தங்களுடைய பிற்கால கதியை நிர்ணயிக்கத் தங்களுடைய முழு

கவனத்தையும் செலுத்தும்படி சமஸ்தான மகாஜனங்களை நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய கடமை ஒன்றைச் செய்யவேண்டியவனாக இருக்கிறேன்; இந்த சமஸ்தான வருமானத்திலிருந்து மே. த. ராஜா அவர்களுக்கு இருபது லட்சம் ரூபாய் இனாமாகக் கொடுத்ததை இந்த மகாசபையின் அக்கிராசனாதிபதி என்ற ஹோதாவில் நான் ஆட்சேபிக்கிறேன். அப்படிக் கொடுப்பதற்கு ஒரு நியாயமுமில்லை; வேறு எந்த சமஸ்தானத்திலும் அது அனுமதிக்கப்படமாட்டாது. இன்னொரு வருந்தத்தக்க விஷயத்தையும் குறிப்பிட வேண்டியவனாக இருக்கிறேன். ராஜா அவர்கள் தமது அரசுரிமையை அரசியல் சம்பந்தப்பட்ட வரையில் துறந்துவிட்டாராயினும், பிரதி மாதமும் ஏராளமான தொகை அவருக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த சமஸ்தானத்தின் சொற்ப ஐவேஜியையும், மற்ற சமஸ்தானாதிபதிகளாக இருக்கிறவர்களுக்குக் கிடைக்கும் தொகைகளையும் உத்தேசிக்கையில், இந்த சமஸ்தான ராஜாவுக்குக் கொடுக்கப்படும் தொகை மிதமிஞ்சினதாக இருக்கிறது. இந்த விஷயத்தை மகாகாடு கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

தன் உத்தியோக நிலைமையிலேயே அநேக கட்டுகளுக்குட்பட்டவராயிருந்தும், இவ்வளவு சிறிய சமஸ்தானத்தில் யாவரும் எதிர்பார்க்கக்கூடிய பிரகாரம் சில சொந்தச் செல்வாக்குகளுக்கு இலக்காக இருந்தும், ரீஜெண்ட் சாகிப் அவர்கள் கூடியவரையில் தமது நன்றியறிவுக்குப் பாத்திரமாகும்படியே நடந்துகொண்டிருக்கிறார். என்மீது பிறப்பிக்கப்பட்ட பிரஷ்ட உத்தரவை ரத்து செய்ததற்காகவும், இன்னும், சில முனிசிபல் கவுன்சிலர்கள் மஹாத்மா காந்தியடிகளைத் தரிசனம் செய்த மஹத்தான தோஷத்திற்காக அபேக்ஷகர்களாக நிற்கக் கூடாதென்ற தடையை நிவர்த்தித்த செய்கைக்காகவும் என்னுடையவும் உங்களுடையவும் சார்பாக, அவருக்கு மனமார்ந்த வந்தனங்களை அளிக்கிறேன். பொதுவாகப் பார்த்தால் அவர் காலத்தைக் கடத்திவந்திருக்கிறார் என்றே சொல்லவேண்டியிருக்குமாயினும், அவருடைய நிலைமை நிச்சயமற்றதாக இருப்பதே அதற்கு முக்கியமான காரணம். ஆகையால் சமஸ்தான வார்ஸ் பாத்தியம் இன்னாருடையதுதான் என்பதை ஹிந்து சட்டப் பிரகாரமும் சம்பிரதாயப் பிரகாரமும் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் நிச்சயித்து பகிரங்கப்படுத்திவிட வேண்டும். அப்படி அவர்கள் செய்துவிடின் வீணான மேலே ராஜ்யங்களுக்குக் காரணமிராது. ரீஜெண்டு ஸாகிபை உத்தேசித்தும் இந்தப் பிரச்சினையைப்பற்றி ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டார் ஒரு முடிவு செய்துவிடக் கடமைப்பட்டிருக்கிறார்கள். தம்முடைய

தற்காலகதி என்ன வென்பது அவருக்கு விளங்கிவிடுமானால், இந்த சமஸ்தானத்தின் க்ஷேமத்தை உத்தேசித்து அவர் எல்லாம் சரியாகச் செய்வார் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. என்னைப் போன்ற சாமான்ய நிலையில் இருப்பவர்கள் ரீஜெண்டு ஸாகிப்புக்கு யோசனை சொல்வது யுக்தமாக விருக்குமானால், ஒரு வார்த்தை தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன்; உத்யோக வினியோகத்தில் ஒரு தவறு ஏற்பட்டால், அதனால் எதிர்பாராத விபரீத பலன்கள் உண்டாகலாம்.

1922 வது அக்டோபர் மாதம் 23-ந் தேதியன்று மே. த. ராஜா அவர்கள் பிறப்பித்த ஸ்ரீமுகத்தில் பின்வருமாறும் சொல்லியிருக்கிறார்:—

"சென்னை மாகாண கவர்ன்மெண்டார் அனுப்பும் உத்தியோகஸ்தர் ஒருவரே தற்சமயம் புது திவானாக இருப்பவர்; ஆனால் என்னுடைய பிரஜைகள் இரண்டொருவரை அவருடன் சேர்க்கம் சேர்த்துவிட முடியுமென்றும், அவர்கள் எல்லோரும் சேர்ந்து மந்திரி சபையாக இருப்பார்கள் என்றும் நம்புகிறேன்."

இந்த மகாகாட்டில் நான் தலைமையை வகிக்கும் இந்த சமயத்தில் இந்த சமஸ்தான திவான் உத்தியோகத்தை வகிப்பவர் குழந்தைப் பருவத்திலிருந்து நான் அறிந்தவராகவும், இந்த சமஸ்தானப் பிரஜையாகவும், உள்ளங்கால் முதல் உச்சந்தலை வரையில் பெருந்தன்மையே உருவெடுத்தாற்போன்றவராகவும், தம்முடைய நன்மையைக் காட்டிலும் பிரஜைகளின் நன்மையையே பெரிதாக எண்ணுகிறவராகவுமிருப்பது எனக்கும் மற்றெல்லோருக்கும் பெரு மகிழ்ச்சியைத் தரும் விஷயம். நீதிபரிபாலன உத்தியோகஸ்தர்கள் நிர்வாக உத்தியோகஸ்தர்களாக நியமிக்கப்படுவது எனக்குப் பிடிக்காத காரியமாயினும், இந்த ஒரு நியமனத்தால் பாதகமில்லையென்று கருதுகின்றேன். ஆயினும் இது வழக்கமாகிவிடக் கூடாது. சமஸ்தான நிர்வாகத்தை நடத்திவைக்க திவானுடன் பிரஜைகளில் இரண்டொருவர் சம்பந்தப்படுத்தப்படுவார்கள் என்று மே. த. ராஜா சொன்ன வார்த்தை இன்னும் நிறைவேறவில்லை. இந்த உறுதிமொழியை நிறைவேற்றிவைக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்வது உங்களுடைய கடமை; அப்படி நியமிக்கப்படக்கூடிய இருவரும் சமஸ்தான சட்ட சபையின் நம்பிக்கையைப் பெற்றவராகவும் இருக்க வேண்டும்.

இந்தியாவில் இந்திய மன்னர்களால் ஆளப்படும் சமஸ்தானங்களின் பிற்கால கதி என்ன என்ற விஷயமாகப் பொது ஜனங்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தப் பெரிய பிரச்சினையைப்பற்றி இப்பொழுது பிரஸ்தாபிக்க நான் விரும்பவில்லை;

ஆனால் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தின் பலத்தையே நம்பி இருக்கும் நாடுகளாக சமஸ்தானங்கள் வாழும் காலம் போய்விட்டது.

இந்திய சமஸ்தானங்களை சமீபத்தில் ப்ரிட்டிஷ் ராஜாங்கத்தார் நடத்தின தோரணையிலிருந்தும், மகா மேன்மை தங்கிய நிஜாம் அவர்களுக்கு சென்ற வருஷத்தில் ரீடிங் பிரபு எழுதிய கடிதத்திலிருந்தும், சமஸ்தானாதிபதிகளின் பிற்கால க்ஷேமம் ஜனங்களைப் பொறுத்ததே யல்லாமல் ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டைப் பொறுத்ததல்லவென்பதை அவர்களில் அறிவாளிகள் கவர்ந்திருப்பார்கள். மேலும் நம்பிக்கை யில்லாதவர்கள் சுய ராஜ்யம் வெகு காலத்திற்கு அப்பால் இடக்கிறதென்று நினைக்கலாமாயினும், அது சீக்கிரத்தில் சித்தியாகக் கூடுமென்று தீர்க்க திருஷ்டியுள்ளவர்கள் நம்புகிறார்கள். ஆகையால் சுதேச சமஸ்தானாதிபதிகளும், அவர்களுடைய பிரஜைகளும் இந்தியா சீக்கிரத்தில் சுய ஆட்சி பெற்றுவிடப்போகிற தென்பதற்கேற்ப தங்களுடைய அந்தஸ்தை நிர்ணயித்துக்கொள்ள வேண்டும்.

காலசக்ரத்தின் கதியை உணர்ந்துகொண்டு, தங்களுடைய சமஸ்தானங்களில் ஜனநாயக ஆட்சிக்கு அஸ்திவாரம் போட்டுமே சுதேச சமஸ்தானாதிபதிகள் தங்களுடைய பிற்கால நிலைமையை நிர்ணயித்துக்கொள்ள முடியும். அப்படி அவர்கள் செய்தாற்றான், தங்களுடைய நிலைமையை கண்ணியமானதாகவும் உபயோகமுள்ளதாகவும் செய்ய முடியும்.

இந்த மகாநாட்டில் உங்களுக்கிருந்த சிரத்தை சிறிது காலமாகக் குறைந்து வருவதாக அறிந்து நான் வருத்தப்படுகிறேன். ஆயினும் மீண்டும் உற்சாக முண்டாயிருப்பதாகச் சில குறிகளால் தெரிகிறது. இந்திய ஜன சமூகத்தில் மற்றவர்கள் எல்லோரும் சுயராஜ்ய லட்சியத்தை உத்தேசித்து உறுதியுடன் முன்னோக்கி நடந்து கொண்டிருக்கையில், நீங்களும் இந்த சமஸ்தான மகா ஜனங்களும் தூங்கிக்கொண்டிருக்கக் கூடாதென்று நான் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன். உங்களுக்கு இஷ்டமில்லையானால்கூட உங்களை விட்டுவிடப் போகிறதில்லை. மற்றவர்களை அனுசரித்து நீங்களும் நடந்துகொள்வதுதான் புத்திசாலித்தனம். அரசர்களுடைய அதிகாரம் ஆண்டவனால் கொடுக்கப்பட்டதென்ற பழங்கதை காலகதி அடைந்துவிட்டது. தங்களைத் தாங்களே ஆண்டுகொள்ள ஜனங்கள் உரிமை உடையவர்கள் என்பது எக்காலமும் சத்தியம். நான் சொல்வதை நம்புங்கள், உங்களை நீங்களே ஆண்டுகொள்ளும் வரையில் புதுக்கோட்டை முற்போக்குள்ள சமஸ்தானமாக மாட்டாது.

சுயராஜ்ய உரிமை உங்களுடன் பிறந்தது. அது நீங்கள் வேண்டுவ தாவதற்றிலும் முதன்மையானது; தக்ஷணமே

அடையவேண்டியது. ஏகாக்ர சித்தத்துடன் பக்தி செய்கிறவர் களுக்குத்தான் சுயராஜ்ய தேவி பிரத்தியட்சமாவாள். இந்த மகாநாட்டிலிருந்து நீங்கள் சுயராஜ்ய தாகத்துடன் வெளியேற வேண்டும். உங்களுடைய சந்ததிகள் தலைமுறை தலைமுறையாக உங்களை வாழ்த்த வேண்டுமானால், சுவாதீனத்துடன் வாழத் தகுந்த பூமியாகப் புதுக்கோட்டையைச் செய்யுங்கள்.

உங்கள் சட்ட சபை அநாவசியமான பல கட்டுப்பாடுகளுக் குட்பட்டு இருக்கிறது. இப்பொழுதுள்ள அமைப்பின்படிகூட வாக்காளர்கள் தங்களுடைய உரிமைகளை அனுபவிக்க ஏராளமாக முன்வரவில்லை. தேர்தல்களில் அவர்கள் அசிரத்தை காட்டுகிறார் கள். ஆகையால் நேயர்கள் தங்களுடைய கடமையைச் செய்ய வும் கேட்டுக்கொள்ளுகிறேன். அப்படி அவர்கள் செய்தால், அதன் பலனாக சபையின் அமைப்பில் திருத்தம் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடும்.

திவான் சட்ட சபையின் அக்ராஸனாதிபதியாக இருப்பது சரியல்ல; கவர்ன்மெண்டார் உப அக்ராஸனாதிபதியை நியமிப்ப தும் சரியல்ல. அக்ராஸனாதிபதி, உப அக்ராஸனாதிபதி ஆகிய இரண்டு உத்தியோகஸ்தர்களையும் சபையோரே தேர்ந் தெடுக்க வேண்டும். சபையின் அங்கத்தினர்களில் பலர் கவர்ன் மெண்டாரால் நியமனம் செய்யப்படுவதும் சரியல்ல. பகிரங்க மான தேர்தல் மூலம் தெரிந்தெடுக்கப்படக் கூடாதவர்களான ஸ்திரீகளும், தாழ்த்தப்பட்ட வகுப்பினர்களும் இருப்பின், அவர் களுக்காகச் சிலரை நியமிக்கலாமே யல்லாமல், மற்றவர்களை ஏன் நியமிக்கவேண்டும்? இதுபோன்ற ஒரு சிறிய சமஸ்தானத்தில், வகுப்பு வேற்றுமை உணர்ச்சிகளும், பரஸ்பர விரோத களர்ச்சி களு மிராதிருக்கையில், நியமன அதிகாரம் கவர்ன்மெண்டுக்கு இருக்கவேண்டியதேயில்லை.

சட்டசபையின் அதிகாரம் அனாவசியமாக மட்டுப்படுத்தப் பட்டிருக்கிறது. இரட்டை ஆட்சியிலும் ப்ரிட்டிஷ் இந்தியாவில் சிறிது ஜவாப்தாரித்துவம் ஜனப் பிரதிநிதிகளுக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது; அவ்வளவுகூட இங்கில்லை. சட்டமியற்றும் விஷயமாகத் திவானுக்குள்ள ஏராளமான மேல் அதிகாரமும், சட்டமியற்ற அவருக்கும் ராஜாவுக்கும் எல்லைகடந்த அதிகாரம் கொடுக்கப்பட்டிருப்பதும் ஆட்சேபகரமானவை. ஆதாயஞ் செலவு விஷயமாகச் சட்டசபைக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற அதிகாரம் பூஜ்யமென்றே சொல்லிவிடலாம். சட்டசபையின் அங் கத்தினர்கள் எல்லோரும் ஜனப் பிரதிநிதிகளாகவே இருக்க வேண்டுமென்றும், சட்டமியற்றவும் வரி விதிக்கவும் செலவிடவும் பூரண அதிகாரம் சட்ட சபைக்கிருக்க வேண்டுமென்றும் நீங்கள்

கிளர்ச்சி செய்ய வேண்டும். அவசியமான சில விலக்குகள் செய்ய வேண்டியிருந்தால், செய்வதைப்பற்றி ஆட்சேபிக்கவில்லை.

முந்தின மகாநாடு கடந்த பிறகு நீதிபரிபாலன விஷயத்தில் பெரிய மாறுதல் செய்யப்பட்டு, அப்பீல் கோர்ட்டு தனியாக ஏற்படுத்தப்பட்டு விட்டதற்கு நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால் ஜட்ஜிகள் 15 வருஷங்கள்தான் உத்தியோகம் பார்க்கலாமென்று ஒரு எல்லைகட்டி விடவேண்டும். நல்ல யோக்கியதை உள்ளவர்களை நியமிக்கும் பொருட்டு ஜட்ஜுகளுக்கு இப்பொழுது கொடுப்பதைக் காட்டிலும் அதிகமாகச் சம்பளம் கொடுக்கவும் வேண்டும். இரண்டாவது அப்பீல் கோர்ட்டின் அமைப்பு இன்னும் அதிருப்திகரமாகவே இருக்கிறது. ஒரு யோசனையை உங்களுக்கும் சமஸ்தான கவர்ன்மெண்டாருக்கும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஒரு மாதத்துக்கு வெளியிலிருந்து ஜட்ஜிகளைத் தருவிப்பதைக் காட்டிலும், இந்த சமஸ்தான இரண்டாவது அப்பீல்கள் சென்னை ஹைக்கோர்ட்டிலேயே பைசல் செய்யப்படும்படி சென்னை மாகாணக் கவர்ன்மெண்டுடனும் இந்தியா கவர்ன்மெண்டுடனும் ஏற்பாடு செய்துகொண்டுவிடலாம். இது ஒரு புது யோசனை. அது யுக்தமானதா என்று யோசித்து முடிவு செய்வது உங்களையும் தர்பாரையும் பொறுத்தது.

இந்த சமஸ்தானத்தின் கடைசி நிர்வாக யாதாஸ்தில் விவசாயமே ஜனங்களுடைய முக்கியமான தொழிலென்றும், அதுவும் நிச்சயமற்ற மழையைப் பொறுத்தது என்றும் சொல்லப்படுகிறது. இதற்குப் பரிகாரம் எதுவும் செய்யப்படவில்லை. மேட்டூர் தேக்கத்தின் பலனாக இந்த சமஸ்தானத்தின் ஒரு பாகமாவது அனுகூலமடையும் என்றறிந்து சந்தோஷப்படுகிறேன். மேட்டூர் தேக்கத்திலிருந்து இந்த சமஸ்தானத்துக்குப் பாய்ச்சல் ஆதாரம் உண்டாகும்படி செய்ய சென்னை சட்ட சபையில் என்னால் கூடிய மட்டும் பிரயாஸைப்படுவேன் என்று உறுதி கூறுகிறேன். ஆயினும் அதனால் இந்த சமஸ்தானத்தின் கஷ்ட தசைக்குச் சொற்ப பரிகார மேற்படுமே யல்லாமல், பூராப் பரிகாரம் ஏற்பட்டுவிட முடியாது. உலகில் பொருளாதார சரித்திரத்தை நீங்கள் கவனித்தால், நம்முடைய சமஸ்தானம் போன்ற நாடுகளிலுள்ள விவசாயிகளின் ஏழ்மை நிலைமையைத் தணிக்க உபத் தொழில்கள் அவசியமென்பதை அறிவீர்கள். மகாத்மா காந்தி இந்தியாவின் தரித்திர நிலைமையைப் போக்க அனுக்ரகம் செய்துள்ள கைராட்டினத்தை நீங்கள் உபயோகத்துக்குக் கொண்டுவரும்படி உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன். ஆயினும் அதனால் மாத்திரமே நமது பெரிய தரித்திரத்தைத் தொலைத்துவிட முடியாது. உபசரணை சபைத் தலைவராகிய எனது நண்பர் கூட்டுறவு இயக்கத்தில் விசேஷ உற்சாகம் உள்ளவர். சொக்கக் கடன் கொடுப்ப

துடன் நின்றுவிடாமல் பண்டங்களை உற்பத்தி செய்வதற்கும் வினியோகம் செய்வதற்கும் கூட்டுறவைப் பிரயோகம் செய்யும் படி அவரையும் அவர் சகாக்களையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

சமஸ்தானத்தின் வரவு செலவு லோபித்தனத்தை அனுசரித்ததாகவே இன்னும் இருக்கிறது. 25 லட்சம் ரூபாய் மிச்சப்படுத்தி வைத்துக்கொள்ள கவர்ன்மெண்டாருக்கு ஒரு பாத்யமுமில்லை. அந்தப் பணத்தை முன்னிட்டு, ஒன்று வரியைக் குறைக்கவேண்டும், அல்லது ஜனங்களுக்கு சாச்வத அனுகூலமாக அதைச் செலவு செய்துவிட வேண்டும். கலால் வருமானம் இன்னும் பெரிதாகவே இருக்கிறது; அந்த வருமானம் என்னவென்பதை நீங்கள் தெரிந்துகொள்ள வேண்டும். உங்களைப்போன்ற பல புருஷர்கள், ஸ்திரீகள், குழந்தைகள் ஆகியவர்களின் கஷ்டம், பட்டினி, ரோகம், மரணம் ஆகியவைகளினாலேயே உங்களுடைய கலால் வருமானம். இந்த "ஈரத்தப்" பணம் உங்களுக்கு வேண்டுமா? தாங்கள்தான் புத்திமான்கள் என்று நினைத்துக்கொண்டுள்ளவர்கள் "பேச்சளவில் சரிதான், அனுஷ்டானத்தில்தான் அசாத்தியம்" என்று சொல்லுவார்கள், தலையை அசைப்பார்கள் என்பது எனக்குத் தெரியும். பொது ஜனங்களுடைய மனச்சாட்சி தூக்கத்திலிருந்து விழித்துக் கொண்டுவிட்டால் அனுஷ்டானத்தில் அசாத்தியமென்பதெல்லாம் "ஆதவனைக் கண்ட பனிபோல் அகன்றுவிடும்" என்று உங்களுக்கு உறுதி கூறுகிறேன். குடியை முற்றிலும் ஒழித்து இந்தியாவின் மற்ற பாகங்களுக்கு வழிகாட்டும்படி புதுக்கோட்டை ஜனங்களையும், கவர்ன்மெண்டையும் நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

கல்வி அபிவிருத்தி போதாது, திருப்தி உண்டாகவில்லை. பி. ஏ. பட்டப்படிப்பு கற்பிக்கும் முதல் அந்தஸ்துக் கலாசாலை அவசியம். தமிழ், ஸம்ஸ்கிருதம் ஆகிய பாஷைகளில் உயர்தரப் படிப்பு சொல்லிவைக்கக்கூடிய கீழ்த்திசைக் கல்விக் கலாசாலையும் ஏற்பட வேண்டும். பெண்களுக்கு ஒரு ஹைஸ்கூலும் ஏற்பட்டால்தான், இக்காலத்துப் போக்கை அனுசரித்து நடந்துகொண்டதாகும். ஸங்கீதத்துக்குப் பெயர்போன புதுக்கோட்டையில் ஸங்கீதம் முதலிய கலைகளைக் கற்பிக்க ஒரு கலாசாலை ஏற்படின், நமது சமஸ்தானத்தின் பெருமை நாடெங்கும் பரவி விடும். கலாஞானத்திற்குப் புதுக்கோட்டையே இருப்பிடம் என்று கீர்த்தி பரவிவிடும். நமது சமஸ்தானம் ஒன்றுதான் தமிழ் சமஸ்தானம். அதை உத்தேசிக்கையில் தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் போற்றி வளர்க்க இந்த சமஸ்தானம் கடமைப்பட்டிருக்கி

றது. நடுத்தரக் கல்வியையும் ஆரம்பப் படிப்பையும் சமஸ்தானத்தில் அடுத்த 10 வருஷங்களில் பரப்பிவிட ஒரு திட்டம் போட்டு, அதின்படி செய்யவேண்டுமென்று தர்பாரைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்த சமஸ்தானத்தில் ரயில்பாதை போட வேண்டுமென்ற பிரஸ்தாபத்துக்கு எனக்குள்ள வயதாகிவிட்டது. "திருச்சினாப்பள்ளி—புதுக்கோட்டை—காரைக்குடி ரயில் பாதை போடுவதற்காகப் பூர்வாங்க சர்வே வேலை முடித்துவிட்டது, சீக்கிரம் வேலை ஆரம்பிக்கப்படும் என்று கவர்ன்மெண்டார் நம்புகிறார்கள்" என்று நிர்வாக யாதாஸ்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதைக் கண்டு ஆறுதல் அடைந்துவிட முடியுமா? வேலையை உடனே ஆரம்பிக்கும்படி தர்பாரை நீங்கள் நெருக்கவேண்டும்.

வேறு பல விஷயங்களுமுண்டு, அவைகளைப்பற்றி நீங்கள் மகாநாட்டில் யோசனை செய்வீர்கள். அவைகளை நான் பிரஸ்தாபிக்க எனக்கு அவகாசமுமில்லை, அதற்கு வேண்டிய யோக்கியதையுமில்லை. நான் அவைகளைப் பிரஸ்தாபிக்க வேண்டியது அவசியமுமல்ல. ஓயாமல் ஒழியாமல் உஷாராக இருப்பதே சுவாதீனமடைய நீங்கள் கொடுக்கவேண்டிய கிரயம். உங்கள் மகாநாட்டின் தலைமையை இரு முறைகள் வகிக்கும் கௌரவத்தைக் கொடுத்ததற்கு நான் சந்தோஷப்படுகிறேன். புதுக்கோட்டை எனது ஜன்மபூமி என்பது எனக்கு அளவற்ற சந்தோஷத்தைத் தருகிறது. புதுக்கோட்டை ஜனங்கள் விழித்தெழுந்து தங்களுடைய உரிமைகளை வற்புறுத்தி சுயராஜ்யாதிகாரம் அடைந்துவிட்டால், எனது சந்தோஷம் மேலும் அளவு கடந்ததாக இருக்கும். உங்களுக்கு தைரியமிருந்தால் சுயராஜ்யாதிகாரம் பெறுவதைக் காட்டிலும் சுலபமான காரியம் வேறு எதுவுமில்லை. ஏனெனில், "சுவாதீனம் அடைய வேண்டுமென்று ஒரு ஜன சமூகம் நிச்சயித்துவிட்டால், அதன் வழியை மறிக்கக்கூடிய சக்தி உலகில் எதுவுமே யில்லை." வந்தேமாதரம்."

மகாநாட்டிற்கு வரமுடியாததுபற்றி அநுதாபத்துடன் அனுப்பப்பட்டிருந்த கடிதங்களும் தந்திகளும் காரியதரிசியால் வாசிக்கப்பட்டன. அவைகளில் ராஜகுமாரர் ஸ்ரீமான் சங்கர நாராயண துரைராஜா அவர்கள், ஸ்ரீமான்களான R. நாகராஜய்யர், மீன்லா (அன்னவாசல்) சொக்கலிங்கம் செட்டியார், K. S. ராமச்சந்திரய்யர், V. R. M. லெட்சுமணன் செட்டியார், அருணாசலம் செட்டியார் (பீனாங்கு) முதலியவர்களுடைய அநுதாபக் கடிதங்களும் தந்திகளுமே முக்கியமானவைகளாகும்.

தீர்மானங்கள்

பின்னர் அடியிற்கண்ட தீர்மானங்கள் சர்ச்சை செய்யப் பட்டன:—

அநுதாபத் தீர்மானம்

சமஸ்தான முன்னேற்றத்திற்கு உழைத்த ஸ்ரீமான்களான G. சுந்தரேச சாஸ்திரிகள், C. H. ஸ்வாமிநாத சாஸ்திரிகள், உடையப்ப செட்டியார்,—இவர்கள் காலஞ்சென்றதைக் குறித்தும் இந்திய நாட்டிற்காக ஊழியம் செய்து காலஞ்சென்ற தேசாபிமானிகளான தேசபந்து தாஸ், சுரேந்திரநாத் பானர்ஜீ, கஸ்தூரி ரெங்கய்யங்கார், வ. வே. சு. அய்யர், S. ரெங்கஸ்வாமி அய்யங்கார்,—இவர்கள் மரணத்தைக் குறித்தும் மகாநாட்டின் அநுதாபத்தைத் தெரிவித்து தீர்மானம் அக்கிராஸனரால் பிரேரணை செய்யப்பட்டு, எல்லோரும் மௌனமாய் எழுந்து நின்று ஏகமனதாய் நிறைவேறியது.

மகாஜன சபை ஸ்தாபனம்

சமஸ்தான ஜனங்களுக்கு ராஜீய விஷயங்களில் அறிவை விருத்தி செய்வதற்கும், சமஸ்தான பொது விஷயங்களைக் கவனித்து வருவதற்கும், மகாநாடுகள் நடத்துவதற்கும், கிராம சபைகள், தாலூகா சபைகள்,—இவைகளை அடிப்படையாகக் கொண்ட "மகாஜன சபை" என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்த வேண்டியது அவசியமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

மேற்படி சங்கத்திற்கு அடியிற்கண்டவர்களை நிர்வாக அங்கத்தினர்களாகக் கொண்டும், அதற்கு வேண்டிய விதி வகையாக்கள், அவர்கள் நியமனம், இவற்றைச் செய்துகொள்ள மேற்படி கமிட்டிக்கு இம்மகாநாடு அதிகாரம் கொடுக்கிறது.

இத்தீர்மானம் அக்கிராஸனரால் பிரேரணை செய்யப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. ஸ்ரீமான்களான G. சுந்தரேசய்யர் அவர்களைத் தலைவராகவும், ஸ்ரீமான்களான S. விசுவநாதய்யர், A. S. நாகசைதன்யமய்யர் அவர்களைக் காரியதரிசிகளாகவும் கொண்ட ஒரு மகாஜன சபையும் ஏற்படுத்தப்பட்டது.

சமஸ்தான வார்சு பாத்திய நிர்ணயம்

(அ) இந்த சமஸ்தானத்தின் சாச்வதமான க்ஷேமத்தையும், அரசாங்கத்தின் எதிர்கால நிலைமையையும் உத்தேசித்து, அரசாங்க வார்சு பாத்தியம் கூடிய சீக்கிரத்தில் பிரிடிஷ் அரசாங்கத்தாராலும், சமஸ்தான அரசாங்கத்தாராலும் நிர்ணயிக்கப்பட வேண்டியது அவசியமென்று இம்மகாநாடு கருதுகிறது.

(b) ஹிந்து மதத்தையும், ஹிந்து சட்டத்தையும், இந்த அரசாங்கம் ஹிந்து அரசர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறதென்பதையும் அனுசரித்து ஓர் தகுந்த வார்ஸை நிர்ணயம் செய்து, அவருக்கு உடனே போதுமான ராஜாங்கப் பயிற்சி கொடுக்க வேண்டுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

பிரேரணை செய்தவர்:—டாக்டர் A. வேணுகோபால் நாயுடு.

ஆமோதித்தவர்கள்:— சங்கிலியா பிள்ளை, ஆர். கோகர்ண சாஸ்திரிகள், S. விசுவனுதய்யர்.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட 32 தீர்மானங்களிலும் மிகவும் முக்கியமான தீர்மானம் இதுதான். ஸ்ரீமான் A. வேணுகோபால் நாயுடு இத்தீர்மானத்தைப் பிரேரணை செய்கையில், மன்னர் பிரான் நீண்ட காலமாய் மேல்நாடுகளில் வசிப்பதையும், அரசாங்கம் நிர்வகிக்கப்படும் முறைகளையும், சமஸ்தான வார்ஸை இன்னுர்தான் என்பதையும் ஜனங்கள் தெரிந்துகொள்ள ஆவலாயிருப்பதையும் தெரிவித்து, அவ்விதம் நிர்ணயிக்கப்படும் வார்சுக்கு ராஜீயப் பயிற்சி உடனே அளிக்கப்பட வேண்டுமென்றும் கூறினர். ஸ்ரீமான் சங்கிலியா பிள்ளை இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

ஸ்ரீமான் கோகர்ண சாஸ்திரிகள் இதை ஆதரித்துப் பேசுகையில், 1862-ம் ஆண்டில் 'கானிங்' என்னும் ராஜப்பிரதிநிதி ஆங்கில அரசாங்கத்தாரின் சார்பாக அளித்த உத்தரவில் கண்ட பின்வரும் விஷயத்தை விளக்கிக் காட்டினர்:—"அரசாங்கத்திற்கு நேர் வழியான சந்ததி இல்லாத பக்ஷத்தில், உங்களாலும், உங்கள் வழித்தோன்றல்களாலும், ஹிந்து சட்டப்படிக்கும், உங்கள் மரபின் வழக்கப்படிக்கும் செய்துகொள்ளும் ஸ்வீகாரம் முதலிய வார்சு பாத்யதைகளையும் அங்கீகரிப்போம்." என்பதேயாகும்.

ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் இத்தீர்மானத்தை ஆதரித்துப் பேசியதின் சாராம்சம் பின்வருமாறு:—

"இத்தீர்மானத்தில் இரண்டு பாகங்களிருக்கின்றன. முதலாவதாக சமஸ்தானத்தின் சாச்வதமான க்ஷேமத்தையும், அரசாங்கத்தின் எதிர்கால நிலைமையையும் உத்தேசித்து அரசாங்க வார்சு பாத்தியம் கூடிய சீக்கிரத்தில் நிர்ணயிக்கப்படுதலாகும். நமது சமஸ்தானத்தின் எதிர்காலத்தை நிர்த்தாரணம் செய்ய நமக்குப் பூர்ண உரிமையுண்டு. இவ்வாறு செய்வது ராஜத்துரோகமல்ல. ஆட்சி புரிந்துவரும் அரசாக்ஷியின் நன்மையை உத்தேசித்தே நாம் இவ்வேண்டுகோளை வற்புறுத்த வேண்டும். இரண்டாவதாக ஹிந்து சட்டத்தையும், ஹிந்து சம்பிரதாயத்தையும் அனுஸரித்து ஓர் தகுந்த வார்ஸை நிர்ணயம் செய்து, அவ

ருக்கு உடனே போதுமான ராஜாங்கப் பயிற்சி அளிக்கவேண்டு மென்பதேயாகும். நமது சமஸ்தானம் ஹிந்து அரசர்களால் ஆளப்பட்டு வந்திருக்கிறது. நமது மன்னர்பிரான் பிரஹதம்ப தாஸன் எனப்படுவர். தொண்டமான் வம்சத்திலுதித்தவர்களே பாரம்பர்யமாய் நமது சமஸ்தானத்தை ஆண்டுவந்திருக்கின்ற னர். தொண்டமான் வம்சமே எந்நாளும் நமது ராஜ்யத்தை அரசாட்சி புரியும்படி செய்வது நமது கடமையன்றோ? தொண்ட மான் வம்சத்தின் கீர்த்தியே கீர்த்தி. மகா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் சில்வர் ஜூபிளிக் கொண்டாட்டத்தின் பொழுது கொடுத்த உபசாரப் பத்திரத்தில் கண்டிருந்த "தொண்டமான் வம்சம் செழித்தோங்குக" (May the Tondiman line long endure) என்ற உருக்கமான பிரார்த்தனையையே நாம் நிறை வேற்றுமாறு வேண்டுகிறோம். நமக்கு யாரிடத்திலும் விருப்பு, வெறுப்பில்லை. மகாராஜாவானவர் மகாஜனங்களின் நம்பிக்கைக் குப் பாத்திரராய், மகாஜனங்களின் க்ஷேமத்தையே மேற்கோ ளாகக் கொண்டவர் என்பதை மனதில் நினைத்தால் விஷயம் செவ்வனே தெளிவுறும். அன்னரின் உதார குணங்களை எல் லோரும் கேட்டிருக்கலாம். ஆனால், நேரில் அம்மன்னரின் வெகு சிலாக்கியமான குணங்களை ஜனங்கள் அறிந்துகொள்ள அவகாசம் ஏற்படாதது தெளர்ப்பாக்கியமேயாகும். ராமாயணத்தில் ராம ருக்குப் பட்டாபிஷேகம் செய்வதற்கு முன்பாக தசரதச் சக்ர வர்த்தி எல்லோருடைய அபிப்பிராயத்தையும் கலந்தே செய்த தாகத் தெரியவருகிறது. ஆதலின் இவ்விதம் செய்வது நமது பிராசீன சம்பிரதாயமே ஒழிய நூதனமொன்றுமில்லை. நமது மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜென்ட் ஸாகேபவர்களிடத்தில் எனக்கு மிக்க மதிப்பும் மரியாதையுமுண்டு. ஆனால், அன்னர் நிச்சயமாக சிற் சில பிழைகளைச் செய்திருக்கின்றார். இப்பிழைகளில்லையேல், அவரிடத்தில் எனக்குள்ள மதிப்பு அளவு கடந்திருக்கும். இருந்தபோதிலும், சமஸ்தானத்தின் எதிர்கால நிலை வெகு முக்கியமானது. சமஸ்தானத்தின் எதிர்கால க்ஷேமத்தை யுத் தேசித்து நமது கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதே மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜென்ட் ஸாகேபவர்களின் கடமையாகும்."

அக்ராஸனர், இத்தீர்மானத்திற்கு விரோதமாக ஒருவரு மில்லையே என்று வினவ, ஒருவரும் முன்வரவில்லையாதலின், தீர் மானம் "ஏகமனதாய் நிறைவேறியது" என அக்ராஸனர் கூறினர். இவ்விதம் கூறி முடிந்தபின், சாவகாசமாக அத்யந்த ராஜவிசுவாசி யான ஸ்ரீமான் ரத்னசாமி அய்யர் எழுந்தார். அக்ராஸனர், ஸ்ரீமான் ரத்னசாமி அய்யர் பேசவேண்டிய காலம் கடந்துவிட்ட தென்றும், நியாயமாக ஸ்ரீமான் அய்யர் பேசுவதற்கு உரிமை

பில்லையென்றும், ஆனால் ஸ்ரீமான் அய்யர் விஷயத்தில் தயவாக ஒரு விலக்கு ஏற்படுத்தியதாகவும் கூறினர். ஸ்ரீமான் ரத்னசாமி அய்யர் பேசியதின் சாராம்சம் பின்வருமாறு:—

"காலமோ அசந்தர்ப்பமான காலமாயிருக்கிறது. நாளைக்கே மகாராஜா திரும்பி வரலாம். மகாராஜா அவர்களின் குழந்தையும் தொண்டமான் புத்திரன்தான். நமக்கு என்ன அதிகாரமிருக்கிறது? அபிப்பிராயங்கள் மாறிவிடலாம். சின்னட்களுக்கு முன் நாம் கப்பலில் பிரயாணம் செய்தால், நம்மை ஜாதிப் பிரஷ்டம் செய்துவிடுவார்களென்று பயந்தோம். இப்பொழுதோ சீமைக்குச் சென்று திரும்பிவந்திருக்கும் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யருடன் உண்டு களிக்கிறோம். இதுபோலவே சிட்னி இந்துவாக மாறலாம். அல்லது மகாராஜா அவர்கள் புனர் விவாஹம் செய்து கொள்ளலாம். இப்பொழுதே சிலர் ஏஜண்டுகளை யனுப்பி, ஆசை வார்த்தைகள் காட்டி ரஸாபாஸமாக நடந்துகொள்ளுகின்றனர்.

ஸ்ரீமான் S. விசுவநாதய்யர்:—ஸ்ரீமான் ரத்னசாமி அய்யர் பேசுவது ஒழுங்கா? [Is he in order?]

அக்ராஸனர்:— பேசட்டும்.

ஸ்ரீ ரத்னசாமி அய்யர்:—இத்தீர்மானத்திற்கு இப்பொழுது அவசரமும் அவசியமுமில்லை"

பின்னர் ஜனப்களான அப்தல் ரஹீம் சாகேபும், காஜா முகய்யதீன் ராவுத்தரும், ஸ்ரீமான் P. K. ராமச்சந்திரய்யரும் இத்தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர்கள்.

அவை முடிந்தவுடன் தலைவரவர்கள் பேசியதின் சாராம்சம் பின்வருமாறு:—

"பிரும்மச்சாரி ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாமென்றால் மகாராஜா அவர்களும் ஸ்வீகாரம் எடுத்துக்கொள்ளலாம். ராஜா திரும்பிவருவார் என்று மனப்பால் குடிப்பது ராஜபக்திக் குறைவாகும். மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள்' "தடுக்க முடியாத ராஜீய காரணங்களையும், சொந்த காரணங்களையும் முன்னிட்டு இந்தியாவுக்கு வெளியிலேயே எந்நாளும் வஸிக்க வேண்டிய நிர்ப்பந்தமிருப்பதாக" ஸ்ரீமுகம் விடுத்த பிறகு, அன்னர் திரும்பித்தான் வரவேண்டுமென்றுவது, அல்லது திரும்பிவருவாரென்றுவது எதிர்பார்ப்பது ராஜபக்தி யாகமாட்டாது. மேலும், ரீஜென்ட் என்றால் யாருக்கு ரீஜென்ட்? ராஜ்யத்தை மைனராபிருப்பவர் ஒருவர் ஆட்சிபுரிந்தால், ஒரு ரீஜென்ட் ராஜ்யத்தை நிர்வகிப்பது சகஜம். ஏஜென்டுகளை வைத்து ஏதோ வேலைகள் செய்வதாக ஸ்ரீமான் ரத்னசாமி அய்யர் கூறியுள்ளார். சமஸ்தானத்தின் எதிர்காலம் இருள் சூழப்பட்டிருக்குமட்டில் இரு

தரப்பிலும் ஏஜென்டுகள் வேலை செய்வது சகஜமே. ஆனால், இக் காரணத்தை முன்னிட்டே, நாம் உடனே ஒரு முடிவுக்கு வர வேண்டும். அவ்விதம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டால், ஏஜென்ட் களை வைத்து வேலை செய்யும் அவசியம் ஏற்படாது."

இத்தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டதில் ஸ்ரீமான் S. ரத்ன சாமி அய்யர் ஒருவரைத் தவிர, பெரும்பான்மையோர் சாதகமாக வாக்குகள் கொடுத்தபடியால், தீர்மானம் நிறைவேறியது.

ஸ்ரீமான் R. வெங்கோப ராவ் அடியிற்கண்ட தீர்மானத்தைக் கொணர்ந்தார்:—

"நமது மகாராஜாவிற்குப் பிறகு பட்டத்திற்கு யார் வரப் போகிறார் என்ற விஷயத்தில் இருந்துவரும் அவியவஸ்தையை நிவர்த்தி செய்யவேண்டி நமது மகாராஜா அவர்கள் மீண்டும் சமஸ்தானத்திற்குத் திரும்பிவந்து நேரில் ஆக்ஷி செய்யும்படி அவர்களை நாம் பிரார்த்திப்பதுடன், நமது மகாராஜா அவர்கள் குமாரர் ஹிந்து மதத்தில், ஹிந்து நடவடிக்கைகளுடன் இச் சமஸ்தானத்திலேயே இருந்து வளர்ந்துவரும் பக்ஷத்தில், அவரே பட்டத்திற்கு லாயக்குள்ளவர் என்று இந்த மகாநாடு ஒப்புக் கொள்ளுகிறது."

ஸ்ரீமான் வெங்கோப ராவ் இத்தீர்மானத்தைப் பிரேரணை செய்கையில், மகாராஜா அவர்கள் சமஸ்தானத்திற்குத் திரும்பி வராததின் காரணம் அன்னாருடைய குழந்தையின் வார்சு பாத்திய விஷயமேயென்றும், வேறு சொந்த காரணங்களாவது அல்லது ராஜீய காரணங்களாவது இருக்க நியாயமில்லையென்றும், மகா ராஜா வரமுடியாமலிருக்கும் தடையை ஜனங்கள் நிவர்த்தி செய்துவிட்டால், மகாராஜா அவர்கள் நிச்சந்தேகமாய் சமஸ்தா னத்திற்குத் திரும்பி வருவதுடன், 20-லக்ஷ ரூபாயையும் திரும்பத் தந்துவிடுவாரென்றும், அவ்விதம் தடையை நிவர்த்தி செய்வது ராஜ விசுவாசமுள்ளவர்களின் கடமையென்றும், அக் கடமையை நிறைவேற்றுவது தீர்மானத்தை அங்கீகரிப்பதின் மூலம்தான் சாத்தியமாகுமென்றும் கூறினார்.

நியாயவாதி ஸ்ரீமான் R. ஸ்ரீனிவாஸாசாரியார் அவர்கள் இத்தீர்மானத்தை ஆமோதிக்கையில், வார்சு பாத்திய விஷயம் நிர்க்காரணம் செய்யாததே மகாராஜா அவர்கள் சமஸ்தானத் திற்கு வந்து நேராக ஆக்ஷி (Personal Rule) புரிவதற்கு இடையூறாயிருக்கிறதென்றும், முன்னால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு இத்தீர்மானம் முரணாயில்லையென்றும், ஒரு குழந்தையின் மதம் தன் தகப்பன் மதமே ஒழிய தாயின் மத மல்லவென்றும், இவ்விதமே சட்டமிருப்பதாகவும், சமீப கால

மாக மகாராஜா அவர்கள் திரும்பிவரப்போவதாய் வதந்தி உலாவு வதையும், பத்திரிகைகளில் வெளி வருவதையும் ஜனங்கள் கேட்டும் படித்துமிருக்கலாமென்றும், மகாராஜா அவர்களின் மாளிகை சீர்திருத்தப்பட்டு வருவதை ஜனங்கள் கவனிக்கவேண்டுமென்றும் கூறினர். கிரனார் ஜனப் அப்தல் ரஹீம் ஸாகேப் இதை ஆதரித்துப் பேசினர். ஸ்ரீமான் V. S. கணபதி சாஸ்திரிகள் அவர்கள், மகாராஜாவை எப்படியாவது திருப்திப்படுத்த வேண்டுமென்று நினைப்பது தவறென்றும், சரியான அரசனைத் தேர்ந்தெடுப்பதுதான் முறையென்றும், மன்னர்பிரானின் விவாஹம் ஹிந்து மதக் கோட்பாடுகளின்படி நடக்கவில்லையென்றும், ஆதலின் தற்கால வாரிசு எனக் கூறப்படும் குழந்தைக்கு அப்பொறுப்பைச் சுமத்துவது நியாயமில்லையென்றும் கூறினர்.

பிறகு நச்சாந்துபட்டி ஜனப் மகமத் இப்ராஹிம் பேசியதின் சாராம்சம் பின்வருமாறு:—

"முதலாவதாக அரசர் வாக்கை நாம் கவனிக்க வேண்டும். அரசர் "சொந்த காரியங்களையும், ராஜீய காரணங்களையும் முன்னிட்டு இனி எந்நாளும் இங்கு வர முடியாது" என்று தெரிவித்து விட்டார். சமஸ்தானம் எவ்விதம் நன்றாயாளப்பட்ட போதிலும், மகாராஜா அவர்களின் நேரான ஆக்ஷிக்கு சமானமாகாது. இச் சமஸ்தானத்தில் சென்ற சில வருஷங்களாய் மழையில்லாமையால் நிலங்கள் விளையாமல் ஜனங்கள் பட்டிருக்கும் கஷ்டத்திற்கு எல்லையில்லை. நமது சமஸ்தானத்தில் ஆறு வருஷ காலத்திற்குள் வரி வஜா செய்திருப்பதாக நீங்கள் கேட்டிருப்பீர்களா? ரீஜண்ட் ஸாகேப் அவர்கள் வாழ் நாள் மட்டும் ரீஜண்டென ஏற்பட வில்லை. அக்கிராஸனர் கூறியிருப்பதைப்போல், இச்சிக்கலான பிரச்னையைத் தீர்த்துவிட்டால், அதாவது ரீஜண்டவர்களின் ஆட்சி இவ்வளவு காலம்தான் என வரையறுத்துவிட்டால், அச் சொல்ப காலத்திற்குள் ஜனங்களுக்குகந்த நன்மைகளைச் செய்ய முற்பட ஹேதுவாயிருக்குமென்பதில் ஐயமில்லை. புதுக்கோட்டை சமஸ்தான ஜனங்களின் ராஜவிசுவாசத்தையும், பொறுமையையும் என்னென்றுரைப்பது! அரசர் வருவார், வருவார் என்று 30 வருஷ காலமாக எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம். காரியத்தில் ஒப்பேறவில்லை. எந்த ராஜ்யத்திலாவது இம்மாதிரி ஒரு அரசர் சமஸ்தானத்தைவிட்டு 30 வருஷ காலத்திற்கு மேல் அன்னிய நாட்டிலேயே வசித்துவந்ததாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பொறுமைக்கும் ஓர் எல்லை யுண்டு. நாம் கோருவது பொறுப்பாட்சியேயாகும். நமது ராஜ்யம் தொண்டமான் ராஜ்யம், தனித் தமிழ் ராஜ்யம். நமது அரசர் பிரஹதம்ப தாசன். நான் இப்பொழுது பேசும் தமிழ் பாஷை தனித் தமிழ் ராஜ்யமாகிய

நமது சமஸ்தானம் அளித்த நன்கொடையேயாகும். ஆதலின், நமது சமஸ்தானத்தை தொண்டமான் ராஜ்யமாகவும், தனித் தமிழ் சமஸ்தானமாகவும் காப்பாற்றிவரவேண்டியது நமது கடமையன்றோ? இஸ்லாமிய மதத்தின் பெருமை யென்னவென்றால், எங்களில் ஒருவன் எந்த ஜாதியைச் சேர்ந்த ஸ்திரீயை மணந்தபோதிலும், மணம் செய்யப்பட்டவள் இஸ்லாம் மதத்தைச் சேர்ந்தவளாகிறாள். ஆனால், ஹிந்து மதத்திலோ அவ்விதமில்லை. 30 வருஷங்கள் கழித்தாவது நாம் நமது சமஸ்தான வார்சு பாத்தியதையை நிர்த்தாரணம் செய்யவேண்டுமென்று கோரமக்கு உரிமையில்லையா?"

ஸ்ரீமான் R. ஸ்ரீனிவாஸாசாரியார் சில வார்த்தைகள் பேச வேண்டுமென அக்கிராஸனரின் அனுமதியைக் கேட்க, அக்கிராஸனர் தமக்கு அவ்விதம் அனுமதியளிக்க அதிகாரமில்லையெனத் தெரிவித்தார். ஸ்ரீமான் வெங்கோப ராவ், மகாராஜா அவர்கள் திரும்பி வரவேண்டுமென்ற எண்ணத்துடன்தான் இத்தீர்மானம் கொண்டுவரப்பட்டிருப்பதாய்த் தெரிவித்து, தீர்மானத்தை எல்லோரும் ஆதரிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

பிறகு அக்கிராஸனர் பேசியதின் சாராம்சம் பின்வருமாறு:- "இரண்டு விஷயங்களை நாம் இப்பொழுது ஆலோசிக்கவேண்டும். முதலாவதாக வார்சு பாத்தியதை ஹிந்து சட்டத்தையும், ஹிந்து சம்பிரதாயத்தையும் அனுசரித்துச் செய்யப்படவேண்டுமென நீங்கள் ஏற்கனவே தீர்மானித்துவிட்டீர்கள். இப்பொழுது சிட்னி மார்த்தாண்டா ஹிந்துவா அல்லவா என்பதுதான் கேள்வி. ஹிந்து சட்டப்படி அன்னர் ஹிந்துவாயிருந்தால், இத்தீர்மானத்திற்கு அவசியமேயில்லை. ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸாசாரியார், அவர் ஹிந்துதான் என்று சட்டபூர்வமாய்ச் சொல்லுகிறார். அது உண்மையாயின், 'வசிஷ்டர் வாக்கால் பிரும்ம ரிஷி' யென்பதை ஒக்கும். ஆனால் எனக்குத் தெரிந்த மட்டில் ஹிந்து சட்டம் அவ்விதமிருப்பதாய்த் தெரியவில்லை. சிட்னி மார்த்தாண்டா ஹிந்துவா, இல்லையாவென்ற பிரச்னையைத் தீர்ப்பதற்கு நமக்கு அதிகாரமில்லை. நமது மனுதர்ம சாஸ்திரப்படி, ஹிந்துவென்பவன் ஹிந்துவாய்ப் பிறக்கவேண்டும். ஹிந்து மதம் பரவாமல் இருப்பதற்குக் காரணமும் இதுவேயாகும். சிட்னி மார்த்தாண்டா ஹிந்துவாகவேண்டுமானால் மனுதர்ம சாஸ்திரம் புனரபி எழுதப்படவேண்டும். மகாராஜா அவர்கள் வெகு நல்லவர் எனப் பலர் புகழ்கின்றார்கள். ஆனால், நீங்கள் காரியத்தைக் கொண்டுதான் நிதானிக்க வேண்டும். மகாராஜா அவர்கள் திரும்பி வந்துவிடுவார்களென்றும், 20 லக்ஷத்தைத் திருப்பிக் கொடுத்துவிடுவாரென்றும் வகாலத்து வாங்கிப் பேசுகின்றனர். மகாராஜா அவர்

கள் மகாஜனங்களுக்கு அவ்விதம் மனுச்செய்து கொள்ளட்டும். மகாராஜா அவர்கள் மாதம் 15,000 ரூ போல் பெற்றுக்கொண்டு, தமது கடமையைச் செய்யாமல் வாளாயிருப்பதைக் கண்டிக்க வேண்டியதை விட்டுவிட்டு, அவரது கடமையைச் செய்வதற்கு லஞ்சம் கொடுப்பதுபோல் மேல்கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமெனக் கேட்பது என்ன நியாயம்? யாருடைய ராஜ்யம் இது? ராஜ்யத்தை இன்னுருக்குக் கொடு என்று சொல்பவர் யார்? ராஜ்யம் நம்முடையது. கிரமமான வார்சுக்கு ராஜ்யத்தை அளிக்கும்படி கேட்கும் உரிமை நம் கையிலிருக்கின்றது. ராஜ்யம் பாழாயிருக்கின்றது. எங்கு பார்த்தாலும் பஞ்சம். ஜனங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். எங்கு பார்த்தாலும் கூஷாமம்; கைத்தொழில்கள் கிடையாது. எத்தனை நாள் இவ்விதம் ஜனங்கள் அவஸ்தைப்படுவர்?"

பிறகு இத்தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டதில் மூவரைத் தவிர வேறு ஒருவரும் சாதகமாக வாக்குக் கொடுக்காததால், இத்தீர்மானம் தோற்றுப்போய்விட்டது.

பின்னர் அடியிற்கண்ட தீர்மானம் அக்கிராஸனரால் பிரேரணை செய்யப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

"ஏற்கனவே ஆலங்குடி மகாநாட்டில், மகாநாட்டின் லட்சியம் இன்னதென்று விளக்கப்பட்டிருப்பதை அனுஸரித்து, "மகாராஜா அவர்களின் ஆதீனத்தின் கீழ் ஜனப் பொறுப்பாட்சி" அளிக்கவேண்டுமாயும், "இம்மகாநாட்டின் லக்ஷ்யம் பொறுப்பாசஹி" என்பதையும் மகாநாடு மீண்டும் வற்புறுத்துகிறது."

தீர்மானங்களெல்லாம் நிறைவேறின பின்னர் உபசரணைக் கமிட்டித் தலைவர், பிரதிநிதிகளுக்கும், வாலண்டியர்களுக்கும் வந்தனோபசாரம் கூறினர். ஜனப் அப்தல் ரஹீம் சாகேபு, ஸ்ரீமான்களான சங்கிலியா பிள்ளை, K. நாகராஜய்யர், நாராயணசாமி அய்யர், திருவை சுப்பிரமணிய அய்யர், S. விசுவநாதய்யர் முதலியவர்கள் மகாநாட்டின் சிறப்பைப்பற்றிப் புகழ்ந்து பேசி, அச்சிறப்புக்குக் காரணமாயுள்ளவர்களையும் புகழ்ந்து பேசினர்.

மகாநாட்டின் நடவடிக்கைகளை அக்கிராஸனர் முடிவுக்குக் கொண்டுவந்து முடிவுரையாக அடியிற்கண்டவாறு ஓர் அரிய சொற்பொழிவு நிகழ்த்தினர்:—

"புதுக்கோட்டை மகாஜனங்கள் மறு முறை மகாநாட்டைக் கூட்டினாலொழிய பிரஸங்கம் புரிவதில்லையென்று பிரதிக்ஞை செய்துகொண்டிருந்தேன். எனது பிரதிக்ஞை நிறைவேறியது. இம்மகாநாடு பூர்ண பிரதிநிதித்துவம் வாய்ந்தது. மகாநாடு நிச்சந்தேகமாய் வெற்றியடைந்துவிட்டது. நிறைவேறியிருக்கும்

தீர்மானங்களெல்லாம் நன்கு சர்ச்சை செய்யப்பட்டவையேயாகும். நீங்கள் இடைவிடாது கிளர்ச்சி செய்தால், பத்து வருஷ காலத்திற்குள்ளாவது ஜனப்பொறுப்பாட்சியை அடையலாம். மகாஜன சபைக்கு ஸ்ரீமான் சுந்தரேசய்யரவர்களைத் தலைவராய்த் தேர்ந்தெடுத்திருக்கிறீர்கள். ஸ்ரீமான் அய்யருக்கு ஆற்றலிருக்கின்றது. ஆனால், மூன் வைத்த காலைப் பின் வைக்காமல், அனுவசியமான வியாக்யானங்கள் செய்யாமல், சுதந்திரப் போரை நடத்தும்படி ஸ்ரீமான் ஐயரைக் கேட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு ஏதாவது கெடுதல் வந்தால் வரலாம். வருவது வரட்டும். இம்மகாநாட்டில் நடைபெற்றிருக்கும் தீர்மானங்களுக்கு நானே ஜவாப்தாரி. நீங்கள் வாபீஸ் வாங்கிக்கொள்ள வேண்டாம். நான் கஷ்டப்பட்டு அதன் மூலம் எனது சமஸ்தானத்திற்கு கதிமோக்ஷம் கிடைத்தால் அதுவே போதும்."

திருமெய்யம் நியாயவாதி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் மகாநாட்டை திருமெய்யத்தில் மறு ஆண்டு கூட்டவேண்டுமென்று கோரி அழைக்க, சபையோர் அதை அங்கீகரித்தனர். தலைவரவர்களுக்கு புஷ்பஹாரம் சூட்டப்பட்டது. மகாத்மா காந்திக்கு ஜெய், சத்தியமூர்த்திக்கு ஜெய் என்ற ஆரவாரம் காதுகள் செவிடுபட ஒலிக்க, ஜனங்கள் மகாநாட்டின் வெற்றியைக் குறித்து மனம் பூரிக்க, ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் அவர்கள் மோட்டாரில் ஏறித் தஞ்சைக்குப் புறப்பட, ஆண்டவன் அருளாலும், மகாஜனங்களின் ஒத்துழைப்பாலும் மகாநாடு வெற்றியுடன் இரவு 7-மணிக்கு இனிது முடிந்தது.

18-வது அத்தியாயம்.

சில்லரைக் குறிப்புகளும், வார்சு பாத்திய விஷயங்களும்.

இந்தியா மந்திரியும் சட்ட பாரங்கதருமான பிர்க்கென்ஹெட் பிரபுவின் உதவியின் பேரிலும், நரேந்திர மண்டலின் அங்கத்தினர்களான சிற்சில இந்திய மன்னர்களின் ஆதரவைக் கொண்

டும் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்கள் தமது புதல்வன் லிட்னீ மார்த்தாண்டாஜை வார்ஸாக அங்கீகாரம் செய்யவேண்டுமென்று மறுபடி பலமான பிரயத்தனங்கள் செய்துவந்ததாகப் பிரஸ்தாபமிருந்தது; நடவடிக்கைகளிலிருந்தும் அது உண்மைதானென்பது தெளிவாயிற்று. ஆறுவது மகாநாட்டில் ஸ்ரீமான் R. வெங்கோபராவ் அவர்களால் "நமது மகாராஜா அவர்கள் குமாரர் ஹிந்து மதத்தில், ஹிந்து நடவடிக்கைகளுடன் இச்சமஸ்தானத்திலேயே இருந்து வளர்ந்துவரும் பக்ஷத்தில், அவரே பட்டத்துக்கு லாயக்குள்ளவர் என்று இந்த மகாநாடு ஒப்புக்கொள்ளுகிறது." என்று கொண்டுவரப்பட்டு, நியாயவாதி ஸ்ரீமான் R. ஸ்ரீநிவாஸாசாரியால் ஆதரிக்கப்பட்டு தோற்றுப்போன இப்பிரேரணை மகாநாட்டில் ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்ட காரணம், அது நிறைவேற்றப்பட்டால், மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் கோரிக்கைக்கு ஸாதகமாயிருக்கும் என்றதுதான். இப்பிரேரணை தோற்றுப்போனதும், இதற்கெதிரிடையாக, ஹிந்து மதத்தையும், ஹிந்து சட்டத்தையும் அனுஸரித்து வார்ஸை நிர்ணயம் செய்யவேண்டுமென்று மகாநாட்டில் தீர்மானம் செய்ததும் அரசாங்கத்தாருக்கு மனக்கசப்பையும் கோபத்தையும் விளைவித்தது.

திடீரென்று மேலரண்மனை துரை மகா-ரா-ரா-ஸ்ரீ ராமச்சந்திரத் தொண்டமான் ஸாஹேப் அவர்கள், பால்ய வயதில் 1927-ம் வரு ஜனவரி மீ 13-ம் உ இரவு பரகதியடைந்தார். அதைப் பற்றி "ஜனமித்திரனில்" அடியிற்கண்ட குறிப்பு வெளிவந்தது:—

வருந்துகிறோம்.

"மேலரண்மனை மகா-ரா-ரா-ஸ்ரீ ராமச்சந்திர தொண்டமான் ஸாகேப் அவர்கள் சென்ற நான்கு தினங்களாக மண்டைப் பருவினல் அவஸ்தைப்பட்டு, தக்க சிகிச்சை செய்தும், பயன்படாமல் நேற்றிரவு உயிர் நீத்தனரெனக் கேட்டு வருந்துகிறோம். வெகு பால்ய வயதில் மூன்று ஆண் குழந்தைகளையும், இரண்டு பெண் குழந்தைகளையும், கர்ப்பமாயிருக்கும் தமது இளைய மனைவியையும், தமது வயோதிகத் தாயாரையும் தவிக்க விட்டுவிட்டுக் கூற்றுவனுக் கிறையானது விசனிக்கத்தக்கது. நமது அநுதாபத்தை அன்னாது குடும்பத்தினருக்குத் தெரியப்படுத்துகிறோம்."

தென்னிந்திய சுதேச சமஸ்தானங்களின் ராஜீய ஏஜெண்டான மிஸ்டர் காட்டன் துரையவர்கள் 1927-ம் வரு ஜனவரி மீ 15-ம் உ இரவு புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தார். அவரது

வரவை முன்னிட்டு மறுநாட் காலையில் மரியாதை குண்டுகள் போடப்பட்டன. அவரைப் பல பிரமுகர்கள் பேட்டி கண்டு பேசினர்கள். மகாநாட்டின் சார்பாக ஸ்ரீமான் S. விசுவநாதய்ய ரவர்கள் அடியிற்கண்ட மகாநாட்டின் தீர்மானத்தை ஏஜெண்ட் துரையவர்களிடம் ஸமர்ப்பித்தார்:—

Resolutions regarding the question of succession to the Gadi discussed and passed at the Sixth People's Conference held in the Town Hall, Pudukkottai on 3rd December, 1926.

No. 4 (a). "This Conference is of opinion that in the interest of the permanent well-being and the future of the State, the British Government and the authorities of the State should settle the question of succession to the *Gadi* as early as possible.

(b). This Conference further urges that a proper heir should be appointed taking into consideration the principles of the Hindu Religion, Hindu law and the fact that the State has been always ruled by Hindu Rulers and that such heir should be immediately given the necessary training in the administration."

Proposed by Doctor A. Venugopal Naidu; seconded by R. Gokarna Sastri and supported by Sangilia Pillai and S. Viswanatha Aiyar. Passed by an overwhelming majority, only one member voting against.

No. 5. "With a view to settle the uncertainty regarding the question of succession to the *Gadi* of the State, this Conference is of opinion that His Highness should return to the State and re-assume the reins of Government and is further of opinion that if His Highness' son adopts Hindu religion, Hindu ways, manners and customs and is brought into and made to live within the State and given the necessary training as a Hindu, he may be accepted as heir to the *Gadi*."

Proposed by R. Venkoba Row, seconded by R. Srinivasachariar and supported by M. A. Abdur Rahim Sahib. Opposed by V. S. Ganapati Sastrial and Mahamad Ibrahim Rowther. Proposition was put to

the vote and defeated by an overwhelming majority, only three voting for and almost all the rest, out of about 500 present, voting against.

(sd) A. S. Nagaratnam,
Secretary.

1927-ம் ஹு டிஸம்பர் மாத்தில் கூடிய 6-வது மகாநாடு சம்பந்தமாய் "வரவேற்பு வளைவுகள்" (Arches) முதலியன போட்டதற்காக அரசாங்கத்தாரின் உத்தரவின் பேரில், முனிஸிபல் சேர்மன் முனிஸிபாலிடியின் உத்தரவைப் பெறாமல் மேடி வளைவுகள் முதலியவைகள் போடப்பட்டன வென்ற காரணத்தை முன்னிட்டு டவுன் பெஞ்சு கோர்ட்டில் மகாநாட்டின் காரியதரிசி ஸ்ரீமான் ஆ. சு. நாகரத்னமய்யர் பேரில் வழக்குத் தொடர்ந்தனர். முனிசிபல் சபைக் கூட்டத்தில் சேர்மனின் செய்கைக்கு வருந்தி, வழக்கு நிலைக்க இடமில்லை யென்பதைத் தெரிவித்து, பூரா தஸ்தவேஜிகளையும் சபையின் பார்வைக்கு வைக்கவேணுமென்றும், அதுவரையில் கோர்ட்டு நடவடிக்கையை நிறுத்திவைக்க வேண்டுமென்றும் தீர்மானித்தார்கள். ஆனால் அப்படிச் செய்ய வேண்டிய அவசியமில்லையென்று சொல்லி கேஸ் மேல் நடத்தப்பட்டது. கடைசியாக அபராதமும் விதிக்கப்பட்டது. ரிவிஷன் முதலியவைகள் செய்தும் அபராதம் மாற்றப்பட வில்லை. ஸ்ரீமான் நாகரத்னமய்யர் முனிஸிபல் சபையின் அனுமதியை முன்னடி வாங்காத தவறுதலுக்காக முனிஸிபல் சபையார் இஷ்டப்படும் தொகையை ஸ்தல வரியாகச் சேலுத்தும்படி உத்தரவு செய்ய ஒரு செக்ஷன் ஸ்பஷ்டமாக அதிகாரம் கொடுக்கையில், கிரிமினல் தரப்பில் எப்படியும் நடவடிக்கை யெடுத்துக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கத்தார் உத்தரவு செய்து, வழக்கையும் வேறு கோர்ட்டுக்கு மாற்றி, மேடி வழக்கை நடத்த ஸ்பெஷலாக பப்ளிக் பிராஸிகூடருக்குக் கட்டளையிட்டது அவர்களுடைய மனப்பான்மையை விளக்கும்.

26—2—27ல மாலை 6-மணிக்கு ஸ்ரீ சாந்தநாத ஸ்வாமி கோவிலுக்குப் பக்கத்தில் காந்தி சௌக்கில் மகாஜனங்களின் பொதுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. ஸ்ரீமான் M. நாராயணஸ்வாமி அய்யாவர்கள் அக்கிராஸனம் வகித்தனர். மகாஜன சபை ஸ்தாபிப்பதற்கும், மகாத்மா காந்தியடிகள் தமிழ் நாட்டிற்கு விஜயம் செய்யும்பொழுது அவரைப் புதுக்கோட்டைக்கு அழைத்து வரவேற்பதற்கும் கமிட்டிகளும், காரியதரிசிகளும் நியமிக்கப் பட்டார்கள்.

மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் சாகேப் அவர்களும், அவருடைய மெய்காவலர் ஸ்ரீமான் R. A. தெசூஷிணமூர்த்தி பிள்ளையவர்

களும், ஹுஜூர் செக்ரிடரி ஸ்ரீமான் R. கிருஷ்ணமாசாரியாரவர் களும் டெல்ஹிக்குப் புறப்பட்டுச் சென்றார்கள்.

மகாத்மா வரவேற்புக் கழகத்தின் தலைவராகிய ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்களும், காரியதரிசி ஸ்ரீமான் S. விசுவநாதய்ய ரும் ராஜதானிவர்களைப் பேட்டி கண்டு பேசி, மகாத்மா இவ் வூருக்கு வருவதில் அரசாங்கத்தாருக்கு யாதொரு தடையும் இரா தென்றும், மகாத்மா வரவேற்பு நிதிக்கு உத்தியோகஸ்தர்கள் சந் தாக்கள் செலுத்துவதிலும் ஆக்ஷேபணை யில்லையென்றும் கேட் டுத் தெளிந்துகொண்டார்கள்.

ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் அவர்கள் 15—4—27ல் கனம் காட்டன் துரையவர்களுக்கு வார்ஸ் நிர்ணய விஷயத்தைப்பற்றி ஓர் கடிதம் எழுதியிருந்தார். அதற்கு அவர் பின்வருமாறு பதில் எழுதினர்:—

Camp.

Government of India. 21—4—27.

Dear Mr. Viswanatha Iyer,

I thank you for your letter of the 15th April. I have endeavoured in connection with the succession question to put every point of view (including that of the People's Conference which, I understand, is substantially yours) before the Government of India—with whom the matter is still pending. The recent Visit of the Regent to Delhi may perhaps expedite a settlement. I hope to have the pleasure of seeing you when I am next in Pudukotah.

Yours truly,
(sd) C. W. E. Cotton.

ஜனமித்திரனில், "சமஸ்தானத்தின் எதிர்காலப் பிரச்னை", "ராஜாங்க வார்சு பிரச்னை", "சமஸ்தான வார்சு பாத்தியதை" என்று பல கட்டுரைகள் எழுதப்பட்டு வந்தன.

சென்னை சுகுண விலாஸ சபையார் 1927-ம் வரு ஜூன் மீ புதுக்கோட்டைக்கு வந்து 2, 3, 5, 7—இந்தத் தேதிகளில் நான்கு சிறந்த நாடகங்களை நடித்தனர். 7-ம் தேதி இரவு ஹரிச்சந்திர நாடகம் நடந்த பின்னர் வந்தன மளிக்கையில், அவ்வருஷத்திய தமிழ் கண்டக்டராகிய ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்கள் பின்வருமாறு பேசினர்:—

"நீங்கள் இம்மட்டிலாவது எங்களது நாடகங்களுக்கு வந்து களைவித்ததற்கு நாங்கள் வந்தனஞ் செலுத்துகிறோம். சமஸ்தானத்தில் எங்கு பார்த்தாலும் க்ஷாமம். ராஜரிகம் கிடையாது. தர்பார் என்பது பெயரளவில்தானிருக்கிறது. நாங்கள் திருவாங்கூர் சென்ற பொழுது, திருவாங்கூர் அரசர் எங்களை விருந்தினராய் அழைத்து, எங்களது நாடகங்களுக்கு விஜயஞ் செய்து, 3000 ரூ சன்மானமாக அளித்தார். தனித் தமிழ் சுதேச சமஸ்தானமாகிய புதுக்கோட்டையில் உண்மையில் தர்பார் இருந்தால், தமிழ் மொழியிலும், அதை வளர்க்கக்கூடிய நாடகக் கலையிலும் இத்துணை அசிரத்தை யிராதென்று நிச்சயமாய்ச் சொல்வேன். ஆனால் எப்பொழுதும் இப்படியே இராது. கூடிய சீக்கிரம் நல்ல காலம் பிறந்து, தர்பார் ஏற்படுமென்று நம்புகிறேன்." (கர கோஷம்).

1927-ம் வரு ஜூலை மீ 1-ம்உ வெளிவந்த ஜனமித்திரனில் "சமஸ்தான வார்சு பாத்யதை" என்று ஓர் தலையங்கம் எழுதப் பட்டது. அதில் கண்டிருந்த சங்கதிகளின் ஸாராம்சமாவது:—

"சமஸ்தான வார்சு பாத்யதை விஷயமாக நமது பத்திரிகையில் பன்முறை எழுதியுள்ளோம். சென்னையில் செல்வாக்குடன் நடைபெறும் 'ஹிந்து', 'சுயராஜ்யா', 'சுதேசமித்திரன்', 'தமிழ் நாடு' போன்ற தினஸரிப் பத்திரிகைகளும் இவ்விஷயமாய் அவைகளின் அபிப்பிராயங்களை வெள்ளிடை மலைபோல் வெளியிட்டிருக்கின்றன. இதிலிருந்து ஒரு விஷயம் நன்கு புலனாகும். புதுக்கோட்டை சமஸ்தான வார்ஸ் பாத்ய சம்பந்தமாய் இந்தியா கவர்ன்மெண்டார் என்ன விதமான முடிவிற்கு வரப்போகிறார்களென்று புதுக்கோட்டை மகாஜனங்கள் மாத்திரமல்ல, பிரிடிஷ் இலாகா வாஸிகளனைவரும் கண்ணும் கருத்துமாய்க் கவனித்து வருகின்றனர். ஒரு புதுக்கோட்டை வாஸி சமஸ்தானத்தை விட்டு வெளியிடங்களுக்குச் சென்றால், எல்லோரும், "உங்களுடைய சமஸ்தான வார்ஸ் பாத்ய விஷயம் எந்நிலையிலிருக்கின்றது?" என்ற ஒரே கேள்வியைத்தான் வெகு ஆவலுடன் கேட்கின்றனர். ஆனால், இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் மூடுமந்திரம் சாதித்துவருவதால், பிறர் ஆவலுடன் கேட்கும் கேள்விகளுக்குத் திருப்திகரமான பதிலளிக்கக்கூடிய நிலைமையில் இல்லாமல் புதுக்கோட்டை வாஸிகள் பரிதபிக்கின்றனர்.

* * *

ஆதலின் சமஸ்தான வார்சு பாத்திய உரிமைக்கு இரண்டு நபர்கள் அபேக்ஷகராய் நிற்கின்றனர். இவ்விரு நபர்களில் ஹிந்து சட்டப் படிக்கும், ஹிந்து மத அனுஷ்டானப்படிக்கும் ஒத்த வார்சை

நிர்த்தாரணம் செய்யும் பொறுப்பு இந்திய அரசாங்கத்தாரைச் சார்ந்து நிற்கின்றது.

ஜூன் மீ 21-ல 'ஹிந்து' பத்திரிகையில் ஒரு மான்ய நிருபர் சமஸ்தான வார்சு பாத்ய விஷயமாய் நீண்டதோர் வியாசத்தை எழுதியுள்ளார். இவ்வியாசத்தை சமஸ்தான வாசிகளும், சமஸ்தான அரசாங்கத்தாரும், இந்தியா கவர்ன்மெண்டாரும் படித்துப் பயன்பெறுமாறு வேண்டுகிறோம். இவ்வியாஸம் எழுதப்பட்டிருக்கும் நடையிலிருந்து, வியாஸத்தை எழுதியிருக்கும் நிருபர் சட்ட ஞானத்தில் தக்க தேர்ச்சியும், பொதுவாக சுதேச சமஸ்தானங்களின் முன்னேற்றத்திலும், சிறப்பாக புதுக்கோட்டை சமஸ்தானத்தின் அபிவிருத்தியிலும், சிரத்தையும் ஒருங்கே அமையப்பெற்றவராயிருத்தல் வேண்டுமென்பது எளிதில் புலனாகும். இவ்வியாசத்தில் முக்கியமாய் குறிப்பிடப்பட்டிருக்கும் சில விஷயங்களை மாத்திரம் ஈண்டு குறிப்பிடுவோம்.

முதலாவதாக மகாராஜா அவர்கள் ஹிந்து சட்டத்துக்கு விரோதமாக மணம் புரிந்திருப்பதால், ஹிந்து சட்டம் மகாராஜா அவர்களுக்கு அன்வயிக்காது.

* * *

மகாராஜா அவர்களே ஹிந்துவில்லையென்றால், சிட்னி மார்த்தாண்டாவும் ஹிந்துவில்லையென்றே சொல்ல வேண்டும். சிட்னி மார்த்தாண்டா ஹிந்துவைப்போல் வசிக்கவில்லை, ஹிந்து வாய்க் கருதப்படவில்லை, ஹிந்து மதத்தையாவது, ஹிந்து மத அனுஷ்டானத்தையாவது கைக்கொள்ளவுமில்லை. ஹிந்துவாகக் கருதப்படவும் இடமில்லையென்று தெளிவாகின்றது.

* * *

இதுவரையில் ஹிந்துவில் வெளிவந்துள்ள வியாசத்தின் சாராம்சத்தை ஈண்டு வரைந்தோம். இது விஷயமாய் நமது அபிப்பிராயத்தை ஏற்கனவே தெரிவித்துள்ளோம். நமது சகோதரப் பத்திரிகை அதன் தலையங்கத்தில் அரசருக்கு ஒரு வேண்டுகோளை விடுத்திருக்கின்றது. ஆனால், மேலே எழுதியதாகக் கூறப்பட்டிருக்கும் காரணத்தினால், அரசருக்கு வேண்டுகோளை விடுப்பதில் யாதொரு பயனுமில்லை.

* * *

இத்தனை காலம் நாம் பொறுத்தோம். இனி சிறிது காலம் பொறுத்துப் பார்ப்போம். பொறுத்தார் பூமியாள்வார். இந்தியா கவர்ன்மெண்டார் நாம் பொறுமையை இழக்குமுன் ஒரு முடிவிற்கு வருமாறு வேண்டுகிறோம்."

அடுத்த வாரத்தில் புதுச்சேரி இயற்கை யில்லம் ஸ்ரீமான் வி. லக்ஷ்மண சர்மா அவர்கள் "புதுக்கோட்டை வார்சு அவிய

வஸ்தை" என்று எழுதிய அடியிற்கண்ட கட்டுரையும் ஜனமித்திரனில் வெளிவந்தது:—

"சமஸ்தான வார்சு பாத்தியதை" என்னும் தலைப்பின் கீழ் நமது மித்திரன் பத்திராதிபர் கூறியிருக்கும் வசனங்கள் அனைத்தையும் நான் பூர்ணமாக ஆதரிக்கிறேன் என்று சொல்லவேண்டியதில்லை. இதை நான் ஹிந்து தர்மப்படி வார்சும், தற்காலம் இங்கர வாஸியுமாகிய ராஜகுமாரர் அவர்களின் சார்பாகச் சொல்லவில்லையென்பது யாவருக்கும் தெரியும். இங்கரில் அவர்களும் நானும் குடியிருப்பதாகிய ஸம்பந்தம் தவிர வேறொரு விதமாகவும் அவர்களுக்கும் எனக்கும் ஸம்பந்தம் இல்லை. ஸமஸ்தானப் பிரஜையாகவும், அதன் க்ஷேமத்திற்குப் பாடுபடக் கடமைப்பட்டவனாகவும் உள்ள யாவரும் எப்படி அவர்களைக் கருதுகிறார்களோ, அதேமாதிரிதான் நானும் அவர்களைக் கருதுகிறேன். தனிமையான ஒருவிதப் பற்றும் எனக்குக் கிடையாது. இதைத் தெரிவிக்குவது இப்போது அவசியமாகத் தோன்றியதால் இதை எழுதலானேன்.

மேல் குறித்த வியாசத்தில் காணப்படும் சிற்சில குறிப்புகளை மறுபடி அழுத்தச் சொல்வது உசிதமென்று எனக்குத் தோன்றுகிறது.

(1) நமது அரசர் பட்டத்தை மாத்திரம் வைத்துக்கொண்டிருக்கிறார்களே தவிர, உண்மையிலிப்போது அரச பதவியானது காலியாகவே இருந்துவருகிறது. சமஸ்தான க்ஷேம நிதியில் பெருந் தொகையை அவருக்குக் கொடுத்ததன் அந்தரங்கம் அவர்கள் பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார் என்பதே தவிர வேறில்லை.

(2) இன்னும் சமஸ்தான அரச பதவிக்கு உரியவரை அதில் அமர்த்தாமல் காலங் கழிப்பது பெருங் கேடுகளுக்கு இடமாயிருக்கிறது. அராஜகம் என்பது எள்ளளவு மட்டிலும் நன்மையல்ல. அதை சீக்கிரம் நிவர்த்தி செய்துகொள்ள வேண்டும்.

(3) இப்பெரும் அவியவஸ்தையை ஒழிக்க முயல வேண்டியது ஜனங்களே தவிர, வேறு வழி கிடையாது. ஜனங்கள் இதற்காகத் தக்கபடி கவர்ன்மெண்டாரிடம் போராட வேண்டும்.

(4) சிட்னி மார்த்தாண்டனென்னும் ஆஸ்திரேலிய மாதின் மகன் வார்சுரிமை பாராட்டுவது பகற்கனவே தவிர வேறில்லை. அரசர் தாமே இவ்விதமணத்தினால் ஹிந்து ஜன சமூகத்தினின்றும் விலகி, அவர்கள் பிராயச்சித்தம்கூட செய்துகொள்ள மறுத்து, பதவியைக் காலி செய்திருக்க, அவரைவிட அதிக

உரிமை அப்பையனுக்கு இல்லை. மேலும், அரசர் பிராயச்சித்தம் செய்துகொண்டாலும், அப்பையன் ஹிந்து ஜாதிப் பொதுவில் சேர வழி கிடையாது. இதை மட்டில் சிறிது விரிவாகச் சொல்ல விரும்புகிறேன்.

இது விஷயத்தில் ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகள் இங்ஙனில்செய்த உபன்யாஸங்களின் ஸாராம்சத்தை இப்போது சம்பந்தமுள்ள மட்டில் எடுத்துரைக்கிறேன். நமது ஹிந்து மதமென்பது இரண்டு அம்சங்களுள்ளது. ஒன்று ஸகல தேசத்தாருக்கும், ஸகல ஜாதியாருக்கும் பொதுவாயுள்ளது. அது முக்கியமாய் மோக்ஷ லாபத்தைப் பற்றினது. அதில் ஜாதி பேதம் கிடையாது. நம் அறநூல்களில் இவை ஆத்ம குணங்கள் என்று கூறப்பட்டிருக்கின்றன. இது ஸாமான்ய தர்மம். மற்றொரு அம்சமானது ஜாதி வர்ணாசிரமப் பாதுகாப்பைப் பற்றியது. இது விசேஷ தர்மம் எனப்படும். இது அந்தத் தனி வர்ணத்தாருக்கும் ஆசிரமத்தாருக்கும் பிரத்தியேகமான கடமைகளைப் போதிக்கின்றது. இக்கடமைகள் அந்தந்தத் தனி வகுப்பினருக்கே தவிர, பொதுவல்ல. பிறர் இவ்வகுப்புகளுக்குள் ஒன்றில் சேரவேண்டுமானால், நிகழும் பிறவி முடிந்து, மறு பிறவியில் அவ்வகுப்பிலுள்ள ஒரு தாயின் வயிற்றில் ஜனிப்பதே வழி, வேறு வழியில்லை. வம்ச குணங்களையும், குல தர்மங்களையும் காப்பாற்றவே நம் மத ஆசாரங்கள் முக்கியமாய் அமைந்திருக்கின்றன. இந்த அஸ்திவாரத்தை அவமதித்து வரும் புதிய மதப் பிரிவுகளாகிய பிராம்ம ஸமாஜம் (வங்காளத்தில் உதித்தது), ஆரிய ஸமாஜம் (பஞ்சாபில் உண்டானது) இரண்டும் ஆங்காங்கு சொற்ப ஜனங்களை மட்டில் கவர்ந்து கொண்டு, மேல் அபிவிர்த்தி பெறுமல் குறுகி நிற்கின்றன. இதன் ஸாராம்சங்களை நம் சமஸ்தான ஜனங்கள் கவனிப்பார்களென நம்புகிறேன்.

இம்மத வியவஸ்தைகளை முற்றிலும் மாற்றிவிட வேண்டும் என்ற கொள்கையுள்ளவர், சிலரோ, பலரோ, நம் சமஸ்தானத்திலிருக்கலாம். ஆனால், இவர்களுக்கும் மற்றவர்களுக்குமுள்ள இவ்விவாதமானது முடிவடைவதற்கு இன்னும் பலவாண்டுகள் செல்லுமென்பது நிச்சயம். இதற்குள் மத ஸம்பிரதாயங்களை திடீரெனக் கைவிட்டு விட்டு, நமக்கும் முன்னேறுக்குமுள்ள தொடர்ச்சியைத் தெரித்துவிடத் துணிவோர் சிலரே என்று மதிக்கிறேன். மேலும், இவ்விவாதமானது அகில இந்திய ஹிந்துக்களுக்குள் நேரவேண்டியதே தவிர, பிற மதஸ்தர் இதில் ஒரு சார்பாக புகுந்து வேலை செய்ய அதிகாரமற்றிருக்கிறார்கள். இந்தியா கவர்ன்மெண்டார் இந்நீதியை நன்கு அறிவார்கள்.

முதன் முதலில் 1857-ம் ஆண்டில் ரணகளப்பள்ளியில் அதிகச் சம்பளம் கொடுத்து இப்பாடத்தைக் கற்றார்கள். ஆகையால் இந்து மத ஸம்பிரதாயங்களை நாமே வேணுமென்று சீர்குலைத்துக் கொண்டாலொழிய, கவர்ன்மெண்டார் அப்பழிக்கு ஆளாகமாட்டார்கள்.

இதனால் சிட்னி மார்த்தாண்டா இப்பிறவியில் ஹிந்துவல்ல, ஹிந்துவாகும் தகுதியுமற்றவர் என்பது உள்ளங்கை நெல்லிக்கனியே. வார்சு பாத்தியமானது ஹிந்து தர்மத்தைப் பொறுத்திருக்கிறது. இவ்விஷயங்களையும், மற்ற விஷயங்களையும் வாதிக்கும்படி கவர்ன்மெண்டாருக்கு ஒரு தூதுக் கூட்டம்—டேப்பியுட்டேஷன்—நியமிக்கவேண்டும். அதன் அங்கத்தினர் உத்தியோகப் பற்று, உத்தியோக ஆசை,—இரண்டு வித அழுக்குகளும் இல்லாத அறிஞர்களாகவும், குணவான்களாகவும் இருத்தல் வேண்டும். இந்த தூதுக்கு அகில இந்திய ஹிந்து ஸமாஜமானது நிச்சயமாய்த் துணை புரியும். மதத் தலைவர்களும், மற்றத் தலைவர்களும் இதற்குப் பலமான ஆதரவளிப்பார்கள் என்பதில் சந்தேகம் வேண்டாம். ஆகையால் முயற்சி மாத்திரம் தேவையாயிருக்கிறது.”

வார்சு பாத்திய விஷயமாக 1927-ம் வரு ஜூலை மீ 12-ம் வ லண்டனிலிருந்து ஓர் அறிக்கை வெளிவந்தது. அது பின்வருமாறு:—

“தமக்குப் பின் தம் பிள்ளை வார்ஸாக சமஸ்தானத்தைப் பெறவேண்டுமென்று புதுக்கோட்டை ராஜா ஒரு பாத்தியதையை யேற்படுத்தி யிருப்பதாக வெளியான செய்தியின் பேரில் அவரை “ஸன்டே நியூஸ்” பத்திரிகை பேட்டி கண்டு பேசியபொழுது, தாம் அவ்விதம் ஒரு பாத்தியதையையும் கோரவில்லையென்றும், அது விஷயத்தில் எந்த யோசனையையும் சமஸ்தான ஜனங்களே எடுத்துக் கூறவேண்டுமென்றும் சொன்னார்.”

இந்த அறிவிப்பைப்பற்றி முக்கியமான சென்னைப் பத்திரிகைகள் அடியிற்கண்ட குறிப்புகளை வெளியிட்டன:—

“ஹிந்து”

“தமக்குப் பின் தம் பிள்ளை வார்ஸாக சமஸ்தானத்தைப் பெறவேண்டுமென்று புதுக்கோட்டை ராஜா ஒரு பாத்தியதை யேற்படுத்தியிருப்பதாக வெளியான செய்தியின் பேரில் அவரை “ஸன்டே நியூஸ்” பத்திரிகை பேட்டிகண்டு பேசியபொழுது, தாம் அவ்விதம் ஒரு பாத்தியதையும் கோரவில்லையென்றும், “அது விஷயத்தில் எந்த யோசனையும் சமஸ்தான ஜனங்களே எடுத்துக் கூறவேண்டுமென்றும்” சொன்னதாக சாய்ட்டர் தந்தி

யிலிருந்து தெரியவருகிறது. இதிலிருந்து அரசர் இப்பிரச்னை முடிவு செய்யப்பட்டுவிட்டதாகக் கருதி, இப்பிரச்னையை மீண்டும் புனராலோசனை செய்யும்படி கேட்டுக்கொள்வதாய் அவர் உத்தேசித்ததே கிடையாதெனக் கூறியதாக ஏற்பட்டால், மகாராஜா அவர்களின் பிரஜைகளுக்கு, எங்கு இந்திய சமஸ்தானங்களில் பொதுவாய் வழங்கும் ஐதிகங்களுக்கும், பழக்க வழக்கங்களுக்கும் விரோதமாக வார்சு பாத்தியதை விஷயம் நிர்ணயிக்கப்படுமோ வென்ற கவலை இனி வேண்டியதில்லை. அதிகாரிகள் மாமூலான விதிகளுக்குப் புறம்பாக புதுக்கோட்டை சமஸ்தான விஷயமாய் பிரஸ்தாபிக்கப்பட்ட பிரச்னை போன்ற விஷயத்தில் நடந்துகொண்டால், இவ்விஷயம் சமஸ்தானப் பிரஜைகளுக்கு வெகு முக்கியமாதலின் அவர்கள் வியக்காமலிரார். அரசர் தம் மூடைய குமாரனின் வார்சு உரிமையைப்பற்றி பாத்யம் கொண்டாடாமலிருந்தது புகழத்தக்கது."

"சுதேசமித்திரன்"

"புதுக்கோட்டை ராஜா பதவிக்கு தமது குமாரனுடைய பாத்யங்களை வற்புறுத்தத் தாம் யோசிக்கவில்லையென்று புதுக்கோட்டை ராஜா ஒரு ப்ரிடிஷ் பத்திரிகையின் பிரதிநிதியிடம் சொன்னதாக ஒரு தந்தி சொல்லுகிறது. அந்தப் பிரச்னையை அவர் மறுபடி கிளப்பப்போகிறார் என்ற பிரஸ்தாபத்தால் கவலைப்பட்டுக்கொண்டிருந்த அந்த சமஸ்தான ஜனங்கள் இந்தச் செய்தியால் ஆறுதல் அடைவார்கள்."

"தமிழ் ஸ்வராஜ்யா"

"லண்டனிலிருக்கும் புதுக்கோட்டை மன்னரை ஒரு பத்திரிகை பிரதிநிதி பேட்டி கண்டபொழுது அச்சமஸ்தான மன்னர் பதவிக்குத் தம்முடைய குமாரனே வாரிசாக அங்கீகரிக்கப்பட வேண்டுமென தாம் எப்பொழுதும் சொன்னது கிடையாதென அவர் கூறினார். எனவே, அவர் ஒரு ஐரோப்பிய மாதை மணந்து பெற்ற குமாரர், பட்டத்திற்கு வந்துவிடுவாரோ எனக் கவலைகொண்ட சமஸ்தான மகாஜனங்கள் தங்கள் கவலையை யொழிக்கலாம். இம்மன்னர் மேலும், இத்தகைய யோசனை வருவதாயிருந்தால், சமஸ்தான மக்களிடமிருந்தே வரவேண்டுமென்று சொன்னாராம். வெகு காலமாக இருந்துவரும் அனுஷ்டானங்களையும், வழக்கங்களையும் மீறி இக்குமாரருக்குப் பட்டம் கட்டும் விஷயத்தில் இவர்கள் எவ்வளவு தீவிர உணர்ச்சி கொண்டிருக்கிறார்களென்பதை அவர் அறியார் போலும்."

ராஜாவின் அறிக்கையைப்பற்றி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி "ஸன்டே நியூஸ்" பத்திரிகைப் பிரதிநிதியிடம் வார்சு பாத்திய விஷயமாய் புதுக்கோட்டை அரசர் வெளியிட்டிருக்கும்

அபிப்பிராயத்தைப்பற்றி, புதுக்கோட்டை ஜனங்களின் 1920, 1926 இவ்விரண்டு வருஷங்களின் மகாநாடுகளிலும் தலைமை வகித்த ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் செய்தியொன்றில் அறிவிப்பதாவது:—

"புதுக்கோட்டை அரசர் தமது பிள்ளைக்கு வார்சு உரிமையளிக்க வேண்டுமென்று தாம் பாத்யம் கொண்டாடவில்லையென்ற சரியான நோக்கத்திற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். ஆனால், "இவ்விஷயத்தைப்பற்றி எந்த யோசனையையும் சமஸ்தான ஜனங்களே எடுத்துக் கூறவேண்டும்." என்று தாம் கூறியிருப்பது திகைப்பை உண்டாக்கக்கூடியதாய் இருக்கிறது. ஜனப் பிரதிநிதிகள் நிறைந்த இரண்டு பெரிய மகாநாடுகளின் மூலம் புதுக்கோட்டை சமஸ்தான ஜனங்கள் அரசர் புதல்வனுக்கு வார்சு பாத்யம் அளிக்கக் கூடாதென்று தீர்மானித்திருப்பதை அவர் அறிந்திருக்க வேண்டும். புதுக்கோட்டை சமஸ்தான ஜனங்கள் இத்தருணத்தை நழுவவிடாமல் ஹிந்து சட்டப்படிக்கும், சம்பிரதாயப்படிக்கும் ஒத்த ஒருவரை அரசராக ஏற்படுத்தவேண்டிய அவசியத்தை இந்தியா கவர்ன்மெண்டாருக்கு வற்புறுத்திச் சொல்வார்களென்று நம்புகிறேன்." (A. P. I.)

1927-ம் வரு ஜூலை மீ 22-ம் வ வெளிவந்த ஜனமித்திரன் பத்திரிகையிலும், "மகாராஜாவின் கூற்றும், இந்திய அரசாங்கத்தாரின் கடமையும்" என்ற ஓர் தலையங்கம் எழுதப்பட்டது. அதில், இன்னின்ன ஸந்தர்ப்பங்களில்தான் ரீஜென்டை நியமிப்பது வழக்கமென்றும், சமஸ்தானத்தின் வார்ஸ் பாத்யம் முடிவு செய்யப்படும் வரை தாத்காலியமாக இச்சமஸ்தானத்தில் ரீஜென்ட் ஆட்சியை இந்தியா கவர்ன்மெண்டாரவர்கள் ஏற்படுத்தியிருக்கலாமென்றும், ரீஜென்ட் ஸாகேப் அவர்களுக்கு நாளுக்கு நாள் வயது மூப்படைவதாலும், வெகு சிரமப்பட்டு வேலை பார்த்து வந்த அன்னருக்குப் பூர்ண ஓய்வு அவசியமாகுமென்றும், அடுத்த பாத்தியஸ்தரை இந்தியா கவர்ன்மெண்டார் கால தாமதமன்னியில் தேர்ந்தெடுத்து, அவருக்கு ராஜ்ஜியத்தின் பொறுப்பை யளித்து, தொண்டமான் மரபு ரீதி முறை காலம் செழித்தோங்குமாறு செய்ய வேண்டியது இந்தியா அரசாங்கத்தாரின் கடமையாகுமென்றும், புதிய ராஜீய மாறுதல்கள் ஏற்படும் வரையில், சமஸ்தான ஜனங்களும், அவர்களின் ஸந்ததியார்களும் குறை கூறுவண்ணம் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜென்ட் ஸாகேப் அவர்கள் சமஸ்தான ஆட்சி முறையைச் செவ்வனே நடத்திவரும் பொறுப்பு ரீஜென்ட் ஸாகேப் அவர்களையும், அவரது அமைச்சரையும் சார்ந்திருக்கிறதென்றும் எழுதப்பட்டிருந்தது. இவ்வாறு எழுதினது ரீஜென்ட்

ளாகேப் அவர்களுக்கு மனக்கொதிப்பை உண்டுபண்ணிற்று. அவர் ஆவேசத்துடன் அடக்குமுறைகளைக் கையாள ஆரம்பித்தனர்.

நீதிபதி ஸ்ரீமான் பத்மநாப சாஸ்திரிகள் ராஜா சம்பந்தமான உத்தியோக நியமனங்களில், ஸ்ரீமான் R. ஸ்ரீநிவாஸாச்சாரியார் அவர்கள் ஸ்டேட் வக்கீலாகவும், ஸ்ரீமான் P. கிருஷ்ணமூர்த்தி அய்யரவர்கள் பப்ளிக் பிராஸிகூடராகவும் நியமனம் செய்யப்பட்டார்கள்.

19-வது அத்தியாயம்.

அடக்குமுறையின் ஆரம்பமும், "ஜனமித்திரன்" ராஜத்துவேஷ வழக்கும்.

போலீஸ் சோதனை.

ஜனமித்திரன் காரியாலயமும், பத்திராதிபர் வீடும் 27—7—27உ காலையில் போலீஸாரால் திடீரென்று சோதனை போடப்பட்டன. பத்திரிகையில் வெளிவந்த சில கட்டுரைகளின் கையெழுத்துப் பிரதிகள் எடுத்துக்கொண்டு போகப்பட்டன. பத்திராதிபரின் பேரில் அரசாங்கத்தார் ஏதோ நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போவதாக பிரஸ்தாபிக்கப்பட்டது. மேற்படி போலீஸ் சோதனையைப்பற்றி ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் 1927-ம் வரு ஆகஸ்ட் மீ 1-ம் உ வெளிவந்த "ஹிந்து" பத்திரிகையில் பின் வருமாறு எழுதினர்:—

"நான் குற்றாலம் போயிருக்கும்பொழுதும், எனது சகோதரரும் 'ஜனமித்திரன்' பத்திராதிபருமான ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யரும் இவ்வூரிலில்லாத சமயத்தில் போலீசாரைக் கொண்டு எனது வீட்டையும் 'ஜனமித்திரன்' காரியாலயத்தையும் சோதனை போடச் செய்ததானது கொஞ்சமேனும் கௌரவமான காரியமாயில்லை. எல்லாவற்றையும்விட கேவலமானது எனது கட்சிக்காரர்களுடைய நம்பர் கட்டுகளும், சட்ட புஸ்தகங்களுமுள்ள என்னுடைய சொந்த பீரோக்களை சோதனை போட்டதேயாகும். போலீஸார் என் வீட்டில் ஒன்றும் கண்டுபிடிக்கவில்லை.

'ஜனமித்திரன்' கார்யாலயத்திலிருந்த சில கையெழுத்துப் பிரதிகளை அவர்கள் கைப்பற்றிச் சென்றார்கள். நான் பத்து வருஷ காலமாக பொதுஜன சேவை செய்து வந்திருக்கிறேன். அரசாங்கத்தார் என்னிடம் ஏதேனும் ரிகார்டுகள் இருப்பதாக எண்ணி அதைக் கொடுக்கும்படி கேட்டிருந்தால், நான் உடனே அதை அவர்களிடம் கொடுத்திருப்பேன். ஆனல் அவர்கள் நான் பொதுஜன சேவை செய்திருப்பதையும், வக்கீல் என்பதையும், சட்ட சபை முனிஸிபல் சபைகளில் அங்கத்தினராக இருந்து வருவதையும் கொஞ்சமும் கருதாமல் அவர்கள் என்னை அபசாரம் செய்தனர். ராஜீய பிரச்னைகள் விஷயமாய் நான் கொண்டுள்ள அபிப்பிராயங்கள் எல்லோருக்கும் நன்றாய்த் தெரிந்ததே. நான் ஒரு கார்யத்தையும் இரகசியமாய்ச் செய்யும் இயல்புடையவனல்லன். மகாராஜா அவர்கள் சமஸ்தானத்திற்கு வந்து அவருடைய கடமையைச் செலுத்தி ராஜ்யபாரம் செய்யவேண்டுமென்று நான் விரும்புகிறேன். அப்படிக்கில்லாமல் அவர் அயல் நாடுகளில்தான் இருப்பேனென்று பிடிவாதம் செய்தால், ஆறாவது மகாராட்டின் தீர்மானத்தின்படி அடுத்த கிரம வார்ஸை உடனே நிர்ணயம் செய்து, இப்பொழுதே அவருக்குத் தகுந்த ராஜாங்கப் பயிற்சியை அளித்து, அவர் ஏற்ற காலத்தில் தமது கடமையைச் சரிவரச் செலுத்தும் ஆற்றல் உள்ளவராக இருக்க வேண்டுமென்பதே எனது அபிப்பிராயம். சுதேசிய லக்ஷணத்தையும், சமஸ்தானத்தின் பாரம்பர்ய ஐதிகத்தையும் கருதி, இந்தியன் அல்லாதவும் ஹிந்து அல்லாதவுமான ஒருவருக்குப் பட்டமளிக்கப்படக்கூடாது. சமஸ்தானத்தின் எதிர்காலம் அந்தகாரத்தில் மூடப்பட்டிருக்கின்றது. சமஸ்தானத்தின் க்ஷேமத்தையும், ஜனங்களின் க்ஷேமத்தையும் உத்தேசித்து ஒரு ஸ்திரமான ஏற்பாடு செய்யவேண்டியது மெத்த அவசியமான கார்யமாகும். இது சம்பந்தமாக மேடைப் பிரஸங்கங்கள் மூலமாகவும், பத்திரிகைகள் மூலமாகவும் எனது அபிப்பிராயங்களைப் பலதரம் வெளியிட்டிருக்கிறேன். இவ்வபிப்பிராயங்களை இந்தியா கவர்ன்மெண்டாரிடமும் நான் தாழ்மையுடன் தெரியப்படுத்தியிருக்கிறேன். A அரசராயிருந்தாலென்ன, B அரசராயிருந்தாலென்ன, அதைப் பற்றி எனக்கு அக்கரையொன்றுமில்லை. ஆனல், எதுவும் கொள்கைப்படி செய்யவேண்டும். இத்தகைய அபிப்பிராயங்களில் 'ராஜத்துவேஷம்' அல்லது 'ராஜத்துரோகம்' இருப்பதாக ரீஜென்ஸி ஆட்சி கருதினல், அவ்விதம் கருதுவது தன்னைத்தானே நாகரிகம் படைத்த உலகத்தினர் எள்ளி நகையாடும் வண்ணம் தனது பேதமைத்தனத்தைக் காட்டிக்கொண்டதாகும்.

எனக்கு சமஸ்தானத்தின் சாசுவதமான க்ஷேமம் பெரிதே ஒழிய, தனிப்பட்ட எவர்களும்—அவர்கள் எவ்வளவு பெரியவர்

களாயிருந்தாலும்—பெரிதல்ல. எனக்கு சமஸ்தானத்தினிடத்தி லுள்ள அன்பு மற்ற எவரிடத்திலுமுள்ள அன்பைக்காட்டிலும் மேலானது. இவ்வன்பு குற்றமாயிருந்தால், அதற்காக நான் என்ன தண்டனையையும் அனுபவிக்கத் தயாராயிருக்கிறேன்."

1927-ம் வரு ஆகஸ்ட் மீ 22-ம் உ மாலை 4-20க்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் S. கணபதி அய்யர் ஜனமித்திரன் காரி யாலயத்துக்குச் சென்று, ஆசிரியர் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யருக்கு 124-A. பிரிவுப்படி ஓர் வாரண்டிருப்பதாய்க் கூறி அவரை அரெஸ்ட் செய்து, அடிஷனல் சீப் மாஜிஸ்ட்ரேட் முன் பாக ஆஜர் செய்தார். சுமார் 5-மணிக்கெல்லாம் மாஜிஸ்ட்ரேட், ஹியரிங் 25-ம்உ கடைபெறுமென்றும், அதுவரை அவர் ரிமாண்டு செய்யப்பட்டிருப்பதாகவும் கூறினார். எதிரியின் சார்பாக வக்கீல் ஸ்ரீமான் K. நாகராஜய்யர் B. A., B. L. அவர்கள் ஆஜராகி எதி ரியை ஜாமீனில் விடும்படி கேட்க, பிராஸிகூடருக்கு நோட்டீஸ் கொடுக்கப் போதிய சாவகாசமில்லை யென்று மாஜிஸ்டிரேட் கூறி விட்டார். ஆசிரியர் சென்ட்ரல் ஜெயிலுக்கு அழைத்துச் செல் லப்பட்டார்.

மறு நாள் ஸ்ரீமான் K. நாகராஜய்யர் அவர்கள் பப்ளிக் பிராஸிகூடருக்கு காலாகாலத்திலேயே ஜாமீன் விஷயமாகத் தகவல் கொடுத்தார். சுமார் 1-மணிக்கு மேல் மாஜிஸ்டிரேட் முன்பாக ஜாமீன் விஷயம் எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆளுக்கு 2,000 ரூபாயாக, 4,000 ரூபாய்க்கு இரண்டு பேர்கள் ஜாமீன் கொடுத்தால் எதிரியை ஜாமீனில் விடலாமென்று மாஜிஸ்டிரேட் உத்தரவு செய்ததின்பேரில், ஆசிரியர் சுமார் இரண்டு மணிக்கு ஜெயிலிலிருந்து அழைத்துவரப்பட்டு, ஸ்ரீமான்களான ஜவுளிக் கடை ஆறுமுகம் பிள்ளையும், K. பிச்சுவய்யர் அவர்களும் ஜாமீன் கொடுக்க, எதிரி (ஆசிரியர்) ஜாமீனில் விடப்பட்டார்.

ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யரிடம் அவரது சகோதரர்கள் கேஸை மேல் நடத்தாதபடி சமாதானத்துக்கு வழி செய்து கொள்வது நலமாயிருக்குமென்று கூறியும், அவர் ஸ்ரீமான் சுந்தரேசய்யரவர்கள் தன்னிடம் பொதுஜனத் தொண்டர்கள் (public workers) நிமிர்ந்து நில்லாமல் சமயத்தில் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதிலேயே பொதுஜன சேவை (public work) கெட்டுப் போகிறதென்று கூறியதாகவும், ஆதலால் தன் சம்பந்தப் பட்டமட்டில் அவ்விதமான வசைக்கு இடங்கொடுக்கப் போவ தில்லையென்றும் கூறிவிட்டார்.

மாஜிஸ்திரேட் கோர்ட்டில் விசாரணை

ஆகஸ்ட் மீ 25-ம்உ ஹியரிங் தினமானதால் ஏராளமான ஜனங்கள் அடிஷனல் சீப் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் குழுமியிருக்

தனர். மாலை 4-30 மணி வரையில் பப்ளிக் பிராஸிகூடர் ஆஜராக திலை அன்று தினம் கேஸ் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படவில்லை; 28-ம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. 28-ம்கு கேஸ் எடுத்துக்கொள்ளப்பட்டது. கோர்ட் கட்டடத்தின் உள் ளேயும் வெளியேயும் நூற்றுக் கணக்கான ஜனங்கள் கூடியிருந் தார்கள். எதிரிக்காக ஸ்ரீமான் K. நாகராஜய்யரும், அரசாங்கத் தரப்பில் பப்ளிக் பிராஸிகூட்டர் ஸ்ரீமான் P. கிருஷ்ணமூர்த்தி அய்யரும் ஆஜராஞர்கள். விசாரணை தொடர்ச்சியாக மூன்று நாட்கள் வரை நடந்தது. இரு தரப்பு வாதங்களையும் கேட்டு விட்டு மாஜிஸ்ட்ரேட் செப்டம்பர் மீ 1-ம் தேதி தீர்ப்புச் சொல்வ தாகக் கூறினர்.

எதிரி (ஆசிரியர்) அடியிற்கண்ட வாக்குமூலத்தை தாகல் செய்தார்:—

"1. நான் குற்றவாளியல்ல. நான் யாதொரு விதமான குற்றமும் செய்யவில்லை.

2. பிராசிகூஷன் சட்டப்படி நிலைநிற்கக்கூடியதல்ல.

3. பிராசிகூஷன் திரப்பு சாக்ஷியம் இந்தியன் பினல் கோடு 124—A பிரிவுப்படி யாதொரு குற்றத்தையும் ருசுப்பிக்கவில்லை. பிராஸிகூஷன் திரப்பில் ஆஜர் செய்யப்பட்டிருக்கிற வியாசங் கள் எனது ராஜவிசுவாஸத்தையும் நல்லெண்ணத்தையும் காண் பிப்பதுடன், வேறு விதமான அர்த்தத்தைக் கல்பனை செய்ய அவ்வியாசங்களில் இடமில்லை.

4. நான் மகாராஜா அவர்களுக்கும், சமஸ்தானத்திற்கும் உண்மை ராஜ விசுவாசத்துடனும், பக்தியுடனும் உழைத்திருக் கும் ஒரு கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் இத் தகைய கண்யமான ஐதிகத்தை நிலைநிறுத்த எப்பொழுதும் முயற் சித்திருப்பதுடன், ராஜத் துரோகம் என்று சொல்லக்கூடிய யாதொரு விதமான கார்யத்தையும் பேச்சிலோ அல்லது கிரியாம் சையிலோ செய்ய நான் யத்தனித்ததில்லை.

5. நான் இதுவரை எழுதியிருப்பவைகளில் ஒன்றிலேனும் யாதொரு விதமான ராஜத்துரோகமுமில்லை. நான் எதை எழு திய போதிலும், அல்லது பிரசுரித்தபோலும், அதை எனது தேசத்தின் நன்மையை உத்தேசித்தே அவ்விதம் செய்துள் ளேன். அரசாங்கத்தாரிடத்தில் நான் மரியாதைக் குறைவாக வோ, அல்லது மதிப்புக் குறைவாகவோ நடந்து கொள்ளவில்லை. நேர்மையான முறையில், சட்ட வரம்புக்குட்பட்டு நான் குற்றங் குறைகளை எடுத்துக் கூறியுள்ளேன்."

1-9-27-ல் மாலை 3-மணிக்கு மாஜிஸ்திரேட் அவர்கள் எதிரியின் மீது 124-A பிரிவுப்படி குற்றப் பத்திரிகை படித்தார். கமிட்டல் ஆர்டரின் இறுதியில் அவர் பின் வருமாறு கூறினர்:—

"எதிரியின் பேரில் இந்தியன் பினல் கோடு 124—A பிரிவுப்படி குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறது. புதுக்கோட்டை சமஸ்தானத்தில் 124—A பிரிவுப்படி இதுதான் முதல் கேஸானபடியாலும், இது ஒரு முக்கியமான கேஸானபடியாலும் என்னைக் காட்டிலும் மேலான ஒரு நீதிபதியால் இந்தக் கேஸ் நடத்தப்படுவதுதான் சிலாக்கியமென்று தோன்றுகிறது.

ஆகையால் எதிரி இந்தியன் பினல் கோடு 124—A பிரிவு குற்றத்திற்காக செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று நான் ஆஞ்ஞாபிக்கிறேன்."

எதிரி குற்றஞ் சாட்டப்பட்ட மூன்று இனங்கள் பின்வருவனவாகும்:—

Count No. I

"மகாராஜா அவர்கள் வெகு நல்லவர் எனப் பலர் புகழ்கின்றார்கள். ஆனால் நீங்கள் காரியத்தைக் கொண்டுதான் நிதானிக்க வேண்டும். மகாராஜா அவர்கள் திரும்பி வந்து விடுவாரென்றும், 20 லக்ஷத்தைத் திருப்பிக் கொடுத்து விடுவாரென்றும் வக்காலத்து வாங்கிப் பேசுகின்றனர். மகாராஜா அவர்கள் மகாஜனங்களுக்கு அவ்விதம் மனுச் செய்து கொள்ளட்டும். மகாராஜா அவர்கள் மாதம் ஒன்றுக்கு 15,000 ரூ போல் பெற்றுக் கொண்டு தமது கடமையைச் செய்யாமல் வாளாயிருப்பதைக் கண்டிக்க வேண்டியதை விட்டுவிட்டு, அவரது கடமையைச் செய்வதற்கு லஞ்சம் கொடுப்பதுபோல் மேல்கொண்டு காரியங்களைச் செய்ய வேண்டுமெனக் கேட்பது என்ன நியாயம்? யாருடைய ராஜ்யம் இது? ராஜ்யத்தை இன்னாருக்குக் கொடு என்று சொல்பவர் யார்? ராஜ்யம் நம்முடையது. நிரமமான வார்சுக்கு ராஜ்யத்தை அளிக்கும்படி கேட்கும் உரிமை நம் கையில் இருக்கின்றது. ராஜ்யம் பாழாயிருக்கின்றது. ஏழை மக்களின் இரத்தக் கண்ணீர் ஓடுகின்றது. எங்கு பார்த்தாலும் பஞ்சம். ஜனங்கள் வயிற்றுப் பிழைப்புக்கு நாட்டை விட்டு வெளியேறுகின்றனர். எங்கு பார்த்தாலும் க்ஷாமம். கைத்தொழில்கள் கிடையாது. எத்தனை நாள் இவ்விதம் ஜனங்கள் அவஸ்தைப்படுவர்?"

Count No. II

"முதலாவதாக மகாராஜா அவர்கள் ஹிந்து சட்டத்துக்கு விரோதமாக மணம் புரிந்திருந்திப்பதால் ஹிந்து சட்டம் மகாராஜா அவர்களுக்கு அன்வயிக்காது. அதாவது ஹிந்து என்ற

பதத்தின் உண்மைக் கருத்தின்படி மகாராஜா அவர்கள் ஹிந்து வல்ல. ஆதலால் ஹிந்துக்கள் சட்டமும் ஹிந்து சாஸ்திரங்களும் மகாராஜா அவர்களுக்கு அன்வயிக்கமாட்டா. ஹிந்து சட்டப்படி ஒரு ஹிந்துவானவன் தன் சொந்த மதத்தை விட்டு ஆர்ய ஜாதி அல்லாதவோ அல்லது மிலேச்ச ஜாதியோ அல்லது தன் சொந்த மதத்தை விட்டு விலகின ஸ்திரீயையோ மணம் புரிந்தால், அவன் பதிதனாகிறான். சாதாரணமாக அத்தகைய பதி தன் தான் செய்த பாவ காரியத்தைப் பாபமென்றுணர்ந்து அதற்கேற்பட்ட பிராயச்சித்தத்தைச் செய்தால் மீண்டும் ஹிந்துவாக மாறலாம். ஆதலின் நமது மகாராஜாவும் ஹிந்துவாக மாற வேண்டுமென்றால் இவ்வித பிராயச்சித்தத்தைச் செய்ய வேண்டுமென்றாகிறது. அதனால் ஒருவர் அவ்விதம் ஹிந்துவாக மாறிய போதிலும், பதிதனாயிருந்தபோது அன்வயித்த சட்டங்களே பிறகும் அன்வயிக்கும். நமது அரசர் சம்பந்தப்பட்டமட்டில் அன்னார் நீண்ட காலம் அன்னிய நாடுகளிலேயே வசித்து வருகிறபடியாலும், தம்முடைய விவாகத்தினாலும் மீண்டும் ஹிந்துவாக மாறக்கூடிய நிலைமையில் இல்லாமலிருக்கிறார்.

"மகாராஜா அவர்களே ஹிந்துவில்லை என்றால் .....

* * *

நமது அரசர் இத்தகைய அனுமதியைப் பெறுமலும், சமஸ்தானத்தின் எதிர்கால க்ஷேமத்தையும் சமஸ்தான மக்களின் நன்மையையும் கருதாமலும் மணஞ் செய்துகொண்டதன் மூலம் ஒரு சிக்கலான நிலைமையை உண்டுபண்ணி விட்டார்.

* * *

சமஸ்தான அரசரோ தமக்கு தம்முடைய பிள்ளையினிடத்தில் இருக்கும் அன்பின் மேலீட்டால் சமஸ்தானத்தின் சாசுவதமான எதிர்கால க்ஷேமத்தை கவனிக்கக்கூடியவரல்ல.

* * *

ஆனால் மேலே ஏழாவதாகக் கூறப்பட்டிருக்கும் காரணத்தினால் அரசருக்கு வேண்டுகோளை விடுப்பதில் யாதொரு பயனுமில்லை. ஏனெனில் நமது மன்னருக்கு சமஸ்தானத்தின் மீதும், சமஸ்தான மக்களிடத்திலும் அன்பிருந்தால், மன்னரால் பஞ்ச நிவாரண நிதி என சேமித்து வைக்கப்பட்டிருந்த பணத்திலிருந்து 20 லக்ஷம் ரூபாய்களைப் பெற்றுக்கொள்வாரா எனக் கேட்கிறோம். பிரான்ஸ் தேசத்தில் ஒரு பத்திரிகை நமது மன்னரின் மணத்தைப்பற்றி எழுதுகையில் பின்வருமாறு எழுதியிருந்ததாய்க் கூறுவதுண்டு. "ஒரு மன்னர் ஒரு தராசின் தட்டில் ஒரு ஸ்திரீயையும், மற்றொரு தட்டில் ராஜ்யத்தையும் வைத்து நிறுத்துப்

பார்த்ததில் ஸ்திரீ இருந்த தட்டு கீழ் இறங்கவே, ஸ்திரீயை மணம் புரிந்து ராஜ்யத்தை திரஸ்கரித்தார்." இது உண்மையா யின் நமது மன்னர் மணம் செய்துகொள்ளும்பொழுது இப் பொழுது ஏற்பட்டிருக்கும் சிக்கலான பிரச்னையை எதிர்பார்த்துத் தானிருக்கவேண்டும். ஆதலின் இப்பொழுது புனராலோசனை செய்யும்படி கவர்ன்மெண்டாரைக் கேட்பது பலிச்ச மட்டிலும் பார்க்கலாமென்ற எண்ணத்துடன் வேலை செய்வதாகவே தெரிய வருகிறது. இத்தனை காலம் நாம் பொறுத்தோம். இனி சிறிது காலம் வரை பொறுத்துப் பார்ப்போம். பொறுத்தோர் பூமி யாள்வார். இந்தியா கவர்ன்மெண்டார் நாம் பொறுமையை இழக்கு முன்னர் ஒரு முடிவிற்கு வருமாறு வேண்டுகிறோம்."

Count No. III

"அரசாங்கத்தார் முடிவு செய்த பின்னர் அரசர் தாம் பிரயத்தனம் செய்யவில்லையென்று கூறுவதே யுக்தமெனத் தோன்றி இவ்விதம் கூறியிருக்கலாம்.

* * *

ரீஜெண்டு என்றால் யாருக்கு ரீஜெண்டு? பொதுவாய் அரசர் மைனராகவோ அல்லது சித்தப் பிரமை கொண்டவராகவோ இருந்தால்தான் ரீஜெண்டை நியமிப்பது வழக்கம். ஆனால் நமது சமஸ்தானத்தில்தான் முதல்முதலாக வழக்கத்துக்கு விரோதமாக இந்தியா அரசாங்கத்தார் ஒரு ரீஜெண்டை நியமித்தனர். ஒருக்கால் வாரிசுரிமைப் பிரச்னை முடிவு செய்யப்படும் வரை தாத்காலிய மாய் இந்த நூதன ரீஜெண்டு ஆட்சியை இந்தியா அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்கலாம். நிரந்தரமாய் ரீஜெண்டே சமஸ்தானத்தை ஆட்சி புரிவதென்று இந்தியா அரசாங்கத்தார் ஏற்பாடு செய்திருக்க மாட்டார்கள். மேலும் மகாராஜா அவர்களாலேயே ஆட்சிபுரிய முடியவில்லையென்றால், அன்னாரின் மூத்த சகோதரரான ரீஜெண்டு சாகேப் அவர்களுக்கு எவ்விதம் அரசாட்சி புரிய முடியும்? ரீஜெண்டு சாகேப் அவர்களுக்கு நாளுக்கு நாள் மூப்பாகவில்லையோ? இத்தனை வருஷங்கள் வெகு சிரமப்பட்டு ஆட்சி புரிந்த ரீஜெண்டு சாகேப் அவர்களுக்கு பூரண ஓய்வு அவசியமே யாகும்.

* * *

அரசாங்கத்தார் அன்னவரை யுவராஜாவாகவோ அல்லது மகாராஜாவாகவோ நியமனம் செய்துவிட்டால் ஜனங்கள் தங்களே தங்களது அனுபவத்தில் அவரது ஆற்றலையும், பெருந்தன்மையையும், அறிவு விசாலத்தையும் தெரிந்துகொள்வர்."

* * *

செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை

செஷன்ஸ் கோர்ட்டில் விசாரணை 15—10—27ல் எடுத்துக் கொள்ளப்பட்டது. அன்று காலை 11-மணிக்கு முன்னதாகவே செஷன்ஸ் நீதிஸ்தலத்தில் ஏராளமான ஜனங்கள் நிரம்பிவிட்டனர். அநேக வக்கீல்கள் உட்காரக்கூட இடமின்றி பூராக் காலமும் நின்று கொண்டிருந்தனர். போலீஸ் பந்தோபஸ்தும் செய்யப்பட்டிருந்தது. நீதிபதி சரியாக 11-5 மணிக்கு வந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார். அரசாங்கத்தார் தரப்பில் ஸ்பெஷலாக நியமனஞ் செய்யப்பட்ட ஸ்ரீமான் K. S. கணபதி அய்யரவர்களும், எதிரிக்காக சென்னை ஸ்ரீமான் K. பாஷ்யம் அவர்களும் ஆஜரானார்கள். ஸ்ரீமான் பாஷ்யத்துக்கு ஸ்ரீமான் K. நாகராஜய்யரவர்கள் உதவி புரிந்தார். ஸ்ரீமான்களான P. சிவராமய்யர் (திருமயம்), S. R. ராமச்சந்திர சேர்வைகாரர் M. L. C. (பேராம்பூர்), ராமன் செட்டியார் (குழிபிறை), முத்துப்பழனியம்பலம் (கோவனூர்), ஆகிய நால்வரும் இக்கேஸுக்கு அஸெஸர்களாக நியமிக்கப்பட்டார்கள். ஆரம்பத்தில் குமாஸ்தா நீதிபதியின் உத்திரவுப்படி எதிரியின் பேரில் குற்றச்சாட்டு படித்தார். நீதிபதி எதிரியைப் பார்த்து குற்றவாளியா இல்லையா என்று கேட்டதற்கு, எதிரி தாம் குற்றவாளியில்லையென்று கூறினார். பிறகு விசாரணை நடத்தப்பட்டது. விசாரணை முடிவில் எதிரி தரப்பு வக்கீல் கூறியதாவது:— "அரசாங்கத் தரப்பு வக்கீலால் எவைகள் குற்றமான வாக்யங்கள் என்று கூறப்பட்டனவோ அவைகளில் யாதொரு விதமான குற்றமுமில்லை. எதிரி எழுதியிருப்பவைகள் பச்சாத்தாபத்துடனும் அன்புடனும் கூறிய மொழிகளேயாகும். அரசாங்க தஸ்தவேஜிகளில் அரசாங்கதிவான், ஸ்டேட் சூபரின்டெண்டுகள், அரசர் முதலியவர்கள் கூறியுள்ள விஷயங்களைத்தான் எதிரி வெளியிட்டுள்ளார். அரசர், ஸீஜெண்ட், அரசாங்கத்தார் எவர்கள் பேரிலும் எதிரி குற்றமாக எழுதவில்லை. எல்லா விஷயங்களையும் கவனித்து ஒரு முடிவுக்கு வரும்படி ஏற்பட்டால், அம்முடிவு எதிரி குற்றவாளியல்ல என்பதேயாகும்."

நீதிபதி அஸெஸர்களுக்கு உபய தரப்பு வாதங்களையும் விரிவாய் எடுத்துக் கூறி, முடிவில் அஸெஸர்கள் ஒவ்வொருவரையும் "எதிரி குற்றவாளியா இல்லையா?" என்று கேட்டார். அஸெஸர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியே மூன்று குற்றத்திலும் எதிரி குற்றவாளியல்லவென்று கூறினர். தீர்ப்பு 22-ம்தேதி கூறப்படுமென்று நீதிபதி தெரிவித்தனர்.

அக்டோபர் மீ 22-ம்தேதி சனிக்கிழமையை பொதுஜனங்கள் வெகு ஆவலையுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அன்று

தினம் "ஜனமித்திரன்" வழக்கின் முடிவைத் தெரிந்துகொள்ள ஏராளமான ஜனங்கள் கோர்ட்டுக்கு உள்ளேயும் வெளியிலும் கூடியிருந்தனர். போலீஸ் பந்தோபஸ்துகள் செய்யப்பட்டிருந்த துடன் விசேஷமாகப் போலீஸார் வந்திலிருந்தே, நீதிபதி தண் டனை கொடுத்து விடுவாரென்று ஜனங்கள் பலவாறு பேசிக்கொண் டார்கள். சரியாக 11-மணிக்கு ஆசனத்திலமர்ந்து இவ்வழக்கில் எழுதியிருந்த தமது தீர்ப்பைப் படித்தார். அது சுமார் 25-பக்கங்களுக்கு மேல் கையால் எழுதப்பட்டிருந்தது. வாசித்து முடிக்க சுமார் ஒரு மணி நேரமாயிற்று. நீதிபதி தமது தீர்ப்பில் மேற்படி மூன்று குற்றங்களின் சம்பந்தமாய் இரு தரப்பி லும் கூறப்பட்ட வாதங்கள், சாக்ஷியங்கள், ஆதாரங்கள் இவை களைப் பரிசீலனை செய்து விட்டு, முடிவில் மூன்று குற்றங்களில், மூன்றாவது குற்றத்தைத் தள்ளிவிட்டு, முதல் இரண்டு குற்றங் களையும் எதிரி செய்திருப்பதாகத் தாம் நம்புவதாயும், அஸெஸர் களின் அபிப்பிராயத்தைத் தாம் அங்கீகரிக்க முடியவில்லையென் றும், சமஸ்தானத்தின் கௌரவம், அமைதி, நீதி ஒழுங்கு இவை கள் காப்பாற்றப்பட வேண்டியது அவசியமென்றும், ஆகிய இத் தியாதி காரியங்களை யெல்லாம் மனதிற் கொண்டு, முதல் இரண்டு குற்றங்களுக்கும் குற்றம் ஒன்றுக்கு 6-மீ கடுங்காவலும் ரூ 100 அபராதமும், அபராதம் செலுத்தத் தவறினால் மேற்கொண்டு இரண்டு குற்றங்களுக்கும் இரண்டு மாத கடுங்காவலென்றும் சிக்ஷை விதித்து, காவல் சிக்ஷையை தொடர்ச்சியாக அனுபவிக்க வேண்டுமென்றும் தீர்ப்புக் கூறினர். ஆகவே எதிரிக்கு ஒரு வருஷ கடுங்காவலும், 200 ரூ அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதம் செலுத்தப்படாத பக்ஷத்தில் உபரியாக இரண்டு மாத தண்டனையும் அனுபவிக்க வேண்டுமென்றும் ஏற்பட்டது. நீதி பதி தீர்ப்பைச் சரியாக 12-10 மணிக்குக் கூறினர். எதிரி இடை யில் கதர் வேஷ்டியையும், சாதாரண சட்டையையும், தலையில் காந்தி குல்லாவையும் அணிந்து கொண்டிருந்தார். தீர்ப்புக் கூறி முடிந்தவுடன் எதிரி (பத்திராதிபர்) நீதிபதிக்கு வந்தனத்தைத் தெரிவித்தார். ஒரு போலீஸ் ஸப் இன்ஸ்பெக்டர், மூன்று கான்ஸ்டேபிள்கள்—அவர்களுள் இருவர் துப்பாக்கி சகிதமும், மற்றொருவர் கையில் விலங்குப் பூட்டு வகையரா சகிதமும் எதி ரியை பந்தோபஸ்து செய்துவர, கீழ ராஜவீதி, கடை வீதி, இவைகளின் வழியாய் அவர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத் துச் செல்லப்பட்டார். ஏராளமான கூட்டம் பின் தொடர்ந்து வந்தது. பிறகு போலீஸ் ஸ்டேஷனில் 10-நிமிஷ நேரம் வைத் துக்கொண்டிருந்துவிட்டு ஸெண்ட்ரல் ஜெயிலுக்கு எதிரி அழைத்துச் செல்லப்பட்டார். ஜெயிலுக்கு ஸப் இன்ஸ்பெக்டர் ஆறுமுகம் பிள்ளை மணி 1-5க்கு ஜெயில் வாரண்டுடன் வந்து

சேர்ந்தார். மொத்தத்தில் ஆசிரியர் 12-10 முதல் 1-5 வரை, அதாவது சுமார் ஒரு மணி நேரம் ஜெயில் வாரண்டில்லாமலே குறுக்குப் பாதையை விடுத்து, கடைவீதி வழியாக ஆடம்பரங்களுடன் அழைத்துச் செல்லப்பட்டார். சுமார் 1500 ஜனங்கள் வரை ஆசிரியருடன் ஜெயில் வரை சென்றனர். 1-மணிக்கெல்லாம் எதிரியின் சார்பாக வக்கீல் ஸ்ரீமான் K. நாகராஜய்யரவர்கள் அப்பீல் கோர்ட்டில் ஜாமீனில் விடும்படி மனுக் கொடுத்து, செஷன்ஸ் கோர்ட்டில் எதிரி தண்டிக்கப்பட்டிருப்பதாயும், அப்பீல் செய்து கொள்ள விரும்புவதாகவும், அதை உத்தேசித்து எதிரியை ஜாமீனில் விட அனுமதிக்க வேண்டுமென்றும் கூறினார். அரசாங்கத் தரப்பு வக்கீல் இதை ஆக்ஷேபித்து, எதிரியை ஜாமீனில் விட அனுமதிக்கக் கூடாதென்றும், கீழ்க் கோர்ட்டில் தண்டனை அடைந்திருக்கிறார் என்றும், எதிரி மீண்டும் இம்மாதிரியான குற்றத்தைச் செய்யாமலிருப்பாரா வென்பது சந்தேகமென்றும் கூறினர். அப்பீல் நீதிபதிகள் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு விட்டு, முடிவில் எதிரியை ஜாமீனில் விடுதலை செய்யும்படி உத்திரவு செய்தார்கள். ஆசிரியரும் ஜாமீனின் பேரில் விடுதலை செய்யப்பட்டார்.

அப்பீல் கோர்ட்டில் விசாரணை

நவம்பர் மீ 6-ம் அப்பீல் கோர்ட்டில் அப்பீல் மனு தாகல் செய்யப்பட்டது. செஷன்ஸ் நீதிபதியின் தீர்ப்பை ஆக்ஷேபித்து 43-பிரிவுகள் கொண்ட ஆதாரங்கள் மனுவில் சொல்லப்பட்டிருந்தன. டிை மனு அப்பீல் நீதிபதிகளுக்கு முன்பாக 20-ம் உயன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அப்பீல் பிராதி தரப்பில் சென்னை ஸ்ரீமான் K. பாஷ்யமும், ஸ்ரீமான் K. நாகராஜய்யரவர்களும், அரசாங்கத்தாருக்கு ஸ்பெஷலாக நியமிக்கப்பட்ட திருச்சி ஸ்ரீமான் K. S. கணபதி அய்யரவர்களும் ஆஜராஞர்கள். கோர்ட்டில் மகாஜனங்கள் ராளமாகக் கூடியிருந்தார்கள். சரியாக 11-20க்கெல்லாம் கேஸ் ஆரம்பமாயிற்று. அப்பீல் பிராதி தரப்பில் செஷன்ஸ் நீதிபதி கூறிய தீர்ப்பை ஆக்ஷேபித்து பல ஆதாரங்களுடன் பேசப்பட்டது. ஸ்ரீமான் K. பாஷ்யம் முதலில் காலை 11-20 முதல் 2-30 மணி வரையிலும், பிறகு 3 மணி முதல் 4 மணி வரையிலும் பேசினர். 4-மணிக்கு மேல் 5-மணி வரை அரசாங்கத் தரப்பு ஸ்பெஷல் வக்கீல் வாதம் செய்தார். மீண்டும் 21-ம் உயன்று இவ்வழக்கு 11-மணிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அரசாங்கத் தரப்பு வக்கீல் மீண்டும் தமது வாதங்களை 1-மணி வரை எடுத்துப் பேசினர். அதன் பேரில் ஸ்ரீமான் K. நாகராஜய்யரவர்கள் அரசாங்கத் தரப்பில் கூறப்பட்ட ஆக்ஷேபணைகளுக்குத்

தகுந்த சமாதானங்களை எடுத்துக் கூறினர். கனம் நீதிபதிகளிருவரும் இடையிடையே இரு தரப்பிலும் வாதம் புரிந்த வக்கீல்களையும் முக்கியமான பாகங்களை எடுத்துக்கூறி வாதிக்கையில் குறுக்குக் கேள்விகள் கேட்டார்கள். முதல் நாள் அப்பீல் பிராதியின் சார்பாக ஆஜரான வக்கீல், நீதிபதிகள் கேட்ட பல சிக்கலான கேள்விகளுக்குத் தகுந்த சமாதானங்கள் கூறினது குறிப்பிடத்தக்கது. இரண்டாவது நாளன்றும் ஸ்ரீமான் K. நாகராஜய்யரவர்கள் வாதித்தபொழுதும் நீதிபதிகள் பல குறுக்குக் கேள்விகள் கேட்டதற்கும் தகுந்த சமாதானம் கூறப்பட்டது. 26-ம்வ தீர்ப்புக் கூறப்படுமென்று அறிவிக்கப்பட்டது.

26-ம்வயன்று 'ஜனமித்திரன்' வழக்கில் தீர்ப்புக் கூறப்படுமென்று அறிவித்திருந்தபடியால், காலை 10-மணி முதல் கோர்ட்டில் கூட்டம் கூட ஆரம்பித்துவிட்டது. நேரம் ஆக ஆகக் கூட்டம் அதிகரித்துக்கொண்டிருந்தது. எப்பொழுதும் நீதிபதிகள் 11-மணிக்கு வருவார்கள்; அன்று தினம் அப்பீல் நீதிபதிகளில் ஒருவர் 1-30-மணிக்கும், மற்றொருவர் 2-மணிக்கும் வந்தனர். ஜனங்கள் சாப்பிடக்கூடப் போகாமல் காத்துக்கொண்டிருந்தார்கள்; வெளியூர்களிலிருந்தும் அநேகர் அப்பீல் முடிவைத் தெரிந்துகொள்ள ஆவலுடன் வந்திருந்தார்கள். நீதிபதிகள் கோர்ட் ஹாலுக்கு 3-மணிக்கு வந்தார்கள். கோர்ட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் எள்ளிட இடமின்றி கூட்டம் நிறைந்திருந்தது. பிரதம நீதிபதி சரியாக 3-5 மணிக்கு தமது தீர்ப்பை ஆங்கிலத்தில் படிக்க ஆரம்பித்தார். ஆரம்பத்திலேயே அப்பீலைத் தள்ளுபடி செய்து தண்டனையை ஊர்ஜிதம் செய்வதாகக் கூறிவிட்டு, தமது தீர்ப்பில் முக்கியமான பல பாகங்களைப் படித்தார். இவருக்கு அரை மணி நேரம் பிடித்தது. பிறகு ஸ்ரீமான் முதலியார் அவர்களும் தமது தீர்ப்பைத் தனியே படித்தார். இவருக்கும் அரை மணி நேரம் பிடித்தது. இருவர்களின் தீர்ப்பும் படித்து முடிய 4-10 மணி வரையாகிவிட்டது. இரு நீதிபதிகளும் முடிவில் அப்பீலைத் தள்ளுபடி செய்து, கீழ்க் கோர்ட்டின் தண்டனையை ஊர்ஜிதம் செய்வதாகக் கூறியதின்பேரில், போலீஸார் கோர்ட்டாரின் வாரண்டைப் பெற்று, ஆசிரியரை 4-45 மணிக்கு அழைத்துச் சென்றார்கள். ஏராளமான கூட்டம் பின் தொடர்ந்து ஜெயில் வரை சென்றுவிட்டு வெகு நேரம் கழித்துத் திரும்பியது.

ஜனமித்திரன் ராஜத்துவேஷ வழக்கின் முடிவைப்பற்றியும், சமஸ்தானத்தின் நீதி பரிபாலன முறையைப்பற்றியும் பற்பல பத்திரிகைகள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டன.

'ஜனமித்திரன்' பாதுகாப்பு நிதி-என்று இவ்வழக்கு சம்பந்தமாக திரவிய ஸகாயம் செய்யும்படி ஜனமித்திரன் நேயர்களுக்கு ஓர் விக்ஞாபனம் செய்யப்பட்டிருந்தது. அதன்படி சமஸ்தானத்திலிருந்தும், சமஸ்தானத்துக்கு வெளியே யிருந்தும், F. M. S. முதலிய இடங்களிலிருந்தும் நண்பர்கள் ரூ 1083—8—3 வரை தொகைகளைச் சேர்த்தனுப்பினர். இது அவர்களின் தேசாபிமானத்திற்கும் கல்லுணர்ச்சிக்கும் சான்றாகும்.

20-வது அத்தியாயம்.

மகாத்மாவின் புதுக்கோட்டை விஜயமும் மற்ற விஷயங்களும்.

1927-ம் வரு செப்டம்பர் மீ 21-ம் உ சமஸ்தான சரித்திரத்தில் என்றும் மறக்கவொண்ணாத ஓர் விசேஷமான சுதின மாகும். ஏனெனில், அன்றுதான் மகாத்மா காந்தியடிகள் சமஸ்தானத்திற்கு விஜயம் செய்தனர். அன்னார் விஜயத்தின் விபரம் பின்வருமாறு:—

மகாத்மா காந்தியடிகள் 21-ம் உ புதன்கிழமை மாலை 4-மணிக்கு திருச்சியிலிருந்து தலைகருக்கு ஸ்ரீமதி கஸ்தூரிபாய், திரு. ராஜகோபாலாச்சாரியார், மகாதேவ் தேசாய், ராமனுதன், தேவதாஸ் காந்தி, டாக்டர் ராஜன் முதலியவர்களுடன் விஜயம் செய்தார். மகாத்மா காந்தியடிகள் நேராக சா. அ. பங்களாவிற்கு அழைத்துச் செல்லப்பட்டார். சா. அ. பங்களாவைச் சுற்றி 2000 ஜனங்கள் வரை அடிகளைத் தரிசிக்கும்பொருட்டுக் குழுமியிருந்தனர். அடிகளும் ஜனத்திரளுக்கு தரிசனம் கொடுத்து, எல்லோரையும் அமைதியாய் டவுன் ஹாலுக்குச் செல்லும்படி கேட்டுக்கொண்டார். டவுன் ஹாலில் சுமார் 7000 ஜனங்கள் வரை குழுமியிருந்தனர். புதுக்கோட்டை சமஸ்தானத்திலேயே அதுவரை எப்பொழுதும் அம்மாதிரியான ஜனத்திரள் ஒரே காலத்தில் கூடியிருந்ததில்லையென நிச்சயமாய்ச் சொல்லலாம். மகாத்மா அவர்களின் தரிசனம் எல்லோருக்கும் கிடைக்கும்படியாய் ஒரு உயர்ந்த மேடை டவுன் ஹாலில் பிரத்தியேகமாக அமைக்கப்பட்டிருந்தது. சுமார் 5-45க் கெல்லாம் திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் டவுன் ஹாலுக்கு வந்து, ஜனங்கள்

எல்லோரையும் அமைதியுடன் இருக்கும்படி வேண்டினர். 6-மணிக்கெல்லாம் காந்தியடிகள் கூட்டத்திற்கு விஜயம் செய்தார். ஜனங்கள் எல்லோரும் இருந்தவிடத்திலேயே கைகூப்பி மகாத்மாவுக்குத் தங்களது வணக்கத்தைத் தெரிவித்தனர். உபசரணைக் கமிட்டி அக்ராஸனர் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் ரூ. 1001 கொண்ட பண முடிப்பையும், ஜனங்களின் சார்பாக ஓர் உபசாரப் பத்திரத்தையும் காந்தியடிகளிடம் ஸமர்ப்பித்தார். வரவேற்புப் பத்திரம் அடியில்கண்டவாறு:—

"அன்பார்ந்த மகாத்மா அவர்களே!

"இச்சமஸ்தான ஜனங்களின் சார்பாக மிருந்த வணக்கத்துடனும், பக்தியுடனும் தங்களுக்கு நல்வரவு கூறுகின்றோம். எங்களுக்கிருக்கும் உரிமையால் இந்த பாக்கியம் வெகு காலத்திற்கு முன்னே எங்களுக்குக் கிடைத்திருக்க வேண்டியது. இவ்விஷயத்தில் ஏற்பட்ட காலதாமதம் எங்களுக்கு இந்தப் புண்ய தினத்தில் எங்களுடைய சந்தோஷத்திற்கு அதிகமான ருசியை அளித்திருக்கிறது. முதுமொழியில் கூறியுள்ளபடி இந் நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தோம். முன் நடந்த விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு, இன்று மனத்தூய்மையுடனும் உற்சாகத்துடனும் தங்களை வரவேற்கிறோம்.

"தமிழ்நாட்டில் சுதேச சமஸ்தானம் இது ஒன்றே. இச்சமஸ்தானத்தின் பூர்வோத்திரங்கள் அதிகமாயும், பல்வேறுபட்டதாயும் உள. இயற்கைச் செல்வத்தைப்பற்றியும், ஜனங்களின் பொருளாதார நிலைமையைப்பற்றியும் சொல்ல எங்களுக்கு நா எழவில்லை. ஏனெனில் அவைகள் மனதிற்குச் சந்துஷ்டியைக் கொடுக்கக் கூடியவை அல்ல. சில வருஷங்களாய் ஏமாற்றிவரும் மழையையே நம்பியிருக்கும் இச்சமஸ்தானம் ராட்டினத் தொழிலுக்கு முற்றிலும் ஏற்றதாயிருக்கிறது. இந்திய வாழ்க்கை யென்னும் ஆற்றிலிருந்து நாங்கள் பிரிக்கப்பட்டிருந்தாலும், சமஸ்தானத்திற்கு வெளியே நடக்கும் விஷயங்களை நன்குணர்ந்து, அவைகளுக்கேற்ப நடந்துகொள்ளவே முயற்சி செய்துவருகிறோம். நாளடைவில் வெகு தூரம் பின்வாங்கவும் மாட்டோம்.

"தங்களுக்கு உபசார மொழிகள் கூறுவதில் எங்களுடைய குறைகள் எங்களுக்கு நன்றாகத் தெரியும். செய்கையில் குறை வேற்பட்டபோதிலும் முயற்சியில் குறைவில்லை. அநேகர் கதராடை புனைகிறார்கள். "ராட்டினம்" என்னும் மந்திரம் ஏழையையும் குடியானவனையும் இன்னும் எட்டவில்லை. இது எங்களை வெட்கும்படி செய்யக்கூடியதாயினும், வெகு நாளாவதற்கு முன் அவர்களுக்கும், ஏனையோராகிய எங்களுக்கும் இவ்வியக்கம் மனதில் ஆழ்ந்து பதியுமென்பதற்கு அறிகுறிகள் இல்லாமலில்லை.

இச்சமஸ்தான சட்டசபைக்கு எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நூல் நூற்பதைக் கட்டாயமாகத் திட்டம் செய்யவேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றிய கௌரவம் ஏற்பட்டிருக்கிறது. அதி லிருந்து நன்மை ஏற்படலாம். பெரும்பான்மையோர் உத்யோக வர்க்கத்தினர் அல்லாதவராய் இருக்கும் அச்சபையில் தங்கள் பெயர் அடிக்கடி உற்சாகத்தை விளைவித்துக்கொண்டிருக்கிறது. குடியல் என்னும் தீங்கை அறவே ஒழிக்க முயன்று வருகிறோம். வேறு இடங்களைப்போல் ஜனங்களுக்கு ஏற்பட்டுள்ள வழக்கம், இதிலிருந்து கிடைக்கும் வருவாய் போனால், அந்த வருவாயை ஈடு செய்ய வேறு வழியில்லையென்று கூறப்படும் வாதம், இவை களைப்பற்றியும் யோசிக்க வேண்டியிருக்கிறது. இவ்விஷயம் மெத்த அவசரமானதென்றும், இவ்வித சீர்திருத்தம் அவசிய மானதென்றும் எல்லோருக்கும் நல்ல உணர்ச்சி ஏற்பட்டிருக் கிறது. இது ஜன நன்மைக்கே. ஜன சமூகத்தில் ஏற்பட்டிருக் கும் குறைகளை நீக்குவது தங்கள் முக்கியமான கார்யங்களில் ஒன்றாக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள். தீவிர புத்தியுடன் அவைகளை நாங்கள் கவனிக்கவில்லை. இது எங்களுக்குக் குறைவு தான். தங்கள் வருகையால் மனிதருக்குள் ஏற்பட்டிருக்கும் தீண்டாமை என்னும் நோயை நீக்குவதில் உற்சாகம் ஏற்படு மென்று நம்புகிறோம். தாங்கள் மறு முறை இச்சமஸ்தான த்திற்கு வருங்கால் நாங்கள் செய்த வேலைகளைப்பற்றி இன்னும் மேலான விவரம் கூறலாமென்று எண்ணுகிறோம். தற்காலம் தாங்கள் வந்ததிலிருந்து மனச்சோதனை ஏற்பட்டிருக்கிறது. கிரி யாம்சையில் கடைபெறக்கூடிய சீர்திருத்தங்கள் ஏற்படுமென நம்புகிறோம்.

"மகாத்மா அவர்களே!, சொல்ப தொகையுள்ள இந்தப் பண முடிப்பைத் தங்களுக்குக் கொடுப்பதற்கு மன்னிக்குமாறு வேண்டுகிறோம். கடவுளாலும் மனிதனாலும் நல்ல விஷயங்களுக்கு பற்பல காரணங்களால் ஏற்படும் இடையூறுகள் தங்களுக்குத் தெரிந்தவைகளாதலால் எங்கள் குறைகளை மன்னிக்கப் பிரார்த்திக் கின்றோம். வெளித் தோற்றத்திற்கு வெகு அதிருப்திகரமாயிருக் கும் விஷயங்களிலும் நன்மை பயக்கக்கூடிய ஓர் அணுவேனு மிருக்குமாதலால், தங்களது வரவு எங்களுக்குப் புத்துயிரளித்து, உள்ளும் புறமும் எங்களைப் புனிதமாகச் செய்யுமென்று நம் பிக்கை மட்டும் கொள்ளலாம்.

"மகாத்மா அவர்களே!, தங்கள் வரவிற்காக நாங்கள் எங்கள் நன்றியைச் செலுத்துகிறோம். தாங்கள் பொது வாழ்க்கையைப் பரிசுத்தமயமாகச் செய்து, எங்களது நோக்கங்களை லோகாயதமா யிருப்பதிலிருந்து உயர்ந்த உணர்ச்சிகளாகச் செய்ய எங்களுக்கு

உதவியளித்திருக்கிறீர்கள். தங்களது ஒப்பற்ற வாழ்க்கையால் நாங்களும் பயனடைவோமாக!"

அடிகள் உபசாரப் பத்திரத்தை வந்தனத்துடன் பெற்றுக் கொண்டு மறுமொழியாக சில வார்த்தைகள் கூறினர். திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள், காந்தியடிகள் ஆங்கிலத்தில் கூறியதைத் தமிழில் மொழிபெயர்த்துப் பின்வருமாறு கூறினர்:—

"சபா நாயகர் அவர்களே! சிநேகிதர்களே! தங்களுடைய வரவேற்புப் பத்திரத்திற்காகவும், பண முடிப்பிற்காகவும் வந்தனம் செலுத்துகிறேன். வரவேற்புப் பத்திரத்தைப் படிக்காமலேயே நீங்கள் அளித்தபொழுதும் நான் அதை முன்னமேயே படித்துவிட்டேன். நீங்கள் என்னைப் பார்ப்பதற்கு பல நாள் காத்திருந்ததுபோல் நானும் உங்களைப் பார்க்க வெகு நாள் காத்திருந்தேன். வரவேற்புப் பத்திரத்தில் உங்களுக்கு ராட்டையிலும், கதரிலும் நம்பிக்கையிருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். மேலும், நாட்டில் ஏழைத்தனம் குடிகொண்டிருப்பதாகப் பத்திரத்தில் கண்டிருக்கிறீர்கள். ஆதலின் நாட்டில் ராட்டைக்கு மெத்தவும் அவசியமிருக்கிறதென்று நீங்கள் சொல்லியிருப்பது முற்றிலும் உண்மையேயாகும். பாரத தேசம் முழுவதும் எனது சுற்றுப் பிரயாணத்தின் அனுபவமும் இதுவேயாகும். இது தவிர, உங்களுடைய பள்ளிக்கூடங்களிலெல்லாம் நூல் நூற்பதை கட்டாயமாக திட்டம் செய்யவேண்டுமென்று ஒரு தீர்மானத்தைச் சட்டசபையில் நிறைவேற்றியிருக்கிறீர்கள். இம்மாதிரியான தீர்மானத்திற்கு நான் சந்தோஷப்படுகிறேன். ஆனால், நீங்களும் நானும் எந்தத் தீர்மானத்திற்காகவும், கொள்கைக்காகவும் உழைக்கின்றோமோ, அவைகளைக் கிரியாம்சையில் கொண்டுவந்தால் எவ்வளவு அழகாயிருக்கும்? தீர்மானங்கள் நிறைவேற்றுவது வெகு சுலபம். இம்மாதிரித் தீர்மானங்கள் நிறைவேற்றுவதற்குச் செலவு ஒன்றும் கிடையாது. ஆனால், இப்படி நாம் தீர்மானங்கள் செய்வதோடு நின்றுவிடாமல், அவைகளை நடவடிக்கைக்குக் கொண்டுவர பிரசார வேலை செய்ய வேண்டும். நீங்கள் கேட்கும் மழை பெய்துகொண்டிருக்கிறது. மழை வந்தது நன்மைதான். நன்றாய் மழை பெய்துவிட்டால் நான் உங்களை அதிக நேரம் தாமதிக்கச் செய்யப்போவதில்லை. நான் சொல்லவேண்டிய விஷயங்களை நீங்கள் அறிந்தேயிருக்கிறீர்கள். நான் சென்னப்பட்டணம் முதலிய இடங்களில் பேசியிருப்பதை நீங்கள் பத்திரிகை மூலம் பார்த்திருக்கலாம். மதுபான விஷயத்தில் இங்கிருக்கும் நிலைமை எனக்குத் தெரியாது. கள்ளும் சாராயமும் இல்லாமல் அறவே ஒழித்துவிட்டால் நமக்கு நன்மைதான். மதுபானத்தை ஒழிக்கவேண்டுமானால் பூர்ண

மதுவிலக்கைச் சட்ட பூர்வமாய்ச் செய்யவேண்டும். சிறு குழந்தைகளை பால்யத்திலேயே விவாஹம் செய்து பாழாக்குவது பற்றி மனமிரங்குகிறவர்கள் செய்யவேண்டிய வேலை அதிகம் இருக்கின்றது. இப்பாபத்திற்கு உடந்தையாயிருப்பவர்கள் கடவுள் முன்னிலையில் பதில் சொல்ல வேண்டும். மனிதனுய்ப் பிறந்த எவனையும் தீண்டத்தகாதவன் என்று கூறுவது அநியாயமாகும். இது ராக்ஷஸ ஆசாரம். இத்தகைய பைசாச ஒழுக்கத்தை நீங்கள் விட்டுவிட வேண்டும். அடுத்தபடியாக கிராம, நகர சுகாதாரம் சட்ட சபையிலுள்ளோரையும், மற்றும் எல்லோரையும் சுவரத்தக்க விஷயமாகும். கிராம சுகாதாரம் செழிப்புறவேண்டுமானால், குழந்தைகளுக்குத் தேவையான நல்ல பசும் பால் கிடைக்கவேண்டுமானால், நீங்கள் பால் மாடுகளைக் கவனித்துப் போஷிக்க வேண்டும். பிராமணர், பிராமணரல்லாதார் விவாதம் இங்கு இருக்கின்றதோ இல்லையோ எனக்குத் தெரியாது. அவ்விதமிருந்தால் நாட்டிற்கு அவமானகரமாகும். யாருக்கு தேசபக்தியுண்டோ அவர்களுக்குச் சுருக்கமாக விஷயங்களை எடுத்துக் காட்டியிருக்கிறேன். நான் இன்று கூறியபடி நீங்கள் நடைமுறையில் நடந்தால் நான் எவ்வளவோ மகிழ்ச்சியடைவேன். கதர் நிதிக்கு இதுவரை உதவாதவர்கள் இப்பொழுது உதவலாம்."

பின்னர் சில தொண்டர்கள் காந்தியடிகளின் ஆக்ஞைப்படி முந்தாணியை விரித்து வசூல் செய்தார்கள். 88 ரூபாய் வரை உடன்காலத்தில் வசூல் செய்யப்பட்டது. நகரப்பேட்டை கார்யஸ்தர்கள் ரூ 51 கொண்ட ஒரு பணமுடிப்பையும், ஒரு உபசாரப் பத்திரத்தையும் மகாத்மாவுக்கு அளித்தனர். ஒரு வில்வயுயர்ந்த மாலையை ஒருவர் மகாத்மாவுக்குச் சமர்ப்பித்தார். அடிகளும் வழக்கம்போல் அந்த மாலையை ஏலம் கூறும்படி ஆக்ஞாபிக்க, திரு. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் ஏலம் கூற, ஸ்ரீமான் P. K ராஜகோபாலய்யர் அவர்கள் அம்மாலையை ரூ 12—க்கு ஏலத்தில் எடுக்க, மகாத்மா அவர்கள் ஸ்ரீமான் அய்யருக்கு அம்மாலையைச் சூட்டினார். இத்துடன் கூட்டம் கலைந்தது. மறுநாள் காலை $5\frac{1}{2}$ மணிக்கு அடிகள் தனவணிக நாட்டுச் சுற்றுப்பிரயாணத்துக்குப் புறப்பட்டனர்.

மகாத்மாவின் புதுக்கோட்டை விஜயம் வெகு சிறப்பாக நடைபெற்றதற்குக் காரணமாயிருந்தவர்கள் எல்லோராலும் பாராட்டப்பட வேண்டியவர்களாவார்கள். எனினும், அவர்கள் தங்களது கடமையைச் சரிவரச் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் பாடுபட்டனர்களென்ற போதிலும், முக்கியமாய் ஸ்ரீமான்களான K. ஸ்வாமிநாதய்யர், S. விசுவநாதய்யர், P. S. விசுவநாதய்யர், G. சுந்தரேசய்யர், K. நாகராஜய்யர், V. S. கணபதி சாஸ்திரி

கள், இன்னும் சில உபசரணைக் கமிட்டி அங்கத்தினர்கள்—எல்லோரும் எடுத்துக்கொண்ட பிரயாஸை பாராட்டத்தகுந்தது. ஸ்ரீமான் A. வேணுகோபால நாயுடு அவர்கள் கதர் நிதி விஷயமாய் எடுத்துக்கொண்ட பிரயாஸையும் விசேஷமாய்க் குறிப்பிடத்தக்கது.

அதே தினத்தில், அதாவது செப்டம்பர் மீ 21உ புதன் கிழமை யன்று சமஸ்தானமெங்கணும் சட்டசபைத் தேர்தல் நடைபெற்றது. புதுக்கோட்டை நகரத் தொகுதியில் பலத்த போட்டியிருந்தது. வாக்காளர்களில் 100-க்கு 45 பேர்கள்தான் தங்களது வாக்குரிமையைச் செலுத்தினர்கள். 22-ம் தேதி யன்று புதுக்கோட்டை பொதுத் தொகுதிக்கு அபேக்ஷகர்களாய் நின்றவர்கள் சம்பந்தமான வாக்குகள் திவான்பேஷ்கார் அவர்கள் முன்னிலையில் எண்ணப்பட்டன. அடியிற்கண்டபடி அபேக்ஷகர் களுக்கு ஓட்டுகள் கிடைத்தன:—

S. விசுவனுதய்யர்—760
A. V. வைத்தியனுதய்யர்—594
A. குப்புஸாமி அய்யங்கார்—531
K. சாமினுதய்யர்—529
இ. முகம்மது காசிம் சாகேப்—440
ஆ. சு. நாகரத்தினம்—319
வ. மு. சுந்தரம்பிள்ளை—254
L. K. சுந்தரமய்யர்—240
T. S. செங்கல்வராய அய்யர்—164
S. செத்தனஸாமி அய்யர்—186

முதல் நால்வரும் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் புதுக்கோட்டை நகரத் தொகுதி வாக்காளர்களுக்கு அடியிற்கண்ட விக்ஞாபனம் செய்திருந்தார்:—

"சென்ற 10-வருஷ காலமாக முனிஸிபல் சபையிலும், புதிய சட்ட நிர்மாண சபையிலும், இச்சபைகளுக்கு வெளியே சமஸ்தான மகாநாடுகளிலும் நான் புதுக்கோட்டை மகாஜனங்களுக்காக என்னால் இயன்ற கைங்கரியத்தைச் செய்து வந்திருப்பது தங்களுக்குத் தெரிந்திருக்கும். இவ்வாறு மகாஜனங்களுக்கும் நாட்டுக்கும் செய்யும் கைங்கரியத்தால் எனக்கு எவ்வளவு இடையூறுகளும், மனக்கிலேசங்களும் ஏற்பட்டாலும், அவைகளை ஒரு பொருட்டாய் நினையாமல், பொதுஜனங்களின் நன்மை ஒன்றையே பெரிதெனக் கருதி உழைத்து வந்திருக்கிறேனென்பதைத் தங்களுக்குத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இப்புதிய சட்டசபையை இங்காட்டில் ஏற்படுத்தும்படி அரசாங்கத்தாரைப் பிரதிநிதி சபை மூலம் பன்முறை நான் வற்புறுத்திக் கேட்டுக்கொண்டதையும், இச்சபை ஏற்பட்ட பின் அதன் மூலம் என்னால் இயன்ற மனைதரியத்தோடும், தேசாபிமான புத்தியோடும் மகாஜனங்களுக்கு நன்மை பயக்க நான் முயற்சி செய்திருப்பதையும் தாங்கள் நன்கறிவீர்கள். வருகிற 21—9—27ல் நடைபெறப்போகும் சட்டசபைத் தேர்தலில் நகரத்தொகுதிக்கு நான் ஒரு அபேட்சகனாக நிற்கின்றேன். இச்சமயம் எனக்கு ஏற்பட்டிருக்கும் தேக அசௌகரியத்தாலும், இன்னும் பல அசௌகரியங்களை முன்னிட்டும், தங்கள் வாக்கை நேரில் கேட்க எனக்கு அவகாசமும் சுதந்தரமும் இல்லாமலிருந்த போதிலும், தங்களை நேரில் கண்டு தங்கள் வாக்கை எனக்கு அளிக்கும்படி கேட்டுக்கொண்டதுபோலவே கருதி, தங்கள் நம்பிக்கைக்கு நான் தகுதியுள்ளவன் என்று தாங்கள் கருதினால், இதற்கு முன் தாங்கள் என் மீது காட்டியிருக்கும் அன்பை மீண்டும் காட்டி, செப்டம்பர் மீ 21-ம் தேதி யன்று நடைபெறும் தேர்தல் தினத்தன்று தங்களது வாக்கை எனக்கு அளிக்குமாறு வேண்டுகிறேன்.”

ஸ்ரீமான் விசுவனாதய்யரவர்கள் வாக்காளர்களை நேரே அணுகி வாக்கைக் கொடுக்கும்படி கேட்கக் கூடாத நிலைமையிலும், தன்னை முதன்மையாகப் பெரும்பாலான ஓட்டுகளால் தெரிந்தெடுத்ததைப் பாராட்டி அவர் நகர மகாஜனங்களுக்குத் தனது நன்றியைத் தெரிவித்து ஜனமித்திரனில் பின்வருமாறு எழுதினர்:—

“தேர்தல் முடிவு தெரிந்த இச்சமயத்தில் என் உணர்ச்சி எவ்விதமாயிருக்கிறதென்பதைத் தெளிவாய் வெளிப்படுத்த சாத்தியமில்லாத நிலையில் இருக்கிறேன். மகாஜனங்கள் சென்ற 10-வருஷ காலமாகவே என்னிடம் அன்பு கொண்டு, அவ்வன்பை ஒவ்வோர் தேர்தலிலும் காண்பித்தார்களெனினும் இச்சமயம் அவர்கள் வெளியிட்டுள்ள விசேஷ அன்பை என் வாழ்நாள் முழுதும் மறக்க வொண்ணாது. அவர்களுக்கு என்னாலியன்ற கைங்கரியத்தைச் செய்வதற்காக என் உடலையும் ஆவியையும் பூரணமாக அர்ப்பணம் செய்வதைத்தவிர வேறுவிதமாய் நான் கைம்மாறு செய்ய சக்தியற்றவனாயிருக்கிறேன். மகாஜனங்களுடைய நல்ல உணர்ச்சி, பகுத்தறிவு, தேசாபிமானம், மனோதைரியம்—இவைகளில் நான் கொண்டிருந்த நம்பிக்கை இச்சமயம் பதின்மடங்கு அதிகமாகி விட்டது. எனது நண்பர் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்களையும் மகாஜனங்கள் என்னுடன் தேர்ந்தெடுத்தனுப்பியதற்காகவும் நான் நன்றி செலுத்துகிறேன். இன்னுமோர் முறை என்னைத் தேர்ந்தெடுத்த வாக்காளர்—மகாஜனங்களுக்கு எனது மன

மார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன். மகாஜனங்கள் ஹிருதய கமலத்திலும், எனது உள்ளத்திலும் பிரகாசித்து நிற்கும் எல்லாம் வல்ல இறைவனே எனது பக்திபூர்வமாய் நமஸ்கரிக்கிறேன்."

இச்சமயத்தில் பின்வரும் பிரஸ் கம்யூனிக் ஈ-திவான் அவர்களால் வெளியிடப்பட்டது:— "மகா-ஈ-ஈ-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சமக்ஷம் சமஸ்தான ராஜ்ய நிர்வாக விஷயத்தில் அவருடைய பிரஜைகள் ஒருவர் அல்லது பலர் ஈ-திவானவர்களுடன் சேர்க்கப்படுவார் என்று வெளியிட்ட ராஜ விளம்பரத்தின் நோக்கத்தை இப்பொழுதைய அவசியங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ற வாறு ஸ்வல்ப மாறுதல்களுடன் இப்பொழுது அமுலுக்குக் கொண்டுவரவேண்டியது அவசியமாயிருக்கிறபடியாலும், ஈ-திவானவர்களுடைய உத்தியோகத்துக்கு ஏற்பட்ட அலுவல்கள் நாளாவிருத்தியில் வர வர அதிகரித்துக்கொண்டே வருவதை முன்னிட்டு அவருக்கு உதவி கொடுப்பதும் அவசியமாயிருக்கிறபடியாலும், ஈ-திவான் அவர்கள் சட்டசபைக்கு அக்கிராஸனாதிபதியாயிருக்கும் ஹோதாவில், அச்சபைக்கு கவர்ன்மெண்டாருடைய நோக்கங்களை எடுத்துரைப்பதில் அவருக்கு விச்ராந்தி கொடுப்பது யுக்தமாயிருக்கிறபடியாலும், மகா-ஈ-ஈ-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் கவர்ன்மெண்டு சீப் செக்ரிடரி என்ற உத்தியோகத்தை ஏற்படுத்தியிருக்கிறார்கள். சீப் செக்ரிடரியானவர் ஈ-திவானவர்களின் கீழ் வேலைபார்த்து, அவரால் அளிக்கப்படும் அதிகாரங்களைச் செலுத்துவார்."

மகா—ஈ—ஈ—ஸ்ரீ ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் கவர்ன்மெண்டாருடைய சீப் செக்ரிடரியென்ற உத்தியோகத்தை ரூ 400-25-500 கிரேடில் களிகூர்ந்து ஏற்படுத்தி, அதற்கு ஹுஜூர் ஸெக்ரிடரி M. R. Ry. R. கிருஷ்ணமாச்சாரியார் அவர்கள் B. A. ஐ ரூ 400 சம்பளத்தில் நியமித்து, ஷை நியமனம் 6—10—27 முதல் அமுலுக்கு வரும் என்றும் உத்தரவு செய்தார்கள்.

பிரதான காரியதரிசி நியமன சம்பந்தமாய் செப்டம்பர் மீ 29-ம் தேதியில் 'ஹிந்து' பத்திரிகையில் அடியில் வருமாறு உபதலையங்கம் வெளிவந்தது:—

"சீப் செக்ரடரி என்ற ஒரு புதிய உத்யோகத்தை ஏற்படுத்தியிருப்பதாக புதுக்கோட்டை தர்பாரால் வெளியிடப்பட்டிருக்கும் பிரஸ் கம்யூனிக், பொதுவாய் உத்யோக அறிக்கைகளுக்கு உரித்தான உணர்ச்சியற்ற நளினத்துக்கு இலக்காகவிருக்கின்றது. ராஜ விளம்பரத்தில், ராஜ்ய நிர்வாகத்தில் அவருடைய பிரஜைகளில் ஒருவரையோ அல்லது பலரையோ ஈ-திவானவர்களுடன் சேர்க்கப்படும் என்ற நோக்கத்தை அது குறிப்பிடுகிறது. இந்த வாக்

குறுகி பல நாட்கள்வரையும் நிறைவேற்றப்படவில்லை. தர்பாரவர்கள், ஏதோ சமஸ்தானம் அபிவிருத்தியடைந்துவருவதுபோல் மேலுக்குக் காணப்படவேண்டும், ஆனால் தங்கள் அதிகாரத்தில் ஒரு சிறிய பாகத்தைக்கூட இழக்கக்கூடாது என்று எண்ணினார்கள். இந்த இரண்டு எண்ணங்களுக்குமிடையே அவர்கள் மனது வெகுநாளாக ஊசலாடியது. இப்பொழுது அவர்கள் வெளியிட்டிருக்கும் முடிவு எதார்த்தமாகவே அவர்கள் அவ்வாறு நினைக்கிறார்களாவென்று எண்ணி ஆச்சரியப்படும்படி அவ்வளவு குழந்தைப் பிள்ளைத்தனமாக விருக்கின்றது. அரசர் சொன்னது ஒன்று; ரீஜெண்ட் செய்திருப்பது வேறு. அரசர் அதிகாரம் வாய்ந்த ஒரு கௌன்ஸில் மாதிரி ஒன்றை ஏற்படுத்துவதாக வாக்குத்தத்தம் செய்திருக்க, ரீஜெண்ட் ஸாஹேப் அவர்கள் ஒரு சீப் செக்ரீடரியை நியமிக்கத் தீர்மானித்திருக்கின்றார். மேலும், இந்த ஏற்பாடு "இப்பொழுதிய அவசியங்களுக்கும் சந்தர்ப்பங்களுக்கும் ஏற்றவாறு" ஸ்வல்ப மாறுதல்களுடன் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டிருப்பதாக உண்மை விஷயத்துடன் சொல்லப்படுகிறது. இந்த ஏற்பாடானது ஈ—திவானவர்களுக்கு உதவிகொடுக்கவேண்டுமென்ற வெளிப்படையான நோக்கத்தைப் பூர்த்தி செய்யுமென்பதில் கொஞ்சங்கூட சந்தேகமில்லை. ஆனால், ராஜ்ய நிர்வாகத்தில் பிரஜைகளில் ஒருவரையோ பலரையோ ஈ—திவானவர்களுடன் சேர்க்கப்பட்டிருப்பதாக இதை எவராலும் கொஞ்சமும் வியாக்யானம் செய்ய முடியாது. பிரகிருதமிருக்கிறபடி, ஈ—திவானவர்கள்தான் தலைமை அதிகாரியாவார். ஆனால் உண்மையான அதிகாரம் ரீஜெண்ட் ஸாஹேப் அவர்களிடமே யிருக்கின்றது. பிரகிருத நிலைமையில் அவருக்கு ஒரு உதவியாளரைக் கொடுப்பது அதிகாரம்வாய்ந்த கௌன்ஸில் ஏற்படுத்துவதில் முதல்படியாகக் கருதப்படமாட்டாது. உண்மையில் அதிகாரம் வாய்ந்த கௌன்ஸில் ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றால், அது அரசாங்கத்தமைப்பில் ரீஜெண்டவர்களுடனும், திவானவர்களுடனும் சமதையாக விருந்து, கௌன்ஸிலர், ரீஜெண்ட், திவான் ஆகிய மூவரும் சேர்ந்து பொறுப்பு வாய்ந்தவர்களாக இருத்தல்வேண்டும். சமஸ்தான அதிகாரிகள் இத்தகைய வியசனிக்கத்தக்க ஏமாற்றகரமான செய்கையால் ஏதோ கண்ணைத் துடைப்பதுபோல் துடைத்து, சமஸ்தான ஜனங்களின் ராஜீய நோக்கங்களை நீண்ட காலம் பூர்த்தி செய்யாமல் தடுத்துவைக்க முடியுமென்று எதார்த்தமாகக் கருதுகிறார்களா?"

மேலே குறித்தபடி சட்டசபைப் பொதுத் தேர்தலில் மிகவும் பெரும்பான்மையான வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் S. விசுவனாதய்யர் மீது போலீசார் 108-வது பிரிவுப்படி அடியிற்

கண்ட உத்தரவை சாதரா செய்தார்கள். அதன் விவரம் பின் வருமாறு:—

கி. பு. கோ. 112—வது பிரிவுப்படி பிறப்பிவிக்கப்பட்ட உத்தரவு.

புதுக்கோட்டை அடிஷனல் சீப் மாஜிஸ்டிரேட் அவர்களால்.

மிஸ்—கேஸ் நெ. 35 of 27

"ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் பேரில் எடுத்துக்கொள்ளப்பட்ட கேஸ் விஷயமாக நகர போலீஸ் இன்ஸ்பெக்டரால் சாட்டப்பட்ட குற்றச் சீட்டும் அது சம்பந்தமான ரெகார்டுகளும் பார்வையிடப் பட்டன.

அதிலிருந்து, புதுக்கோட்டை டவுனிலுள்ள ஜனமித்திரன் அச்சுக்கூடத்தை ஸ்தாபிதம் செய்தவரும், ஜனமித்திரன் அச்சுக் கூடத்தின் சொந்தக்காரரும், ஜனமித்திரன் ஆசிரியருமான ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் 1925-ம் வரு முதல் 1927-ம் வரு முடிய 11—12—25, 19—11—26, 18—2—27, 3—6—27, 1—8—27, 5—8—27, 12—8—27 ஆகிய தேதிகளில் வெளி யான பத்திரிகைகளில் ராஜத்துவேஷமான விஷயங்களை வெளி யிட்டதின் மூலமும் (விபரம் A என்னும் தலைப்பில் குறிப்பிடப் பட்டிருக்கிறது) மேற்படி அச்சாபீஸின் மற்றொரு கூட்டு சொந்தக் காரரும், சகோதரரும், ஜனமித்திரன் ஆசிரியருமான ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யருடன் சேர்ந்துகொண்டு 1926—1927 வரை ராஜத்துவேஷத்தை உண்டுபண்ணக்கூடிய வியாசங்களை எழுதி பிரசுரிக்கும்படி தூண்டியதின் மூலமும் (விவரம் B என் னும் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கிறது) மகாராஜாவின் பேரிலும், சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட அரசாங்கத்தின் பேரி லும் துவேஷத்தை உண்டுபண்ணியோ அல்லது உண்டுபண்ண முயற்சி செய்தலோ ஆகிய குற்றத்தைச் செய்திருக்கிறார். அது இ. பி. கோ. 124—A பிரிவுப்படி குற்றமாகிறபடியால், மே ஸ்ரீமான் விசுவனுதய்யர் மீது கி. பு. கோ. 108-வது பிரிவுப்படி நடவடிக்கை எடுத்துக்கொள்ளப் போதுமான ஆதாரம் இருக்கிற தாக எனக்குத் தோன்றுகிறது. ஆகையால் ஒரு வருஷத்திற்கு நல்ல நடத்தையுடனிருப்பதற்காக அவர் ரூ 500-க்கு ஒரு ஜாமீ னும், அதே தொகைக்கு வேறு இரண்டு ஜாமீன்களும் கொடுக் கும்படி ஏன் உத்தரவிடக்கூடாதென்பதற்கு தகுந்த காரணம் காட்டும்படி இதனால் கேட்கப்படுகிறது."

விசாரணை 9—10—27க்கு தேதி குறிப்பிடப்பட்டிருந்தது; பிறகு 27—10—27க்கு ஒதுக்கப்பட்டது. அன்று தினம் மாலை 3-மணிக்கு மேல் ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் பேரில் உபரியாக

சில குற்றங்களிருப்பதாகவும், அவைகளின் பேரில் மறு நாள் உத்தரவிடப்படுமென்றும், கேஸ் விசாரணைக்கு 3—11—27ம் உக்கு ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் மாஜிஸ்ட்ரேட் கூறினர்.

3—11—27 வியாழக்கிழமை பிற்பகல் 2-மணிக்கு மேல் இவ்வழக்கு அடிஷனல் சீப் மாஜிஸ்ட்ரேட் ஸ்ரீமான் R. கோகர்ண சாஸ்திரிகள் முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. எதிரியின் சார்பாக ஆஜரான வக்கீல் ஸ்ரீமான் K. ஸ்வாமிஞதய்ய ரவர்கள், இந்த வழக்கில் எதிரி பேரில் 112-வது பிரிவுப்படி செய் யப்பட்ட உத்திரவு சட்டப்படி செலாவணியில்லாத உத்திரவென் றும், 108-வது பிரிவுப்படி ஏற்படும் ஒவ்வோர் நடவடிக்கையிலும் 112-வது பிரிவுப்படி ஒரே உத்திரவுதான் பிறப்பிவிக்கக்கூடுமென் றும், எனவே 112-வது பிரிவுப்படி ஏற்படுத்தப்பட்ட உபரி உத்திரவு சட்டப்படி பிசகென்றும், பின்னும் அவர் ஜனமித்திரன் கூட்டுப் பத்திராதிபர், கூட்டு ஸ்வாந்தாரென்ற முறையில் குற்றஞ் சாட்டப்பட்டிருப்பதாகவும், ஆனல் இந்தக் கேஸில் சர்க்காரால் செய்யப்பட்டிருக்கும் சாங்ஷன் உத்திரவு "சீப் கோர்ட்டு வக்கீல் S. விசுவஞதய்யர் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளவும்" என்று மட்டும் கண்டிருப்பதிலிருந்து, எதிரி பேரில் ஜனமித்திரன் பத்திராதிபர், ஸ்வாந்தார் என்ற முறையில் சர்க்காரால் சாங்கிஷன் கொடுக்கப்படவில்லையென்றும், எனவே சாங்கிஷன் உத்திரவு சட்டப்படி செலாவணியில்லாத உத்தரவென்றும், மாஜிஸ்ட்ரேட்டுக்கு கேஸை விசாரிக்க அதிகாரமில்லையென்றும் வாதித்தார். பப்ளிக் பிராஸிகூட்டர் 112-வது பிரிவுப்படி உபரி உத்தரவு பிறப்பிவிக்க அதிகாரமில்லையென்று கி. பு. கோடில் சொல்லப்படவில்லையென்றும், வாரண்டு கேஸ் விசாரணைகளில் சார்ஜை மாற்றுவதற்கு கோர்ட்டாரவர்களுக்கு அதிகாரமிருப்பது போல் இதையும் மாற்றிக்கொள்ளலாமென்றும், இரண்டாவதாக சாங்ஷன் சம்பந்தமாகச் சொல்லப்பட்ட வாதத்திற்கு எதிரிடை யாக எதிரிக்கு எத்தனை உத்தியோகங்கள் இருக்கின்றனவோ அவைகள் காணப்படவேண்டியது அவசியமில்லையென்றும், சாங்கி ஷன் ஆர்டரில் குறிப்பிட்டவர் எதிரிதானென்று தெரிந்தால் போதுமென்றும், 108-வது பிரிவுப்படி என்று சாங்ஷன் ஆர்டரில் வியக்தமாய்க் காணப்பட்டிருக்கிறதென்றும் கூறினர். மாஜிஸ்ட் ரேட் சாங்கிஷன் ஆர்டர் சட்டப்படி செலாவணியற்றதென்று தோன்றவில்லையென்றும், கேஸை மேல்நடத்துவதுதான் உசித மென்றும் கூறினர். பின்னர் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யர் அவ்வாறு மாஜிஸ்ட்ரேட் செய்யும் உத்தரவை எழுத்து மூலமாய் எழுதி வாசித்துவிட்டால், அதிலிருந்து சீப் கோர்ட்டாருக்கு ரிவிஷன் செய்துகொள்ள ஏதுவாயிருக்குமென்று கூறினர்.

மாஜிஸ்ட்ரேட் இதைச் சரியென்று ஒத்துக்கொண்டு, இவ்விஷயமாய் உத்தரவு பிறப்பிப்பதற்காக 5—11—27க்கு தேதி குறிப்பிட்டு கேஸை ஒதுக்கிவிட்டார். அந்த தினத்தில் மாஜிஸ்ட்ரேட் செய்த உத்தரவின் பேரில் ரிவிஷன் செய்யப்பட்டு, சாங்கிஷன் உத்தரவு சட்டப்படி செலாவணி ஆகத்தக்கதல்லவென்றும், புதிதாகக் குற்றங்கள் சேர்க்க அதிகாரமில்லையென்றும் சொல்லி அப்பீல் நீதிபதிகள் கேஸைத் தள்ளுபடி செய்துவிட்டனர்.

21-வது அத்தியாயம்.

அகில இந்திய சுதேச சமஸ்தானப் பிரஜைகளின் மகாநாடும், சமஸ்தான வார்ஸ் பிரச்னையும்.

அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகளின் மகாநாட்டின் கூட்டம் 1927-ம் வரு டிஸம்பர் மீ 20-ந்வ திங்கட்கிழமை காலை 9-மணிக்கு சென்னையில் கோக்லே மண்டபத்தில் ஆரம்பமாகிற்று. சாந்தூர், புதுக்கோட்டை, கொச்சி, திருவாங்கூர், ஹைதராபாத், பரோடா, இண்டூர், பிக்கானீர், குஜராத், டெக்கான், உஜினி, கத்தியவார், ராஜபுதனம், நாபா, ஆகிய இந்த சமஸ்தானங்களிலிருந்து அதிகமான பிரதிநிதிகள் வந்திருந்ததும் தவிர, இந்து தேசத்திலுள்ள அநேகமாய் எல்லா முக்கிய சமஸ்தானங்களிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். பிரதிநிதிகளின் மொத்த சங்கியை 248. இவர்களில் சிலர் ஸ்திரீகள். விஸிட்டர்கள் (நடவடிக்கைகளைக் கவனிக்க வந்தவர்கள்) பெரும்பாலாக வந்திருந்தனர். அவர்களில் அநேகர் இந்திய சமஸ்தானப் பிரஜைகள். பிரசங்க மேடை மீது வீற்றிருந்தவர்களில் முக்கியமான சிலர் பின்வருபவர்கள்:—

பம்பாயில் நடைபெற்ற சமஸ்தானப் பிரஜைகளின் அக்கிராஸனரான திவான்பகதூர் M. ராமச்சந்திர ராவ் அவர்கள், கனம் Mr. V. ராமதாஸ் பந்துலு அவர்கள், மிஸ்டர் ஆனே M. L. A. அவர்கள், திவான் பகதூர் C. கிருஷ்ணஸாமி ராவ் அவர்கள், மிஸ்டர் ஆதிநாராயணன் செட்டி அவர்கள் M. L. A., Sir. K. V. ரெட்டி அவர்கள்.

அக்கிராஸனராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட Mr. S. ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் வாத்திய கோஷத்துடன் மண்டபத்தின் வாசலி

லிருந்து எதிர்கொண்டழைக்கப்பட்டார். மகாநாடு காலை 9-10க்குத் தொடங்கியது.

உபசரணைக் கமிட்டித் தலைவராகிய Mr. S. சத்தியமூர்த்தி M. L. C. தமது வரவேற்புப் பிரசங்கத்தைப் படித்தனர். அதின் முக்கியமான அம்சங்கள் பின்வருவனவாகும்:—

"அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டின் முதல் கூட்டம் சென்னையில் கூடியிருக்கின்றது. இதற்கு விஜயம் செய்துள்ள தங்களுக்கு நல்வரவு கூறுகின்றேன். இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை இந்திய சமஸ்தான விஷயங்களையும் கவனிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. முன்னர் காங்கிரஸ் இத்தகைய விஷயங்களில் கலந்துகொள்ளாமலிருந்ததற்குக் காரணமிருந்தது. பிரிட்டிஷ் இந்தியாவும், சுதேச சமஸ்தானங்களும் பரஸ்பரம் முன்னேற்றமடைவதற்கும், இந்தியா துரிதமாக சுயராஜ்யம் பெறுவதற்குமாக இந்திய தேசிய மகாசபை இரு பிரதேசப் பிரஜைகளின் விஷயங்களையும் கவனிக்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றது. இவ்வாறு காங்கிரஸ் செய்தால் இங்கு தங்களுடைய நிலைமை அல்லது அந்தஸ்து பாதிக்கப்படலாமென்று சமஸ்தானாதிபதிகள் பயப்படலாம். காங்கிரஸைக் கண்டு அவர்கள் எதுவும் அஞ்ச வேண்டியதில்லையென்றும், இந்தியத் தலைவர்கள் இந்தியா கவர்ன்மெண்டைப்போல் அவர்களுடன் அவ்வளவு நட்புடனுள்ளது இருப்பார்களென்பது திண்ணமென்றும் நான் துணிந்து கூறுகிறேன். சுதேச சமஸ்தானங்களுக்கும், பிரிட்டிஷ் இந்தியாவிற்குமிடையில் பெரிய தடுப்பை ஏற்படுத்துவதற்கும் இயலாது. பிரிட்டிஷ் இந்தியாவிற்கு சுயராஜ்யம் வருவது திண்ணம். பிரிட்டிஷ் இந்தியாவில் ஏற்பட்டிருக்கும் புத்துணர்ச்சி சமஸ்தானப் பிரஜைகளையும் பலமாகப் பற்றாமல் போகாது. காங்கிரஸ் சமஸ்தானப் பிரஜைகள் விஷயத்தையும் சேர்த்துக் கொள்ளும் வரை சமஸ்தானப் பிரஜைகள் ஒருங்கு கூடி, சுதேச சமஸ்தானங்களுக்கு சுயராஜ்யம் கிடைக்கக்கூடியபடியும், தம்மை சுயேச்சை வாய்ந்த பல பிரிவுகளான ஐக்கிய அரசாங்க முறையில் தமக்குரியதைச் செய்யக் கூடியதாயும் உள்ள ராஜீய வேலைத் திட்டத்தை ஏற்படுத்திக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இது விஷயமாக நாம் கொண்டிருக்கும் அபிப்பிராயம் லார்டு பர்க்கன்ஹெட்டுக்கும், அவரது நண்பர்களுக்கும் பயன்படாது. சைமன் கமிட்டிகளை முன்னிட்டுச் சமஸ்தான விஷயங்களைக் கவனிக்க ஒரு கமிஷனைத் தனியாக நியமித்திருக்கின்றனர். அது நமது நம்பிக்கையைப் பெறவில்லை. அது நமது நம்பிக்கையைப் பெறமுடியாது. இம்மகாநாட்டு முடிவால் காங்கிரஸ் மகாசபை

யின் முன்பும், உலகத்தார் முன்பும் நமது எதிர்காலக் கோரிக்கை யை எடுத்துரைப்போமாக.

சுதேச சமஸ்தானங்களின் மொத்த விஸ்தீர்ணம் 6,86,000 சதுர மைல்களாகும். இதில் 625 லக்ஷம் ஜனங்கள் வசிக்கின் றார்கள். இவற்றின் மொத்த வருமானம் 150 லக்ஷம் பவுன் கள். மொத்தம் 700 சமஸ்தானங்கள் வரை இருக்கின்றன. இவற்றுலேயே பிரிட்டிஷ் இந்தியா சுதேச சமஸ்தானங்களை அசட்டை செய்ய முடியாது. 1889-ம் வருஷத்து வியாக்யானச் சட்டப்படி, "இந்தியா" என்றால், 'பிரிட்டிஷ் அரசர் பெருமா னின் ஆதிக்கத்திற்குட்பட்ட சமஸ்தானங்களும்" என்று அர்த்தம் செய்துகொள்ள வேண்டும். இதனாலும் அவை இந்தியா வின் அம்சங்கள் என்பது விளங்கும். இந்தியாவின் சமஷ்டிக் கான எந்தத் திட்டமாவது விவாதிக்கப்பட்டால், சுதேச சமஸ் தானங்களின் அரசுரிமை பாதகப்படாமல் இருக்க வேண்டுமென வாதிக்கப் பலர் கிளம்புகின்றார்கள். பிரிட்டிஷ் இந்தியாவிற்கு விரோதமாக சுதேச சமஸ்தானங்களைத் தூண்டுவதற்கு ஆவல் கொண்ட நமது விரோதிகள், சமஸ்தானங்களின் எதிர்கால நிலைமை விஷயத்தில் விசேஷ சிரத்தை இருப்பதுபோல் காட்டிக் கொள்கின்றார்கள்."

பிறகு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி, மிஸ்டர் லெவெட் பிரேஸர், ஸர் வில்லியம் ஹண்டர், இவர்களுடைய கூற்றுக்களை மேற் கோளாக எடுத்துக்காட்டி, உண்மையில் அரசுரிமை எதுவுமில்லை யென்றும் கூறிவிட்டுப் பேசியதாவது:—

"இந்தியாவுக்குச் சுயராஜ்யம் வருவதால் இவர்களுடைய 'அரசுரிமை' இல்லாமற் செய்யப்படுமென்று செய்யும் வாதத் திற்கு ஆதாரமில்லாமல் போகின்றது. பிரிட்டிஷ் இந்தியாவி லுள்ள ஜனங்களுக்கு எவ்விதத்திலும் பொறுப்பற்றதாயும், ராணுவ பலத்தைக் கொண்டு நிலைத்து நிற்பதாயுமுள்ள அந்நிய கவர்ன்மெண்டிற்குக் கீழ்ப்பட்டிருக்கும் நிலைமை தங்கள் கௌர வத்திற்குகந்ததென இந்திய சமஸ்தானங்களால் கொள்ளக்கூடுமா னால், இவை சுயேச்சை வாய்ந்ததாயும், சுய ஆட்சி உரிமை வாய்ந்த தாயுமுள்ள இந்தியாவின் சமமான அந்தஸ்துள்ள பங்காளிகளாக இருப்பது தங்கள் கௌரவத்திற்கு உகந்தது என்று சுலபமாகக் கருதுமென்பதிலும் ஐயமில்லை. இந்திய சமஸ்தானாதிபதிகளை இந்தியா சுயராஜ்யம் அடைவதற்குத் தாங்கள் சாதகமாக இருப்ப தாகத் தெரிவித்திருக்கின்றனர். இந்தியத் தலைவர்களும் சுய ராஜ்யம் பெற்ற இந்தியாவில் சமஸ்தானாதிபதிகளுக்குக் கௌரவம் வாய்ந்த பதவி ஏற்படும்படி செய்வார்களென்பதில் எனக்குச் சந்தேகமில்லை.

சுதேச சமஸ்தானங்களில் மன்னர்களின் நேரான ஆட்சியே முக்கியாம்சமாக இருக்கிறதென்பதில் ஐயமில்லை. இதனால் சில சௌகரியங்கள் இருக்கலாம்; ஆனால் பிரதிகூலங்களும் இல்லாமற் போகவில்லை. பிரிட்டிஷ் ராணுவ பலத்தால் சுதேச சமஸ்தானாதிபதி ஆதரிக்கப்படுகின்றார். பிரிட்டிஷ் ரெஸிடெண்டினால் ராஜ்யம் நடத்தப்படுகிறது. இதைவிட ஒழுங்கீனமான அரசியலுக்கு வேறு சாதனம் எதுவும் அவசியமில்லையென்பது திண்ணம் என்று ஸர் ஹென்ரி லாரன்ஸ் குறிப்பிட்டிருக்கிறார். சமஸ்தானாதிபதிகள் விவேகிகளாகவும் நேர்மையாளர்களாகவும் இருந்து, அவர்களது வார்சுகளும் அப்படியே இருந்தால், சமஸ்தானங்களைப் பொன்னுடாகச் செய்யலாமென்றும், ஆனால் அளவு கடந்த அதிகார மிருப்பதால் பலவித ஆசைகளுக்காளாகி வீழ்ச்சியுறுகின்றார்களென்றும் ஸர் ஜான் ஸ்டிராட்சி குறிப்பிட்டிருக்கிறார். சில சமஸ்தானாதிபதிகள் இந்தியாவை விட்டே வெளியே போகாமலிருக்க, சிலர் எப்பொழுதாவது தங்கள் சமஸ்தானங்களைவிட்டுப் போகிறார்களென்றும், சிலர் அடிக்கடி அயல் நாடு சென்று கண் மூடித்தனமாக ஆடம்பரச் செலவு செய்து, தமது பிரஜைகளைக் கஷ்டத்திற்குள்ளாக்குகின்றார்களென்றும் மிஸ்டர் லெவெட் பிரேஸர் கூறுகின்றார்.

சமஸ்தானாதிபதி நேராக ஆளாததால் உண்டாகும் கேடுகளைப்பற்றி எனக்குத் தெரிந்ததைச் சொல்லுகிறேன். நான் புதுக்கோட்டை சமஸ்தானத்தைச் சேர்ந்தவன். இதன் சமஸ்தானாதிபதி 20 வருஷ காலமாக சமஸ்தானத்திலேயே இல்லை. ஆதலால், அவருக்கு அவரது பிரஜைகளையும் தெரியாது, பிரஜைகளுக்கும் அவரைத் தெரியாது. சில வருஷங்களுக்கு முன் அவர் தமது அதிகாரங்களைத் துறந்து, தமது சகோதரரையே ரீஜெண்டாக நியமித்தனர். இவ்வாறு அதிகாரங்களைத் துறந்ததற்காக அவருக்கு அந்த எளிய சமஸ்தானத்தில் சேர்த்துவைத்திருந்த நிதியில் பாதித் தொகையான 20 லக்ஷம் ரூபாய் இனாமாகக் கொடுக்கப்பட்டது. இச்சமஸ்தானத்தின் வருட வருமானம் 20 லக்ஷம் ரூபாய்க்குக் கம்மியேயாகும். இப்பொழுது அவர் ஒரு க்ஷண நேரம்கூட சமஸ்தான காரியங்கள் சம்பந்தமாய் கவனம் செலுத்துவதில்லையாகினும், அவருக்கு ஏற்பட்ட அல்லவன்ஸ் வழக்கப்படிக் கொடுக்கப்பட்டுவருகிறது. இதனால் எல்லா சமஸ்தானங்களுக்கும் உடனே வேண்டியிருக்கும் சீர்திருத்தம் யாதெனில், அரசரது நேரான ஆட்சிக்குப் பதிலாக சட்டபூர்வமாக உள்ள ஆட்சியேயாகும்.

சமஸ்தானங்களில் செய்யவேண்டிய சீர்திருத்தங்கள்:—(1) சமஸ்தானாதிபதியின் சொந்த சொத்திற்கும், சமஸ்தானத்தின்

வருவாய்க்கும் திட்டமான வித்தியாசமிருப்பது வரையறுக்கப் படவேண்டும். அதனை நிரந்தரமாகக் கையாண்டு வரவேண்டும். சமஸ்தானாதிபதிக்குத் திட்டமான தொகை செலவிற்காகக் கிடைக் கக்கூடியதாக இருக்கவேண்டும். (2) சட்டங்கள், உரிமைகள், சம்பிரதாயங்கள் இடைவிடாமல் அனுஷ்டிக்கப்படுமென்று நம்புவ தற்கு நிரந்தரமான உறுதிமொழி வேண்டும். சட்டங்களைத் தகுந்த சட்ட சபைகளே மாற்ற இயலும்படி செய்யவேண்டும். (3) நீதி பரிபாலனம் சுயேச்சையுடன் தன்னந்தனியாக நடை பெறும்படி செய்யவேண்டும். ஒழுங்காக அமைக்கப்பட்ட நீதி ஸ்தலங்கள் மூலமே நீதி பரிபாலிக்கப்படவேண்டும். (4) திட்ட மான விதிகளை ஆதாரமாகக் கொண்டு வரிகளை விதித்து வசூலிக்க வேண்டும். நில சம்பந்தமான பாத்தியதைகள் எல்லாம் நிர்ண யிக்கப்பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். சட்டப்படி அல்லாமல் புதிய வரி எதுவும் விதிக்கக் கூடாது. அரசர் சமஸ்தானத்தின் நிர்வாக கவர்ன்மெண்டில் நேரில் சம்பந்தப்படக்கூடாது. அவர் தம்மால் தெரிந்தெடுக்கப்பட்டவர்களாயும், ஜனப் பிரதி நிதிகளாலான சட்டசபைக்குப் பொறுப்பாளிகளாக உள்ளவர்க ளாயுமிருக்கும் மந்திரி அல்லது மந்திரிசளிடம் நிர்வாக கவர்ன் மெண்டை ஒப்புவித்துவிடவேண்டும். (5) சீர சுதந்திரம், கூட்டங்கூடும் சுதந்திரம்,—இவைகளைச் சமஸ்தானப் பிரஜை களுக்குக் கொடுத்துவிடவேண்டும். இந்த சீர்திருத்தங்களைச் செய்துவிட்டால், சமஸ்தானாதிபதிகளைக் கண்டு பயப்பட வேண் டியதில்லை. அவர்கள் தங்களுடைய களியாட்ட ஆசைகளையும், கோப தாபங்களையும் முன்போல் தீர்த்துக்கொள்ள முடியாமற் போகுமென்பது நிச்சயம். இந்தக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டு அவர்கள், இரேட் பிரிட்டனுக்கு அதன் அரசர் வழிகாட்டியாக இருப்பதுபோல் சுதேச சமஸ்தானங்களுக்கும் இவர்கள் வழி காட்டிகளாக இருக்கலாம். இவர்கள் திறமை, நல்லொழுக்கம், பொறுப்புணர்ந்து கடனாற்றும் தன்மை,—இவை யுடையவர்களாக இருந்தால், இவர்கள் அத்தன்மைகளைத் தற்பொழுதைவிட நன்றாகக் கையாளக் கூடும். இவர்களுடைய சிறந்த நண்பர்கள் கூட இவர்களுடைய தற்கால முறையே நிரந்தரமாக இருக்கு மென்று எதிர்பார்க்கவில்லை. (7) பிரிட்டிஷ் இந்தியாவில் நடை பெறுவது போலவே சமஸ்தானங்களிலும் தவறுகள் நடந்தால், பொதுஜனக் கண்டனங்கள் அதிகரிக்கும். அதினின்று தங்களைத் தப்பிவிக்கவேண்டுமெனக் கோர சமஸ்தானாதிபதிகளுக்கு உரிமை கிடையாதென்று லார்ட் கர்ஸன் கூறியிருக்கிறார். இதனால் தங்கள் சமஸ்தானங்களில் ஜனநாயக முறைகளை அமுலுக்குக் கொண்டு வரும்படி சமஸ்தானாதிபதிகளை நான் கேட்டுக்கொள்கின்றேன். தற்காலம்போல் பிரிட்டிஷ் ராணுவ பலத்தைக்கொண்டு இந்த

சமஸ்தானங்கள் நடைபெறுவது பிரஜைகளுக்கோ, சமஸ்தானாதிபதிகளுக்கோ, கண்ணியத்தை அளிக்கக்கூடியதாக இல்லை. இதைத் தங்களுக்குள்ளோ, அல்லது பிரிட்டிஷ் கவர்ன்மெண்டடனோ, போராடிக்கொண்டிருக்க வேண்டிய காலம் தற்பொழுதில்லை. இதனால் பொதுஜன அபிப்பிராயப்படி பெரும் பான்மையோர்க்கு ஏராளமான நன்மையை அளிக்கக்கூடிய முறையில் தங்கள் ராஜாங்கம் நடைபெறும்படி செய்ய வேண்டும். பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் சுதேச சமஸ்தானங்களைத் தற்பொழுது போல் பிரிட்டிஷ் ராஜாங்கத்தின் பாதுகாப்பிற்காக ஒரு அரணாகவே வைத்திருக்க விரும்புவார்களென்று நான் நிச்சயம் நம்புகிறேன். இந்திய சமஸ்தானாதிபதிகள் சுயராஜ்யத்திற்கு விரோதமாக இருக்க வேண்டுமென்று நம்மை ஆளுகின்றவர்கள் விரும்புவார்களென்று மிஸ்டர் லெவெட் பிரேஸரது கூற்றிலிருந்து தெரிகிறது இந்திய சமஸ்தானாதிபதிகள் காலச் சக்கரத்தின் பயனாக சுயராஜ்யத்திற்காகப் போராடுகின்றவர்களின் சார்பாகவே நிற்பார்களென நம்புகிறேன். தனியாக இருக்க முடியாத ஸ்திதியுள்ள சமஸ்தானங்கள் பக்கத்திலுள்ள சமஸ்தானங்களுடன் சேர்ந்துகொள்ளலாம். இது அவற்றின் இஷ்டத்தைப் பொருத்தது. அவை தனியாக இருக்க விரும்பினால், இந்தியா கவர்ன்மெண்ட் சுயராஜ்யத் திட்டத்தில் அவை தனி ராஜீய ஸ்தாபனங்களாக இருக்க வகை செய்ய வேண்டும். பெரிய சமஸ்தானங்கள் தன்னுள் சுயேச்சை வாய்ந்ததாயும், ஆனால் பொது விஷயங்களில் இந்தியா கவர்ன்மெண்டுடன் ஐக்கியப்பட்டதாயும் இருக்கவேண்டும். தற்பொழுது போல் சுயராஜ்ய மேற்பட்ட பிறகும் பாதுகாப்பு, ரெயில், கடற் சுங்கம் போன்ற விஷயங்களில் தேசிய கவர்ன்மெண்டுக்கு அதிகாரமிருக்கும். அதாவது ஜனப் பிரதிநிதிகளைக் கொண்ட (சமஸ்தானப் பிரதிநிதிகளும் கொண்ட) பார்லிமெண்டிற்கு ஜவாப்தாரித்துவம் வாய்ந்ததாக இருக்கும் நிர்வாகிகளால் இது கவனிக்கப்படும். மற்ற சர்வீஸுகளெல்லாம் பிரிட்டிஷ் மாகாணங்களிலுள்ள சட்ட சபைகளின் அதிகாரத்திற்குட்பட்டவையாகப் போய்விடும். இந்திய சமஸ்தானங்களுக்கு இம்மாதிரி விட்டுக்கொடுக்கப்படும் அதிகாரங்கள் சமஸ்தான அதிகாரத்திற்குட்பட்டனவையாக இருக்கவேண்டும். சமஸ்தானாதிபதிகளின் பொதுச் சபை ஒன்றை ஸ்தாபிக்க முன்னர் முயற்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. சுதேச சமஸ்தானங்களின் பொதுவான விஷயங்களையும் பிரிட்டிஷ் இந்தியாவையும் இவற்றையும் சேர்த்துப் பாதிக்கின்றதாயும், ஏகாதிபத்தியத்தின் இதர பாகங்களையும் இவற்றையும் சேர்த்துப் பாதிக்கின்றதாயும் உள்ள விஷயங்களைப்பற்றியே இராஜப்பிரதிநிதி இச்சபையின் ஆலோசனையைக் கேட்பாரென்றும், சமஸ்தானங்களின் உள்நாட்டு விஷயங்கள், இந்தியா கவர்ன்மெண்டிற்

கும் தனிப்பட்ட சமஸ்தானங்களுக்கும் உள்ள சம்பந்தா சம்பந்தம்,—இவற்றைப்பற்றி இம் மன்னர் சபை கவனிக்காதென்றும், சுதேச சமஸ்தானங்களின் தற்கால உரிமை, செயற் சுதந்திரம்,—இவை சற்றும் பாதிக்கப்படாதென்றும் அரசர் பெருமான் இச் சபையை ஏற்படுத்தியபொழுது குறிப்பிட்டுள்ளார். இதனால், இச்சபை பிரிட்டிஷ் இந்தியாவிற்காவது, சுதேச சமஸ்தானங்களுக்காவது உண்மையில் நன்மை எதுவும் உண்டாக்காது. முக்கியமான சுதேச மன்னர் பலர் அதற்குக் கொடுக்கும் சொற்ப ஆதரவிலிருந்தே அது அவர்களுக்குப் பிடிக்கவில்லையெனத் தெரிகிறது. இது தற்காலிக ஏற்பாடாக இருக்கலாம். இந்த மகாநாடு ஒரு கமிட்டியை நியமிக்கவேண்டும். அது காங்கிரஸ் முதலிய ஸ்தாபனங்கள் நியமிக்கும் கமிட்டிகளுடன் கலந்தாலோசித்து சுயராஜ்ய அமைப்புத் திட்டத்தை வெளியிடும்பொழுது சுதேச சமஸ்தானங்களுக்கான அரசியலமைப்புத் திட்டத்தையும் தயாரித்து வெளியிடும்படி செய்யவேண்டும்.

பிரிட்டிஷ் அதிகாரிகளின் அங்கீகாரத்தைப் பெறுவிட்டால் சுதேச சமஸ்தானங்களில் பட்டத்திற்கு வருகின்றவர்களின் உரிமை செல்லாது என்று இந்தியா கவர்ன்மெண்ட் 1884-ம் வருஷத்தில் எழுதியது. 1891-ம் வருஷத்திலும் பிரிட்டிஷ் கவர்ன்மெண்டின் அங்கீகாரத்தைப் பெற்றுலொழிய இது செல்லாதென இந்தியா மந்திரி கூறினர். அரசரது அங்கீகாரத்தைப் பெற்று ஹிந்து ராஜாக்களை சுவீகரித்துக்கொள்ள உரிமை பெற்றிருப்பது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. புத்திர சந்தானமிருப்பதைப் பொருத்தே ஹிந்து ராஜ குடும்பங்கள் நிலைத்து ராஜாங்கம் நடத்திவந்திருப்பதென்று கருதவேண்டியதில்லை. சொந்த வார்சு இல்லாவிட்டால் ஹிந்து லாப்படி செல்லக்கூடிய அடுத்த வார்சு பட்டத்திற்கு வருவது செல்லுபடியுள்ளதென்பது அங்கீகரிக்கப்படவேண்டும். முஸ்லீம் சமஸ்தானங்கள் விஷயங்களிலும் இம்மாதிரி உறுதிமொழி அளிக்கப்பட்டிருக்கிறது. இங்கும் முஸ்லீம் சட்டப்படி செல்லக்கூடிய வார்சு பாத்தியதை அங்கீகரிக்கப்படவேண்டும். புதுக்கோட்டை சமஸ்தானத்து வார்சு விஷயமாய் எனக்கு மிகுந்த சிரத்தை இருப்பதால் நான் இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கிறேன். மேலும் அது, இவ்விதமான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டால் மற்ற சமஸ்தானங்களையும் பாதிக்கக்கூடிய கொள்கையைப் பொருத்த ஒரு பெரும் கொள்கையைப் பற்றியதாயிருக்கிறது. புதுக்கோட்டை அரசருக்கு ஆஸ்திரேலிய ஸம்ஸாரத்திற்குப் பிறந்த குமாரன் ஹிந்துவில்லை. மிதாக்ஷராவில் கூறியபடி ஒரு தாஸி புத்ரனுமாகமாட்டார். ஆதலால் அவர் சமஸ்தானத்திற்கு வார்சாக முடியாது. வார்சாகலாமென்று பிரிட்டிஷ் கவர்ன்

மெண்டு அங்கீகரித்தால், அதி சீக்கிரத்தில் இந்திய சமஸ்தானங்களின் அரியணைகளில் ஹிந்துக்களாகவாவது, அல்லது முஸ்லிம்களாகவாவது இல்லாத (அவர்கள் வேறு எந்த மதத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி) பற்பல ஜனங்கள் அமர்வதற்கு ஹேதுவாகும். புதுக்கோட்டை ஜனங்கள் இவ்விதமான சட்ட விருத்தமானவும், ஹிந்து வார்ஸில்லாததுமான வார்ஸை அந்த முக்கியமான ஹிந்து சமஸ்தானத்திற்கு விரும்பவில்லை. புதுக்கோட்டையில் அடக்குமுறையானது கையாளப்படுவதால் ஜனங்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட முடியாமலிருக்கிறது. நான் இங்கு என் ஸ்தானத்திலிருந்து புதுக்கோட்டையில் அதிகாரம் வகிப்பவர்களுக்கும், இந்தியா கவர்ன்மெண்டுக்கும், புதுக்கோட்டை ஜனங்களின் மத சம்பந்தமான தீவிர உணர்ச்சிகளையும், மனோபாவங்களையும் உல்லங்கனம் செய்யத் துணியலாகாதென்று கூற விரும்புகிறேன்.

நமது விரோதிகள் விரும்பினாலும் சரி, விரும்பாவிட்டாலும் சரி, இந்தியா சீக்கிரத்தில் சுயராஜ்ய மடையப்போகிறதென்பது உண்மை. சமஸ்தானாதிபதிகளும் நாமும் இந்தியாவிற்குச் சுதந்திரம் பெறுவதற்கான போராட்டத்தில் நமக்குரிய பங்கைச் செய்து முடிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அப்பொழுதுதான் சுயராஜ்யம் பெற்ற இந்தியாவில் நமக்குரிய பதவி நமக்கு நிச்சயமாகக் கிட்டும். இந்திய சமஸ்தானங்களும் போதிய பிரதிநிதித்துவம் பெற்றதாயும், முற்றிலும் ஜனப்பிரதிநிதிகளாலேயே ஆனதாயும் உள்ள பார்லிமெண்டிற்கு முற்றிலும் ஜவாப்தாரித்துவம் வாய்ந்ததாயுள்ள பலமான மத்திய கவர்ன்மெண்ட் டில்லியில் இருக்கவேண்டும். இது பொது விஷயங்களையே கவனிக்க வேண்டும். மாகாணங்கள் சாத்தியமான வரை பாஷா வாரியாகப் பிரிக்கப்பட வேண்டும். இந்திய சமஸ்தானங்கள், அல்லது சிறிய சமஸ்தானங்களின் தொகுப்பு,—இவை உள்நாட்டு விஷயங்களில் பூரண சுதந்திரம் பெற்றிருக்க வேண்டும். தாய்நாட்டின் பொதுநலத்திற்காக வேலை செய்வதில் ஒன்றுக்கொன்று போட்டி போடக்கூடிய ஸ்திதியில் இருந்துவர வேண்டும்.

இந்தியாவின் எதிர்கால நிலைமையைப்பற்றி நான் காணும் கனவு இதுதானாகும்.”

வரவேற்புக் கமிட்டித் தலைவர் பிரசங்கம் படித்து முடிந்தவுடன் பண்டிட் தாரநாத் ராவ் ஸ்ரீமான் ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் அக்கிராசனம் வகிக்க வேணுமாய்ப் பிரார்த்தித்தார். இப்பிரேரணையை Mr. மணிலால் கோதாரி ஆமோதித்தார்; Mr. D. V. கோக்லே, ஸ்ரீமதி கமலாம்பாள் ஸாகிபா, Mr. ஹொஸ

கப்பா கிருஷ்ணாராவ், Mr. B. S. பதிக் முதலானவர்கள் ஆதரித்துப் பேசினர்.

Mr. ஸ்ரீனிவாசய்யங்காரவர்களுக்கு மாலை சூட்டிய பின் அவர் அக்கிராசனத்தில் அமர்ந்தனர்; பம்பாய் மகாநாட்டின் அக்கிராசனர் திவான் பகதூர் M. ராமச்சந்திர ராவ் அவர்களுக்கும் மாலை சூட்டப்பட்டது.

மிஸ்டர் S. ஸ்ரீநிவாசய்யங்கார் M. L. A. அவர்களின் பிரசங்கம்.

மிஸ்டர் S. ஸ்ரீநிவாசய்யங்காரவர்கள் பேச எழுந்தனர். கரகோஷங்கள் முழங்கின. அவர் செய்த பிரசங்கத்தின் சாராம்ஸம் பின்வருமாறு:—

"இவ்விஷயமாக நான் வெகு காலமாக யோசனை செய்து வந்திருக்கிறேன். இந்திய அரசியல் திட்டம் தயாரிக்கும் விஷயமாக நான் பல சமஸ்தானப் பிரஜைகளுடனும், தலைவர்களுடனும் கலந்து யோசனை செய்துகொண்டிருக்கிறேன். இந்திய சமஸ்தானங்களிடம் எனக்குப் பூரண அநுதாபமிருக்கிறதென்பதை நான் முதன் முதலாக அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்திய சமஸ்தானங்களின் குறைகள் யாவை, அவற்றிற் கென்னன்ன பரிகாரம் என்பதை நான் விஸ்தரிக்க வேண்டியதில்லை. சில தினங்களுக்கு முன்பாக பம்பாயில் ஸ்ரீமான் ராமச்சந்திர ராவும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் இப்பொழுதும் அவைகளை எடுத்துக்கூறியிருக்கின்றனர். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யருக்கு சமஸ்தானத்தைப்பற்றி நன்கு தெரியும். அவர் மீது புதுக்கோட்டை தர்பார் அரெஸ்டு வாரண்டு பிறப்பித்தார்களாம். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி எப்பொழுதும் காரியத்திலும் வேலையிலுமே கருத்தாயிருப்பவர். ஆகையால்தான் அவருக்கு எதிர்ப்பு அதிகமாயிருக்கிறது. இன்று நான் இரண்டு முக்கிய விஷயங்களைப்பற்றித்தான் பேசவிருக்கிறது. தேசியம், ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை, — இவ்விரண்டுமே தற்காலத்தில் முக்கியமாக நமது கவனத்தைக் கவரவேண்டும்.

நேற்று கூடிய காங்கிரஸ் கமிட்டியிலும், விஷயாலோசனைக் கமிட்டியிலும் சுதேச சமஸ்தான சுதந்திரத்துக்கு வேண்டியதைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்திருக்கிறது. இது காங்கிரஸில் அங்கீகரிக்கப்படுமென்றே நான் நம்புகிறேன். இனி மேல் காங்கிரஸ் சுதேச சமஸ்தானங்களில் சிரத்தை கொள்ள முன்வருமென்பதில் சந்தேகமில்லை. இவ்விதம் வெகு காலம் முன்னரே ஆரம்பித்திருக்கவேண்டும். இந்திய சமஸ்தான, பிரிட்டிஷ் சமஸ்தானப் பிரஜைகள் என்பது எனக்குப் பிடிக்க

வில்லை. நாம் யாவரும் சுதந்திரம் வாய்ந்த தேசிய வாசிகள் என்றுதான் கொள்ளவேண்டும். இனிமேல் ஒருவரும் பிரஜைகள் என்று சொல்லிக்கொள்ளக் கூடாது. அது அடிமைத்தனத்தையே குறிக்கிறது. சமஸ்தானங்களில் நடக்கும் நிர்வாக ரீதி மிக அட்டூழியமாக விருப்பதாகக் கேள்வியுறுகிறோம். பிரிட்டிஷ் இந்தியர்கள் கயானு முதலிய தேசத்து இந்தியரிடம் கொண்டுள்ள சிரத்தையை சமஸ்தான இந்தியர்பாலும் ஏன் கொள்ளக்கூடாது? மைசூர் முதலிய சமஸ்தானங்களில் பத்திரிகை அடக்குமுறைச் சட்டமிருப்பதாகக் கேள்வி. தென் இந்தியாவைவிட வட இந்தியாவில் நிர்வாகம் இன்னும் மோசமாக இருப்பதாகத் தெரியவருகிறது. இந்திய சமஸ்தான வாசிகள் அதிக வரி விதிக்கப்படாமலும், அதிக சுயேச்சையுடனுமிருக்கிறார்களென்றும், அங்கு ஜாதி வித்தியாசம் கிடையாதென்றும், அவர்கள் சந்தோஷமாயிருக்கிறார்களென்றும் பிரிட்டிஷ் சமஸ்தான வாசிகள் எண்ணி வருகிறார்கள். இது தப்பிதமான அபிப்பிராயம். சுயேச்சை அபிப்பிராயத்தை வெளியிடும் பத்திரிகைகள் அங்கு வியாபிக்கமுடியாமல் தடுக்கப்படுகின்றன. நிலைமை என்னவென்பதை எடுத்துக்கூறும் பத்திரிகைகள் பிரிட்டிஷ் சமஸ்தான வாசிகளுக்குக் கிடைப்பதில்லை. இந்திய சமஸ்தானப் பத்திரிகைகள் பிரிட்டிஷ் சமஸ்தானப் பத்திரிகை முறையில் நடத்தப்பட வேண்டும். ஸ்ரீமான் கோகலே இதற்கேற்ற முயற்சியெடுத்துக்கொள்வதாக நான் கேள்வியுறுகிறேன்.

இரண்டாவதாக, இத்தகைய மகாநாடுகள் கூடி பிரிட்டிஷ் இந்தியத் தலைவர்களும் அங்கு வந்து விஷயங்களைக் கவனிக்க உதவி புரிந்தால், அதனால் ஏற்படும் நன்மை பலவாகும். இத்தகைய மகாநாடுகள் இந்திய சமஸ்தானங்களில் கூடுவது சிரமமாக விருப்பதை மகாராஷ்டிர நண்பர்கள் அறிவார்கள். புதுக்கோட்டை சமஸ்தானத்தில் ஒரு வழக்கில் தீர்ப்புக் கூறியுள்ள இரு கனவான்கள், சமஸ்தான அதிபதிகள் கடவுளின் பிரதிநிதி என்று கூறியிருக்கின்றனர். மதத்தையும், தத்துவத்தையும் கொண்டு தீர்ப்புக் கூறுவது விசித்திரமாயிருக்கிறது. மதத்தை இவ்விதம் பாழ்படுத்துவதை நான் கண்டிக்காமலிருக்க முடியாது. சமஸ்தான அரசர்கள் அநீதமாக நடந்துகொள்வதில்லையா? பல அரசர்கள் ஹிந்து தர்மப் பிரகாரம் முன்காலத்திலிருந்ததுண்டு. ஆனால், தற்சமயம் கிறிஸ்தவ மத சம்பந்தத்தினாலும், மேல்நாட்டு போதனையினாலும் பல அரசர்கள் தர்மாவை உதறித் தள்ளிவிட்டு நிர்வாகம் நடத்துகிறார்கள், பழைய கதைகளை புராணமாகக் கொண்டு யோசனை செய்யும் வழக்கம் ஒழியவேண்டும். பழைய கால நிலைமை வேறு, தற்கால நிலைமை வேறு. தற்கால

ராஜாக்கள் ஊரிலிருப்பதில்லையென்றும், மேல் நாட்டுப் பழக்க வழக்கங்களில் மோகம் கொண்டிருக்கிறார்களென்றும் தெரிய வருகிறது. ராஜாக்கள் ஊரிலில்லாமல் பிரிட்டிஷ் கவர்னர், ராஜப் பிரதிநிதிகளின் ஆட்கள் ஆட்டிவைக்குமாறு இருந்து வருகிறது. இதில் சமஸ்தான வாசிகளுக்கு என்ன பந்தோபஸ்து இருக்கிறது? அரசர்கள் பந்தோபஸ்தாயிருக்கிறார்கள்.

இந்திய சமஸ்தான வாசிகள் பிரிட்டிஷ் இந்தியரைப் போல் ஒரு திட்டத்தைக்கொண்டு வேலை செய்யவேண்டும். சுதந்திர ஆட்சியென்பதையும், அதன் பொறுப்பையு முணர்ந்து, அதைப் பெறப் பிரயத்தனப்பட வேண்டும். சுதந்திரம் வாய்ந்த கவர்ன் மெண்டென்பது விசாலமான வாக்காளர் தொகுதியினுல் தேர்ந் தெடுக்கப்பட்டவர் இஷ்டப் பிரகாரம் நிர்வாகம் நடந்துவர வேண் டியதாகும். இந்திய சமஸ்தானங்களில் இருக்கும் சட்டசபைகள் ஒருவித சுதந்திரமும் அதிகாரமும் பெற்றிருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. வாக்காளர்கள் சரியாக விருந்தால்தான் பொறுப் பளிக்கலாமென்பது சரியில்லை. பொறுப்புற்ற ஆட்சி அளிக்கப் பட்டால்தான் வாக்காளர்கள் பொறுப்புற்றவர்களாக இருக்க வேரும். மேல்நாடுகளில் சுதந்திர கவர்ன்மெண்ட் ஏற்பட்ட பிறகுதான் வாக்காளர் நிர்வாகத்தைப்பற்றி அதிக சிரத்தை எடுத் துக்கொள்ள ஆரம்பித்தனர். மேல்நாடுகளில் பொறுப்புற்ற நிர் வாகம் எவ்வழியில் ஏற்பட்டதோ அவ்விதம் சமஸ்தான வாசிகள் சமூக சச்சரவுகளுக் கிடம் கொடுக்கக்கூடாது. நியமனமென்பது முற்றிலும் விஷமத்தனமானது. நியமனம் எல்லோரையும் கெடுத்துவிடுகிறது. நியமனத்திற்கு ஆசைப்படுபவன் நம்பக் கூடியவனில்லை. அவன் கௌரவம் வாய்ந்தவனல்ல. ஆகையால் சமஸ்தான வாசிகள் நியமனத்திற்கு இணங்கவே கூடாது. பொக்கிஷ அதிகாரம் ஜனப்பிரதிநிதிகளடங்கிய சட்டசபைக் குட்பட்டிருக்க வேண்டும். ஆரம்ப முதல் பூரண சுதந்திரத்திற் காகவே கிளர்ச்சி செய்ய வேண்டுமேயல்லாது மிதவாதிகளைப் போல் கிடைக்கக் கூடியதைப் பெற முயற்சிக்கவே கூடாது. இந்தப் பிடிவாதமிருந்தால்தான் ஒரு கட்டுப்பாடும் கண்யமும் ஏற்படும். நீங்கள் கோருவது கிடைக்கும். என் அநுபவத்தைக் கொண்டே நான் இந்த யோசனை கூறுகிறேன்.

முடிவாக ஒரு வார்த்தை. நீங்கள் பிரிட்டிஷ் இந்தியர்களைப் போல் தியாகத்திற்குத் தயாராயிருக்கவேண்டும். கஷ்டப்படத் தயாராயில்லாவிட்டால் ஒன்றும் பெறமுடியாது. சுயேச்சையை விரும்புவோர் தியாகத்திற்குத் தயாராயிருக்கவேண்டும்.

சுதேச சமஸ்தானங்களில் அரசர்கள் பரம்பரையாக ஆளு வதை நாம் ஆட்சேபிக்க வேண்டாம். ஆனால், நிர்வாகம் பொது

ஜனப் பொறுப்புக் குட்பட்டிருக்கவேண்டும். சமஸ்தானங்களில் பிரிட்டிஷ் இந்தியாவில் மாகாணங்களுக்கிருக்கும் சுதந்தரமும் அதிகாரமும்தானிருக்க வேண்டும். பாதுகாப்பு விஷயம், பிரிட்டிஷ் இந்தியாவின் மத்திய கவர்ன்மெண்டிற் குட்பட்டிருக்க வேண்டும். இந்தியாவின் பொதுப் பொருளாதார அபிவிர்த்திக் கேற்ற முறைகளை இந்தியா முழுதும் ஒரு மத்ய கவர்ன்மெண்டுக் குட்பட்டுக் கையாளவேண்டும். சமஸ்தானங்கள் சுயேச்சையா யிருக்க ஆசைப்படக்கூடாது. ஒவ்வொரு சமஸ்தானமும் சைனியம் முதல் வைத்துக்கொண்டு சுயேச்சையாக விருப்பதென்றால், பழைய நீதியில் ஒரு அரசர் மற்ற அரசர் மீது படையெடுத்துப் போக முன்வந்துவிடுவார்கள். இதற்கிடம் கொடுக்கவே கூடாது.

இந்தியாவில் சமஸ்தான வாசியாயினும், பிரிட்டிஷ் இந்திய வாசியாயினும், யாவருக்கும் சம உரிமையும், சம அந்தஸ்துமிருக்க வேண்டும்.

என்ன செய்தால் நலம் என்பதைப்பற்றி ஸ்ரீமான்களான ராமச்சந்திர ராவும், சத்தியமூர்த்தியும் சொன்னார்கள். நன்மைக்காக என்ன செய்யக்கூடாதென்றும், எவற்றைத் தடுக்கவேண்டுமென்றும் நான் கூறிவிட்டேன். நான் தலைமை வகிக்கும் காலத்தில் சமஸ்தான நிர்வாக அமைப்பைப்பற்றி எழுதிக்கொடுக்க முயற்சிக்கிறேன். இந்திய சமஸ்தான அதிபதிகளுடைய அன்பையும் ஆதரவையும் பெறவேண்டுமென்பதே என் நோக்கம். அவர்களுடைய நன்மைக்காகவும், தேசத்தின் நன்மைக்காகவுமே நாம் முயற்சித்து வாவேண்டும். ஆரம்பம் முதல் பரஸ்பர நம்பிக்கையுடனும் அன்புடனும், ஜனங்களுள் உயர்வு தாழ்வு பாராட்டாமலும் நீங்கள் வேலை செய்தால், உங்கள் அபிலாஷைகள் பூர்த்தியாகுமென்பதில் சந்தேகமில்லை.

கெட்ட எண்ணம், கெட்ட வழக்கங்களுக்கு இடங்கொடுக்காதீர்கள். சமஸ்தான அதிபர்கள் கெட்டவர் புத்தியைக் கேட்க வழியில்லாதவாறு கட்டுப்பாடாக நிலைச்சி செய்யவேண்டும். தீமையைப் பகிஷ்கரிக்க வேண்டுமென்ற கோட்பாடுடன் வேலை செய்யுங்கள். பொதுஜனங்கள் உணர்ச்சியை அதிபதிகள் அறிந்து, அதற்கேற்ற மதிப்புடன் நடந்துகொள்ளச் செய்ய வேண்டியது உங்கள் கடமையாகும். பொதுஜன சேவையில் ஈடுபடுபவனை ஆசீர்வதிக்க தாராளமாக ஒருவரும் முன்வரமாட்டார்கள். சேவை செய்பவர் ஒரு பிரதிபலனையும் எதிர்பாராது, பூரண அபிமானத்துடன் வேலை செய்யவேண்டும். பொதுஜன சேவையிலிறங்கியதும் தலைமை வகிக்க ஆசைப்படக்கூடாது. அனுபவம் முதிர்ந்து மதிப்பதிகரித்தால் தலைமை தானாக வரும். பொதுஜன சேவையிலிறங்கியதும் மத்தியில் பிறர் தூண்டுதலுக்கிணங்கி

அதிகாரிகளுக் கடிமையாகி விடாதீர்கள். பாரத மாதாவின் விடுதலைக்கு சமஸ்தான வாசிகளும், பிரிட்டிஷ் இந்தியரும் சேர்ந் துழைக்க முன்வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சகோதரர்களாகிய சமஸ்தான வாசிகளின் கஷ்டத்தை நிவர்த்திக்க பிரிட்டிஷ் இந்தியர் தயாராக விருப்பார்கள். இருவரும் பரஸ்பர விடுதலைக் குழைப்போமாக."

மகாநாட்டில் நிறைவேற்றிய தீர்மானங்களில் முக்கியமான வை பின்வருவனவாகும்:—

(1) எல்லா சமஸ்தானங்களிலும் சுயராஜ்யம் அல்லது முழு சுய ஆட்சி யேற்படவேண்டியதே முக்கிய உத்தேசமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது. இந்த லட்சியத்திற்காக எல்லா சமஸ்தானப் பிரஜைகளும் அமைதியான முறையில் உழைக்க வேண்டுமென்று இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

Mr. A. B. சேலம் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, Mr. ஹொஸகோப்ப கிருஷ்ணராவால் ஆமோதிக்கப்பட்டது.

(2) சுயராஜ்யத் திட்டத்தைப்பற்றி ஆலோசிக்க இந்திய காங்கிரஸ் மகாசபையும், மற்ற அரசியல் ஸ்தாபனங்களும் நிய மிக்கும் கமிட்டிகளுடன் ஒத்துழைக்க கீழ்க்கண்ட அங்கத்தினர்க ளடங்கிய கமிட்டியொன்றை இம்மகாநாடு நியமிக்கிறது. சுய ஆசி பெற்ற இந்தியாவில் சுதேச சமஸ்தானங்களுக்குச் சரியான ஒரு அந்தஸ்தை நிர்ணயிக்க இக்கமிட்டி உதவி புரியவேண்டும். Mr. V. அச்சுத மேனனால் பிரேரேபிக்கப்பட்டு, Mr. பெலூர் ஸ்ரீநிவாஸய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டது. கமிட்டி அங்கத் தினர்கள்:— ஸ்ரீமான்கள் S. சத்தியமூர்த்தி, ஹொஸகப்பா கிருஷ்ணராவ், N. அச்சுத மேனன், K. T. மாத்யூ, V. R. நாயக், D. V. கோக்லே, S. விசுவனாதய்யர், B. S. பதிக், மணிலால் கோதாரி, ராகவேந்திரராவ் சர்மா, S. T. டிசேவிட், புஸ்டாகி, G. R. அபயங்கர், K. T. பாஷ்யமய்யங்கார், A. B. சேலம், K.T. மாத்யூ (காரியதரிசி).

(3) கீழ்க்கண்ட சீர்திருத்தங்களை உடனே சுதேச சமஸ் தானங்களி லேற்படுத்தவேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக் கிறது:—

மன்னர்களின் சொந்த சொத்திற்கும் சமஸ்தான வருமானத் திற்கும் திட்டமாக வித்தியாஸம் செய்யப்பட வேண்டும். மன்ன ருக்கு சொந்தத்தில் ஒதுக்கப்படும் தொகை போக பாக்கி வரு மானத்தை தருந்த சட்டசபையில் ஆஜர் செய்யவேண்டும். புரா தன உரிமை, பழக்க வழக்கங்கள் என்றும் சட்டங்களால் பாது காக்கப்படுமென்ற உறுதி ஏற்படவேண்டும். இவை சம்

பந்தமான சட்டங்களில் மாறுதல் செய்வதென்றால், சட்டசபை யே அந்த மாறுதலைச் செய்யவேண்டும். சுயேச்சை வாய்ந்த நீதி ஸ்தலங்களையும், நீதிபதிகளையும் ஏற்படுத்த வேண்டும். வரி முதலியவைகள் விதிகளின்படியும், சட்டங்களின்படியும் விதிக்கப் பட வேண்டும். சில பாத்தியங்கள் சட்டத்தின் மூலம் நிர்ண யிக்கப்பட வேண்டும். சட்டசபையின் அனுமதியின்றி புதிய வரி போடக்கூடாது. நிர்வாக கவர்ன்மெண்டு மந்திரியிலாலோ அல்லது பல மந்திரிகளாலோ நடத்தப்பட வேண்டும். இவர்கள் சட்டசபைக்கு ஜவாப்தாரியாக விருக்கவேண்டும். பிரஜைகளின் உரிமைகளும், பேச்சு சுதந்திரமும், பத்திரிகைகளின் சுதந்திர மும் சிறிதும் பாதிக்கப்படக்கூடாது. மத விஷயங்களில் பூர்ண சுதந்திர மளிக்கவேண்டும். எல்லா அடக்குமுறைச் சட்டங்களை யும் ரத்து செய்ய வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத் தினர்களடங்கியதாகியதாகவே சட்டசபைகள் இருந்து வரவேண் டும்.

Mr. S. விசுவனுதய்யரவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, Mr ராகவேந்திர ராவ் சர்மாவால் ஆமோதிக்கப்பட்டது.

(4) சுதேச மன்னர்கள் நீண்ட காலம் வெளியிடங்களுக் குப் போய் அதன் மூலம் சமஸ்தான நன்மைகளைக் கவனிக்காத துடன் சமஸ்தானங்களுக்கு அதிகச் செலவையும் உண்டுபண்ணி வருவதை இக்கூட்டம் கண்டிக்கிறது.

Mr. ராகவேந்திர சர்மாவால் பிரேரேபிக்கப்பட்டு, Mr. J. S. கரண்டிகரால் ஆமோதிக்கப்பட்டது.

(5) இம்மகாநாட்டின் உத்தேசங்களை ஜனங்களுக்கு எடுத் துரைத்து பிரசாரம் செய்ய இம்மகாநாடு ஒரு கமிட்டியை நியமிக் கிறது. இக்கமிட்டி நிதி சேர்க்கவும், இம்மகாநாட்டின் உத்தே சத்தை யனுசரித்து ஒரு நகல் திட்டம் தயாரிக்கவும் இம்மகா நாடு அதிகாரமளிக்கிறது. இக்கமிட்டி அடுத்த மகாநாட்டிற்குத் தனது திட்டத்தை ஆஜர் செய்யவேண்டுமென்றும் இது முடிவு செய்கிறது.

இது அக்கிராஸனரால் பிரேரேபிக்கப்பட்டது. கமிட்டிக்கு 30 அங்கத்தினர்கள் நியமிக்கப்பட்டார்கள். புதுக்கோட்டைக்கு ஸ்ரீமான்களான K. ஸ்வாமிநாதய்யரவர்களும், S. விசுவனுதய்ய ரவர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

(6) ஹிந்து அல்லது முகமதிய சட்டத்திற்கு முரணாக வார்ஸ் பாத்யதையை நிர்ணயிக்கக்கூடாதென்றும், முக்கியமாக கலப்பு விவாகத்தின் மூலம் பிறந்தவர்களுக்கு அரிசுமை யளிக் கக்கூடாதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது. முக்கியமாய்

புதுக்கோட்டையில் ஆஸ்திரேலிய ஸ்திரீக்குப் பிறந்த ராஜாவின் புத்திரனுக்கு அரசுரிமை அளிக்கக்கூடாதெனத் தீர்மானிக்கிறது. அவ்விதம் அளிப்பது சமஸ்தான ஜன நன்மைக்கு எதிரானதாகுமென்று இக்கூட்டம் அபிப்பிராயப்படுகிறது. தவிரவும் அது ஹிந்து சட்டத்திற்கும், ஆசாரத்திற்கும் விரோதமானதாகும். மேலும், புதுக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அதிகாரிகளின் அடக்குமுறையை இக்கூட்டம் பலமாகக் கண்டிக்கிறது.

இத்தீர்மானம் Mr. V. R. நாயக் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, Mr. K. ரெங்கய்யங்காரால் ஆமோதிக்கப்பட்டு, Mr. K. லக்ஷ்மண சர்மாவால் ஆதரிக்கப்பட்டது.

இம்மகாநாட்டிற்கு புதுக்கோட்டை சம்பந்தமாய் ஸ்ரீமான் S. விசுவனுதய்யரவர்கள் காரியதரிசியாக விருந்தார். மகாநாட்டிற்கு சமஸ்தானத்திலிருந்து பல பிரதிநிதிகள் சென்றிருந்தார்கள். சர்க்கார் நிர்வாக சகாயத்தின் பேரிலும் சிலர் அனுப்பப்பட்டிருந்தார்கள். சிட்னி மார்த்தாண்டாவின் சார்பாகப் பேசுவதற்காக ஸ்ரீமான்களான R. வெங்கோப ராவ், S. சொன்னஸாமி அய்யர், கைலாஸம் அம்பலகாரர், பிரெஸ் காஸ்பாண்டென்ட் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸராகவாச்சாரியார் முதலியவர்களும் சென்றிருந்தார்கள். மகாநாட்டில் நடந்த நடவடிக்கைகளைப்பற்றி ஓர் விஷமமான ரிபோர்ட்டெழுதி புதுக்கோட்டை சர்க்காருக்கு அனுப்பப்பட்டதும், அதன் பேரில் ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் மீது மீண்டும் இ. பு. கோட் 108 படி நடவடிக்கை யெடுத்துக்கொண்டதும் இங்கு குறிப்பிடற்பாலது.

22-வது அத்தியாயம்.

அடக்குமுறையின் ஆவேசம்.

ஜனமித்திரன் ராஜத்துவேஷ வழக்கில் அப்பீல் கோர்ட்டு நீதிபதிகள் தீர்ப்புச் சொன்னவுடன் பற்பல பத்திரிகைகள் தங்களுடைய அபிப்பிராயங்களை வெளியிட்டனவென்று முன்னமேயே குறிப்பிட்டுள்ளோம். அவ்வபிப்பிராயங்களில் சிலவற்றை ஜனமித்திரனிலும் தேச ஊழியனிலும் எடுத்துப் பிரசுரம் செய்திருந்தார்கள். அவைகளை சீப் கோர்ட்டாரவர்கள் ஆக்ஷேபகரமாகக் கருதி நோட்டீஸ்கள் கொடுக்கப்பட்டன. அவற்றுள் 'ஜனமித்திரன்' ஆசிரியர் ஸ்ரீமான் S. ராமநாதய்யருக்குக் கொடுக்கப்பட்ட நோட்டீஸ் பின்வருமாறு:—

"இதனுல் உமக்கு உத்தரவிட்டிருப்பது யாதென்றால்:—

ஜனமித்திரன் பத்திரிகையின் ஆசிரியராகிய நீர் சென்ற டிஸம்பர் மீ 2-ந் தேதி வெளிவந்துள்ள பத்திரிகையில் பின் கண்ட விஷயங்களை வெளியிட்டிருப்பதின் மூலம் சீப் கோர்ட்டு நீதிபதிகளுடைய நேர்மையையும், சுயேச்சை புத்தியையும் தாக்கி கோர்ட்டாரவர்களை அவமதித்திருப்பதற்காக உம்மை ஏன் தண்டிக்கக் கூடாதென்பதற்கு டிஸம்பர் மீ 10-உ காலை 11-மணிக்கு அப்பீல் கோர்ட்டில் ஆஜராகி காரணம் தெரிவித்துக்கொள்ள வேண்டியது.

மேலும் நீர் அவ்விதம் ஆஜராகா விட்டால், உம்மையன்னியிலேயே மேற் விஷயம் பைசல் செய்யப்படுமென்பதை நீர் அறியவும்.

வியாசங்களின் விவரம்

1. In the issue of the "Janamitran" of the 2nd of December, 1927

(a) the following portion in the article headed "நமது பத்திராதிபர்":—

"இத்தகைய வழக்கில் சீப்கோர்ட்டு நீதிபதிகள் அரசாங்கத்தாரின் விருப்பத்துக்கு விரோதமாக தீர்ப்புச் சொல்ல வேண்டுமானால் அவர்கள் மிகுந்த சுயேச்சை புத்தி வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். ஆனால் அவ்வித சுயேச்சை புத்தியானது அவர்கள் கொண்டுள்ள ராஜவிசுவாசத்திற்கு முரண்பட்டதாகும். எனவே, நீதிபதிகள் இவ்வாறு தீர்ப்புச் சொன்னது ஆச்சரியமல்ல."

(b) The extract from the 'Hindu' and the Tamil translation thereof and in particular the following portions respectively therein:—

"and the sentence of rigorous imprisonment for one year and a fine of Rs. 200 severe to the point of being vindictive. We are afraid it is incidents like these, not honest and well-intentioned comments, that bring the administration of Indian States into contempt."

"மேலும் இருநூறு ரூபாய் அபராதமும் ஒரு வருஷக் கடுங்காவலும் பத்திராதிபருக்கு விதித்திருப்பதானது மிக கொடூரமானதாகவும் பழிவாங்கும் தன்மையாகவுமிருக்கிறது. இம்மாதிரி சம்பவங்கள்தான் சுதேச சமஸ்தானங்களின் நிர்வாகத்தை அவமதிப்புக்குள்ளாக்குகின்றனவே யல்லாது பத்திரிகாசிரியர்கள்

கண்யமாகவும் தடஸ்தமாகவும் வெளியிடும் அபிப்பிராயக்கள் அவ்வாறு செய்யமாட்டா."

(c) The extract from the "Desaooliyan" published in page 8 of the said 'Janamitran' issue under the heading "ஜனமித்திரன் அப்பீல் தீர்ப்பு—சில சிந்தனைகள்" and in particular the following portions therein:—

"மகாநாட்டில் ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி ஐயர் ஸ்ரீமான் கணபதி சாஸ்திரிகளை அக்கிராஸனப் பிரஸங்கத்தில் அவர் நகசிகை பரியந்தம் ஓர் கனவானென்றும், கண்யதையின் அவதாரமென்றும் பலவாறுகப் புகழ்ந்து பேசினார். நீதிபதிகளிலிருந்து திவான் நியமனத்துக்குப் பொறுக்குவது சரியல்லவென்றும், ஆனல் பிரதம நீதிபதி விஷயத்தில் தாம் ஓர் விலக்குச் செய்ய இஷ்டமென்றும் எல்லையில்லாமல் ஸ்தோத்திரம் செய்தார். இவ்வளவு நரஸ்துதி செய்த ஸ்ரீமான் ஸத்யமூர்த்தி அய்யரின் பேச்சையும், அவர் பேச்சைப் பிரசுரம் செய்தவரையும் எவ்வளவு கண்டித்தாலும் தகும்."

"நமது அரசர் ஓர் இந்தியாவல்லாத ஸ்த்ரீயை மணம் புரிந்த சிக்கலான பிரச்னையை பத்திராதிபர் ஒருவர் சர்ச்சை செய்தால், அது இங்கு ராஜத்துவேஷ குற்றமாகுமென நீதிபதிகள் சட்டமிடுகின்றனர். மன்னர்களைக் காக்க சட்டங்களும் நீதிபதிகளும் இருக்கின்றனர். பிரஜைகளைக் காக்க மன்னருமில்லையேல் எவர் தான் காப்பார். இக்கற்றவருக்குத் தெய்வமே துணை."

and (d) an extract from the "Swadesamitran" published in page 8 of the said Janamitran issue, and more particularly the following portion therein:—

"ஜனமித்திரன் ராஜாங்கத்துவேஷ வழக்கில் கீழ்க் கோர்ட்டு விதித்த தண்டனையைப் புதுக்கோட்டை சீப்கோர்ட்டு ஊர்ஜிதம் செய்துவிட்டதாக செய்தி கிடைத்திருக்கிறது. சீப்கோர்ட்டானது வேறு எவ்வித முடிவுக்கும் வந்திருக்குமென்று நாம் எதிர்பார்க்கவில்லை. பிரிடிஷ் இந்தியாவைப் போலில்லாமல் புதுக்கோட்டையில் சீப்கோர்ட்டு ஜட்ஜு பதவிகளைப் பெறுவதும் நிர்வாகிகளுடைய தயவைப் பொருத்தாகவிருக்கிறது. நியமன அதிகாரம் நிர்வாகிகள் கையிலிருப்பதுபோல் ஒரு ஜட்ஜை வேலையிலிருந்து நீக்கக்கூடிய அதிகாரமும் அவர்களுக்கே இருக்கிறது. இவ்வித நிலமையில் புதுக்கோட்டை சீப் கோர்ட்டு ஜட்ஜுகள் இத்தகைய வழக்குகளில் கவர்ன்மெண்டுக்கு விரோதமான தீர்மானத்திற்கு வரவேண்டுமாயின் அவர்கள் அளவுக்கு மிஞ்சின சுயேச்சை புத்தி வாய்ந்தவர்களாக இருக்கவேண்டும். மனித சுபாவத்தை அறிந்த நாம் அவ்விதம் அளவுக்கு மிஞ்சிய

புத்தியுடையவர்களாக நீதிபதி பதவிகளை வகிப்பவர்களில் அதிகப் பேர்கள் இருப்பார்களென்று எதிர்பார்ப்பதற்கில்லை. இந்த வழக்கிலிருந்து புதுக்கோட்டை சமஸ்தானப் பிரஜைகள் இதுபோன்ற வழக்குகளில் எத்தகைய கேவலமான நிலைமையிலிருந்து வருகிறார்களென்பது வெளிப்படுகின்றது."

15-12-27 வியாழக்கிழமை தினம் போலீஸ் டிப்டி சூபரின்டெண்டும், அவர் சக பரிவாரங்களும் ஜனமித்திரன் காரியாலயத்தில் நுழைந்து சோதனை போட்டு, பல கையெழுத்துப் பிரதிகள், கணக்கு புஸ்தகங்கள், கம்போஸ் செய்து வைத்திருந்த எழுத்துக்களடங்கிய விஷயம், கோர்ட்டு விளம்பரங்களின் கையெழுத்துப் பிரதிகள், — இவைகளைக் கைப்பற்றிச் சென்றனர். அச்சாபீஸையும் பத்திரிகையையும் நடத்துவதற்குப் புதிதாய் டிக்ளரேஷன் வாங்கவில்லையென்ற காரணம்பற்றி சோதனை போடப்பட்டதாகவும், புதிய டிக்ளரேஷன் வாங்கும் வரையில் அச்சுக்கூடத்தை நடத்தக்கூடாதென்றும் போலீஸ் டிப்டி சூபரின்டெண்டு உத்தரவிட்டுச் சென்றார். மூன்று நாள் கால தாமதம் செய்து உதவி சீப் மாஜிஸ்ட்ரேட் மாஜி ஆசிரியரை இறையினின்று அழைத்துவரும்படி செய்து, அவருடைய டிக்ளரேஷனை ரத்து செய்து எழுதிக்கொடுக்கும்படி சொன்னதின் மேல் புதிய ஆசிரியரிடம் டிக்ளரேஷன் வாங்கிக்கொண்டார். இரண்டு வாரம் வரை டிக்ளரேஷன் வாங்காமல் பத்திரிகையை நடத்தியதற்காக ஜனமித்திரன் புதிய ஆசிரியர் மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது.

சென்னையில் நடந்த சுதேச சமஸ்தானங்களின் மகாநாட்டில் நடந்த நடவடிக்கைகளைப்பற்றி ஓர் விஷமி நடப்பைத் திரித்து ஒரு ரிபோர்ட்டு எழுதியிருந்ததைப்பற்றி முன்னமேயே பிரஸ்தாபிக்கப்பட்டது. அதை வைத்துக்கொண்டு, சாங்க்ஷன் உத்தரவு சட்டப்படி செலாவணியாகத்தக்கதில்லையென்ற காரணத்தால் ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் மீது கி. பு. கோட் 108-வது பிரிவுப்படி எடுத்துக்கொண்டு அப்பீல் கோர்ட்டாரால் தள்ளுபடி செய்யப்பட்ட நடவடிக்கைகளை, கவர்ன்மெண்டார் புதிய சாங்க்ஷன் ஆர்டர் கொடுத்து, அதே பிரிவின்படி மீண்டும் அவர் மீது நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளும்படி உத்தரவு செய்தனர்.

முக்கியமான அடக்குமுறை அழுல்கள் பின் வருவனவாகும்:—

1. ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யருக்கு 1 வருஷ கடுங்காவலும் ரூ 200 அபராதமும்.

2. ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யர் பேரில் ஸ்ரீமான் ராஜவேலு முதலியார் ரூ 1500க்கு மான நஷ்டத்திற்காக தாவா

தொடரும்படி செய்தது. (சட்டசபைக் கூட்டத்தில் தொலேயா னூர் கொலைக் கேஸ் சம்பந்தமாய் நடந்த நடவடிக்கைகளை பத்திரி கையில் பிரசுரம் செய்ததின் மூலம் தம்மை அவதூறு செய்த தாக ஸ்ரீமான் ராஜவேலு முதலியார் ஜனமித்திரன் மாஜி ஆசிரியர் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யர் மீதும், தேச ஊழியன் ஆசிரியர் ஸ்ரீமான் ஆ. சு. நாகரெத்தினமய்யர் பேரிலும் தனித் தனியே 1500 ரூபாய்க்கு ஸிவிலில் மான நஷ்டிக்கு தாவா தொடர்ந்தனர். இக்கேஸ்களின் செலவிற்கு ஸர்க்காரிலிருந்து முன்பணம் கொடுத்து ஸ்ரீமான் முதலியாருக்கு உதவி புரியப் பட்டது.)

3. ஜனமித்திரன் ஆசிரியர் ஸ்ரீமான் S. ராமனுதய்யர் பேரில் அச்சுக்கூட ரெகுலேஷன்படி போலீஸார் இரண்டு கிரிமினல் கேஸ்கள் தொடர்ந்தது.

4. முதல் முதல் ஜனமித்திரன் பத்திராதிபராயிருந்த ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் பேரில் மீண்டும் 108 பிரயோகம்.

5. ஸ்ரீமான் S. விசுவனுதய்யரை பந்தோபஸ்தாய்ப் பார்த் துக்கொள்ள இரண்டு C. I. D. (ஸி. ஐ. டி.) உத்தியோகஸ்தர்கள் அதற்கென்று நியமிக்கப்பட்டது.

6. லாண்டு ரெகார்டு டிப்டி தாசில்தார் ஸ்ரீமான் S. வெங்கடேசுவரய்யர் அவர்கள் (ஜனமித்திரன் ஆசிரியர்களின் சகோதரர்) தமது வேலையை ராஜீநாமா செய்யும்படி நிர்ப்பந்தப் படுத்தப்பட்டது.

இவ்வமுல்கள் நடந்துகொண்டிருந்த காலத்தில் நிகழ்ந்த சிற்சில முக்கியமான ஸம்பவங்களை இங்கு குறிப்பிடுவோம்:—

ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயரவர்களுக்கு அவர் மகாராட் டிலும், புதுக்கோட்டையில் சுகுண விலாஸ் சபை நாடகம் நடத் திய பொழுதும் செய்த பிரஸங்கங்களுக்காக புதுக்கோட்டை அரசாங்கத்தார் வாரண்டு பிறப்பிவித்தனர். 6-1-28ல் காலஞ் சென்ற சின்னரண்மனை ஜாகீர்தாரவர்களின் இளைய குமாரரான மகா-ரா-ரா-ஸ்ரீ திருமலைத் தொண்டைமானவர்கள் காலகதியடைந் தனர். இவர் குன்னூரில் மேனனவர்களுக்கு உத்தியோக கால வரை பின்னும் ஒரு வருஷத்திற்கு நீடித்திருக்குமென்று ரீஜென்ட் ஸாகேப் அவர்கள் உத்தரவு செய்தனர். போலீஸ் இலாகா டிப்டி சூபரின்டென்டென்ட் அவர்கள் பிரிடிஷ் இலாகா வில் தமது உத்தியோகத்திற்குப் போகவேண்டியதென்றும், அவருடைய ஸ்தானத்திற்கு ஏ-ரீனியஸ் பிள்ளையவர்களை போலீஸ் கமிஷனராகவும், கமாண்டெண்டாகவும் வேலை பார்க்க வேண்டியதென்றும் உத்தரவு செய்யப்பட்டது. ஸ்ரீமான் R. A.

தென்னிணைமூர்த்தி பிள்ளையவர்கள் ரூ 150 சம்பளத்தில் பாலேஸ் மானேஜராக நியமனம் செய்யப்பட்டனர். 14-1-28 சனிக்கிழமை தினம் நீதிபதி ஸ்ரீமான் பத்மநாப சஸ்திரிகள் காலஞ்சென்றார்.

"அடக்குமுறையின் ஆவேசம்—ஒரு குடும்பத்தை வேருடன் களைய முயற்சி" என்று 1928-ம் ஜூலை பிப்ரவரி மீ 24-ம் வயில் பிரசுரமான ஜனமித்திரனில் எழுதப்பட்ட விஷயம் இங்கு கவனிக்கத் தகுந்தது. அது பின்வருமாறு:—

"சென்ற வருஷம் ஜூலை மாதம் 22-ந் தேதி புதுக்கோட்டை சமை சரித்திரத்தில் ஒரு புது அத்தியாயம் ஆரம்பித்ததென்று சொல்வது மிகையாகாது. ஏனெனில் அன்றுதான் நமது நிரந்தர ஆசிரியர் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யர், "மகாராஜா அவர்களின் கூற்றும், இந்திய அரசாங்கத்தாரின் கடமையும்." என்னும் தமது தலையங்கத்தில், ரீஜெண்டு சாகேப் அவர்களுக்கு இன்னும் மாறு மனக்கசப்பு ஏற்படும்படியாக சில விஷயங்களைக் கூறினார். அவ்வீரமணி எழுதிய தலையங்கத்தில் மிகவும் குற்றமாகக் கருதப்பட்ட பாகம்—"ரீஜெண்டு சாகேப் அவர்களுக்கு நாளுக்கு நாள் மூப்பாகவில்லையோ? இத்துணை வருஷங்கள் வேகு சிரமப்பட்டு ஆட்சி புரிந்த ரீஜெண்டு சாகேப் அவர்களுக்கு பூரண ஓய்வு அவசியமேயாகும்." என்பதேயாகும். அத்தலையங்கம் எழுதியது முதல் ஏழு மாதங்கள் ஆகின்றன. இந்த ஏழு மாத காலத்தில் அவர் எத்துணை நாள் மாடியைவிட்டுக் கீழே இறங்கினார்—மனு விசாரணை செய்தார்—முகாம் போனார் என்னும் விஷயங்களைத் தெரிந்த எவரும் நம் மணி எழுதியதில் யாதொரு பிழையும் இருப்பதாகக் கருத மாட்டார்கள் என்பது திண்ணம்.

நிற்க, இத்தலையங்கம் வரைந்த காலம் முதற்கொண்டு ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யருக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் அரசாங்கத்தார் விளைவித்த இன்னல்கள் யாவையென சற்று ஆராய்வோம். ஜூலை மீ 27-ந் தேதி ஸ்ரீமான் ஐயரும், அவருடைய சகோதரர் ஸ்ரீமான் விசுவநாதய்யரும் ஊரில் இல்லாத சமயத்தில் 'ஜனமித்திரன்' காரியாலயமும், பத்திராதிபர் வீடும் போலீஸாரால் முற்றுகை போடப்பட்டு பரிசோதனை செய்யப்பட்டன. ஒரு மாதம் கழித்து, அதாவது ஆகஸ்ட் மீ 22-ந்தேதி மாலை சுமார் 4-30 மணிக்கு (அன்று ஜாமீனுக்கு ஏற்பாடு செய்யமுடியாதபடி) ஸ்ரீமான் ஐயர் அரெஸ்ட் செய்யப்பட்டார். அன்று தினமே, ஏற்கனவே ஹுஜூர் ஆபீஸிலிருந்து திவானுபீசுக்கும், திவானுபீஸிலிருந்து சால்ட் ஆபீஸுக்கும் மாற்றப்பட்ட அவருடைய தமயனார் ஸ்ரீமான் கமலாசனய்யர் திருமயம் தாலூகாவிற்கு மாற்றப்பட்டார். அன்றே ஸ்ரீமான்

கமலாசனய்யருக்கும், அன்னவருடைய மற்ற சகோதரர் ஸ்ரீமான் வெங்கடேசுவரய்யருக்கும், தங்களுக்கும் ஜனமித்திரனுக்கும் உள்ள சம்பந்தத்தை விளக்கிக் காட்டும்படியாக ஒரு உத்திரவு சாதரா செய்யப்பட்டது. அவர்களால் தங்களுக்கும் ஜனமித்திரன் ஆபீசுக்கும் வாஸ்தவத்திலேயே ஒருவித சம்பந்தமும் இல்லையென்றும், ஜனமித்திரன் பிரஸ் குடும்ப சொத்தைச் சேர்ந்ததில்லையென்றும் சமாதானம் எழுதிக்கொடுக்கப்பட்டது.

இச்சம்பவங்கள் நடந்த சில தினங்களுக்கெல்லாம் ஸ்கூல் சூப்பிரண்டு வேலை பார்த்துவந்த ஸ்ரீமான் சங்கரகாமேசுவரய்யருக்கு அன்னூர் ரிடயர் ஆகும் வரை, அதாவது சுமார் 1½ வருஷத்திற்கு கட்டாயமாக சம்பளப் பிடித்தத்தின் பேரில் ரஜாக் கொடுக்கப்பட்டது. இதன் அந்தரங்கம் என்ன? ஸ்ரீமான் சங்கரகாமேசுவரய்யர் தமக்கு காச நோய் இருப்பதால் முகாம் செய்வது சிரமமாயிருக்கிறதென்ற காரணத்தை முன்னிட்டு ஆலேச்சலில்லாத உத்தியோகமொன்று வேண்டுமென கேட்டுக்கொண்டார். அம்மாதிரி உத்யோகம் ஒன்றை அவருக்கு அளிப்பதாக அரசாங்கத்தார் ஒரு சமயம் வாக்களித்ததுண்டு. அதை நினைப்பூட்டி அவர் செய்துகொண்ட விண்ணப்பத்திற்கு அவருக்கு ஏற்ற உத்தியோகம் வேறு இல்லையென்றும், ஆதலால் அவர் ரஜாவில் போவதே உசிதமென்றும் கண்டு, அவரை சீப் மெடிகல் ஆபீஸரிடம் பரிசோதனைக்குப் போகும்படியாக காருண்யமாக உத்தரவிடப்பட்டது. அவரும், 'நாம் கேட்டுக்கொண்டதின் பேரிலேதானே இவ்வாறு உத்தரவிட்டிருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச காலம் இவ்வேலையையே பார்த்து, இதில் மிக்க சிரமம் இருந்தால் அரசாங்கத்தார் கூறியவாறு நடந்துகொள்ளலாம்" என்று மதித்து தன் வேலையைச் செய்துவந்தார். அவரை வைத்தியப் பரிசோதனைக்குப் போகும்படியாகத் தூண்டி மறு உத்தரவு வந்தது. அச்சமயம் அவர் கல்கத்தாவிலிருந்து ஒரு மருந்து வரவழைத்து சாப்பிட்டுக்கொண்டிருந்தார். அம்முறையில் அவருக்குக் கொஞ்சம் சௌகரியம் ஏற்பட்டுக் கூடிய சீக்கிரத்தில் வியாதி இன்னமும் அனுகூலம் ஆகும் என்ற நம்பிக்கை யிருந்தது. ஆதலால் அவர், தான் ஒரு மாதம் கிரமித்து வைத்தியப் பரிசோதனைக்குப் போகிறதாகச் சொன்னார். அரசாங்கத்தார் இதற்குப் பதிலாக அவரை உடனே சீப் மெடிகல் ஆபீஸரிடம் போகும்படி வற்புறுத்தினர்கள். இந்த உத்தரவு வருவதற்குள் அவர் கேட்டுக்கொண்ட டயத்தில் சுமார் 15 தினங்கள் சென்றன. மீதி 15 தினங்கள்தான். அந்த சமயம் ஸ்ரீமான் அய்யருக்கு 15 நாள் பிரிவிலேஜ் லீவ் இருந்தது. அதை வைத்துக்கொண்டு தான் கேட்டுக்கொண்ட காலத்தின் பாக்கியுள்ள பாகத்திற்கு ஏதாவது ஒருவித ரஜாக் கொடுத்தால், அதற்குப் பிறகு தான் வைத்தியப்

பரிசோதனைக்குப் போவதாக எழுதிக்கொண்டார். இதுதான் அவர் செய்த அபாரக் குற்றம். இக்குற்றத்திற்காக அவருக்கு அவர் ரிடயர் ஆகும் வரை சம்பளப் பிடித்தத்தின் பேரில் ரஜா அளிக்கப்பட்டது. இது எம்மட்டிலும் நியாயமென்பதைப் பொதுஜனங்களே தெரிந்துகொள்வார்களாகையால் அதிகம் சொல்லத் தேவையில்லை.

இது இப்படியிருக்க, ஸ்ரீமான் மணி அய்யர் பேரில் எடுத்த கேஸ் நடத்தப்பட்டது. அவரை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் படி அவருக்குப் பல தூதுகள் அனுப்பப்பட்டன. அவர் மன்னிப்புக் கேட்காமல் மூரண்டிநில் எவ்விதத்திலும் அவருக்கு கடின காவல் தண்டனை விதிக்கப்படுமென்று அவருக்குச் சொல்லப்பட்டது. நம் வீர மணியோ, இப்பூச்சாண்டிகளுக்கு பயப்படுவதில்லையென்று சொல்லிவிட்டார். அவருடைய குடும்பத்தில் சிலரும், நண்பரில் பலரும் ஆனமட்டும் சொல்லியும் அவர் கேட்கவில்லை. ஆனால் ஒரு விஷயம்; அவரிடத்தில் பேசிய எவரும், அவர் குற்றம் செய்துவிட்டார், ஆனதால் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் சொல்லியதின் சாராம்சம், "நாம் இருப்பது புதுக்கோட்டை. காலத்துக்கு ஏற்றபடி நடக்கவேண்டும். ஆசாங்கத்தாரோடு எதிர்த்து காலக்ஷேபம் செய்ய முடியாது. ஆகையால் வணங்கிக் கொடுப்பதே காலதேசத்திற்கு ஒத்ததாகும்." என்பதே. அவரோ, "என் மனச்சாக்ஷிக்கு மாறுக பிசகல்லாததைப் பிசகென ஒரு பொழுதும் ஒத்துக்கொள்ளேன்" என்று சொல்லிவிட்டார்.

கேஸ் நடந்தது. முதலில் காலண்டர் கேஸாகப் பதிவு செய்த மாஜிஸ்டிரேட் ரிஜிஸ்டர் (அதாவது செஷன்ஸ்) கேஸாக மாற்றிக் கொண்டு, நமது அய்யரை செஷன்ஸுக்குக் கமிட் செய்தார். செப்டம்பர் மாதத்தில் இச்செஷன்ஸ் கேஸ் நடக்கவேண்டியது. தாங்கள் நியமித்த ஸ்டேட் வக்கீல், பப்ளிக் பிராஸிகூட்டர் இருவருக்கும் அவர்களுடைய சாமர்த்தியத்தைப் பொருத்து அந்த வேலைகளைக் கொடுக்கவில்லையென்பதை ருஜுப்படுத்துவதன் நோக்கங் கொண்டோ என்னமோ இதற்கென அசலூரிலிருந்து ஒரு ஸ்பெஷல் பப்ளிக் பிராஸிகூட்டரும் நியமிக்கப்பட்டார். ஒரு மாதத்தில் விழுந்த செஷன்ஸ் கேஸை மறு மாதத்திற்குத் தாங்களாகவே மாற்றுவதென்பது அபூர்வமெனச் சொல்லப்படுகிறது. செப்டம்பர் மாதத்தில் விசாரணை செய்திருந்தால் ஸ்ரீமான் பரமசிவம் பிள்ளை இக்கேஸை விசாரித்திருப்பார். அப்படி இக்கேஸை விசாரிப்பதில் அவருக்கு சம்மதமில்லைபோலும். அக்டோபர் மாதத்திற்கு கேசை ஒதுக்க, அம்மாதம் முதற்கொண்டு ஸ்ரீமான் ராமச்சந்திரய்யர் செஷன்ஸ் விசாரணை செய்வதென்று ஏற்பட்டது.

அம்மாதம் முதற்கொண்டுதான் அந்நீதிபதிக்கும் சம்பள உயர்வு ஏற்பட்டது போலும். செஷன்ஸ் நீதிபதி விசாரணை செய்தார். ஒரு வருஷம் கடுங்காவல் தண்டனையும், ரூ 200 அபராதமும் விதித்தார். போலீஸ் முஸ்தீபாகக் கோர்ட்டுக்கு வந்து, கடை வீதி வழியாக ஸ்ரீமான் அய்யரை ஜெயிலுக்கு அழைத்துச் சென்றார்கள். போலீஸாராகச் செய்த இக்காரியத்தை ஸ்ரீமான் அய்யரின் விருப்பத்திற்கிணங்கிச் செய்ததாக ஒரு பெரிய அதிகாரி விசாரணை செய்து சித்தாந்தப்படுத்தினர். ஆனால், இது விஷயத்தில் ஸ்ரீமான் அய்யர் விசாரிக்கப்படவேயில்லை. அவர் பொய் சொல்லும் தன்மையுடையவரல்லர். அவர் போலீசாரே இவ்விதம் செய்தார்களென்றும், அதற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமாவென்று யோசனை செய்ததும் நமக்குத் தெரியும். பெரிய அதிகாரிகளின் விசாரணையும், ரிபோர்ட்டும் சில சமயங்களில் எவ்வளவு தடஸ்தமாயிருக்கின்றன வென்பதற்கு இச்சிறு சம்பவம் ஒரு நிதர்சனமாகும். அய்யரை ஜாமீனில் விடுவித்து அப்பீலும் அய்யர் எதிர்பார்த்தபடியே முடிந்தது. அய்யரும் அஞ்சா நெஞ்சத்துடன் சிறை வாசத்தை ஏற்றுக்கொண்டார். அவர் சிறைக் கோட்டம் புகுந்து சற்றேறக் குறைய மூன்று மாதங்கள் ஆகின்றன. அதிகாரிகள் அவரைக் கடுமையாக நடத்தும்படி உத்தரவிட்டும், அவர் மூல உபத்திரவத்தினால் அவஸ்தைப்பட்டும், அவர்மட்டில் சற்றும் மனங்கலங்காமல் சிறைச்சாலையைத் தவச்சாலையெனவே மதித்துத் தவம் புரிந்து வருகிறார்.

அரசாங்கத்தாருக்கு ஸ்ரீமான் அய்யரைச் சிறையில் அடைத்தமட்டில் ஆக்ரகம் நிற்கவில்லை. அதே குற்றத்திற்காக அன்னரின் தமயனார் ஸ்ரீமான் விசுவனாதய்யர் பேரில் 108 நடவடிக்கை தொடுத்தார்கள். புதுக்கோட்டை சமஸ்தானப் பகுதியில் மிகுதியும் கல்வியறிவு படைத்த பகுதியான நகரப்பகுதியில் பெரும் பான்மையோரால் சட்டசபைக்குத் தங்கள் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்ரீமான் அய்யர் ஜனங்களுக்கு நல்ல நடவடிக்கையுள்ளவராக இருக்க மேதை சர்க்கார் வழக்குத் தொடர்ந்தார்கள். அந்நடவடிக்கை சரியான சாங்கிஷன் இல்லாத குறையினால் தள்ளுபடி செய்யப்பட்டது. அய்யரின் குடும்பத்தார் பிழைக்க வழியில்லாமல் செய்யவேண்டுமென்ற அவா காருண்ய சர்க்காருக்கு ஏற்பட்டது போலும். ஏற்கனவே அய்யரின் வீட்டைப் பரிசோதனை செய்ததிலிருந்தும், போலீசார் சில கஸ்தூரிக்காரர்களைக் கூப்பிட்டு அய்யர் வீட்டுக்குப் போகக்கூடாதென்று தாக்கீது செய்ததினின்றும், அவர் பேரில் 108 நடவடிக்கை தொடர்ந்ததினின்றும் அவர் வீட்டிற்குக் கஸ்தூரிக்காரர்கள் போய்வர பயப்படத் தொடங்கினர்கள். பூராவாக அய்யரின் சன்னதைப் பறிமுதல் செய்

வதற்கு முந்தியே அவருடைய வரும்படியைக் குறைக்கக் கருதி சில காலம் இரண்டு கான்ஸ்டேபிள்களை அய்யர் வீட்டு வாசலுக்கு எதிரே நிறுத்தி, அய்யர் எங்கு போகிறார், அய்யர் வீட்டிற்கு எவர்கள் வருகிறார்கள் என்று பதிவு செய்துகொள்ளும்படியாக நியமித்தார்கள். அய்யர் வரும்படி நிச்சயமாய்க் குறைந்துவிட்டது என்று கண்டுகொண்டதின் பேரிலோ என்னவோ அக் கான்ஸ்டேபிள்களுக்கு தற்காலம் வேறு வேலை கொடுத்திருக்கிறார்கள். இதுவும் போதாதென மதித்து அய்யர் பேரில் மீண்டும் 108 நடவடிக்கை நடத்த அரசாங்கத்தார் முற்பட்டுள்ளார்கள். கேஸும் இம்மாதம் 27-ந் தேதி நடைபெறுமென்று தெரியவருகிறது.

இம்மட்டோடல்ல. பிரகிருதம் இப்பத்திரிகையை நடத்திவரும் ஸ்ரீமான் ராமனுதய்யர் பேரிலும் கோர்ட்டை அவமதித்ததாக குற்றம் அரசாங்கத்தாரால் தொடரப்பட்டு நீதிபதிகளின் காருண்யத்தால் எச்சரிக்கையுடன் அவர் விடப்பட்டார். ஜனமித்திரன் கார்யாலயம் மீண்டும் போலீசாரால் முற்றுகை போடப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. அச்சுச் சட்டத்துக்கு தாதனியாக்கியானம் செய்து, ராமனுதய்யர் பேரில் இரண்டு வழக்குகள் தொடரப்பட்டு, ரூ 50 அபராதமும் அவருக்கு விதிக்கப்பட்டது.

இவ்வளவெல்லாம் போதாதென மதித்து ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யரின் மற்றொரு பிராதாவான ஸ்ரீமான் S. வெங்கடேசுவரய்யர் லாண்டு ரிகார்டு டிப்டி தாசில்தார் பதவியினின்றும் கட்டாயமாக விலகும்படி காருண்ய அரசாங்கத்தார் ஏற்பாடு செய்தார்கள். அவர் பேரில் ஏற்பட்ட குற்றங்கள் மூன்று: முதலாவது குற்றம், அவருக்கும் ஜனமித்திரனுக்கும் ஏதோ பாத்தியம் இருக்கிறதென்பது. ஜனமித்திரன் சொத்தில் தனக்கு பாத்தியமில்லையென்று அவர் சொல்லியும் அவர் வார்த்தை நம்பப்படவில்லை. ஸ்ரீமான் ராமனுதய்யர் பேரில் ஏற்பட்ட கேஸில் ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் சாக்ஷியம் கொடுத்திலும் ஜனமித்திரன் அச்சாபீஸ் தன்னுடைய தனிமை சொத்துத்தான் என்றும், அதற்கு ரிகார்டு ஆதாரம் இருக்கிறதென்றும் கூறினார். சம்பந்தப்பட்ட எல்லோரும் ஒரு சொத்து ஒருவனுக்குத்தான் தனிமையில் சொந்தம் என்று சொல்ல, இந்த அரசாங்கத்தாருக்கும் அரசாங்க வக்கீலுக்கும் அப்படிச் சொல்வது தவறு என்று சொல்வதற்கு என்ன அதிகாரம் இருக்கிறதோ நாம் அறிகிலோம். வேண்டுமானால் சர்க்காரார் ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் பேரில் ஏதாவது ஒரு குற்றத்தைச் சுமத்தி அச்சாபீஸை அட்டாச் செய்துகொள்ளட்டும். அந்த சமயத்தில்

சகோதரர் யாரேனும் பாத்திய மனுப் போடுகிறார்களாவென்று பார்க்கட்டும். வீணாக ஒரு பொறுப்பு வாய்ந்த உத்தியோகஸ்தர் சொல்வதை நாங்கள் நம்பவில்லை என்று சொல்வதில் என்ன கண்ணியமிருக்கிறது? ஆனால் ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் தானாகவே கடைவீதி வழியாக அழைத்துச் செல்லவேண்டும் என்று கேட்டுக் கொண்டார் என்னும் அபாண்டமான பொய்யை நம்பும் சர்க்கார், பிறர் அவர்கள் நோக்கத்துக்கு விரோதமாகச் சொல்லும் நிஜத்தை நம்ப வேண்டியதில்லைபோலும்.

நிற்க, ஸ்ரீமான் வெங்கடேசுவராய்யர் பேரில் ஏற்பட்ட இரண்டாவது குற்றம் யாதெனில், அவர் ஸ்ரீமான் பரமசிவம் பிள்ளை அவர்கள் இட்ட இரண்டு கட்டளைகளை திவான் பேஷ்கார் உத்திரவன்னியில் நிறைவேற்றினர் என்பதுதான். கோர்ட்டார் ஒரு கேஸை ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தரைக் கொண்டு ராஜியாகத் தீர்த்துவைக்கச் செய்யலாம்; அப்படிச் செய்யும்பொழுது அவ்வுத்தியோகஸ்தர் மற்றவருடைய உத்திரவைப் பெறுமலே கடவடிக்கை நடத்தி அதற்கேற்பட்ட பீஸை வாங்கிக்கொள்ளலாம் என்று வியக்தமாக சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நடத்தைக்கென ஏற்பட்ட விதிகளில் கண்டிருக்கிறது. இதை ஏற்றுக்கொள்ளும் அரசாங்கத்தார் கோர்ட்டார் உத்திரவுப்படி ஒரு ஸ்தலத்தை மிதித்துப் பார்த்து அதற்கு ஒரு ஸ்கெட்ச் தயார் செய்து, அதைப்பற்றி பைமாஷ் சர்வே முதலிய கணக்குகளில் என்ன கூறியிருக்கிறதென்று கூறுவது பிசகு என்று சொல்லுகிறார்கள். இது எம்மட்டும் பிசகென நமக்குப் புரியவில்லை. அப்படிப் பிசகென்று வைத்துக் கொண்டாலும், இம்மாதிரி அவ்விதம் உத்திரவின்றி செய்யக்கூடாதென்று தாக்கீது பண்ணுவதைத் தவிர வேறு ஒரு விதசிக்ஷையும் விதிப்பது சரியெனப் புலப்படவில்லை.

அவர் பேரில் மூன்றுவது குற்றம் அவர் கமிஷனராக இருந்த ஒரு கேஸில் ஸர்க்காருக்கு விரோதமாக ஏதோ சொல்லியிருக்கிறார் என்பதுதான். அவரைக் கமிஷனராக நியமித்தது மகா-ள-ள-ஸ்ரீ ரீஜெண்டு சாகேப் அவர்களால் நியமிக்கப்பட்ட ஒரு நீதிபதி. அந்த நீதிபதிக்கு அவர் ஒரு உத்தியோகஸ்தர் என்பது தெரியும். அப்படித் தெரிந்தும் அவரைக் கமிஷனராக நியமித்ததிலிருந்து நீதிபதி அவர் உள்ளதை உள்ளபடி சொல்லுவார் என்ற நோக்கத்தைக்கொண்டு நியமித்திருப்பாரேயொழிய வேறு விதமாய்க் கூறுவதற்கு இடமில்லை. ஆகையால் அவர் சொல்லுவதில் ஏதோ சர்க்காருக்கு பாதகமாக இருக்கிறது என்பதை வைத்துக்கொண்டு அவரை தண்டிப்பதென்பது சர்க்காருக்கு விரோதமாக நியாயமளிக்கும் நீதிபதியை தண்டிப்பதற்கு ஒக்குமேயொழிய வேறல்ல. ஆனால் ஜனமித்திரன்

ராஜத்துவேஷ வழக்கில் எதிரி குற்றவாளியல்லவென்று சொன்ன அசஸெர்களைத் தன்னுடைய உத்தியோகஸ்தர்களைக் கொண்டு தாக்கீது செய்யச்சொன்னதாகக் கூறப்படும் அரசாங்கம் இவ்வாறு செய்வதில் ஆச்சரியமில்லை. ஆகையால் இதினின்றும் வெளியாவதென்ன? இவரையும் ஸ்ரீமான் மணி அய்யர் செய்த குற்றத்திற்காகவே தண்டித்திருக்கிறார்கள் என்பது புலனாகிறது.

சட்ட சபையில் தொலையாளூர் கேஸில் போலீஸ் டிப்டி சூப்பிரண்டு நடந்து கொண்டதைப்பற்றி ஸ்ரீமான் ஏ. வி. வைத்தியனாதய்யர் பேசியதை உள்ளது உள்ளபடி பத்திரிகையில் வெளியிட்டதற்காக காருண்ய சர்க்கார் அவ்வதிகாரியை விட்டு ஸ்ரீமான் மணி அய்யர் மீது மான நஷ்ட தாவா போடச் செய்து அவ்வழக்கும் விசாரணையிலிருந்து வருகிறது.

இந்த மாதிரி ஒரு குடும்பத்தாரையே வேருடன் களைய யத்தனம் செய்யும் இந்த அரசாங்கத்தார் இன்னம் என்னென்ன கொடுமையைச் செய்ய சித்தமாயிருக்கிறார்களோ நமக்குத் தெரியவில்லை. எது வரினும் வருக! திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை."

ஸ்ரீமான் S. விசுவனாதய்யர் அவர்கள், "புதுக்கோட்டை தர்பாரின் காருண்யம்" என்று பின் வருமாறு "ஜனமித்திரன்" பத்திரிகையில் எழுதியுள்ளது இங்கு பார்வையிடத் தகுந்தது:—

"புதுக்கோட்டை அரசாங்கத்தார் எனதருமைச் சகோதரனைக் காவல்படுத்தி, அவனை ஒரு வருஷ காலம் அவனது மனைவி குழந்தைகளிடமிருந்தும், எங்கள் வயோதிகத் தாயார், சகோதர சகோதரிகளிடமிருந்தும் பிரித்து விட்டதோடு அவர்கள் கோபமும் ஆத்திரமும் அடங்காமல் பலவிதமாக 'வேண்டாதவன் பெண்சாதி கை பட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம்' என்ற வண்ணமாக எங்களை தூற்பல இம்சை செய்துவருவது எல்லோரும் அறிந்த விஷயம். இவையெல்லாம் போதாதெனக் கருதி என்னையும் காருண்ய அரசாங்கத்தார் சிறைக் கனுப்பவும், என் சன்னதைப் பறிமுதல் செய்யவும் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். சென்ற ஜூலை மாதம் முதல் சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்து வரும் காரியங்களால் என் சன்னது இருந்தும் இல்லாததும் ஒரே மாதிரியாகத்தான் இருந்து வருகிறது. கனம் நீதிபதிகள் நான் ஆஜராகும் கேஸ்களில் எவ்வளவு நியாய புத்தியுடனும், நடுவு நிலைமையுடனுமிருந்து தீர்ப்பளித்தாலும், கவர்ன்மெண்டாரின் அப்பிரியத்தாலும், சில போலீஸ் உத்தியோகஸ்தர்களுடைய அடாத அழுல்களினாலும் கக்ஷிக்காரர்கள் என்னை அணுகுகிறதில்லை. ஆகலால் கவர்ன்மெண்டார் என்னை எவ்வித

இன்னல்களுக்கு ஆளாக்க வேண்டுமென்று நினைத்தாலும் அவை களுக்குட்படுவதற்குத் தயாராக விருக்கிறேன். மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்டு சாகேப் அவர்களிடமும், திவானவர்களிடமும், சீப் செக்ரிடரியவர்களிடமும் என்னிடத்தில் யாதொரு பிழையுமில்லை யென்று நான் எவ்வளவு உறுதி கூறியும், கௌரவமான சமா தானத்தை நான் எவ்வளவு நாடியும், அவர்கள் அவைகளை மதிக்க வில்லை. பிரகிருதம் ரீஜெண்டு சாகேபவர்கள் இருக்கும் தேச நிலையில், இத்துணை துர்ப்பல இம்சைக்கு அவர்தான் பூரண ஜவாப்தாரி என்று சொல்லவும் நான் முற்படவில்லை. இவை களின் லாப நஷ்டத்திற்கும் கௌரவ அகௌரவத்திற்கும், பெரும்பாலும் அவரைச் சார்ந்த மந்திரிகளே பொறுப்பாளிகளா வார்கள்.

எந்நிலைமையிலும் புதுக்கோட்டை உலகத்தாருக்கும் வெளி உலகத்தாருக்கும் பிரகிருத ஆட்சியின் நீதியின்மையையும், செங் கோலின்மையையும், ஊழல்களையும், அதிக்கிரமங்களையும் எடுத்து விளக்கிக் காட்ட சந்தர்ப்பம் அளித்த சர்க்காருக்கு நான் வந்தனம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். ஜனமித்திரனும், தேச ஊழியனும், புதுக்கோட்டை சமஸ்தான மக்கள் மகாநாடும், அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாடும் புதுக்கோட் டை வார்சு பாத்தியதையை ஸ்வச்சமான ஹிந்துவும் இந்தியரு மல்லாத ஒருவருக்குக் கொடுக்கக்கூடாதென்றால், அதற்கு நானென்ன செய்வது? உலை வாயை மூடினாலும் ஊர் வாயை மூடி விட முடியுமா? மகாஜனங்களின் வாக்கை இவ்வளவு எளிதாய் நசுக்கிவிட முடியுமா? அன்று ராஜப்பிரதிநிதி மன்னர் சபைக் கூட்டத்தில், சுதேச மன்னர்கள் மேலுடுகளில் அடிக்கடி தங்கக் கூடாதென்றும், ராஜ்யத்தின் வருவாய்க்குத் தக்கவாறே அவர்களு டைய அல்லவன்ஸ்களைச் சுருக்கிக்கொள்ள வேண்டுமென்றும், நிர் வாக அமுல் நடத்துவோர்களின் தயா தாட்சணியத்திற்கும் நிர்ப் பந்தத்திற்கும் கட்டுப்படாமல் சுதேச ராஜ்யங்களில் நியாய ஸ்தலங்கள் அமைக்கப்பட வேண்டுமென்றும் பொன்னே போல் போற்றத் தகுந்த மொழிகளைச் செப்பியிருக்கின்றாரல்லவா? அவ ருடனுமா புதுக்கோட்டை அதிகாரிகள் கோபித்துக்கொள்வார் கள்?

மகா-ரா-ரா-ஸ்ரீ சாமச்சந்திர தொண்டமானவர்களுக்குச் சார் பாக நான் இருந்துவருவதாய் புதுக்கோட்டை அரசாங்கத்தார் நினைத்து, என்னையும், என்னைச் சேர்ந்தவர்களையும் இவ்விதம் துன்புறுத்துவதாக சிலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்டு சாகேபவர்கள் இந்த உன்னத பதவியை அடைந்ததும், அன்னவருக்குப் பொதுஜனங்களின் சார்பாகவும்,

மகாராட்டின் சார்பாகவும், மற்றத் தலைவர்களுடன் கூடவிருந்து நான் நல்வரவுப் பத்திரம் வாசித்துக் கொடுத்ததை நேயர்களறிவார்கள். ரீஜெண்டு சாகேப் பிரகிருதம் இம்மாதிரி என்னிடமும், என் சகோதரர்களிடமும் வெறுப்புக் கொண்டதற்கு யாது காரணமோ தெரியவில்லை. ஒருக்கால் அவர் நினைக்கிறவாறே நான் மகா-ரா-ரா-ஸ்ரீ ராமச்சந்திர தொண்டமானவர்களுக்கு சமஸ்தான வார்சு பாத்தியதை கிடைக்கும்படி உதவி செய்வதாகவே வைத்துக்கொள்வோம். இதிலும் என்ன பிழை இருக்கிறதென்று எனக்கு விளங்கவில்லை. மகா-ரா-ரா-ஸ்ரீ ராமச்சந்திர தொண்டமானவர்கள் மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்டு சாகேபவர்களின் சாட்சாத் சகோதரியின் குமாரர்; அதாவது மருமகன். மகாராஜா அவர்களின் அடுத்த பங்காளி. ஆதலின் அவருடைய சொந்த மருமகனிடம் அவருக்கில்லாத வாத்ஸல்யம் எனக்கு என்ன இருக்கப்போகிறது? கடவுளால் அவருக்கு அளிக்கப்படும் பூரண ஆயுள் வரை ரீஜெண்டவர்கள் மகாராஜாவின் பதவியை வகிக்கப் போகிறார். எதிர்காலத்தில் ஸிட்னி தொண்டமான் ராஜ்யபாரம் வகித்தாலென்ன, அல்லது அவர் சகோதரியின் புத்திரன் ராஜ பதவியை அடைந்தாலென்ன, இவ்விரண்டு சம்பவங்களையும் ரீஜெண்டு சாகேபவர்கள் சமதிருஷ்டியுடன் ஏன் பார்க்கக்கூடாது? தமது குடும்பத்தையும் ஜாதியையும் சேராதவர்களுடன் கூட நெருங்கிய பந்துக்களிடம் காட்டும் உறவுக்கு மேல் அன்பை வளர்க்கும் ரீஜெண்டவர்கள், தனது சொந்த மருமகனிடம் சற்று தயவையும் அன்பையும் காட்டக்கூடாதா? ஒரு மாதத்திற்கு முன் நான் சீப் செக்ரிடரியிடம் பேசிக்கொண்டிருந்தபொழுது கவர்ன்மெண்டாருக்கு என் தம்பியைச் சிறையில் வைத்ததில் திருப்தி இல்லையென்றும், அதனால் கவர்ன்மெண்டின் கௌரவம் குறைந்தே போயிருக்கிறதென்றும், என் தம்பி சிறைக்குச் செல்லாமல் மன்னிப்புக் கேட்டுக்கொண்டிருந்தால் கவர்ன்மெண்டாருக்கு சந்தோஷமாயிருந்திருக்குமென்றும் சொன்னார். என் மீதும் கடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு என்னையும் சிறைக்கோட்டத்திற்குள் அனுப்பி, என் வக்கீல் சன்னதையும் எடுத்துவிட்டால் கவர்ன்மெண்டார் கௌரவம் ஜாஸ்தியாகிவிடுமென்றுவது, அதனால் சிறையில் உள்ள என் சகோதரர் பயந்து மன்னிப்புக் கேட்டுக்கொள்வாரென்றுவது புதுக்கோட்டை அதிகாரிகள் நினைக்க மாட்டார்களென்றே நம்புகிறேன்."

1-3-28 தினம் சமஸ்தான ஏஜண்டாகிய மிஸ்டர் C. W. E. காட்டன் துரையவர்கள் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தார். அப்பொழுது அவருக்கு 2-3-28ந் தேதி 'ஜனமித்திரன்' பத்திரிகையில், "A word to the Hon'ble Mr. C. W. E. Cotton,

Agent to the Viceroy" என்ற தலையங்கத்தில் பின்வரும் முறையிற் செய்யப்பட்டது:—

"We are informed that this visit of Mr. C. W. E. Cotton to the State is only an ordinary periodical visit of his, but coming here as he does at this present moment when the health of the Regent Saheb is in an unsatisfactory state and when a career of repression marked by a complete want of sympathy, justice, tact and broad-minded statesmanship is in full swing, we request him to examine the situation and do all that lies in his power to bring about a healthy change in the angle of vision of the powers that be. That the Editor of the "Janamitran" and his kinsmen have been subjected to a vindictive family persecution admits of no doubt The facts that Mr. P. S. Subramania Aiyar, the Editor of our paper—a quasi graduate and a student of the Rev. Allan F. Gardiner of the S. P. G. College should be undergoing rigorous imprisonment in the State Jail for a conviction under section 124-A I. P. C., that his brothers should also be teased in untold ways, that Mr. S. Viswanatha Aiyar should be proceeded against under the security sections for almost the very charges which were laid at the door of Mr. P. S. Subramania Aiyar, that Mr. S. Venkateswara Aiyar, B. A., the Land Records Deputy Tahsildar should have been compelled to resign for the sin of having executed two Commissions in obedience to the orders of the Chief Court, that proceedings under the Press Act were taken against the present Editor resulting in a fine of 50 Rs., that an uncle of the Editor-Mr. Sankarakameswara Aiyar B. A., Superintendent of Schools has been given leave on loss of pay till he completes his 55th year—all these clearly testify to the little mindedness, malice and the vindictive nature of these repressive and oppressive activities. That Mr. Viswanatha Aiyar who has been serving the people for over 10 years in various representative capacities should be sought to be bound over for good behaviour to the citizens of the State who have the fullest confidence in, and regard for him, is a mockery by itself and indicates the scant courtesy with which the present members of the Government are inclined to treat the people, their representatives and public opinion. Mr. Cotton knows full well that this is not the sort of treatment which His Majesty will accord to the people's representatives in England. After all, what are the sins that we have committed according to the present

Government? We have not any disrespect either to the Regent Sahib or to the Dewan personally. We took objection to the Raja's continued absence from the State and the appointment of a Regency when the Raja is one capable of administering the affairs of the State in person and is not a minor or an insane person. We did not say a word against the Regent, personally. On the other hand, we took all the opportunities of praising him when he deserved praise. We further advocated that the question of succession to the Gadi should be settled in accordance with Hindu law and custom. The final decision rests with the paramount power but we are sure we have every right to voice forth our views and the views of the people as we understand them. Where is any impropriety in all this? Why should the Editor of the Janamitran and his kinsmen be persecuted for ventilating those legitimate expressions of opinion on questions of public importance? We do not grudge the munificence of the Regent Saheb in advancing the interests of his favourites in manifold ways; for he has the power to do it. But when he uses that power to stifle public opinion and to cruelly persecute a family wholesale, it is our duty to protest against such abuse of power and to remind him of what Mr. Macqueen told him on his assuming the Regal functions to the following effect:— "His Excellency desires me to convey to you his best wishes on your assuming your heavy *responsibilities* under the new regime and he sincerely hopes that all the citizens of the State will loyally support you in your administration which he is confident will be carried on with the *single-minded* purpose of the good of the people." We ask in all humility whether the Regent Saheb has discharged his heavy responsibilities with the single-minded purpose of the good of the people. We hope and pray that the Regent Saheb may recover from his illness and see his way to undo all the wrongs and repressive activities that stand to the discredit of his administration. Should however the Regent's health be so serious that he may not be able to get back his normal health, we take this opportunity of requesting the Hon'ble Mr. C. W. E. Cotton who is now in our midst to dispel the darkness hanging around the future of the State and make all possible arrangements to guide the destiny of this historic State to the greatest good and the contentment of the subjects in accordance with the hoary traditions of the State."

கனம் காட்டன் துரையவர்களை ஸ்ரீமான் S. விசுவனுதய்ய ரும் பேட்டி கண்டார். துரையவர்கள் ரீஜெண்ட் ஸாகேப் அவர் களுக்கு ஹிதோபதேசம் செய்தார். ஸ்ரீமான் விசுவனுதய்யரின் மீது கி. பு. கோடு 108-வது பிரிவுப்படி நடவடிக்கை யெடுத்துக் கொண்டிருப்பதை நிறுத்திவிடும்படி செய்தார். இக்காரியத்தில் ஸ்ரீமான் K. நாகராஜய்யருடைய உதவியை Mr. காட்டன் துரை யவர்கள் உபயோகித்துக்கொண்டது இங்கு குறிப்பிடத்தக்கது. ஜெயிலுக்கு தமது உதவி காரியஸ்தர் Mr. கார்னுக் அவர்களை யனுப்பி, ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யரைக் கண்டு, அவரையும் விடுதலை செய்வதற்காக முயன்றார்; ஆனல் ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் பிடிவாதமாய் இருந்தபடியால், அவர் விடுதலைக்கு ஏற்பாடு செய்ய இயலாமலிருந்ததுபற்றி வருந்தினர். மற்ற அடக்கு முறைச் செயல்களை ரீஜெண்ட் ஸாகேப் அவர்கள் சீக்கிரம் ரத்து செய்து சமாதானம் நிலவும்படி ஏற்பாடு செய்வாரென்றும் Mr. காட்டன் துரையவர்கள் ஸ்ரீமான் S. விசுவனுதய்யரிடம் கூறினர். எல்லாம் வெகு சீக்கிரத்தில் அவ்வாறே செய்து முடிக்கப்பட்டி ருக்கும். ஆனல் அச்சமயத்தில் Mr. காட்டன் துரையவர்கள் சென்னை கவர்ன்மெண்டில் உத்தியோகத்திற்கு மாற்றப்பட்டு விட்டார்; அதி சீக்கிரத்தில் அவர் அந்த உத்தியோகத்தை ஒப்புக் கொள்ள வேண்டியிருந்தது. ஆதலால் Mr. காட்டன் துரை யவர்கள் கூறியபடி காரியங்கள் உடனே நிறைவேற்றப்படாமல் காலக்கிரமத்தில் பரிகாரம் ஏற்படவேண்டிய நிலைமையில் நின்று விட்டன.

புதுக்கோட்டையில் நிருவப்பட்ட ஸ்ரீ விஜயரெகுநாத தொண் ஸதனத்தை 5—3—28ல் Mr. C. W. E. காட்டன் துரையவர் கள் திறந்துவைத்தார். அப்பொழுது அவர் செய்த பிரஸங்கத் தில் கூறிய அடியிற்கண்ட பாகம் குறிப்பிடத்தக்கது:—

"புதுக்கோட்டை சமஸ்தானத்திலிருப்பதுபோல் தென் னிந்தியாவில் வேறு எந்த சமஸ்தானத்திலும் தேசாபிமானிகளும், பொதுநல உணர்ச்சி உள்ளவர்களும் கிடையவே கிடையாது."

23-வது அத்தியாயம்.

ஜனமித்திரன் ஆசிரியர் விடுதலைத் தீர்மானமும் விடுதலையும்.

ஜனமித்திரன் ஆசிரியர் மீது தொடர்ந்த வழக்கு சம்பந்த மாய்ப் பொது ஜனங்கள் ஜனமித்திரன் பாதுகாப்பு நிதிக்குப்

பணம் கொடுத்து உதவி புரிந்ததும், அதெலர்களெல்லோரும் ஏகமனதாய் பத்திராதிபர் குற்றவாளியல்லவென்று கூறியதும், கோர்ட்டாரவர்கள் குற்றவாளியென்று கண்டுபிடித்து அன்னை சிறைக்கனுப்பிய பின்னர் தலைகரில் நூற்றுக்கணக்கான ஜனங்கள் கூடி அய்யரை உடனே விடுதலை செய்யவேண்டுமென்று தீர்மானித்ததும், அதன் பின்னர் ஆயிரக்கணக்கான கையெழுத்தகளிட்டு ஜனங்கள் கவர்ன்மெண்டாருக்கு அனுப்பிய மனுவும் பொதுஜனங்கள் பத்திராதிபரை தண்டித்த விஷயத்தில் கொண்டிருந்த உணர்ச்சியையும் அபிப்பிராயத்தையும் நன்கு புலப்படுத்தின.

ஸ்ரீமான் அய்யர் சிறைச்சாலையிற் புகுந்ததும், அவருக்கு நெசவுத் தொழிலும், ஜெயிலிலிருந்த ஆலய பூஜைத் தொழிலும் அளிக்கப்பட்டன. ஸ்ரீமான் அய்யரவர்கள் சிறைச்சாலையிலிருந்து வெளிவந்த பின்னர், 'எனது சிறை வாழ்க்கை அநுபவங்கள்' என்று சில கட்டுரைகள் ஜனமித்திரனில் வரைந்துள்ளார். அவர் அதில் கூறியுள்ள சிற்சில பாகங்களை இங்கு எடுத்தெழுதுவோம்:—

"நமது சமஸ்தானத்தில் முதன் முதலாக 124–A பிரிவுப்படி குற்றம் சாட்டப்பட்டு சிறைவாஸம் செய்யும் பாக்கியத்தை நான் பெற்றதற்குக் கடவுளை வழுத்துகிறேன். 26—11—27ல் என்று அப்பீல் கோர்ட்டாரால் அசலே உறுதி என்று கூறப்பட்ட பின்னர் நான் சிறைக்கு அழைத்துச் செல்லப்பட்டேன். 26—11—27ல் முதல் 15—4—28ல் வரை நான் சிறைவாஸம் செய்தேன். எனது வாழ்நாளில் எனது சிறைச்சாலை வாழ்க்கையை என்றும் மறக்கவொண்ணாத பாக்கியமாகக் கருதுகிறேன். நான் இவ்விதம் கருதுவதற்குக் காரணங்கள் பலவுளவெனினும், இரண்டொரு காரணங்களை மாத்திரம் ஈண்டு குறிப்பிடுகிறேன்.

நமது சமஸ்தான ராஜீயப் போராட்டத்தில் இதுவரை எத்தனையோ தலைவர்கள் அரும்பாடு பட்டிருக்கின்றனர், ஆயினும், அரசாங்கத்தார் கடுவிழி கொண்டு நோக்கியபொழுது, ஜனத் தலைவர்கள் எவ்விதத்திலும் சமாதானத்தை நாடினர். புதுக்கோட்டை ஜனங்களுடையவும், ஜனத் தலைவர்களுடையவும் தைரியத்தின் எல்லையை அரசாங்கத்தார் அநுபவத்தின் பேரில் நன்குணர்ந்து, அவர்களுடைய ஆவிவந்த மூறையை சமயம் நேர்ந்தபொழுதெல்லாம் கையாளத் தயங்கவில்லை. கத்தி முனையில் மன்னிப்பு வாங்குவதில்தான் நமது சமஸ்தான அரசாங்கத்தார் அதி நிபுணர்கள். என்னுடைய வழக்கு செஷன்ஸ் கோர்ட்டில் நடைபெறுவதற்கு முன்னும், நடைபெற்ற பின்னும், எனக்கும் இத்தகைய சோதனைக் காலம் வந்தது. என் மனச்சாட்சி இதற்கு இடங்

கொடுக்கவில்லை. எனது அத்தியந்த சிநேகிதர்கள், என் க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாய் இருக்கும் பெரியோர்கள், எனது உற்றூர், உறவினர்கள் எல்லோரும் என்னை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளும்படி தூண்டினர். அவர்கள் நான் எழுதியவை பிசகென்று என்னை மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும்படி தூண்டவில்லை. "சமஸ்தானமோ புதுக்கோட்டை சமஸ்தானம். இங்கு அரசாங்கத்தார் செய்வதுதான் சட்டம். ஆற்றில் வெள்ளம் வருவதைத் தெரிந்தும் எதிர்நோக்கிச் செல்லலாமா?" வென என்னைக் கேட்டனர். இவர்கள் நல்லெண்ணத்துடன் கூறிய மொழிகளை நான் ஏற்றுக்கொள்ள முடியாததுபற்றி வியசனித்தேன். நான் எனது மனச்சாட்சிக்கு விரோதமாக யாதொரு குற்றத்தையும் புரியவில்லையென்று நிச்சயமாய் நம்பினேன். சமஸ்தானம் பொதுஜன வேலைக்கு லாயக்கில்லையென்பதற்காக மன்னிப்புக் கேட்டுக் கொள்வதென்பது எனக்கு யுக்தமாய்த் தோன்றவில்லை. நான் சிறை சென்றுவது புதுக்கோட்டை சமஸ்தானத்தைப் பொதுஜன வேலைக்கு லாயக்காய்ச் செய்யவேண்டுமென்ற அவா என்னைத் தூண்டியது. பொதுஜனத் தொண்டர்களைப் பயமுறுத்திவிட்டால் அவர்கள் அடங்கி சரணாகதி செய்துவிடுவார்களென்ற அசட்டு நம்பிக்கையையும், தைரியத்தையும் பொய்ப்பிக்க வேண்டுமென நினைத்தேன். நான் நினைத்தபடியே கடைமுறையில் காரியங்களும் கடைபெற்றன. குழந்தைகள் 'பூச்சாண்டி' என்ற சப்தத்தைக் கேட்ட மாத்திரத்தில் பயந்து விடுவது இயல்பு. ஆனால் பூச்சாண்டியே நேரில் வந்துவிட்டால் குழந்தைகளுக்குப் பயம் தெளிந்துவிடுமல்லவா? அஃதேபோல் அரசாங்கத்தார் பயமுறுத்தலின் பேரில் சமாளித்துக்கொண்டு வந்தால், எந்த சமயத்தில் என்ன தீங்கை இழைத்து விடுவார்களோ வென்ற பயமிருக்குமென்பதில் ஐயமில்லை. ஆனால், அரசாங்கத்தாரின் தீங்கிழைக்கும் சக்தியின் எல்லையை இவ்வளவுதான் என்று கையை விரித்துக் காட்டிவிட்டால், அரசாங்கத்தாரின் கன்மையை உத்தேசித்தே அது மதியூகமில்லையென்று நினைக்கின்றேன். ஒருவனை சிறைச்சாலையில் அடைத்து விடுவதாய் பயமுறுத்தினால் அவன் பயப்படுவது சகஜம்தான். ஆனால் உண்மையிலேயே அவனை சிறைச்சாலையில் அடைத்து விட்டால், அவனுக்குக் குளிர் விட்டு விடுகின்றதல்லவா? இதை நான் சிறைச்சாலையில் என்னுடைய சொந்த அநுபவத்தில் நன்கு அறிந்தேன்.

விநாயகர் ஆலயம்

நமது சமஸ்தான சிறைச்சாலையில் கைதிகளின் சன்மார்க்கத்திற்கு ஹேதுவான எத்தனையோ சாதனங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஜெயிலர் ஸ்ரீமான் S. ராமச்சந்திர நாயுடு அவர்கள்

இயற்கையிலேயே ஈசுவர பக்தி வாய்ந்தவர். அண்ணுர் சுமார் இரண்டு வருஷங்களுக்கு முன்பாக கைதிகள் வழிபடுவதற்கென ஓர் விநாயகர் ஆலயத்தை சிறைச்சாலையின் மத்தியில் பிரதிஷ்டை செய்துள்ளார். இத்தகைய பிரதிஷ்டை வேறு ஒரு சிறைச் சாலையிலுமில்லாமலிருக்க, நமது சிறைச்சாலையிலிருப்பது மிண்டு சந்தோஷத்துடன் குறிப்பிடத்தக்கது. ஜெயிலர் பக்தி சிரத்தை யுடன் இவ்வாலயத்தைப் பிரதிஷ்டை செய்திருப்பதுபற்றி அவரது நன்முயற்சியைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின் றேன். ஜெயில் சூபரிண்டென்ட் ஸ்ரீமான் P. S. வைத்திய நாதய்யர் அவர்களும் இவ்விஷயத்தில் தீவ்ரமான சிரத்தையுட னும், உற்சாகத்துடனும் உழைத்து வருவது பாராட்டத்தக்கது.

கைதிகள் அதிகாலையில் எழுந்தவுடன் இயற்கையின் வழி பாடுகளைக் கவனித்த பின்னர், கை கால் கழுவி, தந்த சுத்தி செய்து, திருநீறணிந்து, விநாயகர் ஆலயத்திற்கு முன்பாகக் கூடி, கடவுள் ஸ்தோத்திரங்களைத் தெளிவான சுத்தியுடன் கூறிக் கடவுளை வழிபடுகின்றனர். நான் சிறையிலிருந்த மட்டிலும் அர்ச்சகர் உத்தியோகத்தை வகித்து, தினகாலமும் ஸ்நானம் செய்து, மகா நைவேத்யமும் கடவுளுக்குச் சமர்ப்பித்துவந்தேன். கடவுளை வழி படுவதற்குப் போதுமான சாவகாசமும், அதற்குத் தேவையான மனத் தூய்மையும் எனக்கு நிரம்பவும் இருந்தன. கவுடலிடத் தில் சதா சர்வகாலமும் ஜனங்களின் க்ஷேமத்தையே விண்ணப் பம் செய்துகொண்டேன். கடவுளும் எனது விண்ணப்பத்திற் கிரங்கிவிட்டாரென்றே கருதுகின்றேன்."

புதுக்கோட்டை இரண்டாவது சட்ட சபையின் இரண்டா வது கூட்டம் 1928-ம் வரு மார்ச் மீ கூடும்பொழுது ஜனமித்திரன் பத்திராதிபர் Mr. P. S. சுப்பிரமணிய அய்யரை விடுதலை செய்வது சம்பந்தமாய் ஸ்ரீமான்களான G. சுந்தரேச அய்யரவர்களாலும், K. ஸ்வாமிநாதய்யரவர்களாலும் தீர்மானங்கள் கொண்டுவரப்பட் டன. இத்தீர்மானம் 3—4—28ல் சர்ச்சைக்கு வந்தது. அப் பொழுது ஸ்ரீ G. சுந்தரேச அய்யாவர்கள் தமது தீர்மானத்தை யொட்டிப் பின்வருமாறு பேசினர்:—"ஸ்ரீமான் சாமிநாதய்யரவர் களும் இதைப்போன்ற ஓர் தீர்மானத்தைக் கொணர்ந்திருக்கிறர். இதைப்பற்றி அவர் தீர்மானம் கொண்டுவர அருகதையுள்ளவர். மகாராட்டின் பயங்கர விளைந்த விஷயமாதலால் இதைக் கொண்டு வர எனக்கும் பொறுப்புண்டு. தீர்மானத்தின் முடிவு எப்படி யாயினும் சரி, நான் இதன் மூலம் எனது கடமையை உண்மை யாகவும் சத்தியமாகவும் செய்ய விரும்புகிறேன். மகாராஜாவுக்கு விரோதமாகச் சொல்லப்பட்ட விஷயத்தில் நீதிபதிகள் செய்த தீர்ப்புக்கு விரோதமாக நாம் நடந்துகொள்ளலாமா வென்ற சந் தேகம் ஒருவருக்கும் வேண்டாம். நீதிபதிகள் அளித்த தண்

டனே அதிகமானதென்றுவது பிசகென்றுவது இங்கு ஒருவரும் சொல்லவில்லை. அவைகளைப்பற்றி இங்கு சர்ச்சை செய்யவில்லை. இவர் பத்திரிகையில் மகாநாட்டின் அக்கிராஸனர் பேசிய பேச்சின் சாராம்சமும், இதர நடவடிக்கைகளும், மற்ற விஷயங்களும் வெளிவந்துள்ளன. இந்த விஷயம் நம் தலைநகரிலுள்ள இரு பத்திரிகைகளிலும்தான் வெளிவந்துள்ளன. ஆனால், ஓர் பத்திரிகையின் மீதுதான் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. இதனால் மற்றப் பத்திரிகை மீதும் வழக்குத் தொடர வேண்டுமென்று நான் சொல்லுவதாக நினைக்கக் கூடாது. இப் பத்திரிகையினால் ஓர்வித அபிப்பிராயமும் பொதுஜனங்களிடம் ஏற்படவில்லையென விசாரணையிலிருந்தே தெரிகிறது. ஏனெனில், பிராஸிகூஷன் தரப்பில் ஓர் சாக்ஷி, "வார்சு பாத்தியதையைப்பற்றி ஜனமித்திரனுக்குக்குத்தான் கவலை, மற்றெவர்களுக்கும் கவலையில்லை." என நீதி ஸ்தலத்தில் கூறியிருக்கிறார். தவிரவும், பிராஸிகூஷன் தரப்பில் ஓர் சாக்ஷியின் வாக்குமூலம் திருப்தியற்றதாயிருக்கிறதென்று நீதிபதியே கூறியிருக்கிறார். மகாராஜாவிடம் ஜனங்களுக்குப் பிரியமிருக்கிறது. ஸ்ரீமான் அய்யர் எழுதியதால் அந்தப் பிரியம் குறைந்ததாகக் கோர்ட்டில் சொல்லப்படவில்லை. மகாராஜாவிடத்தில் அப்பிரியத்தை விளைவிக்கக் கூடியதா யிருக்கிறதென்றும், அதனால் ஆசரை அவமதிப்புக்குட்படுத்துவதாக விருக்கிறதென்றும் நீதிபதிகள் கூறி வழக்கை எடுத்துக்கொண்டனர். இது விஷயமாக ஸ்ரீமான் அய்யர் கொடுத்த ஓர் வாக்குமூலத்தில், தான் ராஜத்துரோகமான விஷயத்தை ஒரு பொழுதும் நினைக்கவில்லையென்றும், அப்படி எழுதவுமில்லையென்றும், தமக்கு ராஜாவிடத்தில் எவ்விதமான தப்பபிப்பிராயமுமில்லையென்றும் கூறியிருக்கிறார். மேலும், ஆசிரியர் படித்தவர். அவ்விதமான விஷயங்களில் ஈடுபடுபவரல்லர். ஆதலால் அவர் அப்பிரியம் விளைவிக்க எண்ணி அம்மாதிரியான விஷயங்களை வெளியிடவில்லை.

ஆக, இத்தீர்மானத்தைக் கொணருமுன் அநேகர், "நீங்கள் கொணரும் தீர்மானம் சிபார்சாகத்தானே பாவிக்கப்படும். அதனால் ஓர்வித பயனும் ஏற்படாதே" யெனக் கேட்டனர். அதற்கு நான், நேற்று அக்கிராசனர் முடிவுரைப் பிரஸங்கத்தில் கடைசி பாகம் எனக்கு நம்பிக்கை யளித்திருப்பதாகக் கூறினேன். அக்கிராஸனர் தற்பொழுதைய ராஜீய நிலைமையைப்பற்றிக் கூறுங்கால், இது விஷயத்தில் தமக்கு மிகுந்த கவலை யேற்பட்டிருப்பதாகவும், சீக்கிரத்தில் எல்லாம் இனிது முடிவடையுமென்று தாம் நம்புவதாயும் கூறியிருக்கிறார்.

தவிரவும், மகாராஜாவும் நம்மிடையில்லையென்ற கவலை பொது ஜனங்களுக்கு இருந்துவருகிறதென்பதை ஒருவரும்

மறுக்கவொண்ணாது. ஆசிரியரும் இதைத்தான் கூறியுள்ளார். நீதிபதிகள் இதைத் தெரிவித்திருக்கும் தோரணை சரியல்ல வென்று கண்டுபிடித்து, அதற்காக அவரைத் தண்டித்துள்ளார்கள். அப்பீல் கோர்ட்டில் தண்டனைக் காலமாவது குறைக்கப்படலாமென்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், எல்லோருடைய நினைப்பும் பொய்யாகிவிட்டது. இவ்வழக்கில் நீதிபதிகள் பம்பாயில் பழைய வழக்கொன்றை ஆதாரமாகக் குறித்திருக்கின்றனர். இது சம்பந்தமாக, 20 வருஷங்களுக்கு முன் ராஜத்துவேஷமென்று கருதப்பட்டவை, இப்பொழுது அம்மாதிரியாகக் கருதப்படவில்லையென்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆசிரியரை விடுவிப்பதினால் அரசாங்கத்தார் தங்கள் கௌரவம் குறைந்து விடுமென்று நினைக்கவேண்டாம். பொதுஜனங்கள் விரும்பும் இவ்விஷயத்தில் அவர்களுக்கு இணங்குவதால் அவர்களது கௌரவம் அதிகரிக்குமேயொழிய குறையாது. ஸ்ரீமான் அய்யர் சிறை சென்று நான்கு மாதங்களாகிவிட்டன. பாக்கி தண்டனையைக் குறைத்து அவரை விடுதலை செய்வதால் அவர்களுக்கொருவிதமான அகௌரவமுமில்லை. அரசாங்கத்தார் அவரிடமிருந்து எவ்விதமான மன்னிப்பையும் எதிர்பார்ப்பது அழகல்ல. மன்னிப்புக் கேட்பதென்பதானது சமஸ்தானத்திற்கு ஓர் அவக்கேடாகிவிட்டது. ஆதலால் ஆசிரியரிடம் ஒன்றையும் எதிர்பாராமல் விடுதலை செய்வதே கவர்ன்மெண்டாருக்கழகு. இத்தீர்மானத்தைச் சபையோர் அங்கீகரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

பிறகு ஸ்ரீமான் K. ஸ்வாமினாதய்யரவர்கள் தீர்மானத்தை ஆதரிக்க எழுந்தார். சில ஆட்சேபணைகளுக்குப் பிறகு அவர் தீர்மானத்தை ஆதரித்துப் பின்வருமாறு பேசினார்:— "நான் உங்களில் ஒவ்வொருவரும் இத்தீர்மானத்தை ஆதரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஸ்ரீமான் சுந்தரேசய்யரைப் போல் எனக்கு இருதரப்பிலும் பேசத் தெரியாது. நான் ஒரு பக்கம்தான் பேச முடியும். (சபையில் சிரிப்பு). இந்த விஷயம் நீதி மன்றத்தில் ஒருவாறாக முடிவடைந்துவிட்டது. மற்ற வழக்குகளுக்கும் இதற்கும் வித்தியாஸமுண்டு. இது ராஜீய சம்பந்தமான வழக்கானதால் சட்டப்படி காரியங்கள் நடைபெற்றுவிட்டன. பத்திரிகையில் வெளியான எந்த விஷயங்களுக்காக வழக்குத் தொடரப்பட்டதோ அவ்விதமான விஷயங்கள் பிரசுரிக்கப்பட்டவெகு காலத்திற்குப் பின்னால் நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது. வார்சு பாத்யதை விஷயமாக ஜனங்களுக்கு ஆதங்கமிருந்ததுவாஸ்தவந்தான். இவ்விதமான வழக்குகளில் முன்னால் எச்சரிக்கை கொடுக்கப்படுவது வழக்கம். ஆனால், இவ்வழக்கில் அவ்விதமான எச்சரிக்கை யொன்றும்

கொடுக்கப்படாததுடன் பலமான முன்னேற்பாட்டுடன் வழக்குக் கொணரப்பட்டு தண்டனை கொடுக்கப்பட்டுவிட்டது. தண்டனையைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசிவருகின்றனர். இது விஷயமாக சில அபிப்பிராயங்கள் வெளியிட்டுள்ள உள்ளூர் பத்திரிகைகளின் மேல் கோர்ட்டை அவமதித்ததாக வழக்குக் கொணரப்பட்டு தண்டிக்கப்பட்டன. நேற்று அனேகர் அஸெஸர்கள் முறையைப்பற்றி கண்டித்துப் பேசியிருக்கின்றனர். அஸெஸர்கள் கூறுவது பொதுவாக அங்கீகரிக்கப்படவில்லையென்று அனேகர் முறையிட்டனர். அஸெஸர்கள் கூறுவதும் நீதிஸ்தலத்தில் கௌரவிக்கப்படவேண்டும். எல்லா விஷயங்களிலும் இவ்வழக்குப் புதிது. தவிரவும் இதுதான் முதற் தடவையாக 124–A பிரிவுப்படி இச்சமஸ்தானத்தில் (சுதேச சமஸ்தானங்களிலேயே இதுதான் முதற் தடவை) எடுத்துக்கொள்ளப்பட்ட வழக்கு. ஆகையால் எல்லோரும் இத்தீர்மானத்தை ஆதரிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அரசாங்கத்தாரும் நிபந்தனை ஒன்றும் ஏற்படுத்தாமல் இத்தீர்மானத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்.”

ஸ்ரீமான் கைலாஸம் அம்பலகாரர் அவர்கள், பத்திரிகையில் வெளியான விஷயங்கள் ராஜத்துவேஷ மற்றவையென்றும், பத்திரிகையில் எழுதியவற்றால் பொதுஜன அபிப்பிராயம் ஒன்றும் பாதிக்கப்படவில்லை யென்றும், தாம் தீர்மானத்தை ஆதரிப்பதாகவும் கூறி, எல்லோரும் தீர்மானத்தை ஆதரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

பின்னர் பிரதான காரியதரிசி அரசாங்கத்தின் சார்பாக தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். அதிகாரவர்க்கத்தைச் சேர்ந்த பப்ளிக் பிராஸிகூடர், ஸ்டேட் வக்கீல், சட்டசபை உபதலைவர், இவர்களும் தீர்மானத்தை எதிர்த்துப் பேசினர். ஸ்ரீமான் A. V. வைத்திநாதய்யர், ஸ்ரீமான் ராமச்சந்திர அம்பலகாரர், ஜனாப் அப்தர் ரஹீம் முதலியவர்கள், ஜனமித்திரன் ஆசிரியரை விடுதலை செய்ய வேண்டுமென்று தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்.

பிறகு ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அவர்கள் முடிவாகப் பேசியதாவது:—“ஸ்டேட் வக்கீல் ராஜீயக் கைதியையும் வேறு குற்றங்களுக்காக தண்டனை யடைந்தவர்களையும் ஒப்பிட்டுப் பேசுவது ஆச்சரியமாயிருக்கிறது. 124-A பிரிவின்படி பிரிடிஷ் இந்தியாவில் சிறந்த உத்தம தேசபக்தர்களும் சிறைக்குச் சென்றிருக்கின்றனர்; அவர்களில் அநேகர் தண்டனைக் காலத்திற்குள் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள். பிற்காலத்தில் அவர்களையே கவர்மெண்டார் அநேக விஷயங்களில் யோசனை கேட்டிருக்கிறார்கள். அவர்களில் சிலர் கவர்மெண்டு மந்திரிகளாக நியமிக்கப்

பட்டிருக்கிறார்களென்பது மிஸ்டர் ஆச்சாரியாருக்குத் தெரியும். இந்நிலைமையில் மிஸ்டர் ஆச்சாரியார் சொல்லிய பொருத்தம் சரியாகத் தோன்றவில்லை. ஸ்ரீ நாராயண மேனன் கேஸுக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. எதிரி தரப்பிலுள்ள பலத்தினளவு எனக்குத் தெரியும். கடவுளே நம்பியே நான் இத்தீர்மானத்தைக் கொணர்ந்திருக்கிறேன். ஆசிரியரை விடுதலை செய்வதால் அரசாங்கத்தாருக்குக் கௌரவமே ஏற்படும்."

பிரதான காரியதரிசியெழுந்து, இனியாவது அவர் அவ்விதம் செய்ய மாட்டாரென்பதற்கு ஓர் நம்பிக்கையில்லையென்றும், அவராவது அவரைச் சேர்ந்தவராவது அவ்வாறு உறுதி கூறினாலொழிய அரசாங்கத்தார் ஒன்றும் செய்ய முடியாதென்றும் கூறினர்.

பின்னர் தீர்மானம் ஓட்டுக்கு விடப்பட்டது. சிறிது நேரம் கமித்தே முடிவு தெரிவிக்கப்பட்டது. தீர்மானத்தின் முடிவு தெரிவிக்கும் வரை பூராவும் நிறைந்திருந்த விஸிட்டர் காலரியிலும் ஹாலுக்கு வெளியே குழுமியிருந்த பெருங் கூட்டமும் நிச்சப்தமாகவிருந்தன. பிறகு தீர்மானத்திற்குச் சாதகமாக 16 பேர்களும், விரோதமாக 15 பேர்களும் ஓட் கொடுக்க, தீர்மானம் நிறைவேறிற்றென்று அறிவிக்கப்பட்டது. இவ்வறிவிப்பு சந்தோஷத்துடன் வரவேற்கப்பட்டது. தீர்மானத்திற்குச் சாதகமாக ஓட் செய்தவர்களெல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள். விரோதமாக ஓட் கொடுத்தவர்களில் 12 பேர்கள் உத்தியோகப்பற்றுள்ள அங்கத்தினர்கள், இரண்டு பேர்கள் அரசாங்கத்தாரால் நியமனம் செய்யப்பட்டவர்கள், மற்றொருவர் தேர்ந்தெடுக்கப்பட்டவர். நடுவு நிலைமை வகித்தவர்கள் 5 பேர்கள்; அவர்களெல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்னர் ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அவர்கள் ஜெயிலுக்குச் சென்று ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யருடன் பேசி, அவரிடம் ஓர் மனு வாங்கி, அரசாங்கத்தாரிடம் சேர்ப்பித்தனர். அதைப்பற்றிய விபரம், அவர் ஸ்ரீமான் S. சிவஞானதய்யருக்கு எழுதிய அடியில் வரும் கடிதப் பகுதியிலிருந்து தெளிவாகும்:—

"Thanks for your kind sentiments. I did not purposely keep this from you. I did not have the copy. I copied in haste and it was by chance I found it in my pocket to-day.

I do not think there is any harm. Pudukotah people do not deserve better for his suffering. When I went inside, P. S. Subramanian was taking கர்ப்பூர

ஹாரத்தி. I showed him the draft. He cheerfully agreed to sign. I even now believe that if there is one other man in Pudukotah to suffer like him, Pudukotah will be proud....."

மேற்கூறிய மனுவானது ரீஜெண்டு சாகேப் அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டு, அவர்கள் விஷயத்தைப் பரியாலோசித்து, மீதமுள்ள தண்டனை காலத்தை கிரிமினல் புரொஸீஜர் கோடு 401 (5) பிரிவின்படி களிகூர்ந்து ரத்து செய்து, ஸ்ரீமான் ஐயரை 15—4—28ல மாலை விடுதலை செய்தனர். ஸ்ரீமான் ஐயரவர்கள் விடுதலைசெய்யப்பட்டதை அறிந்த பேட்டைப் பிரமுகர்களும், பொது ஜனங்களும் மறுநாள் ஸ்ரீமான் அய்யரவர்களை ஜனமித்திரன் கார்யாலயத்தில் கண்டு தங்களது சந்தோஷத்தைத் தெரிவித்துக்கொண்டார்கள். பொதுஜனங்கள் எல்லோரும் ஒன்றுகூடி ஸ்ரீமான் ஐயர் சிறைவாஸத்தை அனுபவித்து மீண்டும் தங்களிடம் வந்து சேர்ந்ததைப்பற்றித் தங்களுடைய சந்தோஷத்தையும், நன்றியறிதலையும் காட்டிப் பாராட்டவேண்டுமென்று நினைத்து, செவ்வாய்க்கிழமை மாலை 5-30 மணிக்கு காந்தி சதுக்கத்தில் ஒரு பொதுக் கூட்டம் கூட்ட ஏற்பாடு செய்தனர். அவ்விதமே சுமார் 300 ஜனங்களுக்கு மேல்கொண்ட ஓர் பொது ஜனக் கூட்டம் கூடியது. பேட்டைப் பிரமுகர்கள் பலர் விஜயம் செய்திருந்தனர்.

"தேசஸேவியன்" ஆசிரியர் ஸ்ரீமான் ஆ. சு. நாகரத்தினமய்யர் அவர்கள் பொது ஜனங்களின் சார்பாக சட்டசபை அங்கத்தினராகிய கௌரவ ஜஸ்டிஸ் அப்துல் கனி யவர்களை அக்கிராஸனம் வகிக்கும்படி பேசுமுகத்தான், பொதுஜனக் கூட்டம் கூடியதின் நோக்கத்தை விஸ்தாரமாய் எடுத்துரைத்தார். ஸ்ரீமான் மணி ஐயர் சிறைசென்ற விருத்தாந்தத்தையும், அவரை விடுதலை செய்யவேண்டுமென்று பொதுஜனங்கள் பலவிதங்களில் போராடியதையும், சட்ட சபையில் விடுதலைத் தீர்மானம் நிறைவேறியதையும் சாங்கோபாங்கமாய் எடுத்துக்கூறிவிட்டு, சில நாட்களாகவே மணி அய்யர் விடுதலை செய்யப்பட்டுவிடுவாரென்று வதந்தி உலாவியதாகவும், ஆனால் எந்த சமயத்தில் அவர் விடுதலை செய்யப்படுவாரென்று பொதுஜனங்கள் அறியக்கூடவில்லையென்றும், எந்த நிமிஷத்தில் விடுதலை செய்யப்படுவாரென்று சர்வ ஜாக்கிரதையாக கவனித்து வந்ததாகவும், அவரை விடுதலை செய்யும் காலை சிறைச்சாலைக்குச் சென்று குதூஹலத்துடன் வரவேற்கவேண்டுமென்று தக்க ஏற்பாடுகள் செய்திருந்ததாகவும், ஆனால் அரசாங்கத்தார் திடீரென்று ஒருவரும் அறியா வண்ணம் வெகு ரகசியமாக விடுதலை செய்துவிட்டபடியால் தங்களுடைய

சங்கல்பம் நிறைவேறுமல் போய்விட்டதென்றும், அக்குறை யைத் தீர்க்கவே அங்கு பொதுஜனங்கள் கூடியிருப்பதாகவும் எடுத்துரைத்து, அக்ராஸனர் முஸ்லீம் சமூகத்தைச் சேர்ந்தவரா யிருந்த போதிலும், ஹிந்து–முஸ்லீம் ஒற்றுமைக்கும் பாடுபடுபவ ராகையால், அவர் அக்ராஸனம் வகிக்க முற்றிலும் அருகதை யுள்ளவரென்றும் கூறி அக்ராஸனரைப் பிரேரணை செய்தார். ஸ்ரீமான் தெகூழிணமூர்த்தி சாஸ்திரிகளவர்கள் இதை ஆமோதித் தார். பின்னர் ஜனப் அப்தல் கனி யவர்கள் அக்ராஸனம் வகித்து, பேச விரும்புகிறவர்கள் பேசலாமென்று அழைத்தார். திருப்பூர் இளைஞர்களும், பிடிட்டிஷ் இலாகாவில் ஆஸிஸ்டெண்ட் இஞ்சினியர் வேலை பார்த்துப் பென்ஷன் பெற்றவருமான ஸ்ரீமான் தெகூழிணமூர்த்தி சாஸ்திரிகள் முதலில் பேசினார். அன்னார் பேசியதின் சாராம்சம் பின்வருமாறு:—"ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யரவர்கள் சிறை சென்ற விஷயத்தை நீங்கள் நன்கறிவீர்கள். அவரை தண்டித்தது நீதமா அநீதமாவென்ற விஷயத்தை நாம் சர்ச்சை செய்ய வேண்டியது அவசியமில்லை யென்பதுடன் அவ்விதம் செய்யவும் கூடாது. ஸ்ரீமான் மணி அய்யர் நமது சமஸ்தானத்தில் முதன்முதலாக ஜனமித்திரன் பத்திரிகையை பொதுஜன நன்மையைக் கருதி ஸ்தாபனம் செய் தார். பத்திரிகைத் தொழிலென்றால் சாமான்யமல்ல. சிலர் பணம் சம்பாதிக்கலாமென நினைக்கலாம். ஆனால், இத்தொழில் ஓர் பொறுப்பு வாய்ந்த தொழிலாகும். கஷ்டங்களும் இடையூறு களும் ஏற்படுவது இத்தொழிலில் வெகு சகஜம். ஸ்ரீமான் மணி அய்யர் சிறைவாஸம் செய்யும்படி நேர்ந்தது துரதிருஷ்டவசமே யாகும். அவர் நம்மிடம் திரும்பிவந்திருப்பதுபற்றி நம்மெல் லோருக்கும் வெகு சந்தோஷம். ஸ்ரீமான் ஐயரும் தம்மை சிறைக்கனுப்பி விட்டார்களேயென்று பயந்து அதனால் தமது கடமையைச் செய்வதில் தயங்குவாரென்று நாம் எண்ணவில்லை. இனியும் எப்பொழுதும்போல் அரசாங்க நிர்வாகத்தில் குற்றங் குறைகளிருப்பின், அவைகளை தைரியமாய் எடுத்து வெளியிடுவா ரென்ற நம்பிக்கை நமக்கிருக்கிறது."

பிறகு ஸ்ரீமான் P. K. நடேச பிள்ளை பின்வருமாறு பேசி னார்:— "பொது ஜனங்களின் சார்பாக சுமார் 5 மாத காலம் வரை சிறை சென்று இப்பொழுது நம்மிடம் ஸ்ரீமான் ஐயர் திரும்பி வந்து சேர்ந்ததைப்பற்றி நம்மெல்லோருக்கும் அளவிடா சந்தோ ஷமே. அதை வெளியிடுவதற்கே இங்கு கூடியிருக்கின்றோம். ஸ்ரீமான் ஐயர் பொதுஜனத் தொண்டர் என்ற ஹோதாவில் சிறை சென்றார். நமக்காக அரும்பாடுபட்ட ஸ்ரீமான் மணி ஐயரை வரவேற்று நமது சந்தோஷத்தைத் தெரியப்படுத்தவேண்டியது

நமது கடமையாகும். இதே இடத்தில்தான் சில மாதங்களுக்கு முன்னர் எனது அக்கிராஸனத்தின் கீழ் ஓர் கூட்டம் கூடி ஸ்ரீமான் ஐயர் விடுதலை சம்பந்தமாய் இரண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அக்கூட்டத்திற்குப் பின்னர் என்னைப் போலீஸார் C. I. D. வைத்து கவனித்து வந்தனர். சொல்ல வொண்ணு இடையூறுகளை எனக்குச் செய்தனர். எனினும் ஸ்ரீமான் ஐயர் சிறைவாஸம் செய்யும்பொழுது இவ்வித இடையூறுகளைப் பொருட்படுத்தக்கூடாதென நினைத்தேன். இன்று தினம் நியாயவாதிகள் ஒருவரும் இக்கூட்டத்திற்கு விஜயம் செய்யாதது விசனிக்கத்தக்கது. ஸ்ரீமான் ஐயர் விடுதலை சம்பந்தமாய் பத்திரிகைகளில் எழுதியும், சட்ட சபை அங்கத்தினர்களுக்கு விண்ணப்பம் செய்தும் போராடினேன். நான் எடுத்த காரியம் கைகூடியது பற்றிச் சந்தோஷமே. மீண்டும் ஒரு முறை ஸ்ரீமான் ஐயரை வரவேற்பதுடன் நமது மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறேன்."

ஸ்ரீமான் ஆ. சு. நாகரெத்னமய்யரால் அக்கிராசனரின் அநுமதியின் பேரில் மகாஜனங்களின் சார்பாக ஸ்ரீமான் ஐயரவர்களுக்கு கோஷங்களுக்கிடையே பூமாலை சூட்டப்பட்டது. பின்னர் ஸ்ரீமான் ஐயர் அடியில் வருமாறு பேசினார்:—

"அக்கிராசனாதிபதியவர்களே! எனது அன்பார்ந்த சகோதரர்களே!

இத்தினத்தை எனது வாழ்நாளில் என்றும் மறக்கவொண்ணாத ஓர் சுதினமாகக் கருதுகிறேன். தாங்கள் என் பேரில் வைத்திருக்கும் அன்பின் மேலீட்டால், பிரிய வசனங்களால் நான் செய்த சிறியதோர் தொண்டைப் பெரிதென மதித்து, என்னைக் கௌரவப்படுத்தினீர்கள்; ஆயினும் தங்களுடைய ஸ்துதிய மொழிகளுக்கு நான் அர்கனல்லன் என்பதை நன்கறிவேன். இனி மேலாவது நான் தாங்கள் கூறியிருக்கிறபடி நடந்து, தங்களுடைய ஸ்துதியத்திற்குப் பாத்திரமாகவேண்டுமென்பதே தங்கள் அபிப்பிராயம் என்று உணர்ந்து, அவ்விதமே நான் நடந்துகொள்வேனென்று தங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் உறுதி கூறுகின்றேன்.

நமது சமஸ்தானத்தில் பொதுஜன உணர்ச்சியும், ஐக்கிய பத்தியமும், சமுதாய வாழ்வும் ஏற்பட்டது சமஸ்தான மகாநாடுகள் ஏற்பட்ட பின்னர்தான் என்று திண்ணமாய்க் கூறுவேன். இதற்கு முன்னர் கற்றறிந்த சில தலைவர்கள் மாத்திரம் பொதுஜனத் தொண்டாற்றி வந்ததையும் நான் நன்கறிவேன். ஆனால் பொதுஜனங்களெல்லோரும் ஒன்றுகூடினாலல்லாது பொதுஜனக் கிளர்ச்சிக்கு வலிவு ஏற்படாது. இப்பொழுது கற்றறிந்தவர்

களின் ஊக்கம் குறைந்து, பொதுஜனங்களின் ஊக்கம் விருத்தி யாகி வருவது இக்கூட்டத்திலிருந்தே தெரியவருகிறது.

நான் சிறைக்குச் செல்லும்படியாய் நேர்ந்த சந்தர்ப்பங்க ளையும், காரணங்களையும், காரியங்களையும் நீங்கள் நன்கறிவீர்க ளாதலின், நான் விஸ்தாரமாய் எடுத்துரைக்க விரும்பவில்லை. நான் ராஜத் துவேஷக் குற்றம் சாட்டப்பட்டு சிறை சென்றேன். என் பேரில் இரண்டு குற்றங்கள் சாட்டப்பட்டன. ஆறுவது மகாநாட்டில் ஸ்ரீமான் S. சத்யமூர்த்தி ஐயரவர்கள் அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தியதை எனது பத்திரிகையில் வெளியிட் டது முதல் குற்றம். இரண்டாவதாக சமஸ்தான வார்சு பாத் யதை விஷயமாக சென்னையில் செல்வாக்குடன் நடைபெறும் 'ஹிந்து' பத்திரிகையில் ஓர் அறிஞரால் எழுதப்பெற்று வெளி வந்த வியாசத்தை மொழிபெயர்த்து எனது பத்திரிகையில் வெளியிட்டது இரண்டாவது குற்றம். வார்சு பாத்ய விஷயமாக பொதுஜனங்கள் சர்ச்சை செய்யும் உரிமை பொது ஜனங்களுக் கிருப்பதாக கோர்ட்டாரவர்களே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். பத்திரிகையில் வெளிவந்த அபிப்பிராயங்களை நீதிபதிகள் கண் டித்ததாகத் தெரியவில்லை. ஆனால் அவ்வபிப்பிராயங்கள் சரியான தோரணையில் எழுதப்படவில்லையென்பதுதான் நீதிபதிகளின் அபிப்பிராயம். இரண்டு குற்றங்களிலும் தோரணை என்னு டையதல்லவென்பதை நீங்கள் நன்கறிவீர்கள். ஆயினும் தோரணை யாருடையதாயிருந்தபோதிலும், என் பத்திரிகையில் வெளிவந்த விஷயங்களுக்கு நான்தான் ஜவாப்தாரியென கோர்ட்டார் சட்டப் படி தண்டித்தனர்.

நான் இப்பொழுது சிறையை விட்டு வந்துவிட்டபடியால் எனது அபிப்பிராயங்களை மாற்றிக்கொண்டுவிட்டேனென்று நீங்கள் கருதவேண்டாம். சமஸ்தானத்தில் அத்யந்த ராஜவிசு வாசிகளென நினைத்துக்கொண்டிருப்பவர்களின் ராஜ விசுவாசத் தைக் காட்டிலும் என்னுடைய ராஜ விசுவாஸம் எள்ளளவும் குறைந்ததல்லவென்பதைத் தெரியப்படுத்த விரும்புகிறேன். ஆனால், என்னுடைய ராஜவிசுவாஸத்தில் ஒரு வித்யாசம் உண்டு. ராஜ விசுவாஸத்தைப்போல் தேசீய விசுவாஸமும், தேச விசுவாஸ மும் இருக்கின்றன. எனது ராஜ விசுவாஸம் இம் மூன்றிற்கும் முரணுயில்லாத விசுவாசந்தான். நமது சமஸ்தானத்தில் தொண்ட மான் மரபு நீடூழி காலம் வாழையடி வாழையாய் செழித்தோங்க வேண்டுமென்பதே எனது பேரவா. இதில் ராஜவிசுவாசக்குறைவு என்னவிருக்கின்றது?

ஒரு வருஷ காலம் தண்டிக்கப்பட்ட நான், ஐந்து மாத காலத் திற்குள் எவ்விதம் தங்களிடம் வந்து சேர்ந்தேனென நீங்கள்

அறிய விரும்புவது சகஜமே. இம்மாதம் 7-ந் தேதி வரை நான் விடுதலை செய்யப்படுவேன் எனக் கனவிலும் கருதவில்லை. 7-ந் தேதி சனிக்கிழமையன்று எனது குருவும், உற்ற நண்பரும், ஜனத் தலைவர்களில் சிறந்து விளங்குபவருமாகிய ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அவர்கள் என்னை சிறைச்சாலையில் வந்து கண்டு, சமஸ்தான சட்ட சபையில் எனது விடுதலைத் தீர்மானம் நிறை வேறியதைப்பற்றி எனக்கு எடுத்துரைத்தார். அவர் அங்கு வந்த சமயத்தில் நான் கோவிலில் தீபாராதனை செய்துகொண்டி ருந்தேன். ஸ்ரீமான் ஐயரவர்களுக்குத் தாம் வந்த கார்யம் கை கூடுமென்ற நம்பிக்கையும் ஏற்பட்டது. என்னிடத்தில் அவர் ஒரு மனுவைக் காண்பித்து, அதில் எனக்கு ஆக்ஷேபகரமானது உண்டாவெனக் கேட்டார். நானும் ஒரு முறைக்கு இருமுறை படித்துப் பார்த்தேன். ஆக்ஷேபகரமாய் எனக்கு ஒன்றும் தோன்றவில்லை. நான் மன்னிப்புக் கேட்டுக்கொள்வதாகவாவது, அல்லது நான் செய்த கார்யத்திற்கு வருத்தம் தெரிவிப்பதாக வாவது அதில் காணப்படவில்லை. நான் மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா அவர்களிடத்திலும், மகா-ன-ன-ஸ்ரீ ரீஜெண்டு சாகேபவர்களிடத் திலும் அத்யந்த ராஜவிசுவாஸமுள்ளவனென்றும், இனிமேலும் நான் அவ்விதமே யிருப்பேனென்றும் காணப்பட்டிருந்தன. இத் தகைய வாக்கு மூலத்தைத்தான் நான் நீதி ஸ்தலத்திலும் கொடுத்திருக்கிறேன். ஸ்ரீமான் ஐயரவர்களே, அவருக்கேதே னும் ஆக்ஷேபகரமாகவாவது, அல்லது கௌரவக் குறைவாக வாவது தோன்றியதாவெனக் கேட்டேன். அவ்விதமேதேனு மிருந்தால் தாம் அதில் பிரவேசித்திருக்க மாட்டாரென்றும், தாம் எடுத்த கார்யத்தை அரசாங்கத்தாருக்கும் சரி, எனக்கும் சரி, ஒருவருக்கும் கௌரவக் குறைவில்லாமல் நிறைவேற்றவேண்டு மென்ற ஒரே நோக்கத்துடன் மாத்திரம் அவ்விதம் செய்ததாக வும், தாம் ஒருவரையும் கலந்து எழுதவில்லையென்றும் கூறினார். ஸ்ரீமான் ஐயரவர்கள் கூறியதை முற்றிலும் நம்பினேன். ஏனெ னில் அவர் நல்லெண்ணத்துடன்தான் இவ்விதம் முயற்சியெடுத் துக்கொண்டாரென நினைத்தேன். சகுனங்களும் நன்றாயிருந்த படியால் தெய்வ சம்மதமும் இருப்பதாகக் கருதினேன். நானும், "சுமார் ஐந்துமாத காலத்தைக் கழித்துவிட்டேன். எஞ்சி நிற்கும் காலத்தையும் கழித்து விடுவேன். ஆனால், இங்கு எனது காலத்தை வாளாவிருந்து வீணுக்குவதைக்காட்டிலும் விடுதலை செய்யப்பட்டால், பொதுஜனத் தொண்டாற்ற சந்தர்ப்பம் கிடைக்குமென்ற ஒரே ஒரு அவாதானிருக்கிறது." எனக் கூறி னேன். இந்த மனுவின் காரணமாகத்தான் நான் விடுதலை செய் யப்பட்டு உங்களிடம் இன்றிருக்கிறேன்.

நான் எக்காரியத்திற்காகப் பாடுபட்டேனே அக்காரியம் கை கூடிவிட்டதென்பதை சிறையில் நன்குணர்ந்தேன். உதவி ஏஜெண்ட் Mr. கார்னக் துரையவர்கள் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தபொழுது அவருடன் பேசும் பாக்யம் எனக்குக் கிடைத்தது. நான் பிரகிருத அரசாங்க நிர்வாகத்தில் கடை பெறும் சில ஊழல்களையும், அரசாங்கத்தாரின் அடக்குமுறைகளையும் எடுத்துரைத்தேன். உதவி ஏஜெண்டும் சமஸ்தானத்தில் நடைபெறும் விஷயங்களை அவர்கள் ரிகார்டுகள் மூலம் பூரா வாகவும் அறிந்திருப்பதாகவும், ஏதேனும் புதிதாய்ச் சொல்ல வேண்டியிருந்தால் தாம் கேட்டுக்கொள்ள ஆவலாயிருப்பதாகவும் கூறினர். சமஸ்தான எதிர்காலம் இருள் சூழப்பட்டிருப்பதாலும், சமஸ்தான வார்சு பாத்யதை விஷயம் சமஸ்தான ஜனங்கள் மகாநாட்டில் தீர்மானித்தபடி இந்திய அரசாங்கத்தாரால் உடனே முடிவு செய்யப்படவேண்டுமென்றும், அவ்விதம் செய்வதே பிரகிருத ராஜீய நிலைமையை மாற்றத்தக்க மூலமருந்தாகுமென்றும் கூறினேன். அதற்கு அவர், "நாங்கள் ஜனங்களின் அபிப்பிராயத்தைத் தெரிவிக்காமலில்லை. எங்களது முடிவான அபிப்பிராயத்தை கனம் வைஸிராய் அவர்களுக்கு நாங்கள் தெரிவித்துவிட்டோம். இது சம்பந்தமான பேபர்களும் சீமைக்கு இந்தியா மந்திரிக்கு அனுப்பப்பட்டுவிட்டன. முடிவான உத்தரவை ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்க்கிறோம். நாங்கள் எங்களது கடமையைச் செய்துவிட்டோம். நாங்கள் வேறு என்ன செய்யக் கூடும்?" எனக் கூறினர். உதவி ஏஜெண்டு கூறியவற்றிற்கு நான் வந்தனமளித்தேன். அன்றுதான் எனக்கு தைரியமேற்பட்டதுடன் நான் எடுத்த காரியமும் கைகூடுமென்று நம்பிக்கையடைந்தேன். நாம் எடுத்துக் கூறவேண்டிய விஷயங்களை வேண்டியபடி எடுத்துக்கூறிவிட்டோம். இனி எடுத்துக் கூற வேண்டிய அவசியமுமில்லை. சீக்கிரத்தில் அவியவஸ்தை ஒழிந்து, ஏதேனும் ஒருவிதத்தில் வியவஸ்தை யேற்பட்டுவிடுமென நம்பினேன். இத்தகைய காரண கார்யங்களைக்கொண்டுதான் நான் உங்களிடம் மீண்டும் திரும்பிவந்திருக்கிறேன். எனக்கு ஏதேனும் மதிப்போ, பெருமையோ, அல்லது கௌரவமோ ஏற்பட்டிருந்தால், அது தங்களுடையதேயாகும். அல்லது மதிப்புக் குறைவிருந்தபோதிலும், அதுவும் தங்களுடையதேயாகும். என்னை நீங்கள் கௌரவித்ததின் மூலம் உங்களையே நீங்கள் கௌரவித்துக்கொண்டீர்கள். எனது சிறைச்சாலை வாழ்க்கையை நான் என்றும் மறக்கவொண்ணாத பாக்கியமாகவே கருதுகிறேன். சிறைச்சாலையில் அநேக குறைகளிருக்கின்றன. அவைகளை நிவர்த்தி செய்யவேண்டியது அத்தியாவசியம். பொது ஜனங்களுக்காவது, அல்லது சட்ட சபை அங்கத்தினர்களுக்காவது

சிறைச்சாலையில் கடைபெறும் விஷயங்களைத் தெரிந்துகொள்ளக் கூடிய சந்தர்ப்பங்கள் இல்லாதபடியால் அவர்கள் சிறைச்சாலை சீர்திருத்த சம்பந்தமாய்த் தங்களது கவனத்தைச் செலுத்த வில்லையெனக் கருதுகிறேன். நான் இவ்விஷயங்களை நேரில் கண்டறிந்தவனுதலின் சிறைச்சாலை சீர்திருத்த சம்பந்தமாய் எனது அபிப்பிராயங்களை இனி எடுத்துரைக்கலாமென விருக்கின் றேன். சிறைச்சாலையில் நான் வெகு அன்புடன் நடத்தப்பட் டேன். இந்தச் சந்தர்ப்பத்தில் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்தக் கடமைப்பட்டவனாக விருக்கின்றேன். மீண்டும் தங்களுடைய பாராட்டுதலுக்கு எனது வந்தனத்தைச் செலுத்துவதுடன், கூடிய சீக்கிரத்தில் நீங்கள் எல்லோரும் சந்தோஷிக்கும்படி கடவுள் அருள் புரியுமாறு வேண்டுகிறேன். வந்தேமாதரம்!"

பின்னர் அக்கிராஸனர் ஸ்ரீமான் ஐயர் விடுதலையடைந்த விஷயமாய் எல்லோரும் சந்தோஷப்படவேண்டியதென்றும், ரீஜெண்டு சாகேபவர்கள் தேக சௌக்கியமடைந்துவருவது சந் தோஷிக்கத்தக்கதென்றும், இக்கூட்டத்தில் பலர் பேசியதி விருந்தே மகா-ரா-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் ஜனங்களிடம் திரும்பி வரவேண்டுமென்று ஏற்படுவதாகவும் கூறினர். ஸ்ரீமான் ஆ. சு. நாகரத்னமய்யர் அவர்கள் அக்கிராஸனருக்கும், மகாஜனங் களுக்கும் தகுந்தபடி வந்தனமளிக்கக் கூட்டம் கலைந்தது.

ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய ஐயரவர்கள் விடுதலை செய்யப் பட்டபொழுது ஸ்ரீமான் விசுவநாதய்யர் திருவனந்தபுரத்தி லிருந்தார். அவர் 17—4—1928-ந் தேதி ஏஜெண்ட் Mr. C. W. E. காட்டன் துரையவர்களைப் பேட்டி கண்டனர். ஸ்ரீமான் அய்யரவர்களுக்கு ஜனமித்திரன் பத்திராதிபரின் விடு தலையைப்பற்றி சமாசாரம் கிடைத்ததும் அதை அவர் ஏஜெண்ட் துரையவர்களிடம் தெரிவிக்க, துரையவர்களும், "A blot on the Pudukotah Administration has been removed" என்று கூறி சந்தோஷித்தனர். ஸ்ரீமான் ஐயரவர்களும் மகா-ரா-ள-ஸ்ரீ ரீஜெண்ட் சாகேப் அவர்களுக்குத் தமது வந்தனத்தைத் தெரி வித்து, "Rapiebam rejoices that a blot on Pudukotah Administration has been removed" என்று தந்தி கொடுத்த னர்.

"ஜனமித்திரன்" ஆசிரியர் விடுதலையைப்பற்றி ஸ்ரீமான் K. L. சர்மா அவர்கள் B. A., B. L. பின்வருமாறு பத்திரி கையில் எழுதினர்:—

"ஜனமித்திரன் பத்திரிகையைப் பொதுஜன நன்மைக்காக சுத்த மனதுடனும், கம்பீரமான தோரணையிலும் நடத்தி வந்து, அதனாலேயே சிறைவாசமனுபவித்த ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யரவர்கள் விடுதலை பெற்று, தம் பதவியை மறுபடி ஏற்றுக் கொண்டதில் யாருக்குத்தான் மனம் மலர்ந்திராது?

நமது நகரில் சென்ற பல ஆண்டுகளாக நடந்த செயல்களில் தலையிட்டுக்கொண்ட தலைவர்கள், மற்றவர் யாவரும் காட்டியிராத வீரத் தன்மையும், நியாகமும், உதாரமும் இவரிடத்தில் காணப் பட்டதென்பதற்காக, இவரை நம்மவர்கள் பொது ஊழியத்துக் கூப் பயன்படுத்திக்கொள்வதில் இனி தவறமாட்டார்களென நம்பு கிறேன்."

24-வது அத்தியாயம்.

மார்த்தாண்ட பைரவ மன்னரின் மரணமும், மற்ற விவரங்களும்.

புதுக்கோட்டை அச்சுக்கூட சட்டப்படி ஸ்ரீமான் S. ராமனு தய்யர் மீது தொடரப்பட்ட வழக்குகளில் அடிஷனல் சீப் மாஜிஸ்திரேட், கேஸ் ஒன்றுக்கு ரூ 25 வீதம் ரூ 50 அப ராதம் விதித்ததிலிருந்து, சீப் கோர்ட்டில் ரிவிஷன் செய்யப் பட்டிருந்ததில், 8-5-28ல் அப்பீல் நீதிபதிகள் இரண்டு பிரிவு களின்படியும் எதிரி குற்றவாளியில்லையென்று கண்டுபிடித்து, அபராதத்தை வாபீஸ் கொடுக்கும்படி தீர்ப்புச் செய்தனர்.

பம்பாயில் 19—5—28ல் கூடின சர்வ கட்சி மகாநாட்டிற் காகவும், அதே தினம் பம்பாயில் சற்று முன்னால் நடந்த மன்னர் களின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைப்பற்றி ஆலோசிக்கக் கூடவிருந்த அகில இந்திய சுதேச சமஸ்தானப் பிரஜைகளின் மகாநாட்டின் நிர்வாகக் கூட்டத்தின் காரியங்களைக் கவனிப்பதற்காகவும் மேற்படி மகாநாட்டின் கூட்டுக் காரியதரிசி யான ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் அவர்கள் B. A. 15-5-28ல் புறப்பட்டுச் சென்றார்.

தலைநகரில் தீ விபத்துக்கள் சில தினங்களாக ஏற்பட்டுக் கொண்டிருந்தன. அவற்றுள் ஒன்று போலீஸ் ஸ்டேஷனுக்கு அடுத்த காளிங்குண்டு பிள்ளையார் கோவிலில் தீப்பற்றி, பிள்ளை

யார் விக்ரஹமும் இரண்டாய்த் தெறித்துப்போயிற்று. இது அச்சானியமாகக் கருதப்பட்டது. இந்த விக்ரஹம் ஓர் புராதன மான விக்ரஹமென்றும், வலம்புரி விக்ரஹமானதால் வெகு விசேஷமானதென்றும் கூறப்பட்டது. சர்வ விக்னங்களையும் தடுக்கும் கடவுளுக்கு இந்தக் கதி ஏற்பட்டதைக் குறித்து ஜன மித்திரன் எழுதுகையில், "தெய்வங்கூட நமது செயல்களைக் கண்டு அருவறுத்து விடை பெற்றுக்கொண்டதுபோலும்!" என்று குறிப்பிட்டது. மேலும் விநாயகர் ஆலயத்திலிருந்து வெடித்துத் தெறித்த ஆணியொன்று அரண்மனை யானை லாயத் தில் விழுந்து, யானை மால் கொட்டகை முழுவதும் எரிந்துபோய் விட்டது. வேழமொன்றிற்கும் தீயினால் புண் ஏற்பட்டது. இந்த ஸம்பவத்தைப் பலர் ஓர் தூர் நிமித்தமாகக் கருதினர்.

இவ்விபத்து நடந்து வெகு நாளாவதற்குள் மார்த்தாண்ட பைரவ மன்னர் திடீரென்று மறித்தனர். அதன் விவரம் பின் வருமாறு:—

மன்னர் உடம்பு அசௌகரியத்தால் ஸஸ்திர சிகிச்சை செய்துகொண்டாரென்றும், ஜ்வரம் கடுமையாக விருக்கிறதென் றும் தந்தி மூலம் தெரிய வந்தது. பின்னால் மகாராஜா அவர் களின் தேக ஸ்திதி எப்படி யிருக்கிறதென்று தந்தி கொடுத்துக் கேட்டதில், மன்னர் காலஞ்சென்றுவிட்டதாகத் தந்தி கிடைத் தது. பப்ளிக் ஆபீஸ்கள் அடைக்கப்பட்டன; கடைகள் மூடப் பட்டன. எல்லோரும் துக்க ஸாகரத்தில் மூழ்கினர். அரசாங் கத்தார் பின்வரும் விசேஷ அறிக்கையை வெளியிட்டனர்:—

"நம்முடைய பூர்ண அன்புவாய்ந்த மகா-ரா-ரா-ஸ்ரீ மகா ராஜா ஸ்ரீ பிரகதம்பா தாஸ் ராஜா ஸர். மார்த்தாண்ட பைரவத் தொண்டமான் பஹதூர் ஜி. ஸி. ஐ. இ. அவர்கள் 1928-ம் வரு மே மீ 28உ திங்கட்கிழமை Paris நகரத்தில் காலஞ்சென்று விட்டார்கள் என்ற மிக்க துக்ககரமான செய்தி புதுக்கோட்டை ராணி அவர்களிடமிருந்து மகா-ரா-ரா-ஸ்ரீ ரீஜெண்ட் ஸாகேப் அவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

ஐம்பத்திரண்டு நிமிஷ அதிர் வேட்டுகள் (minute guns) போடப்படும். எல்லா கொடிகளும் பாதி இறக்கிக் கட்டப்படும்.

நாற்பத்திரண்டு வருஷ காலம் கீர்த்தியுடன் அரசு புரிந்து, மண்ணுலகை விட்டேகிய நமது பிரியமுள்ள மகாராஜா அவர்களி டம் நமக்குள்ள மரியாதைக்கும் விசுவாசத்திற்கும் அறிகுறியாக நாளது 1928-ம் வரு மே-மீ 29-உ செவ்வாய்க்கிழமை முதல் ஐந்து நாட்கள்வரை சமஸ்தானத்திலுள்ள ஸகல பப்ளிக் ஆபீஸ் கள், பள்ளிக்கூடங்கள் வகையராக்கள் (ஜரூரான வேலைகளுக்குத் தவிர) சாத்தப்படும்.

காலஞ்சென்ற மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் உத்தரக் கிரியைகள் மகா-ரா-ரா-ஸ்ரீ யுவராஜா அவர்களால் சீமையில் நடத்தப்பட்டு வருகின்றன.

(sd) P. K.Kunhunni Menon,
Dewan.

நியாயவாதிகளின் அநுதாபக் கூட்டம்.

மாலை 3-மணிக்கு புதிதாய்க் கட்டப்பட்ட நியாயவாதிகளின் புத்தகாலயக் கட்டிடத்தில், நியாயவாதிகள் சங்கத்தின் ஆதரவில் ஓர் அநுதாபக் கூட்டம் நடைபெற்றது. அச்சங்கத்தின் அக்கிராசனர் ஸ்ரீமான் V. வைத்தியநாதய்யர் அவர்கள் அடியிற் கண்ட தீர்மானத்தைப் பிரேரணை செய்தார்:—

"நமது அன்பு வாய்ந்த மாசுமை தங்கிய மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா ஸ்ரீ பிரகதம்பதாஸ் ராஜாஸர் மார்த்தாண்ட பைரவ தொண்டமான் பஹதூர், ஜி. ஸி. ஐ. இ. அவர்களின் அகால மரணத்தை வக்கீல்கள் சங்கம் மிகவும் ஆழ்ந்த துக்கத்துடன் கேள்விப்பட்டதுடன், அரிய குணதிசயங்களை யுடையவரும், அன்புடனும், ஈகையுடனும், புத்திசாலித்தனத்துடனும் ஆட்சி செலுத்தியவருமான மன்னரின் ஞாபகார்த்தமாக வக்கீல்கள் சங்கம் அதன் தாழ்மையான வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறது."

இத்தீர்மானத்தை ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் அவர்கள் ஆமோதிக்க, ஸ்ரீமான் T. R. ராஜகோபாலய்யர் அவர்கள் ஆதரிக்க, எல்லோரும் எழுந்து நிற்க, தீர்மானம் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை மகா—ரா—ரா—ஸ்ரீ ரீஜெண்டு சாகேப் அவர்களுக்கு அக்கிராசனர் தெரிவிக்கும்படியும் தீர்மானிக்கப்பட்டது.

டவுன் ஹாலில் பொதுஜன அநுதாபக் கூட்டம்.

மாசுமை தங்கிய மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் அகால மரணத்தைக் குறித்து சமஸ்தானப் பிரஜைகளின் ஆழ்ந்த துக்கத்தை அறிவிக்க 29—5—28ஆ மாலை 6-மணிக்கு டவுன் ஹாலில் ரா-திவான்வர்களின் அக்கிராசனத்தின் கீழ் ஓர் பொதுஜனக் கூட்டம் நடைபெற்றது. உத்தியோகஸ்தர்களும், பொதுஜனங்களும் ஏகமனதாய்க் குழுமியிருந்தனர். அக்கிராசனர் பின்வருமாறு பேசினர்:—

"கனவான்களே! நாம் எல்லோரும் இங்கு மிகவும் துக்ககரமான சந்தர்ப்பத்தில் கூடியிருக்கிறோம். நாமெல்லோரும் திடீரென எதிர்பாராதபடி அடங்காத் துயரத்துக்காளாகிறோம்.

இச்சந்தர்ப்பம் ஓர் துக்ககரமானவும் பயபக்தியானவும் சமய மாகும்; நமது காலஞ்சென்ற அன்பு வாய்ந்த மன்னருக்கு நமது கடைசி வணக்கத்தைத் தெரிவித்து, அவரது அகால மரணத்தி னுல் நமக்கேற்பட்டிருக்கும் ஆழ்ந்த மனப்பூர்வமான துக்கத் தைத் தெரிவிக்க இங்கு கூடியிருக்கிறோம். உங்களுடைய ஆமோதிப்புக்கு நான் சமர்ப்பிக்கும் தீர்மானங்கள் பின்வரு மாறு:—

"(1) புதுக்கோட்டை சமஸ்தானப் பிரஜைகள் கூடியிருக் கும் பொதுக்கூட்டத்தின்கண் 42 வருஷங்கள் சமஸ்தானத்தைச் சிறப்புடனும், தயையுடனும், என்றும் மறக்கவொண்ணுதபடி ஆட்சி புரிந்து, சமஸ்தான ஜனங்களின் நன்மையில் சிரத்தையுட னும், அவர்களிடத்தில் நேர்முகமான பிரியத்துடனுமிருந்து, பெருந்தன்மையுடனும், மதியூகத்துடனும், தயையுடன் ஆட்சி புரிந்துவந்த மன்னரின் அகால மரணத்தினுல் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் ஆழ்ந்த துக்கத்தையும், ஈடு செய்ய முடியாத நஷ்டத்தையும் ஜனங்கள் தெரிவித்துக்கொள்ளுகின்றனர்.

(2) இத்தீர்மானத்தின் நகலை அக்ராஸனர் ராணிக்கும் ரீஜெண்டு சாகேபுக்கும் அனுப்புவதுடன், அதுதாபத்தையும் தெரிவிக்கும்படி இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது."

நீங்கள் எல்லோரும் என்னைக் காட்டிலும் மகாராஜாவை நன்கறிவீர்கள். எனக்குப் பின்னல் இத்தீர்மானத்தை ஆதரித் துப் பேசுபவர்கள் மகாராஜா அவர்களுடைய அரிய குணங்களைப் பற்றி எடுத்துரைப்பார்கள். நான் மகாராஜா அவர்களுடன் நேரில் பழகும் பாக்கியம் பெற்றிருக்கவில்லையாயினும், சமஸ்தான மெங்கணும் ஜனங்கள் மகாராஜாவைப்பற்றி எத்தகைய அன்புட னும் பக்தியுடனும் கூடிய உணர்ச்சியோடு பேசினர் என்பதைப் பற்றி நான் வேண்டிய மட்டிலும் கேள்விப்பட்டிருக்கிறேன். இயற்கையாகவே ஜனங்களுடைய மனதை ஆகர்ஷிக்கக்கூடிய பல குணகணங்களை அரசர் பெற்றிருந்தார் என்பதில் வியப்பொன்று மில்லை. அவர் ஒரு வசீகர புருஷர்; ஆஜானுபாஹுவாயும், கம்பீர மான தோற்றத்துடனும் இருந்தார். சமஸ்தானப் பிரஜைகளி டம் பிரியமும் உள்ளன்பும் வாய்ந்தவர். அவருடைய பெருந் தன்மையும் கம்பீரமும் பொருந்திய நடத்தையும், அவருடன் பழகினவர்களிடத்தில் அவர் காட்டிய பக்ஷமும், மரியாதையும் அவருடைய உயர்ந்த அந்தஸ்திற்கு ஏற்றதாகவே யிருந்தன. அவர் விசேஷ பாண்டித்யம் பெற்றவர். பெருந்தன்மையுடன் கூடிய உதார குணமே அவரது முக்கிய லக்ஷணமென்பது எல் லோருக்கும் தெரிந்ததே.

அவர் 1875-ம் வருஷம் பிறந்தார்; 1886-ல் சிம்மாஸன மேறினார்; 1894-ல் சமஸ்தான நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக் கொண்டார். 1913-ம் வருஷம் அவரது வெள்ளி விழாவைக் கொண்டாடுவதற்கு முன்பாக அவருக்கு ஜி. ஸி. ஐ. இ. பட்டம் கிடைத்தது. 1922-ம் வருஷம் வரை அவர் ராஜீய நிர் வாகப் பொறுப்பை வகித்தார். இந்த 36-வருஷ காலத்திற்குள் சமஸ்தானம் அடைந்திருக்கும் அபிவிருத்தி சமஸ்தான சரித்தி ரத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. இவ்வளவு உதார குணமுள்ள அரசர் அகால மரணமடைந்தது சமஸ்தானத்திற்கே ஒரு விபத் துத்தான். இத்தகைய மகா துக்ககரமான சமயத்தில் நமது அடங்காத் துக்கத்தை வெளியிட்டு, ராணிக்கும், ரீஜெண்டு சாகேப்புக்கும் தெரிவிக்க வேண்டியது நமது கடமையேயாகும். அவரது ஆன்மா சாந்தியடைய வேண்டுமென்பதே நமது பிரார்த் தனை."

பின்னர் திவான் ஆக்ஞாபித்தபடி ஸ்ரீமான்களான P. S. சிவக்ஞான முதலியார், P. V. சொகுநாதய்யர், S. நாராயணஸ்வாமி அய்யர், V. வைத்தியனாதய்யர், R. அருணாசலம் அம்பலகாரர், சங்கிலியா பிள்ளை, ஜனப் காசிப் சாகேப் முதலியவர்கள் மகா ராஜா அவர்களின் அரிய குணாதிசயங்களைப்பற்றி உருக்கமாய் எடுத்துரைத்து, தீர்மானத்தை ஆதரித்துப் பேசினர்கள். எல் லோரும் நின்றுகொண்டு ஏகமனதாய் தீர்மானத்தை நிறை வேற்றிய பின்னர் கூட்டம் கலைந்தது.

மாலை 7-மணிக்கு முனிஸிபல் சபையில் மகாராஜாவின் அகால மரணத்தைக் குறித்து ஓர் அநுதாபத் தீர்மானம் நிறை வேற்றப்பட்டது.

காலஞ்சென்ற மன்னரைப்பற்றி பத்திரிகைகளின் அபிப்பிராயங்கள்.

"ஹிந்து" பத்திரிகையில், "புதுக்கோட்டை அரசரின் மர ணம்" என்று எழுதப்பட்ட உபதலையங்கம் பின்வருமாறு:—

"புதுக்கோட்டை அரசர் ஸ்ரீ பிரஹதம்ப தாஸ் ராஜா மார்த் தாண்ட பைரவ தொண்டமான் பஹதூர் ஜி. ஸி. ஐ. இ. தமது 53-வது வயதில் நியூலியில் காலஞ்சென்றொன்பதைக் குறிப் பிட வருந்துகிறோம். அவர் குடல் சம்பந்தமான நோயின் காரண மாக அவஸ்தைப்பட்டதால் ஆபரேஷன் செய்வது ஒன்றுதான் அவரது உயிரைக் காக்கும் வழியாயிருந்ததால், அது செய்யப் பட்டதென ராய்ட்டர் செய்தி கூறுகின்றது. ஆபரேஷன் செய்த பிறகு அவர் சௌக்கியமடைந்துவிடுவாரென நம்புவதற்கிடமிருந்த போதிலும், அவர் நோய்க்கிரையாகிவிட்டார். ராஜா தமது

பாட்டனுருக்குப் பின் 1886-ம் வருஷம் பட்டத்துக்கு வந்தார். ஆனல் அவரது மைனர் பருவத்தில் சமஸ்தானம் ஸர் A. சேஷய்யா சாஸ்திரியாரால் வெகு திறமையுடன் நிர்வகிக்கப்பட்டு, அவர் திவான் ரீஜெண்டாயிருந்த காலத்தில் பல சீர்திருத்தங்களும் செய்யப்பட்டன. அரசாட்சி செய்யும் அதிகாரம் மன்னருக்கு 1894-ம் வருஷம் அளிக்கப்பட்டது. ராஜீய நிர்வாகத்தை ஏற்றுக் கொண்ட பின்னர் சில வருஷங்கள் வரை அரசர் சமஸ்தான விஷயங்களில் சிரத்தை யெடுத்துக்கொண்டதுடன், கல்வி விஷயத்திலும், ஜனங்கள் தங்களது குறைகளைத் தெரிவித்துக் கொள்ள ஹேதுவான சில சந்தர்ப்பங்களை அளிக்கும் விஷயத்திலும் சில முற்போக்கான ஏற்பாடுகள் செய்தார். ஆனல், கடைசியாக அவர் சமஸ்தானத்தைவிட்டு அடிக்கடி சீமைக்குச் சென்று நெடுநாட்கள் தங்கியதுமன்னியில், சமஸ்தானத்திற்கு விஜயம் செய்வதையே நிறுத்திவிட்டார். ஜனங்களும் அரசரும், ஒருவருக்கொருவர் பரஸ்பரம் இருக்கவேண்டிய நேர்முகமான அன்பையும், ஒரு பக்கத்தில் ராஜ விசுவாஸத்தையும், மற்றொரு பக்கத்தில் அன்பையும் விருத்தி செய்யக்கூடிய பரஸ்பர அறிவையும் இழந்தனர். அரசரின் ஆட்சி சமஸ்தானத்தின் க்ஷேமத்திற்கு இடையூறான பிற தேச வாசி அரசாட்சிக்குப் பழமொழியாகிவிட்டது. இத்தகைய சந்தர்ப்பத்தினல் சமஸ்தானம் ரீஜென்ஸி ஆட்சிக்கு உள்படவேண்டியிருந்தமையால் அவரது சகோதரர் ரீஜெண்டாய் நியமிக்கப்பட்டார்.

அரசர் ஒரு ஆஸ்திரேலிய மாதை மணம் புரிந்து, அவள் மூலம் அவருக்கு ஒரு புத்திரனிருப்பதால், சமஸ்தான வார்சு பாத்ய விஷயமாக பல சிக்கலான பிரச்னைகளுக்கு இடங்கொடுத்து விட்டது. இவ்விஷயம் சிறிது காலமாக கடுமையான விவாதத்திற்கு இடமாயிருந்தது. இந்தியா கவர்ன்மெண்டும் இவ்விஷயத்தில் கவனம் செலுத்தவேண்டுமென பன்முறை கூறப்பட்டிருக்கிறது. இவ்விஷயமாய் யாதொரு விதமான பஹிரங்கமான செய்தியும் வெளிப்படாததால், இதுவரை வைசிராயினல் ஒரு முடிவிற்கும் வரமுடியவில்லையென்று தெரியவருகிறது. எப்படியிருந்தபோதிலும், அரசரின் மரணமானது அதிகாரிகள் உடனே ஒருவிதமான முடிவிற்கு வரவேண்டிய அவசியத்தை ஏற்படுத்திவிட்டது. இதைச் செய்கையில் கவர்ன்மெண்டார் புராதன அரச குடும்பத்தின் நன்கு ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கும் ஐதிகங்களைக் கவனிக்க வேண்டியதுடன், சமஸ்தான ஜனங்களின் உணர்ச்சியையும், அபிப்பிராயங்களையும் புறக்கணிக்க வொண்ணுது. நெடுநாளாய் அரசர் சமஸ்தானத்திலில்லாத குறையால் தாக்கப்பட்டிருக்கும் சமஸ்தான ஜனங்களின் சந்துஷ்டியும், க்ஷேமமும், வார்சு பாத்ய விஷயத்தைப் பொதுஜன அபிப்பிரா

பத்திற்கிணங்க நிர்த்தாரணம் செய்வதின் மூலம்தான் உறுதிப் படுத்த முடியும்."

சென்னையிலிருந்து பிரசுரமாகி வந்த ஆங்கில ஸ்வராஜ்யா பத்திரிகையில் "புதுக்கோட்டை வார்சு பாத்யம்" என்ற தலைப் பெயரின் கீழ் அடியிற்கண்ட உபதலையங்கம் வெளிவந்தது:—

"புதுக்கோட்டை அரசரின் மரணம் வார்சு பாத்திய பிரச்னையை இனி காலஹரணம் செய்ய முடியாதபடி எழுப்புகின்றது. சில வருஷங்களாக சமஸ்தானப் பிரஜைகள் இடைவிடாது தங்கள் கோரிக்கைகளை வற்புறுத்திவந்தும், கவர்ன்மெண்டார் இப்பிரச்னையை ஒருவிதத்திலும் நிர்த்தாரணம் செய்யவில்லை. கவர்ன்மெண்டாரின் இத்தகைய மனோபாவம் சமஸ்தானப் பிரஜைகளுக்கு சந்தேகத்தைக் கொடுத்தது. ஏனெனில், சமஸ்தானம் ஆளப்பட்டுவரும் விசேஷமான சந்தர்ப்பங்களில், வார்சு பாத்ய நிர்த்தாரணம் ஒருவரின் பாத்யதையை நிராகரித்து மற்றொருவரின் பாத்யதையை அங்கீகரிப்பதென்பது மாத்திரமில்லை. அது சமஸ்தானத்தின் பழக்க வழக்கங்களையும் ஐதிகங்களையும் பாதிப்பதுடன் சமஸ்தானத்தின் சர்வ ப்ரஜைகளின் மதசம்பந்தமான அபிப்பிராயத்தையும் பாதிப்பதாயிருக்கின்றது. புதுக்கோட்டை ஓர் ஹிந்து சமஸ்தானம்; அதன் அரசர்கள் இதுவரை அநேகமாய் பிறப்பினாலும் வளர்ப்பினாலும் ஹிந்துவாகவே இருந்திருக்கின்றனர். ஆனால், காலஞ்சென்ற மன்னருக்குத் தமது ஆஸ்திரேலிய மனைவியால் ஏற்பட்டிருக்கும் ஒரே குமாரனை சிட்னி மார்த்தாண்டா ஓர் ஹிந்துவாகக் கருதப்பட முடியாதென்பதுடன், பிற தேசங்களில் நம் நாட்டுக் கொவ்வாத பழக்க வழக்கங்களில் வளர்க்கப்பட்டிருக்கிறார். அவரை சமஸ்தான வார்சாக அங்கீகரிப்பது சமஸ்தான ஜனங்களின் உள்ளத்தினிடை ஊறிக்கிடக்கும் உணர்ச்சிக்கு முரண்பட்டதாகும். மேலும், சமஸ்தானக் குமுஸ்தைகளுக்கும் அவருக்கும் யாதொருவிதமான பொதுவான அம்சமும் இல்லாமலிருக்கையில் அவரை ஒரு இந்திய சமஸ்தானத்திற்கு அதிபராய் நியமிப்பதானது, ராஜீய நிர்வாகத்திலும், நீதியிலும் ஐரோப்பிய மயமாக்கி, அதன் மூலம் சமஸ்தான எல்லைக்குள் நல்ல ஆட்சிக்குப் பங்கம் விளைவிப்பதேயாகும். பிரகிருத நிலைமையிலேயே, அரசரிருந்தும் சமஸ்தானத்திலில்லாமலிருந்ததானது புதுக்கோட்டையை ஒழுங்கின்மையான ஆட்சிக்குக் கொண்டுவந்துவிட்டது. சமஸ்தானத்தில் நேர்முகமான ஆட்சி ஏற்படவேண்டுமானால், ஜனங்களை நேர்முகமாய் அறியக்கூடியவும், அவர்களில் ஒருவராயும், அவர்களிடம் வசிக்கக்கூடியவருமான ஒரு அரசர்தான் சமஸ்தானத்திற்குத் தேவை. இறந்துபோன மன்னர் தாம் ஒரு ஆஸ்திரேலிய மாதை மணம் புரிந்து

கொண்டதின் மூலம் வார்சு பாத்ய விஷயமாக சிக்கலான பிரச்னைகள் ஏற்படுமென்பதை அறியாமலில்லை; ஏனெனில், அவர் மணம் புரிந்த பின்னர் எந்நாளும் சமஸ்தானத்திற்கு வெளியிலேயே வசிப்பதாய்த் தீர்மானித்ததுடன், சமஸ்தான கஜானாவிலிருந்து 20-லக்ஷ ரூபாய்களைப் பெற்றுக்கொண்டு, அதற்குப் பதிலாக லிட்னி மார்த்தாண்டாவின் வார்சுரிமைகளைத் திரஸ்கரித்துவிட்டனர். இந்தியா கவர்ன்மெண்டார் இந்த பூர்வோத்திரங்களை மனதில் வைத்து, சமஸ்தான ஜனங்களுடைய அபிப்பிராயத்தையொத்தும், சமஸ்தானப் பிரஜைகளின் எதிர்கால க்ஷேமத்தையனுசரித்தும் வார்சு பாத்யப் பிரச்னையை நிர்த்தாரணம் செய்ய வேண்டும்."

"சுதேசமித்திரன்" பத்திரிகை இதே விஷயமாக எழுதினதாவது:—

"பிரஞ்சு தேசத்தின் தலைநகராகிய பாரிஸில் புதுக்கோட்டை ராஜா நேற்று காலகதியடைந்துவிட்டாரென்று கேட்டு வருந்துகிறோம். இறக்கையில் அவருக்கு சுமார் 53-வயதுதானிருக்கலாம். அவருடைய பாட்டனாராகிய ராமச்சந்திர ராஜாவின் சுவீகார புத்திரர் அவர். அவர் இளைஞராகவிருந்த காலத்தில் அவருடைய படிப்பு மிஸ்டர் இராஸ்லி என்ற ஒரு ஐரோப்பியரிடம் ஒப்படைக்கப்பட்டது. அது புதுக்கோட்டைக்கு அனர்த்தமாக முடிந்தது. திருச்சிராப்பள்ளி கண்டோன்மெண்டில் ஐரோப்பியர்களின் மத்தியிலேயே ராஜா இளமையில் வசித்துவந்ததால், அவர்களுடைய வாழ்வில் ஈடுபட்டு அடிக்கடி ஐரோப்பாவுக்குப் போய் அங்கேயே காலத்தைக் கழித்துவந்தார். அப்படி பல வருஷங்களானபிறகு, ஆஸ்டிரேலியப் பெண் ஒருத்தியை விவாகம் செய்துகொண்டு ஐரோப்பாவிலேயே தங்கிவிட்டார். இடையில் சிறிது காலம் புதுக்கோட்டைக்கு வந்திருந்தாராயினும், தமது நாட்டில் பற்றில்லாமலோ, ஐரோப்பிய வாசத்தின் மோகத்தாலோ மறுபடியும் ஐரோப்பாவுக்குப் போய்விட்டார். அவருடைய குமாரர் லிட்னி கிறிஸ்தவர் ஆகையால் ஹிந்து ராஜ்யத்தின் தலைமையை வகிக்க முடியாதவர். ராமச்சந்திர ராஜாவின் சகோதரருடைய வார்சுகள் இருக்கிறார்கள். அந்த வார்ஸ் பாத்யப்படி ராஜ்யம் அக்குடும்பத்திற்கே கிடைக்க வேண்டும். இறந்துபோன ராஜா தமது பிரஜைகளிடத்தில் கவலையுள்ளவராகக் காட்டிக்கொள்ளவில்லையாயினும், பிரஜைகள் அவரிடத்தில் விசேஷ அன்புள்ளவர்கள். அவர்களுக்கு நமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்."

"தமிழ் ஸ்வராஜ்ஜியா" பத்திரிகை பின்வருமாறு எழுதியது:—

"புதுக்கோட்டை மன்னர் குடல் நோயால் இறந்தார். தான் பிறந்தது புதுக்கோட்டை; வகித்தது புதுக்கோட்டை மன்னர் பட்டம்; ஆனல் வசித்தது ஆஸ்திரேலியப் பெண்ணுடன் மேல் நாட்டில்! தன் குடிகள் மனம் நோகப் பிறர்நாட்டில் வாழ்ந்தார்.

மன்னர் வாழ்ந்ததைப்பற்றியிருக்கட்டும். இப்போது பட்ட வுரிமையாளர் யார்? இவ்விஷயமாக ரீண்ட சச்சரவுகள் நேர்ந்து வருவதை அன்பர் அறிவர். ஒரு இந்து ராஜ்யத்திற்கு இந்து மன்னனே பட்டவுரிமையுள்ளவன் என்பதை மறுக்க முடியாது. தனது ஆஸ்திரேலியக் காதலிக்குப் பிறந்த ஸிட்னி மார்த்தாண்டா இந்துவல்ல. அவர் அன்னிய நாகரிகத்திலும் நடைவுடைகளிலும் ஊறினவர். இந்திய நாகரிகத்திற்கு அன்னியனை, இந்து ராஜ்யத்திற்குத் தலைமையாக்குவது பொருத்தமல்ல. காலஞ்சென்ற தொண்டமான் மன்னர் 20-லட்சத்துடன் திருப்தியடைந்தார். ஸிட்னி மார்த்தாண்டனுக்குப் பட்டம் கட்டுவதைக் கருதவில்லை. இப்போது பட்டம் ஒரு திறமையுள்ள இந்துத் தொண்டமானுக்கு உரியது என்பதை அறிந்து அரசாங்கத்தார் தக்கது செய்வாராக. புதுக்கோட்டை யரசர் வாழ்வு பிற தேச மன்னருக்கு எச்சரிக்கையாகும். பர்டுவான் மன்னர் சொல்வது போல், "சுதேச மன்னர் ஆட்சிப் பொறுப்பை வகித்துப் பாருங்கள். மேல்நாட்டில் காலங்கழிப்பதைக் கருதாதீர்" என்பதை சுதேச மன்னர் மனத்துட் கொள்வாராக!"

மார்த்தாண்ட பைரவ தொண்டமான் மன்னரின் குணாதிசயங்களைப்பற்றி சமஸ்தான 7-வது மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் தமது பிரஸங்கத்தில் கூறிய பாகம் இங்கு குறிப்பிடத்தக்கது:—

"Since we last met in December 1926, events of far-reaching importance have happened both in and outside our State,—events which have left indelible marks on the foot-prints of time. I must first of all refer to the terrible loss which we have sustained by the demise of our late beloved Rajah in Paris on the 28th May, 1928. During his pretty long reign extending over 42 years, it was not given to us to have the benefit of his personal rule for any length of time. During the first eight years of his rule he was a minor and so was incapable of taking any active part in the administration, and during the last six years, he had voluntarily divested himself of all concern in the administration by a self-denying proclamation issued by him on 23rd October,

1922. In the intervening period of 28 years, he resided for the most part outside the State, and outside India as well, for the benefit of his health. Very few of his subjects had therefore the opportunity to know him or to appreciate his qualities of head and heart. I had, however, the privilege and good fortune to know him at pretty close quarters and I can testify to his extraordinary equipment in all that counts to make up an essentially good. intelligent and clever gentleman. He was generous to a fault and he had abundant love and affection for his subjects; but as an absentee ruler, he had of necessity to rely entirely on his chosen advisers,-men on the spot. The people appreciated his difficulties and remained deeply loyal to him under all circumstances. His Silver Jubilee celebration in the year 1913 is eloquent testimony, if proof were needed, of the spontaneous loyalty of his subjects to his person and throne, and the lofty sentiments which he gave expression to on that occasion, will ever be cherished by his subjects as a memorable heritage worthy of the accomplished prince and gentleman that he was. Our grief therefore at the sudden passing away of such a ruler has been thoroughly genuine and sincere and the loss to us is irreparable.

It is, however, some consolation to us that, having voted for the erection of a statue of His Highness in front of the public offices as a momento of our celebration of his silver jubilee, the statue was recently unveiled by the Agent to the Governor-General, exhibiting to our gaze the ruler, under whose benign administration, our State has made vast strides in several directions."

மகாராஜா அவர்களின் பிரேதச் சடங்கு, கருமாதி முதலிய வைகளைப்பற்றிய விவரங்கள் பின் வருவனவாகும்:—

பாரிஸ், மே 28—

புதுக்கோட்டை மகாராஜா காலமாய்விட்டார்.

லண்டன், மே 28—

பாரிஸில் புதுக்கோட்டை ராஜா இன்று காலை 11-மணிக்கு இறந்துபோனார். மரிக்கும் காலத்தில் மகாராஜா யாதொரு கஷ்ட

மும் படவில்லை. உயிர் போகும் வரை அவருக்கு ஞாபக சக்தி இருந்தது. இரவு முழுவதும் அவர் படுக்கைக்குப் பக்கத்திலேயே இருந்த ராணி அவர் இறக்கும் பொழுதும் அவர் அருகிலேயே இருந்தாள். மகாராஜாவின் மகனும் காலையில் தந்தையுடன் பேசினார்.

பிரேதம் அமெரிக்க ஐஸ்பத்திரியிலுள்ள சமாதியின் தலத்திலிருக்கிறது. மகாராணி பிரேதம் இந்தியாவுக்குக் கொண்டு போகப்பட்டு தகனம் செய்யப்படவேண்டுமென்கிறாள். இவ்விஷயத்தை அவள் இந்தியா காரியாலயத்துக்கும் அறிவித்திருக்கிறார். பாங்குகளுக்கு ராஜா தினமாதலால் ஏற்பாடுகள் தடைபெறுகின்றன.

இங்கிலாந்தில் தகனம்.

லண்டன், மே 30—

புதுக்கோட்டை ராஜாவின் பிரேதம் இவ்வாரக் கடைசியில் இங்கிலாந்தில் தகனஞ் செய்யப்படுமென்று முடிவு செய்யப்பட்டு விட்டது. ஹிந்து மத ஆசாரப்படி தகனம் நடக்கும். வியாழக் கிழமை மாலை பாரிஸிலின்று பிரேதம் இங்கிலாந்துக்கு எடுத்துச் செல்லப்படலாம்.

ஜார்ஜ் மன்னர் தமது அநுதாபத்தை ராணிக்குத் தெரிவித்திருக்கிறார்.

புதுக்கோட்டை அரசாங்கத்தின் பிரஸ் கம்யூனிக்

"நம்மை துக்க சாகரத்தில் மூழ்கும்படி சமீபத்தில் காலஞ் சென்ற மகா-ரா-ரா-ஸ்ரீ ஸ்ரீ மகாராஜா அவர்களின் உத்தரக் கிரியைகள் நடத்தும் விஷயமாயும், அவர்களுக்குப் பின் பட்டத்திற்கு யார் வார்ஸ் என்ற விஷயமாயும் தண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டு வருகின்றன என்று கவர்ன்மெண்டார் அவர்களுக்குத் தெரியவருகிறது.

2. வார்ஸ் பாத்திய விஷயமாய் ஏற்கனவே பூராவாக எல்லாம் நன்றாய் ஆராயப்பட்டு ரா-இந்தியா கவர்ன்மெண்டார் அவர்கள் பைசல் செய்யவேண்டிய நிலைமையில் இருக்கின்றது. அவர்களுடைய தீர்மானமும் கூடிய சீக்கிரத்தில் வெளியிடப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விஷயமாய் சொல்லப்பட்டிருக்கிற எல்லா அபிப்பிராயங்களும் ரா-இந்தியா கவர்ன்மெண்டார் அவர்களுக்கு நன்றாய்த் தெரிந்ததே. அம்மாதிரி ஏற்கனவே அடிக்கடி சொல்லப்பட்டிருப்பதை பின்னும் திரும்பத் திரும்பச் சொல்வதால் எவ்வித உபயோகமான பலனும் கிடைக்கமாட்டாது. ரா-இந்தியா கவர்ன்மெண்டார் அவர்கள் செய்யும் தீர்மானம் சமஸ்தானத்தினும் அதன் பிரஜைகளினும் க்ஷேமத்தை

உத்தேசித்தே நிச்சயமாய் செய்யப்படுமாகையால், அத்தீர்மானத்தைப் பொறுமையுடன் எதிர்பார்த்திருப்பதே ராஜவிசுவாசமுள்ள பிரஜைகளின் கடமையாகும்.

3. உத்தரக் கிரியைகள் நடத்தவேண்டிய விஷயமாய் சர்ச்சை செய்துவருவதாலும் ஒருவித லாபமும் ஏற்பட இடமில்லை. இது சம்பந்தமாய் சமீபத்தில் கிடைத்திருக்கும் தகவல் என்னவெனில், மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் சரீரம் லண்டனுக்குக் கொண்டுபோகப்பட்டிருக்கிறதென்றும், சட்டத்தை யொத்து செய்துகொள்ளப்பட்ட கல்யாணத்தினால் ஏற்பட்ட அவர்களின் குழந்தையும் அங்கு கூடவே இருந்துவருகிறார்கள் என்பதுதான். தகப்பனரும் புத்திரரும் ஹிந்துக்களேயாதலால் தமது தகப்பனரின் உத்தரக் கிரியைகளை குமாரர் செய்வதில் யாதொரு நியாயத் தவறும் இருப்பதாக கவர்ன்மெண்டாருக்குத் தெரியவில்லை. ஆகவே, சமஸ்தான வார்சு பாத்யப் பிரச்னையைப் போல் இந்த உத்தரக் கிரியைகள் செய்யும் சம்பந்தமாயும், பின்னும் சர்ச்சை செய்து வருவதால் ஒருவித பலனும் ஏற்படுவதற்கில்லை.

மேற்சொன்ன இரண்டு விஷயங்கள் சம்பந்தமாய் வெளியிடப்பட்டுவரும் ஒன்றுக்கு ஒன்று மூரண்பட்ட பலரின் அபிப்பிராயங்களை கவனிக்குமிடத்து, பின்னும் அவ்வித சர்ச்சைகளும் கிளர்ச்சிகளும் நடைபெற்றால், பொதுஜன சமாதானத்துக்கும் அமைதிக்கும் பங்கம் ஏற்படலாமென்று நம்ப கவர்ன்மெண்டார் அவர்களுக்கு தக்க முகாந்தரங்கள் இருக்கின்றன. ஆகையால் அவ்விரண்டு விஷயங்களைக் குறித்து எவ்வித பிரசாரமும் செய்யாமலிருக்க வேண்டியதின் அவசியத்தைப்பற்றி இதனால் சம்பந்தப்பட்ட எல்லார் மனதிலும் நன்றாய் பதியவைக்க கவர்ன்மெண்டார் அவர்கள் விரும்புகிறார்கள்.

(sd) P. K. Kunhunni Menon,

3—6—28. Dewan.

மதராஸ் சமஸ்தானங்களுக்கு கவர்னர் ஜெனரல் அவர்களின் ஏஜெண்டாகிய லெப்டினென்ட் கர்னல் கிராஸ்த்வெயிட் துரையவர்கள் புதுக்கோட்டைக்கு ஜூன் மீ 7-உ விஜயம் செய்வாரென செய்தி பத்திரிகையில் வெளிவந்தது.

"புதுக்கோட்டை ராஜாவின் அமைதியான தகனம் லண்டனில் நடைபெற்றது—அஸ்திகள் புதுக்கோட்டைக்கு அனுப்பப்படும்" என்ற அடியில்கண்ட ராய்ட்டர் ஸ்பெஷல் தந்தி பத்திரிகைகளில் வெளிவந்தது:—

லண்டன், ஜூன் 6—

"இரண்டு மதராஸி பிராமணர்கள் சுருக்கமாகச் சடங்குகள் முடித்த பின்னர் புதுக்கோட்டை ராஜாவின் பிரேதம் கோல்டர்ஸ் கிரீனில் தகனம் செய்யப்பட்டது. அவருடைய அஸ்திகள் புதுக்கோட்டைக்குக் கொண்டுபோகப்படுமென்றும், அங்கு மேற் கொண்டு கிரியைகள் நடக்குமென்றும் தெரிகிறது. ராணியும், ராஜ்குமார் மார்த்தாண்டாவும், சில அத்யந்த சிநேகிதர்களும் சடங்குக்கு விஜயம் செய்திருந்தனர். கபுர்த்தாலா மகாராஜாவும், லேடி லாஸி ஹேஸ்டனும், போர்ட்லண்டு கிளப் அங்கத்தினர் களும், இன்னும் மற்ற சிநேகிதர்களும் பூமாலைகள் அனுப்பி யிருந்தனர்."

லண்டனில் தகனம் நடந்ததைப்பற்றிய விவரம் அடியிற் கண்ட "ப்ரீ பிரஸ் தபால்" செய்தியிலிருந்து விளங்கும்:—

"லண்டன்— ஜூன் 6— பாரிஸில் மே 28-ந் தேதி மரண மடைந்த புதுக்கோட்டை ராஜாவின் பிரேதம் நேற்று கோல்டர்ஸ் கிரீனில் ஹிந்துச் சடங்குகள் பூராவும் நடந்தபின் தகனம் செய் யப்பட்டது. இந்தியா மந்திரியின் ராஜீய மெய்க்காவல் கர்னல் ஸர். ஆர்டர் பானர்மான் வந்திருந்தார். சவப் பெட்டியில் பல ரும் புஷ்பங்களையும் மாலைகளையும் போட்டிருந்தனர். ஸ்ரீமான் கள் கே. எஸ். வெங்கடாசலம் ஐயரும், சுந்தரம் ஐயரும் புரோ கிதர்களாக விருந்து சடங்குகளை நடத்தி வைத்தனர். காலஞ் சென்ற ராஜாவின் பிள்ளை ஸ்ரீமான் ஸிட்னி மார்த்தாண்டனுக்கு புரோகிதர் பூணூல் போட்டு வைத்தார். பிறகு அவருடைய நெற்றியில் திலகமிடப்பட்டு, புண்ய தீர்த்தம் புரோக்ஷணம் செய் யப்பட்டது. அவை எல்லாம் முடிந்தபின் பிரார்த்தனை நடத்தப் பட்டது. பிறகு பிள்ளை, எரியும் பந்தமொன்றை எடுத்துக் கொண்டு சவப் பெட்டியிடம் மூன்று முறை சென்றார். பிறகு முக்கிய உறவினர்களும் நண்பர்களும் வாய்க்கரிசி போட்டனர். பிறகு தகனம் செய்யுமிடத்திற்கு பெட்டி கொண்டுபோகப்பட் டது. புதுக்கோட்டை ராணி, அவருடைய பிள்ளை, பல உற வினர்கள் முதலியவர்களும், பல ஆங்கிலேய நண்பர்களும் வந் திருந்தனர். ராஜாவின் அஸ்தி கொஞ்ச காலம் இங்கே யிருந்த பின் இந்தியாவிற்குக் கொண்டுபோகப்படும்."

"தேச ஊழியன்" பத்திராதிபருக்கு வாச்சு பாத்ய விஷய மாயும், உத்தரக் கிரியை விஷயமாயும் எவ்விதமான பிசுரமும் பத்திரிகை மூலமாகவாவது, வேறு எவ்விதமாயாகிலுமாவது செய்யக் கூடாதென்று அடிஷனல் சீப் மாஜிஸ்திரேட் அவர் களால் கி. பு. கோ. 144-வது பிரிவுப்படி உத்தரவு பிறப்பிக் கப்பட்டது.

"ஜனமித்திரன்"-ஜூன் மீ 8-ந் தேதி இதழில், "Welcome to the new Agent to the Governor-General" என்ற தலைப்பின் கீழ் பின்வருமாறு எழுதிற்று:—

"We warmly welcome Lt. Col. C. G. Crosthwaite, the new Agent to the Governor-General on his first arrival at this place. Although the event which immediately brought him to the State is the melancholy demise of H. H. The Maharajah, it is left to him to carry out the instructions of the Government of India to instal the future Ruler on the *Gadi* and lay the foundations for the future well-being of the citizens of the State whose cherished religious instincts and sense of nationalism, the Government of India are bound to respect. We are prevented by a communique issued by the Pudukotah Darbar from discussing the claims to the *Gadi* of the rival candidates and we have no wish to do so, as we are assured that every point of view has been placed before the Government of India in regard to the question of succession and as we believe that the Paramount Government should have already arrived at a decision on the subject. We are not actuated by any animus against Sydney Marthanda but we are only sorry that he is not born of an Indian and a Hindu wife of the Rajah married according to Hindu Law-a necessary requisite to enable him to ascend the *Gadi* of an Indian State like Pudukotah and be in name and fact "Sri Brahadamba Dasa."

That the Pudukotah Darbar have always viewed with disfavour the legitimate right of the citizens to speak on the question of succession is evident from the repressive activities pursued by them culminating in proceedings under section 124-A I. P C., 108 Cr. P. C., 144 Cr. P. C. etc. For 30 years and over, the people of the State have not had the benefit of the personal rule of the Ruler and Government was being conducted by Agencies and Regencies. The several acts of repression, favouritism in appointing officials and the arbitrary and even high-handed way in which favourites in service have been advanced while honest and God-fearing men have been punished and teased for the political views of their relations on silly pretexts go to show that the present Regency has outlived its usefulness and that what the people now need is the personal rule of a new Ruler and not the perpetuation of any Regency. Although the Pudukotah Darbar have urged the people in their communique to patiently await the

decision of the Government of India in regard to the succession and have warned the people not to discuss the question, we cannot help remarking that from the very outset they have taken a partisan view of the case in that they have stated in the Gazette Extraordinary (Tamil) dated 29-5-28 that the "Yuvaraja is performing the funeral obsequies in London" while as a matter of fact the only question before the Government of India is—who is the Yuvaraja? We have no doubt that the Government would come to a speedy solution if they have not already arrived at one, consistently with the long-standing custom, traditions, Hindu Law, usage and the views of the people at large so unmistakably expressed in their Conferences."

புதுக்கோட்டை வார்சு பாத்யதை பிரச்னை ஹிந்துக்களின் பரம்பரை அநுஷ்டானங்களுக்கு ஒத்த வழியிலேயே முடிவு செய்யப்பட வேண்டுமென புதுக்கோட்டை இரண்டாவது, ஆறாவது மகாராடுகளின் அக்கிராசனரான ஸ்ரீமான் S. சத்திய மூர்த்தி அய்யர் அவர்கள் இராஜப் பிரதிநிதி அவர்களுக்குத் தெரிவித்திருப்பதாக சென்னைப் பத்திரிகைகளில் ஜூன் மீ 7-ந் தேதி பிரசுரிக்கப்பட்டது.

தென்னிந்திய சுதேச சமஸ்தானங்களின் ஏஜெண்டாகிய Lt. Col. கிராஸ்த்வெயிட் C. B. E. அவர்கள் 8—6—28வ மாலை 6-மணிக்கு உதவி ஏஜெண்டுடன் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்தார். வழக்கம்போல் மரியாதை குண்டுகள் போடப்பட்டன. 9-ந் தேதி காலை சுமார் 10—30 மணிக்கு ஏஜெண்டு ரீஜெண்டைப் பேட்டி கண்டு பேசினார். 10-ந் தேதியன்று காலை ரீஜெண்டு ஏஜெண்டைப் பதில் பேட்டி கண்டார். பல பிரமுகர்களும் ஏஜெண்டைப் பேட்டி கண்டனர். தமது வார்சுரிமை முதலிய விஷயங்களைப்பற்றித் தெரிவித்துக்கொள்வதற்காக புதுச்சேரியிலிருந்து மகா-ரா-ரா-ஸ்ரீ ராமச்சந்திரத் தொண்டமானவர்கள் புதுக்கோட்டைக்கு விஜயம் செய்து ஏஜெண்ட் துரையவர்களைப் பேட்டி கண்டனர்.

பாபநாசம் தாலூகா மகாநாட்டிலும், நாகை கள்ளர் மகா சங்கத்தின் கூட்டத்திலும், காலஞ்சென்ற புதுக்கோட்டை அரசருக்கு சிட்னி மார்த்தாண்டா சரியான இந்து வாரிசு இல்லாததினால், அதற்குப் பரம்பரை பாத்தியமுள்ள தொண்டமான் மரபினரையே நியமிக்க வேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டன.

வார்சு பாத்தியதை விஷயமாகவாவது, அல்லது உத்தரக் கிரியைகளைக் குறித்தாவது, அவைகளின் சம்பந்தமாயாவது

பத்திரிகை மூலமாகவாகிலும், அல்லது வேறு வகையிலாகிலும் பிரசாரம் செய்யக்கூடாதென்று ஜனமித்திரன் ஆசிரியருக்கு அடிஷனல் சீப் மாஜிஸ்திரேட்டினுல் கி. பு. கோ. 144-வது பிரிவின்படி 13—6—28ல் ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மகாராஜா அவர்களின் உத்தரக் கிரியைகளை யார் செய்கிறதென்ற விவாதமிருந்துவந்தது. ஸ்ரீமான்களான S. நாராயணஸ்வாமி அய்யர், V. வைத்தியநாதய்யர், R. அருணாசல அம்பலகாரர், ஜனப் ஹாஜி K. L. K. சையது முகமது ராவுத்தர் முதலிய நால்வரும் சிட்னி மார்த்தாண்டா கிரியைகளைச் செய்தால்தான் மகாராஜா அவர்களின் ஆத்மா சாந்தியடையுமென்று துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரசாரம் செய்தனர். 'ஆனரி' மாஜிஸ்ட்ரேட் ஜனப் காசிம் சாகேபும், மற்றும் சிலரும், கர்மகாண்டங்களில் சிட்னி மார்த்தாண்டா செய்யக்கூடாதென்று கூறப்படவில்லையென்றும், அவ்விதமிருந்தால் சாஸ்திர நிரூபணம் செய்ய வேண்டுமென்றும் துண்டுப் பிரசுரங்கள் மூலம் பிரசாரம் செய்தனர். ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் இது சம்பந்தமாக தந்தி கொடுத்து, ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் அபிப்பிராயத்தைக் கேட்டிருந்தனர். அதற்குப் பின்வரும் ஆக்ஞை கிடைத்தது:—

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள், கும்பகோணம்.

கெ. 1157. To மகா-ன-ன-ஸ்ரீ S. விசுவநாதய்யர் அவர்கள், வக்கீல், புதுக்கோட்டை.

முகாம்:—வண்ணார்பெட்.

தங்கள் 3—6—28ல தந்தி கிடைத்து ஸ்ரீ மஹாஸந்நிதானத்தில் விக்ஞாபனம் செய்துகொள்ளப்பட்டது.

காலஞ்சென்ற புதுக்கோட்டை மகாராஜா அவர்கள் தேசாந்திரத்தில் ஸமான ஜாதியில்லாத ஸ்திரீயை ஸ்வீகரித்திருப்பதால் அதில் ஜனித்த குழந்தை மகாராஜா அவர்களின் ஸமான ஜாதியாக மாட்டாரென்றும், ஸ்வஜாதி ஸ்திரீயை தங்கள் ஜாதிக்குரிய விவாஹ ஸம்ஸ்கார விதிப்படி விவாஹம் செய்துகொண்டு அதில் ஜனித்தவன்தான் ஔரஸ புத்திரன் எனப்படுவான் என்று சாஸ்திரங்களில் கூறப்படுவதால், இந்தக் குழந்தை காலம் சென்ற மகாராஜா அவர்களின் ஔரஸ புத்திரனென்று சொல்ல முடியாது என்றும், ஔரஸ புத்திரன் இல்லாவிட்டால் ஞாதிதான் உத்திரக்கிரியைக்கு அதிகாரியென்றும் சாஸ்திரீயமாக ஏற்படுவதால், மகாராஜா அவர்களின் உத்திரக்கிரியை செய்ய அவர்

களுக்கு ஞாதியான மகா-ள-ள-ஸ்ரீ ராமச்சந்திர தொண்டமான் அவர்கள் தான் பாத்தியப்பட்டவர்கள் என்பதாய் இவ்விடம் ஸ்ரீ ஸந்நிதான ஸபையில் ஏற்பட்ட நிர்ணயத்தை ஆக்ஞைப்படி தெரிவிக்கலான காரியம்.

நமஸ்காரம்,

அனுப்பப்பட்ட தேதி
22—6—28.

C. S. Viswanatha Srowdi,
Manager.
21—6—28.

ஆனல், காலஞ் சென்ற மன்னரின் உத்தரக்கிரியை சம்பந்தமாய் யார் அதைச் செய்வதென்ற பிரச்னையை நிர்த்தாரணம் செய்யும் பொறுப்பை இந்தியா கவர்ன்மெண்டார் ரீஜண்ட் சாகேப் அவர்களின் இஷ்டத்திற்கு விட்டுவிட்டனர். இதற்குக் காரணம், ரீஜண்ட் சாகேப் காலஞ் சென்ற மன்னருக்கு மூத்த சகோதரானபடியால், கருமாதி செய்யும் விஷயம் ஒரு சாதாரண குடும்ப விஷயம் என்பதுதான்.

ஆதலால் அவர் தீர்மானித்தபடி கருமாதிச் சடங்கு லண்டனில் நடைபெற்றது. கருமாதி சம்பந்தமாய் திவானவர்களிஞல் சமஸ்தான அரசாங்க விசேஷ கெஜெட்டின் மூலம் அறிவிக்கப்பட்ட விளம்பரமாவது:—

"1928-ம் வரு ஜூன் மீ 29-உ வெள்ளிக்கிழமை காலஞ் சென்ற கனம் பொருந்திய மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்களின் கருமாதிச் சடங்கு, அவர்களுடைய குமாரரால் லண்டன் நகரில் ஹிந்து வழக்கப்படி நடத்தப்படும் என்று தகவல் கிடைத்திருப்பதில், கருமாதி செய்யப்படும் மேற்படி தினம் ஸமஸ்தானத்தில் பொது விடுமுறை நாளாக ஏற்பட்டிருப்பதால், அதற்கு அடுத்த தினமாகிய 30—6—28 சனிக்கிழமை மேற்படி கருமாதிக்காக சமஸ்தானம் முழுவதும் விசேஷ ரஜா நாளாக விடப்பட்டிருக்கிறது.

சகல வர்ணத்தாருக்கும், மதஸ்தர்களுக்கும் அன்றைய தினம், அதாவது சனிக்கிழமை பகலில் புதுக்கோட்டை டவுனில் சாப்பாடு போடப்படும்.

பிராமணர்களுக்கு அன்றையதினம் சாயங்காலம் 5-மணிக்கு ள-அரண்மனை ஹாஜாரத்தில் பூரி தெகூணை கொடுக்கப்படும்.

தாலூகா கஸ்பாக்களில்—அதாவது கீரனூர், ஆலங்குடி, திருமயம், இந்த ஸ்டேஷன்களிலும் ஏழைகளுக்கு அன்றைய தினம் சாப்பாடு போடப்படும்."

விளம்பரத்தில் குறித்தபடி கருமாதி நடைபெற்றது. ஸ்ரீ ஜகத் குரு சங்காசார்ய ஸ்வாமிகளின் ஆக்ஞைப்படி காலஞ்

சென்ற மன்னரின் ஞாதியாகிய மகா-ரா-ஸ்ரீ ராமச்சந்திர தொண்டமான் அவர்கள், புதுச்சேரியில் கருமாதியை முடித்து சாஸ்திரப்படி அக்டோபர் மீ 1-ம் தேதி செய்து முடித்தனர்.

25-வது அத்தியாயம்.

வார்சு பாத்திய நிர்ணயம்.

சமஸ்தானத்தில் வார்சு பாத்திய விஷயமாக பத்திரிகைகளில் எழுதவோ, வேறு விதமாகப் பிரசாரம் செய்யவோ கூடாதென்று கி. பு. கோர்ட் 144-வது பிரிவுப்படி தடை உத்தரவு "தேச ஊழியன்" ஆசிரியருக்கும், "ஜனமித்திரன்" பத்திராதிபருக்கும் பிறப்பிக்கப்பட்டதைப்பற்றி முன்னமேயே குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆதலால், வெளியூர்ப் பத்திரிகைகளில் இவ்விஷயத்தைப் பற்றி பலத்த ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வந்தன. அவற்றுள் முக்கியமானவைகளென்று தோற்றும் சிற்சில கட்டுரைகளை மட்டில் இங்கு எடுத்துக்காட்டுவோம்.

'புதுக்கோட்டை அரியணை' என்ற தலைப்பின் கீழ் "ஸ்வராஜ்யா" பத்திரிகை பின்வருமாறு எழுதியது:—

"புதுக்கோட்டை அரியணை காலியாயிருக்கிறது. அதில் அடுத்தாற்போல் உட்காருவது தொண்டமான் மரபினரோ, இல்லையேல் ஆஸ்திரேலியச் சிறுமேனியரோ! எல்லாம் வல்ல அதிகார வர்க்கத்திற்கே தெரியும். காலஞ்சென்ற மன்னருக்கு அடுத்தபடியாக உரிமையுள்ளவர் திரு. இராமச்சந்திரத் தொண்டமான் என்பதை உலகமே கூறும். அதை ஆமோதித்து பல மகசர்கள் வந்துள்ளன. மனச்சாட்சியுள்ளவர்கள் அதையே கூறுவர். ஆனால் பொதுஜனங்களின் வாயை 144 என்னும் கடிவாளத்தால் கட்டிவிட்டு அதிகாரவர்க்கம் வேறு யோசனைகள் செய்கிறது! ஆஸ்திரேலிய மாது சுமந்து பெற்ற ஸிட்னி மார்த்தாண்டன் பக்கம் வெற்றியாவதற்குத் தந்திரமாகச் சீட்டுக் குலுக்கப்படுகிறது. ஒரு தமிழ் சுதேசி அரியணை மீதில் ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பாற் பிறந்த ஒரு வெள்ளை அயல் மேனியை உட்காரவைப்பதினும் இழிவு வேறென்ன இருக்கிறது? ஒரு இந்து ராஜ்யத்திற்கு பிறப்பில் இந்துவாயிருக்கும் ஒருவரையே அரசனாக்கவேண்டும் என்னும் சிறிய நீதிகூட இல்லாவிடில், உலகில் நீதியன்னை கற்பழிக்கப்படுகிறாள் என்றே சொல்லவேண்டும்.

பொது ஜனங்கள் எச்சரிக்கையுடனிருந்து தமிழ் நாட்டின் ஒரே ராஜ்யமான புதுக்கோட்டை, தமிழ்த் தொண்டமான்களின் ஆட்சியிலேயே இருக்கக் கிளர்ச்சி செய்வார்களாக! மக்கள் மனச் சாட்சியை 144-ம், 124-ம் அடக்கமுடியாது!"

"தமிழ்நாடு" பத்திரிகையானது பின்வருமாறு எழுதியது:—

"பண்டைக் காலத்தில் இந்திய மன்னர்கள் வெளிநாட்டுப் பெண்களை மணந்து கொள்ளும் வழக்கமிருந்து வந்தது. மற்ற நல்ல வழக்கங்கள் அடைந்த கதியை அதுவும் அடைந்தபடியால், இன்று அந்த வழக்கத்திற்கு விரோதமாக ஆட்சேபணை பலமாயிருக்கிறது. புதுக்கோட்டை இளவரசர் பட்டத்துக்கு வர முடியுமா முடியாதா என்பதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. அது சம்பந்தமாய் அனுவசியமாய் வாதம் வளர்ந்து போவதும், கசடிகள் பெருகுவதும் விரும்பத்தக்கதல்ல. புதுக்கோட்டை ஒரு சிறிய சமஸ்தானம். அது தனியாக ஒரு சமஸ்தானமாயிருப்பதைவிட ஒரு ஜில்லாவோடு சேர்ந்து இந்திய சர்க்காரின் கீழிருப்பதே அதன் ஜனங்களுக்கு சிலாக்கியமாகும். நினைப்பதோ, பேசுவதோ, பார்ப்பதோ குற்றமென்று சொல்லப்படும் ஒரு சமஸ்தான ஆட்சியைவிட இந்திய சர்க்கார் ஆட்சியை விரும்புகிறவர்கள் புதுக்கோட்டையில் அதிகமாய் இருப்பார்களென்பதை நாம் அறிவோம். ஆகவே, சமரசமாய் புதுக்கோட்டை சிம்மாசனத்திற்குரிய அரசனை நியமிக்க முடியாவிட்டால், ராஜ குடும்பத்தினருக்கு பென்ஷன் கொடுத்துவிட்டு புதுக்கோட்டையை திருச்சி ஜில்லாவுடன் சேர்த்து விடுவது நலமென்று நினைக்கிறோம். இப்படி நாம் சொல்வதைக் கேட்டு புதுக்கோட்டை அரசியல் வாதிகள் வருத்தமுறுவார்கள் என்பதை நாம் அறிவோம். புதுக்கோட்டையில் இப்போது ஒரு விதமான இரட்டை ஆட்சி நடைபெறுகிறது. பிரிட்டிஷ் ஏதேச்சாதிகாரமும், சமஸ்தானப் பொறுப்பின்மையும் ஒன்று சேர்ந்து உபயோகமற்ற அரசியல் அங்கு நடைபெறுகின்றது. இதனால் குடிகளுக்குப் பலவித கஷ்டங்களும் ஏற்பட்டிருக்கின்றன. குடிகளின் க்ஷேமத்தை உத்தேசித்தே இந்நாடெங்கும் பொறுப்புள்ள தன்னரசு ஏற்பட வேண்டுமென்று நாம் பாடுபட்டு வருகிறோம். ஆனால் நீடித்த நமது கொள்கைக்குள் இது ஒரு விதத்திலும் மாறுபட்டதல்ல. இந்த சங்கடம் ஒருபுறமிருக்க, வார்சு பாத்திய விஷயமாக சாதக பாதகமாக, யாவரும் பேசவும், எழுதவும் கூடாதென்று தினந்தோறும் தடை உத்தரவுகள் புதுக்கோட்டையில் பிறக்கின்றன. தங்கள் மனதிற்குப் பட்டதை வெளியில் சொல்லும் பாத்தியம் மக்களுக்கு உண்டு. அதைப் பறிமுதல் பண்ண எந்த சர்க்காருக்கும் அதிகாரமில்லை. குடிகள் வாயை அடைத்துவிட்டு, தம்மூப்பாக

நடக்க முயற்சித்த எந்த அரசியல் முறையும் உலகில் பிழைத் திருக்கவில்லை என்பதை புதுக்கோட்டை அதிகாரிகளுக்குத் தெரி வித்துக் கொள்ளுகிறோம். அகையால் 144 தடை உத்தரவுகள் போட்டது மிகவும் அக்கிரமமென்பதை அழுத்தமாகக் கண்டிக்கி றோம். புதுக்கோட்டை வார்சு விஷயமாக இந்திய சர்க்கார் சீக் கிரத்தில் ஒரு அறிக்கையை வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளு கிறோம்."

பம்பாயிலிருந்து வெளிவரும் "இந்தியன் டெய்லி மெயில்" என்னும் பத்திரிகை 'புதுக்கோட்டை வார்சு பாத்தியம்' என்ற விஷயத்தைப் பற்றிப் பின்வருமாறு எழுதியது:—

"புதுக்கோட்டை வார்சு பாத்தியப் பிரச்னை சில விநோத மான விஷயங்களைக் கிளப்புகின்றது. ஒரு இந்திய மன்னர் தமது ராஜ்யத்தை இழக்காமல் தமது மதத்தை மாற்ற சுயேச்சை யுடையவரா? பாடியாலா மகாராஜா சிறிது காலத்திற்கு முன்னர் ஜாம்நகரில் கூடிய ராஜபுட் இளவரசர்கள் கூட்டத்தில் ராஜபுட் வகுப்பில் சேர்த்துக்கொள்ளப்பட்டார். பாடியாலா மன்னர் பதவி சம்பந்தப்பட்டமட்டில் இது அவர் சம்பந்தமாய் யாதொரு வித்யாஸத்தையும் ஏற்படுத்தவில்லை. ஒருக்கால் சீக் வகுப்பானது ஹிந்து மதத்தின் ஒரு கிளையானதாலும், இரண்டு மதத்தினர் களும் பொதுவாகப் பேசுமிடத்து, தங்களுடைய வகுப்புணர்ச்சி களுக்கு மூரணின்றி கொள்வினை கொடுப்பினை செய்வதாலும் யாதொரு வித்தியாஸத்தையும் ஏற்படுத்தாமலிருக்கலாம். ஒரு அரசாளும் ஹிந்து மன்னர் மகமதியராய் மாறினால், அல்லது ஒரு மகமதிய அரசர் கிறிஸ்தவராலால், தமது சிம்மாஸனத்தைத் தவறக்காது அடைந்திருக்க முடியுமா? காலஞ்சென்ற புதுக்கோட் டை மன்னர் தமது ஆஸ்திரேலிய மனைவியை மணந்தவுடன் கிறிஸ்தவராயிருந்தால், அவர் அவரது பாரம்பர்ய மன்னர் பதவியை வகித்திருப்பாரா? அவர் அவ்விதம் செய்யவில்லையெனி னும், சில காரண காரியங்களைக்கொண்டு தம்முடைய குலாசார சம்பந்தத்தை விட்டுவிட்டார். ஒரு இந்திய மன்னர் தமது சிம்மா ஸனத்தை இழக்காமல் தமது மதத்தை மாற்ற முடியாதென்பது பொதுஜன அபிப்பிராயமாகும். எவ்விதம் இங்கிலாந்தின் அரசர் ஒரு பிராடெஸ்டன்ட் கிறிஸ்தவராயிருக்க வேண்டுமென்று ஒரு நிபந்தனையிருக்கின்றதோ, அவ்விதமே இந்திய சமஸ்தானங்களின் மன்னர் பதவி சம்பந்தப்பட்டமட்டில், அரசாள்பவர் அவரது மூதாதைகளின் மதத்தையே கைக்கொள்ள வேண்டுமென்ற நிபந் தனை யிருப்பதாய்த் தெரியவருகிறது. இது உண்மையாயின், மூதாதையர்களின் மதத்தை அநுஷ்டிப்பவரைத் தவிர வேறொரு வரும் அரியணை யேற முடியாதென ஏற்படுகின்றது. காலஞ்

சென்ற மன்னரின் ஆஸ்திரேலிய மாது மணம் அவரது குலாசார சம்பிரதாயத்திற்கு முரணானது. ஆனல் அவருடைய ஜாதியானது அவரை ஜாதியிலிருந்து விலக்கியதாகத் தெரியவில்லை. இதிலிருந்து அவரது ஜாதியினர் அவர் ஒரு ஐரோப்பிய கிறிஸ்தவ மாதை மணம் புரிந்ததை ஒப்புக்கொண்டதாய் ஏற்படுகின்றது. ஒரு மணத்தை ஒப்புக்கொள்வதென்றல், அதனல் ஏற்படக்கூடிய சந்ததிகளையும் ஒப்புக்கொள்வதேயாகும். ராஜாவின் குலமாகிய மாவர் குலமானது அரசரின் ஆஸ்திரேலிய மனைவிக்குப் பிறந்த சிட்னி மார்த்தாண்டாவிற்கு அதன் மதத்தை அளித்ததாகவே நினைக்கவேண்டும். காலஞ்சென்ற மன்னருக்கு வேறொரு மனைவியும் கிடையாதென்பதை அவருக்குச் சாதகமாய்க் கூறவேண்டும். மாவர்கள் சிட்னி மார்த்தாண்டானவை தங்களது குலத்தில் ஒப்புக்கொண்டு விட்டதாயிருந்தால், தமது பிதாவின் அரியணையை ஏற சிட்னி மார்த்தாண்டாவின் பாத்யதைகள் எவ்விதம் நிராகரிக்கப்படலாம் என்பது விளங்கவில்லை. அவரது வாரசு பாத்ய விஷயத்தில் ஹிந்து சட்டம் குறுக்கே நிற்காதென லார்டு சின்ஹ அபிப்பிராயம் கூறியிருப்பதாகத் தெரியவருகிறது. சாமான்ய அறிவும் இந்த அபிப்பிராயத்தையே ஆதரிக்கின்றது. எங்கும் கூறப்படுகிறபடி அரசரே தமது சமஸ்தான சம்பந்தத்தை திரஸ்கரிப்பதற்கு ஈடாக பெருத்த பண நிதியைப் பெற்றுக்கொண்டிருந்தால், பிரச்னையே வேறுவிதமாக மாறிவிடும். ஆனல் அவர் அவ்விதம் செய்தாரா? அவருக்கு சமஸ்தானத்திற்குத் திரும்பி வந்து மீண்டும் அரசு புரியும் அபிப்பிராயமிருந்ததா? இவ்விஷயங்களைப் பற்றி இந்தியா கவர்ன்மெண்டார், அரசர் இறப்பதற்கு வெகு காலம் முன்னரே ஒரு முடிவிற்கு வந்திருக்க வேண்டும். அடுத்த மன்னர் யாரென்று முடிவு செய்யும் விஷயத்தில் அவர்கள் கால தாமதம் செய்வதற்கு யாதொரு முகாந்தரமும் இருப்பதாய்த் தெரியவில்லை."

இதற்கு ஸ்ரீமான் S. விசுவநாதய்யர், 'இந்தியன் டெயிலி மெயில் பத்திரிகைக்கு பதில்' என்று அதே பத்திரிகையில் பின் வருமாறு எழுதினர்:—

"உங்களுடைய வியாஸத்தில் உண்மைக்கு மாறான சில விஷயங்களை நீங்கள் எழுதியிருக்கின்றீர்கள். ஆகையால் தயவுசெய்து அத்தப்பான விஷயங்களை எடுத்துக்காட்ட அனுமதி கொடுங்கள். முதன் முதலில் ராஜாவானவர் ஓர் ஆஸ்திரேலிய மாதை மணந்து கொண்டதானது அவரது ஜாதி அனுஷ்டானத்திற்கு முற்றிலும் மாறுபாடானது என்று சொல்லிவிட்டு அதன் பிறகு அவர் ஜாதிப்பிரஷ்டம் செய்யப்பட்டதாய்த் தெரியவில்லையென்றும், ஆகையால் மகாராஜா ஆஸ்திரேலிய மாதை மணந்ததை அவரு

டைய வகுப்பைச் சேர்ந்தவர்களெல்லோரும் ஒப்புக்கொண்ட தாக ஏற்படுவதாகவும் நீங்கள் சொல்லி யிருக்கிறீர்கள். அத்து டன் நிற்காமல் அவ்விதம் அவர்கள் சம்மதித்ததானது அம்மகா ராஜாவின் புதல்வனையும் சமூகத்தில் அங்கீகரிப்பதாகுமென்று கூறியிருக்கின்றீர்கள். காலஞ்சென்ற மகாராஜா அவருடைய கல் யாணத்திற்குப் பிறகு சமஸ்தானத்திற்கு வந்து, அங்கேயே வசித்து, அவருடைய ஜாதியருடன் கலந்து வாழ்ந்து போஜனம் செய்திருந்தால், நீங்கள் சொல்லும் வாதத்தில் கொஞ்சமாவது உண்மை யிருக்கலாம். ஆனால், "இல்லஸ்ட்ரேடட் டைம்ஸ் ஆப் இந்தியா" பத்திரிகையில் சொல்லியிருப்பதுபோல், காலஞ்சென்ற ராஜா தமது மணத்திற்குப் பிறகு அம்மணத்தினால் ஜீவிய காலத் தில் ஏற்படக்கூடிய மனத்திற்குப் பிடிக்காத சம்பவங்களைத் தடுக்கவேண்டி புதுக்கோட்டைக்கு, என் இந்தியாவிற்கு வெளி யேயே சாசுவதமாக வசித்ததின் மூலம் தன்னைத் தானே ஜாதிப்பிரஷ்டம் செய்துகொண்டவராகிவிட்டார். ஆகையால், ராஜாவின் ஜாதியைச் சேர்ந்தவர்கள் அவர் ஆஸ்திரேலிய மாதை மணந்ததை ஒப்புக்கொண்டார்களென்றும், அவ்விதம் ஒப்புக் கொண்டதானது அந்த ராஜாவின் புதல்வனின் வாரிசு பாத் தியத்தையும் அங்கீகரிப்பதாகுமென்றும் நீங்கள் சொல்லுவ தானது உண்மைக்கு மாறுக இருப்பதோடுகூட தப்பு வழி காட்டுவதாயுமிருக்கிறது. ராஜாவும் அவருடைய குடும்பமும் எந்நாளும் ஐரோப்பாவிலேயே வசித்து வந்ததாலும் அங்கு தன் னுடைய இனத்தாரோடு சேர்ந்து வாழ்வதற்கான பிரமேயம் ஏற் படாததினாலும் அவரை ஜாதிப் பிரஷ்டம் செய்யவேண்டிய அவசியம் ஏற்படவில்லை. சமஸ்தான வாஸியும் பத்திராதிபரு மான ஒருவர், 'ஹிந்து' பத்திரிகையில் மகாராஜாவை ஜாதியி னின்றும் விலகியவர் (பதிதன்) என்று எழுதியிருந்ததை அதி லிருந்தபடியே தமது பத்திரிகையில் எடுத்து எழுதியதற்காக சமஸ்தான நீதிபதிகளால் தண்டிக்கப்பட்டார். இவ்வித நிலைமை யில் சமஸ்தானத்தில் வசிக்கும் அவருடைய ஜாதியாரில் எவரும் ராஜாவை அவருடைய ஜாதியினின்றும் விலகியவர் என்று பஹி ரங்கமாய்க் கூறுவதானது அவருக்கு ஆபத்தாய் முடியும். நீங்கள் ராஜாவானவர் 'மரவர்கள்' வகுப்பைச் சேர்ந்தவர் என்று எண் ணிக்கொண்டுவிட்டீர்கள். ராஜா 'கள்ளர்' வகுப்பைச் சேர்ந்தவர். அவ்வகுப்புக்கு ஹிந்து சட்டமே அன்வயிக்கும். அவ்வகுப்பைச் சேர்ந்தவர்களெல்லோரும் தாங்கள் ஹிந்துக்கள் என்பதில் மிக வும் பெருமை கொண்டிருக்கிறார்கள். அவர்கள் ஹிந்து சமூகத் தைச் சேர்ந்தவர்கள் இல்லையென்றும், ஹிந்து சட்டம் அவர் களுக்கு அன்வயிக்காதென்று சொல்வதும் அவர்களை அவமதிப் புக்கு ஆளாக்குவதாகும். அவர்கள் ஹிந்துதான் என்று காண்

பிப்பதற்குப் போதிய உதாரணங்கள் இல்லாமலில்லை. ராஜாவின் வகுப்பைச் சேர்ந்த முன்னோர்களில் புருஷர்கள் இறக்கும்போது அவர்களுடைய மனைவிமார்கள் சககமனம் செய்து அவர்களைப் பின்பற்றினார்கள். இவ்விதம் சககமனம் செய்யும் வழக்கமானது ஹிந்துக்களுக்குள்ளேயே இருந்துவந்தது. அரசர் உட்பட்ட அக்கள்ளர் வகுப்பைச் சேர்ந்த ஸ்திரீகள் தங்களுடைய கணவன்மார்கள் இறந்தபிறகு தாங்கள் மறுபடியும் வேறு விவாகம் செய்துகொள்வதில்லை. முதலில் தொண்டமான் வம்சத்தைச் சேர்ந்த வரல்லாத காலஞ்சென்ற மன்னர், ஸ்வீகாரத்தின் மூலம் தொண்டமான் ஆனார். இவ்விதஸ்வீகாரமானது ஹிந்து சட்டத்திற்கே உரியது. ஹிந்து சட்டத்தின்படி உன்னத பதவியை அடைந்த ஒருவர், அந்த ஹிந்து சட்டத்தைத் தன்னுடைய ஆஸ்திரேலிய மனைவி மூலம் பிறந்த பிள்ளைக்குப் பட்டம் வேண்டுமென்பதற்காக உதறித் தள்ளிவிட அனுமதிக்கப்பட மாட்டார். மிகுந்த மரியாதையுடன் காலஞ்சென்ற லார்டு சின்ஹா ராஜாவின் ஆஸ்திரேலிய மனைவிக்குப் பிறந்த புதல்வன் சிம்மாஸனம் ஏறலாம் என்று சொன்னதை நான் ஆக்ஷேபிக்கிறேன். காலஞ்சென்ற ராஜா ராமச்சந்திரத் தொண்டமானும், அவர் வகுப்பைச் சேர்ந்த அவருக்குப் பிற்பட்டவர்களும், அவர்களுக்கு இயற்கையான வாரிசு ஏற்படாதபக்ஷத்தில் அவர்கள் ஸ்வீகாரம் செய்துகொள்ளலாம் என்று சொல்லி லார்டு காளிங்கிஸல் அவருக்கு ஓர் சன்னது அளிக்கப்பட்டது. இவ்வுண்மையானது லார்டு சின்ஹாவின் வாதம் பொய்யென்பதை நன்கு நிரூபித்துக் காட்டுகிறது. புதுக்கோட்டை மகாஜனங்கள் தங்கள் சமஸ்தான மகாநாடுகளிலும், கள்ளர் வகுப்பைச் சேர்ந்தவர்கள் சமஸ்தானத்திற்கு வெளியே நாகபட்டணத்திலும், பாபநாசத்திலும் கூடி, ஸிட்னி மார்த்தாண்டாவுக்கு வாரிசு உரிமை அளிக்கக்கூடாதெனக் கண்டித்துத் தீர்மானங்கள் நிறைவேற்றியிருக்கின்றார்கள். ஸிட்னி மார்த்தாண்டா லண்டனில் காலஞ்சென்ற ராஜாவுக்குக் கருமாதி செய்கின்றார் என்பதை புதுக்கோட்டை கவர்ன்மெண்டார் அறிவித்து, ராஜா வம்சத்தைச் சேர்ந்தவர்களை சாப்பாட்டிற்கு அழைத்த பொழுது, அவர்களில் 100-க்கு 99 பேர்கள் அங்கு வராததோடு சாப்பாட்டில் கலந்துகொள்ள கொஞ்சமும் விரும்பவில்லை. இவைகளெல்லாம் கள்ளர் சமூகம் ராஜாவையும், அவருடைய குமாரனையும் ஜாதிப் பிரஷ்டம் செய்யப்பட்டவர்களாய்க் கருதினார்கள் என்பதைக் காண்பிக்கவில்லையா? கடைசியாக நீங்கள் செய்த பிசகுகளில் மிகவும் முக்கியமானது என்னவென்றால், இவ்வாரிசு பாத்யப் பிரச்னையானது ஏதோ ஒரு வகுப்பை மட்டும் பொருத்ததாகக் கருதுவதேயாகும். எனக்கு இவ்வாரிசு பாத்யப் பிரச்னை ஒரு அகில இந்தியப் பிரச்னையாகவே தோன்றுகிறது. ஸிட்னி

மார்த்தாண்டா கள்ளராகவாவது ஹிந்துவாகவாவது கருதக் கூமொவென்பதல்ல. முக்கியமான ஒரே ஒரு கேள்வி யென்ன வென்றால், ஆஸ்திரேலிய மாதின் வயிற்றில் ஜனித்த ஸிட்னி மார்த்தாண்டா கொஞ்சமாவது இந்திய ரத்தம் வாய்ந்த இந்திய ஸுவனு என்பதே. இக்கேள்விக்கு இல்லையென்பதே பதிலாகை யால், மன்னர் சபையும் இந்தியா கவர்ன்மெண்டாரும், முக்கிய மாக ஹிந்து சமூகத்தைச் சேர்ந்தவர்களையே கொண்டிருக்கும் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு பூரா இந்திய இரத்தம் வாய்ந்த ஒருவருடையதைத் தவிர வேறு எவருடைய பாத்தி யதையையும் நிராகரிப்பதே சரியான வழியாகும்.''

''புதுக்கோட்டை ஜனங்களுக்கு ஒரு அறிவிப்பு'' என்று பிலாவிடுதி ரகுநாதஸ்வாமி பல்லவராயர், ''தூக்குமேடையிலும், துப்பாக்கி வாயிலிலும் நின்றுகொண்டு ராஜகுமார் B. R. R. தொண்டமானவர்களை புதுக்கோட்டை அரசர் பதவிக்கு உரியவ ரென்று ஸ்ரீ பிரஹதம்பாள் மீது ஆணையிட்டுச் சொல்லுகிறேன்.'' என்று பிரசுரம் செய்தார்.

''தேச ஊழியன்'' ஆசிரியர் ஸ்ரீமான் ஆ. சு. நாகரத்தினம் அய்யர் 4-8-1928ல் ரீஜெண்ட் சாகேப் அவர்களால் போடப்பட்ட ராஜ விளம்பரத்தின்படி தேசப்பிரஷ்டம் செய்யப்பட்டார். அவர் தமது அச்சுக்கூட காரியாலயத்தில் வேலை பார்த்துக்கொண்டி ருந்தபொழுது மாலை 2-மணி சுமாருக்கு டவுன் போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் மிஸ்டர் எஸ். கணபதி அய்யரால் மேற்படி உத்த ரவு சாதரா செய்யப்பட்டது. ஐயருக்கு சில நிமிஷ நேரமே சாவகாசம் கொடுக்கப்பட்டது. உடனே போலீஸ் பந்தோபஸ் துடன் தனி மோட்டார் காரில் தஞ்சாவூருக்குக் கொண்டுபோகப் பட்டார். ஸ்ரீமான் A. S. நாகரத்தினம் அய்யர், 23-7-1928-ல் வெளிவந்த 'தேச ஊழியன்' பத்திரிகையில் ''பொருத்தார் அர சாள்வார்'' என்று மகுடமிட்டுப் பிரசுரித்தது, பிரிட்டிஷ் துரைத் தனத்தார் அவர்களுடையவும், மாசூமை தங்கிய ராஜச் சக்கர வர்த்தி அவர்களுடைய பிரதிநிதியாகிய ஹிஸ் எக்ஸலென்ஸி வைசிராய் அவர்களினுடையவுமான ராஜ்ய நீதியை நிந்தித்து, ஸமஸ்தானப் பிரஜைகளுக்கு அவர்களிடம் வெறுப்பு அல்லது கேவல புத்தியும், விரோத புத்தியும் உண்டு பண்ணக்கூடியதாயு மிருப்பதுமே, இந்த தேசப்பிரஷ்ட உத்தரவைப் பிறப்பிவிப்ப தற்குக் காரணமாகக் குறிப்பிடப்பட்டது. ஸ்ரீமான் நாகரத்ன மய்யர் சமஸ்தானத்திற்குள் இருக்கவாவது நழையவாவது கூடா தென்றும், இந்த உத்தரவை அவர் மீறி நடந்தால், அவர் உடனே கைது செய்யப்பட்டு சிறைச்சாலையில் அடைக்கப்பட வேண்டு மென்றும் உத்தரவு செய்யப்பட்டிருந்தது.

அகில இந்திய சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டுக் கூட்டுக் காரியதரிசி ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் ராஜப்பிரதிநிதிக்குப் பின் கண்ட தந்தியை செப்டம்பர் மீ 4-ம் உ அனுப்பினர்:—

"காலஞ்சென்ற ராஜா மரணமடைந்து 100 தினங்களாகி விட்டன. ஆயினும் அடுத்த வாரிசு நியமிக்கப்படவில்லை. புதுக் கோட்டையின் சரித்திரத்திலேயே இவ்வளவு அதிக இடைக்கால மிருந்ததில்லை. தயவு செய்து சீக்கிரம் அறிவித்து, ஜனங்களுக்கு ஸ்திரமான ஆட்சியின் அனுகூலங்களை அளிக்குமாறு பிரார்த்திக்கி றேன். நிச்சயமில்லாத இடைக்காலம் ஜனங்கள் நன்மைக்கான தல்ல."

"புதுக்கோட்டை" என்ற தலைப்பெயரின் கீழ் சென்னையி லிருந்து அக்டோபர் மீ 16-ம் உ வெளியான "மதராஸ் மெயில்" பத்திரிகையில் அடியிற்கண்டவாறு ஓர் உப தலையங்கம் எழுதப் பட்டது:—

"The selection of a successor to the late RAJAH OF PUDUKOTTAH is beset with difficulties. Whichever candidate is chosen, there will be people both in and outside the State who will produce numberless excellent proofs in support of their assertion that the choice made was wrong. In so delicate and complex a business, it is very difficult to avoid prejudice, and we have, therefore, refrained from the discussion of a matter that is primarily the affair of the people of the State and the Government of India. The population of Pudukotah is, if we may judge by what has been published by our local contemporaries, sharply divided on the question of whether the son of the late Rajah by his European, or rather Australian Ranee, can ever be regarded as a true Hindu, and, if not, whether he could, in the eye of the law of the State, succeed his late father. The decision lies with the Government of India, and, we freely admit, the making of such a choice calls for much care, inquiry and forethought. It would have been most unwise, therefore, to act precipitately in so important an affair, and in spite of the unwisdom of leaving the State without a ruler longer than the occasion called for, we recognise that there was need for time in which to conduct the necessary inquiries and consult the highest authorities on a problem that has, we believe, never before arisen in an Indian State. Government act in these State affairs largely by precedent, but here is a case in which precedent must be

created, not followed, and the official responsibility is therefore, all the greater.

But, as we have said, it is not wise to leave a State without a ruler, and, in addition, it is doubly to be deprecated in a place like Pudukotah, where faction is rife and growing ever stronger. Surely the Government of India have enough material at their disposal now to enable them safely to act. If they have not, where do they expect the new light to come from, and why has it not yet manifested itself? We know that official machinery moves slowly, but here it seems to lack motive power. The selection of a Ruling Prince is not an affair that can be left to settle itself or one that loses its power to create trouble with the efflux of time. Rival camps grow stronger as the days go by and factions multiply with the long drawn out uncertainty. A decision, even if unpopular, is better than the discontent created by this waiting while nothing happens, this lack of firmness and initiative in quarters where they are most imperatively necessary.....; their present inactivity seems less excusable, for by it, they increase the clamour and power of the rival parties in Pudukotah, so that when at last they do make up their minds, the opposition to their decision will be stronger than it would have been, had more prompt action been taken, and the discontent it will inevitably engender will be more difficult to allay.

There is another aspect of the present unsatisfactory position that demands attention. What is the actual legal status of the present administration of the State? The existing Regency was brought into being by the late Rajah. With his death all its sanctions must, we think, have lapsed. It is doubtless within the competence of the Central Government to continue the existing *regime*, but has it ever been so continued, and if not, have the acts and policies of the State rulers any real authority behind them?"

"புதுக்கோட்டை வாரிசுரிமை-ஸ்ரீ ராஜகோபாலத் தொண்டமானுக்கு ராஜ்யம்" என்று புதிய டில்லியிலிருந்து நவம்பர் 1-ல் பின்வரும் அஸோஸியேடட் பிரஸ் அறிவிப்பு வெளிவந்தது:—

"இந்தியா மந்திரியினுடைய அங்கீகாரத்துடன் இந்தியா கவர்ன்மெண்டார் புதுக்கோட்டை ராஜா பட்டத்திற்கு ராஜ கோபாலத் தொண்டமானைத் தெரிந்தெடுத்திருக்கிறார்கள். அவர்

மைனராக இருக்கின்றார். அவர் ஸ-திருமலைராயத் தொண்டமானின் சந்ததி.''

இதற்குக் கீழே அடியில் வரும் குறிப்பும் எழுதப்பட்டிருந்தது:—

"புதிய ராஜா, காலஞ்சென்ற ராமச்சந்திர தொண்டமானுடைய குமாரர்; மேலும் இறந்துபோன ராஜாவின் இளைய சகோதரி மீனும்பாளுடைய பேரன். புதிய ராஜா 1922-ம் வருஷ ஜூன் மீ 23வ பிறந்தார். இவர் இப்பொழுதிருக்கும் ரீஜெண்டுக்கும் துரை ராஜாவுக்கும் மருமகன் பிள்ளை ஆகவேண்டும். இவர் மேலரண்மனையைச் சேர்ந்தவர்; இந்த ஜாகீரானது 1881ம் வருஷத்தில் சமஸ்தானத்தோடு சேர்த்துக்கொள்ளப்பட்டது; இப்பொழுது புதுச்சேரியில் வசிக்கும் ஸ-B. R. ராமச்சந்திரத் தொண்டமான் அவர்கள் சின்னரண்மனையைச் சேர்ந்தவர். இறந்துபோன ராஜாவிற்கும், இப்பொழுதிருக்கும் ரீஜெண்டுக்கும் மூத்த சகோதரியான ஜானகி இவருக்குத் தாயாராக வேணும்.''

"புதுக்கோட்டை வார்சு பாத்ய முடிவு—ஸ்ரீமான் ஸத்திய மூர்த்தியின் அபிப்பிராயம்'' என்று டில்லியிலிருந்து நவம்பர் மீ 5-ந் தேதி பின்வரும் 'அஸோஸியேடட் பிரஸ்' சமாசாரம் பத்திரிகைகளில் வெளிவந்தது:—

"புதுக்கோட்டை வார்சு பாத்தியதை விஷயத்தைத் தகுந்தபடி முடிவு செய்து விட்டதற்கு இந்தியா கவர்ன்மெண்டைப் பாராட்டி ஸ்ரீமான் S. ஸத்தியமூர்த்தி ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கிறார். அவர் கூறுவதாவது:—

ஸிட்னி மார்த்தாண்டாவின் பாத்தியதையை நிராகரிப்பது சுலபமான விஷயமல்ல. ஆனால் இந்தியா கவர்ன்மெண்டார் புதுக்கோட்டை ஜனங்களுடைய விருப்பத்தை மதித்து நடந்து, ஹிந்து சமஸ்தானத்தின் பரம்பரையை அனுஷ்டித்திருக்கின்றனர். ஸ்ரீமான் B. R. ராமச்சந்திரத் தொண்டமானுடைய பாத்தியதையை கவர்ன்மெண்டார் நிராகரித்த காரணம் தெரியவில்லை. ஆனால் இந்த விஷயத்தில் நான் அவர்களுடைய முடிவைப்பற்றி சண்டை போடப்போவதில்லை. ஸிட்னி மார்த்தாண்டாவை அங்கீகரிக்கக்கூடாதென்று எதிர்த்ததற்காகப் பலவித கஷ்டங்களுக்குட்படுத்தப்பட்ட நான், இப்போது சந்தோஷமடைந்துள்ள புதுக்கோட்டை ஜனங்களைப் பாராட்டுகிறேன். ராஜா மைனராக விருக்கும் காலத்தில் அமைதியாயும் ஜனநாயக முறையிலும் ஆஹியை நடத்த ஆரம்பம் செய்யப்படுமென்று நம்புகிறேன். வாலிப ராஜாவை வணக்கத்துடன் பாராட்டுவதுடன், அவர் தமது உயர்

பதவியை வகிப்பதற்குத் தகுந்தபடி கல்வி போதிக்கப்பட்டு பயிற்சி யளிக்கப்படுமென்று நம்புகிறேன்."

வார்சு பாத்திய முடிவைப்பற்றி முக்கியமான பத்திரிகைகளில் வெளிவந்த அபிப்பிராயங்களை இங்கு எடுத்தெழுதுவோம்:—

"ஹிந்து"

"புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு ராஜகோபால தொண்டமான் இந்திய அரசாங்கத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற விளம்பரம் சமஸ்தான வாஸிகளுக்கும் ஏனையோர்களுக்கும் ஆச்சர்யத்தை விளைவிக்கும். சிம்மாசனத்துக்குத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் போட்டியாய் நின்றவர்களின் பாத்யதைகள் அதிகாரிகளால் கவனிக்கப்படவில்லை என்பதும், இதை முடிவு செய்யும் அதிகாரம் தங்கள் யுக்தானுஸாரத்தையே முற்றிலும் பொருத்தத் தாய்க் கருதிவிட்டனர் என்பதும் விளம்பரத்தின் வாசகத்தினின்றே விளங்கும். வார்சு பாத்யதை விஷயமானது புதுக்கோட்டை மகாஜனங்களால் மிக்க ஆதங்கத்துடன் கவனித்து வரப்பட்ட ஒரு முக்கிய விஷயம். அதில் ஏற்பட்ட சிக்கலான பிரச்னைகளால் இந்திய அரசாங்கத்தார் தங்கள் பூர்ண கவனத்தையும் மேற்படி விஷயத்தில் செலுத்தும்படி நேர்ந்தது; இந்த சந்தர்ப்பத்தில் ஒருவரின் பாத்யதைகளைப் புறக்கணித்து, மற்றொருவரைத் தேர்ந்தெடுக்கும்படி நேரிட்டதற்குக் காரணங்களையாவது தெரிவிக்க வேண்டியது அவசியமாகும். தற்பொழுது நியமிக்கப்பட்டிருப்பவர் மைனர்; ஆகையால் க்ரமமாக குடிகளுடன் நெருங்கிப் பழகி, அவர்கள் பிரதிநிதிகளின் கோரிக்கைகளுக்கிணங்கி ஒரு அரசர் செய்யக்கூடிய சீர்திருத்தங்களையும், மாறுதல்களையும் சமஸ்தானத்தில் நடைபெறுமல் ஒத்திவைப்பது முதலான விவகாரங்களை பிரிடிஷ் அரசாங்கத்தாரே நேராடி கவனிப்பார்கள். ராஜ பரம்பரையின் வழக்கத்தையும் மதாசாரத்தையும் ஒத்து இந்த நியமனம் செய்யப்பட்டிருப்பதுவரை சமஸ்தான மக்களுக்கு திருப்தியளிக்கும். இந்த நியமனத்துக்குக் காரணமாயிருந்த விஷயங்களை ஜனங்களுக்குத் தெரியப்படுத்தினாலல்லது இந்நியமனத்திற்குச் சாதகமாக வேறொன்றும் சொல்வதற்கில்லை. இல்லாதவரை சமஸ்தான மக்களின் கோரிக்கைகளையாவது போட்டியாய் நின்றவர்களின் பாத்தியதைகளையாவது கவனிப்பதைவிட, குழந்தை அரசர் பேரிலும், அவர் மைனராயிருக்கும் வரை ரீஜென்ஸி மூலமாய் சமஸ்தானத்தின் பேரிலும் அதிகாரம் வகிக்க வேண்டுமென்ற ஆஸ்தையானது இந்நியமனத்துக்கு முக்கிய காரணமாயிருக்கலாம் என்ற சந்தேகம் ஜனிக்கும்."

"மதராஸ் மெயில்"

"இந்தியா காரியதரிசியின் சம்மதத்தின் பேரில் இந்தியா கவர்ன்மெண்டார் புதுக்கோட்டைக்கு வார்ஸாக ரா—இராஜகோபாலத் தொண்டமானைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதுவரையில் இருந்த அதிருப்திகரமான நிலைமையை இந்தப் பிரகடனம் ஒரு முடிவுக்குக் கொண்டுவந்துவிட்டபடியால் புதுக்கோட்டையில் இதை எல்லோரும் ஆவலுடன் வரவேற்பார்கள்; ஒரு சரியான ஹிந்துவைப்பார்த்து தேர்ந்தெடுத்ததானது பாராட்டத்தகுந்தது. புதிய ராஜாவானவர் தற்பொழுதிருக்கும் ரீஜெண்டுக்கு மருமகனுடைய குமாரர். மேலும் இந்த வம்சத்தை ஸ்தாபித்தவரின் வழியில் வந்த வார்ஸாவார்."

"சுதேசமித்திரன்"

"காலஞ்சென்ற புதுக்கோட்டை ராஜாவின் ஸ்தானத்திற்கு ஸ்ரீமான் ராஜகோபால தொண்டமானை இந்தியா கவர்ன்மெண்டார் நியமித்துவிட்டதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. அவர் புதுக்கோட்டை ராஜவம்சத்தைச் சேர்ந்தவர்; இந்து மதத்தினர். ஆகையால் புதுக்கோட்டை மகாஜனங்கள் திருப்தி அடையலாம். இந்த நியமனத்தின் பலனாக ஸ்ரீமான் ராமச்சந்திரத் தொண்டமானுடைய பாத்யமும், ஸ்ரீமான் மார்த்தாண்டா ஸிட்னியின் பாத்யமும் நிராகரிக்கப்பட்டன. மார்த்தாண்டா ஸிட்னி வெள்ளைக்கார ஸ்திரீக்குப் பிறந்தவர். அப்படிப்பட்ட சந்ததிகளை ராஜாக்களாக்கக்கூடாதென்று மன்னர் சபை இந்தியா கவர்ன்மெண்டுக்கும், இந்தியா மந்திரிக்கும் வற்புறுத்தினதாக நாம் கேள்விப்படுகிறோம். மார்த்தாண்டா ஸிட்னி நிராகரிக்கப்பட்டதற்கு மன்னர் சபையின் ஆட்சேபம் முக்கிய காரணமாய் இருக்கலாமென்று தெரிகிறது.

ஸ்ரீமான் ராமச்சந்திரத் தொண்டமானின் பாத்யம் நிராகரிக்கப்பட்டதற்குக் காரணம் தெரியவில்லை. நமக்குக் கிடைத்துள்ள செய்தி வெகுவெகு சுருக்கமாக இருக்கிறது. உடனே பதவியை வகிக்கக்கூடிய அவரை விலக்கிவிட்டு இன்னும் சில வருஷங்களாகும் வரையில் காத்திருக்க வேண்டியவரான ஸ்ரீமான் ராஜகோபாலத் தொண்டமானை நியமனம் செய்ததின் பலனாக இப்பொழுது அரசியலை நடத்தச் செய்யப்பட்டருக்கும் ஏற்பாடு தீர்த்திருக்க வேண்டியிருக்கும். ஆகையால் இப்பொழுது ரீஜெண்டாகவுள்ளவர் இன்னும் சில வருஷங்கள் இதே பதவியை வகிக்கக்கூடும். அவரைப்பற்றின வரையில் இந்த நியமனம் சௌகரியமானதே. ஜனங்களைப்பற்றின வரையிலும் ஒரு ஹிந்து ராஜாவாகிவிடுவது அவர்களுக்குத் திருப்தியைத் தரக்கூடியதே.

ராஜாவாக நியமிக்கப்பட்டிருக்கிற ஸ்ரீமான் ராஜகோபாலத் தொண்டமான் சிறு வயதினர். பொறுப்புகளை வகிக்க அவர் இனிமேல் பயிற்சி செய்விக்கப்படவேண்டும். அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்படுமென்று நம்புகிறோம். காலஞ்சென்ற ராஜா பால்யமாக இருந்த காலத்தில் அவருக்குச் செய்விக்கப் பட்ட பயிற்சியே அவருடைய பிற்கால வாழ்வின் போக்குக்குக் காரணமென்று சரியாகவோ தப்பாகவோ பலர் அபிப்பிராயப் பட்டதுண்டு. காலஞ்சென்ற ராஜாவின் இளமைப் பருவத்தி லேயே ஐரோப்பிய பாணியில் வாழ்வதில் அவருக்குப் பிரமை உண்டாகிவிட்டதென்றும், அதனாலேயே அவர் தமது நாட்டை விட்டுவிட்டு அடிக்கடி ஐரோப்பாவிற்குப் போய்விட்டார் என்றும் சொல்லப்பட்டதுண்டு. அப்படியானால், அம்மாதிரி புத்திப் போக்கு ஸ்ரீமான் ராஜகோபால தொண்டமானுக்கு உண்டாக்கக் கூடாமல் தக்கவர்களைக்கொண்டு அவர் பயிற்சி செய்விக்கப்படு வார் என்று நம்புகிறோம்."

"ஜனமித்திரன்"

"புதுக்கோட்டை வார்சு பாத்தியப் பிரச்னை ஒருவிதமாக முடிவடைந்துவிட்டது. நாமறிந்தமட்டும் வார்சுரிமைக்கு சிட்னி மார்த்தாண்டாவும், திரு. ராஜகுமார் B. R. ராமச்சந்திரத் தொண்டமான் அவர்களுந்தான் அபேக்ஷகர்களா யிருந்தனர். இப்பொழுது இந்தியா கவர்ன்மெண்டார் இவ்விரு அபேக்ஷகர் களின் பாத்தியதைகளையும் புறக்கணித்து, மைனர் ஸ்ரீ ராஜ கோபாலத் தொண்டமானைப் புதுக்கோட்டை அரசராக நியம னம் செய்திருப்பதை கவனிக்கின், புதுக்கோட்டை அரசுரி மைக்கு மூன்று அபேக்ஷகர்கள் இருந்திருப்பதாய்த் தெரியவரு கிறது. ... ... சிட்னி மார்த்தாண்டா சம்பந்தப்பட்டமட் டில் இந்தியா கவர்ன்மெண்டார் நியாயமாகவும், தைர்யமாகவும் நடந்துகொண்டிருப்பதுபற்றி சமஸ்தான ஜனங்களின் நன்றியறி தலுக்கு என்றைக்கும் பாத்திரமானவர்களென்பதில் ஐயமில்லை. ... ... சமஸ்தானம் ஹிந்து சமஸ்தானமாயிருப்பதால், சிட்னி மார்த்தாண்டா பூர்ண ஹிந்துவல்லாததால், சமஸ்தான ஜனங்கள் அன்னாரின் பாத்யதைகளை ஆக்ஷேபித்தனர். மன்னர் சபையும் இவ்வாக்ஷேபணையை அங்கீகரித்தது. இந்தியா கவர்ன்மெண்டா ரும் இவ்வாக்ஷேபணையை எதிர்க்க முடியாமல் இறுதியில் அதை ஒப்புக்கொண்டு, சிட்னி மார்த்தாண்டாவின் பாத்தியதைகளை நிராகரித்துவிட்டனர். இதன் படிப்பினை சாமான்யமானதன்று. ஓர் மஹத்தான கொள்கை வெற்றி பெற்றுவிட்டது. இனி மன் னர்கள் தங்கள் மனம் போன போக்கெல்லாம் மணம் செய்து கொள்ள முடியாது. அந்நிய நாட்டு ஸ்திரீகளும் இனி சுதேச

மன்னர்களின் அந்தஸ்தையும், ஐசுவரியத்தையும் கண்டு மயங்கி, அவர்களை மணம் செய்துகொண்டால் தங்கள் குழந்தைகளுக்கும் தக்க அந்தஸ்து ஏற்படும் என்ற தப்பபிப்பிராயத்துடன் மணம் செய்துகொள்ள ஒருப்படார். புதுக்கோட்டை சமஸ்தான வார்சு பாத்ய முடிவிலிருந்து ஏனைய சுதேச மன்னர்கள் ஒரு மகத்தான படிப்பினையைக் கற்றுக்கொண்டிருப்பார்களென்பதில் ஐயமில்லை. ..... சிட்னி மார்த்தாண்டாவின் பாத்தியதைகள் நிராகரிக்கப் பட்டுவிட்டால், அடுத்தபடியாக பிறப்புரிமைப்படி திரு. ராமச் சந்திரத் தொண்டமான் அவர்களுக்குத்தான் அரசுரிமை கிடைக்க வேண்டும். அன்னார் அரசர் பதவியை நிர்வகிக்க சகல விதங்களி லும் அறிவும் ஆற்றலும் படைத்தவர். அவரிடம் சமஸ்தான ஜனங்கள் வைத்திருந்த நம்பிக்கையை இந்தியா கவர்ன்மெண்டார் பொய்ப்பித்துவிட்டனர். இந்தியா கவர்ன்மெண்டார் திரு. ராமச்சந்திர தொண்டமானவர்களின் நியாயமான பாத்தி யதைகளைப் புறக்கணித்ததற்கு முகாந்தரம் கூறக் கடமைப்பட் டிருக்கின்றனர். அன்னரிடம் மகத்தான குற்றங்களிருந்தாலல் லாது, அவரது பாத்யதைகளை எவ்விதம் புறக்கணிப்பது? சின் னரண்மனை சம்பந்தப்பட்டமட்டில், நீண்ட நாளாய் அநீதி ஏற்பட் டிருக்கின்றது. காலஞ்சென்ற மன்னர் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளப்படாம லிருந்தால், திரு. ராமச்சந்திர தொண்டமா னின் பிதா மன்னராகியிருப்பார். அதுதான் இல்லையென்றால், அவரது ஜாகீரும் அவர் மைனராயிருத்தபொழுதே சமஸ்தான சர்க்காரால் எடுத்துக்கொள்ளப்பட்டது. நீண்ட நாள் அநீதிக்கு கதிமோக்ஷம் வருமென்று நினைத்துக்கொண்டிருந்ததெல்லாம் பகற்கனவாகிவிட்டது. திரு. ராமச்சந்திரத் தொண்டமான் சம்பந்தப்பட்டமட்டில் நீதியன்னை கற்பழிக்கப்பட்டுவிட்டாளென் றுதான் கூறவேண்டும்.

திரு. ராஜகோபாலத் தொண்டமான் அவர்களுக்கு குழந் தைப் பருவத்திலேயே நல்ல அதிருஷ்டமிருக்கின்றது. ஒருவர் அதிர்ஷ்டத்திற்கு மற்றொருவர் பிறக்க முடியுமோ? குழந்தை மைனராயிருக்கின்றது; இனி மேஜர் பருவமடைய பல ஆண்டு கள் செல்லும். அதுவரை சமஸ்தானத்தில் ஏதேனும் ஒரு ரீஜென்ஸி ஆட்சிதான் நடைபெறும். மன்னர் மைனராயிருந்தா லும், மேஜராயிருந்தாலும் புதுக்கோட்டை சமஸ்தானத்திற்கு எப்பொழுதும் ரீஜென்ஸி ஆட்சிதானென்பது எப்பெரியாரின் சாபக்கேடோ அறிகிலோம். நமக்கு தனிப்பட்ட எவரிடத்திலும் விருப்பு வெறுப்பில்லை. அதிருஷ்டமுள்ளவர்கள் ஆளட்டும். மன் னரின் நேர்முகமான ஆட்சி வேண்டுமென்று அல்லல்பட்டுக் கொண்டிருந்த ஜனங்களுக்கு இந்திய அரசாங்கத்தாரின் முடிவு

எத்தகைய ஆறுதலைத் தரும்? சமஸ்தானத்தின் எதிர்காலத் தைப்பற்றி இனி அதிக நம்பிக்கைகொள்ள முடியாததுபற்றி நாம் வருந்துகிறோம்."

வார்சு பாத்திய விஷயத்தைப்பற்றி ஸ்ரீமான் K. ஸ்வாமி ஞதய்யரவர்கள் சமஸ்தான மக்களின் 7-வது மகாநாட்டில் தமது வரவேற்புப் பிரஸங்கத்தில், "The Succession Question" என்ற பகுதியில் எழுதியுள்ளது இங்கு குறிப்பிடத்தக்கது. அது பின் வருமாறு:—

"With the passing away of H. H. the late Rajah, the Regency administration, which was created by his proclamation dated 23—10—1922, had necessarily to come to an end. We were, however, in a very unfortunate position, when H. H. the late Rajah died, in that, we had no certain knowledge as to who was going to succeed to the *Gadi*. This brings me to the vexed question of succession to the State *Gadi*, a question which was the root cause of all the trouble, turmoil and tribulation between the years 1920 and 1928. Though during the life time of the Rajah the question was not a live-issue, it was mooted in the second conference by the then president Mr. S. Satyamurthy, and thanks to the extraordinary interest he created and the whirlwind agitation he started on this all important question, it was the one burning topic of discussion by all interested in the future of the State. H. H. the late Rajah did not take his subjects into his confidence and tell them what the reasons of a "political and personal" nature were, which necessitated his decision in the year 1922 to remain permanently absent from the State, but it was easily inferable and the people did infer that it was due to the alleged non-recognition by the Paramount Power of the claims of his son to succeed to his throne. About the same time, a sum of Rs. 20 lakhs out of the accumulated reserves of the State was also paid to H. H. the late Rajah and it was never stated in public why this large sum of money was paid in a lump to the Rajah though he was in regular receipt of his civil list. It was also believed that the payment was intended as a solatium for the non-recognition of the claims of his son to succeed to his *gadi*. One should have thought that the question had been settled once for all by the Paramount Power as early as 1922; but the people had no means of knowing definitely whether there was any decision by the Paramount Power and the agitation was kept on until un-

expectedly it became actually a live issue in May 1928. Unfortunately, throughout this period, this question was a veritable apple of discord between the people and those who were placed in charge of the administration. There can be no mistake that the people with almost one voice wanted that the future ruler of this Hindu State should be a full-blooded Hindu; but the Regency administration wanted to suppress this expression of popular opinion in every conceivable manner. It was quite pardonable for the ex-Regent to take up the side of the son of his Royal brother in this controversy; but he must have fully realised that he was backing a losing horse and he would have been well advised if he had not attempted the impossible-the repression of public opinion. Much of the unpopularity of the Regency administration was due to the fact that, while a handful of interested persons were encouraged to espouse the cause of the late Rajah's son the other side was not allowed to express their views without let or hindrance. Every weapon in the armoury of a modern Government like S. 144 Cr. P. C. etc. were utilised to overawe those who protested that, whoever succeeded to the *Gadi*, the late Rajah's son should not be allowed to ascend the same. In spite of the best efforts of the Regency administration to keep back the wishes of the people in this all-absorbing topic, the Viceroy and Secretary of State, were under no illusions on this question. The announcement that a full-blooded Hindu Thondaman was selected by the Paramount Power to succeed to the *Gadi* of the State was hailed with universal delight and jubilation in November 1928. The people are glad to recognise that that decision was quite just and proper. Pudukotah may be a small State whose ruler in the hierarchy of Indian rulers is entitled to a salute of only 11 guns; but it has created a precedent for all Indian States in the matter of the principles applicable on the question of succession where the ruler weds a woman of another religion and of another race. There is no danger therefore of Indian thrones being filled by persons of mixed descent in future. So far as our State is concerned, we have seen

the end of a long and acute controversy and a decision has been reached which is satisfactory to the people at large. There is no other question likely to crop up in the near future, which will divide the rulers and the ruled into hostile camps as this question unfortunately did for a long time in our much-distracted State. With the succession of the new ruler, we look forward to an era of peace, plenty and prosperity, under an administration which will work with the single minded purpose for the good of the people."

26-வது அத்தியாயம்.

ஸ்ரீ ராஜகோபாலத் தொண்டமான் அரியஹண யேறியதும், நிர்வாக மாறுதல்களும்.

புதிய அரசருக்குப் பட்டம் அளிப்பதற்கு 1928-ம் வரு நவம்பர் மீ 19-ந் உ திங்கட்கிழமை காலை 9-30 மணிக்குச் சபை கூர்ந்தம் வைக்கப்பெற்றது. அது சம்பந்தமாய் தர்பார் கூட்டுவதைப் பற்றியும், பட்டாபிஷேகத்தை சாஸ்திரோக்தமாய் நடத்துவதைப்பற்றிய விவரங்களைப்பற்றியும் அரசாங்கத்தார் ஓர் விசேஷ அறிக்கையின் மூலம் விளம்பரஞ் செய்தனர்.

பட்டாபிஷேக நடவடிக்கைகள்

கவர்னர் ஜெனரலின் ஏஜெண்டு லெப்டினெண்டு கர்னல் கிராஸ்த்வெயிட் துரையவர்கள் 17—11—28-ந் தேதி மாலை 1-30 மணிக்கு ரெஸிடென்ஸிக்கு விஜயம் செய்தார். 13 மரியாதை குண்டுகள் போடப்பட்டன. சமஸ்தான திவானவர்கள் அவரை வரவேற்றனர். மாலை 3-மணிக்கு ஏஜெண்டும், உதவி ஏஜெண்டும் ஆண்மணிக்கு விஜயம் செய்தனர்.

ஏஜெண்ட்ட வரவேற்க தர்பார் நடத்தப்பட்டது. திவான் அவரை எதிர்கொண்டழைத்து குழந்தை ராஜாவிடம் கொண்டு போய்விட்டார். பிறகு ஸதிர்க்கச்சேரி நடந்தது. ராஜா சந்தனம், வெற்றிலை சீவல் முதலியவற்றைக் கொடுத்து ஏஜெண்டுக்கு மாலை போட்டார். பிறகு ஏஜெண்டு திரும்பிச் சென்றார். பின்னர்

ராஜா ரீஜெண்டுடனும் திவானுடனும் ஏஜெண்டின் ஜாகைக்கு பதில் மரியாதைக்காகச் சென்று வந்தார்.

19—11—28

19-ந் தேதியன்று காலை 8-மணிக்கெல்லாம் அரண்மனை ரத, கஜ, துரக, பதாதிகளெல்லாம் சந்தைப்பேட்டை முக்கத்துக்குச் சென்று, ஏஜெண்டவர்களின் வரவை எதிர்நோக்கிக் கார்த்துக் கொண்டிருந்தன. ஏஜெண்டு தமது ஜாகையை விட்டு சரியாக 8-45க்கு தமது இரு உதவி ஏஜெண்டுகளுடனும், குண்டுகள் முழங்க, நான்கு குதிரைகள் பூட்டிய சாரட்டில் அவ்விடம் வந்து சேர, ராஜவீதிகளைச் சுற்றி பிரதக்ஷணமாய்ச் சென்று, மேல வாசல் வழியாக அரண்மனை தர்பார் ஹாலுக்கு (கொலுமண்டபத்திற்கு)ச் சென்றனர். அங்கு ஏஜெண்டை மகாராஜாவும் ரீஜெண்டும் வரவேற்று, இதற்கெனப் பிரத்தியேகமாய் அமைக்கப்பட்ட சந்தினிக்கு அழைத்துச் சென்றனர். ஏஜெண்டும், உதவி ஏஜெண்டுகளும் ராஜா பஹதர் அவர்களின் வலது புறத்திலும், ரீஜெண்ட் இடது பக்கத்திலும் அமர்ந்தனர். தர்பார் ஹாலில் திவான், பிரதான காரியதரிசி, நீதிபதிகள், சில சர்தார்கள், திவான்பஹதூர் கீ. ரா. முத்தையா செட்டியார் அவர்கள், மிஸ்டர் S. N. துரைராஜா அவர்கள் முதலியவர்கள் குழுமியிருந்தனர். சதுர்க்கச்சேரி யானவுடன் ஏஜெண்ட் துரையவர்கள் தமது ஸ்தானத்திலிருந்து எழுந்து, ஹிஸ் ஹைனெஸ் ராஜகோபாலத் தொண்டமானவர்களை இந்தியா கவர்ன்மெண்டார் சமஸ்தானத்தின் அரசராகத் தேர்ந்தெடுத்திருப்பதாக அறிவித்து, பிராக்ளமேஷனை உதவி ஏஜெண்ட் Mr. ஈவாப்சாடா மீர் சயிட் ஆலம்கானிடம் படிப்பதற்காகக் கொடுத்தார். அவர் அடியிற்கண்ட ராஜப் பிரகடனத்தைப் படித்தார்:—

PROCLAMATION.

Whereas His Highness Sri Sir Brihadamba Das Raja Martanda Bhairava Tondaiman Bahadur, Knight Grand Commander of the Most Eminent order of the Indian Empire, Raja of Pudukkottai, departed this life on 28-th May, 1928;

And whereas His Highness Sri Brihadamba Das Raja Rajagopala Tondaiman has been selected by the Government of India with the approval of the Secretary of State to succeed to the Musnad;

His Highness is hereby proclaimed Raja of Pudukkottai.

Given under my hand and seal at Pudukkottai this 19th day of November in the year of our Lord One Thousand Nine Hundred and Twenty Eight.

By order of His Excellency the Governor-General in Council.

(sd) C. G. Crosthwaite, C. B. E.
Lieut-Colonel
Agent to the Governor-General,
Madras States.

ராஜப் பிரகடனம் படிக்கப்பட்ட பின்னர் ஏஜெண்டு குழந்தை ராஜாவுக்கு திருமுடி சூட்டி, அவரை ஸிம்மாஸனத்தில் அமர்த்தினர். மன்னரை ஏஜெண்டு பாராட்டி, அவர் நீடூழி காலம் வாழுமாறு வாழ்த்துக் கூறினர்.

பிறகு ராஜ்ய நிர்வாக விஷயமாய் தமது பிரகடனத்தைப் படிக்கும்படி ஏஜெண்டு துரையவர்கள் உதவி ஏஜெண்டுக்கு ஆக்ஞாபிக்க, அவர் பின்வரும் பிரகடனத்தைப் படித்தனர்:—

PROCLAMATION
By
Lieut. Colonel C. G. Crosthwaite, C. B. E.
Agent to the Governor-General, Madras States.

Whereas His Highness Sri Brihadamba Das Raja Rajagopala Tondaiman Bahadur is a minor and whereas the Government of India have not yet passed orders as regards the future administration of the State, I hereby authorise M. R. Ry. Vijaya Raghunatha Dorai Raja avl. to conduct the administration of the State as Regent until the orders of the Government of India are received.

(sd) C. G. Crosthwaite,
Agent to the Governor-General,
19th November, 1928. Madras States.
(Seal)

ரீஜெண்டு சாகேப் அவர்கள் மன்னரின் சார்பாகப் பின்வருமாறு பேசினர்:—

"தங்கள் மூலமாக இந்தியா மந்திரிக்கும், இந்தியா கவர்ன்மெண்டுக்கும், குழந்தை ராஜாவை புதுக்கோட்டை அரியணைக்குத் தேர்ந்தெடுத்ததற்காக அவருடைய மரியாதையான, நன்றியுள்ள வணக்கத்தைத் தெரியப்படுத்தும்படி நான் பணிவுடன் கேட்டுக்கொள்வதுடன், மேன்மை தங்கிய வைசிராய் அவர்களுக்கும் மன்னரின் திடமான ராஜ விசுவாசத்தையும் தெரியப்படுத்

தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ராஜா சாகேபின் சார்பாக நீங்கள் நீண்ட தூரம் வந்து அவரை சிம்மாஸனத்தில் அமர்த்தி, அவருக்கு வாழ்த்துக் கூறியதற்காகவும் தங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். எனக்காகவும், தாங்கள் என் மீது நம்பிக்கை வைத்து, நான் உடைத்தாயிருக்கும் உரிமைகளுடனேயே இந்திய கவர்ன்மெண்டாரின் உத்தரவு வரும் வரை ரீஜெண்டாயிருக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டதற்காக எனது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகிறேன்."

ரெஜண்டுக்கு மாலை சூட்டப்பட்ட பின்னர் அவர் ரெஸிடென்ஸிக்குத் திரும்பிச் சென்றார். குண்டுகள் போடப்பட்டன. பிரகடனங்களின் தமிழ் மொழிபெயர்ப்பு பிரதான காரியதரிசியால் அரண்மனைச் சதுக்கத்தில் கூடியிருந்த ஜனங்களுக்குத் தெரியும் பொருட்டு வாசிக்கப்பட்டது. இத்துடன் தர்பார் முடிவடைந்தது.

மாலையில் திருகோகர்ணம் கோவிலில் வைதிக சிரத்தையுடன் புதிய மன்னருக்குப் பட்டாபிஷேகம் நடைபெற்றது. நீதிபதிகளும், தலைமை உத்தியோகஸ்தர்களும் பிரசன்னமாயிருந்தனர். வைதிக கார்யங்கள் பிற்பகல் 1-மணிக்கே ஆரம்பிக்கப்பட்டு, சுமார் 2-30 வரை பூர்த்தியாவதற்குப் பிடித்தது. சரியாய் 4–30 க்கெல்லாம் மன்னரும், ரீஜெண்ட் சாகேபும் நேரே கோவிலுக்குச் சென்றனர். அங்கு புதிய மன்னர் புரோகிதர்களாலும், மற்றும் விஜயம் செய்திருந்த ஏனையோராலும் வரவேற்கப்பட்டார். மன்னர் ஆஸனத்திலமர்ந்ததும் அவருக்கு யக்ஞோபவீதம் கொடுக்கப்பட்டது. அதை அவர் அணிந்துகொண்டதும், 'பட்டம்' என்று எழுதப்பட்டிருந்த ஒரு தங்கப் பட்டத்தை ரீஜெண்டு சாகேப் அவர்கள் மன்னரின் நெற்றியில் சூட்டினர். மன்னரின் பெயரால் அபிஷேகம் செய்யப்பட்ட பின்னர், மன்னர் அம்மன் சன்னதிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு கிரீடமும், பட்டக் கத்தியும் அவருக்கு அளிக்கப்பட்டன. பிரஹதம்பிகையிடமிருந்து சகல அதிகாரங்களையும் மன்னர்கள் பெறுகிறார்களென்று சமஸ்தானத்திய நீண்ட நாள் ஐதிகத்தையனுஸரித்தே அவ்வாறு செய்யப்பட்டது.

பட்டாபிஷேகம் முடிந்த பின்னர் மகா-ள-ள-ஸ்ரீ மகாராஜா அவர்கள் சகல சன்னதங்களுடனும் வடக்கு ராஜவீதி, தீழ ராஜ வீதி, கடை வீதி வழியாக பவனி வந்து அரண்மனையை யடைந்ததும் கார்டெக தர்பார் நடைபெற்றது. அப்பொழுது திவானும், எல்லா ஆண்பால் தலைமை உத்தியோகஸ்தர்களும், அரண்மனை ஸதஸ்யர்களும், ரூபாய் நூறும் அதற்கு மேலும் சம்பளம் பெறும் டவுனிலுள்ள எல்லா உத்தியோகஸ்தர்களும், ஹிஸ்

ஹைனெஸ் ராஜா பகதர் அவர்களுக்கு வழக்கப்படி ஏற்பட்ட மரியாதைச் செலுத்தினர். இவ்விதம் மங்களகரமாக சகல விமர்சைகளுடனும் பட்டாபிஷேக வைபவம் முடிவடைந்தது.

ஏஜெண்டு துரையவர்கள் 21-உ பகல் 12–15க் கெல்லாம் புதுக்கோட்டையை விட்டுப் புறப்பட்டுச் சென்றார். வழக்கம் போல் 13 மரியாதை குண்டுகள் போடப்பட்டன.

புதிய மன்னருக்கு ஆசிரியராக மாஜி டிப்டி மாஜிஸ்திரேட் ஸ்ரீமான் P. R. ராமச்சந்திர ராவ் அவர்கள் B. A. நியமனம் செய்யப்பட்டார்.

தென்னிந்திய சமஸ்தானப் பிரஜைகள் மாநாடு 1929–ம் வரு ஜனவரி மீ 14, 15-தேதிகளில் திருவனந்தபுரத்தில் ஸர். எம். விசுவேசுவரய்யா அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடி பெற்றது. அதற்கு புதுக்கோட்டையிலிருந்து ஸ்ரீமான்களான K. ஸ்வாமிநாதய்யர், G. சுந்தரேசய்யர், S. விசுவநாதய்யர் ஆகிய இவர்கள் சென்றிருந்தனர். அதில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களில், பெடரல் அமைப்புத் தீர்மானத்தில் ஸ்ரீமான் சுந்தரேசய்யரும், சமஸ்தானங்களில் பூரணப் பொறுப்பாட்சி சம்பந்தமான தீர்மானத்தில் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரும், சமஸ்தானப் பிரஜைகளுக்கு ஜீவாதார உரிமைகள் அளிப்பது சம்பந்தமான தீர்மானத்தில் ஸ்ரீமான் S. விசுவநாதய்யரும் கலந்துகொண்டார்கள்.

ராஜீய ஏஜெண்டு மிஸ்டர் கிராஸ்த்வெயிட் துரையவர்களும், உதவி ஏஜெண்டு ராவ் பஹதூர் E. K. கோவிந்தன் அவர்களும் ஜனவரி மீ 16-உ புதுக்கோட்டைக்கு விஜயம் செய்து, மூன்று தினங்கள் தங்கிவிட்டுச் சென்றார்கள்.

புதுக்கோட்டையில் ரீஜென்ஸி சபையொன்று சீக்கிரத்தில் அமைக்கப்படுமென்றும், அதற்குத் தலைவராக ஸ்ரீமான் T. ராகவய்யா பந்துலு நியமிக்கப்படுவாரென்றும் புதிய டெல்லியிலிருந்து 1929-ம் வரு பிப்ரவரி மீ 5-உ கிடைத்த செய்தி 'ஹிந்து' பத்திரிகையில் வெளியிடப்பட்டது.

புதுக்கோட்டையில் நிர்வாக சபை அமைப்பு விஷயமாக அடியிற்கண்ட விசேஷ அறிக்கை ராஜீய ஏஜண்டு Lt. Col. C. G. கிராஸ்த்வெயிட் துரையவர்களால் வெளியிடப்பட்டது:—

"புதுக்கோட்டை சமஸ்தான மகாராஜாவாகிய ஹிஸ் ஹைனெஸ் ஸ்ரீ பிரஹதம்பதாஸ் ராஜா ராஜகோபாலத் தொண்டமான் பஹதர் அவர்களின் மைனரிடி (minority) காலத்தில் ஸமஸ்தானத்து அரசாட்சியானது ஒரு பிரஸிடெண்ட், ஒரு

திவான், ex-officio மெம்பராக சமஸ்தானத்து சீப் ஜட்ஜ், ஆகிய இவர்களடங்கிய அசாங்க நிர்வாக சபையாரால் நடத்தப் படத்தக்கதாக சபையோடு கூடின மகா-ரா-ரா-ஸ்ரீ கவர்னர் ஜெனரல் அவர்களால் களிகூர்ந்து ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேற்படி நிர்வாக சபையானது 28—2—29 பிற்பகலிலிருந்து ஸ்தாபிக்கப்படும். தற்காலம் அடியிற்கண்டவர்கள் அச்சபையின் அங்கத்தினர்களாவார்கள்:—

M. R. Ry. திவான் பஹதூர் T. ராகவய்யா பந்துலு காரு C. S. I.. பிரஸிடென்ட்.

" G. கணபதி சாஸ்திரியார் அவர்கள் B. A., B. L. (திவான்).

" P. S. சிவக்ஞான முதலியார் அவர்கள் B. A., B. L. (சீப் ஜட்ஜ் and ex-officio member).

இவ்வறிக்கையில் கண்டவாறு 28-2-29 பிற்பகலில் ரீஜெண்ட் ஸாகேப் மகா-ரா-ரா-ஸ்ரீ விஜயசெகுநாத தொரைராஜா அவர்களும், திவான் ராவ் பஹதூர் P. K. குன்ஹுன்னி மேனன் அவர்களும் திவான் பஹதூர் T. ராகவய்யா பந்துலுகாரு C. S. I. அவர்களிடமும், திவான் ராவ் பஹதூர் குன்னுனி மேனன் அவர்கள் மகா-ரா-ரா-ஸ்ரீ G. கணபதி சாஸ்திரிகள் B. A., B. L. அவர்களிடமும் தங்கள் உத்தியோகங்களை ஒப்புவித்தனர்.

சில ஆண்டுகளாகவே ரீஜெண்ட் சாகேபவர்களும், திவானும் தாங்கள் ஜனங்களுக்கு சாசுவதமான நன்மை புரியக்கூடிய கால வரையை கடந்து நின்றதாகவே கருதிவந்த சமஸ்தானப் பொது ஜனங்களின் கவலையும் பீதியும் ஒழிந்து, ஜனங்களிடை ஓர் விதமான உற்சாகமும், குதூஹலமும், புன்முறுவலும் இலங்கத் தொடங்கின.

நிர்வாக சபைத் தலைவர் 1—3—29ல் பிரசுரித்த அறிக்கையில் அடியிற்கண்ட விஷயமும் எழுதப்பட்டிருந்தது:—

"சமஸ்தானத்தின் (ex) ரீஜெண்ட் மகா-ரா-ரா-ஸ்ரீ ராஜகுமார் விஜயசெகுனாத தொரைராஜா அவர்கள், B. A. சமஸ்தானத்தை விட்டு மதராஸுக்குப் போகும் வரையில் அவர் ரீஜெண்டாக அனுபவித்துவந்த எல்லா கௌரவங்களையும், மரியாதைகளையும் அனுபவித்து வருவார்கள்."

ஸ்திரமாய் சென்னையில் வசிக்கத் தீர்மானித்த மாஜி ரீஜெண்டு அவர்கள் 1929-ம் வரு மார்ச் மீ 24-ந் தேதி மாலை 2-30 மணிக்கு மோட்டாரில் சென்னைக்குப் பிரயாணமாகப் புறப்பட்டனர். அவ்விதம் அவர் சென்றதைக் கண்ணுற்றவர்கள்,

புதுக்கோட்டையில் பிறந்து, புதுக்கோட்டையில் வளர்ந்து, புதுக்கோட்டையில் ராஜாதிகாரம் செலுத்தி, தன் மூச்சுள்ள வரையில் அவ்விதமே நடைபெறுமென்று எண்ணியிருந்ததெல்லாம் வீணுபிற்றேயென்று விதியார் செயலே வியந்து பேசுவாராயினர்.

ஜனமித்திரனில் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' என்ற தலைப்பின் கீழ் எழுதப்பட்ட அடியிற்கண்ட பகுதி இங்கு குறிப்பிடத் தகுந்தது:—

"ரீஜெண்ட் சாகேபவர்கள் சென்ற 30 ஆண்டுகளாக சமஸ்தானத்தில் கௌன்ஸிலராகவும், திவானுகவும், ரீஜெண்டாகவும் வேலை பார்த்துள்ளார். அவர் கௌன்ஸிலராக வேலை பார்த்த பொழுது சமஸ்தானத்தின் சாசுவதமான க்ஷேமத்தையோ, அல்லது சமஸ்தான ஜனங்களின் நன்மையையோ கருதி விசேஷமாய் ஒன்றும் செய்வதற்கில்லை. அவர் திவானுயிருந்தபொழுது சமஸ்தான ஜனங்களுக்கு விசேஷ சௌகர்யங்களை அளிக்க முன்வரவில்லையெனினும், விசேஷ இடஞ்சல் செய்யவில்லை. அவர் ரீஜெண்ட் பதவியை ஒப்புக்கொண்டவுடன், "சென்றது செல்க. நான் சில தவறுகள் செய்திருப்பேன். ஆனுல், அதன் பூரா பொறுப்பும் என்னைச் சார்ந்ததல்ல. நான் இனி சுத்தமான கரும் பலகையைப்போல் எனது ஆட்சியை ஆரம்பிப்பேன்." என புண்பட்ட ஜனங்களின் மனது குளிரும்படியான மொழிகளால் பொது ஜனங்களைத் தம்வயப்படுத்திக்கொண்டார். சில ஆண்டுகள் வரை தமது சுய புத்தியை உபயோகப்படுத்தி, ஜனங்களின் குறைகளை அகற்றி, ஜனங்களின் திருப்திக்குப் பாத்திரரானுர். காலம் செல்லச் செல்ல அவரது சூட்சும புத்தியும், தூர திருஷ்டியும், விசால நோக்கமும் அவரிடமிருந்து விடைபெற்றுக்கொண்டுவிட்டன. ஜனங்களின் குறைகளை நேர்முகமாய் அறிந்துவந்த ரீஜெண்ட் சாகேபவர்கள், பிறர் கண்களால் பார்க்க ஆரம்பித்து விட்டார். வார்சு பாத்யப் பிரச்னையும் இச்சமயத்தில் தலைதூக்க ஆரம்பித்துவிட்டது. சிட்னி மார்த்தாண்டாவுக்குச் சார்பாக வேலை செய்தவர்களுக்குப் புதிய புதிய உத்தியோகங்களும், சம்பள உயர்வுகளும், விரோதமாக அபிப்பிராயப்பட்டவர்களுக்கு அடக்கு முறைப் பிரயோகங்களும், தேசப்பிரஷ்டமும், உத்தியோக முறையில் பலவித இன்னல்களும், இன்னும் சொல்லொணு கஷ்ட நஷ்டங்களும் சன்மானங்களாக அளிக்கப்பட்டன. இந்தியா கவர்ன்மெண்டார் சிட்னி மார்த்தாண்டாவின் பாத்யதைகளை நிராகரித்து விட்டதிலிருந்தாவது, ஒரு கொள்கையை உத்தேசித்து சிட்னி மார்த்தாண்டாவிற்கு விரோதமாக அபிப்பிராயப்பட்டவர்கள் இத்தகைய இன்னல்களுக்கு உட்படுத்தப்பட்டது நீதியில்லை

யென்று விளங்காமற் போகாது. ரீஜெண்ட் சாகேபவர்கள் தாமும் ஒருநாள் தமது உத்தியோகத்திலிருந்து விலகி, சாதாரண சமஸ்தானப் பிரஜைகளில் ஒருவராய் வாழவேண்டிவரும் என்ற எண்ணம் கொண்டிருந்தால், அவரது ஆட்சியின் பிற்பகுதியில், பல சமஸ்தான ஜனங்களின் மனது புண்பட்டு வெந்துருகும்படியான காரியங்களைச் செய்திருக்க மாட்டாரென நம்புகிறோம். ஒரு சிலருக்கு அவர் தன் பதவிக்குரிய காருண்யத்தை புதிய வழியில் காண்பித்துள்ளார். எல்லாம் வல்ல சர்வேசுவரன் அத்தகைய காருண்யத்தை, காருண்யத்திற்கு இருப்பிடமென்று சொல்லக் கூடிய ஸ்தானத்தை வகித்த ரீஜெண்ட் சாகேபவர்களுக்குக் காண்பிப்பது முறையேயாகும். எவ்வகையில் பார்த்தாலும், ரீஜெண்ட் சாகேபவர்கள் ஆட்சியின் பிற்பகுதி சமஸ்தான சரித்திரத்தில் இருள் சூழ்ந்த காலமாகும்.

* * * *

இறுதியாக தேனிசையார் (Tennyson) என்னும் ஆங்கிலக் கவி தாம் பாடியுள்ள சில அழகிய வரிகளில் நமது பிரார்த்தனையைப் புரிவோம்:

Ring out the old, ring in the new,

* * * *

Ring out the want, the care, the sin,
The faithless coldness of the times.

* * * *

* * * *

Ring out false pride in place and blood
The civic slander and the spite;
Ring in the love of truth and right
Ring in the common love of good.

"பழையன போகுக! புதியன புகுக! இன்மையும், கவலையும், தீமையும் காலத்தின் நாஸ்திக புத்தியும் நீங்குக! பதவி, பிறப்பு, இவற்றின் புன்பெருமையும் ஒழிக! குத்திரமும் கோளும் குலைக! அறமும் மெய்மையும் சிறக்க! பொதுநல வுணர்ச்சி பொங்கிப் பெருக!"

"மாஜி ரீஜெண்ட் சாகேபவர்களின் குணாதிசயங்கள்" என்று ஸ்ரீமான் S. விசுவநாதய்யரவர்கள் ஜனமித்திரன் பத்திராதிபருக்கு எழுதி, 1929-ம் வரு மார்ச் மீ 8-ம் தேதி மித்திரனில் பிரசுரிக்கப்பட்ட அடியிற்கண்ட கடிதமும் இங்கு நோக்கற்பாலது:—

"எனது அன்பார்ந்த சகோதர!, சகோதர வாஞ்சையாலும், நான் நடத்திவந்த பத்திரிகையின் மேலுள்ள அபிமானத்தாலும் இக்கடிதத்தைத் தங்களுக்கு வரையத் துணிந்தேன். சென்ற வாரத்தில் தாங்கள் வெளியிட்ட தலையங்கத்தை தாங்கள் பிரசுரம் செய்ய உரிமையில்லை என்று சொல்ல நான் முன்வராவிடினும், தாங்கள் ரீஜெண்ட் சாகேபவர்களிடத்தில் உதார புத்தியையும் அன்பையும் காட்டியிருந்தால் சிலாக்கியமாயிருந்திருக்குமென்பது எனது பணிவான அபிப்பிராயம். கடாசி இரண்டு வருஷ காலமாக அவரது ஆட்சியில் உங்களுக்கும், எனக்கும், நமது குடும்பத்தாருக்கும் ஏற்பட்ட துன்பங்கள் உலகமறிந்ததே. துரதிருஷ்டவசமாக அன்னர் உங்களையும் என்னையும் அன்யதாக்ரஹணம் செய்த காரணத்தால், நம்மிடமும் நம்மவரிடமும் அரசாங்கத்தார் குற்றமல்லாதவிடத்தில் குற்றம் பார்ப்பதும், கடுகளவு குற்றமாயிருந்தால், அதைப் பெரிதாகக் கருதுவதும் சகஜமாகிற்று. நம்மவருக்குச் சொல்லொணா இடுக்கண்கள் ஏற்பட்டன; என்றாலும் இவைகளையெல்லாம் ஒருபுறம் கட்டிவைத்துவிட்டு, முப்பது வருஷங்களாக மாசுபடாமல் கௌன்ஸிலராகவும், திவானாகவும், ராஜப் பிரதிநிதியாகவும் பெரிய பதவிகளை வகித்து, தன் வாழ்நாளில் முக்கியமான நாட்களை இச்சமஸ்தானத்தின் சேவைக்கு அர்ப்பணம் செய்த ஈ-ஸ்ரீ விஜயரெகுநாத துரை ராஜா அவர்களை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இவ்வரிய சேவையை நீங்களே அநேகம் பிரமேயங்களில் பாராட்டி எழுதியிருக்கிறீர்கள். இவருடன் ஐந்து நிமிஷங்கள் மட்டும் எவர் பேசினாலும், இவரது இன்சொல்லாலும், புத்தி சாதுர்யத்தாலும் அவரைத் தன்வசப்படுத்தும் வசீகர சக்தி உடையவர். எவருடனும் கடினமான, அல்லது பௌரஷமான வார்த்தையைச் சொல்லும் இயல்புள்ளவர் அல்லர். பொதுவாக எல்லோரிடத்திலும் அன்பு கொண்டவர். முப்பது வருடத்தில் ஒருவரையாவது வேண்டுமென்று கெடுத்தாரென்பது கிடையாது. பிரதிநிதி சபை, சட்டசபை, முனிஸிபல் சபை, பஞ்சாயத்துக் கோர்ட்டு, கிராமப் பஞ்சாயத்துக்கள், கட்டாய ஆரம்பக் கல்வி முதலிய சீர்திருத்தங்களை சமஸ்தான மக்களுக்கு வழங்கியிருக்கிறார். கடாசி இரண்டு வருஷங்களில் இவரது ஆட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் எனக்கும் கவர்ன்மெண்டாருக்கும் பலத்த அபிப்பிராய பேதமிருந்தபோதிலும், எனக்கு இவரிடமிருக்கும் விசேஷ மதிப்பை வெளியிடுவதில் எனக்குச் சற்றும் தயக்கமில்லை. ஏனெனில், இவர் எனக்கு நன்மை புரியக்கூடிய காலம் கடந்துவிட்டது. இவரை ஸ்தோத்திரம் செய்தாகவேண்டியது ஒன்றுமில்லை. இருந்தாலும் உண்மையைக் கூறக்கடமைப்பட்டுள்ளேன். பதவிக்காக ஒருவரை சிலாகித்துப் பேசுவதும், உண்மையை மறைத்துக்

கூறும் இயல்பும் என்னிடமில்லை. ஈ-ஸ்ரீ விஜயரெகுநாத துரை ராஜா அவர்கள் வார்சு பாத்திய விஷயமாய் அரசிளங்குமாரனுடைய மாஸ்டர் ஸிட்னி மார்த்தாண்டாவிடம் சார்பும், விசேஷப் பிரியமும் காட்டியது முற்றும் நியாயமும், பெரிய தகப்பனுர் என்ற முறையில் அவரது கடமையுமாகும். ஆனல், ஒரு கொள்கையை உத்தேசித்து பரிபூரண இந்திய இரத்தோட்டமுள்ள தொண்டமானுக்கே சிங்காசனம் அளிக்கப்படவேண்டுமென்று சற்று உதார புத்தியுடன் அவர் உற்றுநோக்கியிருந்தால், சென்ற இரண்டு வருஷங்களாக ஈடுபெற்ற அடக்குமுறைகள் ஏற்பட்டிருக்காதென்று கருதுகிறேன். ஆனல், இந்த துரதிருஷ்ட சம்பவங்கள் மூப்பது வருடங்களாக நியாயத்துடனும், விவேகத்துடனும், அன்புடனும் மாசுபடாமல் அவர் சமஸ்தானத்துக்குச் செய்த அரிய தொண்டை மறக்கச் செய்யலாகாது. மகா-ஈ-ஈ-ஸ்ரீ ஸ்ரீ விஜயரெகுநாத துரைராஜா அவர்கள் அரோக நிடகாத்திரமாய் நீடூழி காலம் வாழும்படி எல்லாம் வல்ல ஈசன் அருள் புரிவாராக!"

மகா-ஈ-ஈ-ஸ்ரீ விஜயரெகுநாத துரைராஜா அவர்களின் ரீஜென்ஸி ஆட்சியைப்பற்றி புதுக்கோட்டைப் பிரஜைகளின் 7-வது மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்கள் M. A., B. L. தமது வரவேற்புப் பிரஸங்கத்தில் எழுதியுள்ள அடியிற்கண்ட விமர்சம் இங்கு கவனிக்கத்தக்கது:—

"I may now briefly review the Regency Administration which has passed away. I yield to none in my regard and esteem for the ex-Regent, a tried and capable administrator who worked in various capacities in the State for a period of 30 years. Always a careful financier, he managed the finances of the State as a cautious housewife. He expressed himself on several solemn occasions that he wanted to associate the people progressively with the administration of the State. The present Legislative Council was placed by him on a statutory basis in the year 1924, and measures intended to promote Village Panchayats, Primary education, Village Courts, etc., were put by him on the statute book. He began well and with a clean slate. It was all smooth-sailing during the first half of his regime; but since the beginning of the year 1926, an unexpected turn took place by reason of certain official acts which did not commend themselves to the public. The second half of his regime may be said to synchronise with a period of unusual repres-

sion of popular opinion. It is needless and it will serve no useful purpose to set out in detail the several manifestations of the policy then pursued, but in passing we may refer to the prosecution and conviction of Mr. P. S. Subramania Aiyar, the young talented editor of the local Vernacular Weekly "Janamitran", the security proceedings against his brother Mr. S. Viswanatha Aiyar B. A., M. L. C. the searches of the Janamitran Press and the prosecution of Mr. S. Ramanathan, another brother of the family for alleged infringement of the Press Regulation, the compulsory resignation of the office of Deputy Thasildar obtained from Mr. S. Venkateswara Aiyar B. A., another brother of the family, the order of externment passed on Mr. A. S. Nagarathnam Aiyar, the editor of the other local Vernacular Weekly, the warrant of arrest for alleged sedition kept pending against Mr. Satyamurthy etc. It was sad and painful to contemplate the sufferings which befell that family whose only fault was that they dared to stand up for the principle, since recognised, that a full-blooded Hindu alone should rule over the State. That accounts also for the fact that no conference was held anywhere in the State during the last three years. When all is said and done, the historian of the future cannot fail to chronicle that the Regency administration began well but drifted by successive stages from one wrong step to another, all of which could easily have been avoided. It pains me to have to say that it was a sad case of lost opportunities for the ex-Regent, who, if he had only worked with the single-minded purpose of the good of the people such as marked the larger part of his career, might have enshrined himself in the pages of history, as the maker of modern Pudukotah.'

27-வது அத்தியாயம்.

ஜனமித்திரனின்
ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவும், ஆசிரியருக்குப் பாராட்டும்.

"ஜனமித்திரன்" உதயமாகி ஐந்து வருஷங்கள் பூர்த்தியாகி ஆறுவது ஆண்டை யெய்து மளவில் பற்பல நண்பர்கள் அதன்

சேவகத்தைப் போற்றியும், அதற்குத் தங்கள் தங்கள் ஆசிகளைக் கூறியும் கடிதங்கள் விடுத்தனர். அவற்றுள் சிற்சிலவற்றை ஈண்டு குறிப்பிடுவோம்:—

ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர்.

சென்னை.

23—9—29.

ஐயா,

"ஜனமித்திரன்" இந்த ஐந்து வருஷ காலமாகச் செய்து வரும் தேச ஊழியமும், சிறப்பாக சமஸ்தான ஊழியமும் எல்லோராலும் மெச்சத்தக்கது. எவ்வளவோ இடுக்கண்கள் நேர்ந்த போதிலும், அவைகளையெல்லாம் கண்டு கலங்காமல், உண்மையுடனும், தைரியத்துடனும், தேசபக்தியுடனும் உழைத்திருக்கும் இப்பத்திரிகை சிரஞ்சீவியாயிருந்து, தான் செய்துவரும் அரிய, பெரிய வேலையை என்றும் செய்துவர ஆற்றலை அளிக்குமாறு ஆண்டவனைப் பிரார்த்திக்கும்

தங்கள் அன்பன்,

S. சத்தியமூர்த்தி.

சுவாமி சுத்தானந்த பாரதியார் புதுவையிலிருந்து எழுதியது.

"ஜனமித்திரன் வீரன்."

ஜனமித்திரன் புதுக்கோட்டைச் செல்வப் புதல்வன்! வீரமைந்தன்! ஜனநாயக உணர்ச்சிக்கு ஜனமித்திரன் உண்மையுள்ள கண்பனை வாய் திறந்தான்! வீரனின் பாதை பஞ்சு மெத்தையால் ஆக்கப்பட்டதல்ல; கூரிய வாளாலும், பகையாலும் மேவப்பட்டது. அதுபோல் வீரவுணர்வுள்ள பத்திரிகைகளுக்கும் எத்தனையோ இடர்கள் உள்ளன. ஆதரவுக் குறைவு, வருமை, அரசாங்கத்தாரின் வைரவாட் பார்வை இவற்றினூடு, சிறை, துயர், இடர், இகழ்ச்சி, தன்பங்களை பிரதாப சிம்மனின் நீலவேணிக் குதிரை போலத் தாண்டி, இப்போது ஜனமித்திரன் தோளுயர்த்தி, மார்பு விரித்து, ஆளாக மதிக்கப்பட்டு, தமிழ் நாட்டின் முன்னே நின்று நிலவுகிறது.

ஒரு பத்திரிகையை அதன் சந்தாப் பெருக்கினின்றுவது, வழுவழுப்புக் காயிதத்தினின்றுவது ஆராய்வது சரியைக் கொழுப்பினின்று மதிப் பெருக்கை ஆராய்வதொக்கும். அது பிழை. பத்திரிகையை அதன் வீரப்பெருமை, உண்மைச் சிறப்பு, ஆசிரியர் தன்மை, இவற்றினின்றே ஆராயற்பாலது. இத்தகைய

ஆராய்ச்சியில் ஜனமித்திரன் சுயராஜ்யாப் பத்திரிகைக்குத் தோள் கொடுத்தே நிற்கிறது!

ஜனமித்திரன் உண்மைக்காக சிறைப்பட்டான்! ஆனால் உண்மையைச் சிறையிட முடியுமா? சிறை, தண்டனை யாருக்கு? தனது உரிமையை, ஆண்டவன் ஈந்த அருமைச் சுதந்திரத்தை மறுக்கும் கோழையும், ஆண்டவன் கோயில்கொண்ட ஆருயிர்களைத் தன் அகந்தையால் தீய ராகு ஞாயிறை மறைத்து வீழ்வது போல, அடக்கியொடுக்கித் தன் கொடுங்கோலை அவர்கள் கண்ணீரிற் கலக்குவோன் எவனோ, அவன் அரசாங்கச் சிறையில் இல்லாவிடினும், பொய், இடர், அதர்மம், பகை, என்னும் கோட்டை மதில்கள் சூழ்ந்த நித்தியச் சிறையில் ஆண்டவன் காலதண்டம் தன் தலைமேல் விழ அடைபட்டு உட்குகின்றான்!

ஜனமித்திரன் ஒரு முறை சிறை சென்று தன்னை உண்மையான பொதுஜன மித்திரனாகக் காட்டிவிட்டான். அது பொது ஜனங்களுக்காகப் படும் பாட்டிற்குத் தமிழர் தங்கள் தாராளமான ஆதரவைக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஜனமித்திரன், புதுக்கோட்டை, கேவலம் ஒரு எல்லைக்குட்பட்டதல்ல. அது தமிழ் உலகில் மிகவும் நன்கு மதிக்கத்தக்க பத்திரிகை. அதன் பின்னல் உண்மை யுள்ளது. அச்சம் இல்லை. ஆதலின் ஆண்டவன் அதன் மூலம் தமிழருக்கு அறிவிக்கும் சிறந்த உண்மையும் வீரவுரையும் என்ன? அது இதுவே!

இல்லை தன்பம்! இல்லை வீண்மை
இல்லை, இல்லை யச்சமே!
இல்லை தீனம்! இல்லை நோவு
மில்லை, இல்லை வெஞ்சிறை!
கருக்கு சாவும் ஏதடா
கயவனே தலை நிமிர்
இருக்கிறேன்!! இருக்கிறாய்!!
இருக்கு தென்ற முண்மையே!!

ஏ மனிதனே! நான் இருக்கிறேன், நீ எனது அருட்புதல்வனாய் இருக்கிறாய்! நம்மிருவரையும் அன்பினால் இணைக்க உண்மை உள்ளது. ஏன் அஞ்சுகிறாய்? என்று ஆண்டவன் யோகியார் உளத்திற் சொல்லும் வீர வாக்கியமே ஜனமித்திரனின் சுருதி வாக்கியமாகி வாழ்க!

சுத்தானந்த பாரதி.

ஸ்ரீமான் K. லக்ஷ்மண சர்மா B. A., B. L.

மித்திரன் ஜன ஸமஷ்டியின் அறிவுருவாய் உதித்தவன்; அதன் ஊழியனாய் வாழ்கின்றவன். அவனுக்கு ஆசிகள் கூறு

வது ஒருவாறு மிகைபோலுமாகும். ஆனல், மித்திரன் கடத்தும் உண்மைப் பணியைக் கண்டு, அதை வாழ்த்துவது மனித இயல்பே. அவ்வியல்பின் வயப்பட்டு, அடியேன் எழுதத் துணியும் அன்பு மொழிகள் இறைவன் அருளால் ஆசிகளாகுக!

மித்திரன் ஊழியத்துக்கு ஊளாய் அமைந்த ஆசிரியர்கள் குடிகளின் தொண்டில் ஒருமன துடன் ஈடுபட்டு, அதனல் சென்ற அரசாங்கத்தாருக்கு வேண்டாதவராகி, அவரை மட்டில்லாமல், அவர் பற்றுவர் யாவரையும் அரீதியாக வருத்தியும், அதற்கெல்லாம் சிறிதும் பின்வாங்காமல், மித்திரனைக் காப்பாற்றியதற்கு அவர்களிடம் நாம் யாவரும் நன்றி பாராட்டுகிறோம்.

சுயேச்சாதிகாரம் படைத்த அரசாங்கமானது எப்போதும் உண்மை உரைக்கும் பத்திரிகைகளைப் பகைத்துத்தானிருக்கும். ஆனல், அவ்வரசாங்கத்தை வரம்பில் நிறுத்த, உண்மையின் அடிமைகளாகிய பத்திராசிரியர் தவிர வேறு யாரால் முடியும்? அப்படி அடிமை புரியும் தொண்டரின் பின் நின்று உதவியளிப்பது குடிகளின் கடமையல்லவா? கடமை மாத்திரமல்ல, அதுவே குடிகளின் இயற்கையும் ஆகும். சில காலம் அறிவின்மையாலும், பயத்தாலும் குடிகள் தயங்கிநின்றாலும், இயற்கையானது இவற்றை வென்று, மித்திரன் காட்டும் நல்ல வழியில் செல்ல முன்வந்து, மித்திரனை பலப்படுத்துவார்கள் என்பதில் ஐயமில்லை. உண்மையும் வீரமும் வீண்போகாது.

தன்னை அறியாமல், தான் அடிமை யென்றும், அரசனின் சுவாதீனமுள்ள சடப்பொருள் என்றும் மாயையில் கட்டுண்டு, கண்ணிழந்து கிடக்கும் மனிதர்களைத் தட்டியெழுப்பி, தானே தனக்கு உடையவனென்றும், தன் உரிமைகளைக் காக்கவேண்டிய கடமையுள்ள சேவகனே அரசனென்றும், அரசாங்க நிர்வாகத்தில் தனக்கே முக்கியமான பொறுப்பு உண்டென்றும் அவன் அறியும்படிக்கே ஜனமித்திரன் பாடுபட்டு வருகிறது. இது உண்மையாகையால், இதை மறைக்க விரும்புகிறவர்கள் ஏமாந்து போவதும், மித்திரன் வெற்றி பெறுவதும் திண்ணம்! இவ்வுண்மையில் என்றும் மித்திரன் நிற்க!

லக்ஷ்மண சர்மா.

ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் B. A.

ஐந்தாண்டுகள் நிறைந்து ஆறுவது ஆரம்பமாகும் இந்நாளில் ஜனமித்திரனுக்கு எவ்வாறு ஆசிமொழிகள் கூறுவதென்று புலப்படாமல் தயக்கமுறுகிறேன். மித்திரனை ஸ்தாபித்து, அதன் முதல் பத்திராதிபராயிருந்த நெருங்கிய சம்பந்தத்தாலும், மித்திரன் தோன்றிய ஸ்வல்ப காலத்திற்குள் அதைத் தோன்றச்செய்த

எனக்கும், பின்னல் அதை ஆதரித்த தங்களுக்கும், நமது சுற்றத் தார்களுக்கும் சேர்ந்த சொல்லொணு இடுக்கண்களைக் கண்ணுற்று வெகு தூன்பத்திற்காளான காரணத்தாலும் எதை இச்சமயம் எழுதுவதென்றே புலப்படாத தயக்கம் நேரிட்டது. மித்திரன் தோன்றிய 1½ வருஷங்களுக்கு மேல் அரசாங்கத்தார் கண்விழித் துக்கொண்டு நான் கௌரவ ஆசிரியராயிருந்ததைப்பற்றி நீதிபதி களிடம் புகார் செய்ததும், நீதிபதிகள் நான் ஆசிரியராயிருந்தது பிசகெனக் கண்டித்ததும், நான் ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொண்டதும், தங்களிடத்தில் நான் என் செல்வக் குழந்தையை ஒப்புவித்ததும், தங்களிடத்திலும் சீற்றம் கொண்டு மாஜி சீஜெண்ட் கவர்ன்மெண்டார், தாங்கள் மாஸ்டர் சிட்னி மார்த்தாண் டாவிற்கு பட்டம் கிடைக்கக் கூடாதென்றும், ஒரு பக்கா இந்திய ரும் ஹிந்துவுமாகிய வார்சுக்குத்தான் ராஜாங்கம் கிடைக்கவேண்டு மென்றும் தங்கள் பத்திரிகையில் எழுதிவந்ததைக்கண்டு கோபம் கொண்டு வெகுண்டு, தங்கள் பேரில் 124—A பிரிவின்படி வழக் குத் தொடர்ந்து தங்களைக் கடும் தண்டனைக்கு உள்ளாக்கியதும், தங்களை சிறைக்கோட்டத்தில் வைத்தும் மாஜி கவர்ன்மெண்டா ருக்கு ஆத்திரமும் கோபமும் அடங்காமல் தாத்காலியமாய் பத்தி ராதிபராய் இருந்தவர் பேரிலும் அச்சுக்கூடச் சட்டப்படி நடவடிக் கை எடுத்துக்கொண்டதும், அது சம்பந்தமாக தங்கள் அச்சுக் கூடத்தை போலீஸ் பரிவாரங்கள் முற்றுகை போட்டு சோதனை செய்ததும், அந்தக் கேஸில் மாஜிஸ்திரேட் அபராதம் விதித்த தும், அப்பீலில் சீப் கோர்ட்டார் அத்தீர்ப்பை ரத்து செய்ததும், இதெல்லாம் போதாமல் என் பேரிலும் கி. பு. கோட் 108-வது பிரிவுப்படி போலீசாரைக் கொண்டு நடவடிக்கை நடத்தியதும், அதைச் சீப் கோர்ட்டார் சட்டத் தாழ்வு இருந்த காரணத்தால் தள்ளுபடி செய்ததும், பின்னல் மறுபடியும் ஓர் விஷமியின் பொய் ரிபோர்ட்டின் பேரில் நடவடிக்கை எடுத்துக்கொண்டதும், அவ்விஷமியை அப்போதைய கவர்ன்மெண்டார் தருமசிந்தனை யுடன் ஆதரித்ததும், முடிவில் பெருந்தகைமையாளராகிய எஜெண்ட் துரை மிஸ்டர் C. W. E. காட்டன் அவர்களின் நல்லுபதேசத்தின் பேரில் மாஜி கவர்ன்மெண்டார் வழக்கை வாபீஸ் வாங்கிக்கொண்டதும், இன்னும் எற்பட்ட எனைய துன்பங் களும் ஒன்றன்பின் ஒன்றாய் என் மனக்கண் முன் வந்து நிற்கின் றன! இத்தனை இடுக்கண்களுக்கும் இடையே ஒரு பத்திரிகை ஜீவ தசையை வைத்துக்கொண்டிருப்பதே அத்தியாச்சரியமான காரியம். அத்துடன்கூட 'ஜனமித்திரன்' தன் கொள்கைகளைக் கைவிடாமல் சிறப்பான நடையில் பொதுஜன நன்மை ஒன்றை யே பெரிதாகக் கருதி உழைத்துவருவது மெச்சற்பாலதென்ப தை நான் சொல்லத் தேவையில்லை. அனுவசியமாய் எவர் மனதை

யும் நோகச் செய்யாமலும், தைரியத்தைக் கைவிடாமலும், கௌரவமான நடையில் பத்திரிகையைத் தாங்கள் நடத்தி வந்தால், அதனால் தங்களுக்கும், பொதுஜனங்களுக்கும், அரசாங்கத்தாருக்கும், நற்பயனே விளையும். முக்கியமான விஷயங்களில் நடஸ்தமாக பொதுஜன அபிப்பிராயத்தை நல்ல பத்திரிகைகள் எடுத்துக்கூறவேண்டியதோடுகூட, பொதுஜன அபிப்பிராயத்தையும் சீர்படுத்த விவேகம் வாய்ந்த பத்திராதிபர்கள் முற்படவேண்டும். தங்களுடன் யோக்கியமான முறையில் மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கொண்டவர்களிடம் பத்திராதிபர்களுக்கு பொறுமையும் சகிப்புத்தன்மையும் வேண்டும். பத்திராதிபர்களைப் போல் அரசாங்கத்தாருக்கும், மற்றெவருக்கும் இந்நற்குணங்கள் இன்றியமையாதன. இடையூறுகள் நேருமென்ற பயம் ஏற்படும் காலத்திலேயே எடுத்த காரியத்தைக் கைவிட்டுவிடுகிறது அதமர்களின் இலட்சணமென்றும், உண்மையில் இடையூறுகள் நேர்ந்தவுடன் எடுத்த காரியத்தைக் கைவிட்டுவிடுவது மத்யம ஸ்வபாவமுள்ளவர்களின் இலட்சணமென்றும், தன் உயிருக்குக்கூட சேதம் வரக்கூடிய ஆபத்தைக் கண்டும் அஞ்சாமல், எடுத்த காரியத்தைக் கைவிடாமல், என்றும், தளரா ஊக்கத்துடன் நடத்திவருவதே உத்தம ஸ்வபாவமுள்ளவர்களின் இலட்சணமென்றும் சக்ரவர்த்திக் கவியாகிய பர்த்ருஹரி என்பார் பாடியிருப்பது என் நினைவிற்கு வருகின்றது. அத்தகைய ஊக்கத்துடனும், விடாமுயற்சியுடனும் தாங்கள் ஜனமித்திரனை நமது நாடும், நாட்டினரும், அரசாங்கத்தாரும், எல்லோரும் இன்புற்றுப் பயனடையும்படி என்றைக்கும் நடத்திவருமாறு எல்லாம் வல்ல ஜகதீசனை வழுத்துகின்றேன்."

S. விசுவநாதய்யர்.

மஹிபாலன்பட்டி பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்கள்.

புதுக்கோட்டைத் தலைநகரினின்றும் வாரந்தோறும் வெளிவரும் "ஜனமித்திரன்" என்னும் தமிழ்ப்பத்திரிகையை, அது தோன்றிய காலந்தொட்டுப் பெற்றுப் படித்து வருகின்றேன். இது, தேசத்தொண்டில் உண்மைப் பற்றும், அரசியலாரிடம் குறையிரந்தும் முறை வேண்டியும் நிற்கும் தேசமக்களாகிய சோதரர்களுக்கு வேண்டுவனவற்றை அஞ்சாது எடுத்துரைக்கும் ஆற்றலும், பிறர் நலம் பேணுவதில் எத்துணை இன்னல் வரினும் பொறுக்கும் உயர் குணமும் வாய்ந்த நண்பர் திரு. P. S. சுப்பிரமணிய ஐயரவர்களைத் தலைவராகக் கொண்டு, பல தேசாபிமானிகளை ஆதரவு பெற்று வெளிவருவதாகும். பொதுவாகத்

தமிழ் நிலத்தாருக்கும், சிறப்பாகப் புதுக்கோட்டை ஆட்சிக்குட் பட்ட மக்களுக்கும் வேண்டுவன கூறும் துறையில் சிறந்து நிற் பது; அரசியலார் தம் குடிமக்களின் நலந் தீங்குகளை அறியார் போன்றிருக்கவொட்டாது அடிக்கடி அவற்றை வெளிப்படுத்தி அறிவுறுத்தற்கு இன்றியமையாத பத்திரிகைகளை சிறந்த கருவியாகும். இவ்வியல்பு இப்பத்திரிகையிற் பார்க்கக் காண லாம், தேய நலம் பேணும் பெரியாராகிய மகாத்மா காந்தி அவர்களின் கொள்கைகளை முற்றும் ஆதரித்து வெளியிடும் நிலை மையில் இது முன்னிற்பது. இது தோன்றி ஐந்தாண்டுகளில் புதுக்கோட்டைக் குடிமக்கள் எய்திய நலன்கள் மிகப்பலவாகும். புதுக்கோட்டை ரீஜண்டு ஆட்சியில் நிகழுங்கால் இடை இடையே இது கடியப்பட்டிருப்பினும், குடிகள்பால் அரசியலார் கண் ணோட்டம் சிறிது சிறிதாகச் செலுத்திவருவதற்கு இதுவே தூண்டுகோலாகும். இதன் சத்திய நிலை கண்டே இப்பொழுது ஆட்சி மேற்கொண்டுள்ள மாட்சிமிக்க குழந்தை மகாராஜா அவர் களும், அவர்களின் பிரதிகாவலர் முதலியவர்களும் இதன் வளர்ச் சியில் மிக்க அருளுடையவராக இருக்கக்கூடுமென்று நம்புகிறேன்.

ஒரு சிறிதும் தற்பயன் கருதாது தன் பெயர்க்கேற்ப பிறர் நலம் கருதி வெளிவரும் இந்த "ஜனமித்திரன்" பத்திரிகையும், சுயநலத் தியாகத்தால் இதனைப் பல்லாற்றானும் செவ்விதின் நடாத்திவரும் இதனாசிரியரும், அல்லும் பகலும் பொதுநலங் கருதி யுழைத்து வருகின்றவர்களும், சிறந்த கல்வியறிவொழுக்கமுடை யாரும், இப்பத்திராதிபரின் உடன்பிறப்பாளரும் ஆகிய திரு. S. விசுவனுதய்யர் B. A. அவர்களும், இதனை அன்புடன் ஆத ரித்துவரும் நேயர்களும் நீடு வாழ இறைவனை வேண்டுகிறேன்.

மு. கதிரேசன்.

ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் B. A., L. T. அவர்கள்.

"நமது சமஸ்தானத்தில் பத்திரிகையை முதல் முதலில் ஸ்தாபித்த கௌரவம் தங்கள் சகோதரர் ஸ்ரீமான் S. விசுவனுதய்ய ருடையதே. அவர் பத்திராதிபராயிருந்து சின்னஞ் பத்திரிகை யை நடாத்தியதும், திடீரென்று ஒருநாட் காலையில் எழுந்ததும் கோர்ட் ஜட்ஜிகள் அனுமதியன்னியில் இவர்கள் 1½ வருஷ காலம் பத்திராதிபராயிருந்ததற்கு நோட்டீஸ் கொடுத்ததும், இறந்த ஜட்ஜி ஒருவர் சீறினதும், இது காரணம்பற்றி இவர்கள் பத்திரி கையைவிட்டு விலகியதும், பிறகு தாங்கள் பத்திராதிபரானதும், வார்சு விஷயமாய் பத்திரிகையில் வாரம் தவறாமல் எழுதிவந்த தும், இருந்த அதிகாரிகளின் சீற்றத்திற்கு பாத்திரர்களானதும்,

7, 8—மாதம் கழித்து "வேண்டாப் பெண்டாட்டி கை பட்டாற் குற்றம், கால் பட்டாற் குற்றம்" என்பது போல் மகாநாட்டில் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தியின் பிரஸங்கத்தை பிரசுரம் செய்தது ராஜத்துரோகம் என்று கண்டுபிடித்து அதற்கு கேஸ் நடத்தியதும், இங்குள்ள இரண்டு வக்கீல்களும் போதாதென்று பொருள் செலவு செய்து "தர்மத்தை ஸ்தாபிக்க" வெளியூரிலிருந்து வக்கீல் வரவழைத்ததும், ஜனங்கள் கடுமையென்று எண்ணும்படி விதித்த தண்டனையும், அப்பீல் கோர்ட்டில் தண்டனையை ஊர்ஜிதப்படுத்தினதும், பட்டணத்தில் சுதேச சமஸ்தான மகாநாட்டிற்கு "தர்மத்திற்குப் பொருள் வாங்கிக்கொண்டு" ஒருவர் போனதும், அவர் ரிபோர்ட்டை வைத்து (இது என் எண்ணம்) தங்கள் சகோதரர் மீது Cr. P. C. 108 பிரிவுப்படி நடவடிக்கை எடுத்ததும், அது சரியானதல்லவென்று சீப் கோர்ட்டில் தள்ளுபடியானதும், பிறகு மறுபடியும் நடவடிக்கை எடுத்ததும், தாங்கள் அரசரின் விருந்தினராய் சிறைச்சாலை சென்றபின், அச்சாபீஸ் ரிகுலேஷனுக்குப் புறம்பென்று கண்டுபிடித்து கொலைக் கேஸ்களில்கூட மிதமான நடவடிக்கைகள் நடக்கையில் அப்பொழுது இருந்த அரசாங்க டிப்டி சூபரிண்டெண்ட் அவர்கள் நேராடி நின்று செய்த பரிசோதனையும், இக்காரணத்தினால் பத்திரிகை ஒரு வாரம் நின்றுபோனதும், சட்டசபைத் தீர்மானமும், அக்காலம் இருந்த கீழ் அதிகாரிகளின் தொடை நடுக்கமும், பிறகு ஏஜண்டு புத்திமதி யளித்ததும், தாங்கள்—நான் சரியாகவோ தப்பாகவோ, ஆனால் திடஸ்தமாய் சொன்ன மொழிகளுக்கிணங்கி நடந்து வெளிவந்ததும் எல்லார் மனத்திலும் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கின்றன. தாங்கள் எழுதிவந்ததும், எழுதிய விதமும் பூரணமாக சரியென்று ஒப்புக் கொள்ளாத சிலர்களில் நான் ஒருவன். ஆனால் அக்கால கவர்ன்மெண்டார் மதிமயங்கிவிட்டனர் என்பதும் என் பூர்ண நம்பிக்கை. மேற்கூறிய ஒரு வாரம் தவிர பத்திரிகை ஒழுங்காயும் சரியாயும் வந்துகொண்டிருக்கின்றது. பத்திரிகையில் வரும் விஷயங்கள் கவனிக்கப்படுகின்றன. ஸ்திரீகள் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டு அவர்களுக்கும் சுயேச்சை வேண்டுமென்று வாதாடி நடவடிக்கையிலும் வந்துகொண்டிருக்கும் இக்காளில் பத்திரிகை வெகு ஸ்திரீகளால் படிக்கப்பட்டு வருகின்றது. வீட்டில் எனக்குக்கூட சில சமயம் பத்திரிகை கிடைப்பதில்லை. பள்ளிச் சிறுர்களும் படிக்கிறார்கள்.

தனக்கு மனதுக்கு இயைந்தவர்கள் செயல்களை சிலாகிப்பதும், அல்லாதவர்கள் செயல்களை நிராகரிப்பதும் மனித இயற்கை. பத்திராதிபர்களும் மனிதர்கள். இந்த ஒரு குறையை விட பத்திரிகையில் விஷயங்கள் தெளிவாயும் நன்றாயும், எல்லா கட்சி

களையும் யோசித்தும் எழுதப்பட்டு வருகிறது மனதுக்கு சந்தோஷத்தைக் கொடுக்கிறது. பத்திராதிபர்களுக்கு இடுக்கண்கள் நேருவது சகஜம்தான். நம் சமஸ்தானத்தில் தேசத் தொண்டென்பது புதிய வஸ்து. மனோதைரியமும் கொஞ்சம் பூஜ்யம். இன்னல்களுக்கு ஆளாவதாயிருந்தாலல்லது ஒரு காரியமும் சாதிக்க முடியாது. இத்தருவாயில் தாங்கள் பட்ட பாடும், பத்திரிகையை நன்கு நடத்திவருவதும் எல்லாராலும் சிலாகிக்கக்கூடியது. விஷயங்களைத் தெரிந்துகொண்டு அவதூறு சொல்லாமல் நடுவு நிலைமையிலிருந்துகொண்டு தக்க யோக்கியதையுடன் பத்திரிகையை நடத்திவருபவர் எவரிடமும் எனக்கு மதிப்புண்டு. கூடுமானவரை தாங்கள் அவ்விதம் நடந்துகொண்டுவருவதாய் நான் நிச்சயமாய் சொல்லக்கூடும்.

தங்கள் பத்திரிகை நாள் ஒரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து விருத்தியடைந்து, சுதேசமித்திரனைப் போல் இன்னும் அநேகர்கள் சந்தாதார்களாகச் சேர்ந்து, சமஸ்தான மக்களின் துயர்களை எடுத்துக்காட்டி, ஜனங்களுக்குச் சரியான உரிமைகளை வழங்க இவர்களைப் பாத்திரர்களாகச் செய்து வாங்கிக் கொடுத்து, தேச முன்னேற்றத்திற்கு தங்கள் பத்திரிகை ஒரு பெரும் சாதனமாக நான் எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். தாங்களும் ஆரோக்கிய திடகாத்திராய்ப் பத்திரிகையை நன்கு நடத்த கடவுள் அருள் புரிவாராக!"

ஜனமித்திரன் நேயர்கள் பலர் அப்பத்திரிகையின் ஐந்தாவது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாட ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அபிப்பிராயப்பட்டனர். மேலும் அக்கொண்டாட்டத்திற்கு 'ஹிந்து' பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்களை அக்கிராஸனராயிருக்கும்படி கேட்டுக்கொள்வது பொருத்தமாயிருக்குமென்றும் தெரிவித்தனர். அந்த யோசனைக்கிணங்கி ஸ்ரீமான் S. விசுவநாதய்யரவர்கள் ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்களை அக்கிராஸனம் வகிக்கும்படி கோரி கடிதமெழுதினர். அதற்கு அவர் ஸ்ரீமான் அய்யரவர்களுக்கு 1929-ம் வரு அக்டோபர் மீ 7-ம்வ பின்வருமாறு பதிலெழுதினர்:—

"While thanking you for your invitation to preside over the function in honour of the Editor of the "Janamitran" I extremely regret my inability to respond to it. I have just returned from Simla and for some time to come I will have my hands full with the work which has accumulated during my absence from office. I need hardly say that I associate myself heartily with the

citizens of Pudukotah in giving a well-merited reception to Mr. P. S. Subramania Iyer."

இதன்பின் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்களை அக்கிராஸனம் வகிக்கும்படி கேட்டுக்கொண்டதில், அவர் அதற்கு இசைந்தனர். அவர் இங்கு வருங்காலையில் அவருக்கும் பாராட்டு உபசாரம் செய்யவும் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதைப்பற்றி 18—10—29ல் வெளிவந்த ஜனமித்திரனில் அடியில் வரும் அறிவிப்பு காணப்படுகிறது:—

"ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் பேரில் மாஜி கவர்ன்மெண்டாரால் பிறப்பிவிக்கப்பட்டிருந்த வாரண்டை புதுக்கோட்டை அரசாங்க நிர்வாகிகள் ஜனப்பிரதிநிதிகளின் வேண்டுகோளுக்கிணங்க ரத்து செய்தபின்னர் முதல் முதலாக ஸ்ரீமான் ஐயர் அவர்கள் 24-ந் தேதி வியாழக்கிழமை தலைகருக்கு விஜயம் செய்வார். அன்று தினம், ஜனமித்திரனுக்கு ஐந்தாண்டுகள் பூர்த்தியாகி ஆறுவதாண்டு அடையுங்காலை மித்திரனின் தேச சேவையைப் பாராட்டிப் பேச ஒரு பொதுக்கூட்டம் டவுன் ஹாலில் நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்கள் அக்கிராஸனம் வகிப்பார். மறுநாள் 25-ஆன்று ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர் அவர்களை வரவேற்றுப் பாராட்டிப் பேச டவுன்ஹாலில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெறும். இக்கூட்டத்திற்கு ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யர் அவர்கள் அக்கிராஸனம் வகிப்பார். விவரங்கள் பின்னர் தெரிவிக்கப்படும். நியாயவாதிகளும், பொது ஜனங்களும் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்."

அறிவிப்பிற் கண்டிருந்தபடி ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயரவர்கள் 24-ந் தேதி வியாழக்கிழமை காலை 9-35க்கு தலைகருக்கு விஜயம் செய்தார். புதுக்கோட்டை ரயில்வே ஸ்டேஷனில் நியாயவாதிப் பிரமுகர்களும், நகரப் பொதுமக்களும் ஸ்ரீமான் அய்யரவர்களின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துப் பூமாலை சூட்டி மேள வாத்தியம் முழங்க அவரை வரவேற்றனர். பின்னர் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்கள் கிருஹத்திற்கு ஐயரவர்கள் அழைத்துச் செல்லப்பட்டார்.

ஸ்ரீமான் விசுவனாதய்யரவர்கள், ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயரவர்கள் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களை பேட்டி காண அனுமதி கோரி நிர்வாக சபைத் தலைவரவர்களுக்கு ஓர் கடிதம்

எழுதியிருந்தார். அதற்கு அன்னூர் பின்வருமாறு ஸ்ரீமான் விசுவநாதய்யரவர்களுக்கு பதிலெழுதினர்:—

President's House,
Pudukkottai.
24th Oct., '29.

Dear Mr. Viswanatha Aiyar,

I have received your letter of even date.

Mr. Satyamurthi may visit His Highness at 3 P.M. to-day.

Thank you for your good wishes about my health.

Yours sincerely,
T. Raghaviah.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயரவர்கள் மாலை 2-மணிக்கு சமஸ்தான திவான் அவர்களையும், பின்னர் நிர்வாக சபைத் தலைவர் அவர்களையும் பேட்டி கண்டார். பின்னர் குழந்தை மன்னரையும் பேட்டி கண்டு பேசினார். மாலை 5-மணிக்கு ஜனமித்திரன் ஆசிரியரைப் பாராட்டும் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

அக்கூட்டத்தின் நடவடிக்கை பின்வருமாறு:—

1939-ம் ஹிஜ அக்டோபர் மீ 24-ம் உ வியாழக்கிழமை மாலை 5-மணிக்கு 'ஜனமித்திரன்' ஆசிரியர் பத்திரிகையின் மூலமாக ஐந்து வருஷங்களாகச் செய்துவந்திருக்கும் ஊழியத்தைப் பாராட்டும் பொருட்டு ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரின் அக்கிராஸனத்தின் கீழ் டவுன் ஹாலில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. வக்கீல்கள், பொதுஜனங்கள், பேட்டைப் பிரமுகர்கள், சில உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், சமஸ்தானத்தைச் சேர்ந்த கிராமாந்தர வாஸிகளான பலர், ஆகிய சுமார் 1000 ஜனங்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்கள் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யரவர்களை அக்கிராஸனம் வகிக்குமாறு பிரேரணை செய்து பேசியதாவது:—"நாம் இன்று கூடியிருக்கும் காரணம் சாமர்த்தியம் வாய்ந்த பத்திராதிபர் ஸ்ரீமான் P.S. சுப்பிரமணிய அய்யர் நமது சமஸ்தானத்திற்குச் செய்திருக்கும் அரிய ஊழியத்தைப் பாராட்டுவதற்கேயாகும். இச்சமயத்தில் நமது சமஸ்தான வாஸியொருவர் அக்கிராசனம் வகிப்பது ஓர் சந்தோஷிக்கத்தக்க விஷயம். எனது அபிப்பிராயம் என்னவெனில், இப்பத்திரிகை செய்துள்ள ஊழியம் இன்னும் சரியாக மதிக்கப்பட

வில்லையென்பதே. இங்கு கூடியிருக்கும் மாபெருங் கூட்டமே இவ்வாலிபப் பத்திராதிபரின் விசேஷ தியாகத்திற்கு அத்தாக்ஷி யாகும். ஸ்ரீமான் சத்தியமூர்த்தியவர்களே உங்கள் எல்லோருக் கும் நன்கு தெரியும். இக்கூட்டத்திற்கு அவர் தலைமை வகிப் பது ஓர் பெரிய கௌரவமாகும்." ஸ்ரீமான் M. நாராயணசாமி அய்யர் இதை ஆமோதிக்க, ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர் அக்கிராஸனத்தை வகித்தனர். அவர் முகவுரையாகப் பின்வரு மாறு பேசினர்:– "ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யரே, சகோதரர்களே! நான் தடை நீங்கிய பிறகு இங்கு முதல் தடவை வருகிறேன். நான் இங்கு வருவதற்குக் காரணம் மூன்றாகும். சமஸ்தான அரியணையில் ஓர் முழு ஹிந்து வந்திருக்கிறார். இரண் டாவதாக ஒருவாறு மழை பெய்து கொஞ்சம் சௌகரியம் ஏற்பட் டிருக்கிறது. மூன்றாவதாக எனக்கு ஆபத்துக் காலத்திலும் உற்ற நண்பனாக விளங்கிய ஜனமித்திரனைப் பாராட்ட வேண்டியது அவசியமாகும்."

பின்னர் அக்கிராஸனர் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர் களைப் பேசுமாறு கேட்டுக்கொண்டார். ஸ்ரீமான் K. ஸ்வாமிநா தய்யரவர்கள் பேசியதாவது:—"எல்லா தேசங்களிலும் பத்திரி கைகள் மிகவும் உபயோகமாகவிருக்கின்றன. புதுக்கோட்டையில் பத்திரிகை ஸ்தாபிதம் செய்தது சமீபத்தில்தான். சமீபத்தில் பிக்கானீர் மகாராஜா சொன்னபடி உண்மையும் திறமையும் வாய்ந்த பத்திரிகைகளை அரசர், ஜனங்கள், பார்லிமெண்டு, இவை களுடன் ஒப்பிட்டு நான்காவது எஸ்டேட்டாக இங்கிலாந்தில் கூறுவது வழக்கம். ஸ்ரீமான் S. விசுவநாதய்யரவர்கள்தான் பத்திரிகையை முதன் முதலாக ஸ்தாபிதம் செய்து, சுமார் $1\frac{1}{2}$ வருஷ காலம் அவர் கௌரவ ஆசிரியராக விருந்தபிறகு பத்திரி கையில் பிடிமானமில்லாத காரணத்தால் அவர் உத்தரவில்லாமல் பத்திரிகையை நடத்தியது பிசகென்று கண்டுபிடித்தனர். ஸ்ரீமான் விசுவநாதய்யரிடமிருந்து அவர் சகோதரர் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணியய்யர் கைவசம் பத்திரிகை வந்ததும் பத்திரி கைக்கு அநேக இடுக்கண்கள் சம்பவித்தன. அவற்றை இப் பொழுது விஸ்தரிக்க வேண்டியதில்லை. அவையெல்லாம் நன்மை யாகவே முடிந்தன. மாஜி கவர்ன்மெண்டின் கருணையினால் அவர் மகாராஜாவின் வீருந்தினராக சில நாளிருந்தார். அவர் அபிப்பி ராய பேதத்தின் காரணமாகவே சிறை சென்றார். இங்கிலாந் தில் இப்பொழுதிருக்கும் மந்திரி சபையில் சிறை சென்றவர்கள் அநேகரிருக்கின்றனர். அயர்லாந்திலும் மந்திரி சபையில் சிறை சென்றவர்கள் அநேகரிருக்கின்றனர். நம் தேசத்திலும் லாலா ஹரிகேசன் லால் சிறை சென்ற பின் மந்திரியானார். இன்னும்

பால கங்காதர திலகர், மகாத்மா காந்தி முதலிய பெரியார்களும் சிறை சென்றிருக்கின்றனர். இம்மாதிரி சிறை செல்லுவதால் யாதொரு அகௌரவமுமில்லை. உண்மையில் கௌரவம் அதிக மே. இதைப்பற்றி விஸ்தரிக்கவேண்டிய அவசியமில்லை. பத்தி ராதிபர், சமஸ்தானத்திற்கு ஓர் பக்கா ஹிந்து அரசர் வேண்டு மென்று ஸ்ரீமான் சத்தியமூர்த்தி செய்த பிரஸங்கத்தைப் பிரசுரம் செய்தது ஓர் குற்றமாகச் சாட்டப்பட்டது. எனினும் சமஸ்தா னத்திற்கு ஓர் பக்கா ஹிந்து அரசர் வந்தது சந்தோஷிக்கத்தக்க விஷயமே. பத்திரிகையை மேன்மேலும் ஆதரிக்க வேண்டு மென்றும், மேன்மேலும் பத்திரிகை பலமடைய வேண்டுமென் றும் பிரார்த்திக்கிறேன்."

பின்னர் ஸ்ரீமான் P. S. சிவஞானதய்யர் அவர்கள் பேசிய தாவது:—"ஜனமித்திரன் பத்திரிகை இவ்வைந்து வருஷத்தில் நல்ல வேலை செய்திருக்கிறது. பத்திரிகைக்கு 6-வது வருஷம் பிறந்திருக்கிறது. ஸ்ரீமான் S. சிவஞானதய்யர் இப்பத்திரிகை யை ஸ்தாபிதம் செய்தது முதல் முன்னேற்றமடைந்து வருகிறது. நான் இப்பத்திரிகையின் சந்தாதார்களில் ஒருவன். சென்னையிலி ருந்து வெளியாகும் தமிழ்ப் பத்திரிகைகளாகிய சுதேசமித்திரன், ஸ்வராஜ்ஜியா வாரப்பத்திரிகை, இவைகளுக்குச் சமதையாகவே இதைச் சொல்லலாம். தமிழ்ப் பத்திரிகைகளை மதித்து விசேஷ மாகப் படிப்பவர்களில் நான் ஒருவன். இப்பத்திரிகையின் நோக் கம் தொண்டு புரிவதேயாகும். கேவலம் பணத்தை உத்தேசித்து மட்டும் நடத்தப்படவில்லை. இப்பத்திரிகையினால் சமஸ்தான த்திற்கு அநேக சௌகரியங்கள் ஏற்பட்டிருக்கின்றன. முதலாவ தாக இப்பத்திரிகை எக்கொள்கைக்காக பாடுபட்டதோ அக்கொள் கை நிறைவேறிவிட்டது. அதன் காரணமாகவே இப்பொழுது சமஸ்தான அரியணையில் ஓர் பக்காத் தொண்டமான் இருந்துவரு கிறார். சிலர் அவர் B. R. ராமச்சந்திரத் தொண்டமான் அவர் களுக்காகவே பாடுபட்டார் என்று சொல்லலாம். அவ்வாறு சொல் வது பிசகென்பது எனது அபிப்பிராயம். B. R. ராமச்சந்திரத் தொண்டமானை ஓர் உதாரணமாகவே அவர் காட்டிவந்தார். இரண் டாவதாக பத்திரிகை, மகாராஜாவின் கீழ் பொறுப்பாட்சி ஸ்தாபி தம் செய்வதற்காக உழைத்து வருகிறது. மூன்றுவதாக கிராம சீர்திருத்த விஷயமாய் பத்திரிகை அரிய வேலை செய்துவருகிறது. இன்னும் மதுவிலக்கு, மகாத்மா காந்தியின் கதர் இயக்கம், இவை களுக்காகவும் ஜனமித்திரன் ஊழியம் செய்திருக்கிறது. சென்ற வருஷம் மாஜி கவர்ன்மெண்டார் 100-க்கு 25-வீதம் வரி வஜா செய்தது முக்கியமாக ஜனமித்திரன் செய்த பிரசாரத்தினாலேயா கும். கட்டாயக் கல்வி, சமுதாயக் கல்வி, இவைகளையும் பத்திரி

கை ஆதரித்து வருகிறது. பத்திராதிபர் மிகுந்த தைரியசாலி. 124—A பிரிவுப்படி ஆசிரியர் மீது வழக்குத் தொடரப்பட்ட பொழுது நானும், ஸ்ரீமான்களான V. வைத்தியநாதய்யரவர்களும், சங்கிலியா பிள்ளையவர்களும் கவர்ன்மெண்டாரின் பாணத்திற்கு பயந்து, ஆசிரியரை கவர்ன்மெண்டாருடன் ராஜியாகப் போகும்படி எவ்வளவோ வேண்டிக்கொண்டும், ஆசிரியர் சிறிதும் தயங்காமல் தான் பேராடிவரும் கொள்கை சரியென்ற காரணத்தினால் பின்வாங்காமல் நின்றார். இக்காலத்தில் பத்திரிகை நடத்துவது ஓர் சாதாரண காரியமில்லை. ஒரு சிறிது வரம்பு கடந்தாலும் 124—A, 108, 144 முதலிய செக்ஷன்கள் காத்துக்கொண்டிருக்கின்றன. பொறுப்பும் பத்திரிகைக்கு அதிகமாய்விட்டது. எவ்வளவோ இடுக்கண்கள் நேர்ந்த காலத்தும் பத்திரிகை அரிய பெரிய தொண்டாற்றி வந்திருக்கிறது. "செயற்கரிய செய்வார் பெரியோர்" என்று திருவள்ளுவர் கூறிய பிரகாரம் ஆசிரியர் தனது அரிய தொண்டினால் ஓர் பெரியாராவர். பத்திரிகையின் முக்கிய நோக்கம் தொண்டு எனினும், சற்றுவது பிரதிப்பிரயோஜனமில்லாவிடின் வேலை செய்வதில் ஊக்கமிராது. ஆதலின் எல்லோரும் பத்திரிகையை ஆதரிக்கவேண்டியது அவசியமாகும். எல்லோருடைய உதவியையும் பெற்று பத்திரிகை நெடுநாள் நின்று இதுவரை செய்துவந்ததுபோல் ஊழியம் செய்துவருமென்று நம்புகிறேன்."

பின்பு திரு. வை. சுப்பிரமணிய அய்யர், ஸ்ரீமான்களான V. சத்தியமூர்த்தி அய்யர், P. V. வெங்கட்ட ராவ் B. A., சங்கிலியா பிள்ளை, K. நாகராஜய்யர், G. சுந்தரேசய்யர், நடேச சாஸ்திரிகள், ஜனாப் அப்தர் ரஹீம் முதலியவர்கள் ஜனமித்திரன் செய்திருக்கும் வேலையைப்பற்றி பாராட்டிப் பேசினர். இப்பேச்சுக்களில் இரண்டொன்றை இங்கு குறிப்பிடுவோம். ஸ்ரீமான் K. நாகராஜய்யர் பின்வருமாறு பேசினார்:—"ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யரை ஜெயிலுக்கு அனுப்பித்தது நான்தான். அக்கிராஸனர் என்னைக் கூப்பிட்டுப் பேசச்சொல்லவேண்டிய காரணம் என்னவென்று விளங்கவில்லை. (அக்கிராஸனர்: "பிராயச்சித்தம் செய்துகொள்வதற்காகத்தான்."—சிரிப்பு.) அப்படியானால் ஜனமித்திரன் பத்திரிகை இத்தருணத்தை அளித்ததற்காக எனது வந்தனம். பத்திரிகை நடத்துவதில் அநேக கஷ்டங்களிருக்கின்றன. ஸ்ரீமான் S. விசுவநாதய்யர்தான் பத்திரிகையை ஸ்தாபிதம் செய்தார். பத்திரிகை திறமையுடன் நடத்தப்பட்டு வருகிறது. பத்திரிகைக்கு 5-வது வயது நிறம்பிவிட்ட விஷயமே பத்திரிகையின் மேன்மைக்கும், அது செய்திருக்கும் வேலைக்கும் அத்தாக்ஷியாகும். இங்கு கூடியிருக்கும் பெரிய கூட்டமும் பத்திரிகைக்கு

பலரின் ஆதரவிருப்பதற்கு ஓர் அத்தாக்ஷியாகும். பத்திரிகையினால் ஜனங்களிடம் ஓர்வித கிளர்ச்சி யேற்பட்டிருக்கிறது. ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி அய்யர் இச்சமயம் அக்கிராஸனம் வகிப்பது பொருத்தமானதே. பத்திரிகை சில கஷ்டங்களுக்குள்ளானதற்குக் காரணம் அவரே. ஆதலின் அவர் இச்சமயம் வந்திருப்பது மூலம் பிராயச்சித்தம் செய்துகொள்ள வேண்டியது அவசியமே. சமஸ்தானத்திற்கு பத்திரிகை வேண்டியது மெத்த அவசியம். ஏனெனில், பத்திரிகைகளில் பல பொதுஜன விஷயங்களும் சர்ச்சை செய்யப்பட்டு வருகின்றன. பத்திரிகை அபிப்பிராயங்களை பூராவும் ஒத்துக்கொள்ள வேண்டுமென்ற அவசியமில்லை. ஒரே விஷயத்தைப்பற்றி பல அபிப்பிராயங்கள் வெளிவருவதற்குக் காரணம் பத்திரிகையேயாகும். பத்திரிகை சமஸ்தானத்திற்கு வேண்டுமென்பதற்கு இன்னும் அனேக காரணங்களும் உண்டு. பத்திரிகை வெகு நாளிருந்து வேலை செய்யுமென்று நம்புகிறேன்."

ஜனப் அப்தர் ரஹீம் பேசியதாவது:—"முஸ்லீம்களின் சார்பாக நான் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். ஜனமித்திரன் முக்கியமாக கிராமவாஸிகளுக்கு உபயோகமாகவிருந்துவருகிறது. "ஹிந்து", "ஸ்வராஜ்யா" முதலிய தினசரிப் பத்திரிகைகளைப் படிக்கும் நகரவாஸிகளைக் காட்டிலும் கிராமவாஸியாகிய என்னைப் போன்றவர்கள் ஜனமித்திரன் செய்துவரும் ஊழியத்தைப் பாராட்டிப் பேசுவது பொறுத்தமானது. கிராமாந்தரவாஸிகளுக்கு சில காலத்துக்கு முன் சமஸ்தான விஷயங்களும் சரி, உலகத்தில் நடக்கும் விஷயங்களும் சரி, ஒன்றும் தெரியாமலிருந்தது. "ஜனமித்திரன்" ஏற்பட்ட பின்னர், கிராமவாஸிகளுக்கு ராஜீய அறிவு ஏற்பட்டிருக்கிறது. பத்திராதிபர் மேலும் கொள்கையை ஸ்தாபிதம் செய்வதில் தைரியமாக நின்றார். சிநேகிதர்களின் வார்த்தைக் கிணங்கி ஆசிரியர் சிறையினின்று வெளியே வந்ததும் எல்லோருக்கும் சந்தோஷத்தையே கொடுத்தது. பத்திரிகைக்கு எல்லோரும் ஆதரவு அளிக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்."

பின்னர் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யர் பின்வருமாறு மறுமொழியளித்தனர்:—"நான் சென்ற ஒரு வாரமாகவே தேக அசௌக்கியமாக இருந்து வருகின்றேன். என்னைப்பற்றி கௌரவமாகச் சொல்லிய வார்த்தைகளுக்கு நான் என்னுடைய நன்றியைச் செலுத்துவது என் கடமையாதலால் ஒரு சில வார்த்தைகள் மட்டும் சொல்லுகிறேன். இச்சமஸ்தானத்தில் ஓர் பத்திரிகை ஏற்படுத்த வேண்டுமென்று, 2, 3, 4-வது மகாநாடுகளில் தீர்மானம் நிறைவேறியது. தீர்மானம் செய்கையில் நிறைவேற்றப்படாமல் நின்

றது. ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் தன் முயற்சியால் 1924-ம் வருஷம் அக்டோபர் மாதம் பத்திரிகையை ஸ்தாபிதம் செய்தார். பத்திரிகை ஸ்தாபிதம் செய்து சுமார் 1½ வருஷ காலம் கௌரவ ஆசிரியராக இருந்து வந்தார். அவர் பத்திராதிபராயிருந்த பொழுது தலையங்கங்கள் மட்டும்தான் எழுதுவார். மற்ற விஷயங்களும் சரி, பத்திரிகை அச்சடிப்பது சம்பந்தமான எவ்விஷயமும் அவருக்குத் தெரியாது. 1½ வருஷங்களுக்குப் பின்னர் கோர்ட்டார்கள் அவர்களை கௌரவப் பத்திராதிபராக விருப்பது பிசகென்று கண்டுபிடிக்க, அவர் ஆசிரியர் பதவியிலிருந்து விலகிக் கொண்டார். பத்திரிகையின் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். அரசாங்கத்தார் கோர்ட்டு விளம்பரங்கள் மூலம் அளித்து வந்த ஆதரவைக் கொண்டு பத்திரிகையை சில காலம் வார மிரு முறை பிரசுரித்து வந்தேன், அரசாங்க ஆதரவு நின்றவுடன் பத்திரிகை மறுபடியும் வாரப் பத்திரிகையாகவே வெளிவரவேண்டி நேர்ந்தது. பின்னர் பத்திரிகையின் மேல் அரசாங்கத்தார் வழக்குத் தொடர்ந்த விஷயம் பலருக்கும் தெரிந்ததே. மனுஷ்ய யத்தனத்தில் எதுவும் நடந்ததாக நான் நினைக்கவில்லை. எல்லாம் வல்ல இறைவனுடைய திருவருள்படியே எதுவும் நடக்கிறதென்பதி லய்யமில்லை. நான் கொள்கைக்காகத்தான் பாடுபட்டேன். ஒருவடைய விருப்பு வெறுப்பிற்காக நான் வேலை செய்யவில்லை. என் மனச்சாட்சிக்கு எது சரியென்று தோன்றியதோ அதற்காகவே பாடுபட்டேன். தொண்டு செய்வதற்கு தருணம் வாய்த்த பொழுது, என் கொள்கையை அனுசரித்து சிறை சென்றேன். நான் என்னுடைய கடமையைச் செய்தேனேயொழிய தியாகம் செய்து விட்டதாகக் கருதவில்லை. நீங்களெல்லோரும் என்னைப் பற்றி கௌரவமாகச் சொன்ன வார்த்தைகளுக்கு அருகனுகும்படி செய்துகொள்ள என்னாலான தொண்டு புரிய முயல்வேன். மற்று மொரு முறை நீங்கள் எனக்களித்த கௌரவத்திற்கு வந்தனமளிக்கிறேன்."

பின்னர் அக்கிராஸனர் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யர் பேசியதாவது:—"சுப்பிரமணிய அய்யரே, சகோதரர்களே!, எனது நண்பர் ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யர் உங்களுக்களித்துள்ள இந்த மோதிரத்தையும், புதுக்கோட்டையில் திறமையாக வியாபாரம் நடத்தும் ஸ்ரீனிவாஸ் அண்கோ ஸ்வாந்தாரான ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸராகவன் அளிக்கும் இவ்வெள்ளிக் கும்பாவையும் பரிசாகக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டிருக்கின்றனர். (பரிசுகளைப் பத்திராதிபரிடம் கொடுத்துப் பின்னர் பேசியதாவது) கூடியமட்டும் தைரியமாய் நடப்பதால் என்றைக்கும் கெடுதி வராது. மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் நடப்பதை விட

மேலானது வேறொன்றுமேயில்லை. இடுக்கண்கள் ஏற்பட்ட காலத்தும் பின்வாங்காமல் தைரியமாய் நின்று போராடியிருக்கிறீர்கள். இதற்கு உண்மையான வேதமதி ஜனங்கள் சொல்வதை விட வேறில்லை. கடவுளே உருவெடுத்துக் கூறினாலன்றி, இதை விட மேலான வேதமதி வேறொன்றுமிருப்பதாகத் தெரியவில்லை. இன்று ஓர் சுதினமாகும். நீங்கள் இன்று ஓர் அரும் பெரும் பாக்கியத்தைப் பெற்றிருக்கிறீர்களென்று நான் சொல்லுவேன். உங்களுடைய தியாகத்தையும், அரிய வீரியத்தையும் நான் பாராட்டுகிறேன். உங்களுக்கு இன்று செய்யப்பட்டிருக்கும் கௌரவத்தைவிட வேறு ஒரு கைம்மாறும் வேண்டுவதில்லை. பத்திரிகைக்கு சத்துருக்களும் குறைகளும் சகஜம். இடுக்கண் கள் வந்த காலத்தும் முன் வைத்த காலைப் பின் வைக்காமல் நடந் திருக்கிறீர்கள். பத்திரிகை மேன்மேலும் விருத்தியடைந்து செழித்தோங்க வேண்டுமென்று எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். நீங்கள் எக்காலத்திலும் மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் எனக்குமேல் நடந்திருக்கிறீர்கள். ஓர் விஷயத் தை மட்டும் நான் ஞாபகப்படுத்துகிறேன். இக்காலத்தில் தியா கம் செய்யாதவன் கதை பின்னால் பழங்கதையாய்விடுமென்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக ஸ்ரீ ராமர் செய்த தியாகத்தினா லேயே ராமாயணத்தைப் படிக்கிறோம். ஸ்ரீ ராமர் தசரதர் சொன்ன வார்த்தையை மதியாது ராஜபோகத்தை அனுபவித்தி ருந்தால், ராமாயணத்தை நாம் படிக்கப்போவதில்லை. சீதையின் தியாகத்தினாலேயே சீதையை நாம் பாராட்டுகிறோம் அர்ஜுனன் செய்த தியாகத்தினாலேயே பாரதம் எழுதப்பட்டும், படிக்கப்பட் டும் வருகிறது. "ஜனமித்திரன்" சரித்திரத்தை சுருங்கச் சொல்லு கிறேன்: மகாநாடுகளில் பத்திரிகை ஆரம்பிக்கவேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேறின. கமிட்டியும் நியமனம் செய்யப்பட் டது. அநேக இடங்களில்போல் இங்கும் கமிட்டி ஒன்றும் செய்ய வில்லை. ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் பத்திரிகையை ஸ்தாபிதம் செய்தார். பத்திரிகை ஆரம்பித்து $1\frac{1}{2}$ வருஷங்களுக்குப் பின்னால் அவ்வாறு அவர் பத்திரிகாசிரியராயிருப்பது பிசகென்று ஜட்ஜிகள் கண்டுபிடித்தனர். அவர் ஆசிரியர் பதவியிலிருந்து விலகினார். பின்னர் நடந்த மகாநாட்டில் நான் ஓர் பிரஸங்கம் செய்தேன். பிரஸங்கத்தில் நான் "இரண்டும் இரண்டும் நாலு" என்றேன். நான் சொன்னதும் நடந்தது. அதை லார்டு இர்வினும் சரி, இந்தியா மந்திரியும் சரி, ஒத்துக்கொண்டனர். ஆனால் சமஸ்தான கவர்ன் மெண்டாரோ நான் அவ்வாறு சொன்னது பிசகென்றனர். ஜனமித் திரன் ஆசிரியர் அதைப் பிரசுரம் செய்ததற்காக அவர் மேல் வழக் கும் தொடர்ந்தனர். அஸெஸர்கள் ஏகோபித்து குற்றவாளியல்ல வென்று அபிப்பிராயம் தெரிவித்தும் அவர் தண்டிக்கப்பட்டார்.

காலம்சென்ற ஸ்ரீமான் சுந்தரேச சாஸ்திரிகள் இவ்வூர் சிறிய ஊரென்றும், இவ்வூரில் முன்னணியில் வந்து வேலை செய்பவரை ஜனங்கள் மதியாமல் இழிவாகவே பேசுவார்களென்றும் கூறுவது வழக்கம். இவ்வூரில் ஐந்து வருஷம் சேர்ந்தாற்போல் பத்திரிகை நடத்தியதே ஓர் பெரிய விஷயமாகும். இனி அரசாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் சண்டை ஒன்றும் நேராதென்று நினைக்கின்றேன். ஜனங்களும் அரசாங்கமும் சேர்ந்து இன்னும் அதிகமாக ஒத்து ழைக்க வேண்டும். பத்திரிகைக்கு 500 அல்லது 600 சந்தாதார்க ளே யிருக்கிறார்கள். இன்னும் சந்தாதார்கள் அநேகர் சேரவேண் டும். ஜனங்களும் பத்திரிகைகள் மூலம் தங்கள் குறைகளைத் தெரிவிக்க வேண்டும். பத்திரிகைக்குச் செல்வாக்கும் அதிகாரமும் அதிகரிக்கும். பத்திரிகை ஸ்தாபித்து நடத்திய முதல் மனித னுக்கு என்றும் அழியாப் புகழிருக்கும். இவ்விஷயத்தில் மகா ராஷ்டிரத்தில் காலஞ்சென்ற லோகமானிய திலகர் ஸ்தாபித்து, மகாராஷ்டிர பாஷையிலேயே நடத்திவரும் "கேஸரி"க்கு எவ்வ ளவு கீர்த்தி உண்டோ அவ்வளவு கீர்த்தி ஜனமித்திரனுக்கும் உண்டு. இச்சமஸ்தானத்தில் பத்திரிகையை முதன் முதல் ஸ்தா பித்த (pioneer) புகழ் ஸ்ரீமான் S. விசுவனுதய்யருக்கேயாகும். பத்திரிகையினால் பலவிதத்திலும் க்ஷேமம் ஏற்பட்டிருக்கிறது. சரி யான பத்திரிகையில்லாத அரசாங்கம் தலைவிரிகோலமாய் ஆடும் என்பதில் சந்தேகமில்லை. பத்திரிகையை விருத்தி செய்து, இன் னும் சிறப்பாக நடத்துமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்." (கர கோஷம்).

பின்னர் ஸ்ரீமான் A. மகாலிங்கய்யர் பத்திராதிபருக்கும், ஸ்ரீமான் A. குப்புஸ்வாமி அய்யங்கார் அக்கிராஸனருக்கும் மாலை சூட்டினர். ஸ்ரீமான் குப்புஸ்வாமி அய்யங்கார் அக்கிராஸனருக்கு வந்தனோபசாரம் சொல்ல கூட்டம் கலைந்தது.

28-வது அத்தியாயம்.

ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயரவர்களுக்கு வரவேற்பும் பாராட்டும்.

ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயரவர்களுக்கு நல்வரவு கூற சமஸ்தானப் பொதுஜனங்கள் 25–10–29 மாலை 5-மணிக்கு

டவுன் ஹாலில் கூடினர்; சுமார் 1000 ஜனங்களுக்குக் குறைவில்லை. ஸ்ரீமான் G. சுந்தரேச அய்யரவர்கள் ஸ்ரீமான் K. சாமிநாதய்யரவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி பிரேரணை செய்ய, ஸ்ரீமான் S. ரத்னசாமி அய்யர் ஆமோதிக்க, ஸ்ரீமான் சாமிநாதய்யரவர்கள் தமது ஆஸனத்திலமர்ந்து, முன்னுரையாக அடியில் வருமாறு பேசினர்:—

"இன்று தினம் ஓர் சுதினமாகும். வருண பகவானும் கிருபை செய்திருக்கிறார். நாம் எதற்காக இங்கு கூடியிருக்கிறோமென்பது நீங்கள் நன்கறிந்ததே. இதே இடத்தில் ஆறுவது மகாநாடு ஸ்ரீமான் S.சத்தியமூர்த்தி ஐயரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அம்மகாநாட்டின் எதிரொலியாக ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்கள் சமஸ்தானத்திற்குள் வரமுடியாமல் தடையேற்பட்டு, அத்தடை இப்பொழுது நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டது. நாமெல்லோரும் நமது நன்றியைத் தெரிவிக்கும்பொருட்டே இங்கு கூடியிருக்கிறோம். ஸ்ரீமான் ஐயரவர்கள் என்ன தியாகம் செய்திருக்கிறாரென்பதை நான் இப்பொழுது எடுத்துரைக்கப் போவதில்லை. ஆனால், நாம் அவரது உழைப்பால் சௌகரியம் அடைந்திருக்கிறோம். சுதேச சமஸ்தானங்களின் வார்சு பாத்யப் பிரச்னை ஓர் மஹத்தான பிரச்னையாகும். காலஞ்சென்ற மன்னர் உயிருடனிருந்தபொழுதே ஸ்ரீமான் சத்தியமூர்த்தி நமது சமஸ்தான வார்சு பாத்யப் பிரச்னையைக் கிளப்பினர். இப்பிரச்னையின் முடிவை சாதக பக்ஷிபோல் நாமெல்லோரும் கவலையுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தோம். இக்கட்டிடத்தில் நடைபெற்ற மகாநாட்டில் தீர்மானித்தபடியே வைசிராய் அவர்களும், இந்தியா மந்திரி அவர்களும் வார்சு பாத்திய பிரச்னையை நிர்த்தாரணம் செய்தது நம்மெல்லோருக்கும் சந்தோஷத்தை அளித்திருக்கிறது. மகாநாட்டில் எல்லோரும் ஏகமனதாக முழுவதும் இந்து இரத்தம் ஓடும் ராஜாவே வேண்டுமென்றனர். அதிகாரிகளுக்கு அதிக கசப்பு ஏற்பட்டதென்பதில் ஐயமில்லை. காரணபூதர்களை ஹிம்ஸித்தார்கள். ஆனால் பழங் கதையை நினைக்கவோ, துக்கப்படவோ காரணமில்லை. ஏனெனில், சந்தோஷப்படவே நாம் இங்கு கூடியிருக்கிறோம். நீங்கள் எல்லோரும் விஜயம் செய்திருப்பது எனக்குச் சந்தோஷம். இச்சமயத்தில் சமஸ்தானப் பிரஜை ஒருவர் அக்கிராசனராயிருந்தால் நலமாயிருக்கும். ஆனால் நானும் இயன்றவரை சமஸ்தானப் பிரஜைகளுடன் ஒத்துழைத்து வருகிறேன். சட்ட சபை அங்கத்தினர்களில் சிலர் அரசாங்கத்தாரிடம் தூது சென்றோம். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயரவர்களின் தடை நிவர்த்தி விஷயமாக எடுத்துரைத்தோம். எங்கள் வேண்டுகோளுக்கிணங்கி அரசாங்கத்தார் தடையை நிவர்த்தி

செய்தனர். அதற்கு நாம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் கள். சமஸ்தானத்தில் சேர்ந்தாற்போல் மழை பொழியாததற்குக் காரணம் என்னவென நான் யோசித்தேன். வருண ஜபமும் வைத்துப் பார்த்தேன். அரசாங்கத்தாரின் இக்கையய நீதியால் தான் மழை பொழிகின்றதென நான் நம்புகிறேன்."

பின்னர் அக்கிராஸனர் ஸ்ரீமான் S. விசுவநாதய்யரைப் பேசும்படி கேட்டுக்கொள்ள, அன்னார் பின்வருமாறு பேசினார்:— "வந்தேமாதரம். இச்சுபதினத்தில் ஓர் பெரியாரின் ஞாபகம் எனக்கு வருகிறது. காலஞ்சென்ற சுந்தரேச சாஸ்திரிகள் அவர் களையே நான் குறிப்பிடுகிறேன். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்ய ரவர்களுடன் எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்படும்படி செய்தது அவர்தான். பிரகிருத சட்டசபை ஏற்படுவதற்கு முன்னர் ஜனப் பிரதிநிதி சபை ஒன்றிருந்தது. அச்சபைக்கு ஓர் சங்கம் ஏற் பட்டு ஸ்ரீமான் சாஸ்திரியளவர்கள் அதற்குத் தலைவராகவும், அடியேன் காரியதரிசியாகவும் வேலை செய்துவந்தோம். வருஷா வருஷம் பொதுஜனங்களின் கூட்டம் ஒன்று அவசியமெனத் தெரிந்து, பூவரசகுடியில் சமஸ்தானப் பிரஜைகளின் முதல் மகா நாடு நடைபெற்றது. இம்மகாநாட்டிற்கு ஸ்ரீமான் சுந்தரேச சாஸ்திரிகள் அவர்கள் அக்கிராஸனம் வகித்தார். அப்பொழுது மகாநாட்டிற்கு அக்கிராஸனம் வகிக்கும் கௌரவம் ஸ்ரீமான் சத்தியமூர்த்திக்கே உரியதென ஸ்ரீமான் சாஸ்திரிகள் கூறினர். அவ்விதமே இரண்டாவது மகாநாடு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் தலைநகரில் கூடியது. அம்மகாநாட்டில் வார்சு பாத்யப் பிரச்னை கிளப்பப்பட்டது. இப் பிரச்னையும் இப்பொழுதுதான் தீர்ந்தது. ஸ்ரீமான் அய்யரவர் களின் தேச சேவையைப்பற்றி அதிகம் எடுத்துரைக்கத் தேவை யில்லை. சென்னை சட்ட சபையிலும் சரி, செனெட் சபையிலும் சரி, ஸிண்டிகேட்டிலும் சரி, ஸ்ரீமான் அய்யரவர்கள் சாமர்த்தி யத்தையும், சிரத்தையையும் பரக்கக் காணலாம். ஒழுங்குடனும் கட்டுப்பாட்டுடனும் எடுத்த காரியத்தை வெற்றிகரமாய் முடிக்கக் கூடிய அரிய திறன் அவரிடம் அதிகம். எடுத்த காரியத்தை மங்களகரமாக முடித்துவைக்கும் சிங்கம் என்று அவரை கூறுவது மிகையாகாது. நமது தேசத்திற்காக அவர் அரும்பாடு பட்டி ருக்கிறார். 1921-ம் வரு முதல் முதலாக தேசப்பிரஷ்டம் செய் யப்பட்டார். காரணம் மகத்தான வார்சு பாத்ய பிரச்னையே யாகும். ஸ்ரீ பிருகதம்பிகையின் கியாதி மங்காமல் நிலைநிற்ப தற்கு ஸ்ரீமான் அய்யரவர்கள் போட்ட விதையே காரணமாகும். சர்வ ஜனங்களின் மனத்தையும் ஆகர்ஷித்துக்கொண்டிருந்த விஷயத்தையே அவர் எடுத்துரைத்தார். இரண்டும் இரண்டும்

நான்கு என அவர் கூறினர்; மாஜி அரசாங்கத்தார் ஐந்தென்றனர். ஆனால் இந்திய அரசாங்கத்தார் நான்கென ஒப்புக்கொண்டு விட்டார்கள். ஈசுவர கிருபையால் புதிய அரசாங்கம் ஏற்பட்டு, சமஸ்தான நிர்வாகிகளும் நல்லுணர்ச்சியுடன் நமது வேண்டு கோளுக்கிணங்கி தடையை நிவர்த்தி செய்தனர். உடனே அய்ய ரவர்களுக்குத் தெரிவித்தேன். மழை பொழிந்தாலல்லாது சமஸ் தானத்திற்கு வரமாட்டேன் எனப் பிடிவாதமாக இருந்தார். மழையும் பொழிந்தது. நானும் எழுதினேன். ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அவர்களும் எழுதினர். எங்களது வேண்டு கோளுக்கிணங்கி ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயாவர்கள் சமஸ்தா னத்திற்கு விஜயம் செய்ய ஒப்புக்கொண்டார். புதிய அரண்மனை பிரவேசம் செய்யப்பட்டபொழுது ஸ்ரீமான் ராகவய்யா பந்துலுகாரு இராஸ்த்வெயிட் துரையவர்களே மன்னருக்கு முதல் நண்பரெனக் கூறினர். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அவர்களே மகா ராஜா அவர்களின் முதல் நண்பரென நான் கூறுவேன்."

பின்னர் சட்ட சபை மெம்பர்களான ஸ்ரீமான் முத்துராம வேளாளரும், ஸ்ரீமான் கல்லசிவம் செட்டியாரும், ஸ்ரீமான்களான M. நாராயணஸாமி அய்யர், K. நாகராஜய்யர், G. சுந்தரேசய்யர், A. குப்புஸாமி அய்யங்கார், R. V. சுப்பிரமணிய அய்யர் ஆகிய இவர்களும் பேசினர். ஸ்ரீமான் சுந்தரேசய்யரவர்களின் நீண்ட பிரஸங்கத்தின் அடியிற்கண்ட பாகம் குறிப்பிடத்தக்கது.

"சகோதரர்களே! 1898-ம் வரு முதல் ஸ்ரீமான் சத்திய மூர்த்தி ஐயரவர்களை எனக்கு நன்றாய்த் தெரியும். அவர் சீமைக் குப் போய்த் திரும்பிய பிறகு களங்கம் ஏற்பட்டதாய் சிலர் கருதி னர். ஜாதிப்பிரஷ்டம் செய்துவிடுவார்களோ வென்ற பயமிருந் தது. நான் ஒரு (Dinner party) சாப்பாட்டுக்கு ஏற்பாடு செய்து, ஸ்ரீமான் சத்யமூர்த்தியையும் வரவழைத்தேன். எல் லோரும் சாப்பிட்டனர். பலர் தங்களை அழைக்கவில்லையெனப் புகார் செய்தனர். காலஞ்சென்ற சித்தரஞ்சன தாஸுடன் இந்தியாவெங்கும் சென்று, கதராடை புனைந்து காட்டிற்கு உழைத் தார். நான் ஸ்ரீமான் ஐயரை திருக்குற்றாலத்தில் கண்டு, புதுக் கோட்டைக்கு வரும்படி கோர, மகாநாட்டிற்கு ஏற்பாடு செய்தா லொழிய வரமாட்டேனென்றார். மகாநாட்டிற்கு ஏற்பாடு செய் தேன். ஆனால் இம்மகாநாட்டினால் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யருக்கு இன்னல் ஏற்படுமெனத் தெரிந்திருந்தால், தலையிட்டி ருக்க மாட்டேன். ஸ்ரீமான் ஐயர் அவர்களுக்கு தேச பக்தி அதிகம். இரண்டாவது மகாநாட்டிற்குப் பிறகு அவருக்கு பக்ஷிகார உத்திரவு ஏற்பட்டது. நாங்கள் தொடை நடுங்கிகள் தான். ஸர் சங்கரன் நாயரை பக்ஷிகார உத்திரவு விஷயமாய்

அபிப்பிராயம் கேட்டேன். உத்திரவு அதேதமென்று கூறினர். நாங்கள் வேறு என்ன செய்வது? மாத்தூருக்கருகாமையில் அடுத்த மகாநாட்டைக் கூட்டலாமாவென யோசித்தேன். இரண்டாம் முறை தடையேற்பட்ட பிறகு, யூனிவர்ஸிடி கமிஷனுடன் சமஸ்தானத்துக்கு வரலாமாவென என்னைக் கேட்டார். பரீக்ஷை செய்ய வேண்டாம்; வரவேண்டாம் என நான் எழுதினேன். தேருக்கு முட்டுக்கட்டை போடுவதுபோல் நான் யுத்த மும்மரத்தில் முட்டுக்கட்டை போடுவதுண்டு. ஏனெனில், முட்டுக்கட்டை யில்லையேல் அபாயம் நேரிடுவது நிச்சயம். இரண்டாவது மகாநாட்டு அக்கிராஸனப் பிரஸங்கத்தை ஒருவரும் மகாநாடு கடைபெறுவதற்கு முன் படித்துப் பார்க்கக்கூடாதென ஸ்ரீமான் ஐயரவர்கள் ஆக்ஞாபித்திருந்தார். ஆனால் ரகசியமாக நான் அதைப் பிரித்துப் பார்த்தேன். வார்சு பாத்ய விஷயமாய் எழுதியிருந்ததைக் கண்ணுற்றேன். அம்மகாநாட்டிற்கு விசேஷ காரிய தரிசிகளாயிருந்த ஸ்ரீமான்களான P. V. ரெகுநாதய்யர் அவர்களிடமும், S. சுப்பிரமணிய அய்யரவர்களிடமும் ஆபத்தைத் தவிர வேறு ஒன்றும் வராதென்று கூறினேன். ரயிலில் பிரயாணம் செய்யும்பொழுது பலர் என்னுடைய ஊர் முதலிய விருத்தாந்தங்களைக் கேட்பதுண்டு. எனது ஊர் புதுக்கோட்டையென்று கூறினால், "சத்யமூர்த்தியின் புதுக்கோட்டையா?" எனக் கேட்பதுண்டு. சட்ட சபையில் தெற்கு முகமாய் உட்காராமல், வடக்கு முகமாய் ஸ்ரீமான் ஐயர் உட்கார்ந்திருந்தால் எவ்வளவோ பணம் சேர்த்திருக்கலாம். ஆனால் மதிப்பு ஏற்பட்டிராது. 'தோன்றில் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவனார் வாக்கியப்படி அவருக்குப் புகழும் கியாதியும் எங்கும் ஏற்பட்டிருக்கிறது. அவர் மிகவும் தைரியசாலி. அரிய தியாகம் செய்திருக்கிறார். அவரது உற்றார் உறவினர் அவரைப் பிழைக்கத் தெரியாதவரென என்னிடம் கூறுவதுண்டு. உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசும் வழக்கம் அவரிடம் கிடையாது."

எட்டு சட்ட சபை மெம்பர்களும், இரண்டு நியாயவாதிகளும் பேசி முடிந்தவுடன் அக்கிராஸனரவர்கள் ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயரவர்களை பதிலளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரவர்கள் பின்வருமாறு பேசினர்:—

"'ஜனனி ஜன்ம பூமிஸ்ச ஸ்வர்க்காதபி கரீயஸி'. புதுக்கோட்டை எனது ஜன்ம பூமியாகும். இந்த ஊரில்தான் எனது தகப்பனார் பாண்டித்யம் பெற்று வக்கீல் தொழில் நடத்திவந்தார். பின்னர் அவர் எனது தாயாரையும், என்னையும், எனது சகோதரர்களையும் விட்டுவிட்டு இறந்துவிட்டார். மிகவும் ஏழை

யாய், கட்டிக்கொள்ளத் துணியில்லாமல், சம்பளமில்லாமல் Free scholar ஆக இந்த ஊர் பள்ளிக்கூடத்தில் படித்து மூன்னுக்கு வந்தேன். இச்சந்தர்ப்பத்தில் நீங்கள் எனக்கு அளித்த மஹத்தான உள்ளன்புடன் கூடிய கௌரவத்திற்கு எனது மனமார்ந்த வந்தனத்தைச் சமர்ப்பிக்க அசக்தனாயிருக்கிறேன். எனக்குப் பல விடங்களில் மரியாதை செய்யப்பட்டும், எனது வீட்டில் என் தாயார் "அப்பா வா" என்று கூறுவதுபோல் என் சஹோதரர்களாகிய நீங்கள், வாயார, மனமார ஸ்தோத்திரம் செய்து மரியாதை செய்தீர்கள். இதற்குக் கைமாறாக, இந்த ஒரு ஜன்மமல்ல, இரண்டல்ல, பல கோடி ஜன்மங்கள் எடுத்து, எனது தோலைத் தங்களுக்கு செருப்பாய்த் தைத்தபோதிலும் ஈடாகாது. திரிகரண சுத்தமாய்ப் பேசுகின்றேன், நம்புங்கள். எனது பெரியோர்கள் செய்த பாக்கியத்தினால், தவப்பயனால், நீங்கள் என்னை மரியாதை செய்தீர்கள். நீங்கள் என்னைத் தங்களது செல்வக் குழந்தைபோல் பாலூட்டித் தாலாட்டிய பின்னர், நீலாம்புரியில், 'கண்ணே கண்வளராய்' என்று என்னைத் தூங்கும்படி செய்வீர்களாயின் எனக்குப் பரம சந்தோஷம். ஆனல் அவ்விதம் செய்வது உங்களுக்குத் திருப்தியை அளிக்காதென்பதை அறிந்து சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன்.

இச்சமயத்தில் அன்பே உருவாயெடுத்த எனது அரிய நண்பர் ஸ்ரீமான் G. சுந்தரேச சாஸ்திரிகள் இல்லாததைக் குறித்து நான் மிகவும் துக்கிக்கிறேன். அவரிடம் பல குறைகள் இருந்திருக்கலாம். ஆயினும் அவரது தேசபக்தியையும், புன்சிரிப்பையும் இனி எங்கு காண்பேன்? அவர் வம்சம் விருத்தியாயிருக்க வேண்டும்.

முதல் முதலாக என்னை சமஸ்தான மகாநாட்டிற்கு அக்கிராஸனராய் அழைத்தபொழுது வார்சு பாத்யம் நிச்சயமாய் ஸ்ரீமான் சிட்னி மார்த்தாண்டாவுக்கே போய்விடுமென்று நம்பியிருந்தேன். ஆகையால்தான் இவ்விஷயத்தை முதல் முதலாக அம்மகாநாட்டில் ஆரம்பித்தேன். அக்கிராஸனப் பிரஸங்கத்தையும் ரகஸியமாய் வைத்திருந்தேன். ஆனல் ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அதைப் பார்வையிட்டதாக இப்பொழுதுதான் தெரிகின்றது. நல்ல வேளையாக அவர் எல்லா புஸ்தகங்களிலும் அப்பகுதியை அடிக்காமல் இருந்தது பற்றி சந்தோஷிக்கிறேன். வார்சு பாத்ய விஷயம் ஜனங்கள் மனதிலும் இருந்தது. ஜனங்கள் மனதில் இருப்பதை உள்ளபடி வெளியிட்டால் இப்பூவுலகம் ஸ்வர்க்கமாகி விடும். முதல் முதலாக பிரகதம்பிகையைப் பிரார்த்தனை செய்துதான் எழுதினேன். எனக்கு பஹிஷ்கார உத்திரவு பிறப்பிக்கப்பட்டது. ஆனல் அன்று முதல் இன்றுவரை இவ்வுத்தரவைப்

போட்டவர் சமஸ்தான எல்லைக்குள் வரவில்லை. நான் வந்துவிட்டேன். இதெல்லாம் பிரதம்பிகையின் சங்கல்பம். சிட்னி சார்பாக மகஜர்கள் பல வாங்கப்பட்டன. அதிகார அமுலையும் உபயோகித்து கையெழுத்துகள் வாங்கப்பட்டதாகக் கூறப்பட்டது. காலஞ்சென்ற மன்னரும் தமது செல்வாக்கைச் சீமையில் உபயோகப்படுத்தினர். ரீஜன்ஸி ஏற்பட்ட பிறகு, சிட்னி மார்த்தாண்டாவுக்குப் பட்டமில்லையென்று ஏற்பட்ட பிறகு, பஹிஷ்கார உத்தரவை மாற்றினர்கள். இத்துடன் இப்பிரச்னையை முடிக்காமல், சபலத்தினால் மீண்டும் இப்பிரச்னையைக் கிளப்பினர். ஆறுவது மகாநாட்டில் இவ்விஷயமாய் நான்கு அல்லது ஐந்து பேர்களைத் தவிர எல்லோரும் பூர்ண இந்து இரத்தமுள்ள ஒரு தொண்டமான் வம்சத்தினரையே வாரிசாக நியமிக்கவேண்டுமென்று தீர்மானித்தனர். ஆக்ஷேபித்தவர்களுக்கும் பதில் சொன்னேன். இதில் என்ன தவறு? வெகு காலங் கழித்து, இதற்கு என்னையும், ஜனமித்திரனையும் ஹிம்ஸிக்க ஏற்பாடு செய்தார்கள். ஸ்ரீமான் ராமச்சந்திர தொண்டமானிடத்தில் பணமிருந்தால் நிச்சயமாய் பட்டம் அவருக்குக் கிடைத்திருக்கும். எனது குழந்தையின் அப்தபூர்த்திக்கு ஒரு முறை அவர் நான்கு அல்லது ஐந்து ரூபாய்களுக்கு பாவாடை தைத்துக் கொடுத்தார். இந்த லஞ்சத்திற்குத்தான் நான் வேலை செய்தேன் போலும். ராமச்சந்திர தொண்டமான் உதார குணமுடையவர். மேலும் சொத்துக்கு உரிமையுடையவனுக்கு அதைக் கொடு என்று கூறுவது நியாயமே யாகும். ஆனால் அவரது பெயரை நான் வைசிராயை பேட்டி கண்டபொழுது பிரஸ்தாபிக்கவில்லை. கொள்கையைத்தான் நான் எடுத்துரைத்தேன். வார்சு பாத்ய முடிவு ஏற்பட்ட பின்னரும் பத்திரிகைகளுக்கு நான் விடுத்த செய்தியில், கொள்கை வெற்றி பெற்றதைக் குறித்து சந்தோஷித்தேனேயல்லாது, வார்சு பாத்தியதை அடைந்த நபர் சம்பந்தமாய் துக்கிக்கவோ, சந்தோஷிக்கவோ இல்லை. மகாராஜா அவர்களை நேற்று நான் பார்த்தேன். நல்ல தேஜஸ் முகத்தில் இருக்கிறது. நாளடைவில் இச்சமஸ்தானத்தை நன்றாய் ஆளுவார் என்பதில் சந்தேகமில்லை.

* * *

மகாராஜா அவர்களுக்கு வெள்ளைக்கார அம்மை நியமித்திருப்பதுபற்றி பலருக்கு சங்கையிருப்பதாய்த் தெரியவருகின்றது. நிற பேதத்தினால் மாத்திரம் நான் ஒரு முடிவிற்கு வர முடியாது. வெள்ளைக்காரர் துர்க்குணத்தை விட்டுவிட்டால், எனக்கு அவர்களிடத்தில் பிரியம் அதிகம். அந்த அம்மாளுக்கு இக்குழந்தையை நல்ல ஹிந்துவாய் பழக்கவேண்டுமென்ற

எண்ணமிருக்கின்றது. நானும் அந்த அம்மாளிடத்தில், "அம்மா, எங்களுக்கு இவ்விஷயத்தில் மிகுந்த அநுபவம் உண்டு. நாங்கள் ஏற்கனவே அநுபவித்தவர்கள். ஜாக்கிருதையாய் கவனிக்க வேண்டும்." என்றேன். அவ்வம்மையார் மிகுந்த ஜாக்கிரதையெடுத்துவருவதாகக் கூறினர். மன்னரின் தாயாரையும் பேட்டி கண்டு பேசினேன். அந்த அம்மாள் தமது நன்றியைத் தெரிவித்து, குழந்தை ஜமனராயிருப்பதால், மேஜராகும் வரை என்னுலியன்ற பணியைச் செய்யவேண்டுமெனக் கூற, நானும் அவ்விதமே கார்த்துக்கொண்டிருப்பதாய்க் கூறினேன்.

* * *

சமஸ்தானத்தில் பரிபூர்ண பொறுப்பாட்சிக்குப் பாடுபட வேண்டும். பிரிட்டிஷ் இந்தியாவிற்கு சுயராஜ்யம் கிடைக்கும் பொழுது, சுதேச சமஸ்தானங்களும் சுயராஜ்யம் பெற, இந்தியா விளங்கும். அப்பொழுது சமஸ்தானத்திற்கும் பிரிட்டிஷ் இந்தியாவுக்கும் எத்தகைய சம்பந்தமிருக்க வேண்டுமென்ற விஷயத்தில் நீங்கள் கவனத்தைச் செலுத்தவேண்டும். உங்களுடைய நிர்வாக சபைத் தலைவர் இது விஷயமாய் பம்பாய்க்குச் சென்றிருந்தார். நீங்களும் இவ்விஷயத்தைப்பற்றி யோசிக்கவேண்டும். பட்லர் கமிட்டியின் சிபார்சுகளில், சுதேச மன்னர்கள் சர்வாதிகார பீடத்துடன் நேர்முகமான சம்பந்தம் வைத்துக்கொள்ள வேண்டுமென்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. என்னிடத்தில் உங்களுக்கு உண்மையான அன்பிருந்தால், அடுத்த மகாநாட்டை கூட்டக் குறைந்தது 50 பேர்களாவது இப்பொழுதே கையெழுத்துச் செய்யவேண்டும். இல்லையேல் நான் இதே இடத்தில் இருப்பதேன் யல்லாது, எனக்கு ஊண் உறக்கம் கிடையாது. மேலும் சட்ட சபைக் கக்ஷிக்கும் ஏற்பாடு செய்யவேண்டும். தேவையானால் நான் உங்களுடன் ஒரு மாதம் வரை தங்கி, கிராமங்களுக்குச் சென்று இக்கட்சியை ஸ்தாபிக்கப் பாடுபடுவேன்."

அக்கிராஸனரின் முடிவுரை.

ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்கள் நிகழ்த்திய முடிவுரை பின்வருமாறு:— "ஸ்ரீமான் சத்யமூர்த்தி ஐயர் சபதங் கூறிய பின்னர் எனக்குக் கவலை ஏற்பட்டுவிட்டது. ஆனால், அதனால் நன்மைதான். கையெழுத்துகள் வாங்கும் வேலை ஸ்ரீமான் ஐயர் கூறியவுடன் துரிதமாய் கடைபெற்றுவருவதைப் பார்க்க எனக்குக் கவலை ஒழிந்தது. நமது சமஸ்தானத்தில் பொறுப்பாட்சிதான் பாக்கியாயிருக்கின்றது. பொறுப்பாட்சியென்றால் மன்னர்கள் வேண்டாமென்பதில்லை. மன்னர்கள் ஐக்தாம் ஜார்ஜைப்போன்று Constitutional monarchs ஆயிருக்கவேண்டும். மன்னர்கள்

சமஸ்தான வருவாய்களைத் தங்களது சொந்தம்போல் பாவிக்கிறார்கள். இந்த மனோபாவம் அறவே ஒழியவேண்டும்.

புதிய நிர்வாக சபையுடன் நாங்கள் ஒத்துழைத்துத்தான் வருகின்றோம். நிர்வாக சபை அங்கத்தினர்களும் தேசத்திற்குப் பாடுபடக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். மாஜி கவர்ன்மெண்டுடன் நாங்கள் ஒத்துழைக்கவில்லை. இதற்குக் காரணம் எல்லோரும் நன்கறிந்ததே. ஸ்ரீமான் R. V. சுப்பிரமணிய அய்யர் எனது தொழிலை விட்டுவிடும்படி கூறினர். எனது சொற்படி கேட்க பத்துப்பேர் வந்தால் தொழிலை விட்டுவிடுகிறேன். பின்பற்ற ஒருவருமில்லாமல் தலைவர்கள் என் செய்வது?

பிரிட்டிஷ் இந்திய சகோதரர் சமஸ்தான வாஸிகளை மறந்து விட்டனர். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயரவர்கள் சென்னையில் சுதேச சமஸ்தானப் பிரஜைகளின் மகாநாட்டைக் கூட்ட ஏற்பாடு செய்தார். இதன் மூலம் இப்பொழுது காங்கிரஸில் கூட சுதேச சமஸ்தானப் பிரச்னை கவனிக்கப்பட்டு வருகின்றது. பத்திரிகைகள் பிரசார வேலை செய்து, வாக்குரிமையைச் செலுத்தத் திறனுள்ளவர்களாக ஜனங்களைச் செய்யவேண்டும். சமீபத்தில் கூட்டப்போவதாகப் பிரஸ்தாபிக்கப்படும் Round Table Conferenceக்கு சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதியாய் ஸ்ரீமான் S. சத்தியமூர்த்தி ஐயரவர்கள் செல்ல அங்கீகரிக்க வேண்டும். அவர் ஒப்புக்கொள்ளவில்லையேல், இந்த ஹாலை விட்டுப் போகக் கூடாதென நான் சபதம் கூறுவேன்.

சட்டசபைக் கட்சி சமஸ்தானத்திற்கு அவசியந்தான். ஒரு கட்சியை ஸ்தாபிக்க நான் பிரயாசைப்பட்டேன். கட்சியும் நிருவப்பட்டது. ஆனால், அக்கட்சி பின்னர் சரிவர வேலை செய்யவில்லை.

நான் திருவனந்தபுரம் மகாநாட்டிற்குச் சென்றபொழுது ஸர் M. விசுவேசுவரய்யா அவர்களிடம் பேசிக்கொண்டிருந்தேன். அன்னர், 'Pudukotah must be great because it has produced a Sathiamurthy', 'புதுக்கோட்டை சமஸ்தானம் ஒரு சத்தியமூர்த்தியை ஈன்றிருப்பதால், அது ஒரு மகிமை பெற்ற சமஸ்தானம்' எனக் கூறினர். ஒரு இடத்திலும் பேசும்பொழுது பரவசத்திற்கு அவர் இடம் கொடுப்பதில்லை. ஆனால் நம்மூரில் பேசும்பொழுது மாத்திரம் அவரை அறியாமல் பரவசம் பொங்கித் ததும்புகிறது. இதற்குக் காரணம் அவரது ஜன்மபூமி வாத்ஸல்யமேயாகும். ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயரவர்களைப் புகழ்ந்து பேசுவதால் இனி யாதொரு அபாயமும் நேர்ந்துவிடாது. இனி பொதுச் சங்கங்களின் பணத்தை ஸ்ரீமான் சத்யமூர்த்தி அவர்

களின் உபசாரத்திற்குச் செலவழிக்கலாமோவென்ற சங்கை வேண்டாம்.''

பின்னர் அடுத்த மகாநாட்டைக் கூட்டுவதாக ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டவர்களின் பெயர்கள் வாசிக்கப்பட்டன. அடுத்த மகாநாட்டைக் கூட்ட ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்கள் அக்கிராஸனராகவும், ஸ்ரீமான்களான G. சுந்தரேசய்யர், S. விசுவநாதய்யர், R. அருணாசல அம்பலகாரர், ஜனாப் மு. அ. அப்தர் ரகீம் சாகேப், காரியதரிசிகளாகவும் ஒப்புக்கொள்ளப்பட்டனர். ஸ்ரீமான்களான S. விசுவநாதய்யரும், G. சுந்தரேசய்யரும் வக்கீல் சமூகத்திற்கும், கூட்டத்திற்கு விஜயம் செய்த கனவான்களுக்கும், ஸ்ரீமான் K. ஸ்வாமிநாதய்யரவர்களுக்கும், ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயரவர்களுக்கும் தக்கபடி வந்தனமளிக்க, ஸ்ரீமான்களான ஸ்வாமிநாதய்யரவர்களுக்கும், சத்தியமூர்த்தி அவர்களுக்கும் பூமாலை சூட்ட, கரகோஷங்களுடன் கூட்டத்தின் நடவடிக்கைகள் இனிது முடிந்தன.

29-வது அத்தியாயம்.

ஏழாவது மகாநாடு.

புதுக்கோட்டை மகாஜனங்களின் 7-வது மகாநாடு 1930-ம் வரு ஜனவரி மீ 10-உ பகல் 1-30 மணிக்கு புதுக்கோட்டை டவுன் ஹாலில் ''ஹிந்து'' பத்திரிகையின் பெயர்பெற்ற ஆசிரியர் ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்களின் அக்கிராஸனத்தின் கீழ் நடைபெற்றது. மகாநாட்டில் உபசரணைக் கமிட்டி அங்கத்தினர்களும், பிரதிநிதிகளும், விஸிட்டர்களும் பிரஸன்னமாயிருந்தார்கள். விஸிட்டர்களில் முக்கியமாய் சமஸ்தான நிர்வாக சபைப் பிரஸிடெண்டாகிய திவான் பஹதூர் T. ராகவய்யா பந்துலுகாரு C. S. I. அவர்களும், சமஸ்தான திவான் ராவ் சாகேப் G. கணபதி சாஸ்திரிகள் B. A., B. L. அவர்களும் விஜயம் செய்திருந்தது குறிப்பிடத்தக்கது.

ஆரம்பத்தில் 5-சிறுவர்கள் தேசிய கீதங்கள் பாடினார்கள், பிறகு மகாநாடு தொடங்கியது.

மகாநாட்டின் காரியதரிசியான ஸ்ரீமான் V. சத்யமூர்த்தி அய்யர் B. A., B. L. மகாநாட்டிற்கு திவான் பஹதூர் M. ராமச்சந்திர ராவ் B. A., ஸ்ரீமான் S சத்யமூர்த்தி அய்யர் B. A., B. L., M. L. C., ஸ்ரீமான் K. நாகராஜய்யர் B. A., B. L.,

ஸ்ரீமான் A. S. நாகரத்னம், இவர்கள் அனுப்பிய செய்திகளைப் படித்தனர்.

பின்னர் மகாநாட்டின் வரவேற்புக் கமிட்டி தலைவரான ஸ்ரீமான் K. சாமிநாதய்யர் M. A., B. L., M. L. C. தம் முடைய வரவேற்புப் பிரஸங்கத்தை ஆங்கிலத்தில் படித்தார். அதைப் படிக்கும்பொழுது அந்தப் பிரஸங்கத்தின் அச்சிட்ட இங்கிலீஷ் பிரதிகளும், தமிழ் மொழிபெயர்ப்புப் பிரதிகளும் சபையோர் அனைவருக்கும் வழங்கப்பட்டன. அப்பிரஸங்கத் தின் முக்கியமான சில பகுதிகள் பின்வருவனவாகும்:—

பூர்வ பீடிகை.

"சகோதரப் பிரதிநிதிகளே! கனவான்களே!

இந்த முக்யமான தறுவாயில் தாங்கள் என்னைத் தங்களது பிரதிநிதியாகத் தெரிந்தெடுத்ததின் மூலம் என்னை கௌரவித்த தற்கு முதலெடுப்பில் தங்களுக்கு எனது வந்தனத்தைச் செலுத்துகின்றேன். இந்த கௌரவம் உங்களால் அளிக்கக் கூடிய மிக்க உயர்ந்த கௌரவம் என்பதை நான் அறிவேன்; ஆனால் இந்த கௌரவத்தை ஏற்றுக்கொள்பவருக்கு மகத்தான பொறுப்பு—என்னால் நிர்வகிக்க முடியாதென என்னை அஞ்சு விக்கும் பொறுப்பு—ஏற்பட்டிருக்கின்றது. என்மீது சுமத்தப்பட் டிருக்கும் பொறுப்பைத் தகுந்தபடி நிர்வகிப்பதில் எனக்குள்ள குறைகளை நான் நன்கறிந்தும், (தாங்கள் தங்களுக்குத் தெரிந்த காரணங்களைக்கொண்டு) எனக்கு இந்த கௌரவத்தை யளிப்பது சரியெனத் தோன்றி யளித்த கௌரவத்தை மறுப்பது மரியாதை யன்று என்ற எண்ணத்தின் பேரில் ஒப்புக்கொண்டேன். நான் உங்கள் மத்தியில், உங்களுடன் சேர்ந்துக்கிப் பார்க்குமிடத்து, ஒரு அன்னியனு யிருந்தபோதிலும், எனது வாழ்நாளின் பெரும் பகுதியை இந்த சமஸ்தான ஜனங்களின் சேவையில், உத்தியோக தோரணையில் பொதுஜன சேவகனாகவோ, அல்லது ஏகதேசத் தில் பொதுஜனங்களின் சேவகனாகவோ அர்ப்பணம் செய்திருக் கிறேன். இந்த இருபது வருஷ காலத்திற்குள்ளும், அதற்கு மேலும், இவ்விடத்தை எனது ஜன்ம பூமியாகச் செய்துகொண் டேன்; தங்களுடைய பக்ஷத்தை நான் மிகுதியாக அநுபவித் தேன்; என்னால் இயன்ற அளவு ஒரு சிறிதாவது தாங்கள் என் மீது காட்டியுள்ள நிதர்சனமான பிரியத்திற்குக் கைம்மாறு செய்யாவிடின் மகத்தான நன்றி மறந்த குற்றத்திற்கு ஆளாவே னதலின், எக்குற்றத்தைக் காட்டிலும் அக்குற்றத்திற்கு எந் நாளும் நான் உடன்படேன்.

வரவேற்புக் கமிட்டி அக்கிராஸனர் என்ற முறையில் எனது கடமைகளைச் செய்வதில், நீங்கள் எதிர்பார்க்குமளவு நான்

செய்யாமலிருக்கலாம்; ஆனல் எவ்விதத்திலாவது நான் உங்களுக்கு ஏமாற்றத்தை அளித்தால், அக்குற்றம் உங்களுடையதே யாகும். நீங்கள் இதுகாலே என்னையும், எனது குறைகளையும் நன்கறிந்திருக்க வேண்டும். ஏனையவிடங்களேப்போன்று இவ் விடத்திலும் ராஜீய விஷயங்களில் ஈடுபடாமலிருப்பதில் சந்தோ ஷித்து, தங்கள் தங்களது சொந்தக் கவலைகளையும், சஞ்சலங்களை யும் மாத்திரம் கவனிக்கும் ஒரு சிறு பகுதியினர் இருக்கின்றனர். ஆனல், ஒரு இந்திய சமஸ்தான ஜனங்களுக்குக்கூட ராஜீய விஷய மான ஆலோசனே சர்ச்சை செய்வதிலிருந்து விலக்கப்பட்ட விஷய மல்ல. உண்மையில் உங்கள் ராஜீய நிலேமை குறைகூறக்கூடிய தாக இருக்கும் வரை எந்த வழியிலும் நீங்கள் சீர்திருத்தமடைய முடியாதென்பதை உணர்ந்திருக்கிறீர்கள்.

சென்ற மகாநாடு.

இது நமது ஏழாவது ராஜீய மகாநாடாகும். சமஸ்தானத் தில் பிறந்து வளர்ந்தவரும், நமது யோகக்ஷேமத்தில் சிரத்தை யும், கருத்தும் கொண்டவரென நம்மால் பாராட்டப்பட்டவரு மான ஸ்ரீமன் S. சத்யமூர்த்தி அய்யர் அவர்களின் சிறப்பு வாய்ந்த அக்கிராசனத்தின் கீழ் இதற்கு முந்திய மகாநாடு இதே கட்டடத்தில் நடைபெற்று மூன்று வருஷங்களுக்கு மேலாகி விட்டன. அவரது பெயர் எல்லோர் மனதையும் வசீகரித்தது; இன்றைக்கு நமது சமஸ்தானம் அநேக இதர இந்திய சுதேச சமஸ்தானங்களைக் காட்டிலும் வெளியில் அதிகமாகத் தெரியப் பட்டிருக்கிறதென்றல், அதற்கு நமது சமஸ்தானம் ஒரு சத்திய மூர்த்தியை உலகத்திற்குத் தந்திருக்கிறதே காரணமாகும். 1920-ம் வருஷத்தில் இந்த ராஜீய இயக்கத்தை உற்பத்தி செய்த வர்களின் கருத்தானது நாம் பிரதி வருஷமும் மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்பதேயாகும். அதை அனுசரித்து முதல் ஐந்து மகாநாடுகளும் நான்கு வருஷ காலத்திற்குள்ளாக, ஒன்றன் பின் ஒன்றாக வெகு சீக்கிரத்தில் நடத்தப்பட்டன. ஆனல், ஐந்தா வது மகாநாட்டிற்கும், ஆறுவது மகாநாட்டிற்கும் இடையே வெகு காலமாக மகாநாடு கூட்டப்படாமல் ராஜீய வேலேயில் நமக்கு அக்கரை சிறிது காலம் குன்றியதுபோலத் தோற்றியது. இவ் வாறு வீணுக்கிவிட்ட காலத்திற்கு ஈடு செய்யவும், ஜனங்களின் பிரியம் வாய்ந்த தலேவராகிய ஸ்ரீமான் G. சந்தரேச சாஸ்திரி கள் அவர்களின் பிரிவால் ராஜீய உணர்ச்சிக்கு ஏற்பட்ட நித்ரா அவஸ்தையிலிருந்து விழித்துக்கொள்ளும்படி செய்வதற்கே போலவும் மகாநாட்டை மறுபடியும் கூட்டி உயிர்ப்பிப்பதற்காக ஸ்ரீமான் சத்யமூர்த்தி அய்யர் அவர்களே 1926-ம் வரு டிசம்பர் மீ கூடிய மகாநாட்டிற்குத் தலேமை வகித்து தேசப்பணி செய்

யும்படி ஜனங்கள் அன்னைரைக் கேட்டுக்கொண்டனர். எனது நண்பராகிய ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அச்சமயம் உபசரணைக் கமிட்டி அக்கிராஸனராயிருந்து, எப்பொழுதும்போல் அவர் சுவ பாவமாக எல்லா விஷயங்களையும் நன்கறிந்து, அப்போதைய நிலைமையையும் செவ்வனே உணர்ந்து, அதற்குத் தக்கவாறு எல்லாவற்றையும் எடுத்துக்காட்டி மிக்க பரிசிரமம் எடுத்துக் கொண்ட பயனாக அம்மகாநாடு சிறப்புடன் நடைபெற்றது.

காலஞ்சென்ற மன்னர்.

நாம் கடைசியாக 1926-ம் வரு டிஸம்பர் மீ கூடிய பின்னர், நமது சமஸ்தானத்திலும், இதற்கு வெளியிலும் மிகவும் முக்கிய மான, என்றும் மறக்க வொண்ணாத பல சம்பவங்கள் நிகழ்ந்திருக் கின்றன. முதலாவதாக 1928-ம் வரு மே மீ 28உ பாரிஸில் நமது காலஞ்சென்ற, பிரியம் வாய்ந்த மன்னர் இறந்தமையால் நமக்கேற்பட்டிருக்கும் மகத்தான நஷ்டத்தை நான் குறிப்பிட வேண்டும். அவரது நீண்டகால 42-வருஷ அரசாட்சியில், அவ ரது நேர்முகமான ஆட்சியின் பயனை நாம் ஒரு சிறிதும் அனுப விக்க நமக்கு கொடுத்து வைக்கவில்லை. அவரது அரசாட்சியின் முதல் 8-வருஷங்கள் வரை அவர் மைனராயிருந்தபடியால், அர சாங்க நிர்வாகத்தில் தீவ்ரமாய் ஈடுபட முடியாமலிருந்தார்; கடைசி ஆறு வருஷங்களாக 1922-ம் வரு அக்டோபர் மீ 23உ அவர் தன்னல மறுப்புடன் வெளியிட்ட ராஜ விளம்பரம் மூலம் நிர்வாகக் கவலையிலிருந்து தாமாகவே விலகிக் கொண்டார். இடையிலுள்ள 28-வருஷங்களில் அவர் பெரும்பான்மையும் சமஸ்தானத்திற்கு வெளியிலும் உடல்நல நிமித்தம் வசித்து வந் தார். ஆதலின் அவரது பிரஜைகளில் வெகு சிலரே அவ்வை நேர்முகமாய் அறிந்து, அவரது மதி நுட்பத்தையும், விசால ஹிருதயத்தையும் பாராட்ட சந்தர்ப்பமிருந்தது. இருந்தாலும் அவருடன் நெருங்கிப் பழகும் உரிமையும், நற்பாக்கியமும் எனக்குக் கிடைத்தது. ஒரு மிகவும் நல்ல, புத்திசாலித்தன மான, சாமர்த்தியமுள்ள மனவானுக்குத் தேவையான விசேஷ மான அம்சங்களெல்லாம் அவரிடம் பொருந்தியிருந்தன வென் பதை நான் எடுத்துச் சொல்லக்கூடும். அவர் மிகவும் உதார குணமுள்ளவர்; அவரது பிரஜைகளிடத்தில் அவருக்குப் பிரே மையும் பிரியமும் மிக அதிகம். ஆனால், அவர் தம் நாட்டில் தங்கி அரசு புரியவில்லையாதலின், அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஸ்தலத்திலுள்ள மந்திரிகளையே பூராவும் நம்ப வேண்டிய நிர்பந்த மிருந்தது. ஜனங்கள் அவரது கஷ்டங்களை நன்குணர்ந்து, எப் பொழுதும் அவரிடத்தில் ஆழ்ந்த ராஜவிசுவாசத்தைக் காண்பித் தனர். இதற்கு ருஜூத் தேவையாயின், 1913-ம் வரு நடை

பெற்ற வெள்ளி விழாக் கொண்டாட்டமானது, அவரிடத்திலும், அவரது சிம்மாஸனத்தின் மீதும் அவரது பிரஜைகளுக்கிருந்த இயற்கையான ராஜவிசுவாஸத்திற்குப் போதிய சான்றாகும். அச்சமயத்தில் அவர் வெளியிட்ட உத்கிருஷ்டமான எண்ணங்கள், அவரது பிரஜைகளால், சிறந்த அரசனும் கனவானுமான அவருக்கேற்ற ஞாபகச் சின்னமாக என்றென்றைக்கும் கருதப்படும். இத்தகைய மன்னர் திடீரென உயிர் நீத்ததில் நமது துக்கம் மிகவும் உண்மையானதும் மனப்பூர்வமானதுமென்பதுடன் அவரது பிரிவால் ஏற்பட்டருக்கும் நஷ்டம் ஈடு செய்யக் கூடாததாகும்.

இருந்தபோதிலும் அவரது வெள்ளி விழாவின் ஞாபகார்த்தமாக பப்ளிக் ஆபீஸுக்கு முன்பாக காலஞ்சென்ற மன்னரது உருவச்சிலையை ஸ்தாபிக்க ஏற்பாடு செய்து, இவ்வுருவச்சிலையும் சமீபத்தில் கவர்னர் ஜெனரலின் ஏஜண்டால் திறந்துவைக்கப்பட்டு, நமது சமஸ்தானம் பலவிதங்களிலும் முன்னேற்றமடையும்படி காருண்யமாய் அரசுபுரிந்த நமது மன்னரைக் காணும்படி நமக்கு ஏற்பட்டது சற்று ஆறுதலைத் தரும்.

வார்சு பாத்யப் பிரச்னை.

காலஞ்சென்ற மன்னர் மரணத்துடன், அவரது 23—10—1922உ ராஜவிளம்பரத்தினால் ஏற்படுத்தப்பட்ட ரீஜென்ஸி ஆட்சியும் முடிவிற்கு வரவேண்டிய அவசியமேற்பட்டு விட்டது. அடுத்தபடியாக அரியணை யேறுபவர் யாரென நமக்கு நிச்சயமாய்த் தெரியாததால், காலஞ்சென்ற மன்னர் இறந்தவுடன் நமது நிலைமை மிகவும் தெளர்பாக்கியமான நிலைமையாயிருந்தது. 1920-ம் ஸ்ரு முதல் 1928-ம் ஸ்ரு வரை சமஸ்தானத்தில் தொந்திரவுக்கும், குழப்பத்திற்கும், இடுக்கண்களுக்கும் மூல காரணமாயிருந்த மனக்கிலேசத்தைக் கொடுத்த சமஸ்தான வார்சு பாத்யப் பிரச்னை என் மனதைக் கவர்கின்றது. மன்னர் உயிருடனிருந்தபொழுதே இப்பிரச்னை உயிருள்ள பிரச்னையில்லையெனினும், இரண்டாவது மகாநாட்டில் அதன் அக்கிராசனர் ஸ்ரீமான் S. சத்யமூர்த்தியால் இவ்விஷயம் தர்க்கிக்கப்பட்டது. நல்ல வேளையாக, அவர் இந்த வெகு முக்கியமான பிரச்னையின் பேரில் உண்டுபண்ணிய சிரத்தையாலும், அதி தீவ்ரமான கிளர்ச்சியாலும், சமஸ்தான வார்சு பாத்யப் பிரச்னை சமஸ்தானத்தின் எதிர்காலத்தில் கருத்துக்கொண்ட அனைவரின் மனத்தையும் ஆகர்ஷித்து, சர்ச்சை செய்யப்பட்டுவந்த பிரச்னையாகிவிட்டது. காலஞ்சென்ற மன்னர் சமஸ்தானத்திலிருந்து நிரந்தரமாய் வெளியே வசிக்கும்படி 1922-ம் ஸ்ரு தீர்மானித்த முடிவிற்குக் காரணமான "ராஜீயக் காரணங்களும் சொந்தக் காரணங்களும்"

என்னவென்பதை, சமஸ்தானப் பிரஜைகளைத் தமது நம்பிக்கையில் எடுத்துக்கொண்டு கூறவில்லை. ஆனால், அவரது குமாரனது வார்சு பாத்யதையை சர்வாதிகாரபீடம் ஒப்புக்கொள்ளவில்லையென்று கூறப்பட்ட காரணமாய்த்தானிருக்கவேண்டுமென்று சுலபமாய் ஊகிக்கத்தக்கதாயிருந்ததுடன், அவ்விதமே ஜனங்களும் ஊகித்தனர். அநேகமாய் அதே சமயத்தில், சமஸ்தானத்தில் சேமித்து வைக்கப்பட்டிருந்த கையிருப்பு நிதியிலிருந்து 20-லக்ஷம் ரூபாய் காலஞ்சென்ற மன்னருக்குக் கொடுக்கப்பட்டது. ஆனால், அவருக்கு ஏற்பட்ட அல்லவன்ஸுகளை அவர் க்ரமமாய்ப் பெற்றுக்கொண்டு வந்தும், இத்தகைய பெருத்த நிதி ஒருமொத்தமாய் அவருக்குக் கொடுபட்டதின் காரணம் பகிரங்கமாய்க் கூறப்படவில்லை. மேலும், அவரது குமாரனின் வார்சு பாத்யதைகள் அங்கீகரிக்கப்படாததற்குப் பர்த்தியாக மேற்கண்ட தொகை கொடுக்கப்பட்டதாக நம்பப்பட்டது. 1922-ம் வருஷத்திலேயே வார்சு பாத்யப் பிரச்னை முடிவாக சர்வாதிகார பீடத்தினால் தீர்மானிக்கப்பட்டிருக்கவேண்டுமென்றுதான் நினைக்கவேண்டியிருந்தது. ஆனால், சர்வாதிகாரபீடத்தினால் ஏதேனும் தீர்மானம் ஏற்பட்டதா என்பதை ஜனங்கள் நிச்சயமாய் அறிய ஒருவித சாதனமுமில்லை. ஆதலின் கிளர்ச்சி தொடரப்பட்டுவந்து, 1928-ம் ஜூன் மே மாதம் எதிர்பாராதபடி பிரச்னை உண்மையாகவே உயிருள்ள பிரச்னையாகிவிட்டது. தர் அநிர்ஷ்டவசமாக இப்பிரச்னையானது ஜனங்களுக்கும், அப்பொழுதைய அரசாங்க நிர்வாகிகளுக்கும் பரஸ்பரம் மனக்கசப்பையும், வேற்றுமையையும் அக்கால முழுவதும் உண்டுபண்ணியது. இந்த ஹிந்து சமஸ்தானத்தின் எதிர்கால அரசர் பூராவும் இந்து இரத்தக் கலப்புள்ள பக்கா ஹிந்துவாகவே இருக்கவேண்டுமென சமஸ்தான ஜனங்கள் எல்லோரும் அநேகமாய் ஏகமனதாய் விரும்பினர் என்பதில் ஒருசிறிதும் சந்தேகமில்லை. ஆனால், ஜனங்களின் இத்தகைய அபிப்பிராயத்தை வெளியிட முடியாதபடி தடுக்கி அடக்க சாத்யமான முறைகளையெல்லாம் கைக்கொள்ள ரீஜென்ஸி அரசாங்கம் விரும்பியது. இந்த விவாதத்தில் மாஜி ரீஜெண்ட் தமது சகோதரரான அரசரின் குமாரனுக்குச் சார்பாகக் கலந்துகொண்டது மன்னிக்கத்தக்கது. ஆனால் அவர், தோற்றுக்கொண்டிருந்த கட்சிக்கு வலுக்கொடுக்க முயன்றிருந்தென்பதை நன்கறிந்திருக்க வேண்டும். மேலும், பொதுஜன அபிப்பிராயத்தைத் தடைசெய்ய முடியாதென்பதை அவர் நன்குணர்ந்து அவ்விதம் பிரவர்த்திக்காமலிருந்திருப்பின், உசிதமாயிருந்திருக்கும். ரீஜென்ஸி நிர்வாகத்தின் ஜனப்ரியத்தின் பெரும்பான்மைக்குக் காரணமென்னவெனில், அக்கரையுள்ள ஒரு சிலர் காலஞ்சென்ற மன்னரது குமாரனின் கட்சியை ஆதரிக்கத்

தூண்டப்பட்டபொழுது, மற்றொரு கட்சியினர் தங்களது அபிப் பிராயங்களை யாதொரு அப்யங்கா முமன்னியில் எடுத்துரைக்க அவர்களுக்கு ஸ்வாதந்தர்யமளிக்கப்படவில்லை யென்பதேயாகும். எவர் அரியணையேறிய போதிலும், காலஞ்சென்ற மன்னரின் குமாரர் அரியணையேறும்படி அநுமதிக்கப்படக்கூடாதென ஆக்ஷேபித்தவர்களின் மீது, ஒரு நவீன அரசாங்கத்தின் ஆயுத சாலையிலுள்ள செக்ஷன் 144 கி. பு. கோ. முதலியன போன்ற பாணங்கள் பிரயோகிக்கப்பட்டன. இந்த மிகவும் முக்கியமான பிரச்னையில் ஜனங்களின் அபிப்பிராயம் என்னவென்பதை பகி ரங்கமாய் தெரியாமலிருக்கும்படி ரீஜென்ஸி நிர்வாகம் எவ்வளவு தான் சாமர்த்தியமாய்ப் பிரயத்னப்பட்ட போதிலும், ராஜப் பிரதிநிதியும், இந்தியா மந்திரியும் இப்பிரச்னை சம்பந்தமாய் ஜனங்களது அபிப்பிராயத்தை அறியாமலில்லை. 1928-ம் ஹு நவம்பர் மாதம், சமஸ்தான அரியணையேற ஒரு பூரா ஹிந்து இரத்தக்கலப்புள்ள தொண்டமான் சர்வாதிகார பீடத்திலுல் தெரிந்தெடுக்கப்பட்டதாகப் பிரகடனம் செய்யப்பட்டதானது, எல்லோராலும் மகிழ்ச்சியுடனும், சந்தோஷ ஆரவாரத்துடனும் வரவேற்கப்பட்டது. அவர்களது தீர்மானம் மிகவும் நியாயமான தென்றும், சரியானதென்றும் ஒப்புக்கொள்ள ஜனங்கள் சந்தோ ஷப்படுகின்றனர். புதுக்கோட்டை ஓர் சிறிய சமஸ்தானமா யிருக்கலாம்; இந்திய மன்னர்களின் மரியாதைக் கிரமத்தில் புதுக்கோட்டை சமஸ்தான மன்னருக்கு 11-குண்டுகள் மாத்தி ரம் மரியாதையாக ஏற்பட்டிருக்கலாம். ஆனால் ஒரு சமஸ்தான மன்னர் வேறு ஜாதி, மதத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீயை மணந்துகொண்டால், வாரசு பாத்யதையை நிர்த்தாரணம் செய் வதில் சுவனிக்க வேண்டிய கொள்கைகள் சம்பந்தமாய் எல்லா இந்திய சுதேச சமஸ்தானங்களுக்கும் புதுக்கோட்டை சமஸ் தானம் ஓர் உதாரணத்தை ஏற்படுத்தி யிருக்கின்றது. இனி எதிர்காலத்தில் இந்திய சிம்மாஸனங்கள் கலப்பு ஜாதியினரால் நிரப்பப்பட்டுவிடுமோவென்ற பயமில்லை. நமது சமஸ்தானம் சம்பந்தப்பட்ட மட்டில், ஒரு நீண்ட கடுமையான விவாதத்தின் பயனாக பல ஜனங்களுக்கும் திருப்திகரமான தீர்மானம் ஏற்பட் டிருக்கின்றது. நமது சமஸ்தானத்தில் ஓர் அதிர்ஷ்டவசமாய் வெகு காலம் வரை வியாகூலத்தைக் கொடுத்த இப்பிரச்னையைப் போல், ஆளுபவர்களையும் ஆளப்படுபவர்களையும் முரணான இரு திறப்புக் கட்சியினராகப் பிரிக்கக்கூடிய வேறு எத்தகைய பிரச் னையும், சமீப காலத்திற்குள் ஏற்பட இடமில்லை. புதிய மன்னர் அரியணை யேறிய முதற்கொண்டு, ஜனங்களின் நன்மை ஒன் றையே பெரிதென மதித்து உழைக்கக்கூடிய நிர்வாகத்தின் கீழ்,

சம்பூர்ணம், சம்பத்து நிறைந்த ஓர் புதிய சகாப்தம் உதயமாகு மென எதிர்பார்க்கிறோம்.

ரீஜென்ஸி நிர்வாகம்.

கடந்த ரீஜென்ஸி ஆட்சியை ஈண்டு சுருக்கமாய் ஆராய்ச்சி செய்யலாம். 30-வருஷ காலம் வரை சமஸ்தானத்தில் பல ஹோதாக்களில் வேலை செய்து, அனுபவமும் திறமையும் வாய்ந்த நிர்வாகியான மாஜி ரீஜெண்டவர்களிடத்தில் எனக்குள்ள மதிப்பும், மரியாதையும் ஒருவருக்கும் குறைந்ததில்லை. பண விஷயத்தில் அவர் எப்பொழுதும் மிக்க ஜாக்கிரதையுள்ளவராதலின், சமஸ்தானப் பணத்தை வெகு ஜாக்கிரதையான வீட்டுக்குடைய வன்போல் நிர்வகித்து வந்தார். அவர் பல சமயங்களில் ஜனங்களை சமஸ்தான நிர்வாகத்தில் படிப்படியாய்ச் சேர்த்துக்கொள்ள விரும்புவதாய்க் கூறினார். பிரகிருத சட்ட நிர்மாண சபை 1924-ம் வருஷத்தில் அவரால் சட்ட ரீதியாக அமைக்கப்பட்டது. கிராமப் பஞ்சாயத்துக்கள், மூலாதாரக் கல்வி, கிராமக் கோர்ட்டுகள் முதலியனவைகளை அபிவிருத்தி செய்யக்கூடிய திட்டங்கள் அவரால் சட்டப் புத்தகத்தில் அமைக்கப்பட்டன. அவர் மாசற்ற கரும்பலகையைப் போன்று நன்கு ஆரம்பித்தார். அவரது ஆட்சியின் முற்பகுதி மிகவும் சௌஜன்யமாயிருந்தது. ஆனால், 1926-ம் ஹை ஆரம்ப முதற்கொண்டு, பலரறிந்த விஷயமாதலின் ஈண்டு எடுத்துரைக்கவேண்டிய அவசியமில்லாத பல காரியங்களை அவர் உத்தியோக தோரணையில் செய்த காரணத்தினால் ஓர் எதிர்பாராத நிலைமை யேற்பட்டது. அவரது ஆட்சியின் பிற்பகுதியை என்றுமில்லாதபடி, பொதுஜன அபிப்பிராயத்தை அடக்க முயன்ற ஆட்சியெனக் கூறலாம். அப்பொழுது கையாளப்பட்ட கொள்கையின் பல முறைகளைப்பற்றி விரிவாய் எடுத்துரைப்பது அனுவசியமென்பதுடன், எடுத்துரைப்பதால் ஒரு பிரயோஜனமும் ஏற்படாது. ஆனால், இதைப்பற்றிப் பிரஸ்தாபிக்கையில், உள்ளூர் தமிழ் வாரப் பத்திரிகையான 'ஜனமித்திரன்' பத்திரிகையின் பால்யமான, சாமர்த்தியம் வாய்ந்த பத்திராதிபர் ஸ்ரீமான் P. S. சுப்பிரமணிய அய்யரின் மீது ராஜத்துவேஷக் குற்றத்திற்காக வழக்குத் தொடர்ந்து, அவரை தண்டித்ததையும், அவரது சகோதரர் ஸ்ரீமான் S. விசுவனாதய்யர் B. A., M. L. C. அவர்கள் மீது தொடரப்பட்ட ஜாமீன் நடவடிக்கைகளையும், அச்சுக்கூடச் சட்டத்தை மீறியதாய்க் கூறப்பட்ட குற்றத்திற்காக இக்குடும்பத்தின் மூன்றுவது சகோதரரான ஸ்ரீமான் S. ராமனாதன் மீது வழக்குத் தொடரப்பட்டதையும், குடும்பத்தின் மற்றொரு சகோதரரான ஸ்ரீமான் S. வெங்கடேசுவரய்யர் B. A. அவர்களிடமிருந்து டிப்டி தாசில்தார்

உத்தியோகத்தைக் கட்டாயத்தின்பேரில் ராஜீனாமாச் செய்யும் படி செய்ததையும், மற்றொரு உள்ளூர் தமிழ் வாரப் பத்திரிகை யின் ஆசிரியரான ஸ்ரீமான் A. S. நாகரத்தினமய்யரின் மீது பகிஷ்கார உத்திரவு பிறப்பித்ததையும், ஸ்ரீமான் S. சத்யமூர்த்தி ஐயரின் மீது ராஜத்துவேஷமெனக் கூறப்பட்ட குற்றத்திற்காகக் கைது செய்ய மறியற் கட்டளையைத் தயாராய் வைத்துக்கொண்டி ருந்ததையும் நாம் குறிப்பிடலாம். மேற்கூறப்பட்ட குடும்பத் தினருக்கு ஏற்பட்ட பலவிதமான சொல்லொணாக் கஷ்டங்களை நினைக்க மிகுந்த துக்கத்தையும், வருத்தத்தையும் கொடுத்தது. அவர்களது ஒரே குற்றமென்னவெனில், ஒரு பக்காவான ஹிந்து வே சமஸ்தானத்தை அரசுபுரியவேண்டுமென்ற, பின்னர் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கும் கொள்கைக்காக அவர்கள் கடைசிமட்டும் தைரியத்துடன் உழைத்ததேயாகும். சென்ற மூன்று வருஷங் களாக சமஸ்தானத்தில் ஒருவிடத்திலும் மகாநாடு நடைபெறுத தற்கு இதுவே காரணமாகும். எல்லாவற்றையும் கூறும் பொழுது, எதிர்காலத்து சரித்திராசிரியர், ரீஜென்ஸி ஆட்சி நன்கு ஆரம்பித்ததென்றும், ஆனல் படிப்படியாக ஒரு தவறிலிருந்து மற்றொரு தவறுக மாறி மாறிச் செய்து, ஆளுவோருக்கும் ஆளப் படுவோருக்கும் மிகுந்த மனக்கசப்பேற்பட்டதென்றும் குறிப் பிடாமலிருக்க முடியாது. மாஜி ரீஜெண்டவர்கள் தக்க தருணங் களைத் தவறவிட்டது பரிதாபகரமானதென்றும், அவர் மாத் திரம் அவரது ஆட்சியின் ஆரம்பத்தில் போல் பொதுஜனங் களின் நன்மை ஒன்றையே பெரிதென மதித்து வேலை செய்திருந் தால் நவீன புதுக்கோட்டையின் ஸ்தாபகராக சரித்திரத்தின் இதழ்களில் என்றைக்கும் பிரியத்துடன் ஞாபகமிருக்கும்படி அவர் தம்மைச் செய்துகொண்டிருக்கலாமென்றும் வருத்தத்துடன் தெரிவிக்கவேண்டியிருக்கின்றது.

இளம்பிராய நிர்வாகம்

மகா—ரா—ரா—ஸ்ரீ மகாராஜா அவர்கள் இளம் பிராயமாயிருப்ப தால், அவரது கவர்ன்மெண்டின் அரசியல் கொள்கை சம்பந்த மாக ஒருவித உறுதிமொழியும் கொடுக்க முடியாத தெளர்பாக்ய மான நிலையில் நாம் இப்பொழுது இருக்கிறோம். ஒரு மைனரிடி நிர்வாகத்தில் அரசியல் முற்போக்கு சாத்யமில்லையென நாம் கூறப்பட்டால், நாம் கட்டாயமாக 10 வருஷங்களுக்கு மேல் பொறுத்துக்கொண்டிருக்க வேண்டும். சமஸ்தான உள்நாட்டு நிர்வாகத்திற்கு சர்வாதிகார பீடம் குழந்தை மன்னரின் நியாய மான காரியன் என்ற முறையில் நேர்முகமாய் பொறுப்புள்ளது. சமஸ்தானத்தில் ஜனப்பிரதிநிதித்வம் வாய்ந்த ஸ்தாபனங்களின் இயற்கையான வளர்ச்சியில், அவைகளின் நன்மையை அனு

சரித்து இன்னும் சில சீர்திருத்தங்கள் வழங்கவேண்டியது அத்யாவசியமென்ற நிலைமை ஏற்பட்டிருக்கும்பொழுது தற்செயலாய் ஏற்பட்ட மன்னரின் மைனரிடி தசையை ஒரு காரணமாய்க் கொண்டு ஜனங்களின் அபிலாஷைகள், பின்னர் கவனித்துக் கொள்ளலாமென நிராகரிக்கப்படக்கூடாது. பட்லர் கமிட்டி அறிக்கையின் 50-வது பாராவில், மாறுதல் வேண்டுமென எங்கும் வியாபித்த, ஜனங்களால் விரும்பப்படும் கோரிக்கையிருக்கும் பக்ஷத்தில், சர்வாதிகார பீடம், மன்னரை விலக்காமல் அக்கோரிக்கையை திருப்தி செய்விக்கக்கூடிய சீர்திருத்த வழிகளை யோசனை கூறக் கடமைப்பட்டிருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், இத்தகைய பிரசக்தி இதுவரை யேற்படவில்லையென்றும் அவர்கள் கூறியிருக்கின்றனர். இவ்விதம் கூறியிருப்பது சரியென்று ஒரு கணமேனும் ஒப்புக்கொள்ள முடியாது. மாறுதல் வேண்டுமென்று சர்வ ஜனங்களும் விரும்புவதாகத் தெரிவிக்க சீமை வரையில் வெகு தூரம் சென்றவர்களைப் பார்க்க முடியாதென்று கூறிவிட்டு, இத்தகைய பிரசக்தி ஏற்படவில்லையென்று எந்த ஆதாரத்தின் பேரில் கூறினார்களென்பது விளங்கவில்லை. மாறுதலை விரும்பும் பொதுஜன கோரிக்கையைத் திருப்தி செய்ய சர்வாதிகார பீடம் சமஸ்தான அரசியலமைப்பில் எத்தகைய மாறுதல்களைச் செய்யவேண்டுமென்று கருதுகின்றதோ அவைகளைச் செய்ய அனுமதியளிப்பதால் மைனரிடி அரசாங்கத்திற்குப் புறம்பான காரியமில்லையென்பது எனது திடமான அபிப்பிராயம். இச்சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிடுவது பயனளிக்கும். காலஞ்சென்ற மன்னர் 1922-ம் வருஷத்திலேயே விடுத்ததாய் ஏற்கனவே கூறப்பட்ட ராஜவிளம்பரத்தில், கூடிய சீக்கிரத்தில் திவானுடன் தமது பிரஜைகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களை கௌன்ஸிலர்களாக சம்பந்தப்படுத்தலாமென தாம் நம்புவதாகக் கூறியிருந்தார். ரீஜென்ஸி நிர்வாகம் இதை அமுலுக்குக் கொண்டுவர சம்மதப்படாததால், அவரது நம்பிக்கை உருக்கொள்ளவில்லை. ஆதலின் பிரகிருத நிர்வாக சபை, ஜனங்களுக்கு நிர்வாகப் பயிற்சியை அளிக்க நியாயமாய் தேவையான உபாயங்களை அநுஷ்டிப்பதின் மூலம், மன்னர் மைனர் பருவத்தைத் தாண்டி நிர்வாகப் பொறுப்பு அளிக்கப்பட்டவுடன், பொறுப்பாட்சி கிரியாம்சையில் கிடைக்கும்படி ஏற்பாடு செய்யுமென ஜனங்கள் கருதுகின்றனர். இவ்விதம் சீர்திருத்தம் வழங்குவதில் மகாராஜா அவர்கள் குறைகூற இடமேற்படுமோவென சர்வாதிகார பீடம் சந்தேகப்பட வேண்டியதில்லை. ஏனென்றால், பொறுப்பாட்சியை சமஸ்தானத்தில் அவர் வழங்குவதன் மூலம், அவர் ராஜபக்தி காட்டக் கடமைப்பட்டிருக்கும் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தி எவ்விதம்

பிரிட்டிஷ் ராஜ்யத்தில் பூராவும் சட்ட ரீதியான சக்கரவர்த்தியா யிருக்கிறாரோ, அவ்விதமே சமஸ்தானப் பிரஜைகளுக்கும் நமது மன்னர் இருக்கலாம். பத்து வருஷங்களுக்கு முன்பாகவே பொறுப்பு வாய்ந்த ராஜீய நிபுணர்களால், மன்னர்கள் தங்களது அதிகாரத்தை நவீன காலத்திற்குத் தக்கபடி ஜனப்பிரதிநிதி களிடம் ஒப்படைக்கவேண்டுமென புத்திமதி கூறப்பட்டனர். மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியின் அதிகாரத்தைக்காட்டிலும் சிறந்த, சோபையான, என்றும் நிலைநிற்கக்கூடிய வேறு எதை அவர்கள் நினைக்கக்கூடும்? அவ்விதம் அவர்கள் செய்வார்களா என் பதே இப்போதைய கேள்வி. இக்கேள்விக்கு ஆமென விடை யளிக்கப்பட்டுவிட்டால் இந்திய சுதேச சமஸ்தானங்கள் பிரச்னை தீர்ந்துவிட்டதெனக் கூறலாம்.

பொறுப்பாட்சியடைய பக்குவம் செய்துகொள்ளுதல்.

நமது லக்ஷ்யத்தை மன்னரின் ஆதீனத்தின் கீழ் பொறுப் பாட்சியென நாம் தீர்மானித்திருக்கும்பொழுது, நம்மில் பலர் பொறுப்பாட்சியின் உட் கருத்துகளை அறிந்திருக்கிறார்களா என் பதில் எனக்குச் சந்தேகம் உண்டு. நாம் கேட்பதற்காக அது நமக்குக் கொடுக்கப்பட்டுவிடாது; அவ்விதம் சன்மானம்போல் அது அளிக்கப்பட்டபோதிலும், நாம் அதை அடையத் தகுதி யுடையவர்களாகச் செய்துகொள்ளாத மட்டிலும், ஆபத்தாகவே முடியும். அதிகார வர்க்கம் வெள்ளையாயிருந்தபோதிலும், கறுப்பாயிருந்தபோதிலும், அதன் கோட்டையானது சுயநல மென்ற சக்தி வாய்ந்த காவல்காரர்களால் பலமாய் காக்கப்பட்டு வருகின்றதென்பதை நீங்கள் ஞாபகத்திலிறுத்தவேண்டும். பின் னர் இப்பொழுதைய கேள்வி யென்னவெனில், அதை யடைய லாயக்குள்ளவர்களாய்ச் செய்துகொள்ள நாம் எவ்விதம் பிரயத்த னம் செய்யவேண்டும்? முதலாவதாக, எல்லா ஜனங்களும் ஒன்று சேர்ந்து, எப்பாடுபட்டும் அதை அடைந்தே தீருவதென்ற உறுதி யான எண்ணம் வேண்டும். அப்ரஹாம் லிங்கன் காலம் முதற் கொண்டு, ஜனங்களால், ஜனங்களுக்காக, ஜனங்களை ஆளச் செய்வதென்பது ராஜீயக் கோட்பாடுகளில் வழங்கிவரும் சாதா ரணப் பழமொழியாகும். பெர்னர்ட் ஷா சமீபத்தில் தமது வழக்கமான, ஒருவரும் அபிநயம் செய்ய முடியாத, கூரிய, நளின மான நடையில் கூறியுள்ளபடி, ஒவ்வொரு கவர்ன்மெண்டும் ஜனங்களால், வெளிப்படையாய் ஜனங்களுக்காகவே இருக்கின் றது. மேற்கண்ட வசனத்தின் கடைசிப் பகுதியில் கூறப்பட் டிருப்பதை அனுபவிப்பதில்தான் கஷ்டமேற்படுகின்றது. நமது சமஸ்தானத்தையே எடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில், 4½ லக்ஷம் ஜனங்களும் தங்களைத் தாங்களே ஆளமுடியாது; இருந்தபோதி

லும் அவர்கள் உண்மையில் அதிகாரமுடையவர்களாயிருப்பின், மிகவும் பொறுக்கமுடியாத எந்த நிர்வாக கவர்ன்மெண்டையும் நீக்கக்கூடிய நிலைமையிலிருக்க வேண்டும். இதிலிருந்து நிர்வாக கவர்ன்மெண்டு ஜனங்களுக்கும், அவர்களது தெரிந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கும் ஜவாப்தாரியா யிருக்கவேண்டுமென்று ஏற்படுகின்றது. பார்லிமெண்டின் சுயாதிபத்யமானது பிரிட்டிஷ் அரசியலால் ஒப்புக்கொள்ளப்பட்ட ஓர் கோட்பாடாகும்; மேலாட்டு ஸ்தாபனங்களைப் போன்று, அதிலும் நம்மை ஆளும் தேசத்தைப் போன்று, இந்தியாவில் நமது ஸ்தாபனங்களை அமைக்கையில் நமது நாட்டில் அமைக்கப்பட்டிருக்கும் பல பார்லிமெண்டுகள்— அல்லது எவ்விதம் நீங்கள் அழைத்தபோதிலும் சரி—சுயாதிபத்யத்தின் சகல விதமான குண விசேஷங்களையும் பெற்றிருக்க வேண்டுமென்று ஏற்படவில்லையா? விரிவான வாக்குரிமையின் பேரில் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்ட நிரூபண சபையாருக்கு ஜவாப்தாரியாகவும், அச்சபையாரால் விலக்கக்கூடியவுமான ஒரு நிர்வாகமே பொறுப்பாட்சியின் முக்கியமான நிபந்தனையாகும். இங்கு நாம் முதல் முதலாக 1924-ம் வருஷத்தில் ஒரு சட்டசபையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை யளிக்கப்பட்டோம்; நீங்கள் உங்களது வாக்குரிமையை முன்னர் இரு முறை உபயோகப்படுத்தியிருக்கிறீர்கள்; மீண்டுமொரு முறை இவ்வருஷம் உபயோகப்படுத்தப் போகிறீர்கள். நீங்கள் உங்களது வாக்கின் விசேஷத்தைப்பற்றி ஒரு கணமேனும் யோசனை செய்திருக்கிறீர்களா வென்ற ஒரு பட்டவர்த்தனமான கேள்வியைக் கேழ்க்க விரும்புகிறேன். இல்லையென்றே நான் அச்சமுறுகிறேன். நமக்கு ஏற்கெனவே அளிக்கப்பட்டிருக்கும் வாக்குரிமையின் விசேஷத்தை நன்கு அறிந்தாலல்லாது, வாக்குரிமையை மீண்டும் விஸ்தரிக்க வேண்டுமென்று நாம் கோருவது நியாயமாயிராது. உங்களில் சிலர், "சட்டசபை பிரதிநிதம் அமைக்கப்பட்டிருக்கிறபடி ஒரு விதமான அதிகாரமுமில்லாத பொம்மை பார்லிமெண்ட்தானே, இதனால் என்ன பிரயோஜனம் ஏற்படக்கூடும்?" என வினவலாம். ஆனால் எனது விடையென்னவெனில், பொம்மைகளும் பிரயோஜனப்படக்கூடியதே; ஒரு சக்தி வாய்ந்த கைத்துப்பாக்கியை நீங்கள் கையாளுவதற்கு முன்னர் நீங்கள் ஒரு விளையாட்டுத் துப்பாக்கியை அப்யசிக்க வேண்டும். பிரதிநிதி அரசியலில் நாம் எம்மட்டிலும் நமது நிலையையும், நமது சமூகத்தின் நிலையையும் சீர்திருத்த, நமக்களிக்கப்பட்டிருக்கும் சந்தர்ப்பங்களை ஸ்வப்பிரயோஜனப்படுத்திக் கொள்ளுகிறோமோ, அம்மட்டிலும் அரசியலமைப்பு மாறும் ஒவ்வொரு சமயத்திலும் நம்மிடம் நம்பிக்கை கொண்டு அதிகப்படியான அதிகாரங்கள் நம்மிடம் ஒப்புவிக்கப்படுமென நாம் நிச்சயங் கொள்ளலாம். ஆதலின் வாக்குரிமை

யென்பது உங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும் ஓர் புனிதம் வாய்ந்த பொறுப்பென்றும், சட்ட சபைக்கு உங்களது பிரதி நிதிகளாக சுயநலமென்பது ஒரு சிறிதுமின்றி, எந்த ஜனங் களுக்குப் பிரதிநிதிகளாய் விளங்குகிறார்களோ அவர்க ளது உண்மையான நன்மைகள் எல்லாவற்றையும் அதிகரிக்கப் பாடுபட்டு, தங்களது உத்கிருஷ்டமான எல்லாவற்றையும் அர்ப் பணம் செய்யக்கூடிய சரியான நபர்களைத் தெரிந்தெடுக்கும் மூலம் நீங்கள் உங்களது பொறுப்பைத் தகுந்தபடி நிதானித்து ஆற்ற வேண்டுமென்ற உங்களது முக்யமான கடமையை நான் மிகவும் வற்புறுத்திக் கூறுகிறேன். நீங்கள் உங்களது கடமையைச் செய்த பின்னர் மறு தேர்தல்கள் நடைபெறும் வரை உறங்கக் கூடாது. நீங்கள் உங்களது பிரதிநிதிகள் சபையில் செய்யும் வேலையை ஜாக்கிரதையாய் கவனிக்கவேண்டும்; உங்களது பிரதி நிதிகள் உங்களது அபிப்பிராயத்திற்குப் புறம்பாக நடப்பதாய் உங்களுக்கு ஏதேனும் ஒரு சிறிது சந்தேகம் ஜனிக்கும் பக்ஷத் தில், நீங்கள் பொதுக் கூட்டங்களைக் கூட்டி உங்களது கட்டளை யை அவர்களுக்கு அனுப்ப வேண்டும். உங்களது சபைப் பிரதிநிதிகளின் வேலையை நீங்கள் மிகவும் சாவதானமாகவும், ஜாக்கிரதையாகவும் கவனிப்பதன்மூலம்தான் சபை அங்கத் தினர்களுக்குச் சரியான ஒழுக்கமுறைத் திட்டத்தை ஏற் படுத்தமுடியும்.

நமது மன்னர்.

இத்தகைய சந்தர்ப்பத்தில் நான் விரிவாய்க் கவனிக்கக்கூடிய பல விஷயங்கள் இன்னுமிருக்கின்றன; ஆனால், ஏற்கனவே உங் களது காலத்தையும், பொறுமையையும் நான் அதிக்கிரமித்து விட்டதாகக் கருதுவதால், நான் எனது சிற்றுரையை முடிப்ப தற்கு முன்னர், நமக்கு முக்கியமான சில விஷயங்களைப்பற்றி மாத்திரம் மேலெழுந்தவாரியாகப் பிரஸ்தாபிக்க விரும்புகிறேன். பால்யமான மகா-ா-ா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு நாம் எல்லோ ரும் ஆழ்ந்த ராஜவிசுவாஸமுள்ளவர்களாயிருக்கையில், காலக்கி ரமத்தில் அவருக்கு அளிக்கப்படும் பொறுப்பைச் சரிவர நிர்வகிக் கக்கூடியபடி அவருக்குப் பயிற்சி அளிக்கப்படவேண்டிய விதத் தைப்பற்றி நாம் மிகுந்த கவலையுள்ளவர்களாயிருக்கிறோம். ஏற் கனவே நாம் ஒரு முறை மிகவும் அநுபவித்திருப்பதால், இவ் விஷயத்தில் மிகவும் சந்தேகமிருப்பது சகஜம். காலஞ்சென்ற மன்னருக்கு அளிக்கப்பட்ட பயிற்சியின் பயனாக, அவர் பூராவும் மேநாட்டுப் பழக்க வழக்கங்களில் ஈடுபட்டு, நமது நாட்டு ஸ்திரீ ஜாதியினருக்கு அவர் அறியாமல் செய்த அவமதிப்பாயிருக்கும், இந்திய ஸ்திரீ ஜாதியினருக்குள் நமக்குற்ற வாழ்க்கைத் துணைவி

ஒருவருமில்லையென அவர் கூசாமல் கூறினர். நமது குழந்தை மன்னர் ஹிந்து மத நூற்களையும், சாஸ்திரங்களையும் கற்று, வைதிகமான ஹிந்துவாக பயிற்சி செய்விக்கப்பட வேண்டுமென்றும், அவரது கல்வித் திட்டத்தில் சம்ஸ்கிருதக் கல்வியும் ஒரு முக்கிய அங்கமாயிருக்க வேண்டுமென்றும் நாம் விரும்புகிறோம். இவ்விஷயத்தில் ஏதேனும் தவறு ஏற்பட்டால், அதனின்றும் விளையக்கூடிய தீங்குகளை நம்மால் இனி சகிக்க நமக்குச் சக்தியில்லை. காலஞ்சென்ற மன்னர் தமது விவாஹ விஷயத்தில் செய்த தவறுனது, அவரைப் பின்பற்றி சமஸ்தான ஆரியணையை ஏறுபவர்களுக்கு மட்டுமல்லாது, எல்லா இந்திய சுதேச மன்னர்களுக்குமே வழிகாட்டியாயிருக்குமென நான் நம்புகிறேன். தனிப்பட்ட நபர்கள் சம்பந்தப்பட்டமட்டில் விவாஹமானது சொந்த விஷயமாயிருக்கலாம். ஆனால், மன்னர்கள் சம்பந்தப்பட்டமட்டில் விவாஹம் முற்றிலும் வேறான விஷயமாகும்.

முடிவுரை.

கனவான்களே! பிரக்யாதிபெற்ற அரசியல் நியாயவாதியும், மதியூகம் படைத்த தேசாபிமானியுமான நமது அக்கிராசனரின் சேவைகள், நமது ஆலோசனைகளில் நமக்கு வழிகாட்டிச்செல்ல நமக்குக் கிடைத்ததின் மூலம் நாமெல்லோரும் விசேஷமான அதிர்ஷ்டசாலிகளாயிருக்கிறோம். தேசத்தில் தலைமை வகித்து நிற்கும் தேசியப் பத்திரிகையின் பத்திராதிபர் என்ற முறையில் அன்னார் சமூகத்தில் ஓர் இணையற்ற அந்தஸ்தை வகிக்கிறார். அவர் நமக்குச் சரியானபடி வழிகாட்டுவார் என்பதில் ஐயமில்லை. சரக்கு நன்றாயிருந்தால் விளம்பரம் தேவையில்லை; நமது கட்சியின் இயல்பான நியாயமே நமது வெற்றிக்கு ரக்ஷையாகும். நமது உரிமைகளையும், சுதந்தரங்களையும் பற்றி விரித்துரைக்க ஸர் லெஸ்லி ஸ்காட்டைப்போன்ற அதிகப் பணம் பிடிக்கும் நியாயவாதிகள் நமக்குத் தேவையில்லை. ஆனால், நமது மகாநாட்டு அக்கிராசனரைப் போன்ற நிலைமையிலுள்ள ஒருவர் தமது முழு ஆதரவையும் நமது கோரிக்கைகளுக்குக் காண்பிக்க முன்வந்தால், வெற்றி நம்முடையதே. உபசரணைக் கமிட்டியின் சார்பாக உங்களெல்லோருக்கும் இம்மாநாட்டிற்கு நல்வரவு கூறுகின்றேன். உங்களுடைய சௌகர்யங்களுக்காக எங்களால் போதுமானபடி ஏற்பாடுகள் செய்யமுடியவில்லையென்பதை நாங்கள் வருத்தத்துடன் அறிந்திருக்கிறோம். இருந்தபோதிலும், நீங்கள் அன்னியர்களில்லாதபடியால் எங்களை மன்னித்து, எங்களது மனப்பூர்வமான உபசரணையை அங்கீகரிப்பீர்களென நம்புகிறோம்."

ஸ்ரீமான் M. நாராயணசாமி அய்யர் அவர்கள் B. A., B. L. அக்கிராஸனரை மகாநாட்டிற்கு அக்கிராஸனம் வகிக்குமாறு பிரே ரேபிக்கும்பொழுது அக்கிராஸனரின் பிறப்பு வளர்ப்பையும், அவ ரது படிப்பையும் எடுத்துக்காட்டி அவர் இத்தேசத்திற்காக டில்லி சட்ட சபையில் செய்யும் வேலையையும் மெச்சிப் பேசினார். அந்த வருஷம் காங்கிரஸில் பூரண ஸ்வராஜ்யம் வேண்டுமென்று தீர்மானித்து, சட்ட சபை பஹிஷ்காரம் செய்யவேண்டுமென்று முடிவு செய்தபொழுது, ஒரு பெரியவர் அத்தருணத்தில் இம் மாதிரி தீர்மானத்தினால் சட்ட சபைக்கு பூஷணமாயுள்ள அக்கிரா ஸனரைப்போலுள்ளவர்கள் சட்ட சபையில் இல்லாமல்போக நேரிடுமென்று வெகு விசனத்துடன் கூறினதாகவும் தெரிவித் தார். ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் வீடி பிரேரணையை ஆமோ திக்கவே, ஸ்ரீமான்களான R. அருணாசல அம்பலகாரர் M. L. C., முத்துராம வேளாளர் M. L. C., R. V. சுப்பிரமணியய்யர் M. L. C., ஜனப் முகமது இப்ராஹீம், ஸ்ரீமான் நடேச சாஸ்திரி கள் M. L. C. (ஒரு சம்ஸ்கிருத சுலோகத்துடனும்) ஆதரித் தனர். ஸ்ரீமான் K. சாமினுதய்யர் அக்கிராஸனருக்குப் பூமாலை சூட்டினார். அக்கிராசனர் தமது ஆஸனத்திலமர்ந்து தம்முடைய பிரஸங்கத்தை ஆங்கிலத்தில் வாசித்தார். அதன் தமிழ் மொழி பெயர்ப்பை ஈண்டு தருகிறோம்:—

"சகோதர சகோதரிகளே,

நமது தாய்நாட்டின் சரித்திரத்தில் மிகவும் நெருக்கடியான சந்தர்ப்பத்தில் யோசனை செய்யக் கூடியிருக்கிற நீங்கள் என்னை அக்கிராஸனாதிபதியாகத் தெரிந்தெடுத்ததற்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். 1922-ம் வருஷத்தில் உங்களுடைய மகாநாட்டின் தலைமையை வகிக்கும்படி நீங்கள் என்னைத் தெரிந் தெடுத்தபோது, அதை நான் ஏற்றுக்கொள்ளாததற்குக் கார ணம் என்னை மீறியதென்பது உங்களுக்குத் தெரியும். ஆகை யால் அப்பொழுது உங்களுக்கு நேர்ந்த ஏமாற்றத்திற்கு நான் ஜவாப்தாரியல்லவாயினும், அதன் பொருட்டுப் பரிகாரம் செய்ய மறுபடி இந்த சந்தர்ப்பத்தை நீங்கள் எனக்களித்ததற்கு நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

நான் புதுக்கோட்டை சமஸ்தானப் பிரஜையல்லவாயினும், அடுத்தாற்போலுள்ள ப்ரிட்டிஷ் ஜில்லாவில் பிறந்து வளர்ந்தவன்; ஆகையால் இந்த சமஸ்தானப் பிரஜைகளிடத்தில் பல வருஷங்க ளாக நெருங்கிய சம்பந்தமுள்ளவனாக இருக்கிறேன். ஆகையால் எனக்குப் பொதுவாகவுள்ள கடமைகளால இந்த சமஸ்தானப் பிரஜைகளின் லாப நோபங்களை எவ்வளவு கவனிக்கக் கூடுமோ அதைக்காட்டிலும் அதிகமாகக் கவனித்து வந்திருக்கிறேன்.

பழைய ஞாபகங்கள் வருகின்றன. வெகு காலத்திற்கு முன் இந்த சமஸ்தான நிர்வாகப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஸர் அமராவதி சேஷய்யா சாஸ்திரிகள் அடுத்தாற்போலுள்ள ப்ரிட்டிஷ் இந்தியாவில் கடைபெறுவது போன்ற தோரணைகளை இங்கு அநுஷ்டானத்தில் கொண்டுவந்து நிர்வாகத்தை நடத்தி வைக்க வெகு சிரமப்பட்டது எனது ஞாபகத்திற்கு வருகிறது. நிர்வாக முறைகளை அவர் திருத்தி, பட்டணங்களிலும் கிராமங்களிலும் ஜனங்களின் பிரஜா உரிமைகளையும் பொருளாதாரங்களையும் விருத்தி செய்யப் பிரயாஸைப்பட்டார். அக்காலத்தில் அவர் திவானாக விருந்ததல்லாமல், ரீஜெண்டாகவு மிருக்கும்படி நேர்ந்தால், அவருடைய அபிப்பிராயப்படியும், அக்கால அபிப்பிராயப் படியும் பல சீர்திருத்தங்களை அனுஷ்டானத்தில் கொண்டுவர அவருக்கு சௌகரியங்களிருந்தன. இப்பொழுது ரீஜெண்டாக விருக்கிற கனவான் நிர்வாக சபைத் தலைவராகவுமிருக்கிறார்; விசாலமான திருஷ்டி யுடையவர்; பிரஜைகளிடத்தில் அனுதாப முள்ளவர். ஆகையால் இந்த ரீஜெண்டுக்கு முந்தின ரீஜெண்டின் காலத்தில் ராஜா பல வருஷங்கள் சமஸ்தானத்தை எட்டியே பார்க்காமலிருந்துவிடும்படி ஏற்பட்டதும், அவருக்குப் பிறகு யார் வார்ஸ் என்று பல வருஷங்கள் வியவகாரம் நடந்ததும் போன்ற விபரீதங்கள் ஏற்படாமல் ப்ரிட்டிஷ் இந்தியாவில் ஏற் பட்டு வருவது போன்ற ராஜீய அபிவிருத்தி இப்பொழுதுள்ள ரீஜெண்டின் காலத்தில் ஏற்படுமென்றும், சமூதாய வாழ்விலும் பொருளாதாரத் துறையிலும் ஜனங்கள் அபிவிருத்தி அடைவார் கள் என்றும் நாம் நம்புவோம். வழக்கப்படி ரீண்டதோர் அர்த்த ராஸனப் பிரசங்கம் செய்து உங்களுடைய பொறுமையைச் சோதிக்க நான் இஷ்டப்படவில்லை. அதற்கு அவசியமான அவ காசமும் எனக்கில்லை. அப்படி அவகாசமிருந்திருப்பினும், காரி யங்கள் மள மளவென்று கடைபெறும் இக்காலத்தில் வாத சாமர்த்தியத்தைத் காட்டக்கூடிய பிரசங்கங்கள் பயன்படக் கூடியவையல்ல. உங்களுக்கு முக்கியமான பல விஷயங்களைப் பற்றி நீங்கள் வாதிக்க வேண்டியிருக்குமாகையால், பொதுவாக எல்லா சமஸ்தானங்களுக்கும், சிறப்பாக புதுக்கோட்டைக்கும் முக்கியமான இரண்டொரு விஷயங்களைப் பிரஸ்தாபிப்பதுடன் நான் நிறுத்திக்கொள்கிறேன்.

பூரண சுயேச்சை லக்ஷியமும், சுதேச சமஸ்தானங்களும்.

லாகூரில் காங்கிரஸ் நடந்து முடிந்தவுடன் நாம் இங்கு கூடி யிருக்கிறோமாகையால், அச்சபையில் செய்யப்பட்ட தீர்மானங் களைப்பற்றி நீங்கள் யோசனை செய்திருப்பீர்கள்; சமஸ்தானப் பிரஜைகளின் நிலைமைக்கும் அந்தத் தீர்மானங்களுக்குமுள்ள சம்ப

ந்தத்தைப்பற்றி முக்கியமாக நீங்கள் யோசனை செய்திருப்பீர்கள். சென்ற வருஷத்தில் ஸர்வகட்சி மகாநாடு இந்தியப் பிரஜைகளைப் பற்றிய பிரச்சினைகளைப்பற்றி மிகவும் கவலையுடன் யோசனை செய்தது. ஒரு வருஷத்திற்கு முன் கல்கத்தாவில் கூடின காங்கிரஸும் அப்படியே யோசனை செய்தது. நேரு கமிட்டி யாதாஸ்தில் சொல்லப்பட்டிருந்த ஏற்பாட்டைப்பற்றி சமஸ்தானாதிபதிகளும் சமஸ்தானப் பிரஜைகளும் பொதுவாகக் கண்டனம் செய்தார்களாயினும், அதில் சொல்லப்பட்டிருந்த ஏற்பாட்டையும், குடியேற்ற நாட்டரசியலே இந்தியாவின் கோரிக்கை என்று அதில் சொல்லப்பட்டிருந்ததையும் சமஸ்தானாதிபதிகளிலும் அவர்களுடைய பிரஜைகளிலும் புத்திமான்கள் பலர் ஆதரித்தார்கள். அதற்கப்புறம் ப்ரிட்டிஷ் இந்தியாவில் நடந்திருக்கிற விஷயங்களின் பலனாக காங்கிரஸின் ராஜீயப் போக்கு மாறி, பூரண சுயேச்சையே இந்தியாவின் லட்சியமென்று காங்கிரஸ் தீர்மானித்துவிட்டது. சமஸ்தானங்களுக்கும் பாக்கி இந்தியாவுக்கும் பிற்காலத்தில் எப்படிப்பட்ட சம்பந்தமிருக்க வேண்டுமென்பதை நிர்ணயிப்பது இதன் பலனாகக் காங்கிரஸுக்குச் சுலபமாகிவிட்டதாகச் சொல்லலாம். ஆனால் சமஸ்தானாதிபதிகளும் சமஸ்தானப் பிரஜைகளும் இவ்விஷயமாக ஒரு முடிவுக்கு வருவதில் பல சிக்கல்களைக் காங்கிரஸின் தீர்மானம் உண்டாக்கிவிட்டது என்று நான் நினைக்கிறேன். பூரண சுயேச்சையுள்ள இந்தியாவுக்கும் சமஸ்தானங்களுக்கும் எவ்வித சம்பந்தமிருக்கவேண்டுமென்பதை சமஸ்தானங்களின் ஒத்துழைப்பைக் கொண்டோ, அல்லது அதன்னியிலோ, இந்தியா பூரண சுயேச்சையடைந்த பிறகே நிர்ணயம் செய்யக்கூடும். ஆனால் இந்தியா ஏகாதிபத்தியத்தில் அடங்கியோ, அல்லது அதிலிருந்து வெளிப்பட்டோ சுயேச்சை அடையும் வரையில் சமஸ்தானாதிபதிகளுக்கும் அவர்களுடைய பிரஜைகளுக்கும் பிற்காலத்தில் இருக்க வேண்டிய சம்பந்தத்தை அவர்கள் நிர்ணயித்துக் கொள்ளாமல் இருக்கமுடியாது. ப்ரிட்டிஷ் இந்தியாவின் கவர்ன்மெண்டிற்கும் தங்களுக்கும் இருக்கவேண்டிய சம்பந்தத்தை அவர்கள் நிர்ணயித்துக்கொள்ளாமலும் காத்துக் கொண்டிருக்கமுடியாது.

பண்டித ஜவஹர்லால் சொல்லியிருப்பதைக் கவனியுங்கள்:—

> "இந்திய சமஸ்தானங்கள் மற்ற இந்தியாவிலிருந்து ஒதுங்கி நிற்க முடியாது. சமஸ்தானாதிபதிகள் தங்களுக்குள்ள குறைகளை ஒப்புக்கொள்ள இஷ்டப்படாவிடில், அவர்களைப்போல் நினைத்துக்கொண்டிருந்தவர்கள் என்ன கதியை அடைந்தார்களோ அந்தக் கதியை அடையவேண்டியதுதான். சமஸ்தானங்களின் பிற்கால கதியை நிர்ணயிக்கக்கூடியவர்கள் சமஸ்தான ஜனங்கள்தான் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன்.

சமஸ்தான ஜனங்கள் என்பதில் சமஸ்தானாதிபதிகளும் அடங்குகிறார்கள். காங்கிரஸ் கொண்டாடும் சுய நிர்ணய சுதந்தரத்தை சமஸ்தானப் பிரஜைகளுக்கு யார் மறுக்கக்கூடும்? இப்பொழுதுள்ள ஏற்பாட்டிலிருந்து புது ஏற்பாட்டில் திடீரென்று குதிக்காமற் பார்த்துக்கொள்வதற்காக சமஸ்தானாதிபதிகளுடன் கலந்து யோசனை செய்யக் காங்கிரஸ் இஷ்டமுள்ளதாக இருக்கிறது. சமஸ்தானப் பிரஜைகளை எந்த நிலைமையிலும் அலக்ஷியம் செய்து ஒதுக்கிவிடமுடியாது."

என்று ஜவஹர்லால் நேரு சொல்லியிருக்கிறார். இந்தக் கருத்துக்களைப் பொதுவாக நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால், லாகூரில் செய்யப்பட்ட பூர்ண சுயேச்சைத் தீர்மானத்தை உத்தேசிக்கையில் மேற்சொன்ன கருத்துக்களை எப்படிப் பிரயோகத்தில் கொண்டுவரக் கூடுமென்று தெரியவில்லை. காங்கிரஸ் செய்திருக்கிற தீர்மானத்தையும், அது கைக்கொண்டிருக்கிற முறையையும் உத்தேசிக்கையில் திடீரென்று புது ஏற்பாட்டில் குதிக்காமல் பார்த்துக்கொள்ள சமஸ்தானாதிபதிகளும் அவர்களுடைய பிரஜைகளும் காங்கிரஸுடன் கலந்து யோசனை செய்து என்ன முடிவுக்கு வரக்கூடுமென்பது எனக்குத் தெரியவில்லை. பண்டித ஜவஹர்லால் அதை விளக்கவில்லை.

நேரு கமிட்டி யாதாஸ்தில் ஒரு பாகம் மிகவும் தெளிவானது. இந்தியாவின் அரசியல் முறையைப் பூரண ஜனநாயக அஸ்திவாரத்தின் மேல் அமைக்கும்போது, இந்திய சமஸ்தானங்கள் பரம்பரை பாத்யமுள்ள ராஜாக்களைத் தலைவர்களாகக் கொண்டிருக்க வேண்டுமென்றும், அவர்களுக்குத் துணையாக ஜனப்பிரதிநிதிச் சபைகளையும், அச்சபைகளுக்கு ஜவாப்தாரியான நிர்வாக சபைகளையும் உடையனவாக விருக்கவேண்டுமென்றும் சொல்லப்பட்டு வந்த பிரேரணை சமஸ்தானங்களின் தற்கால நிலைமைக்கும் பொருந்தாது; அவைகளின் பிற்கால அபிவிருத்திக்கும் ஏற்றதல்லவென்று அந்த யாதாஸ்தில் வெகு தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது. ஆனால், குடியேற்ற நாட்டரசியல் முறையானது சமஸ்தானப் பிரச்சினைகளை ஒருவாறு தீர்க்க இடங்கொடுக்கிறது; சமஸ்தானாதிபதிகளும் அதற்குச் சம்மதப்படுகிறார்கள். சென்ற அக்டோபர் மாதம் 31-ந் தேதியன்று ராஜப்பிரதிநிதி ஒரு அறிக்கையை வெளியிட்டது முதல், குடியேற்ற நாட்டரசியல் முறையை சமஸ்தானாதிபதிகள் ஆதரிக்க இஷ்டப்படுவதாக அறிவித்திருக்கிறார்கள். ராஜாங்க அமைப்பு சம்பந்தமான இந்தப் பிரச்சினைகளை இப்பொழுது விவாதிப்பதால் பலனுண்டாகக்கூடியதன்று.

சமஸ்தானங்களில் ஜவாப்தாரியான ஆட்சி.

சமஸ்தானப் பிரஜைகளுக்கு ஜவாப்தாரியான அரசியல் முறையைச் சமஸ்தானங்களில் ஸ்தாபிக்கக் காலம் வந்துவிட்ட தென்று காங்கிரஸ் செய்துள்ள தீர்மானத்தை சமஸ்தானாதிபதிகள் ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப நடப்பார்கள் என்றும், பிரஜைகளின் ஜீவாதாரமான உரிமைகளை அவர்கள் அநுபவிக்கப் பாத்யமுடையவர்கள் என்று சட்டமியற்றிவிடுவார்கள் என்றும் நம்புகிறேன். பல கஷ்டங்களை எதிர்பார்க்கக்கூடிய இப்பொழுதுள்ள நிலைமையில், சமஸ்தானங்களில் கர்னாடக தர்பார் நடைபெறும்படி பிற்போக்கான காரியங்கள் செய்யப்படமாட்டாவென்றும், சமஸ்தானாதிபதிகளுக்கு அரசர் பெருமானிடத்திலுள்ள விசுவாஸத்தை முன்னிட்டு இந்தியாவின் ராஜீய அபிவிருத்தியைத் தடுக்க அவர்கள் உபயோகப்படுத்தப்பட மாட்டார்கள் என்றும் நம்புகிறேன். சமஸ்தானாதிபதிகள் தங்களுடைய நன்மையையாவது உத்தேசித்து, ஒரு காரியஞ் செய்யக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அதாவது, ப்ரிட்டிஷ் இந்தியா பிற்காலத்தில் அடையக்கூடிய பதவியில் சமஸ்தானங்கள் அதன் உறுப்புகளாகவிருக்க தகுதியுடையவைகளாக விருக்கும்படி ஜனங்களுக்கு ஜவாப்தாரியான ஆட்சியைத் தங்களுடைய நாடுகளில் ஸ்தாபித்துவிட வேண்டும். இந்தியா பூரண சுயேச்சையை அடைந்தாலும், குடியேற்ற நாட்டந்தஸ்தை அடைந்தாலும், அதற்கும் சமஸ்தானாதிபதிகளுக்கு மிருக்கக்கூடிய சம்பந்தமானது இப்பொழுது அவர்களுக்கும் ப்ரிட்டிஷ் இந்தியாவுக்குமுள்ள சம்பந்தத்தைக் காட்டிலும் நிருப்திகரமானதாக இருக்குமென்பதை அவர்கள் உணரவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

புதுக்கோட்டை சமஸ்தானமானது விஸ்தீரணத்தில் சிறியதாகவும், குறைவான வருமானம் உள்ளதாகவும் இருந்துவந்தபோதிலும், முற்போக்கான நிலைமையிலிருந்துவரும் சுதேச சமஸ்தானங்களுக்கு சரி சமத்துவமான நிலைமையிலிருந்துவர அது முயற்சி செய்து வந்திருக்கிறது; அதனுடைய அரசியல் ஸ்தாபனங்களும் சுதேச சமஸ்தானங்களில் மிகவும் முற்போக்கடைந்திருப்பவைகளில் இருந்து வருவதைப்போல அமைக்கப் பெற்றிருக்கின்றன. இருந்தபோதிலும், இதர சமஸ்தானங்களிலிருந்து வருவது போலவே புதுக்கோட்டையில் இருந்துவரும் அரசியல் ஸ்தாபனங்களும் காலங்கடந்தவைகளாகவும், அபிவிருத்தி அடையாத நிலைமையிலும் இருந்து வருகின்றன. ஜனங்களுடைய ஜீவாதாரங்களான சரீர உரிமை, பேச்சு உரிமை, அபிப்பிராய உரிமை,— இவைகள் சில சந்தர்ப்பங்களில் மறுக்கப்படுவதன் மூலமாக நிர்வாக நேர்மைக்கு பங்கம் விளைந்து வருகிறது. பிர

பலஸ்தரும், தேசாபிமானியுமான ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி மீது எடுத்துக்கொண்டிருந்த நடவடிக்கை மூலமாக முன்னர் இருந்த நிர்வாகிகள் தேடிக்கொண்டிருந்த அபக்கியாதியை இப் பொழுது நிர்வாகத்தை நடத்துவோர் போக்கிக்கொண்டிருப்பது விசேஷமே. ஆனல் அதே தாராளப் போக்கானது உங்களுடைய சமஸ்தானத்திலிருந்து பிரஷ்டம் செய்யப்பட்டு இப்பொழுது மலாய் நாடுகளிலிருந்து வரும் உங்களுடைய சமஸ்தானப் பிரஜைகளில் இன்னொருவரான ஸ்ரீமான் ஏ. எஸ். நாகரத்தினம் ஐயரிடத்தில் காட்டப்படாமலிருப்பதற்கு நான் வருந்துகிறேன். எனது நண்பரும், ஜனமித்திரன் ஆசிரியருமான ஸ்ரீமான் சுப்பிரமணிய அய்யர் மீது வழக்குத் தொடர்ந்து அவருக்கு தண்டனை கிடைக்கும்படி செய்வித்ததால் சமஸ்தானப் பிரஜைகளுக்கு அவரிடமிருந்து வந்த அபிமானமும் மதிப்பும் அதிகரித்தேயிருக்கின்றன.

சுதேச சமஸ்தானங்களும் சர்வாதிகார பீடமும்.

அடுத்த சில வருஷங்களில் இந்தியாவின் அரசியல் முறையை நிர்ணயம் செய்கிறவர்கள் அந்த ஸ்தாபனங்கள் ஜனங்களுக்கு உண்மையில் ஜவாப்தாரியானவைகளாக இருக்கும்படி செய்யும் பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டிவரும். தங்களுடைய நன்மையை உத்தேசித்தே இவ்விதம் செய்துவிட வேண்டியது அவசியமென்பதை தூரதிர்ஷ்ட வசத்தினல் சுதேச மன்னர்கள் தெரிந்துகொள்ளவில்லை; தங்களுடைய எதேச்சாதிகாரம் நிலைத்திருக்கும்படி செய்வதற்கு சர்வாதிகார பீடம் பூரண உதவியைச் செய்யுமென்று அவர்கள் நம்பியிருப்பது அயுக்தமானதாக இருப்பதோடு எதிர்காலத்தில் அவர்களுடைய நிலைமையே நிலையற்றதாகிவிடும்படி செய்துவிடக்கூடியதாகவும் இருக்கிறது. பட்ளர் கமிட்டியார் இந்த சர்வாதிகார பீடத்தைப்பற்றிச் சொல்லியிருப்பதைச் சிறிது கவனித்தால் இதன் உண்மை புலப்படும். புரட்சி, அல்லது கலகத்திலிருந்து சமஸ்தானங்களைக் காப்பாற்றுவதற்கு சர்வாதிகார பீடத்திற்கு இருந்துவரும் கடமையுடன், அவர்களுடைய தலையீடு கோரப்படுகையிலாவது, அவசியமாக இருக்கையிலாவது தலையிடவேண்டிய பொறுப்பும் அந்த சர்வாதிகார பீடத்திற்கு இருந்து வருகிறது. இதை பட்ளர் கமிட்டியார் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். "கலகத்திலிருந்து சமஸ்தானாதிபதியைக் காப்பாற்றுவதாக அளித்திருக்கும் பாதுகாப்பு காரணமாக அந்தக் கலகத்திற்குக் காரணமென்ன வென்பதை விசாரிக்கவும், பிரஜைகளுடைய நியாயமான குறைகளை சமஸ்தானாதிபதி நிவர்த்தி செய்துவைக்க வேண்டுமென்று சொல்லவும், அதற்காக என்ன செய்யவேண்டுமென்று விதிக்கவும், சர்

வாதிகார பீடத்திற்குப் பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது." என்று அக்கமிட்டியார் சொல்லியிருக்கிறார்கள். சர்வாதிகார பீடமானது இனி இந்தியாவில் ஏற்படும் சுயராஜ்ய கவர்ன்மெண்டாக இருந்தாலும், அல்லது சில சமஸ்தானங்களின் சார்பாக ஸர் லெஸ்லி ஸ்காட் பட்டர் கமிட்டி முன் அயுக்தமான வழியில் கோரியபடி சமஸ்தானங்களுடன் தனிப்பட்ட வழியில் கோர்முகமாக சம்பந்தம் வைத்துக்கொள்ளும் அரசாக இருந்தாலும், நவீன கால சமஸ்தானப் பிரஜைகளுக்கு இருக்கவேண்டிய அடிப்படையான குறைகளுக்குப் பரிகாரத்தை அவர்கள் மறுத்துக்கொண்டு வருவார்களென்றுவது, அல்லது சுதேச சமஸ்தானங்களில் எதிர் காலத்தில் நல்லாட்சி நடைபெறுவதற்காக ஏத்தகைய ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதைச் சொல்லுவதற்கு வெகு காலம் மறுக்கக்கூடுமென்றுவது சுதேச சமஸ்தானாதிபதிகள் நினைப்பது சுத்தத் தவறென்பதை அவர்களே சீக்கிரத்தில் தெரிந்துகொள்ளுவார்கள். சுதேச சமஸ்தானத்தில் நெறி முறைக்கு விரோதமான வழியில் ஆட்சி நடைபெறுத போதிலும், சமஸ்தானாதிபதியை எடுத்துவிட வேண்டுமென்றே, அல்லது வேறுவித ஆட்சி முறையை ஏற்படுத்தவேண்டுமென்றே பொதுஜன அபிப்பிராயம் பலமாக இருந்துவரின், சர்வாதிகார பீடமானது சமஸ்தானாதிபதியின் பாத்தியதைகளையும், சலுகைகளையும், அந்தஸ்தையும் பாதுகாக்கக் கடமைப்பட்டிருந்தாலும், சமஸ்தானாதிபதியை எடுத்துவிடாமல் பொதுஜனங்களுடைய இந்தக் கோரிக்கையைப் பூர்த்திசெய்துவைப்பதற்கு யுக்தமான முறைகளைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறதென்று பட்டர் கமிட்டியார் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, ப்ரிட்டிஷ் இந்திய மாகாணங்களில் ஏற்படுவது போலவே சுதேச சமஸ்தானங்களிலும் ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்தவேண்டுமென்று ஜனங்கள் கோருவதை சமஸ்தானாதிபதிகளுக்குட்பட்ட ஜவாப்தாரியான ஆட்சியை ஏற்படுத்துவதன் மூலமாகத் தீர்த்துவைக்க பிரிட்டிஷார் முற்படமாட்டார்களென்று சமஸ்தானாதிபதிகள் நினைத்துக்கொண்டிருப்பின், அது பகற்கனவாகவே முடியும். பிற்போக்கான ஸ்திதியிலுள்ள சமஸ்தானங்களில் சமஸ்தான வருமானத்தையும், சமஸ்தான ஜனங்களின் வரிச் சுமையையும் அனுசரித்து சமஸ்தானாதிபதி தமது சொந்தச் செலவிற்கு எவ்வளவு தொகைதான் எடுத்துக் கொள்ளுவதென்பதை நிர்ணயித்துவிடவேண்டுமென்றும், உத்தியோகங்களிலிருந்து வருவோருக்குப் பாதுகாப்பை ஏற்படுத்த வேண்டுமென்றும், நீதிபதிகள் சுயேச்சையுள்ளவர்களாக இருக்கும்படி செய்துவிட வேண்டுமென்றும் பூர்வாங்கமாக சில யோசனைகளை ராஜப்பிரதிநிதியே சொல்லியிருக்கிறார். பிந்தின இரண்டு அம்சங்களிலும் புதுக்

கோட்டை குறைப்படுவதற்கு இடமில்லை. அரசாங்கத்தில் உபரி யாக விருந்த தொகை சிறிது காலத்திற்கு முன் எவ்விதம் விநி யோகிக்கப்பட்டிருக்கிறதென்பதை ஞாபகப்படுத்திக் கொள்ளும் பொழுது சமஸ்தானத்தின் வருமானத்திலிருந்து சமஸ்தானநி பதி எவ்வளவு தொகை எடுத்துக்கொள்ளுகிறதென்னும் பிரச் சினை இன்னும் இங்கு திருப்திகரமாகத் தீர்த்து வைக்கப்பட வில்லையென்றே சொல்ல வேண்டும்.

ஏற்கத்தகாத வாதம்.

சமஸ்தானங்களின் பிரஜைகள் விஷயத்தில் சர்வாதிகார பீடத்திற்கு இருந்துவரும் கடமைகளைப்பற்றி பட்லர் கமிட்டி யார் தெரிவித்திருக்கும் அபிப்பிராயமானது நான் கருதுகிறபடி விரிவான பிரயோகத்திற்கு இடங்கொடுக்கக் கூடியதாயின், புதுக் கோட்டை சமஸ்தானத்தில் சட்ட சபையிலுள்ள ஜனப்பிரதிநி திகளுக்கு சட்டமியற்றும் விஷயத்தில் பூர்ண அதிகாரத்தையும், வரவு செலவிலும் நிர்வாகத்திலும் உண்மையான ஆதிக்கத்தை யும் கொடுக்கவேண்டுமென்று ஓயாமல் ஜனங்கள் கோரிவரு வதைப் பூர்த்தி செய்துவைப்பதற்கு அரசர் மைனராக இருப்ப தும், சமஸ்தானம் ரீஜெண்டின் ஆட்சியிலிருப்பதும் தடையாகச் சொல்லப்படக் கூடுமென்று நான் நினைக்க முடியவில்லை. இது சம்பந்தமாக எனது நண்பர் ஸ்ரீமான் எஸ். விசுவநாதய்யர் எழு திய கடிதத்தைப் பார்த்தேன். அரசர் மைனராக இருப்பதால் சமஸ்தானத்தின் நன்மைக்கு விரோதமாயும், அரசர் சமஸ்தான த்தின் அதிகாரத்தை ஏற்றுக்கொள்ளும்பொழுது அதிகமான அதிருப்தி இருந்துவரக்கூடிய நிலைமையிலும் அரசியல் அபி விருத்தி தடைப்பட்டிருக்க வேண்டுமென்று வெளியிலுள்ள அதி காரிகள் கருதுவது எனக்கு அதிசயத்தை உண்டுபண்ணியது. இந்தியா கவர்ன்மெண்டின் ராஜீய இலாகாவாவது, அல்லது ராஜப்பிரதிநிதியேயாவது, இத்தகைய அதிசயிக்கத்தக்க யோச னைக்கு ஆதரவு அளிக்கக்கூடுமென்று நான் நினைக்கவில்லை.

நியாயமான நிலவரி முறையின் அவசியம்.

புதுக்கோட்டை சமஸ்தானத்தின் நிர்வாகத்தைப் பற்றிய பல பொருளாதார, சமுதாய, ராஜீயப் பிரச்சினைகளை இதைப் போன்ற பிரதிநிதித்துவம் வாய்ந்த மகாநாடு ஆலோசிக்க வேண்டி யிருக்கும். ஆனால் நான் புதுக்கோட்டை வாசியல்லவாதலால் அவைகள் சம்பந்தமாக விரிவான யோசனைகளைச் சொல்லப் போவதில்லை. விவசாயமே முக்கிய தொழிலாக இருந்து வரு வதும், போதியவளவு இல்லாத பருவ மழையை நம்பியிருக்க வேண்டியதாகவுமுள்ள சிறிய சமஸ்தானமாகிய புதுக்கோட்டை

யின் பிரஜைகள் நிலவரி விஷயத்தில் தாராள புத்தியும் அனுதாப மும் வாய்ந்த முறையைக் கவர்ன்மெண்டார் அனுஷ்டிக்க வேண்டு மென்று எதிர்பார்க்க பாத்தியமுடையவர்கள். இருந்தாலும், உங்களுடைய கவர்ன்மெண்டார் சென்னை கவர்ன்மெண்டின் வழி யைப் பின்பற்றி சில வருஷங்களுக்கொரு முறை நிலவரியை உயர்த்தும் சம்பிரதாயத்தை அனுஷ்டித்து வருகிறார்கள்; பார்லி மெண்டு கலப்புக் கமிட்டி சிபார்சை அனுசரித்தும், நிலத்தி லிருந்து கிடைக்கும் வருமானத்தில் சிறிதளவு விவசாயிகளிடம் தங்கியிருக்கும்படி விட்டுவைப்பதன் மூலமாக உப குடிசைத் தொழில்கள் அபிவிருத்தி அடையக்கூடிய விதத்திலும் அரசாங் கத்தார் நிலத்திலிருந்து கோரக்கூடிய வரித் தொகையை ஒரு எல்லைக்குட்படுத்திக்கொள்வதன் மூலமாக விவசாயிகளுடைய நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு எவ்வித முயற்சியையும் அரசாங்கத்தார் செய்யவில்லை. உங்களுடைய ரீஜென்ஸி கவுன்ஸி லின் தலைவர் கிராமப் பஞ்சாயத்துகள் மூலமாக கிராமப் புனருத் தாரண வேலையைச் செய்துவைப்பதில் மிகுந்த சிரத்தையுடைய வரென்பதை நான் அறிவேன்; ஆனால் கவர்ன்மெண்டார் சில வருஷங்களுக் கொருமுறை நிலவரியை உயர்த்துவதற்குப் பதி லாக அரசாங்கத்தாருக்கு நிலத்திலிருந்து கிடைக்க வேண்டிய வரியை ஒரு எல்லைக்குட்படுத்துவதன் மூலம் போதிய வளவு பொழியாத பருவ மழையை நம்பியிருக்க வேண்டியிருக்கும் விவ சாயிகளுடைய நிலைமையை உயர்த்தினாலன்றி நிரந்தரமான பலன் ஏற்படுவதற்கில்லை. புதுக்கோட்டை சமஸ்தானத்திய சென்ற 3, 4, பசலிகளின் நிலவரி கூடுதல், வசூல், பாக்கிக் கணக்கு விவ ரங்களிலிருந்து இதன் உண்மை புலனாகிறது. சமஸ்தானத்தின் வரவு செலவு சவுகரியத்தை உத்தேசித்தும் இதுவரையில் இருந் ததுபோல் நில வருமானம் நிலையற்றதாக இல்லாமல் ஸ்திரமான தாக இருக்கும்படி செய்துவிடுவது சவுகரியமாக இருக்கும். அவ் விதம் நிர்ணயிக்கும் நிலவரியானது பருவ மழை தவறிவிடுவதால் விவசாயிகளுக்காவது அரசாங்கத்திற்காவது சங்கடத்தை விளை விக்கக்கூடாத தர்மங்களையும், நியதிகளையும் அஸ்திவாரமாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

மதுவிலக்கு.

இந்தியாவில் தன்மார்க்க வியாபாரமாகிய குடியினால் வரு மானம் பெருகிவருவது போலவே இங்கும் அந்த இனத்தில் வரு மானம் பெருகிவருகிறது. புதுக்கோட்டையில் மதுவிலக்கு முறையை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதும், அதை அமுல் நடத்தி வைப்பதும் வெகு சுலபமானதாக விருந்தும் அவ் வழியில் எவ்வித முயற்சியும் செய்யப்படாதது வருந்தத்தக்கதாக

இருக்கிறது. இந்த வருமானத்தை விட்டுவிடின் வேறு வருமான வழியைக் காட்டவேண்டுமென்று சொல்லக்கூடியதற்கும் இங்கு சுலபமாகப் பதிலளித்து விடலாம். ஏற்கெனவே உங்கள் சமஸ்தானத்தில் உபரித் தொகை அதிகமாக இருந்திருப்பதைக் கவனிக்கையில் வேறு நேர்முகமான வரிகளை விதிப்பதாலும் நிர்வாகச் செலவைக் குறைத்துக் கொள்ளுவதாலும் மதுபானத்தை ஒழிப்பதால் வருமானத்தில் துண்டுவிழுந் தொகையை இந்த சிறிய சமஸ்தானத்தில் சுலபமாக ஈடுசெய்து கொண்டுவிடலாம்.

முடிவுரை.

இந்த சிறிய சமஸ்தானத்தில் அரசாங்கமும் உத்தியோகஸ்தர்களும் சாமான்ய ஜனங்களுக்கு உதவியாகப் பல காரியங்களைச் செய்யக்கூடும்; புதிதாகப் போட உத்தேசித்திருக்கும் ரயில் பாதைகளும் போடப்பட்டுவிடின் வியாபாரமும், வர்த்தகமும் பெருகக்கூடும். இவ்விதம் சமஸ்தான கவர்ன்மெண்டார் தங்களுடைய கடமையைச் செய்யவேண்டியது எவ்விதம் அவசியமோ, அவ்விதமே ஜனங்களும், அவர்களுடைய பிரதிநிதிகளும், பொது வாழ்வை அபிவிருத்தி செய்து, ஜனங்கள் செழிப்படையும்படி செய்வதற்கு அவசியமான காரியங்களைச் செய்ய வேண்டும். தேச சேவை செய்ய வேண்டுமென்ற உணர்ச்சி எங்கும் இருந்து வருகிறது. வேலையில்லாத் திண்டாட்டம் இதர இடங்களில் மத்திய வகுப்பு யுவர்களை வருத்திவருவது போலவே இங்கும் வருத்திவாலாமாயினும், யுவர்களுக்குள் புதிதாகத் தோன்றியிருக்கும் தேசியப் பற்றுணர்வு புதியதொரு உணர்ச்சியை உண்டு பண்ணியிருக்கிறது. இதைச் சரியான வழியில் செலுத்தினால் பொது வாழ்வில் ஈடுபட்டிருக்கும் பெரியோர்கள் முன் நிற்கும் வேலைக்கு அது வெகு உபயோகமாக விருக்கும். புதுக்கோட்டை யுவர்கள் உத்தியோகங்களுக்காகப் படிப்பு என்னும் பழைய காலக் கொள்கையைக் கைவிட்டு விட்டார்களென்றும், எந்தத் துறையில் தாங்கள் ஈடுபடினும் அத்துறையில் சரியாக வேலை செய்வதைத் தங்களுடைய கொள்கையாக ஏற்றுக்கொண்டிருப்பார்களென்றும் நான் நம்புகிறேன். ஜனங்களுடைய பிரஜா உணர்ச்சியை எழுப்பிவிடுவதிலும், தேசத்தின் சமுதாய வாழ்வை அபிவிருத்தி செய்வதிலும் அவர்கள் விசேஷப் பங்கெடுத்துக் கொள்ளலாம். ஆனால் விருத்தரோ, யுவரோ தனவந்தரோ, ஏழையோ, அரசரோ, குடியோ, எல்லோரும் தனது குழந்தைகளை முன்னேற்றம் செய்வதற்காக உழைக்க முன்வர வேண்டுமென்று பாரத மாதா கூவி அழைக்கிறாள். அத்துறையில் ஒவ்வொருவரும் தங்களாலியன்ற கைங்கர்யத்தைச் செய்வார்களாக."

அக்கிராஸனர் தமது பிரஸங்கத்தைப் படித்து முடிந்ததும் நிர்வாக சபை மெம்பர்கள் இருவரும் புறப்படவே வரவேற்புக் கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் K. சாமிநாதய்யர் அவர்களிருவருக்கும் பூமாலை சூட்டி மரியாதை செய்தனர்.

சிற்றுண்டி சாப்பிடுவதற்காக மகாநாடு கலைந்து மறுபடியும் 4-மணிக்கு விஷயாலோசனைக் கமிட்டியாகக் கூடிற்று. விஷயாலோசனைக் கமிட்டி முடிவு பெற்று 11—1—30 பகல் சுமார் 12–30 மணிக்கு மகாநாடு கூடிற்று. தீர்மானங்களைப்பற்றிப் பேசுமுன் அக்கிராஸனர் முக்கியமான தீர்மானங்கள் அநேகமிருப்பதாலும், சாவகாசம் அதிகமா யில்லாதபடியாலும், பேசும் மெம்பர்களை ஒரு கால வளவு வைத்து, அதற்குள் பேசி முடித்து விடும்படி கேட்டுக்கொண்டார்.

தீர்மானங்கள்.

கீழ்க்கண்ட மூன்று தீர்மானங்களும் அக்கிராஸனரால் பிரேரேபிக்கப்பட்டு, மகாநாட்டில் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டன. மேலும் 1-வது தீர்மானம் எல்லோராலும் நின்று கொண்டு அங்கீகரிக்கப்பட்டது.

1 (a). காலஞ்சென்ற மன்னர் மகா-ன-ன-ஸ்ரீ மார்த்தாண்ட பைரவ தொண்டமான் அவர்களின் அகால மரணத்தைக் குறித்து இம்மகாநாடு தங்களுடைய மகத்தான துக்கத்தை வெளியிடுகிறது.

(b). காலஞ்சென்ற சின்னரண்மனை ஜாகீர்தாரின் புதல்வர் மகா-ன-ன-ஸ்ரீ B. R. R. தொண்டமான் அவர்களின் அகால மரணத்தைக் குறித்து இம்மகாநாடு தங்களுடைய அத்யந்த துக்கத்தை வெளியிடுகிறது.

2. மகா-ன-ன-ஸ்ரீ மகாராஜா ராஜகோபால தொண்டமான் மன்னர் சமஸ்தானத்திற்கு இம்மகாநாடு தங்களுடைய ஆழ்ந்த ராஜவிசுவாஸத்தைத் தெரிவிக்கிறது.

3. எவ்விதவிசாரணையுமன்னியில் இச்சமஸ்தானப் பிரஜையில் ஒருவரும், தேசஊழியன் பத்திரிகையின் மாஜி ஆசிரியருமான ஸ்ரீமான் ஆ. சு. நாகரத்னமய்யர் பேரில் மாஜி கவர்ன்மெண்டாரால் பிறப்பிக்கப்பட்ட தேசப் பிரஷ்ட உத்திரவை ரத்து செய்யும்படி தற்கால அரசாங்கத்தாரை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட முக்கியமான இதர தீர்மானங்களாவன:—

4 (a). மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களின் ஆதீனத்தின் கீழ் இச்சமஸ்தானத்தில் கூடிய சீக்கிரத்தில் பூரா பொறுப்பு வாய்ந்த அரசாங்கம் ஸ்தாபிக்கப்பட வேண்டுமென்று இம்மகாநாடு கூறுவதுடன் மன்னர் மைனராயிருக்கிறார் என்ற காரணத்தினாலாவது, அல்லது வேறு எக்காரணத்தினாலாவது, பரிபூர்ண பொறுப்பாட்சிக்குத் தேவையான சீர்திருத்தங்களை ஏற்படுத்துவது தாமதப்படக்கூடாதென்று இம்மகாநாடு அபிப்பிராயப்படுகிறது.

(b) இவ்விதம் ஏற்படுத்தப்படும் பொறுப்பாட்சித் திட்டமானது அயிற்கண்டவைகளடங்கியதாக விருக்க வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது:—

(1) வயது வாய்ந்தவர்கள் வாக்குரிமையின் பேரில் பூரா அதிகாரங்களுடன் கூடிய, எல்லோரும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்ட சபையை ஏற்படுத்தி, அதற்கு பிரத்தியேகமாக சட்டம் செய்யும் உரிமைகளும், வரி விதித்தல், செலவு செய்தல் உள்ளிட்ட சமஸ்தான ஐவேஜியின் பேரில் பூரா ஆதிக்கமும் அளிக்கப்படவேண்டும்.

(2) எல்லா விஷயங்களிலும் சட்ட சபைக்குப் பொறுப்புள்ள ஒரு நிர்வாக சபையை ஏற்படுத்தி, அதில் சட்ட சபையிலிருந்து, சபையின் நம்பிக்கைக்கு உரித்தான, ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட திவானும், சட்ட சபையால் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று மந்திரிகளும் அங்கம் பெறவேண்டும்.

(3) குடியேற்ற நாட்டு அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்ட இந்திய சமஷ்டி அரசியல் முறையில் பூரா சுய ஆட்சி பெற்ற ஓர் உறுப்பு என்ற இந்த சமஸ்தானத்தின் அந்தஸ்திற்கேற்றவாறு தேவையானவும், அவசியமாய் ஏற்படக்கூடியவுமான திட்டங்களையும், ஸ்தாபனங்களையும் ஏற்படுத்த வேண்டும்.

இத்தீர்மானத்தை ஸ்ரீமான் K. சாமிஞதய்யர் பிரேரேபித்தார்; ஸ்ரீமான் A. குப்புஸாமி அய்யங்கார் இதை ஆமோதித்தார். ஸ்ரீமான் K. முத்துச்சாமி வல்லத்தரசு முதலியவர்கள் இதை ஆதரிக்க, தீர்மானம் சர்ச்சை செய்யப்பட்டதின் பேரில் வோட்டுக்கு விடப்பட்டது. இரண்டு பேர் தீர்மானத்திற்கு விரோதமாயும், ஏனையோர் அனைவரும் தீர்மானத்திற்குச் சாதகமாயும் ஓட்டுக் கொடுத்தபடியால், தீர்மானம் பெரும்பான்மையோரால் நிறைவேற்றப்பட்டது.

5 (a). இந்தியாவுக்கு இந்திய சுதேச சமஸ்தானங்களை உள்ளிட்ட குடியேற்ற நாட்டு ஆட்சி முறைத் தத்துவத்தை இம்மகாநாடு ஒப்புக்கொள்வதுடன், 1929-ம் வரு ஜனவரி மீ 14-உ

திருவனந்தபுரத்தில் ஸர். M. விசுவேசுவரய்யா அவர்களின் அக்கிராஸனத்தின் நீழ் கூடிய இந்திய சுதேச சமஸ்தானப் பிரஜைகள் மகாநாட்டில் ஒப்புக்கொள்ளப்பட்ட சமஷ்டி திட்டத்தின் பொதுக் கொள்கைகளை மொத்தத்தில் இம்மகாநாடு அங்கீகரிப்பதுடன், மேற்கண்ட பொதுக் கொள்கைகளை ஆலோசனை செய்து, சமீப கால நிகழ்ச்சிகளை அனுசரித்து சுதேச சமஸ்தானங்களின் சார்பாக, இனி கூட்டப்போகும் வட்டமேஜை மகாநாட்டிலோ, அல்லது இந்தியாவின் எதிர்கால அரசியலை நிர்ணயிக்க கூட்டப்படக்கூடிய எந்த மகாநாட்டிலேனும் சர்ச்சை செய்து, அங்கீகாரம் பெறும்படி செய்யத் தேவையான சிபார்சுகளைச் செய்ய இம்மகாநாடு, மகாநாட்டின் அக்கிராஸனர் ஸ்ரீமான் A. ரங்கஸ்வாமி அய்யங்கார், ஸ்ரீமான் K. சாமிஞதய்யர், ஸ்ரீமான் S. விசுவஞதய்யர் ஆகிய மூவரையும் உள்ளிட்ட ஒரு கமிட்டியை நியமிக்கின்றது.

(b). வட்டமேஜை மகாநாட்டில் இந்திய சுதேச சமஸ்தானப் பிரஜைகளும், மன்னர்களுடன் சம அந்தஸ்தளிக்கப்பட்டு பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டுமென இம்மகாநாடு கருதுவதுடன், இக்கார்யத்திற்கு தென் இந்திய சுதேச சமஸ்தானங்களின் பிரதிநிதிகளாக ஸ்ரீமான்களான ஸர். M. விசுவேசுவரய்யா, திவான் பஹதூர் M. ராமச்சந்திர ராவ், S. சத்தியமூர்த்தி ஆகிய மூவர்களின் பெயர்களைச் சிபார்சு செய்கின்றது.

ஸ்ரீமான் S. விசுவஞதய்யர் இத்தீர்மானத்தைப் பிரேரேபித்தார். டாக்டர் A. வேணுகோபால் நாயுடு இதை ஆமோதித்தார். ஸ்ரீமான்களான K. L. சர்மா, R. ராஜகோபாலய்யர், S. வெங்கட்ட ராமய்யர், S. ரத்னஸாமி அய்யர் ஆகிய இவர்கள் அதை ஆதரிக்க, தீர்மானம் ஏகமனதாய் அங்கீகரிக்கப்பட்டது.

6 (a). இச்சமஸ்தான மகாஜனங்கள் சென்ற மகாநாட்டில் நிஸ்ஸந்தேகமாய் வெளியிட்ட அபிப்பிராயத்தை யனுஸரித்து சர்வாதிகார பீடம் இச்சமஸ்தான சிம்மாசனத்திற்கு பூரண ஹிந்து ரத்தோட்டமுள்ள தொண்டமான் ஒருவரின் பாத்தியதையை அங்கீகரித்ததற்காக இம்மகாநாடு இந்திய அரசாங்கத்தாருக்கு தங்களுடைய வந்தனத்தைச் செலுத்துகிறது.

(b). நமது குழந்தை மன்னருக்கு பால்ய முதற்கொண்டே ஹிந்து ஆசார பழக்கங்களில் உணர்ச்சியும் பயிற்சியும் தகுந்த ஆசிரியர்களைக் கொண்டு போதிக்க வேண்டியது மெத்த அவசியமாகையால், அதற்கவசியமான ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று இந்த மகாநாடு கோருகிறது.

(c). அரண்மனையில் பாலேஸ் மானேஜர், எய்ட்-டி-காம்ப் போலுள்ள உத்தியோகங்களுக்கு தகுந்த யோக்யதையுள்ள இச் சமஸ்தான வாசிகளை நியமிக்க வேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(d). சமஸ்தான செல்வ நிலையை உத்தேசித்து அரண்மனை சம்பந்தமான செலவுகளில் சிக்கனம் செய்யவேண்டியது மெத்த அவசியமும் நியாயமுமாகையால், ராஜபந்துக்களுக்கு கொடுத்து வரும் அல்லவன்ஸ்களை நிறுத்தும்படிக்கும், பின்னும் இது போன்ற சிக்கணங்களைச் செய்யும்படிக்கும் இம்மகாநாடு அரசாங் கத்தாரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

இத்தீர்மானம் ஸ்ரீமான் K. லக்ஷ்மண சர்மாவினால் பிரே ரேபிக்கப்பட்டு, ஸ்ரீமான் M. நாராயணசாமி அய்யரால் ஆமோ திக்கப்பட்டு, ஸ்ரீமான் R. V. சுப்பிரமணிய அய்யரால் ஆதரிக் கப்பட்டு தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது. ஸ்ரீமான் P. S. சிவஞானதய்யர் மகா-ரா-ரா-ஸ்ரீ மகாராஜா அவர்களுக்கு மேல் நாட்டுப் பயிற்சியும் அவசியமென்று கூற, அதுவும் ஒருவர் தீங்க லாக மற்றவர்களெல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

பிறகு, சமஸ்தான இலாகாக்களில் சிக்கனம் ஏற்படுத்துவது, வரி வஜா விஷயம், மதுவிலக்கை சட்ட பூர்வமாய் ஏற்பாடு செய் வது, போரத்தி மலைக்கருகில் அணைகட்டி ஆற்று ஜலத்தைப் பாசனத்திற்கு உபயோகிப்பது, அம்மை குத்திக்கொள்வதை இஷ்டத்திற்கு விட்டுவிடுவது, தீண்டாமை விலக்குக்கு ஏற்பாடு செய்வது, கதர் அபிவிர்த்திக்கு ஏற்பாடு செய்வது, வித்யாபிவிர்த் திக்கு அதிக இடம்பாடு செய்வது, பலி நிறுத்தல், சீப்கோர்ட்டு நீதிபதிகளுக்கு உத்தியோக கால வரையறை ஏற்படுத்துவது, செட்டி நத்தத்தில் ரிடம்ஷன் தொகை விதிப்பதோடு ஸ்தல வரி விதிப்பதை ரத்து செய்வது, தாலூகாக்களில் அமுல் நடத்தும் உத்தியோகஸ்தர்களையும், வட்டம் சிப்பந்திகளையும் மூன்று வருஷத்திற்கொரு முறை வேறு இடங்களுக்கு மாற்ற ஏற்பாடு செய்வது, இன்னும் பல இடங்களில் ஆயுர்வேத ஆஸ்பத்திரிகள் ஏற்படுத்துவது, சட்டப் பரீக்ஷை தேறினவர்களையே ஸ்மால்காஸ் ஜட்ஜிகளாகவும், சப் ரிஜிஸ்திரார்களாகவும் நியமிக்க ஏற்பாடு செய்வது, டவுன் முனிஸிபல் சபைக்கு அச்சபையால் தேர்ந் தெடுக்கப்பட்டவரை அத்தியக்ஷராக நியமிப்பது, சாந்தார் கோவில் அம்மன் சன்னதித் தகரக் கொட்டகையைப் பிரித்து, அதிக வெளிச்சமும், காற்றோட்டமும் இருக்கும்படி சீர்திருத்தி யமைப்பது முதலியவைகளைச் செய்யவேண்டுமென்று தீர்மானங் கள் செய்யப்பட்டன.

தீர்மானங்கள் சர்ச்சை செய்து நிறைவேற்றி முடிந்த பின் ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அக்கிராஸனருக்கும் மற்றவர்களுக்கும் வந்தனம் செலுத்தினர். அப்பொழுது அவர் பின்வருமாறு பேசினர்:—"அக்கிராஸனர் ஏற்கனவே நமக்குத் தலைவராய் வந்து நம்முடைய மகாநாட்டை நடத்திவைத்திருக்க வேண்டியவர். அந்த பாக்யம் நமக்கு இப்பொழுதுதான் கிடைத்தது. அவருடைய விசால நோக்கமும், மேன்மையான பொறுமை குணமும், நமக்கு இந்த இரண்டு நாட்களில் செம்மைக்குத் தெரிந்தன. அவர் இப்பொழுதுதான் லாகூரிலிருந்து வந்தார். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விசேஷம் பிரிடிஷ் இந்தியாவில் நடக்கிறது. இப்பொழுது பட்டணத்திலிருந்துகொண்டு, நம்முடைய சாவகாசடயம் முழுதும் கவர்ந்துவிடும் 'ஹிந்து' பத்திரிகைக்கு ஒருவிதமான கொள்கை வைத்து எழுதவேண்டிய டயம் இது. இச்சமயத்தில் நம்முடைய மகாநாட்டை நடத்தி வைக்க ஒப்புக்கொண்டு நமக்குச் செய்த உபகாரத்திற்கு நாம் அவருக்கு நிரம்ப கடமைப்பட்டிருக்கிறோம். உபசரணைக் கமிட்டித் தலைவரான ஸ்ரீமான் K. சாமிநாதய்யர் அவர்களைப்பற்றி நான் தங்களுக்கு அதிகம் சொல்லவேண்டியதில்லை. அவருடைய பிரஸங்கத்தில் ஒவ்வொரு சமாசாரத்தையும் எடுத்து வெகு தெளிவாயும், தைரியமாயும், விசால அறிவுடனும் எடுத்தெழுதியிருக்கிறார். இனி அநேக மகாநாடுகளுக்கு அது ஆதாரமாயிருக்கும். அவர் இம்மகாநாடு நடைபெற திரவியம் சம்பாதிக்க செய்த உபகாரத்தைப் பற்றி நான் விஸ்தாரமாய்ச் சொல்லவேண்டியதில்லை. ஒவ்வொரு ஒழிந்த தினமும் ஒவ்வொரு ஊருக்குப் போய் நாம் இப்படிக் கூடி தீர்மானங்கள் பாஸ் செய்யும்படி செய்வித்த மகாநாட்டுக்கு முக்கியமான அம்சமான திரவியத்தை அவர் சேர்த்தார். ஸ்ரீமான் K. நாகராஜய்யர் வெகு ஊக்கத்துடன் வேலை செய்து வந்தார். இப்பொழுது அவசர காரியமாய் வெளியூர் போய்விட்டார். அவர் அங்கும் இதே கவலையாகத்தானிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. ஸ்ரீமான்களான V. சத்தியமூர்த்தி அய்யர், G. K. சுப்பிரமணிய அய்யர், R. ராஜகோபாலய்யர், இன்னும் மற்றவர்கள் செய்த வேலையைப்பற்றி நான் நிரம்ப மெச்சுகிறேன். கடைசியாக வாலண்டியர்கள் செய்த வேலையைப்பற்றி நான் சொல்லாமலிருக்க முடியாது. ஒரு சின்னக் குழந்தை வாலண்டியரான ஸ்ரீமான் P. S. சிவஞானதய்யர் என்பவர் செய்த வேலை ரொம்ப அசாத்தியமாயிருந்தது. இப்படிச் சொல்வதில் சில பேர்களைப்பற்றி நான் சொல்லாமல் விட்டுவிடலாம். அதனால் அவர்கள் வருத்தப்படக்கூடாது. இப்படி எல்லோரும் ஒத்துழைத்து மகாநாட்டை நிறைவேற்றச் செய்ததற்கு நாம் கடமைப்பட்டிருக்கிறோம்."

பிறகு ஸ்ரீமான் S. விசுவனுதய்யர் பின்வருமாறு பேசினர்:— "இந்த கான்பரன்ஸ் இவ்வளவு சிறப்பாய் முடிந்ததற்கு முக்கிய மான காரணம் ஸ்ரீமான் G. சுந்தரேசய்யர் அவர்களே. அவர் ஒரு காரியத்தை பொறுப்பாய் எடுத்துக்கொண்டுவிட்டாரானல் அவர் அதை வெகு சிறப்பாய் நடத்தியே தீருவார். அக்கிரா ஸனரைப்பற்றி நான் ஜாஸ்தியாய் சொல்லவேண்டியதில்லை. நேரம் அதிகம் ஆகிவிட்டது. அவர் ஆலங்குடி மகாநாட்டிற்கு வருவாரென்று எதிர்பார்க்கப்பட்டது. ஏதோ அசந்தர்ப்பத் தினல் வரமுடியாமற் போகவே, எனக்கு எதிர்பாராதபடி அப் பதவி கிடைத்தது. அது முதல் அவர் இங்கு வந்து ஒத்தாசை செய்யவேண்டுமென்றேதான் அவரிருந்தார். இன்றுதான் அது சாபல்யமாயிற்று. ஸ்ரீமான் A. ரெங்கஸாமி அய்யங்கார் டில்லி சட்ட சபை காங்கிரஸ் மெம்பர்களில் மிகவும் முக்கியமானவர் களில் ஒருவர். அவர் காங்கிரஸ் தீர்மானத்தினுல் ஷி சபையில் இல்லாமலிருக்க நேரிடுகிறதேயென்று மிகவும் வருத்தத்துடன் ஸ்ரீமான் ஜெயகர் காங்கிரஸ் தீர்மானத்தைப்பற்றிப் பேசும் பொழுது குறிப்பிட்டனராம். அக்கிராஸனருக்கு எப்பொழு தமே புதுக்கோட்டையில் ஒரு தனியான பிரியம் உண்டு. ஸ்ரீமான் சத்யமூர்த்தி அய்யர் பேரில் தேசப் பிரஷ்ட உத்தரவு பிறப்பித்த சமயத்திலேயே நமக்கு அவர் இங்கு வந்து ஒத் தாசை செய்யத் தயாராக விருந்தார். நம்முடைய ஒத்தாசைக்கு எப்பொழுதும் அவர் வரத் தயாராயிருக்கிறவர். அவர் இப் பொழுது முக்கியமான தருவாயில் தன்னுடைய வேலைகளைக் கவனியாமல் இங்கு வந்து அக்கிராஸனம் வகித்ததற்கு நான் உங்கள் சார்பாக நம்முடைய மனமார்ந்த வந்தனத்தைத் தெரி விக்கிறேன்."

உபசரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் K. சாமிநுதய்யர் அவர்கள் ஓர் ஜரிகை மாலையை அக்கிராசனருக்கு சூட்டினர்.

அக்கிராசனர் முடிவில் பேசியதாவது:—

"இப்படி இம்மகாநாடு மேன்மையாய் முடியும்படியாய் நீங் கள் ஒத்துழைத்ததற்கு நான் என் வந்தனத்தைச் செலுத்து கிறேன். நான் சமஸ்தானங்களின் பிரஜைகள் ஸ்வராஜ்யம் அடைவதற்காகச் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டு, என்னல் முடிந்த ஒத்தாசையைச் செய்ய நான் எப்பொழுதும் தயாராக இருக்கிறேன். ஸ்ரீமான் K. சாமிநுதய்யருக்கு நான் கொடுத்தி ருக்கும் சிரமத்திற்கு நான் அவரை மன்னிப்புக் கேட்டுக் கொள்ளுகிறேன். அவர் தருடகாத்திரா யிருந்துகொண்டு இன் னும் வெகு காலம் உங்களுக்கு உதவிபுரிய தீர்காயுளைக் கொடுக்கு மாறு எல்லாம் வல்ல ஈசுவரனை நாம் வேண்டுவோமாக.

ஸ்ரீமான் S. விசுவனுதய்யரும் அவர் குடும்பமும் இச்சமஸ்தானத்திற்காக அரிய சேவை புரிந்திருக்கிறார்கள்; மிகவும் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். அவர்களுடைய சேவையைப் பாராட்டி, அவருடன் நீங்கள் ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

இச்சமஸ்தானத்தில் தற்கால நிர்வாக மெம்பர்களை நான் நன்கறிவேன். அவர்கள் ஜனங்களுக்கு க்ஷேமத்தை உண்டுபண்ண வேண்டுமென்று வெகு ஊக்கமாயிருக்கிறார்கள் என்பது எனக்குத் தெரியும். ஆனால் சமஸ்தானத்தில் நித்தியமான சௌகரியங்கள் ஏற்படுவதற்கு இம்மாதிரி நிர்வாக சபை மெம்பர்கள் மாத்திரம் இருப்பது போதாது. சமஸ்தானத்தில் ராஜாவின் கீழ் பொறுப்பாட்சி வந்தால்தான் நிரந்தரமான சௌகரியங்கள் கிடைக்கும். அதற்குத்தான் நீங்கள் பாடுபட வேண்டும். அம்மாதிரி உழைக்கும் மற்ற சமஸ்தானங்களுடன் நீங்கள் ஒத்துழைக்கவேண்டும். பிரிடிஷ் இந்தியாவில் சமீபத்தில் சில சீர்திருத்தங்கள் வரப்போகின்றன. உங்களுக்கு பொறுப்பாக்ஷியில்லாமல் அவர்களுக்குமட்டிலும் பொறுப்பாக்ஷி கொடுப்பதில் பிரயோஜனமில்லை. அப்படியேதான் சைமன் கமிஷனும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

நாம் எல்லோரும் ஒரே தாய் பிள்ளைகள் என்ற உணர்ச்சி வேண்டும். அந்த உணர்ச்சி இருந்தால்தான் ஒத்துழைக்க ஊக்கம் வரும். சமூக வாழ்வு முன்னேற்றத்திற்கு நாம் நம்முடைய கெட்ட வழக்கங்களை ஒழிக்கவேண்டும். வழக்கம் என்பதில் நம்முடைய வைதீக ஆசாரங்களை ஒழிக்கவேண்டுமென்று நான் சொல்லவில்லை. உபயோகமற்ற வழக்கங்களைத்தான் ஒழிக்க வேண்டுமென்கிறேன். நாம் எல்லோரும் ஒரு தாய்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற உணர்ச்சியுடன் ஒத்துழைத்தால், பாரத மாதா சீக்கிரம் சுயேச்சை யடைவாள் என்று நிச்சயமாய்ச் சொல்லுவேன்."

ஸ்ரீமான் கோகர்ண சாஸ்திரிகள் வரவேற்புக் கமிட்டிக்கும், காரியதரிசி ஸ்ரீமான் V. சத்தியமூர்த்தி அய்யர் உபசாரணைக் கமிட்டித் தலைவர் ஸ்ரீமான் K. சாமிநுதய்யரவர்களுக்கும், டவுன் ஹால் கமிட்டிக்கும், இடைவேளை போஜனத்திற்கு பள்ளிக்கூடத்தை விட்டுக்கொடுத்து உதவி புரிந்த மிஷன் ஸ்கூல் தலைமை உபாத்தியாயருக்கும் வந்தனத்தைத் தெரிவித்தனர்.

"வந்தேமாதரம்", "ஸ்ரீமான் A. ரெங்கசாமி அய்யங்காருக்கு ஜெய்" என்ற முழக்கத்துடன் மகாநாடு முடிவடைந்தது.

30-வது அத்தியாயம்.

முடிவுரை.

ஏழாவது மகாநாட்டின் அக்கிராசனர் ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்காரவர்கள் B. A., B. L. தமது பிரஸங்கத்தில் பின்வருமாறு கூறியிருப்பது நேயர்களுக்குத் தெரிந்திருக்கும்:—

"I have a dim recollection of the distant days when the late Sir A Seshayya Sastri, with a clear vision and ripe experience, gripped the administration of the State with a firm hand and reforming zeal that brought this little principality into line with the neighbouring British provinces in administrative standards and methods and in the improvement of the civic and economic conditions of its urban and rural people and has left an abiding mark on this State. The period of regency that then ensued afforded indeed a most favourable opportunity for carrying out far-reaching reforms on the basis of the accepted ideas and standards of those days. May we not hope that under an equally prolonged regency that has come upon you to-day and under the auspices of your Dewan and President of the Council, whose experience and outlook are known to be wide and sympathetic, you will not only be able to avoid the errors of the regency that resulted in the prolonged absence of your Ruler from your State and the protracted controversies of succession that have followed in its train, but that the political progress of the State would equally keep pace with the standard and ideals now accepted in British India under their aegis along with the improvement in the social and economic conditions of the people."

ஸ்ரீமான் A. ரெங்கஸ்வாமி அய்யங்கார் அவர்கள் எதிர் பார்த்தபடி இந்த ரீண்ட ரீஜென்ஸியில் நடந்திருக்கிறதா இல்லையா என்பதையும், ரீஜென்ஸி ஆஃபி கௌன்ஸில் நிர்வாகத்திலிருந்து ஐரோப்பிய ஸிவிலியன் அட்மினிஸ்ட்ரேடர் ஆஃபிக்கு மாறியது, இந்த மாறுதலினால் ஏதேனும் நன்மை ஏற்பட்டிருக்கிறதா என்கிறது, பொதுவாய் மன்னர் சமஸ்தித்தின் மைனாரடி காலத்தில் நிர்வாகம் எவ்வாறு நடந்து வந்திருக்கிறது என்ற விஷயங்களையும், இந்த நிர்வாகத்தின் குணதோஷங்கள் இன்னின்னவையென்

றும் கூறுவது மன்னர் சமஸ்தும் ராஜ்யபாரத்தை ஒப்புக்கொண்ட தின்பேரில் செய்வது பொருத்தமாயும் உபயோகமாயுமிருக்குமாதலின், இவ்வரலாற்றை இத்துடன் நிறுத்திக்கொள்வோம். அவ்வாறு செய்வதின் முன் இச்சரித்திரத்திலிருந்து தெளிவாகும் ஒரு முக்கியமான தத்துவத்தை இங்கு எடுத்துக் காட்டுவோம்.

காலஞ்சென்ற மார்த்தாண்ட பைரவ தொண்டமான் மன்னர் தமது திருமணத்தைப்பற்றி தமது பிரஜைகளுக்குப் பின் வருமாறு எடுத்துக் கூறினர்:—

"The question of my marriage has been engaging my serious attention for several years. Through my training and travels abroad, I had formed certain ideals as to the sort of help-mate that could secure for me both a happy home and an intelligent co-operation in the discharge of my responsibilities as a Ruler. After much looking-out and cogitation, I found it was impossible in the present state of our society, to expect any approach to the standard I had formed and that it might be necessary to sacrifice a little of surface national sentiment if my expectations were to be realised. I say 'surface sentiment'; for as you well know, there have not been wanting examples of persons who have entirely identified themselves with their adopted land. It has pleased God to vouchsafe to me atlast a partner who is, in my opinion, qualified to fulfil my ideals and I hope that with God's blessings, the future of the State will, under our joint guidance be even more prosperous and happy than ever before."

இவ்விதம் பரம்பரை அனுஷ்டானத்திற்கும் தர்மத்திற்கும் முறைமை விவாகம் செய்துகொண்டதிலேயே சமஸ்தானத்தில் சிக்கலான வார்ஸ் பாத்தியப் பிரச்னை கிளம்பியது. சமஸ்தானம் சிறியதே; இந்து தேசத்தில் ஒரு மூலையில் உள்ளது. இதில் நடக்கும் காரியங்கள் இதர இடங்களில் நடக்கும் காரியங்களைப் பாதிக்கமாட்டாவென்றுகூட சில பத்திரிகைகளில் எழுதப்பட்டு வந்தன.

மன்னர்களுக்கு மிகுந்த சிறப்பு ஏற்பட்டிருப்பதற்குக் காரணம் அவர்கள் சொந்த விஷயங்களில் கூட சாதாரண மனிதர்களுக்குள்ள சுதந்தரமில்லை. அவர்கள் அத்தகைய கட்டுப்பாட்டுக் குட்பட்டு நடக்கவேண்டியதை உத்தேசித்தே அவர்களைக் கடவுளின் அம்சமுள்ளவர்களாகக் கொண்டாடுகிறார்கள். மார்த்தாண்ட பைரவ தொண்டைமான் மன்னர் தமது திருமணப் பிரயுக்தமாக தாம் வழக்கத்திற்கு மாறுக மணஞ்செய்துகொண்ட

தற்குக் காரிய காரணங்களைக் காட்டிப் பிரஜைகளுக்குச் செய்த பிரஸங்கத்தை மேலே கொடுத்திருக்கிறோம். இவ்விதம் மன்னர்கள் தங்களிஷ்டம்போல் மணக்கலாமா என்பதைப்பற்றி, 'மன்னர் யாரையும் மணக்கலாமா?' என்று ஜனமித்திரனில் அடியிற்கண்ட விஷயம் எழுதப்பட்டது:—

"இப்பொழுது மன்னர் அவர்கள் அவர் மனம் கொண்டவாறு மணக்கலாமா என்னும் பிரச்னை எழுகிறது. ஆங்கிலக் கவிச் சக்ரவர்த்தியாகிய ஷேக்ஸ்பியர் இவ்விஷயத்தைப்பற்றி வெகு அழகாக ஓரிடத்தில் கூறியுள்ளார். ஹாம்லத் (Hamlet) என்னும் நாடகத்தில் அரசிளங்குமாரராகிய ஹாம்லத், அமைச்சர் புதல்வி ஒபீலியா (Ophelia)வைக் காதலிக்கிறான். இம்மங்கையின் சகோதரன் (Laertes) என்பான் தன் சகோதரிக்கு இக் காதல் விஷயமாக புத்திமதி கூறுமிடத்துப் பின்வருமாறு சொல்லுகிறான்:—

"Perhaps he loves you now;
And now no soil nor *cautel* doth besmirch
The Virtue of his will; but you must fear,
His greatness weighed, his will is not his own;
For he himself is subject to his birth;
He may not, as unvalued persons do,
Carve for himself; for on his choice depends
The safety and the health of the whole State;
And therefore must his choice be circumscribed
Unto the Voice and yielding of that body
Whereof he is the head."

அதாவது, "ஒருக்கால் ஹாம்லத் தற்சமயம் உன்மேல் காதல் கொண்டிருக்கலாம். அவனுடைய காதலில் கபடமும் தூசும் கலவாதிருக்கலாம். ஆனல், அவனுடைய உயர் குடிப் பிறப்பை உத்தேசித்து அவனிஷ்டப்படி நடந்துகொள்ள அவனுக்கு அதிகாரமில்லை யென்பதை நீ மனதிற் கொள்ளவேண்டும். ஏனெனில், (மன்னர் பரம்பரையிற் றோன்றின) அவன் அப்பரம்பரை ஒழுக்கத்திற்குக் கட்டுப்படவேண்டும். சாதாரண மனிதர்களைப்போல் அவன் தன் வாழ்க்கைத் துணையைத் தேடித் தெரிந்துகொள்ள அவனுக்கு உரிமை கிடையாது. ஏனெனில், அவனுடைய தேர்தலில்தான் ராஜ்யத்தின் க்ஷேமமும், குடிகளின் இன்பமும் சார்ந்திருக்கின்றன. ஆகையால் அவனுக்குக் கட்டுப்பட்ட குடிகளின் விருப்பத்திற் கிணங்கி, அவர்கள் மனதிற் கினைந்த மனையாளைத்தான் அவன் கொள்ளவேண்டும்."

இதனின்று மன்னர்கள் தங்கள் மனம் போனவாறு மணக்கக்கூடாதென்பது கவிச் சக்ரவர்த்தியின் அபிப்பிராயமென்பது தெற்றென விளங்குகிறதல்லவா?"

ஹாம்லத்திலிருந்து இதே மேற்கோளைக் காட்டி இங்கிலாந்தின் பிரதம மந்திரி மிஸ்டர் பால்ட்வின் பேசியது உலகப் பிரஸித்தம். இதே காரணத்தை முன்னிட்டு எட்டாவது எட்வர்டு மன்னர் பட்டம் துறக்க நேர்ந்தது. அதன் வரலாறு பின்வருமாறு:—

எட்வர்டு மன்னர் பட்டம் துறந்தது

"மன்னர், இப்பொழுது ஒன்று, விவாக யோசனையைக் கைவிட வேண்டும், அல்லது பட்டத்தைத் துறந்தாகவேண்டும்—இந்த இரண்டிலொன்றைத் தவிர வேறு வழியில்லையெனக் காமன்ஸ் சபை அங்கத்தினர்கள் நம்புகிறார்கள்."

காமன்ஸில் பால்டுவின் பிரசங்கம்

'மன்னர் விஷயமறியாச் சிறுவனல்ல'

1936-ம் வரு டிஸம்பர் மீ 11-ந் தேதி காமன்ஸ் சபையில் பிரதம மந்திரி மிஸ்டர் பால்டுவின் தமக்கும் மன்னருக்கும் நடந்த சம்பாஷணையை எடுத்துக் கூறினார். அவரது முடிவுரையின் சாரம் வருமாறு:—

"நமது மன்னர் விஷய மறியாத ஒரு சிறுவனல்லவென்பது உங்களுக்கு ஞாபகமிருக்கவேண்டும். அவர் மிக்க வாலிபமாகக் காணப்படுகிறார். எனினும் அவர் உலகத்தையும் வாழ்க்கையையும் நன்கறிந்தவர். விசேஷ அனுபவமுள்ளவர். தம்மருகில் ஒரு ஸ்த்ரீயில்லாமல் மிகப் பெரிதான அரசுப் பொறுப்பை தாம் நிர்வகிப்பதற்கில்லையென அவர் திட்டமாகச் சொல்லிவிட்டார். அவர் தாம் பட்டந்துறப்பதென முடிவு செய்வதால்தான் இந்காட்டிலும், சாம்ராஜ்யத்திலும் மேலும் ஐக்கிய மிருந்துவருமாறு செய்யக் கூடுமென்ற நம்பிக்கை காரணமாகவே அவர் இவ்வாறு முடிவு செய்துள்ளார்.

நாம் அடுத்தபடியாக என்ன செய்யவேண்டுமென அவர் தெரிவித்திருக்கிறார். இனி நம்மிடையுள்ள அபிப்பிராய பேதங்களை ஒதுக்கிவிட்டு, ஒற்றுமையுடன் அதில் ஈடுபட வேண்டும்.

நேற்று காலை மன்னரின் இறுதியான முடிவு மந்திரி சபைக்கு அறிவிக்கப்பட்டதும் அச்சபையின் கருத்தையொட்டி நான் மன்னருக்குப் பின்வருமாறு ஒரு செய்தி அனுப்பினேன்:—

"முடி துறப்பதெனத் தாங்கள் உத்தேசித்திருப்பதை யறிந்து மந்திரி சபையினர் மிகவும் வருந்துகின்றனர். அது பற்றித் தாங்கள் தயவு செய்து புனராலோசனை செய்வீர்களென நம்புகிறார்கள். தாங்கள் இங்ஙனம் உத்தேசித்திருப்பதாக உடனே குடியேற்ற நாடுகளின் பிரதம மந்திரிகளுக்குத் தெரிவித்திருக்கிறேன்."

மன்னர் பதில்

நேற்றிரவு மன்னர் பின்வருமாறு பதிலனுப்பினர்:— "மந்திரி சபையின் அபிப்பிராயத்தைப்பற்றி பிரதம மந்திரி 9-ந் தேதியிட்டு எழுதியிருந்த கடிதம் மன்னருக்குக் கிடைத்தது. மன்னர் மேலும் இதைக் குறித்து ஆலோசித்தார். ஆனால், தமது முடிவை மாற்றிக்கொள்ள வியலாததுபற்றி அவர் வருந்துகிறார்."

இன்று இச்சபையை உலக முழுதும் கவனித்துவருகிறது. இக்கெருக்கடியான நிலையில் மன்னரைப்போல் நாமும் உன்னதமான முறையில் நடந்துகொள்வோமாக. பிறகு வருந்தத்தக்க வார்த்தை யெதையும் நம்மில் எவரும் வெளியிடாதிருப்பாராக. யாருடைய மனமும் புண்படும் முறையிலும் நாம் பேசாதிருப்போமாக.

இச்சிறிய தீவில் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் பொறுப்பை ஏற்றவர்களென்ற முறையில் நாம் நமது சாம்ராஜ்ய நாடுகளைப் பிணைத்து நிற்கும் ஒரே பிணையான சிம்மாஸனத்தின் பெருமை குன்றுதிருக்க நமது கடமையைச் செய்ய வேண்டும். இனி நாம் ஒற்றுமையாகப் புதிய மன்னரைத் தாங்கி நிற்போமாக. அவருக்கு நம்மாலானவரை உதவி புரிவோமாக. (பலத்த கரகோஷம்.)

மாஜி மன்னர் ரேடியோ பிரசங்கம்

மாஜி மன்னர் எட்வர்டு 1936-ம் வருஷம் டிஸம்பர் மீ 11-ந் தேதி லண்டனில் வின்ஸர் மாளிகையிலிருந்து ஒலிபரப்பும் கருவியின் மூலம் ஓர் பிரசங்கம் விடுத்தனர். முதலில் அவர் மன்னரான ஆறாவது ஜார்ஜைக் குறித்து தமது ராஜவிசுவாசத்தைத் தெரிவித்துக்கொண்டார். மேலும் அவர் கூறியதாவது:—

"நான் பட்டத்தைத் துறக்க நேர்ந்ததற்கான காரணங்களை நீங்களனைவரும் அறிவீர்கள். ஆனால், நான் இவ்வாறு முடிவு செய்கையில், வேல்ஸ் இளவரசரென்ற முறையிலும், மன்னர் என்ற ஹோதாவிலும், சென்ற 25-வருஷ காலமாக எந்த தேசத்துக்கும், சாம்ராஜ்யத்துக்கும் சேவை புரிய முயன்று வந்தேனோ, அவற்றை மறந்துவிடவில்லையென்பதை நீங்கள் அறிய வேண்டுகிறேன்.

எனினும் நான் காதலிக்கும் ஸ்திரீயின் உதவியும், ஆதரவுமின்றி ஒரு மன்னருக்குள்ள பொறுப்பையும், கடமைகளையும், நான் விரும்புவதுபோல், நிறைவேற்றிவைப்பது அசாத்தியமென உணர்ந்தேன். இது முற்றிலும் உண்மையென நீங்கள் நம்ப வேண்டுகிறேன்."

மன்னர்கள் தம்மிஷ்டம்போல் மணம் செய்துகொள்ளலாமா வென்பதைப்பற்றி பிரதம மந்திரி மிஸ்டர் பால்ட்வின் ஹாம்லத்திலிருந்து மேற்கோள் கூறி பார்லிமெண்டில் ஓர் அரிய பிரஸங்கம் புரிந்தனர்.

"எட்வர்ட் மன்னர் துறவும், புதிய மன்னர் ராஜப்பிரகடனமும்" என்று ஜனமித்திரனில் 18—12—1936ல் எழுதப்பட்ட தலையங்கத்தின் அடியிற்கண்ட பாகம் இங்கு குறிப்பிடத்தக்கது:—

"இங்கிலாந்து தேச சரித்திரத்தில் இதற்கு முன் எப்பொழுதும் ஏற்படாதபடி ஒரு மன்னர் பட்டத்தைத் துறக்கும்படி நேர்ந்ததில் சில முக்கியமான படிப்பினைகள் இல்லாமலில்லை. யதேச்சாதிகாரம், பாஸிஸம், டிக்டேடர்ஷிப் என்ற முறைகள் உலகமெங்கும், அதிலும் விசேஷமாக ஐரோப்பாவில் வலுத்துக் கொண்டும், ஜனநாயக இயக்கம் தடுமாறிக்கொண்டும் வரும் இச்சமயத்தில், ஜனநாயக ஆட்சியின் தத்வத்தை ஆதாரமாகக் கொண்ட பார்லிமெண்டரி ஆட்சி மாட்சியுடன் வெற்றிபெற்றது இச்சம்பவங்களிலிருந்து குறிப்பிடக்கூடிய அம்சமாகும். மிஸ்டர் பால்ட்வின் இங்கிலாந்தின் பிரதம மந்திரிகளின் பரம்பரையிலே மிகவும் மேம்பாடு அடைந்தவர்களில் ஒருவர் என்பது இதிலிருந்து ஏற்பட்டது மற்றொரு அம்சமாகும். மிஸ்டர் பால்ட்வின் இங்கிலாந்து மன்னர் ஸ்தானத்தின் பெருமையைச் சிறிதும் பழுதுபடாமல் நிலைநாட்டியதோடு, ஏகாதிபத்தியத்தை இங்கிலாந்து தேசத்திலிருந்து நழுவவிடாமல் பாதுகாத்தார் என்று கூறுவதும் மிகையாகாது. இன்னும் மிஸ்டர் பால்ட்வினது போற்றத்தகுந்த காரியத்தால் இந்தியா தேசத்தில் உள்ள நூற்றுக்கணக்கான சுதேச மன்னர்களுக்கு ஒரு நல்ல படிப்பினை ஏற்பட்டிருக்குமென்று சொல்வதும் மிகையாகாது. மன்னர்களுக்குத் தங்கள் ஸ்தானங்களால் கௌரவம் ஏற்பட்டிருப்பதுடன், அவர்களுக்குப் பெரிய பொறுப்பும் ஏற்பட்டிருக்கிறதென்பதை எவரும் மறுக்கவொண்ணாது. சில காரியங்களில் சாதாரணப் பிரஜைகள் தங்களிஷ்டம்போல் நடந்துகொள்வதுபோல, மன்னர்கள் நடந்துகொள்ள சுதந்தரமில்லை என்பதை அவர்கள் இனி உணராமலிருக்க முடியாது. நமது சமஸ்தானத்தில் சில வருஷங்களுக்கு முன் எழும்பிய வார்சு பாத்யப் பிரச்னையைப்போல, இனி தகராறுகள் சுதேச சமஸ்தானங்களில் ஏற்படமாட்டாவென்று நம்பு

கிறேம். இப்பொழுது பால்ட்வினும், இங்கிலாந்துப் பிரஜைகளும் கொண்டுள்ள அபிப்பிராயத்தைத்தான் அப்பொழுது நாமும் வெளியிட்டோம்; மக்களும் மகாநாடுகளில் வெளியிட்டார்கள். மன்னர்கள் மகாவிஷ்ணுவின் அம்சம் பெற்றவர்களென்று நம்மவர்கள் அபிப்பிராயப்படுவது உண்மைதான். மகாவிஷ்ணுவைப்போல தர்மத்தைத் தாங்கி, பிரஜைகளைக் காக்கவேண்டிய பொறுப்பு அவர்களைச் சேர்ந்ததென்பதுதான் இதன் உண்மைக் கருத்து. சட்ட திட்டங்களும், தர்மங்களும், கடமைகளும் பிரஜைகளுக்கு மட்டுமல்ல. அரசர்களுக்கும், அரசர்க்குரிய தர்மங்களும் நியதிகளும் உண்டு. அவைகளுக்குட்பட்டு மாநிலம் காக்கும் மன்னர்களே பிரஜைகளால் மகாவிஷ்ணுவின் அம்சம் பொருந்தினவர்களென்று கொண்டாடத் தகுந்தவர்கள். "மன்னர் ஒரு பிசகும் செய்ய முடியாது" என்ற பழமொழி பழங்கதை. சாமான்ய ஜனங்கள் பிசகு செய்தால் கண்டித்து தண்டிப்பதோடு, மன்னர்கள் தங்கள் வாழ்க்கையில் ஒரு தவறும் செய்யாது செங்கோல் செலுத்த வேண்டுமென்பதுதான் இப்பழமொழியின் நியாயமான கருத்தாகும்."

மேலே குறித்த நீதியை நிலைநாட்ட புதுக்கோட்டையில் நிகழ்ந்த போராட்டமே இச்சரித்திர வரலாற்றின் முக்கிய விஷயம். இப்போர் அஹிம்ஸைப் போர், பேனுப் போர்; சூது போர், மோது போர் இவற்றினின்று மாறுபட்டது. இப்போர் 1920-ம் வருஷம் நவம்பர் மாதம் தொடங்கி, 1928-ம் வருஷம் நவம்பர் மாதத்தில் முடிவுக்கு வந்தது. போர் தொடங்கிய காலத்தில் தோற்றத்திலில்லாதவரும், 1922-ம் வருஷத்திலேயே ஜனித்தவருமான ஸ்ரீ ராஜகோபாலத் தொண்டமானவர்களின் திருத் தோள்களில் சகல ஜனங்களும் அதிசயமும் உவகையும் எய்தும் வண்ணம் இப்போரின் வெற்றிமாலை புனிதமாது இட்ட ஸ்வயம்வர மாலையாய்ப் பொலிவுடன் திகழ்கின்றது.

1930-ம் ஹு புதிய வருஷப் பிறப்புப் பிரயுக்தமாய் ஸ்ரீமான் S. விசுவநாதய்யர் கனம் காட்டன் துரையவர்களுக்கு தமது ஆசிகளைத் தெரிவித்திருந்தார். அதற்கு Mr. C. W. E. காட்டன் துரையவர்கள் அனுப்பிய பதில் கடிதம் பின்வருமாறு:-

Jan 1st, 1930.

Brodie Castle,

Adyar.

Dear Mr. Viswanatha Iyer,

I heartily reciprocate your good wishes for the New year and thank you for your congratulations upon my

appointment as Chief Secretary. I hope that Pudukotah will prosper under the Regency and the little Raja grow up a good and stay at home Ruler.

Yours sincerely,
(sd) C. W. E. Cotton.

இக்கடிதத்தின் இறுதியில் Mr. காட்டன் துரையவர்கள் தெரிவித்துள்ள விருப்பமே சமஸ்தானப் பிரஜைகளின் சகல டைய விருப்பமும் பிரார்த்தனையுமா யிருந்துவருகிறது. இன்னும் எஞ்சி நிற்கும் மைனரடி தசை சீக்கிரம் முடிவு பெற்று, மது மன்னர் ராஜ்யபாரத்தை ஒப்புக்கொண்டு, தமிழ் நாட்டிற் குத் திலகம்போல் விளங்கும் இச்சமஸ்தானத்தை அறமும் நீதி யும் தங்கிய பொற்கைப் பாண்டியன், மனுநீதிச் சோழன்போன்ற தமிழாசர்களின் அடிச்சுவடு பற்றி செங்கோல் புரிந்து, சமஸ் தானப் பிரஜைகளை நீடூழி காலம் ஆண்டாதரிக்க வேண்டுமென்ற பிரார்த்தனையுடன் இவ்வரலாற்றை முடிப்போமாக.

ஸ்ரீ இராஜா ராஜகோபாலத் தொண்டைமான் மன்னர் நீடூழி வாழ்க!

"வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல்லாம் அரன் நாமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே."

- Machine washable - please refer to sew in care label

Warning

- Keep away from fire